
# பாவாணர்

## தமிழ்க்களஞ்சியம்-52



**பாவாணர் கடிதங்கள் - பாடல்கள்**

தமிழ்மண் அறக்கட்டளை

பாவாணர் தமிழ்க்களஞ்சியம்

52

'பெரியார் குடில்'
பி.11. குல்மொகர் குடியிருப்பு,
35, செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயர்நகர், சென்னை - 17.

தாம் பயின்ற தமிழ் இலக்கணப் புலமை அனைத்தையும் மொழித்துறையில் செலுத்தித் தமிழகமெங்கும் சுற்றி ஆங்காங்கே வழங்கி வரும் தமிழ்ச் சொற்களை யெல்லாம் ஆய்ந்து தணியாத பேருணர்வு கொண்டாரெனில் அவரது தோலாப் புலமையை என்னென்று இயம்புவது?

மொழியியல் துறையின் முதல்வர் பாவாணரெனில் மிகையாகாது. பாவாணர் அவர்களின் விரிந்த அறிவுத் திறத்தையும் சொல்லுக்குச் சொல் அடிப்படை காணும் ஆற்றலையும் பொருள் காணும் நுண்மையையும் பாவாணரின் நீல்கள் எடுத்தியம்புகின்றன.

-பாவலர் குறிஞ்சிக் குமரனார்

# பாவாணர் தமிழ்க் களஞ்சியம்

**52**

## பாவாணர் கடிதங்கள்– பாடல்கள்

*தொகுப்பாசிரியர்*

முதுமுனைவர் **இரா. இளங்குமரன்**

**தமிழ்மண் அறக்கட்டளை**

*சென்னை - 600 017*

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பாவாணர் தமிழ்க் களஞ்சியம் - 52** |
| தொகுப்பாசிரியர் | : | இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2009 |
| தாள் | : | 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 8 + 408 = 416 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **390/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**தமிழ்மண் அறக்கட்டளை**

**"பெரியார் குடில்"**

பி.11 குல்மொகர் குடியிருப்பு,
35 செவாலிய சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே. 2433 9030

மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in
இணையதளம் : www.tamilmann.in

# பதிப்புரை

*தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக் கூடிய பழந்தமிழ் நூல்களையெல்லாம் தேடியெடுத்துத் தமிழ் கூறும் உலகிற்கு வழங்கும் தொலைநோக்குப் பார்வையுடன்* ***தமிழ்மண் பதிப்பகம்*** *தொடங்கப்பட்டது. அதன் வாயிலாக மொழிஞாயிறு பாவாணரின் நூற்றாண்டு நினைவாக அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் சேர்த்து அவருடைய மறைவுக்குப் பிறகு 2000-த்திலும், பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் வெளிவந்து, நூல் வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து 2001- லும் ஒருசேர வெளியிட்டு உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு வழங்கினோம். பாவாணர் வழி நிலை அறிஞர்களான முதுமுனைவர்* ***இரா. இளங்குமரனார்*** *அவர்களும், மருத்துவர்* ***கு.பூங்காவனம்*** *அவர்களும் இவ்வரிய கட்டுரைப் புதையல்கள் நூல் வடிவம் பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். இப்பெருமக்களை நன்றியுணர்வுடன் நினைவுகூர்கிறேன்.*

*“சொல்லாராய்ச்சித் துறையில் தேவநேயர் ஒப்பற்ற தனித் திறமையுடைவர் என்று* ***மறைமலையடிகளும்,*** *நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று* ***பாவேந்தரும்,*** *தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் நற்றொண்டு ஆற்றியவர் பாவாணர் என்று* ***பேரறிஞர் அண்ணா*** *அவர்களும், வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர் என்று தமிழறிஞர்* ***இராசமாணிக்கனாரும்,*** *தமிழகம் மொழித்துறையிலே பாவாணர் போன்ற ஒரு அறிஞரை இன்னும் பெற்றுத் தரவில்லை என்று* ***பன்மொழிப் புலவர் அப்பாத்துரையரும்,*** *குறைமதியர் தேக்கிவைத்த கரையிருளை நீக்க வந்த மறைமலையார் வழிவந்த நிறைமலையார் பாவாணர்*

*என்று மேனாள் பேரவைத்தலைவர்* **தமிழ்க்குடிமகன்** *அவர்களும், தமிழர் யார்? எதிரிகள் யார்? என்று ஆய்ந்து அறிந்து காட்டியவர் பாவாணர் என்று பேராசிரியர்* **இளவரசு** *அவர்களும், ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணி" பாவாணர் என்று முதுமுனைவர்* **இளங்குமரனார்** *அவர்களும் குறிப்பிட்டுள்ள பெருமைகளுக்குரிய பேரறிஞரின் நூல்களை மீள்பதிப்பக வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.*

*"பாவாணர் நூல்கள் அத்தனையும் தமிழ்மொழிக்கு ஏற்றம் உரைப்பன. தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காப்பன. வீழ்ந்து பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கூற்றை இக் களஞ்சிய வெளியீட்டில் பதிவு செய்வது எமது கடமையாகும்.*

*பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழினம் உருப் படமுடியும் - உயரமுடியும். பாவாணர் கொள்கைகள் தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்து நிற்பதற்கும், பாவாணர் நூல்கள் தமிழர் இல்லமெலாம் இடம் பெறுவதற்கும் முன் குறிப்பிட்ட 2000 - 2001 காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட பாவாணரின் அறிவுக்கருவூலங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரே வீச்சில்* **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** *எனும் தலைப்பில் எம் அறக்கட்டளை வெளியிடுகிறது.*

*மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும், சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வுயற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ் புதையல்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன் வந்துள்ளோம். தமிழ் மொழியை மூச்சாகவும், பேச்சாகவும், செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழ்ந்த செம்புலச்செம்மல், தனித்தமிழ்க் கதிரவன் மொழிஞாயிறு பாவாணர் நூல்களை வாங்கிப் பயன் கொள்வீர்.*

*இளமையிலேயே பொதுத்தொண்டிலும், தனித்தமிழ் இயக்கத் தொண்டிலும் நான் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக*

*இருந்தவர்கள்* ***பெரும்புலவர் நக்கீரன்*** *அவர்களும், அவர்தம் இளவல்* ***புலவர் சித்திரவேலன்*** *அவர்களும் ஆவர். இவர்களை இவ்வெளியிட்டின் வாயிலாக நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். தந்தை பெரியாரின் தன்மதிப்பு இயக்கக் கொள்கை களாலும், மொழிஞாயிறு பாவாணரின் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டவன். அத்தகு பின்புலத்தோடு பதிப்புப்பணியில் என் காலடிச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.*

***கோ. இளவழகன்,***
***பதிப்பாளர்.***

**பாவாணர் கடிதங்கள் - பாடல்கள் இதற்குமுன்**
**எம் பதிப்பகம் வெளியிட்ட நூல்களில் இடம் பெறாதவை.**
**இவற்றைத் தொகுத்து உதவிய**
**முதுமுனைவர் இரா. இளங்குமரனார்**
**அவர்களுக்கு நன்றி.**

# உள்ளடக்கம்


பக்கம்

பதிப்புரை ....... iii

**பாவாணர் கடிதங்கள்**

நூல்வரு நிலையும் நன்றியுரையும் ....... 3

நட்புக் கடிதம் (Friendly Letter) ....... 10

கடிதம் உதவியோர் ....... 17

பெயர்களின் சுருக்க விளக்கம் ....... 17

பாவாணர் கடிதங்கள் ....... 18

1. தேடிச் சேர்த்த திரு ....... 19
2. பன் மொழிப் பயிற்சி ....... 23
3. தொண்டின் உறைப்பு ....... 25
4. பாவாணர் வீறு ....... 30
5. மொழிநூல் முதன்மையும் தமிழியக்கமும் ....... 35
6. வேர்ச்சொல் போலிகை (மாதிரி) ....... 38
7. சொல்லாக்க விளக்கங்கள் ....... 42
8. மொழியாக்கம் ....... 51
9. பிழையும் திருத்தமும் ....... 61
10. தனித்தமிழ் கழகம் ....... 66
11. தனித்தமிழ்ப் பெயரீடு ....... 68
12. திருச்சித் தமிழ்ப்புலவர் கழகம் ....... 72
13. வாசகர் பணி ....... 78
14. உலகத் தமிழ்க் கழகம் ....... 82
15. அகரமுதலி ஆக்கமும் திருத்தமும் அமர்த்தமும் ....... 86
16. தொல்காப்பியச் சீர்மை ....... 91
17. விளம்பரம் விலக்கல் ....... 93
18. இஞ்சி முரப்பு ....... 96

19. ஊறுகாயும் பிறவும் ..... 99
20. கிழங்கு வகைகள் ..... 101
21. பார்ப்பனர் குலப் பாவாணர் ..... 104
22. மனைவி மக்கள் ..... 112
23. மகளார்க்காக வாங்கிய மான்குட்டி ..... 117
24. நோய், நொடி, நொம்பலம் ..... 120
25. சிதறிய மணிகள் ..... 130
26. முத்துமாலை ..... 154
27. வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் ..... 170
28. சில கடிதங்கள் ..... 172

**பாவாணர் மடல்கள்**

பாவாணர் மடல்கள் ..... 186
தொகுப்பாளர் தொகையுரை ..... 187
பாவாணர் மடல்பெற்றவர் பெயர்க் குறுக்க விளக்கம் ..... 190
1. வாழ்வும் வரலாறும் ..... 192
2. உடலும் உள்ளதும் ..... 200
3. அன்பும் நண்பும் ..... 207
4. ஆய்வும் அறிவுறுத்தமும் ..... 216
5. உ.த.க.வும் பணியும் ..... 231
6. அமைப்புகளும் நிகழ்ச்சிகளும் ..... 242
7. நூலார்வமும் நூலாக்கமும் ..... 249
8. அச்சீடும் மெய்ப்பும் பார்த்தலும் ..... 261
9. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிப்பணி ..... 266
10. சொல்வளம் ..... 279
திரு. குமார. சுப்பிரமணியம்அவர்களுக்கு எழுதியவை ..... 296
என் தமிழ்த்தொண்டு இயன்றது எங்ஙனம்? ..... 300

**பாவாணர் பாடல்கள்**

தொகுப்பாளர் தொகையுரை ..... 321
முந்தைக்கொடை முறை ..... 337
சுருக்க விளக்கம் ..... 338
1. பாயிரம் ..... 339

2. கடவுள் வாழ்த்து ..... 339
3. இரங்கல் ..... 353
4. நன்றி ..... 357
5. ஐந்தகம் ..... 365
6. பதிகம் ..... 367
7. வரலாறு ..... 380
8. கதை ..... 382
9. பலவகை ..... 385
10. முடிநிலை ..... 394
11. பாடல் அகரவரிசை பாடல் எண் ..... 398
12. இணைப்பு ..... 403
சிறப்புப் பாயிரம் ..... 404

# பாவாணர்

## (கடிதங்கள் – பாடல்கள்)

# நூல்வரு நிலையும் நன்றியுரையும்

*கடிதம் இலக்கியமாகக் கருதப்படுதல் புகழ்வது அன்று. அஃது உலகெலாம் பரவியுள்ள பழமை வழிப்பட்டதே!*

*வாழ்வியலில் இயல்பாக ஊன்றியுள்ள கடித வரைவு. வனப்புகளிலும் (இலக்கியங்களிலும்) இடம்பெற்று இன்பஞ் சேர்ப்பது ஆர்வலர்கள் அறிந்த செய்தியே.*

*மாதவியார் கோவலனுக்கு வரைந்த கடிதம் தனிப் பெருமைக்குரியது! தன் காதற் கிழவனுக்குக் காதலி விடுத்த அக் கடிதம், அக் காதற் கிழவன், தன் அப்புப் பெற்றோர்க்கு விடுக்கும் கடிதமாகவும் அல்லவோ பொருள் பொதிந்து வாய்த்திருந்தது! ஒரு கல்லிலே இரு மாங்காய் வீழ்த்துதல் திறமாகலாம். ஆனால், ஒரு சொல்லிலே இருவேறு செய்திகளை உரைப்பதாக அமைத்தல் அருமையன்றோ! அடிகளார் திறம் இருந்தவண்ணம் அதுவே என்க.*

*ஓலையும் ஆணியும் அல்லது இதழும் தூரிகையும் இல்லாமல், நெற்றிப் புனைகோலத்திலேயே உள்ளக் குறிப்பை எழுதிக் காட்டி, அதற்கு அவ்வண்ணமே மறுமொழியும், மறுமொழிக்கு மறுமொழியும் பெற்றுக்கொண்டமை, அதிலும் அக் காதல் தூதாகத் தன் மனைவியையே ஆட்படுத்திக் கொண்டமை - கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதைப் பெருஞ் செய்தியாம்.*

*இலக்கிய நூல்களில் இடம்பெற்ற கடித அமைப்பைச் சீட்டுக் கவியாக்கி நடைமுறைப்படுத்தியமை ஒரு வளர்ச்சி நிலையாகும். தமிழிலுள்ள சீட்டுக் கவிகளைத் தொகுத்தாலே ஒரு பெருந்திரட்டாகவும், பல்வேறு வரலாற்றுப் பொருளாகவும் அமையும் என்பது அறியத்தக்கவையாம்.*

*பெருமகனார் நேரு தம் மகளார்க்கு வரைந்த கடிதம், உலக வரலாறாக உலவுதல் உலகறிந்த செய்தி.*

*தவத்திரு மறைமலையடிகளாரின் கோகிலாம்பாள் கடிதங்கள் புனைகதையாய்ப் புகழ் பெற்றது!*

*அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு என அறிஞர் மு.வ. இந்நூற்றாண்டில் எழும் சிக்கலைத் தீர்க்கும் சிந்தனை நோக்கில் வரைந்த கடிதங்கள் தமிழிலக்கிய வகையுள் ஒன்றாகித் தளிர்ப்புறுத்துவன.*

*அறிஞர் அண்ணா அவர்கள், தம்பிக்கு வரைந்த தகவார்ந்த கடிதங்கள் இளைஞர்களைத் தட்டியெழுப்பிய தனிப்பெருமை வாய்ந்தது என்பதை எவரும் ஏற்கத் தவறார்.*

*இனிக் கடித இலக்கியமாக்காமல், கடிதமாக - இயல்பாக எழுதப்பட்டவையும் தனிப் பேரிலக்கியமாகத் திகழும் சிறப்பு வாய்த்தமை நாடுகண்டதேயாம்.*

*வள்ளலார் கடிதங்களையெல்லாம் அரிதின் முயன்று தொகுத்த பெருந்தொண்டு பேராளர் பாலகிருட்டிண முதலியார், வள்ளலார் திருப்பெயரை நினைவார் உள்ளகத்தெல்லாம் ஒன்றி உறைவோராம்!*

*தவத்திரு மறைமலையடிகளார் கடிதங்கள் அனைத்தும் தொகுத்து வெளியிடப்படவில்லை எனினும், தொகுத்த அளவுக்குப் பாராட்டும் பான்மையயே!*

*காந்தியடிகளார் கடிதங்களையும், விவேகானந்தர் கடிதங் களையும் தொகுத்து எழிலுற வெளியிட்ட, அவர்கள் திருப் பெயர் தாங்கும் அமைப்புகளை, எத்துணையளவு பாராட்டினும் தகும்!*

*மு.வ.வின் கடிதங்களைத் தொகுத்து வெளிப்படுத்திய முயற்சியை - அவர் துணைவேந்தராகச் சிறப்புறுத்திய - மதுரை - காமராசர் - பல்கலைக் கழகமே மேற்கொண்டது மதிப்பரிய நினைவுக்குறியாம்!*

*இப் பாவாணர் கடிதத் தொகுப்போ இவ்வகையில் தனி யொரு வகையதாம். இத்தொகுப்பில் அவர்தம் கடிதங்களுள் முற்றாக இடம் பெற்றவை ஒரு சிலவே. எஞ்சியவை, வேண்டும் கருத்தை வேண்டும் இடத்து எடுத்து இணைத்து வைக்கப் பெற்றவையாம். ஒரு கடிதத்திலுள்ள பல செய்திகள், பொருள் கருதிப் பிரிக்கப்பெற்று வெவ்வேறிடங்களில் இடம் பெற்றுள்ளன என்க.*

*தமிழர் வைப்பாகப் போற்றத் தக்கனவும், மொழிவழியால் நலங்காண விழையும் முழுதுணர்வாளர்க்குள் முட்டுதல் - பிரித்தல் - பிளத்தல் - பிணங்கல் - இன்னவற்றுக்கெல்லாம்*

இடந்தராதனவுமாகிய பகுதிகள் மட்டுமே இத்தொகுப்புப் பொருளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன!

ஒரு பொருட்டொடர்பற்றி வரையும் கடிதம் எனின், திட்டமிட்டுக்கொண்டு நூலுருவாதலை நெஞ்சில் பதித்துக் கொண்டு, கட்டுக்கோப்போடு கருதிச் செய்யப்பெற்றதாக அமைந்திருக்கும். ஓர் உணர்வு வழிப்பட்ட நிலையில் ஒருவர்க்கு எழுதும் கடிதம், மற்றோர் உணர்வு வழிப்பட்ட நிலையில் எழுதும் கடிதத்தோடும் முரணாகி முற்றிலுமே எதிரிடையாகி முனைப்பின் வீறிக் காட்சி தருதலும் வழக்கே! அந்நிலை, உணர்வுடையார் எவர்க்கும் தவிர்க்க வொண்ணா நிலைமையதாம். அதற்குப் பாவாணரும் விலக்குடையர் அல்லர்! 'ஓஓ!' என்று பாராட்டப்பட்ட ஒருவரையே ஒருவர் கோளால் உருத்திரிந்து 'ஆஆ' 'இப்படிப்பட்டவரா?' என்று பழித்து ஒதுக்கித் தள்ளுதற்கு இடனாகி இடராகிவிடுதல் காணக் கூடியவையே! அவ்வுணர்வுநிலை, உலகியல் பொதுநிலை! நம்பிக்கையில் ஒரு சொல்லும், நம்பாமை தலை தூக்கியதால் ஒரு சொல்லும் சொல்லுதல் உலகியல் பொதுநிலையே! மொழி ஞாயிறு பாவாணர் நிலை, தனித்தமிழ்க் குறிக்கோள்நிலை; தமிழ் திரவிடத்திற்குத் தாய் என்னும் நிலை; ஆரியத்திற்கு மூலம் என்னும் நிலை. மாந்தன் முதல் தோற்றம் குமரிக் கண்டமே என்னும் நிலை; உலக முதல்மொழி தமிழே என்னும் நிலை ஆகியவே! இவற்றில் காணும் பாவாணர் என்றும் ஒரே நிலையரே!

நோயிடையில் நொம்பலப்பட்டாலும், இழப்புகளில் இடருற்றாலும், பழிச்சொற்களுக்கு இடையே பதைப்புற்றாலும், திடுவிளைவுக் குட்பட்டுத் தெருமந்தாலும் - அப்பொழுதும் எப்பொழுதும் மாறாத் தனிப்பெரும் பொருள், தித்திக்கத் தித்திக்கத் தீந்தமிழே வடிவமாகிய - வாழ்வாகிய - தேவநேயம் - ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தனித் தேவநேயமேயாம்! இவற்றை, ஒன்றோடு ஒன்று பிணைத்துப், பிணங்குதல் அவர்தம் தந்நலப் பார்வையின் தளிர்ப்பும் - தழைப்பும் - தடிப்புமே - யன்றிப் பிறிதொன்றன்றாம்!

பாவாணர் கடிதத்தில் கொள்ளுவ கொண்டு தள்ளுவ தள்ள வேண்டுவது ஏன்? அப்படி அப்படியே அமைத்துக் காட்டினால் என்ன? என்னும் வினாக்கள் கிளர்தல் இயல்பே!

"கட்சி, சமய, இன நிலை கடந்தும் தமிழால் ஒன்றுபட வேண்டும்; தமிழ் பிணைக்குமே யன்றிப் பிரிக்காது; கருத்து வேறு பாட்டையும் மறந்து தனித்தமிழ் உணர்வால் கலந்துறைதல்

வேண்டும்'' எனபனவெல்லாம் தேவநேயர் கடைப்பிடிகள்; அவரால் ஆங்காங்குச் சுட்டப்பெற்ற குறிப்புகள்! இவற்றைக் கருதுதல், இத்தொகுப்பாளர் உணர்வோடும் ஒன்றியவை! பிளந்து பிளந்து, பிரிந்து பிரிந்து, பாழாய்ப் போகும் தமிழர் நிலை - நான்கு பேர் - இருவராய் - இருவரும் ஒருவராய் - அதற்கு மேல் பிரிய முடியாத அல்லது பிரிக்க முடியாத நிலைமை யாலேயே அவ்வொருவராய்ப் போய்க் கொண்டிருக்கும் போக்கைக் காணுங்கால், அதற்குக் களைவெட்டி - உரமிட்டு - நீர்விட்டு - வளர்தல் அறக்கொடுமை என்னும் உணர்வே, மாறுபட்ட எக்கருத்தும் - எவர் மனத்தையும் புண்படுத்தும் எக்கருத்தும் - இயையாமல் விலக்கப்பட்டதற்குக் கரணியமாம்! ஒன்றிரண்டு குறிப்புகள் - சுட்டுகள் - இடம் பெற்றிருத்தல், தவிர்க்க வொண்ணாமையாலும், மேலே பாவாணர் வரலாறு வரை தற்குக் கருவியாக அமைந்து கிடக்கும் தன்மையாலுமேயாம்!

ஏறத்தாழ 50 ஆண்டுகளில் பாவாணரால் எழுதப்பட்ட கடிதங்கள், ஏறத்தாழ 1520 இத்தொகுப்புக்கு மூலப்பொருளாக வாய்ந்தன. இதே அளவு எண்ணிக்கையுள்ள கடிதங்கள் அன்பர் கள் ஆர்வலர்கள் ஆகியோரிடத்தே இன்னும் இருத்தல் கூடும்! அவற்றையும் தொகுத்து நோக்கும் வாய்ப்பும் கை கூடின், இன்னும் எத்துணையோ அரிய கருத்துக்களைத் தமிழுலகம் பெறக்கூடும்! இத்தொகுப்பைக் காணும் அளவிலேனும் அவர் கள் உள்ளம் இத்தொண்டுக்குத் தலைப்பட்டு உதவ முந்துமாக! அவற்றைப் பெறும் வாய்ப்புக்கிட்டின் மற்றொரு கடிதத் தொகுப் பும் கட்டாயம் வெளிப்படுமாம்! நூல் அச்சீடு முடிந்த நிலையில், பேரா. மதிவாணர் அவர்கள் வழியே கடிதங்கள் பத்து வரப் பெற்றமை அடுத்த தொகுப்பின் அடிக்களமாம்.

சென்னை இலிங்கிச் செட்டித் தெரு மறைமலையடிகள் நூல்நிலையம், தமிழ்நூல் வைப்பகம் மட்டுமன்றித் தமிழறிஞர் கடித வைப்பமாகவும் திகழக் கருத்து வைத்தவர்கள், தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள். கழகத் தோற்ற நாள் தொட்டு அதன் வளர்ச்சிப்படி ஒவ்வொன்றிலும் தம் முத் திரையைப் பதித்து முழுமையாக்கி வைத்த பெருமகனார் அவர்! கழகஞ்சார்ந்த புலவர்கள் கடிதங்களையெல்லாம் சிந்தாமல் சிதறாமல் போற்றிப் பேணிக் காத்து வரலாற்றுக் கருவூலமாகத் திகழும் வகையில் ஒட்டுக்கோப்பில் ஒட்டி அட்டை கட்டி ஆவணமாக்கி வைத்துள்ளார்! அதில் பாவாணர் கடிதங்கள்

மட்டும் ஆயிரத்தைத் தாண்டும் அளவில் உள. அவையெல்லாம் இத்தொகை நூலுக்குப் பெரிதும் பயன் பட்டுள.

மேலும், சேலம், அரிமாப் புலவர் மி.மு. சின்னாண்டார், வெங்காலூர் பேரா. கு. பூங்காவனர், திருத்துறைப்பூண்டிப் பெரும்புலவர் வி. பொ. பழனிவேலனார், ஆற்றூர் பெரும் புலவர் பா. நாராயணர், நெய்வேலி, பாவாணர் தமிழ்க் குடும் பஞ்சார் அன்பர், ஆ. கருப்பையா, பேரா. ந. எழில் மகிழ்நர், மதுரை, தமிழ்ப்பாவை ஆசிரியர் வி.அ. கருணைதாசர், பேரா. மு. தமிழ்க் குடிமகனார், பேரா. வீ.ப.கா. சுந்தரனார், எழுத்தாளர் மன்றத் தலைவர் பு. மனோகரனார், பொறியர் க.சி. அகமுடை நம்பி, ஆகியோர் கடிதங்களும் என்வயமிருந்தனவுமாக 1520 கடிதங்கள் இத்தொகுப்பிற்குப் பயன்பட்டுள்ளன.

என் வேண்டுகோளை ஏற்ற அளவில் தம்மிடம் இருந்த கடிதங்களை மட்டிலும் விடுப்பதுடன் அமையாமல் பாவாணர் கடிதம் இருக்கும் பிறரிடத்தும் தாமே முயன்று விடுத்த பெரு நோக்கப் பேராளர் இருவர். ஒருவர் மீட்போலை ஆசிரியர் பேரா. கு. பூங்காவனர்; மற்றொருவர் நெய்வேலி உ.த.க. அமைப் பாளர் திரு. ஆ. கருப்பையா!

'பொதுப்பொருள் என்னும் பொருளும், தம்கைவயம் உள்ளமையால் தம் பொருளே' என்பார், தாமும் பயன் கொள்ளார்; பொதுவுக்கும் பயன் செய்யார்! ஆனால், மேலே சுட்டிக் காட்டிய பெரு மக்கள் கேட்ட அளவில் கடிதங்களை வழங்கினர்! தடையொன்றும் இன்றி உள்ளம் தளிர்க்க வாழ்த்துடன் உதவினர்! அதனினும் நினைக்கு நெக்குருகும் வண்ணம் தாமே தேடிவந்து உள்ளார்ந்த அன்பால் உதவினர்! இவ்வுதவுதல்களில் அடிக்களம் என்ன? "பாவாணர் பொருள் பைந்தமிழ்ப் பொருளே! அவர் திருப்பெயர் நிலைக்கத் தொடரும் பணிக்கு எம் உதவி முதற்படி உதவியாக இருக்க வேண்டுமேயன்றி, இரண்டாம் இடத்திற்கும் செல்லுதல் கூடாது! ஆக்கப் பணிகள் தேக்கமின்றி நடக்க வேண்டுமானால், ஊக்குவார் பங்கும் அதற்கு உறுதுணை" என்றும் பெருநோக்கப் பெற்றிமையில் அவர்கள் பிறங்கியமையே அடிக்களமாம்!

இனிப், பாவாணர் கடிதங்கள் பற்றியும் சில குறிப்புகளைச் சுட்டுதல் வேண்டும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் 'மெய்ப்பாடு எட்டு' என்று, தமக்கு முன்னோர் காலத்திலேயே உணர்ந்து எண்ணியவற்றை

எண்ணி, அவற்றின் நிலைக்கள விளக்கத்தையும் மெய்ப்பாட்டியல் என்னும் தனியியலில் விரித்துள்ளார். அம்மெய்ப்பாடுகளே பாடல், இசை, பாவிகம், நாடகம், சிறுகதை, தொடர்கதை ஆகிய எவற்றுக்கும் இன்றியமையாச் சுவைப்பொருள். ஒருவர் தாம் உணர்ந்த உணர்வை, அதனைக் காண்பார் கேட்பார் தாமும் அப்படி அப்படியே உணர வைப்பது கலைத்திறம் வல்லார்க்கு இயற்கைக் கொடையாம். அக்கொடைப் பேற்றாளர் களுள் தலைப்பேற்றாளராகத் தழைத்தவர் தமிழ்த் தேவநேயர். ஆதலால், அவர் எழுதிய கடிதங்களிலே எண்பான் சுவை களாகிய - மெய்ப்பாடாகிய - நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன விரவிக் கிடக்கின்றன! விளங்கிக் கிடக்கின்றன. இக் கடிதத் தொகுப்பைக் காண்பார் ஒவ்வொன்றிற்கும் பல பல எடுத்துக்காட்டுகளைத் தாமே கண்டு திளைப்பர். தனித்தனி எடுத்துக்காட்டுகளை விரித்தெழுதின் கடிதத் தொகுப்பின் அளவுக்கே இம் முன்னுரையும் நீளுமெனும் நினைவால் இதனைக் கற்பார் ஆய்வுக்கே ஆட்படுத்தி அடுத்த பகுதியைக் காணலாம்.

பாவாணர், ‘உயர்தரக் கட்டுரை இலக்கணம்’ என இரு தொகுதிகள் இயற்றியுள்ளார். அவற்றுள் கடிதம் வரைவதைப் பற்றிய விளக்கம் உண்டு; எடுத்துக்காட்டும் உண்டு. அவற்றுள் சிலவற்றை அறிந்துகொள்ளுதல் அவர் கூறும் அமைப்பு முறைக்கு அவரே இலக்கியமாதலை அறிந்து கொள்ளவும் வாய்க்கும்.

“கடித வரைவு முறையைச் சிலர் முக்கியமாகக் கருதுவ தில்லை. வேலைப் பேற்றிற் கேதுவான விண்ணப்பமும் பரிந் துரையும் பேரூதியத்திற்கேதுவான வணிக எழுத்துப் போக்கு வரத்தும் நெருநன்மைக்கேதுவாக எழுதப்பட்ட முறையீடும் பிறவேண்டுகோளும் கடித வகைகளே. ஆங்கிலம் போன்ற அயன்மொழியிற் கடிதம் வரையும் முறையை எவ்வளவு கருத் தாகக் கவனிக்கின்றோமோ அவ்வளவு கருத்தாகத் தாய்மொழி யாகிய தமிழில் வரையும் முறையையுங் கவனித்தல் வேண்டும்.

“ஒரு வகையில் கடிதம் என்பது எழுதப்படும் பேச்சே, ஒருவருக்கு முன்னிலையிலிருந்து திறமையாகவும் தெளிவாகவும் முறையாகவும் இனிமையாகவும் பேசுவதாற் பெறக்கூடிய பயன்களைத் தொலைவிலிருந்து அங்ஙனம் எழுதுவதாலும் பெறுதல் கூடும். சொல்வன்மை, கன்மனத்தையும் கனிய வைத்து ஆகாத காரியங்களையும் ஆக்குவிக்கும். அங்ஙனமே எழுத்து வன்மையும்.

"*கடித வரைவு சிலரால் ஒரு கம்மியமாகவும்* (Air) *வளர்க்கப் பெற்றுள்ளது. கி.மு. முதலாம் நூற்றாண்டில் சிசரோ என்னும் அறிஞர் வரைந்த இலத்தீன் கடிதங்கள் இன்று கற்றோர் உள்ளத்திற்கு இன்ப விருந்தாக வுள்ளன. ஆதலால், இலக்கியம்போற் போற்றப்பட்டு வருகின்றன. கற்றாரெல்லாம் இத்தகைய கடிதம் வரையப் பயிலவும் முயலவும் வேண்டும்" என்று கடிதங்களைப் பற்றிக் கூறும் பாவாணர் கடித உறுப்பு களைப் பற்றியும் கூறுகின்றார் :*

*1. தலைப்பு* (heading), *2. கொளு, 3. விளி* (Greeting or Salutation), *4. செய்தி* (Communication or Message), *5. உறவுத் தொடர் மொழி* (Subscription or leave - taking), *6. கைந்நாட்டு* (Signature), *7. முகவரி* (Address or Superscription on the envelope) *இவ்வேழும் கடித உறுப்புகளாகும்.*

**தலைப்பு :**

*எழுதப்பட்ட இடமும் நாளும் குறித்தல் கடிதத் தலைப் பாகும். உறவும், நட்பும், வணிகமும் பற்றியெழுதும் கடிதங் களிலெல்லாம் முதற்பக்க வலப்புற மேன்மூலையில் இடம் மேலும், நாள் கீழுமாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.*

**கொளு :**

*தலைப்பிற்குச் சற்று கீழாக, இன்னாரிடமிருந்து இன்னாருக்கு என்றாவது இன்னார் இன்னாருக்கு எழுதுவது என்றாவது செய்தி தொடங்கும்முன் வரையப்பெறும் முகவுரை கொளுவாகும்.*

**விளி :**

*கொளுவிற்குக் கீழாக இடப்புறத்தில், தனியாய், கடிதம் விடுக்கப்படுவோரை விளிப்பது விளியாகும்.*

**செய்தி :**

*விளிக்குக் கீழாக வரையப்படுவது செய்தி.. அது நீண்ட தாயின் பல பாகிகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எழுதப்படுவார் எழுதப்படும் செய்தி ஆகியவற்றுக்கு ஏற்ற நடைச் சிறப்புடையதாக இருத்தல் வேண்டும். கடிதச் செய்தி நிறைவுற்றதாகவும், எழுதும் கருத்தும் செவ்வையானதாகவும், நிறுத்தக் குறிகள் அமைந்தவையாகவும் இருத்தல் வேண்டும்.*

**உறவுத் தொழில் :**

*கடிதம் விடுக்கப்படுவோர்க்கும் விடுப்போர்க்கும் உள்ள உறவை அல்லது தொடர்பைக் குறிக்கும் தொடர்மொழி உறவுத் தொடர்மொழியாகும். இது செய்திக்குக் கீழாக வலப்புறத்தில் வரையப்பெறும்.*

**கைந்நாட்டு :**

*உறவுத் தொடர்மொழிக்குக் கீழாக அதனினும் சற்று வலமாக, கடிதம் விடுப்போரின் பெயர், தந்தை பெயரின் முதலெழுத்துடன் தெளிவாக வரையப்படுதல் வேண்டும். அறிமுகமாகாதவர்க்கு எழுதுங் கடிதங்களில் அது மிகத் தெளிவாக இருத்தல் வேண்டும்.*

**முகவரி :**

*கடிதவுறையின் பின்புறத்தில் அல்லது மடித்த கடிதத்தின் பின்புறத்தில், கடிதம் விடுக்கப்படுவோரின் முழு முகவரியும் தெளிவாய் வரையப்படுதல் வேண்டும்.*

*இவற்றை உயர்தரக் கட்டுரை இலக்கணம் இரண்டாம் பாகம் கட்டுரையியலில் விரிவாக வரைந்துள்ளார் பாவாணர். அவர்தம் புனைவுக் கடிதப் போலிகைக்கு ஒரு சான்று :*

## நட்புக் கடிதம் (Friendly Letter)

போலிகை

*(ஒரு மாணவன் தன் பள்ளிக்கும் வேறோரு பள்ளிக்கும் நடந்த காற்பந்துப் பந்தயத்தைப்பற்றித் தன் நண்பனுக்கு வரைவது.)*

6, வேளாளத் தெரு,
மன்னார்குடி,
8-2-'49

*அருமை நண்ப,*

*நலம். உன் நலத்தை இன்று உன் கடிதத்தால் அறிந்து கொண்டேன்.*

*நேற்று மாலை எங்கள் பள்ளிக்கும் இவ்வூரிலுள்ள தேசிய உயர்நிலைப் பள்ளிக்கும் ஒரு காற்பந்துப் பந்தயம் நடந்தது. அது, முதலிலிருந்து முடிவு வரை உணர்ச்சி மிக்க நிகழ்ச்சியாயிருந்தது.*

முதலாவது, எங்கள் கல்விச் சாலைக் கட்சியார் விளையாட்டு நிலத்தின் கீழைப் புறத்திலும் எதிர்க் கட்சியார் மேலைப் புறத்திலும் நின்று விளையாடினார்கள். காற்று மிக வேகமாகக் கிழக்கு நோக்கியடித்துக் கொண்டிருந்தது. இது எதிர்க்கட்சிக்குச் சார்பாகவும் எங்கள் கட்சிக்கு மாறாகவும் இருந்ததனால், எதிர்க்கட்சியார் மிக விரைவில் கோல் போடத் தொடங்கி, அரைமணி நேரத்திற்குள் ஆறு கோல் போட்டுவிட்டார்கள். எங்கள் கட்சியார் கோல் வாங்கினார்களே யொழிய, ஒன்று கூடப் போட முடிய வில்லை.

பின்பு, அரை வேளை வந்தது. பிற்பாதியில் காற்றடிக்கும் பக்கத்திற்கு எதிர்க்கட்சியார் போனபின் எங்கள் கட்சியார் கடனையுங்கழித்து மேற்கொண்டும் கோல் போடுவார்கள் என எண்ணி ஐந்து நிமையம் ஒருவாறு மகிழ்ந்திருந்தோம்.

ஆயின், மீண்டும் விளையாட்டுத் தொடங்கியவுடன் காற்று நின்றுவிட்டது. அப்போதே எங்கட்குக் கலக்கம் பிறந்துவிட்டது. அதோடு, பத்து நிமையங்கழித்து, ‘பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்’ என்னும் பழ மொழிப்படி, எங்கள்கட்சித் தலைவனும் தேர்ச்சிபெற்ற காற்பந்தாடகனுமாகிய ஆளவந்தான் அண்மையில் கடு நோய் பட்டுத் தெளிந்தவனாதலால், திடுமென்று மயங்கிக் கீழே விழுந்துவிட்டான். அன்றே எங்கள் அரை நம்பிக் கையும் போய்விட்டது. அவனுக்குப் பதிலியாக (Subsitute) வந்த வெற்றிவேலோ, நேற்று வரை எந்தப் பந்தயத்திலும் விளையாடினதுமில்லை; விளையாடத் தக்கவன் என்று கருதப்பட்டதுமில்லை. நேரம் கால் மணிதான் இருந்தது. எங்கட்கு ஏக்கமும் முன்னினும் பன்மடங்கு மிகுந்துவிட்டது. ஆயினும் காரிருளில் பளீர் என ஒளி வீசும் மின்னல்போல் ஒரு நிமையத்திற்குள் வெற்றிவேல் ஒரு கோல் போட்டான். எங்கட்குக் கலக்கம் முற்றும் தீரவில்லையாயினும் எங்கள் நம்பிக்கை எழத்தொடங்கிற்று. பின்பு, வெற்றிவேல் மிகவூக்கங் கொண்ட மின்னல் வேகத்தில் விளையாட, எதிர்க்கட்சியார் மருள் கொண்டார் போல் மனந்தடு மாறவும், கண்டாரெல்லாம் இடைவிடாது ஆரவாரித்துக் கை தட்டவும் எதிர்க் கட்சிக்கோல் காப்போன் பந்தை எற்ற எற்ற உடனுடன் திருப்பியெற்றி, பத்து நிமையத்திற்குள் ஐந்து

**கோல் போட்டது மந்திரமோ மாயமோ என்று எண்ணுதற் கிடமாயிருந்தது.**

**இந்த ஆட்டத்தை நீ பார்க்கவில்லையே என்பதுதான் என் வருத்தம். இங்ஙனம் ஆறுகோல் போட்டுக் கடனை முற்றும் கழித்துவிட்டது மட்டுமா? விளையாட்டு முடிவதற்கு ஒரு நொடியிருந்தபோது மீண்டுமொரு கோல் போட்டுத் தன் பெயரை மெய்ப்பித்துவிட்டான் வெற்றிவேல். எங்கட் குண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஊராரெல்லாம் விளையாட்டு முடிந்தவுடன் ஓடிவந்து வெற்றிவேலைச் சூழ்ந்து கொண்டு, நீண்ட நேரம் நெஞ்சாரப் புகழ்ந்து வாயார வாழ்த்தினர். சிலர் அவன் வீடு வரை அவனைத் தொடர்ந்து சென்றனர். இன்று இவ் வூரெல்லாம் அவனைப் பற்றித்தான் பேச்சு.**

**இஃது உனக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் விளைக்கு மென்று கருதுகின்றேன்.**

*பிறபின்,*

*நண்பன்,*

**ஆடவல்லான்**

*மாணவர்க்கு எழுதப்பட்ட - கட்டுரைப் பயிற்சிப் புத்தகத்திலே எழுதப்பட்ட - போலிகையாக இட்டுக் கட்டி எழுதப்பட்ட - கடிதத்திலே, எத்தனை வகை உணர்ச்சிகள்? ஆனால் உணர்வு களின் உந்துதலால் அவ்வப்போதில் அவ்வுணர்வுடையார்க்கோ, எதிரிடையார்க்கோ எழுதப்பட்ட கடிதம் எப்படி இருக்கும்? ஆகலின் பாவாணர் கடிதப் பொருள் பயன் மிக்கதாகவும், சுவை மிக்கதாகவும் இருத்தல் ஒருதலை என்பதை ஆயவே வேண்டிய தில்லையாம்!*

*பாவாணர், மன்னார்குடியில் இருந்த 1931 ஆம் ஆண்டில், எழுதிய கடிதங்களில் கல்லூரிப் பெயரும் (Findlay College) ஊர்ப்பெயரும் (Mannargudi) ஆங்கிலத்திலே எழுதப்பட்டன. ஆனால் அடுத்த ஆண்டே தமிழில் எழுதலாயினார். அந்நாளில் இருந்து ஏறத்தாழ 30 ஆண்டுகள் ஆங்கில ஆண்டு மானத்தையே குறிப்பிட்டுள்ளார்! பின்னர்த் தி.பி; கி.பி. ஆகிய இரண்டையும் பயன்படுத்துதலும், தி.பி.யை மட்டும் பயன்படுத்துதலும், கி.பி.யை மட்டும் பயன்படுத்துதலும் ஆகிய முந்நெறிகளையும்*

மேற்கொண்டார். தி.பி.க்கு தமிழ் எண்ணில் நாளும் ஆண்டும் அமையும். திங்கள் முழுப் பெயராக இருக்கும்.

(எ-டு) 2004 துலை 24. (9-11-73)

பாவாணர் பெரும்பாலும் அட்டைகளையே பயன் படுத்துவார். உள்நாட்டுறையோ, உறையோ பயன்படுத்துதல் அருமையாம், அட்டை, உறை ஆகிய எவையாயினும், அவரே தமக்கென முகவரி அச்சிட்டு வைத்துக்கொண்டு பயன் படுத்தியது இல்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழக வாசகராக இருந்த காலத்தில் மட்டும் பல்கலைக்கழகம் அச்சிட்டுத் தந்த கடிதங்கள் சிலவற்றைப் பயன்படுத்தியுள்ளார். ஆதலால், ஒவ்வொரு கடிதத்திலும் தம்கைப்படவே இடம் நாள் முகவரி குறித்துள்ளார்.

(எ-டு) பி (ஆ) 969, 5ஆம் மேற்குக் குறுக்குச் சாலை, காட்டுப்பாடி விரிவு. வ.ஆ. மாவட்டம் 15, கும்பம், 1995.

ஐயா, அன்பார்ந்த ஐயா, அன்பார்ந்த ஐயன்மீர், அன்பரீர், பேரன்பரீர், அருந்தமிழ் அன்பீர், அருந்தமிழ்ப் புலவீர் இன்ன விளிப்புகளைப் பாவாணர் ஆண்டுள்ளார்.

'வணக்கம்'; 'நலம்; நலமாக'; 'தங்கள் கடிதம் கைவயம்' என்பனவும் விளிப்பினை அடுத்து இடம்பெறுவன. பின்னே செய்திகள் தொடரும். ஓரட்டையில் எழுதும் செய்தி. அதற்குச் செலவிட்ட தொகையில் எள்ளளவும் வீணாயதாகக் கருத வொண்ணா வகையில் அல்லது ஓர் உறையில் பல பக்கங்களில் எழுதும் செய்தியை ஓரட்டையில் எழுதிவிட்ட நிறைவகையில் அமைந்திருக்கும். மழுங்கிய பார்வையர்க்குப் பெருக்காடித் துணைகொண்டுதான் பார்க்க வேண்டிய நுணுக்கத்தையுடைய தாகக் கடிதம் அமைந்திருக்கும்.

பேரா திரு. கு. பூங்காவனர்க்கு 1-11-78இல் பாவாணர் வரைந்த கடிதத்தில் "முந்தி விடுத்த அஞ்சலுறையை நெடுஞ் செய்திக்கு வைத்திருக்கின்றேன்" என்றுள்ள குறிப்பு. பூங்காவனர் விடுத்த உறையையே, 'அச்செய்திக்கு அவ்வுறை வேண்டுவ தில்லை' என்னும் எண்ணத்தால் அதனைச் சேமத்தில் வைத்து விட்டுச், செய்திக்கு ஏற்ற அளவில் ஓர் அட்டையை எடுத்துப் பாவாணர் பயன்படுத்துகின்றார் என்பது புலப்படுத்துகின்றது. இக்குறிப்பு சிக்கனத்தை மட்டுமன்றிப், பயனீட்டையும் விளக்கு வதாம்.

செய்திகளைப் பாகி (பத்தி)யாகப் பிரித்துக்கொண்டு எழுதுவார். எழுத இடமில்லாதபோது ஓரத்திலும், உச்சியிலும், இடைமடுத்தும் எழுதுவதும் உண்டு. எந்நிலையில் எழுதினாலும் பாவாணர் கடிதங்களில் எப் பிழையைக் காணவும் இயலாது, சந்திப் பிழையோ வாக்கிய அமைப்புப் பிழையோ எழுத்துப் பிழையோ அவர்தம் கடிதங்களில் ஒன்றிற் கூடக் காணற்கு இயலாது. அவரே எழுதமுடியாத நிலையில் - தம் கண்ணுறுவை செய்யப்பட்டபோது - பிறிதொருவரைக் கொண்டு எழுதுவித்த இரண்டு கடிதங்களில் மட்டுமே சில பிழைகளைக் கண்டதன்றி அவர்தம் கடிதத்தில் பிழை கண்டதே இல்லை! ஏனெனில், விரைவு, கவனக் குறைவு, மயக்கம், ஐயம் இவற்றால் கடிதங்களில் பிழை நேர்தல் கண்கூடாகக் காண்கின்றோம் அல்லமோ! இந்நிலை பாவாணரிடத்துத் தலைகாட்டியதே இல்லை என்க.

தொடக்க நாள் கடிதங்களில் ஓரிரு வடசொற் கலப்பும் ஆங்கிலச் சொல் பெய்வும் இருந்தன. ஆனால் அவை சில் லாண்டுகளில் இருந்த இடமும் தெரியாமல் மறைந்தன. ஆகலின், கடிதக் ‘கால உணர்வும்’ கற்பார் கருதத்தக்கதாம்.

பாவாணர் கையெழுத்து, பயிற்சியுடையாரால் மிக எளிமையாக அடையாளங் கண்டுகொள்ளக்கூடிய அமைப் பினது. என்றும் ஏறத்தாழ ஒரே தன்மையதாக அமைந்தது. அவ்வெழுத்து ‘முத்துக் கோத்து வைத்தாற் போன்றது’ என்று கூற முடியாததுபோலப், படிக்க முடியாதது, படிக்கப் படும் பாடு படுத்துவது என்ற கூறவும் முடியாதது. பொதுவில் எவரும் படித்து அறிந்துகொள்ளத்தக்க பொது நிலை எழுத்து என்பது தகும்.

கடிதத்தின் முடிவில் கையெழுத்திற்கு முன்னே மிக அரிதாக ‘அன்பன்’ என்பதை எழுதிக் கையெழுத்திடுவார். பெரும்பாலான கடிதங்களில் ‘அன்பன்’ என்ற குறிப்பும் பொறிப் பதில்லை.

ஞா. தேவநேயன் என்று முழுக் கையெழுத்துப் போடுதல், ஞா.தே. எனச் சுருக்கக் கையெழுத்திடுதல் என இரு முறை களையும் பாவாணர் கையாண்டுள்ளார். செய்திகளுக்கு இடம் போதாத கடிதங்களில் ‘ஞா.தே’ என்பதையும் வடவிடுத்துள்ளமை சில கடிதங்களில் காண இயல்கின்றது.

பிள்ளை, முதலியார், நாள், மாதம் என்பவற்றைப் பாவாணர் சுருக்கெழுத்தில் எழுதுவதே பெருவழக்கு. இணைப்பெழுத்து களையோ (க்கு; த்து என்பவற்றை இணைத்து எழுதும் எழுத்து)

சீர்திருத்த எழுத்து என்று இந்நாள் சொல்லப்படுகின்ற எழுத்துக் களையோ பாவாணர் கையாண்டதில்லை. அதனைக் கண்டித்தும் எழுதியுள்ளார். பெரியார்க்கே இச் சீர்திருத்த எழுத்தில் ஆர்வம் இல்லை என்றும், சிக்கனம் கருதிய கருத்தால் பயன்படுத்தினார் என்றும், தமக்கு வழங்கிய பட்டம் ஒன்றில் சீர்திருத்த எழுத்தைக் கையாளாமலே எழுதியளித்துள்ளார் பெரியார் என்றும் கூறுகிறார் பாவாணர்.

இக் கடிதங்களால் அறியப்படும் செய்திகள் இவையென முதற்கண் சுட்டப்பட்டது. இச்செய்திகளின் பயன் இவை யெனவும் சொல்லப்பட்டது. அவற்றோடு, உணர்ந்து கொள்ள வேண்டிய செய்திகளும், பாவாணர் உள்ளத்தைத் தெள்ளென வெளிப்படுத்தும் குறிப்புகளும் பலப்பல இத்தொகையில் இடம் பெற்றுள என்பதை ஆர்வலர்கள் நன்கனம் அறிந்துகொள்வர்; அவர்க்கு, இத்தொகுப்பு அறுசுவை விருந்தென அமைதலையும் கண்டுகொள்வர். இது சிறிய அளவிலேனும் பாவாணரைப் படம்பிடித்துக் காட்டும் ஒரு முயற்சியாகக் கருதப்படும் என்பது எளியேன் நம்பிக்கையாகும்.

“எளிய நிலையில் இருப்பவனும், முகமன் கூறிப் பிறரைப் புகழும் இயல்பில்லாதவனும், புலவரும் விரும்பாத தனித்தமிழ் நடையினனும், ஆரியத்தை வன்மையாய் எதிர்ப்பவனும் ஆகிய என்னை” என்று பாவாணர் தம்மைத் தாமே படம் பிடித்துக் காட்டும் இக் காட்சி அவர் கடிதத்தால் அன்றி எப்படிப் பெற முடியும்?

“அருணாசலம், எனக்கு ஒன்றும் தெரியாதென்றும், அவன் எனக்குக் கற்பித்து எம்.ஏ., பி.ஓ.எல்., பட்டங்கள் வாங்கிக் கொடுத்தாகவும் அவன் பொத்தகங்களிற் சிலவற்றை நான் திருடியதாகவும், அச்சகத்திற் சொல்லியிருக்கிறான். இது எத் துணை நகைச்சுவையும் வேடிக்கையுமான செய்தி” என்று தம்மேல் சுட்டப்பட்ட பழிகளைத் தாமே நகைத்துப் புறத்தே ஒதுக்கித் தள்ளுதலை அவர் கடிதத்தால் அன்றிப் பெறுதற்கு இயலாதே! இப்படி எத்தனை எத்தனை பாவாணர் ஓவியக் காட்சிகள்!

இத்தொகை நூல் உருவாக்கம் என்னுள் உருவாகிய காலையில், என் உணர்வை மதித்துக் கடிதங்கள் உதவிய சான்றோர் களையெல்லாம் சுட்டியுள்ளேன். அவர்களுக்கெல்லாம் நெஞ் சார்ந்த நன்றியுடையேன். பாவாணர் கடிதத் தொகுப்புகளை யெல்லாம் நன்கனம் பயன்படுத்திக் கொள்ள உதவியதுடன்,

*அந்நூலை வெளியிடும் பொறுப்பையும் மேற்கொண்ட பெருமகனார் கழக ஆட்சியாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிப்., அவர்கள் ஆவர். அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்! அச்சூர்தி ஏறாத அஞ்சல்கள் அச்சூர்தி ஏறிக் கருவிநூற் பெருமையும் பெறுகின்றதேயன்றோ!*

*இத் தொகுப்பைச் செய்து வரும்போதே பாவாணர் வரலாறு வரைதற்கும், வேறிரு நூல்கள் எழுதுதற்கும் வேண்டும் குறிப்புகளையெல்லாம் தொகுத்து வைத்துள்ளேன். அவையும் விரைவில் ஒவ்வொன்றாய் வெளிவரும் என்பதையும் முந்துற உரைத்து நிறைவிக்கின்றேன்.*

*1940இல் 'வேர்ச்சொல் சுவடி' என ஒரு சிறுநூல் எழுதி முடித்தார் பாவாணர். அந்நூல், இதுகாறும் அச்சிடப் பெற்றிலது. பாவாணர் கடிதங்களைத் தொகுக்கும் முயற்சியில் தலைப்பட்டு, கழக மேனாள் ஆட்சியாளர் தாமரைச் செல்வர் அவர்களின் காப்பகப் பேழையுள் தேடுங்கால் 'வேர்ச் சொல் சுவடி' கிடைக்கப்பெற்றுக் கழிபேரின்பம் நல்கிற்று! அது, கிழங்கு தோண்டி எடுத்தற்கு முனைந்த வறிஞன் ஒருவன் கையில், வளமார்ந்த வைப்புப் புதையல் வாய்த்ததாயிற்று!*

*"அயரா முயற்சி மேற்கொண்டால், பாவாணர் வரைந்து முடித்துப் பெயர் சுட்டும் அளவில் நின்றுபோன சுவடிகளும் கட்டுரைகளும் கிடைக்கக் கூடும்" என்னும் ஆர்வமும் தளிர்ப்ப தாயிற்று! பாவாணர் பற்றுமையர் ஒருங்கொத்து உதவத் தலைப்படின், எய்தாதவை யெல்லாம் எய்தி இணையிலா நலப்பாடாம் என்பது உறுதியாம். திருவருள் கூட்டிவைப்பதாக!*

**தமிழ்ச்செல்வம்**
**பாவாணர் ஆராய்ச்சி நூலகம்**
**திருநகர், மதுரை - 625 006.**

**தமிழ்த்தொண்டன்,**
**இரா. இளங்குமரன்**
14-1-'85

# கடிதம் உதவியோர்

# பெயர்களின் சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| க.சி.அ. | - க.சி.அகமுடைநம்பி |
| இரா. இ. | - இரா. இளங்குமரன் |
| நா.எ.ம. | - நா. எழில் மகிழ்நர் |
| வி.அ.க. | - வி.அ. கருணைதாசன் |
| ஆ.க. | - ஆ. கருப்பையா |
| மி.மு.சி. | - மி.மு. சின்னாண்டார் |
| வீ.ப.கா.சு. | - வீ.ப.கா. சுந்தரனார் |
| வ.சு. | - வ. சுப்பையா பிள்ளை |
| மு.த.கு. | - மு. தமிழ்க்குடிமகனார் |
| பா.நா. | - பா. நாராயணர் |
| வி.பொ.ப. | - வி.பொ. பழனிவேலனார் |
| கு.பூ. | - கு. பூங்காவனர் |
| பு.ம. | - பு. மனோகரனார் |

# பாவாணர் கடிதங்கள்

# பாவாணர் கடிதங்கள்

## 1. தேடிச் சேர்த்த திரு

*எதை எதையோ தேடித் தேடித் திரிந்தலையும் உலகத்தே, எய்ப்பினில் வைப்பாய் என்றும் இருக்கும் நுண்மாண் நுழை புல நூல்களைத் தேடித் தேடித் தொகுத்துத் தெளித்து ஆய்ந்த ஏந்தல் பாவாணர்! "தக்கார் தகவிலர் என்ப தவரவர், எச்சத்தாற் காணப்படும்" என்பதற்கு ஏற்ப, நூலெச்சத்தை நுனித்துணர் வால் தொகுத்து வைத்த நூலறி புலவர் பாவாணர்! அவர் அரும்பெரும் 'தட்டுப்பாடும். முட்டுப்பாடுமே பெட்டிப் பொரு ளெனக்' கொண்டிருந்த நாளிலும், "கடன் கொண்டும் செய்வர் கடன்" என்னும் பொன்மொழிக்கு ஏற்பத் தொகுத்துவைத்தவை விலைமதிக்க வொண்ணா விழுப்பொருள் நூற்பொருளேயாம்! அதுபற்றிய செய்திகளை அவர் கடிதங்கள் பரக்க விரித் துரைக்கின்றன.*

**பொது :**

*"என் சொத்தெல்லாம் என் நூல்நிலையமும் ஆராய்ச்சியுமே"*[1]

*"என் ஒரே உடமையாய் இருக்கின்ற ஆராய்ச்சி"*[2]

*"என் நூலகம் மட்டும் 7 நிலைப்பேழைகள் கொண்டது"*[3]

*"எனக்கு வீடுமில்லை; காடுமில்லை; இருப்புமில்லை; எடுப்புமில்லை; நாற்பானாண்டாக இரவு பகல் அரும்பாடுபட்டு ஆய்ந்த ஆராய்ச்சிதான் என் முழுவுடைமை"*[4]

**நூல் :**

*"வருண சிந்தாமணி ஒருபடி உங்கள் புத்தக சாலையிற் கண்டேன். அதே எனக்கு வைத்திருங்கள்"*[5]

---

1. 20–3–64(வி.அ.க.)
2. 20–3–64(வி.அ.க.)
3. 20–3–64(வி.அ.க.)
4. 20 கும்பம் 1995 (வி.பொ.ப.)
5. 24–7–31 (வ.சு.)

"முத்து வீரியம் முக்கியம், வருகிற விடுமுறைக்குள் எனக்கு ஒன்று வாங்கி வையுங்கள். தேம்பவாணியும் ஒரு தொகுதி வேண்டும்."[6]

"தயைசெய்து கீழ்க்கண்ட இலக்கண நூல்களை ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைக்க, அவை என் நூலாராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டுவனவாய் இருக்கின்றன. என் புத்தகங் களை அச்சிடாவிட்டாலும் 3 மாதத்திற்குள் பணம் கட்டி விடுகிறேன்.

1. இறையனார் அகப்பொருள்
2. தொல்காப்பியம் (நமச்சிவாய முதலியார்) மூலம்
3. தொல்காப்பியம் பொருளதிகாரம் 4 Vol. நச்சினார்க் கினியம், பேராசிரியம் (பவானந்தர் கழகம்).
4. நன்னூல் மூலம் 2
5. நன்னூல் விருத்தி - சங்கர நமச்சிவாயர்
6. சிதம்பரப்பாட்டியல்
7. தண்டியலங்காரம் அ. குமாரசாமிப் பிள்ளை
8. முத்துவீரியம்
9. பன்னிருபாட்டியல்

பன்னிரு பாட்டியல் கிடையாதிருக்கலாம். முத்துவீரியம் கிடையாவிட்டால் உங்களதை அனுப்பி வையுங்கள்[7]

"ஒன்பது இலக்கண நூல்கள் அனுப்பும்படி வேண்டி யிருக்கிறேன். தயவுசெய்து ஜூலை 15-ம் உக்குள் அவற்றை அனுப்பி வைக்க.

"என் புத்தகக் கணக்கில் அவற்றைக் கேட்கவில்லை. ஏனென்றால் ஒன்றையாவது வெளியிடுமுன் அதிகமாகக் கேட்க விருப்பமில்லை. என் புத்தகங்களில் ஒன்றையாவது வெளி யிடாமற்போனாலும் அவற்றின் விலையை 3 மாதத்திற்குள் கொடுத்துவிடுவேன். சுமார் 30 ரூக்குப் புத்தகங்களைக் குறித் திருக்கிறேன்.

---

6. 24–7–31 (வ.சு.)    7. 28–7–31 (வ.சு.)

"இலக்கண நூல்களில் எனக்கு எல்லையில்லாத பைத்திய முண்டு. குமாரசாமி நாயுடு கம்பெனியில் தொல்காப்பியச் சொல்லதிகாரமும் பேராசிரியமும் கல்லாடமும் மூன்றாண்டு கட்கு முன்னமே அச்சில் இருந்தன. அவை வெளியேறியிருப்பின் அவற்றிலும் ஒவ்வொன்று வாங்கி உடன் சேர்த்து அனுப்புக. நான் கேட்ட நூல்கள் எல்லாம் என்னிடத்தில் இல்லை. முத்து வீரியம் கிடைக்கு மட்டும் உங்களதை அனுப்பி வையுங்கள் மிகப்பத்திரமாய் வைத்திருப்பேன்.[8]

"History of Pallavas by Gopalan

"The Nayaks of Madura

என்ற இரு University வெளியீட்டு நூல்கள் எனக்கு வேண்டும். நான் வரும்போது ஏதாவது ஒரு கணக்கில் வாங்கிக் கொடுத்தீர் களானால் பேருபகாரமாயிருக்கும். அவை என் பரீட்சைப் பாடப் புத்தகங்கள்"[9]

அன்புகூர்ந்து உடனே பண்டாரகர் (Dr.) சேதுப்பிள்ளை அவர்களிடம் ஆளனுப்பி ஒரு தொகுதி பல்கலைக் கழக அகராதியும் குண்டர்ட் மலையாள ஆங்கில அகராதியும் வாங்கி வைக்க, வேனிலுக்கு ஏர்க்காடு போவதாகச் சொன்னார்கள். ஆங்குப் போகுமுன் வாங்கி வைத்து விடுக.

கால்டுவெல் 3ஆம் பதிப்பும் (இங்கிலாந்து) படியொன்று எடுத்து வைக்க, சாமவேதம் ஒரு தொகுதி மறவற்க. The Holy Shank பொருட்காட்சி சாலையில் கிடைக்காவிடின் முர் அங்காடியில் வாங்கிவைக்க."[10]

எனக்குத் தேம்பாவணி உரை, வருண சிந்தாமணி, அமிர்த கவிராயர் இயற்றிய ஒருதுறைக்கோவை, மிருதங்க சுயபோதினி (பவழக்காரத் தெருவில் உள்ள ஓர் ஐயர் வெளியிட்டது) இவற்றில் ஒவ்வோர் படி தவறாது வாங்கி வருக"[11]

"தண்டிகைக் கனகராயன் பள்ளும், பறளை விநாயகர் பள்ளும் பிற பள்ளுகளும் வேண்டும்.

"Peeps at Many Lands-Australia முர் அங்காடிப் பழங் கட்டிடத்தில் ஒரு நடுக்கடையிலுளது. விலை 8 அணா சொன்னான் வாங்கி வைக்க."[12]

8. 29–7–31 (வ.சு)
9. 30–6–32 (வ.சு.)
11. 11–12–41 (வ.சு.)
10. 4.5.57 (வ.சு.)
12. 26–12–39(வ.சு.)

*“ஆஸ்திரேலிய மிகத்தேவை, வாங்கி வைக்க“*[13]

*“நேற்றுக் கொடுத்தனுப்பிய சாம்பசிவம் பிள்ளை அகர முதலி அடிகள் நூல் நிலையத்தைச் சேர்ந்ததா? நுங்களதா?*

*இன்று புதுப்படியேனும் பழம்படியேனும் விலைக்குக் கிடைக்குமா? நூறு ரூபா வரை கொடுக்கலாம். எனக்கொன்று மிக்கத்தேவை இயன்றவரை முயன்று பார்க்க”*[14]

*“சங்கத் தமிழகர முதலி ஏனையிரு பகுதிகளும் கிடைப்பின் மிக நன்றாம். பன்மடங்கு விலையேற்றினாலும் கொடுத்து விடுவேன்”*[15]

*“ஆக்கசப் போர்டு ஆங்கிலப் பேரகரமுதலியை (14 மடலம்) உடனே வாங்கும்படி திரு. சுப்பையா பிள்ளைக்கு எழுதி விட்டேன். ஆதலால் 1300 உரூபாவிற்குக் காசோலை உடனே அவருக்கு அனுப்பிவிடுக.*[16]

*பாவாணர் தேடிச் சேர்த்த திரு. இன்னதென வெளிப் படுத்தத்தக்க சில குறிப்புகள் இவை. “கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்” தானே திரு என்பது! அத்திரு பாவாணரிடத்து எத்தகு நிலையில் அமைந்து ஆக்கம் சேர்த்தது! அவ்வாக்க விளைவுதானே அவராக்க விளைவு!*

13. 29–12–39 (வ.சு.)

14. 2004 சிலை (இரா.இ)

15. 27–11–80 (இரா.இ)

16. 9–5–70 (மி.மு.சி.)

## 2. பன் மொழிப் பயிற்சி

*"ஆர்வமும் அக்கறையும் உடையவர்களும், மொழிப் புலமைக்குரிய கூர்த்த மூளை அமைந்தவர்களும் ஐம்பது மொழி களைக் கூட கற்றுக்கொள்ள முடியும்" எனச் சுட்டுவார் பாவாணர்! அஃதவர் படிப்பறிவை மட்டுமன்றிப் பட்டறிவும் இயைந்து கண்ட முடிவு என்பது வெள்ளிடையாம். ஆய்வு நெறிப்பட்ட தொடக்க நாள் முதல் அறிவில் தலைநின்ற இறுதிக் காலம்வரை பலப்பல மொழிகளைப் பயின்று வந்தவர் பாவாணர் என்பதற்கு, அவர்தம் கடிதங்கள் சான்று பகர்கின்றன. அவற்றுள் வரும் குறிப்புகளுள் சில :*

*"மூர் அங்காடியில் பழைய கட்டிடத்திலுள்ள புத்தகக் கடை வரிசையில் வட பகுதியில் ஒரு கடையில் மலையாள இலக்கணப் புத்தகம் ஒன்று கண்டேன். பொருளல்லாமல் வந்துவிட்டேன். 5 அணாவிற்குக் கேட்டேன். இசையவில்லை 8 அணாவிற்கு இசைவான். எங்ஙனமும் ரூ. 1க்கு மேற்படாது. இசையுமாயின் வாங்கிச் செல்வியொடு சேர்த்தனுப்பு."[1]*

*"புதுக் கட்டடத்தில் கீழ் வரிசையில் கீழே ஒருவன் சில அரசாங்க வெளியீட்டுப் பழம் புத்தகங்களை விற்றுக் கொண் டிருந்தான்.* Arabic English Vocobulary *ஒன்று எட்டணாவிற் கிசைந்தான் பொருளில்லாது வந்துவிட்டேன்."[2]*

*"ஹிந்தி பயில்கின்றேன்"[3]*

"French grammer, German grammer *இவ்விரண்டும் சென்னை மூர் அங்காடியில் கிடைக்கும். சென்ற கமலநாதன் முதலியார் அவர்களை அங்குப்போய் விசாரித்து எழுதச் சொன்னேன். அவர்கள் போய்* Germen grammer *இருக்கிறதென்றும் 1 ரூ. விலையென்றும் எழுதினார்கள். உடன் பணம் அனுப்ப முடிய வில்லை. தயவுசெய்து உடனே முதலியார் அவர்களிடம் பணம் கொடுத்து வாங்குவித்து, கோபால் பிள்ளை ஆள்மூலம் அனுப்பிவிடுக"[4]*

---

1. 4–10–34 (வ.சு)
2. 4–10–34 (வ.சு)
3. 13–11–35 (வ.சு)
4. 23–8–39 (வ.சு)

"தயவு செய்து உடனே Arabic grammer, Hebrew grammer, chinese Self-taught&grammer Higginbothams வாயிலாய் வருவித்துத் தருக. அதே கழகத்து அல்லது பிறவெளியீட்டு French grammer, German grammer இவ்விரண்டும் சென்னை மூர் அங்காடியில் கிடைக்கும்.[5]

"ஆஸ்திரேலியம் மிகத் தேவை. சீனம் (china) மலேயம் (Malaya) என்பவற்றிற்குக் கிடைத்தாலும் வாங்கிவைக்க".[6]

"ஆங்கிலச் சொற்பொழிவுகளுக்குப் பயின்று வருகிறேன். சில நூல்களும் எழுதிவருகிறேன்"[7]

"கருநாடக இலக்கியக் கழகம் அரசின் உதவிகொண்டு ஒரு கன்னட அகரமுதலி வெளியிட்டு வருகின்றது. மொத்தம் 5 மடலம். 3 வெளிவந்துள்ளன. எஞ்சியவை இனி வெளிவரும். மொத்த விலை 120 உரூபா. அதைக் கட்டிவிட்டால், பதிவு செய்துகொண்டு மும்மடலத்தையும் உடனே கொடுத்துவிடுவர். ஏனையிரண்டையும் வெளிவந்தபின் பெற்றுக்கொள்ளலாம். பணம் கையில் உள்ளது.

முகவரி : Secretary,
Kannada Sahitya Parisat
Mahakavi Road,
Bangalore-18

அன்பு கூர்ந்து உடனே சென்று வினவியறிக. கிடைக்குமாயின் நீங்கள் இங்கு 5 அல்லது 6 வந்தபின் நேரில் தருவேன். பின்னர் திரு. தமிழ்க் குடிமகனோடு இங்கு வரும்போது வாங்கிக் கொண்டு வரலாம்."[8]

1934 இல் கிளர்ந்த ஆர்வம் வாழ்வின் நிறைவு வரை குறைந்ததோ! என்றும் புதுமொழி பயிலும் மாணவராக அன்றோ அவர் இருந்தார்! எட்டணாவுக்கு இசையும் நூலையும் அத் தொகை தந்து வாங்கமுடியாத வறுமை, அஞ்சற் செலவும் இருப்புப்பாதைச் செலவும் நீங்குதற்குரிய சிக்கன நடவடிக் கையைத் தூண்டும் முட்டுப்பாடு இருந்தும் நூல்களைத் தேடித் தேடி வாங்கிக் கற்கும் தேர்ச்சிக்குக் குறைவொன்றும் இருந்த தில்லையே! இவ்விழுமிய பன்மொழி வேட்கையால்தானே, தமிழ் வரலாற்றில் 58 மொழிகளில் வேர்ச்சொல் ஒப்புமை காட்டிப் பட்டியலிட்டு வைக்க வைத்தது!

5. 23–8–37 (வ.சு)
6. 29–12–37 (வ.சு)
7. 7–4–46 (வ.சு)
8. 1–11–78 (கு.பூ.)

## 3. தொண்டின் உறைப்பு

*பாவாணர் தம் நூல் வெளியீட்டுக்குப் பலர் உதவியை நாடியதுண்டு; சிலர் தாமே நாடிவந்து நயந்து அவாக்கு உதவியதும் உண்டு; நூல்களை விற்றுப் பணம் தண்டித் தந்து உதவியர்களும் உண்டு. அவ்வுதவிகள் பாராட்டுக்கு உரியவை. ஒவ்வொரு நன்றியையும் உள்ளாரச் சொல்லியும், எழுதியும், நெஞ்சார நினைந்தும் போற்றிய பெருந்தகையர் பாவாணர்.*

*குமணன் தந்த கொடைக் களிற்றைத், தம் கொடையாக விடுத்த கழகக் காலப் புலவர் பெருஞ்சித்திரனார் பெரு மிதம்போலப் பெருமிதமும், 'எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே' என்பது போன்ற பெருந்தகைமையால் தம் கைப்பொருள் செலவழித்துக் கொண்டு சென்றும் தொண்டு செய்ய முந்தும் முனைப்பும் அவர்தம் கடிதங்களில் ஆங்காங்கே மின்னொளி செய்கின்றன! அவற்றுள் சிலவற்றைக் காண்க.*

*"8-3-64இல் நடக்க இருப்பது குறைந்த சம்பளத் தமிழா சிரியர் வகுப்பாதலால் ஒருவரையும் வற்புறுத்தவோ இடர் படுத்தவோ வேண்டேன். பெற்றது கொண்டு பொந்திகை (திருப்தி) யடைவேன். தங்கற்கும் அறையமர்த்த வேண்டிய தில்லை. என் உறவினர் வீட்டில் தங்கிக்கொள்வேன். வழிச் செலவுப் பணமும் வந்தபின் வாங்கிக் கொள்கிறேன்"[1]*

*"மதுரை மாணவர் அனைவரும் ஓரிடத்திற் கூட இயலின் நான் வந்து மொழிச்சிக்கல் பற்றி விளக்கமாய்ப் பேச அணிய மாயிருக்கிறேன். போகவரப் பேரியங்கிக் கட்டணம் கொடுத்தாற் போதும். அதுவும் இல்லாக்காலும் வருவேன்"[2]*

*"தொண்டு கருதி (தகடூர்க்கு)ச் செல்லக் கருதினும் அங்குக் கூட்டம் சேர்வதில்லை. திரு.செல்லையாவும் சொற்பொழி வாளரும் தான் பெரியோர். அவையோரெல்லாம் தெருவில் விளையாடும் சிறுவர் சிறுமியரே"[3]*

---

1. 29–2–64 (மி.மு.சி.)
2. 20–1–68 (வீப.கா.சு.)
3. 23–6–69 (மி.மு.சி)

"நான் சென்ற மீ 19, 20, 21, ஆம் உகளில் நெல்லை சென்று திருநெல்வேலியிலும் பாளையங்கோட்டையிலுமாக 3 இந்தி யெதிர்ப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். பயன்படா விடினும் முதல் உழவென்று நினைக்க வேண்டியிருக்கிறது.

"முதலாவது, கூட்டத்திற்கே நம்மவர் வரவிடாதபடி தந்திரமாகக் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். வந்தாலும் தூர நின்று கேட்பதே யொழியக் கிட்ட வருவதில்லை. அதுவுங்கூட நான் காங்கிரசில் சேர்ந்திருப்பதினால். இப்போது நாம் தமிழைக் காக்க வேண்டுமானால் முதலாவது காங்கிரசில் சேர்ந்து கதருடுத்த வேண்டும். சுயராஜ்யத்திற்கு ஒன்று சேர்ந்து இந்திக்கு உள்ளிருந்தே எதிர்க்க வேண்டும். மற்றபடி நம்மவரைச் சேர்க்க முடியாது. நம் சொல்லும் பயன்படாது.

இந்த ஞாயிறு 10ம் உ சென்னையில் கூட்டமென்று பத்திரிகையிற் பார்த்தேன். 2 வாரமாய் இந்தியால் வருங்கேட்டை முற்றுமாராய்ந்து இன்று தமிழ் அடியோடு தொலைவதற்கு ஒப்பானதைக் கண்ணுறுகிறேன். எவரும் ஏற்கும்படி தக்க நியாயங் களும் விடைகளும் கண்டுள்ளேன். தயவுசெய்து அங்குப் போக வர முழுச் செலவு 7 ரூ கொடுக்க முடியாவிட்டாலும் அரைச் செலவிற்காவது ஒழுங்கு செய்க. அருமையான 30 பாட்டுகள் அச்சாகின்றன இவ் வெள்ளி வெளிவரும். அதனுடன் வருவேன்" ஞா.தே.

"ஓர் அனுபவசாலி சத்யாக்ரக முறை நன்றென்றார். நாம் கூடி ஆராயவேண்டும்"[4]

"உடனே 500 செந்தமிழ்ச் சின்னங்கள் தபாலில் விடுக்க எனது மாணவர் ஆவலாய் எதிர்ப்பார்க்கின்றனர். வரும் சனிக் கிழமை சேலம் அல்லது நாகை செல்வேன். இந்தியெதிர்ப்புச் சொற்பொழிவுக்கு.

பாலக்காட்டு ஆறுமுக முதலியார் M.A.,L.T., (govt college) கொடுமுடி எனது அத்தான் அ.எ. சீநிவாசகம் பிள்ளை (Drawing master SSV High School கொடுமுடி) என்னும் இவ்விருவருக்கும் ஒவ்வோர்படி செந்தமிழ்க் காஞ்சி விடுக்க.

2ம் பாகம் அடுத்த வாரம் வெளியாகும். அச்சுக் கூடத் திற்குக் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டியிருப்பதால் தயவு செய்து விரைந்து விலையாக்கி அனுப்பிவிடுங்கள். யாராவது ரூ.

4. 5–10–37 (வ.சு.)

*20க்குக் குறையாமல் கொடுப்பார்களானால் அவர்கள் பேரில் ஒரு பாட்டுப்பாடிச் சேர்த்துக் கொள்வேன். 10 ரூ கொடுத்தாலும் போதும். இசைக் கருவிகள் வாங்கிக் கொண்டு ஊரூராய்ச் சென்று பஜனை செய்ய ஏற்பாடாகிறது.*

*அன்று நான் வேண்டுமென்றுதான் என் ஆராய்ச்சியின் அடிப்படைக் கொள்கையைச் சற்று வெளியிட்டேன். அவைத் தலைவர் என் கட்டுரைகளைப் பற்றிச் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை. எந்தக் கூட்டத்திற்கு எப்படிப் பேச வேண்டும் என்றும் என்னென்ன விதமாய் இந்தி நியாயத்தை மறுக்கலாம் என்றும் எனக்குத் தெரியும். நான் எல்லாவற்றையும் பேசுவேனா னால் பிந்தினோர் பேச்செல்லாம் கூறியது. கூறலாகவே முடியும் ஆயினும் இன்னோர் சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்க்கிறேன். நம் உயிர் உள்ள வரையில் தமிழ் கெடவிடக்கூடாது. முடிவான வழி நாம் பேசியதே.*[5]

*"தயவுசெய்து நகர்வலம் வருவதற்காக ஒரு பெரிய துணிக் கொடி* (Banner) *அனுப்புக. அடுத்த வாரம் இங்கு இந்தியெதிர்ப்பு வாரம் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறோம். இந்த வாரம் இந்தி வாரம். ஆதலால் இதற்கு மாறாக அது நடக்கும். ஒரே வாரத்தை நாம் தமிழ் நாடெங்கும் கொண்டால் நண்பர் அண்ணாதுரை, பாரதியார் போன்றவர்கள் ஒரே சமயத்தில் பலவிடங்களுக்குச் செல்ல முடியாது. ஆகையால் முதலாவது இங்கு நடத்திப் பிறவிடங்களுக்கு வழிகாட்டுவோம். நீங்களும் அங்கு நடத்த வேண்டும்.*[6]

*"மாநாட்டுச் செய்தி என்ன? இங்கு தமிழ் மாகாணப் பிரிவினை மாநாடொன்று தமிழ்நாட்டுப் பல் கட்சித் தலைவர் களையும் கூட்டி நடத்த எங்கள் தலைவர் கருதுகிறார்."*[7]

*"தெலுங்கு மாகாணம் பிரிந்துபோய் விட்டதானாலும் சென்னையைத் தெலுங்கர் வேண்டாமையாலும் வடவெல்லை யின்று காரியமின்று. தமிழ் மாகாணப் பிரிவினை மாநாடே, அதுவும் சூலையிலன்று; ஏப்பிரல் இறுதிக்குள் கூட்டத்தக்கது என்பதை முதன்மையாகத் தெரிவிக்கிறேன். ஏனோதானோ வென்றிரற்க."*[8]

*"காலை சென்று மாலை திரும்பிவிட்டேன். கூட்டம் முடிந்தபின் கழகம் செல்லலாமென்றிருந்தேன். விளைவு நன்றா*

5. 12–10–37 (வ.சு)
6. 18–10–27 (வ.சு)
7. 7–4–46 (வ.சு)
8. 2–3–46 (வ.சு)

*யில்லாமையால் கழகஞ் செல்லவில்லை. யான் என் கடமையைச் செவ்வனே செய்துவிட்டேன். யாரை வேண்டுமாயினும் கேட்டுப் பார்க்கலாம். வேறெதற்குத் தடை நேரினும் மறைமலையடிகள் தடையுண்ணா தென்றிருந்தேன். ஆயினும் அடிகள் தமிழ்ப் புலவரிடையும் சு.ம. பண்டிதரானார். இத்துணை அண்மைக் காலத்திலேயே அவர் மறக்கப்படுவார் அல்லது புறக்கணிக்கப் படுவார் என்று கனவிலும் கருதவில்லை. மலை சாய்ந்ததென்று புகழ்ந்தவரெல்லாம் அலையோய்ந்ததென்று மகிழ்கின்றனர். தமிழ்நாட்டில் அரசியல் துறையில் தலைமை தாங்கி வழிகாட்ட எங்ஙனம் ஒருவரில்லையோ அங்ஙனமே புலமைத் துறையிலு மல்லை. தக்காரொருவர் தலையெடுக்காவிடின் தமிழ்நாடு அமிழ் நாடே"[9]*

*கல்வியமைச்சர் எங்கள் கல்லூரியில் ஏரணம் வரலாறு ஆகிய இரு பாட நூல்களையும் தமிழில் கற்பிக்கப் பணித் திருப்பதால் அவற்றுள் ஆங்கிலம் மட்டும் கற்ற ஆசிரியர்கள் கற்பித்தற்கு அரிதான ஏரணத்தை இரவு பகலாய் மொழி பெயர்த்து வருகின்றோம். இன்னும் ஒரு மாதத்திற்குள் முடிந்து விடும். குறியீடுகள் பெரும்பாலும் தனித்தமிழில் அமையப் பெறுகின்றன.[10]*

*"இற்றைச் செய்திகளையும் நிலைகளையும் நோக்கும் போது இம்மாத இறுதிக்குள்ளேயே எல்லை மாநாட்டை வைத்துக் கொள்வது நலமென்று தோன்றுகின்றது. பாராளு மன்றத் தூதுக் குழு 15ம் உ வரை லாகூரிலிருக்கிறது. பின்பு இரு பகுதிகளாய்ப் பிரிந்து பெஷாவருக்கும் அமிருதசாருக்கும் செல்கிறது. வடக்கேயே இத்துணை நாள் தங்கினால் தெற்கே பம்பாய் பார்க்கவும், திருவாங்கூர் செல்லவும் சென்னை வரவும் இம் மாத இறுதியாகிவிடும். பெப்ரவரித் தொடக்கத்தில் நடக்கும் கூட்டத்தை இம்மாத இறுதியில் வைத்துக் கொள்வது இயலாத தன்று. பா.தூ. குழு அதிகார முறையில் வராவிட்டாலும் இந்தியா வின் பின்னிலை அமைப்பிற்குப் பெரிதும் காரணமாயிருக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது. தூதுக் குழு சென்னைக்கு வரும்போது அவர்கள் கண்ணாரக் காண்பது போல, பின்னர் நடக்கும் எம் முயற்சியும் வலியுறாதென்பது தேற்றம்.*

*குழு டில்லிக்குத் திரும்பியவுடன் ஆந்திர மகாசபைத் தலைவராய் விஜயா என்பவர் காணச் செல்கிறார். நாம் இன்று*

---

9. 15–7–51 (வ.சு)    10. 10–1–46 (வ.சு)

*தூங்கிக்கொண்டும் நீட்டிக்கொண்டும் இருந்தோமாயின் நம் காரியம் கைகூடுவது அரிது. மாநாட்டிற்கு வேண்டியவை முன்னர் 1 சுவடியும் பின்னர் 1 புத்தகமுமாக 2 சுவடியில் வேங்கட எல்லைக்குச் சான்றுகளையெல்லாம் சுருக்கமாய்க் கூறி அச்சிட்டுப் பெருமக்கட்கெல்லாம் அனுப்பிவிடலாம். பொங்கல் விடுமுறைக் குள்ளேயே பண்டிதர் ஆனந்தத்தையும் இராசமாணிக்கம் பிள்ளை அவர்களையும் கொண்டு எழுதுவித்து உடனே அச்சிட்டு விடவும். நாய்க்கர் ஈரோட்டில் இருக்கிறார். எழுதிக் கேட்க.*[11]

*“எங்கள் கல்லூரி நகராண்மையைச் சேர்ந்ததாதலால் அரசியல் திட்டம் எதையும் மறுக்கக் கூடாதென்றும் மறுப்பின் வேலை போய்விடுமென்றும் எங்கள் கல்லூரித் தலைவர் சொல்லி விட்டார். கூட்டத்திற்குச் சென்று மீளலாமென்றாலும் 7ம் உ எங்கள் கல்லூரித் திறப்பாதலாலும் விடைத்தாள் திருத்தி அன்று கட்டாயம் கொடுத்துவிட வேண்டுமாதலாலும் வேலை நெருக்கடி பெருந்தடையாயுள்ளது. அன்று கூட்டத்தில் என்ன முடிவு செய்யினும் எனக்குடன்பாடே. ஆயின் வெளிப்படை யாய் எம் முயற்சியிலும் கிளர்ச்சியிலும் கலந்து கொள்ள இயலாதவாறுளது, என் அலுவல். இதற்கென் செயலாமென் றெண்ணிக் கொண்டிருக்கிறேன்.”*[12]

*“சங்கரலிங்க நாடார் வடக்கிருந்தென்ன? சின்னச்சாமி தீக்குளித்தென்ன? தமிழன் திருந்துவதாயில்லை?”*[13]

*பேரியங்கிக் கட்டணம் இல்லாக்காலும் மாணவர் ஒருங் கிணைந்த கூட்டத்தில் உரையாற்றுதற்குப் பாவாணர் வரு வாராம்! கைம்முதல் பெருக்கமா, இவ்வுணர்வை எழுப்பியது? தொண்டின் உறைப்பே எழுப்பியதாம்! நகராண்மைக் கல்லூரிப் பணி, பொதுப்பணிக்கு இடராக இருப்பதால், ‘என் செயலாம் என்று’ எண்ணிக்கொண்டிருக்கிறாராம்’! ‘மாகாணப் பிரி வினைக் கருத்திலே அந்நாளில் பாடுபட்டுப் பணிசெய்த தூண்டு தலாய் நின்ற - தமிழ்ப் பேராசிரியர் பாவாணரைப் போல் எத்தனை பேர் இருப்பர்?*

---

11. 10–1–46 (வ.சு)
12. 10–1–46 (வ.சு)
13. 13–6–64 (வ.சு)

## 4. பாவாணர் வீறு

சிலர் நகையாட்டாகச் சொல்வதாகவோ நயமாக நவில்வதாகவோ எண்ணிக்கொண்டு, "நெஞ்சில் கை வைத்துப் பார்த்தேன்; கொதிப்புண்டாகியது; சற்றே கையைக் கீழே இறக்கினேன்; வயிற்றில் கைபட்டதும் கொதிப்பு அடங்கிப் போயிற்று" என்பர். வயிற்றுப் பாட்டை நோக்கிச், செம்மாந் தெழும்பிய உணர்வை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் அடங்கி விட்டாராம்! உண்மையான உணர்வாளராயின் அவரால் அடங்கியிருக்க முடியாது! போலிமை புகுந்த உணர்வின் புகலுகையே ஈது!

பாவாணர் சொன்னார்; 'எனக்கு நெஞ்சும் உண்டு; வயிறும் உண்டு; இவற்றுக்கு மேலே தன்மானமும் உண்டு."

இத்தகைய பாவாணர் வீறு அவர்க்கு அலைவையும், கலைவையும் ஆக்கியிருக்கலாம்; அவ்வலைவாலும் கலைவாலும் தமிழும் தமிழினமும் பெற வேண்டும் பேறுகளை முற்றாகப் பெறவொண்ணாமை நேர்ந்ததேயன்றி, அவரைப் பொறுத்த அளவில் கேடு செய்துவிடவல்லன அல்லவாம்! கேடு என்று எண்ணும் 'உணர்வாளக்கு', வீறு எங்கே இருந்து வீறும்?

பாவாணர் வீறு பற்றிக் கடிதங்களால் அறியப்படும் செய்திகளைக் காண்போம்.

"கழகம் கைகொடுப்பின் நான் கிளர்ந்தெழுவது தேற்றம்"[1]

"சிறு நூல்களையெல்லாம் இந்த ஆண்டில் முடித்துவிட்டு அடுத்த ஆண்டில் எத்துணையோ பெரு நூல்களை எழுதக் கருதுகின்றேன்"[2]

"தமிழின் தொன்மையை எடுத்துக்காட்டும் நூல் அஃதொன்றே (முதற்றாய் மொழி) என்பது அச்சிடும்போது தெரியவரும்"[3]

"கழகம் என் நூல்களை வெளியிட்டு என்னை ஆதரிக்குமாயின் அடுத்த ஆண்டுக்குப்பின் ஆசிரியர் வேலையைக் கூட விட்டு எழுத்து வேலை செய்யலாம் என்று எண்ணியிருக்கிறேன்."[4]

1. 10–3–31 (வ.சு)
2. 10–3–31 (வ.சு)
3. 27–7–31 (வ.சு)
4. 24–7–31 (வ.சு)

*"எனது மொழிநூலைத் திரு.சுப்பிரமணிய பிள்ளை போல்வாரே பார்க்கத்தக்கார். பெரிய ஆங்கில இலக்கணங்களை ஆதாரமாகக் காட்டியிருப்பதால் ஏனையோர்க்கு விளங்கா."*[5]

*"என் முதற்றாய் மொழியை அச்சிட வேண்டும். அதன் பிறகுதான் எங்கள் பிரின்ஸிபாலுக்கு என் அறிவு வெளியாகும்."*[6]

*"கட்டுரையில் ஒரு சிறிதும் விடவேண்டாம். ஒவ்வொரு பகுதியும் ஆராய்ச்சி முடிவென்பது ஒருமுறை வாசித்தால் தெரியவரும்."*[7]

*"நான் அனுப்புவதில் ஒரு சிறிதும் விடவேண்டாம். ஏதேனும் பிறர்க்கு உடன்பாடன்றாயினும் அவர் கூறும் தடை கட்கெல்லாம் தகுந்த விடை கூறச் சித்தமாயிருக்கிறேன்"*[8]

*"அகத்தியரும் தொல்காப்பியரும் ஆரியர் அல்லர் என்னும் திரிபுணர்ச்சி நமக்கு இன்னும் இருப்பதுபற்றி வருந்துகிறேன். செல்வியில் வெளியிடாவிடின் மட்டும் அவ்விருவரும் தமிழர் ஆய்விடுவரா? ஆரியர் என்பதற்கு எத்துணையோ ஆதாரங்கள் இருக்கின்றன. என் கட்டுரைக்கு எவரேனும் மறுப்பெழுதினால் விடையளிக்கத் தயாராயிருக்கிறேன்"*[9]

*"திராவிட மரபு தோன்றிய இடம் குமரி நாடே என்னும் பொருள் பற்றிய எனது இடு நூலை (Thesis)ப் பல்கலைக்கழகம் தள்ளிவிட்டது. இது எனக்கு வியப்பாக இல்லை. இவற்றைத் தமிழ்நிலை என்ன என்பதை மட்டும் தெரிவிக்கின்றது; இனி மேல் இந்தியாவிற்குள் எனக்கு ஒரு தேர்வும் இல்லை. ஆகையால் எனது நூல்களையெல்லாம் ஒவ்வொன்றாய் வெளியிடப் போகிறேன்."*[10]

*நான் ஒரு பல்கலைக் கழகத் தமிழ் துறைத் தலைவனாயின் தமிழ் விரைந்து ஆக்கம் பெறும்."*[11]

*"மறைமலையடிகள்போல் வாய்மையும் பெருந்தன்மையும் வாய்ந்த புலவர் ஒருவரேனும் இன்றிலர். அழுக்கலும், தற் பெருமையும், குறுநோக்கும் சான்ற புலவரிடம் (பழந்தமிழாட்சி நூலைக்) காட்டிப் பயனில்லை"*[12]

---

5. 29–7–31 (வ.சு)
6. 14–8–31(வ.சு) இடம் மனனார்குடி பின்லெ கல்லூரி
7. 18–8–31 (வ.சு)
8. 29–9–31 (வ.சு)
9. 12–10–31 (வ.சு)
10. 11–12–39 (வ.சு)
11. 4–7–47 (வ.சு)
12. 3–1–52 (வ.சு)

"மறைமலையடிகட்குப் பின் தமிழ்த் தூய்மைபேணும் பேராசிரியன் யான் ஒருவனே என்பது தங்கட்குத் தெரியும். தமிழ்ப்பற்று என்பது தமிழ்த் தொண்டனைப் போற்றுவதே."[13]

"இனிமேல்தான் என் மொழியாராய்ச்சி உலகிற்கு வெளி யாகும். அதனால் தமிழ் ஓங்கும், கழக நூல் விற்பனையும் உயரும்".[14]

"என் புலமையைப் பொறுத்த வரையில் மறைமலையடிகள் ஒருவரே மதிப்புரையோ முன்னுரையோ வழங்கத் தக்கவர்"[15]

"என் ஆராய்ச்சி முடிந்து விட்டதனால், இனிமேல் என் வாழ் நாளெல்லாம் இடைவிடாது நூல் எழுதிக்கொண்டே இருப்பேன். யான் எழுதியவை பிறரால் எழுதப் பெறும் திறத் தனவல்ல"[16]

"என் காலத்திற்குப்பின் வேறெவரும் என்போல் எழுதவும் முடியாது"[17]

"சிலப்பதிகாரச் சிறப்பு என்னும் என் ஆராய்ச்சி நூலில் எல்லாம் வெள்ளிடைமலையாய் இருக்கும். அதன்பின் மாற்றுக் கருத்திற்கு இடமேயிராது"[18]

"உண்மையில் அயலிடத்திற் பெருங்கூட்டத்திற் காத் திருந்து கல்வி அறிவில் தாழ்ந்த அமைச்சரைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை. அம்மையாருக்காகத்தான் பார்க்க விரும்பு கிறேன். அதுவும் வீணாயின் எனக்கு மனவருத்தம் மிகுதி யாயிருக்கும். மானக்கேட்டுணர்ச்சியும் தோன்றும்"[19]

"தமிழ்ப் பற்றுள்ளவர்தான் என் நூல்களை வாங்க முடியும்"[20]

"அரசு (அகர முதலிக்கு) முதலில் 50 பக்கம் போலிகை (மாதிரி) எழுதி அனுப்புக என்று சொல்லிப் பயனில்லை. அது என்மீது நம்பிக்கை இன்மையைக் காட்டுவதாயும், அவமதிப்ப தாயும் இருக்குமாதலால் அது நான் செய்யேன். அமைச்சர் கலந்து கொண்டால் மாநாடு சிறக்குமென்றோ மாபெருங் கூட்டஞ் சேருமென்றோ கருதுபவருள் நான் ஒருவன் அல்லேன்.[21]

13 9–11–56 (வ.சு)
14 9–11–56 (வ.சு)
15. 28–12–50 (வ.சு)
16. 17–12–51 (வ.சு)
17. 8–8–64 (மி.மு.சி.)
18. 30–5–64 (மி.மு.சி)
19. 10–7–68 (மி.மு.சி)
20. 23–10–68 (மி.மு.சி)
21. 16–10–69 (த.கு.)

"என் திருக்குறள் தமிழ் மரபுரை ஒன்றே என் தகுதியைக் காட்டப்போதுமே"[22]

"மறைமலையடிகள் ஒருவரே என்னைப் பாராட்டத் தக்கவரும் என் பெருமதிப்பிற்குரியவரும் ஆவர்"[23]

"பல்கம்மிய மாணவரிடம் (பாலிடெக்னிக்) நம் மானம் கடுகளவும் கெடாத வகையில் (கூட்டத்திற்கு) ஏற்பாடு செய்க. இன்றேல் வேண்டேன்"[24]

"யான் இன்று எழுதிவரும் மொழியாராய்ச்சி நூல்கள் முந்தி எழுதியவை போல் கருத்து வேறுபாட்டிற் கிடந்தரு வனவல்ல. நடுநிலையும் பகுத்தறிவுமுள்ள எல்லவரும் ஒப்புக் கொள்ளும்தரத்தன வாதலால் புத்தாண்டில் தமிழுக்குப் புத்து யிரும் பேராக்கமும் அளிப்பனவாகும்"

"முதல் தாய்மொழி அல்லது தமிழ்மொழி என்னும் நூல் பொங்கலுக்குள் வரும். நூல்கள் வரவர உடனுடன் அச்சிடுக."

"கோவையிலும் உயர்திரு சண்முகஞ் செட்டியாரவர்கள் தலைமையில் சொற்பொழிவாற்றக் கேட்டிருக்கிறார்கள். இன்னும் முந்நூல்கள் முடியும் வரை வெளியூர் செல்லவோ வேறு கரு மத்தைக் கவனிக்கவோ முடியாது"[25]

"இனிமேல் வருகின்றவை இறைவன் வெளிப்படுத்திய உண்மைகள் ஒத்தவை."

"வேலையை விட்டு விட்டு நாலாண்டுகள் தொடர்ந்து எழுதக்கூடிய அத்துணை நூல்கள் என்னிடமுள்ளன. எழுத எழுத விரைந்து வெளியிடுவது தங்கள் கடமை"

"எனக்குச் செய்வதெல்லாம் தமிழுக்குச் செய்வதென்று கருதிக்கொள்க. எனக்குப்பின் என்னைப் போல் ஆய்பவர் தோன்ற ஒரு நூற்றாண்டாவது செல்லுமாதலால் யாக்கை நிலையாமை நோக்கி இதுவரை முடிந்த முடிவாகக் கண்ட வற்றையெல்லாம் விரைந்தெழுதுவதில் இறங்கிவிட்டேன்.[26]

"இந்தப் புத்தகம் வந்துவிடும். இனிமேல் யான் எழுதப் போகும் புத்தகங்கட்கெல்லாம் அதுவே அடிமணையாகும்"[27]

22. 16–10–69 (த.கு.)
23. 20–12–69 (த.கு.)
24. 21–9–67 (வி.அ.க.)
25. 31–12–48 (வ.சு)
26. 12–1–49 (வ.சு)
27. 10–2–49 (வ.சு)
28. 17–2–49 (வ.சு)

"*முதல் தாய்மொழி உலக முழுதும் பரவ வேண்டிய நூல்களுள் ஒன்று. அதை ஒருமுறை முழுதும் படித்துவிட்டு உடனே அச்சிடுக. சுட்டு விளக்கம் எழுதும்போது ஆராய்ச்சிக் குறைவினால் சில அடிப்படையுண்மைகளைக் கண்டுபிடிக்க இயலாமற் போயிற்று. இன்று கண்டுபிடித்துவிட்டேன். ஆகையால் இனிமேல் காலந்தாழ்க்காமல் என் வாழ்நாளெல்லாம் ஒவ்வொன்றாய் எழுதிக்கொண்டிருப்பேன்.*[28]

*வடமொழி வரலாறு வரையப்பட்டு வருகின்றது. அதன் பின் தலைநாகரிகம் எழுதப்படும். தலைநாகரிகம் முற்றும் வரலாற்று நூல்* Wren & Martin *நன்றாய் படித்திருக்கிறேன். தங்கள் விருப்பப்படி ஒரு நூல் எழுதவொண்ணும். ஆயின் தலைநாகரிகம் முடிந்தபின் தான் என்மனம் வேறொன்றிற் பதியும். பொறுக்க.*[29]

"*வடமொழி வரலாறும், தலைநாகரிகமும்* [30] *புகழ்வேண்டி எழுதுபவையல்ல. தமிழை வடமொழியினின்று மீட்டற்கு எழுதுபவை இத்துணைக் காலமும் (20 ஆண்டுகளாக) இதே நோக்குடன் கற்றும் ஆராய்ந்தும் இருக்கிறேன். ஆராய்ச்சி முடிந்தது. உண்மையும் கண்டுவிட்டேன். இதற்கென்றே கடவுள் என்னை ஏற்படுத்தியிருக்கிறார் என்பது எனது உணர்ச்சி. அந்த இரு நூல்களும் கண்டால்தான் தங்கட்கு இவ்வுண்மை விளங்கும்*"[31]

"*என் படிப்பும் ஆய்வும் முற்றும். இனி மாதம் 1 நூல் எழுத முடியும். அதற்குரிய ஓய்வும் இங்குண்டு*"[32]

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

*என்று பெருமிதத்தின் நிலைக்களம் நான்கினைச் சுட்டும் தொல்காப்பியம். அந்நான்கனுள் தலையிடத்தைத் தலைமை யிடத்தாகத் தாங்கியவர் பாவாணர். அவர்தம் கல்வித் திறத்தையும் ஆய்வு நுணுக்க அருமையையும் அறியாதார், தாம் எண்ணியாங்குரைத்துத் தமக்குள் உவகையும் கொண்டனர். இந்நிலையில் பாவாணர் வீறு எழுதல் இயல்பாயிற்று. 'தன்னுடை ஆற்றல் உணராரிடை வீறு மொழிதல் தகும் என்பது இலக்கண நெறியன்றோ!*

---

**29.** 28–3–49 (வ.சு)

**30.** தமிழர் நாகரிகமும் பண்பாடும் என்னும் நூலுக்கு, முற்பட பாவாணார்கருதிய பெயர்போலும்!

**31.** 6–4–49 (வ.சு) **32.** 6–4–49 (வ.சு)

## 5. மொழிநூல் முதன்மையும் தமிழியக்கமும்

*பாவாணர் மொழிநூல் திறம் தனி மாண்பினது. அவர்தம் மொழிநூல் திறம், அவர் இயற்றிய அனைத்து நூல்களிலும் பளிச்சிட்டாலும் முதல் தாய்மொழி, ஒப்பியன் மொழிநூல் பற்றிய பாவாணர் உட்கிடை, கடிதங்களிடையும் திகழ்தல் இறும்பூது பயப்பதாம். அவற்றுள் கிடைப்பன பல இவண் அறிவன சில*

*“எனது மொழிநூல் தமிழின் தமிழரின் சரித்திரத்தையே தொடக்க முதல் இறுதிவரை விளக்கமாய் எடுத்துரைப்பது. உங்கள் செல்விக்கு வற்றாத கட்டுரைக்கேணி. ஆரிய திராவிட வேறுபாடு, தமிழர் நாகரிகம். தமிழின் தாய்மை, ஆரியர் தமிழையும் தமிழரையும் கெடுத்த வழிகள், இனிமேல் தமிழை வளர்க்கும் முறைகள் முதலியன செவ்வனே விளக்கப்பட்டுள. இது வெளிவருமாயின் தமிழ்நாட்டில் ஒரு புத்துணர்ச்சியும் புதுக்கிளர்ச்சியும் தோற்றுவித்துக் காங்கிரஸ் தமிழரின் கண்ணைத் திறக்கும். ஆகையால் இதற்கு இயன்றவரை முயன்று பல்வகை உதவுக”*[1]

*“யான் இன்று முதற்றாய் மொழி வடமொழி வரலாறு என்ற இரு முதன்மையான நூல்களை எழுதுவதில் அழுந்தி யிருப்பதால் எங்கும் எதற்கும் வரமுடியாது. இவற்றை எழுதி முடித்தபின் தெரிவிப்பேன்”*[2]

*“முதல்தாய் மொழி, வெளிவந்தபின் எல்லாப் புலவரும் சொல்லாராய்ச்சி செய்யவொண்ணும்”*[3]

*“இனிமேல் எந்நாட்டிலும் எழுதப்படும் மொழிநூலுக்கும் இதுவே அளவையும் அடிப்படையுமாகும். இது இறைவனால் வெளிப்படுத்தப்பட்டது.”*[4]

---

1 . 26–12–39 (வ.சு) 2. 33–4–48 (வ.சு)

3. 31–1–52 (வ.சு) 4. 26–5–52 (வ.சு)

5. 3–4–51 (வ.சு)

“முதல் தாய்மொழி எதிர்காலத் தமிழ்நிலைக்கு அரணான அடிப்படை.”[5]

“முதல் தாய்மொழி என் முப்பதாண்டு ஆராய்ச்சியின் விளைவு அது. அதனால்தான் எதிர்காலத் தமிழுக்கு ஆக்கம் உண்டாகும். இதுவரை எழுதப்பட்ட சொல்லாராய்ச்சி மொழி யாராய்ச்சிநூல் போன்றதன்று! தமிழ்ப் பகையையெல்லாம் தலைமடக்குவது[6]. முதல் தாய்மொழி என்பது தமிழுக்கு உயிர் நாடி என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அதைப் பார்த்த பின்பு தான் தங்கட்கு அதன் அருமை பெருமை புலனாகும். 20 ஆண்டு ஆராய்ச்சியின் விளைவு அது. இதற்காகவே என் பிற முயற்சிகளையெல்லாம் இதுகாறும் நிறுத்திவைத்திருந்தேன். இதுவும் Origin of Culture என்னும் ஆங்கிலப் புத்தகமும் ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ’ வகை செய்யும் என்பதற்கு ஐயமில்லை”[7]

“ஒரு வீட்டின் உரிமையைக் காப்பது ஆவணம், ஒரு நாட்டின் உரிமையைக் காப்பது உண்மை வரலாறு. நம் நாட்டு வரலாறு மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டும் இருக்கின்றது. இவற்றை ஆளுங் கட்சி ஆரியச் சார்பானது. தமிழுக்கும் தமிழர்க் கும் மாறானது. ஒரு நாட்டிற் பல நூற்றாண்டாகக் குவிந்து கிடக்கும் குப்பைக் கூளங்களை ஆறுதான் அடித்துக்கொண்டு போகும். அதுபோல் நீண்டகாலமாகக் குவிந்து கிடக்கும் ஆரியக் குப்பைகளை வரலாறுதான் அடித்துக்கொண்டு போக வேண்டும். மேனாட்டார் இந்திய நாகரிகம் ஆரியரது என்றும் தமிழ் சமற்கிருதத்தால் வளப்படுத்தப்பட்டதென்றும் நம்பிக் கொண்டிருக்கின்றனர். கால்டுவெலும் அதைத் தான் வலியுறுத்தி யிருக்கிறார். தமிழ் வடமொழித் துணையின்றித் தழைத்தோங் கும் என்று ஓரிடத்துக் கூறியிருப்பது முரணானது. நம்மவர் இன்னும் அவர் நூலைச் சரியாகப் படிக்கவில்லை.

“மேனாடு இக்காலத்து அறிவியல் ஊற்றுக் கண். ஆயின் மொழிநூற்கு அடிப்படை தமிழாதலின் அதைமட்டும் மேனாட்டார் அறிந்திலர். அவர் ஒப்புமாறு தமிழ்த் தொன்மை, முன்மை, தாய்மை, தலைமைகளை நாட்டிவிடின் இங்குள்ள அறியாமையும் ஏமாற்றும் தாமாக நீங்கிவிடும். இப்பயன் நோக்கியதே என் The Primary Clacical Language of the World என்னும் ஆங்கில நூல். அதுவும் தமிழ் வரலாறும் இந்தியெதிர்ப்புப்

6. 17–12–51 (வ.சு) 7. 15–7–51 (வ.சு)

பாட்டுக்கள் அடங்கிய இசைத் தமிழ்க் களஞ்சியமும் முந்தி வெளிவரும். அதன்பின் தமிழியக்கம் தொடங்கும்.[8]

"என் ஆராய்ச்சி நூல்களையும் இந்தியெதிர்ப்புப் பாடலையும் வெளியிட்டுத் தமிழியக்கம் தொடங்கி ஆரியரையும் ஆரிய அடிமைப் பேராசிரியரையும் அம்பலத்திற் கிழுத்துத் தோற் கடித்தும் மேனாட்டார்க்கு ஒப்பத் தமிழ் திராவிடத் தாயும் ஆரிய மூலமும் என்பதை நாட்டியும் குமரிமுதல் சென்னை வரை நாளுக்கொரு நகரில் தங்கிப் பொதுமக்கட்கு உண்மை வரலாற்றையெடுத்து விளக்கியும்தான் தமிழைக் காக்க முடியும். இத்திட்டத்தை முப்பதாண்டுகட்கு முன்பே விடுத்தேன். ஆயின் என் நூல்களை வெளியிடப் பொருளுதவுவார் ஒருவருமில்லை."[9]

"என் தமிழ்ப் போராட்டம் அண்மையில் தொடங்கும் எனக்குப் பின் தமிழையும் உண்மையான மொழிநூலையும் வளர்க்கப் பன்னிரு மாணவரை அமர்த்துவேன்."[10]

பாவாணரே ஓர் இயக்கமாக இருந்தவர், அவர் இயக்கம் தமிழியக்கம். அவர் பேச்சும் எழுத்தும் முறையே தமிழியக்கப் போர்ப்பறையும், வெற்றிப் பறையுமாம்.

குமரிமுதல் சென்னைவரை நாளுக்கொரு நகரில் தங்கிப் பொதுமக்கட்கு உண்மை வரலாற்றை எடுத்து விளக்கும் நோக்கம், அறிஞர் கால்டுவெல் வரலாற்றுப் பதிவாக இருக்கலாம்! "எனக் குப் பின் தமிழையும் உண்மையான மொழிநூலையும் வளர்க்கப் பன்னிரு மாணவரை அமர்த்துவேன்" என்னும் எண்ணமும் எண்ணிக்கையும், தொல்காப்பியரின் ஒரு சாலை மாணவர் பற்றிய செய்தியடிப்படையில் நேர்ந்தவை ஆகலாம்.

8. 15– கும்பம் 1995 (வி.பொ.ப.) 9. 15–கும்பம் 1995 (வி.பொ.ப.)

10. 20–1–68 (வீ.ப.கா.க.)

## 6. வேர்ச்சொல் போலிகை (மாதிரி)

*வேர்ச்சொல் வரிசை சிலவற்றை எழுதி வெளியிட விரும்பினார் பாவாணர். அவர்தம் விருப்பத்தைக் கழக ஆட்சியாளர்க்குத் தெரிவித்தார். கழக ஆட்சியாளர் வேர்ச் சொல் வரிசைக்குப் போலிகை வரைந்து அனுப்புமாறு கேட்டார். அதற்குப் பாவாணர் விடுத்த மறுமொழியும் போலிகையும் வருமாறு.*

*8, புத்தூர் மந்தை,*
*திருச்சி*
*31-7-40*

......"வேர்ச்சொல் வரிசையைப்பற்றி நீங்கள் மாதிரி கேட்பது வியப்பாயிருக்கிறது. உங்கள் ஐயத்தையும் குறிக்கிறது. அறிஞரை நம்பி அவர்வயின் நல்ல வினையை ஒப்புவிக்கும் திறன் இன்னும் 'நம்மவர்க்கு ஏற்படவில்லை. ஒரே ஒரு சொல்லுக்கு மட்டும் மாதிரி தருகிறேன்'

இறு-இறுதல் வளைதல், முடிதல், மடிதல், சூரியன், பயிர்கள்: வளைவதையும் பின் முடிவதை அல்லது மடிவதையும்; வளைவதையும் முடிவதையும் அது மடிதல் போல்வதையும் நோக்கு.

ஒ.நோ : சாய்தல் - வளைதல், இறத்தல் சாயும்காலம் Eve-Evening

சாய் -சா-இறு-இற.

முடம்-வளை, முட-முடி-மட(ங்கு) மடி. இறு+ஐ இறை-வளைந்த முன்கை.

ஒ.நோ : elbow.

இறு+ஆ=இறா-இறால் இறாட்டு=வளைந்த கூனி

ஒ.நோ. கூன்+இ=கூனி

குனி-கூன்=வளைவு.

இறால்=தேன் கூடு (வளைந்தது வட்டமானது).

இறாட்டி = எரு (தேன் கூடு போன்றது)

வறட்டி என்றும் சொல்லலாம்.

இறுத்தல் = சூரியன் மேற்கே அடைதல் அல்லது தங்குதல்

இறு+ஐ=இறை, கடவுள் அரசன் (எங்கும் தங்கியிருப்பவன்)

இறை+அன் = இறையன்

இறுத்தல்=தங்குதல், பாளையமிறங்கல்.

இறுதல்=முடிதல், இறு+உ அல்லது வு - இறவு.

இறுதல்=வளைதல் சாய்தல். இறப்பு, இறவாணம், சாய்ந்த தாழ்வாரம். இன்னும் விரிக்கிற் பெருகும்.

இறு என்னும் சொல் இற(ங்கு) என்பதினின்றும் பிறந்தது.

இறத்தல்-இறங்குதல்.

இற-இறகு-இறங்கு. இற என்பது அண்மையும் கீழ்நிலையும் குறிக்கும். இகரச் சுட்டடியாய்ப் பிறந்தது. சூரியன் கீழேயிறங்கும் போது வளைவதனால் இறங்கற் கருத்தில் வளைவுக் கருத்தும் முடிவுக் கருத்தும் தோன்றின வென்றறிக.

-இங்ஙனம் எத்தனை சொற்களுக்கு வேண்டுமானாலும் எழுதலாம். யான் விரிவாயும் விளக்கமாயும் எழுதினால் நீங்கள் உங்கட்கு வேண்டியவாறே சுருக்கிக் கொள்ளலாம்.” என்ற வரைந்தார் பாவாணர்.

வேர்ச் சொல்லாய்வு புலமக்கட்குரியது, புலமக்களுள்ளும் அதன்பால் ஆர்வமிக்கார்க்கும் அதன் பயனுணர்ந்து அறிந்து கொன்ன விழைவோர்க்குமே இன்பம் சேர்ப்பது. அதனை ஐயமறத்தெள்ளத் தெளிவாக்கிக் கொள்ளல் அச்சீட்டுக்கு வாய்ப்பாம் என்று கருதினார் கழக ஆட்சியாளர் வ.சு. ஆதலால் மீண்டும் வேர்ச்சொல் பற்றி விளக்கம் வேண்டினார்.

மீண்டும் வேண்டிய வேர்ச்சொல் விளக்கத்திற்கு 29-8-40இல் மறுமொழி விடுத்தார் பாவாணர்.

“வேர்ச்சொல் வடிவைப்பற்றி விளக்கி எழுதியும் நீங்கள் இன்னும் தெளியாதிருப்பது ஐயத்திற்கிடமாயிருக்கிறது. ஒரு பக்கத்திற்குள் 4 வேர்ச் சொற்றிரிபுகள் அடங்கமளவு (25 பக்கம் வருமாறு) 100 முக்கியமான வேர்களைப்பற்றி எழுதியனுப்புவேன்.

(உ-ம்.) வேள்-வேண் (வேண்+அவா=வேணவா).

வேள்+து=வேண்டு.

வேள்+வி=வேள்வி.

*வேள்+கை=வேட்கை.*

*வேள்+தம்=வேட்டம்.*

*வேள்(பெ).*

*வேள்+ஆண்=வேளாண்.*

*வேள்+ஆண்மை=வேளாண்மை.*

*வேள்+ஆன்=வேளான்.*

*வேள்+ஆளன்=வேளாளன்.*

*வேள்+கோ=வேட்கோ.*

*வேட்டம்+அன்=வேட்டுவன், வேடுவன், வேடன்,*

*யான் விரிவாக எழுதினால் நீங்கள் வேண்டாததை விலக்கிக் கொள்ளலாம். இனிமேல் இதைப்பற்றி எழுத முடியாது".*

*பாவாணர் தாம், 'அறிஞரை நம்பி அவர்வயின் நல்ல வினையை ஒப்புவிக்கும் திறன் வேண்டும்' என்று முன்னமே தெரிவித்து விட்டாரே! அதனால், "இனிமேல் இதைப்பற்றி எழுத முடியாது' என்று சொல்லிவிட்டார்.*

*14-9-40இல் "வேர்ச்சொல் சுவடி எழுதி முடிந்தது" என்று எழுதுகிறார்.*

*25-9-40 இல், "வேர்ச்சொற் சுவடியில் 'இறு' என்னும் வேரின் கீழ், இறாட்டி = வட்டமான எரு என்பது ஓர் உன்னிப்புத் தான். வறட்டி என்ற உலக வழக்குச் சொல் 'வல்' என்னும் வேரடியாயும் வறள் என்னும் பகுதியடியாயும் வந்தது.*

*வறள்+து=வறட்டு. பிறவினை.*

*வறட்டி=காயவைத்த எரு.*

*இதைக் குறித்துக் கொள்க" என்று குறிக்கிறார்.*

*மேலும், "கீழ்மேல் முதலிய சொற்களுடன் கீழோர், கீழை, கிழக்கத்திய, மேலோர், மேலை, மேற்கத்திய முதலிய சொற்களை வேண்டுமாயின் சேர்த்துக்கொள்ளலாம். இங்ஙனமே பிற பெரு வழக்குச் சொற்களும்.*

*வணங்கு என்பதன் கீழ் வாங்கு = வளை என்பதையும் சேர்த்துக் கொள்க" என்கிறார்.*

*"சொல்வேர்காண் வழிகள்" என்னும் கட்டுரை ஒன்று சிலம்பு 41 பக்கம் 316 இல் உள்ளது. சிலம்பு 39 இல் அம், உல்*

*என்னும் வேர்ச்சொல் விளக்கங்களை விரிவாகத் தொடங்கி, அதன்பின் வந்த சிலம்புகளில் வேர்ச்சொற் கட்டுரைகளே பெரும்பாலும் வரைகின்றார். ‘வேர்ச் சொற் கட்டுரைகள்’ என்னும் நூல் அவற்றைத் தொகுத்து வெளிவந்தது. மேலும் ‘தமிழின் தலைமையை நாட்டும் தனிச் சொற்கள்’ என்னும் தலைப்பிலும் 25 கட்டுரைகள் வெளிவந்தன. நாற்பது ஆண்டு களுக்கு முன்னே சிற்றருவியாக வழிந்த வேர்ச் சொல்லாய்வு, பின்னே பொங்குமா கடலினின்று பொழியும் பேரருவியாக விளங்கித் தோன்றியமையைப் பாவாணரைப் பயின்றார் அனைவரும் அறிந்துகொள்வர்.*

## 7. சொல்லாக்க விளக்கங்கள்

*பாவாணர் தொடர்பாளருள் பலரும், புலமைத் தொடர் பாளரே. அன்றியும், அவர் வழங்கும் ஒவ்வொரு சொல்லையும் முத்தென மணியெனப் போற்றி அவர் வழிப்பட்டு அவரை வீர வழிபாடு செய்வதில் விழுமிய இன்பம் காணும் பேற்றாளர் களே! ஆதலால், அவர்தம் சொல்லாய்வு பொருளாய்வு விளக்கங் களை வேண்டி வேண்டி அஞ்சல் வழியே பயன்கொண்ட வர்களே! அவருள் 'தம் பொருள் தமிழ்ப் பொருளாம்' என்னும் உணர்வாளர் உதவிய கொடையே இப்பகுதிக்கு மூலமாம், இவை பயன்பாடு கருதி அகர முறையில் தொகுக்கப்பட்டுள்ளன. பொருளுக்கு உடையாரைச் சொல்தோறும் சுட்டக் கூடாமை யால் பொதுச் சுட்டின் அளவு அமைகின்றதாம்.*

**ஆதி :**

*ஆதல் = உண்டாதல், ஆ-ஆதி = தோற்றம், தொடக்கம் எனலாம். 'தி' ஈறு.*

**இலக்கம் :**

*இலக்கம் சாய்ந்தது என்னும் தொடர் குறிஞ்சிக் கலி மூலத்தில் உள்ளதாக எனக்கு நினைக்கவில்லை எக்கலியில் என்று திட்டமாய்த் தெரிவித்தால் பார்த்துச் சொல்கின்றேன்.*

*சமற்கிருதத்தில் நாரத்தைக்கு 'லக்ஷ' என்றொரு பெய ருண்டு. அது தமிழில் இலக்கம் என்றுதானிருக்கும்.*

*எல்லேயிலக்கம் என்று தொல்காப்பியத்திலிருப்பதால் இலக்கம் சாய்ந்தது என்னும் பொருள்படும், எல்=கதிரோன்.*

**உத்தரம், தக்கணம் :**

*உ+தரம்=உத்தரம். உயர்ந்த வடக்கு*

*தக்கு=தாழ்வு. தக்கு - தக்காணம், தாழ்ந்த தெற்கு*

**உரு :**

*உருத்தல் = அழலுதல் (புற 25. 10).*

*உரு-குரு=வெப்பத்தால் தோன்றும் சிறு கொப்புளம்.*

*கரம் (இந்தி)-சூடு.*

*கிரீஷ்ம (வடசொல்)=கோடை.*

*சாணைக்கல்லில் நெருப்புத் தோன்றும்.*

*கபடு, என்று நீருயிரி ஒன்றுமில்லை. கமட(ம்)(வ) = ஆமை. இச்சொல் கமடு என்று வரலாம்.*

*குஞ்சு தின்னிக் காற்று = இச்சொல் உலக வழக்காயிருத்தல் வேண்டும். நூலாசிரியரின் சொந்த ஊர்ப்பக்கம் கேட்கச் சொல்க.*

*கிறுபம்=இச் சொல்லும் தமிழகர முதலிகளில் இல்லை. கிருத்திரிமம் (வ) குறும்பு. கிறாம்-குறும்பன் (யாழ்ப்பாண வழக்கு).*

**ஊழ் :**

*ஊழ்தல்=முதிர்தல், பெரும்பாம் பூழ்ந்து தோலுரிப்பன போல்*

*(சீவக.1560)*

*ஊழ்த்தல்=முதிர்தல், காந்தளூழ்த்துச் சொரிவதுபோல்*

*(சீவக. 1742)*

*ஊழ் =1. பழமை - "ஊழ்படு காதலாளை (சீவக.1452)*

*2. பழவினை - "ஊழிற் பெருவலி யவுள" (குறள். 380)*

*3. முதிர்வு - பயம்புக் கூழுற்றலமரும் (மலைபடு. 133)*

*ஊழ்-உழுவல்=பழமையாக அமைந்த வினை, செய்தான் அதன் பயன் நுகர வேண்டும் என்பது முறைமையாதலால் முறை என்பது ஊழ் என்பதற்கு வழிப் பொருளாயிற்று.*

*முறை=ஊழி, ஒழுங்கு, தடவை, செங்கோன்மை, அடைவு வரிசை* (Turn)

*பழமை=முறை, "யாழ்வழிப்படூஉம்"*

*முன்வினை முன்னும் பின்வினை பின்னும் வருவதனாலும் ஊழ் முறை எனப்படும்.*

**எரியம் :**

*நரகத்திற்குள்ள தமிழ்ச் சொற்கள் அளறு, எரி, நிரயம் முதலியன. அளறு திருவள்ளுவர் ஆண்ட சொல். அது, சேறு என்பதை அடிப்படைப் பொருளாகக் கொண்டது.*

*எரி - நெருப்பு, அதை அம் ஈறு சேர்த்து 'எரியம்' என்று வழங்குவது தெளிவாயிருக்கும்.*

*நிரயம் என்பது நரகம் என்னும் வடசொல்லின் திரிபாகச் சொல்லப்படுகின்றது. ஆதலால் அதை விட்டுவிட வேண்டும்.*

*கும்பி, புலவு, ஊழ்த்தல், அள்ளல், அருஞ்சிறை, இருள் என்று வேறு சில சொற்களும் பிங்கல நிகண்டில் நரகப் பெயரா கக் கூறப்பட்டுள. இவற்றுள் கும்பி வடமொழியிலுமிருப்பினும் கொள்ளத் தக்கதே, கும்புதல்=தீய்ந்து போதல். சோறு கும்பி விட்டது என்னும் வழக்கை நோக்குக. புலவு = வெறுப்பு, ஊழ்த்தல் = கெடுதல், அள்ளல் = சேறு.*

*ஏரிக்காடு என்று யார் சொன்னது! ஏட்டுச் சான்றுண்டா ஏர்க்காடு, கொத்துக்காடு எனக் காடு இருவகை. முன்னது உழுவது, பின்னது மண்வெட்டியாற் கொத்துவது. 15-4-68*

*மலையடிவாரத்தில் ஏர்க்காடு இருந்தாலும் அப்பெயர் பெறும். ஏறைக்கோன் என்றொரு சிற்றரசன் புறநானூற்றிற் பாடப்பெற்றுள்ளான். ஏறைக்குட்டி என்று பெயர் கொண்டார் குமாரசாமிப் பட்டியிலுண்டு. ஏறைக்காடு என்பதும் ஏற்காடு என மருவியிருக்கலாம். ஏரிக்கரையூர் எங்குமுளது. கோடைக் கானல் நீலமலை முதலிய இடங்களிலுமுண்டு. காடு என்னும் சொல் கவனிக்கத்தக்கது. ஏர்க்காட்டிலுள்ள முதியோரையும் வினவியறியலாம்.*

**கண்டகம் :**

*கண்டகம் என்பது ஒரு முகத்தலளவை. சேலம் மாவட்டத் திலுளது. அது 2கலமா4 கலமா என்று தெரியவில்லை. உடனே மூத்தோரைக் கேட்டுத் தேரிவிக்க. என் இசைத் தமிழ்க் கலம்பகத் தில் அது வருகின்றது. அதற்குப் பொருளும் அளவும் குறித்தல் வேண்டும்.*

*கண்டகம் எவ்வளவென்று தாங்கள் முன்பு எழுதி விடுத்த அட்டை காட்டுப்பாடியிலுள்ளது. அது நூலில் வருகின்றது, அளவை மறந்து போனேன். இங்கொருவர் 40 மரக்கால் என்று*

சொன்னார், சரிதானா! உடனே உழவரையும் கூல வணிகரையும் கேட்டுத் தெரிவிக்க.

**கவி :**

கவி என்ற வட சொற்கு வடமொழி அகர முதலியில் சரியாக மூலம் காட்டப்படவில்லை. **கூ** (கூவு) என்றும் **கவ** (கஞ்சத்தனமான) என்றும் இரு மூலங்கள் காட்டப்பட்டுள. தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் மேற்கணக்குப் (பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்) பாடல்களிலும் கவி என்ற சொல் இல்லை. கி.மு. 1300 போல் பாடப்பட்ட இருக்கு வேதத்தில் அச்சொல் உள்ளது.

வடசொற்கள் தமிழில் மிகுதியாகக் கலக்கத் தொடங்கிய பின்னரே கவி என்னுஞ் சொல் இலக்கியத்திற் புகுந்தது. 'கவிகைக் கொடுப்ப' என்று சிலப்பதிகாரத்தில் வருவதால் (3.135) எ-ஆம் நூற்றாண்டினதான திவாகரத்தில் அச்சொல் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தியும் சமற்கிருதமும் அடர்த்து வரும் இக் காலத்தில் வடசொற்களை அறவே களைந்து தமிழை முழுத் தூமைப் படுத்தல் வேண்டும். அல்லாக்கால் தமிழில் செய்யுளை அல்லது பாவைக் குறிக்கச் சொல்லில்லை யென்றே இந்தியரும் வடவரும் கருதி இகழ்வர்.

**கிழக்கு மேற்கு :**

கீழ்-கீழ்க்கு-கிழக்கு.

மே-மேல்-மேற்கு.

**குமுகாயம் :**

கும்முதல்=கூடுதல்

குமுகம்-சமூகம்(வ)

ஆயம்=பெருங் கூட்டம்

குமுகம்+ஆயம் = குமுகாயம் (மரூஉப்புணர்ச்சி)

சமுதாயம்(வ)

**குரு :**

குருவிக் கோல் என்ற சொல் அகர முதலியில் இல்லை. இலக்கியத்திலும் வந்துளதாகத் தெரியவில்லை.

குருவிக்கல்=செம்மண், செந்நிறக்கல்.

குரு=செந்நிறம், அரத்தம்.

குருவெறும்பு=செவ்வெறும்பு

குருவிந்தக்கல்=மாணிக்கம், சாணைக்கல், காவிக் கல்.

**கேடட் :**

Cadet என்னுஞ் சொற்குப் படைப் பயிற்சி மாணவன் என்பது மிக நீண்டுள்ளது. அதைப் ‘படைமாணி’ என்று குறுக்க வேண்டும்.

மாணி=மாணவன். Student in naval or military nor airforce college என்பதே ஆக்கசுப் போர்டு சிற்றகராதி கூறும் பொருள். மூலப் பொருள் சிறு தலைவன் என்பதே.

Cadet (French) <Capdet (Gascon<Capdel (Provencial)<LL Capeitetto (dim. of)L. Caput, head = little chief. ஆகவே சித்தலை (சிறுதலை) என்று சொல்லையும் புனைந்து கொள்ளலாம். இதைப் பாவையில் வெளியிடுக.

**சாதனை :**

சாதனை என்னும் வடசொல்லிற்கு ‘நிலை நாட்டம் என்பது பொருத்தமாயிருக்கும்

சாதித்தல்=நிலை நாட்டல், வலிந்துரைத்தல்.

ப்ரச் (வ) = வினவு. ப்ரச்சினை = வினா. நாம் வினா என்னும் சொல்லையே பயன்படுத்தலாம். சிக்கலான செய்தியாயிருந்தால் (Problem) ‘புதிர்’ என்னுஞ் சொல்லை ஆளலாம்.

**சிரமம் :**

ச்ரம (வ) = களைப்பு, அயர்ச்சி, உழைப்பு, உழைப்பு,

சிரமபரிகாரம்-களைப்பகற்றல், இளைப்பாறல்.

சிரமப்பட்டுச் செய்தல்=மெய்வருந்திச் செய்தல். தமிழர் இபபொருளிலேயே இச்சொல்லை வழங்குகின்றனர்.

**சிறையாளி :**

கைதி என்றால் சிறையாளி என்றே பொருள். குற்றவாளி என்பதன்று.

கைது=சிறை, சிறையாளி என்ற சொல்லை வழங்குமாறு எழுதுக.

**தகவல் :**

*தகவல், என்பது.* dakhal *என்னும் அரபிச் சொல்,* Information Intimation *என்பது அதன் பொருள். சேதி (செய்தி) என்பது அப்பொருளிலேயே வழங்குகின்றது. எ-டு. வந்தவுடன் சேதி யனுப்பு, அதைப்பற்றி ஒரு தகவலுமில்லை, அதைப்பற்றி ஒரு தெரிவிப்புமில்லை.*

**தருமம் :**

*தருவது தருமம் என்பதுபோற் பொருந்தப் பொய்த்தலும், பொருந்தாப் பொய்ததலுமாக, சில மொழியாராச்சியில்லாப் பொறுப்பற்ற தான்தோன்றிப் பதடிகளின் வெற்றுரைகளைக் கொள்ளற்க. தோல் தமிழகத்ததாயினும் அதனாற் செய்யப்படும் பாதக் கூடு மேனாட்டதே. அங்ஙனமே மூலம் தமிழாயிருப் பினும் சொல்லளவில் சில வட சொல்லே.*

**திணை :**

*ஐந்திணை நிலப் பெயர்கள் நிலத்திணைபற்றியவையே. திணை என்னும் சொற்கு ஒழுக்கம் எனல் வழிப் பொருளே, முதற்பொருளன்று.*

*மருதம் சான்ற மருதம்=மருதத்திணை கான்ற மருத நிலம்.*

**தூரி :**

*தூரி=ஊஞ்சல். இது தூய தென் சொல். வடமொழியில் இல்லை.*

"*ஊசல் ஊஞ்சலும் தூரியுமாகும்*" *என்பது பிங்கலம். (அனுபோகவகை 569) கயிற்று வளையத்திற்குள் தூர்ந்து (புகுந்து) ஆடுவது தூரி. வழங்காமையினாலேயே பல சொற்கள் அருஞ்சொற்கள் ஆகின்றன.*

**பின்னுந்தி :**

*தங்கள் நண்பரான ஊராட்சியலுவலர் அவர்கள் என் அறையில் இருந்தபோது* jet *வானூர்திக்குத் தமிழ்ச் சொல் கேட்டார்கள்.*

L. jace, jact=to throa; F.jet, E.jet. n=Stream of water, Steam, gas etc.

shot forward or upwards esp; from small operning.

Jet=Suprt forth in jets; jet propeled (air craft)=deriving propelsive power from the backward thrust. of high velocity jets of has discharges through regular inner holes from the wings.

*நீரை அல்லது காற்றை எறியது என்னும் பொருளில் எறிவான், பீச்சி, சிவிறி என்னும் சொற்களுள் ஒன்றை ஆளலாம், ஆயின் சொல்லும் சிறப்பாயில்லை. பொருளும் நிறைவாயில்லை, ஆதலால் 'பின்னுந்தி' என்று புனைவதே சாலப் பொருத்தமாம். சொல்லும் நன்றாய் ஒலிக்கிறது. பின்னூக்கிக் காற்றைத் தள்ளி விசையூட்டுவது என்னும் பொருளும் பொருந்துகிறது இதையே அவர்களிடம் சொல்க.*

**புட்டம் :**

Buttocks *என்பதற்குத் தமிழ்ச் சொற்கள். இருப்பு, குண்டி, சூத்து, சூத்தாம்பட்டை, புட்டம். புட்டம் என்பது பிட்டம் எனத் திரியும். ஒப்புநோக்க-புரள்-புறழ், புரண்டை-பிரண்டை.*

*புட்டம் என்பது புட்டி எனத் திரிந்து பறவையன் பின் புறத்தைக் குறிக்கும். புட்டி எனத் திரியும். ஒப்புநோக்க-புரள்-புறழ், புரண்டை-பிரண்டை.*

*புட்டம் என்பது புட்டிஎனத் திரிந்து பறவையின் பின் புறத்தைக் குறிக்கும். புட்டி என்பதும் பிட்டி எனத் திரியும். பிட்டம் என்னும் தென் சொல்லையே ப்ருஷ்ட என்று வடவர் திரித்திருக்கின்றனர். அத்திரிவையே இன்று மூலமாகக் காட்டி யிருப்பது தமிழ்ப் பேராசிரியரின் அறியாமை, அடிமை, பேடிமை, தந்நலம் ஆகியவற்றை உணர்த்தும்.*

Buttock *என்னும் ஆங்கிலச் சொல்லில்* butt *என்பதே முதனிலை.* ocks *என்பது ஈறு.* But=*புடைப்பு, பருமன, இச்சொல் இதே பொருளில் ஆங்கிலத்திலும் அதற்கினமான செருமன் தச்சு* (Dutch) *சுவீடன் மொழிகளிலும் வழங்குகின்றது. தமிழிலும் இதே பொருளே. புடைத்திருப்பது புட்டம். குண்டாயிருப்பது குண்டி.*

*குண்டி என்பது சற்று இடக்கர். சூத்து, சூத்தங்காய் என்பன மிக இடக்கர். ஆதலால் அவை அவையல் கிளவிகள். கற்றா ரொடு பேசும்போதும் கடியத்தக்கன. இருப்பு என்பது இலக்கிய வழக்கு. புட்டம் என்பது இருவகை வழக்கும். ஏனைய உலக வழக்கு. குண்டி என்பது சிறப்பாக நெல்லை வழக்கு.* Ock *என்பது முதலிற் குறுமைப் பொருள் தந்து பின்பு பொருள் இழந்தபின் ஒட்டு.*

**புலம் :**

*புலநெறி வழக்கம்.*

*புலம் = இலக்கணம்.*

*"புலந் தொகுத்தோனே போக்கறு பனுவல்"*

*என்னும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர அடியை நோக்குக.*

**பெரும்பாடு :**

*(சிரமப்பட்டுச் செய்தல்) = பெரும்பாடு. பெரும்பாடு என்னுஞ் சொல் பெண்டிர் விடாயிறைப்பைக் குறித்தாலும், பெரும்பாடுபட்டுச் செய்தான் என்னும் வழக்குண்மையால் அச்சொல்லையே நாம் அப்பொருளில் வழங்கலாம்.*

*உழப்பு என்னுஞ் சொல், ஒத்த பொருளதேனும் இலக்கியச் சொல்லும் அருஞ் சொல்லுமாக உள்ளது. உழத்தல் = வருந்தி யுழைத்தல். உழந்தும் உழவே தலை.*

**பொற் பிறப்பு :**

*ஏம கர்ப்பம் என்பது பொதுவாக இரணிய கர்ப்பம் எனப்படும். ஹேமம்=பொன். ஹிரண்ய=பொன். கர்ப்பம்-பிறப்பு. இரணிய (ஏம) கர்ப்பம்=பொற் பிறப்பு. பொன்னால் ஆவுருவம் செய்து அதனூடு புகுந்து வரும் அரசனுக்கு (க்ஷத்திரியனுக்கு)ப் பிராமணப் பிறப்பைத் தரும் சடங்கு. சடங்கின்பின் அப் பொன்னே பிராமணப் பூசாரிக்கு அளிக்கப்படும். இது இரணிய (ஏம) கர்ப்பதானம் எனப்படும். இத்தகைய பெருங் கொடைகள் 24 வகை ஏற்படுத்தப்பட்டிருந்தன. இவற்றை வேந்தரும் பேரர சரும்தாம் செய்யமுடியும். திருவாங்கூர் அரசர் ஒவ்வொருவரும் தாம் முடிசூடியபின் இத்தானம் செய்துள்ளனர். தஞ்சை நாயக்க மன்னருள் இறுதியாயிருந்த விசயராகவ நாயக்கரும் இதைச் செய்தார். ஓர் ஆள் ஊடுருவுமளவு பொன்னுருவம் செய்ய எத்தணைப் பொன் வேண்டியிருந்திருக்கும்!*

**துலை நிறை :**

*பிராமணர் பெற்ற இன்னொரு வகைப் பெருங் கொடை துலை நிறைத் தானம் (துலாபாரம்) இவற்றால் ஏராளமான பொன்னை அரசர் கருவூலங்களினின்று பிராமணர் சுறண்டிக் கொண்டனர். இவையெல்லாம் பொதுமக்கள் பணம் ஆரியரால்*

ஏமாற்றுண்ட ஏமாளியையரெல்லாம் இத்தகைய கொடைகளை அடிக்கடி செய்து வந்தனர். அரண்மனைப் பொக்கச சாலை களில் அளவற்ற பொன்னும் மணியும் குவிந்து கிடந்ததனால் அரசர் இவ்விழப்புகளைப் பொருட்படுத்தவில்லை. அவற்றிற் கீடாகப் பிராமணப் பிறவியும் மறுமையில் நற்பதவியும் இறைவன் திருவருளும் கிட்டுமென்று நம்பிப் பெருமகிழ்ச்சியும் பொந்திகை யும் (திருப்தி) கொண்டனர். இத்தகைய ஆரிய ஏமாற்றுக்களும் தமிழரும் திராவிடரும் ஏமாறியடைந்த இழப்புக்கேடும் என் 'தமிழ் வரலாறு' "தமிழர் மதம்' என்னும் நூல்களில் விளக்க மாகக் கூறப்பெறும்.

மதியம் என்பது மத்தியான (Madh-yahna) என்னும் வட சொற்றிரிபு. உச்சிவேளை, உருமம், நண்பகல் என்பன தமிழ்.

வ. மத்ய (Madhya-த-மையம்.) நடு, நடுவம் நடுவண் என்ற முச்சொற்களுள் ஒன்றையே வழங்குதல் வேண்டும். நடுவம் மிகப் பொருந்தும்.

**மூத்தோர் :**

Senior என்பதற்கு மூப்பர் என்று சொன்னேன். திரு. செல்லப்பனார் மூத்தோர் என்றார்கள். அதுவே சரி, ஆகவே மாணவர் நால்வகைப் பருவத்தையும் கீழ்இளையோர், இளையோர் மூத்தோர், மேல்மூத்தோர் என்றே குறிக்கச் சொல்க.

**வேய்தல் :**

வேய்தல்=முடியணிதல். வேய்ந்தான் = வேந்தன்.

கொன்றை வேந்தன்-கொன்றை மலரை முடியில் அணிந்தவன் (சிவன்).

# 8. மொழியாக்கம்

பாவாணர் கடிதங்களில் மொழியாக்கச் சொற்கள் பல இடம்பெற்றுள்ளன. இயல்பாக அன்பர்களுக்கு எழுதப்பட்ட செய்திகளின் இடையே வந்த மொழியாக்கச் சொற்கள் சில. அவற்றைத் தொகுத்துத் தமிழ்ச் சொல், முன்னாவும், அதற்கு உரிய வேற்றுச்சொல் பின்னாகவும் அமைத்து அகர முறையில் தரப்பெற்றுள. ஆங்கிலச் சொல், வடமொழிச் சொல், உருதுச் சொல் எனச் சிலவகைச் சொற்கள் இப் பட்டியில் இடம் பெற்றுள. ஒரு சொல்லுக்குப் பல சொற்களும் மொழியாக்கமாக அமைந்துள. மிக அரிதாகச் சிறுவிளக்கம் உடைய சொற்கள் தனிப்பட்டியாக அமைக்கப்பெற்றுள.[1] பாவாணர் எழுதிய கடிதங்கள் எல்லாவற்றையும் தொகுக்கும் ஒருவாய்ப்புக் கிட்டி னால் இன்னும் பன்மடங்குச் சொற்களுக்கு மொழியாக்கம் காணக்கூடும் என்பதை இத்தொகுப்பு சுட்டுகின்றது.

இத்தொகுப்பில் அமைந்த சொற்களுள் செம்பாதி திரு. நா. எழில்மகிழ்நர் அட்டைகளில் கண்டவை. திரு. மி.மு. சின்னாண்டார், திரு. வி. பொ. பழனிவேலனார், திரு. வி.அ. கருணைதாசன், திரு. பா. நாராயணர், திரு. தமிழ்க்குடிமகனார், திரு. வீ.ப.கா. சுந்தரனார், நெய்வேலி பாவாணர் தமிழ்க்குடும்ப அன்பர்கள் ஆகியோர்க் குப் பாவாணர் எழுதிய கடிதங்களில் கிடைத்தவை மற்றவை. எனக்கு எழுதிய கடிதத்திலுள்ளனவும் உண்டு.

மற்றைப் பகுதிகளில் இன்னார்க்கு எழுதப்பட்ட கடிதம் என்னும் சுட்டும், நாளும் உண்டு. இப்பகுதியில் அவை இல்லாமை யால் இக்குறிப்பு வேண்டிற்று என்க.

அடங்கல் நாடுகள் = சர்வதேசம்

அண்ணாவி = Champion

அண்ணாவயம் = Championship

அணிகலம் = ஆபரணம்

அதிகாரச் சான்றுடன் = அதிகார பூர்வம்

1. சொல்லாக்க விளக்கங்கள் என்னும் தலைப்பைப் காண்க..

அநாகரிகர் = மிலேச்சர்

அமைத்த மொழிநடை = Set Language

அமைதி = நிசப்தம்

அமைப்பாளர் = Organizer

அமையம் = சந்தர்ப்பம்

அயிரம் = கிலோ

அரசிறை (யாண்டு) = பசலி

அரசின்மை = அராஜகம்

அரவணைப்பு = ஆதரவு

அரவம் = சர்ப்பம் (சர்-இயங்கு, ஊர்வது எனப் பொருட் காரணம் காட்டுகின்றனர்)

அரும்பொருளட்டவணை = Index

அவலம் = வலமின்மை, நோய், வருத்தம் அல்(அ)+வலம்

அளவை, சூள் = பிரமாணம்

ஆசையின்மை (பற்றின்மை) = விரக்தி

ஆட்சி, வழங்கல் = பிரயோகம்

ஆண்டுமானம் = சகாப்தம்

ஆய்விளக்கம் = விமரிசனம்

ஆள், புள்ளி, ஆசிரியன் = ஆசாமி

இசைக்குழல் = நாதசுரம்

இட்டுவைப்பு = Deposit

இடுக்கண் = ஆபத்து, நிர்ப்பந்தம்

இடுவமைப்பு = Lay-out

இடைநடு = Intermdiate

இணைப்பு விரைவான் = Link Express

இந்தியக் கருமப் பெருந்தலைவர் = High Commissioner for India

இயம் = வாத்தியம்

இரண்டகர் = துரோகி

இரண்டன்மை =
இரண்டன்மைக்கோள் } அத்வைதம்

இருதலை (ஒருவருக்கொருவர், ஒன்றுக்கொன்று) = பரஸ்பரம்

இருதலையன்பு = பரஸ்பர அன்பு

இலக்கியம் (குறிக்கோள்) = இலட்சியம்

இவறி (பிசினாறி, கருமி) = லோபி

இறும்பூதாளர் = அதிசயமனிதர்

இறும்பூது = அற்புதம்

உண்ணம் = உஷ்ணம்

உண்மை = யதார்த்தம்

உணர்ச்சி = பிரக்ஞை

உதவி = Assistant

உய்த்துணர்வு = அனுமானம்

உய்ப்புத்துறை = Transport

உயிரினம் = ஜீவராசி

உரு = சரணம்

உருவக்கட்டை அச்சு = பிளாக்

உரையாட்டு = சல்லாபம்

உள்கை உள்ளுகை = சிந்தனை

உள்ளக் கிளர்ச்சி. கொந்தளிப்பு = உல்லாசம்

உறழ், போராட்டு = வாதம்

உறுதி = ஊர்ஜிதம்

ஊர்க்காவல் துணை உண்ணோட்டகர் தலைவர் = D.I.G.

ஊர்தி = வாகனம்

ஊற்றுத் தூவல் = Fountain pen

எண்கவனம் = அஷ்டாவதானம்

எண் கவனகர் = அஷ்டாவதானி

எண்ணம் = யோசனை

எய்ப்பில் வைப்பு = P.F.

எளிது = சுலபம்

ஏடல், கருத்து = (Idea)

ஏதம் = அபாயம்

ஏவம் = Order

ஒத்த, சம = Equal

ஒன்றியம் = ஐக்கியம்

ஓரகத்தான் = சகலன்

கண்டிப்பு = Strict

கயம் = கசம்

கரிச்சாத்து = Attestation

கருத்து, ஏடல் = அபிப்ராயம்

காண்கை = தரிசித்தல்

காமன் = மன்மதன்

காமி = ரதி

காலஞ்சென்ற = மாஜி

காளை, விடை = நந்தி

கிள்ளாக்கு = Pass port

கின்னரம் = Fiddle

கீழ், உள் = Sub

குச்சி, குச்சிப்பூச்சி = Bacteria

குடற் காய்ச்சல் = Enteric or Typhoid

குதிர்வு = விவஸ்தை

கும்பீடு, கைகூப்பு = அஞ்சலி

குறித்தளவு = Reference

குறியீட்டுத் தொகுதி, குறியீட்டியல் = Terminology

கூடுதல் = Additional

கெடுப்பு = சதி

கேட்பாடு = Hearing

கேள்வி யாழ் = தம்புரா

கொடுக்கல் வாங்கல் = லேவாதேவி

கொண்முடிவு (மதக்குடுமி) = சித்தாந்தம்

சடுத்தம் = Urgent

சாயுங்காலம் = சாயரட்சை

சிறப்போவம் = விசித்திரம்

சூழ்வு = ஆலோசனை

செவ்வி, பழுனம் = பக்குவம்

சொல் = வார்த்தை

தகவுமடி = Diploma (Grig : folded Paper)

தகுதி இதழ் = Certificate

தடை = ஆட்சேபணை

தம்பலம், வெற்றிலைபாக்கு = தாம்பூலம்

தலைக்கீடு = வியாஜம்

தலைவர், மேலிருக்கையர் = Chairman

தனி, தனிவேறு = பிரத்தியேகம்

திட்டம் = Scheme

திருமுன்னிலை = பிரசன்னம்

தீக்குறி, தீப்புள் = அவசகுனம்

தீர்கையர் = தீட்சதர்

தீர்பாடு = சாவகாசம்

தீர்மானம் = நிர்ணயம்

துணை = Vice

தெத்து = சுவீகாரம்

தொண்டில்லம் = சேவாசங்கம்

தொலை வரி = Telegraph

தொழுவாடு = சம்பிரதாயம்

நடத்தாளி அல்லது ஆள்வினைஞன் = நிர்வாகி

நல்லெண்ணம் = அபிமானம்

நலக் குறைவு = சுகவீனம்

நன்னெறியவை = சன்மார்க்க சபை

நாட்கம்பி = தினத் தந்தி

நாட்டம் = சர்ச்சை நிகழ்ச்சி நிரல் = Programme

நிகர் மதிப்பான் = Equivalent

நிகழ்ச்சி = சம்பவம்

நிகழ்ச்சி நிரல் = Programme

நிமையம் = நிமிசம்

நிரந்தரம் = நிலைப்பு அல்லது என்றும்

நிற்புறுத்தம் = Suspension

நிறுவனம் = Establishment

நிறைவு, முழுமை = பூரணம்

நினைவுக் குறி, நினைவுச் சின்னம் = ஞாபகச் சின்னம்
நினைவுக் குறிப்பு,

குறிப்பேடு, ஒப்பந்த முறி அறிவிப்பு முடங்கல் அறிவிப் போலை = Memorandum

நுண்காட்டி, பெருக்காடி = Microscope

நூல், அறிவியல், நூன்முறை, குறி = சாஸ்திரம்

நெடுந்துணி = Long Cloth

நெருக்கடம் = Urgent

பக்கம் = திதி

பகரம் = Duputy

பட்டம், பாகை = Degree

பட கஞ்சல் = Boat mail

படி, மறு = பிரதி

படி நிகர்த்தல் = Represent

படி நிகராளர், படி நிகராளி = Representative

படைக்கலமின்மை = நிராயுதபாணி

பண்ணையார், பெருநிலக்கிழார் = மிராசுதார் (உருது)

பணிக்குழு = சிப்பந்தி

பத்தி = பக்தி

பரவல், வியன்மை = வியாப்தி

பரிமாற்றம் = பரிவர்த்தனை

பழுதுபார்ப்பு (அ) செப்பனீடு = மராமத்து

பழைமை = புராதனம்

பாடப்பட்டி = Syllabus

பிறிதின் வயம் (அ) பிறன் வயம் = பரவசம்

புகைவண்டிப் பொதிகை = Railway Parcel

புதுமை = நூதனம்

புறக்கணிப்பு = பகிஷ்காரம்

பெருங்கோளம் = பிரமாண்டம்

பெரும் புலவர் = மகாவித்துவான்

பெருமகன் = பிரபு

பெருமை = மகத்துவம்

பெறுகைச் சீட்டு = Acknowledgement

பேரியங்கிக் கடத்தும் = Bus Transport

பொது, பொதுவகை = சாமானியம்

பொருள் = அர்த்தம்

போங்கு, அமைவடிவு = Plan

மட்டு = சர்ப்பத்து

மதங்கம் = மிருதங்கம்

மந்திரம், பணை = லாயம்

மருமம், உட்கருத்து = அந்தரங்கம்

மறை முடிபு = வேதாந்தம்

மாண்பு, மாட்சிமை = மகிமை

மிகுதி = அமோகம்

மீட்கை = வாபஸ்

முத்திரை = Stamp

முயற்சி, உஞற்று = பிரயாசை

முளை = பாலிகை

மெய்ப்பு = நிரூபணம்

மெய்ப்பு = Proof

மேயர் = (மே=மேன்மை) = Mayor (Major)

மேலோர் (அ) ஒழுக்கமுடையோர் = சீலர்

மேனாள் = Late

வட்டார ஏவாளர் = ஏரியாக் கமாண்டர்

பிரிவு ஏவாளர் = டிவிசன் கமாண்டர்

குழுவ ஏவாளர் = பிளாட்டூன் கமாண்டர்

குழூஉத் துணை ஏவாளர் = பிளாட்டூன் துணை கமாண்டர்

குழும்புத் துணை ஏவாளர் = கம்பெனித் துணை கமாண்டர்

பகுதித் தலைவர் ஏவாளர் = செக்சன் லீடர்

பகுதித் துணைத் தலைவர் = செக்சன் துணை லீடர்

புலனம் = விசயம்

வடிவம் அல்லது இயற்கைத் தன்மை = சொரூபம்

வடிவளவு = Format

வரிசை, திறவெண் = Rank

வரை வோலை, வரைவு = Draft

வல்லுடலாண்மை = Athletics

விளையாட்டு = Game

வேளாட்டு = Sport

இறுதி = Final

அரையிறுதி = Semi final

வெள்ளோட்டம் = Sports Heat

வென் நிலை = Victory Stand

(வென் = வெற்றி)

கெலிப்புஎன்னும் ஒரு சொல் வெற்றியைக் குறிக்க உள்ளது. 'வென்' அதினும் சிறந்தது.

வல்லை, ஒல்லை = ஜல்தி

வழக்கம் = சகஜம்

வழக்காரம் = விவகாரம்

வழக்கு, முறையீடு = பிராது

வாக்கு = வாய்ச்சொல்

வாய்ப்பாட்டுத் திட்டம் = Formula

வாழ்ச்சி, அலைந்துலவுகை = சஞ்சாரம்

வாழகம், இருப்பிடம் = வாசஸ்தலம்

விடுமுறை = ரஜா

விடுதலைப் போராடிகள் = Freedom fighters

விடையூழியம் =மிஷன்

விரைவான் = Express

விரைவுக் கொடுப்பஞ்சல் = Express Delivery

விளக்கணிப் பண்டிகை = தீபாவளி

வினைத்திட்டம் = Project

வெள்ளம் = பிரளயம்

வேண்டியது = அவசியம்

வேம்பா(கொதிப்பான்) = Boiler

வேரறுப்பு = நிர்மூலம்

வேலைமேல் ஈடுபாடு = Engaged

*வேறுபாடு = விகற்பம்*

*பின்னுள்ள வேற்றுச் சொற்களுக்கு உரிய தமிழாக்கச் சொல் முன்னுள்ளதாம். அகரமுறைப் படுத்துதல் ஒழுங்கு கருதிய முறை மாற்ற அமைப்பு ஈதென முன்னேயும் சுட்டப் பட்டது.*

*கோரிக்கை, சலுகை, பாசனம் (பாய்-பாயனம்-பாசனம்) என்பவை தமிழே என்று, இவை வேற்றுமொழிச் சொற்கள் என்று சொல்லுவார்க்குத் தெளிவு செய்கிறார் பாவாணர். விழுப்புரத்தை 'வில்லிபுரம்' என வரைந்துள்ளார். இது பழைய ஆட்சிக் குறிப்பாம்.*

# 9. பிழையும் திருத்தமும்

*பாவாணர், மொழிநிலையில் தாம் காணும் பிழை பாட்டை எவர் செயினும் கண்ணோட்டமின்றிக் கடிந்து எழுதுவர். அக்கடிவு மொழி மேல் கொண்ட கனிவின் பாற்பட்டதேயாம்! தவறும் குழந்தையைத் தட்டிக் கேட்கும் தாய்மைத் தகைமை அன்னது அது! அப்படி அவரன்ன புலமையரும் கொள்ளாக் கால் மொழியின் நிலைமை என்னாம்? தமிழுக்கு அதிகாரியாம் அவரனையர் தகவால்தான் மொழி மாறாமலும் மயங்கா மலும் ஒரு நிலைத்தாய் இயல்கின்றதாம்!*

*பாவாணர், தாம் இயற்றி அச்சிடும் நூல்கள் பிழையற்று வருவதற்குப் பெரிதும் விரும்புவார். அப்படிப் பிழை நேர்ந்து விடின் திருத்தப்பட்டி தருவார். நூல்களில் திருத்துக் கொள்ள அட்டையும் வரைவார். கட்டுரையில் வந்த அச்சுப் பிழையை மாற்ற அக்கட்டுரை வெளிப்பட்ட 'இதழின் அடுத்த இதழிலே திருத்தமும் செய்கிறோம்' என்பாரைக் கண்டித்துக் கூறுவார், அவர் இனையர் இன்னர் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் நெஞ்சில் பட்டதை நேரில் கூறுதலும் சீருற எழுதுதலும் அவர்க்கு ஊறிப் போன செயற்பாடுகள். தம் நூலிலும் தம் கட்டுரை அல்லது கடிதங்களிலும், பிறர் கடிதங்களிலும் பாவாணர் கண்டு திருத்திய பிழையும் திருத்தமுமாக வருவன இப்பகுதியாம்.*

## ஆதி ஆங்கு

"அகர முதல வெழுத்தெல்லா மாங்குப்
பகவன் முதற்றே யுலகு"

*என்றேயிருக்கலாம். 'ஆங்கு' உவம உருபு.*

*'பகவன்' தென் சொல்லே. பகுத்தளிப்பவன் (படியளப் பவன்) என்பது பொருள். வட மொழியிலும் அஃதே. 'பதி' என்பதை வட மொழியில் 'bhaga' என்னும் சொற்கும் வட மொழியில் இதுவே வேர். உடைமை, புகழ் முதலிய அறுகுண முடையான் என்பது பிற்காலத்தார் பொருந்தப் பொய்த்தலாம்.*

*பண்டையுழவன் தன் விளைவை அறுகூறிட்டதனாலும், பகுசொல் ஆறுறுப்பிடைமையாலும் பகம் என்னும் பொருளுண்டாயிற்று. பகம்.*[1]

## விரற்கிடை

*எழுத்துகள் என்பது புணர்ச்சிப் பிழை, விரற்கடை என்பது விரற்கிடை யென்றிருத்தல் வேண்டும். நாட்டியம் என்பது வடசொல் வடிவு. நடம், நடனம் என்பவே தமிழ்.*

*'ஒவ்வோர் ...... நாளிலேயே' என்பதில் 'நாளிலேயே' என்பது நாளிலும் என்று முற்றும்மை இருத்தல் வேண்டும்.*[2]

## இயல்புப் புணர்ச்சி

*2-ஆம் வேற்றுமை விரி நேரடியாய் வலியோடு புணர்ந் தால் தான் வலிமிகும். ஏ இடைச்சொல் இடையிட்டால் வலி மிகாது. கற்றாரைக் கொண்டு என்பது சரி. கற்றாரையேக் கொண்டு என்பது தவறு.*

*அது, கற்றாரையே கொண்டு என்று இயல்பாய்ப் புணர்தல் வேண்டும். மென்றொடர்க் குற்றியலுகரமான இறந்தகால வினை யெச்சங்கள் இயல்பாயே புணரும் எ-டு. கண்டுபேசி வந்துபோக, சென்றுகொடு. கண்டுப்பேசி என்பது தவறு.*[3]

## முண்டகம்

*கமலத்திற்கு மூன்று தென்சொற்கள் உள. ஒன்றைக் குறிக்க மறந்தேன். அது 'முண்டகம்'*[4]

## ஒலியா எழுத்து

*யான் விடுத்த கட்டுரை இறுதிப் பாகியில் 'hour' என்பதைத் தமிழில் 'ஹவர்' என்று எழுதிவிட்டேன். அதை 'அவர்' என்று திருத்திக் கொள்க. அச்சொல்லில் 'h' ஒலிக்காது.*[5]

## இன்பு இனிது :

திருமணம் என்மகட்குத் தென்பாய் நிகழ
ஒருநூறுரூபா வுகுத்த - பெருமான்

1. 20 கும்பம் 1995 (வி.பொ.ப)
2. 20 கும்பம் 1995 (வி.பொ.ப)
3. 21.–4–64 (மி.மு.சி.)
4. 12–11–64 (வி.அ.க.)
5. 5–12–64 (வி.அ.க.)

மனங்கவர்ந்தார் தண்டமிழ் மாண்புற வாழ்க
இனங்கவர்ந்து நீடி யின்பு.

*நான் நேற்றுத்தான் சென்னையில் இருந்து திரும்பினேன். அஞ்சற்கட்டிற்கு நேரமாகிவிட்டதனால் விரைந்து பாட்டெழு தினேன். அதில் ஈற்றடியை "இனங்கவர்ந்து நீடியினிது" எனத் திருத்திக் கொள்க.* [6]

**புணர்ச்சிப் பிழை :**

*தமிழ்க் கழக முதல்மாநாட்டு அழைப்பிதழ் வந்துள்ளது. நிரம்ப புணர்ச்சிப் பிழை கொண்டுள்ளது.* [7]

*முத்திருத்தம் ப.த.நாப. 50 படிகள் தி.வி.எசு. வாயிலாகத் தங்கட்கு அனுப்பப்பட்டன. 232 ஆம் பக்கத்தில் உள்ள வெண்பா வின் முதலடியை,*

"கொடைமடத் தோடும் கொடாமட நாட்டில்"

*என்று திருத்திக் கொள்க, எல்லாப் படிகளிலும்.*[8]

*ப. த. ப. 232 ஆம் பக்க வெண்பா முதலடியிலுள்ள இரு முகரத்தையும் அடித்து விடுக.*[9]

*ப. த.நா. ப. 232 ஆம் பக்கத்திலுள்ள வெண்பாவின் முதலடியை, "கொடைமடத்தோடும் கொடா மட நாட்டில்" என்று திருத்திக் கொள்ளுமாறு முன்பெழுதினேன். அங்ஙன மன்றி,*

"கொடை மடங்கொ டாமடமும் கூர் தமிழ் நாட்டில்"

*என்று ஒரெழுத்தை அடித்தும் ஒரெழுத்தைப் பிரித்து வகையுளி செய்தும் திருத்திக் கொள்ளலாம். இம்முறைப்படி முதலடி.*

கொடைமடங்கொ டாமடமுங் கூர்தமிழ் நாட்டில்"

*என்றமையும் இனி, 2 ஆம் சீரின் முகரத்தையும் அடித்து*

*"கொடைமடங்கொ டாமடங் கூர்தமிழ் நாட்டில்" என்று அமைத்துக் கொள்ளினும் இன்னும் நன்றே. இவ்விருமுறைகளில் ஏதேனும் ஒன்றைக் கையாண்டு எளிய முறையில் எல்லாப்*

---

6. 24–4–65 (பு..ம)
7. 29–11–65 (மி.மு.சி)
8. 7–2–66 (மி.மு.சி)
9. 13–8–66 (மி.மு.சி)

*படிகளையும் திருத்திக்கொள்க. இறுதிப்படிவம் விரைந்து இரவில் அடிபட்டதால் திருத்தவியலாது போயிற்று.* [10]

**பிழையின்மைச் சிறப்பு**

*இதுவரை நான் வெளியிட்டவற்றுள் பிழையின்றிச் சிறப்பாய் வருவது (தமிழ் வரலாறு).* [11]

**முந்தியவற்றில் மேல் :**

*மூவர் இவ்விருமுறை பார்த்தும் நாலைந்து பிழைகள் நேர்ந்து விட்டன. ஆயின் முந்திய நூல்களை நோக்க இது (தமிழ் வரலாறு) எவ்வளவோ மேல் என்று சொல்லவேண்டும்.* [12]

**விடுபாடு :**

*நூல் பாதி அச்சாகியிருந்துபோது வடமொழி வரலாற்றிற் குப் பணம் குன்றிவிடுமோ என்னும் அச்ச மிகுந்துவிட்டதனால், பல பகுதிகளை விரிவாக விளக்காததுடன் சில பகுதிகளை நீக்கியும் விட்டேன். அதனாலேயே யானைப் பெயர்கள் சிலவும் விடப்பட்டுப் போயின.*

*எத்தனை முறை பார்ப்பினும் சிலர் கண்ணிற்குச் சில பிழைகள் தப்பியே விடுகின்றன அதனால் அடுத்த நூல்களுக்கு ஐவரை அமர்த்த விருக்கிறேன். மேனாடுகளில் எழுவர்க்குக் குறையாது திருத்துவதாகத் தெரிகின்றது.* [13]

**பிழையும் குறையும் :**

*தமிழ் வரலாற்றில் நேர்ந்துள்ள இரு பிழைகளையும் ஒரு குறையையும் பின் வருமாறு திருத்திக் கொள்க.*

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| *143* | *20* | *நாடு* | *வளநாடு* |
| “ | *21* | *வளநாடு* | *நாடு* |
| *199* | *6* | *தேங்கு-தேக்கம்* | *ஆகு-ஆக்கம்* |
| “ | *7* | *தேக்கம் -தேங்குதல்* | *ஆக்கம்-ஆகுதல்* |

*239 யானைப் பெயர் வரிசையில் எறும்பி, கடிவை,. தூங்கல், தோல்,. பெருமா, பொங்கடி, மருண்மா, மதங்கம், மதாவளம், மொய் என்பவற்றைச் சேர்த்துக்கொள்க.*

---

10. 14–2–66 (மி.மு.சி)
11. 7–1–67 (மி.மு.சி)
12. 11–3–67 (மி.மு.சி)
13. 22–3–67 (மி.மு.சி)

*143. ஆம் பக்கம் ↑ ↓ இப்படிக் குறித்தாலும் போதும். சொற்களைத் திருத்த வேண்டியதில்லை.* [14]

**எழுத்துத் தவறும் சொல் மாற்றமும் :**

*ஆங்கில நேர் தென் சொற்பட்டியை அச்சுப் பிழையின்றி வெளியிடுக. ஓரெழுத்துத் தவறினும் சொல் மாறிவிடும்.* [15]

**பிழை-திருத்தம் :**

| பிழை | திருத்தம் |
| --- | --- |
| *ஆண்டு விழா* | *ஆட்டை விழா* |

*ஈராயிர ஆட்டை விழா என்றிருத்தல் வேண்டும்.* [16]

**கி.மு. கி.பி.**

*என் கட்டுரையில் 7 ஆம் பக்கம் திருக்கோவைக் காலம் கி.மு. என்றிருப்பதை உடனே கி.பி. என்று திருத்துக. ஒருகால் நானே கைத்தவறாக எழுதியிருந்தாலும் முன்பின் உள்ளவற்றை நோக்கிக் கி.பி. என்று கண்டு திருத்தியிருக்கலாம். கையிருப்பி லுள்ள படிகளெல்லாம் உடனே திருத்திவிடுக. நேரிற் காணக் கூடியவர் மலர்வாங்கியிருப்பின் திருத்திக்கொள்ளச் சொல்க. அயலூரார்க்குத் தெரியுமாறு திருத்தத்தைத் தெனமொழியில் வெளியிடச்சொல்க. மாணிக்கவாசகர் கிறித்துவுக்குப் பிற் பட்டவர் என்பது புலவரல்லாதார்க்கும் தெரியுமே.* [17]

**பொய்கை குளம் :**

*தி.த. ம. உரை 417 ஆம் பக்கம் 3 ஆம் வரி ஆற்று என்பதைப் பொய்கை என்று திருத்திக்கொள்க. 5ஆம் வரியில் ஆற்றுநீர் வருநீர் என்பதைச் செருகிக்கொள்க.*

*பொய்கை என்றும் வற்றாத இயற்கை நீர்நிலை (*Lake*) குளம். ஆண்டுதோறும் மழைநீரால் நிரம்பிக் கோடையில் வற்றுவது (*tank*)*

*கண்ணறுவை செய்துகொண்டதால் இறுதிக்காலத்தில் இத்தகைய பிழைகளைக் கவனிக்க முடியாது போயிற்று.* [18]

*எழுத்தறியத் தீரும்.*

---

14. 23–3–67 (மி.மு.சி)
15. 24–10–68 (வி.அ.க.)
16. 8–4–69 (மி.மு.சி)
17. 8–4–69 (மி.மு.சி)
18. 19–7–70– (மி.மு.சி)

# 10. தனித்தமிழ் கழகம்

*உ.த.க. எனப்படும், ‘உலகத் தமிழ்க் கழகம்’ பாவாணரைத் தலைமையாகக் கொண்டு அவர் கொள்கையைப் பரப்புதற்கு ஏந்தாக அமைக்கப்பட்ட அமைப்பாகும். அதற்கும் முன்னோடி யாக அமைந்த தனித் தமிழ்க் கழகம் என்பதாம். உ.த.க. தோன்றிய போது த.த.க. அதனுள் இயைந்தது. அல்லது, த.த.க. உ..க.வைத் தோற்றுவித்து அதனோடு ஒன்றியது.*

*தனித் தமிழ்க் கழகந் தோன்றிய வகையை விளக்கும் பாவாணர் கடிதம் 15-4-64.*

*“இலால்குடிக் கழக உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர் சேந்தமாங்குடியார் 1960 ஆம் ஆண்டே, அண்ணாமலை நகர் வந்து தமிழ்நாட்டில் தனித் தமிழ்க் கழகம் தோற்றி விரிவுபடுத்த வேண்டு மென்று என்துணை வேண்டினார். யான் இசைந்தேன். மூவாண்டு ஒன்றும் தெரியவில்லை. இன்று திருச்சி மாவட்டம் பல வட்டங்களில் தனித் தமிழ்க் கிளைகள் தோன்றி ஈராயிரம் உறுப்பினர் (ஆட்டைக் கட்டணம் அரை ரூபா கட்டிச்) சேர்ந்திருப்பதாகவும் வைகாசி 4 (17-5-64) ஞாயிறன்று என் தலைமையில் துறையூரில் முசிறி வட்டத் தொடக்க விழா நடத்த விருப்பதாகவும் பிற மாவட்டங்களிலும் கிளைகள் தோற்றி நாளடைவில் மாநில மாநாடு நடத்துவதாகவும் எழுதியிருக் கின்றார். இதுவே மறைமலையடிகள், நாவலர் சோ.சு.பா. வும் நானும் கண்ட கனா. பர். அரச மாணிக்கனாரும் இத்தகைய அமைப்பையே விரும்பினார்.. உறுப்பினரும், உழவரும் மாண வரும் பெரும்பாலாரெனத் தெரிவிக்கின்றார், சேந்தமாங்குடி யார். இவ் வியக்கம் தமிழகம் முழுதும் பரவின் தமிழுக்கும் தமிழனுக்கும் நற்காலம் அண்ணணித்தே. எதிர்காலத்தில் ஆட்சியையும் கைப்பற்றித் தமிழாட்சி நிறுவ இயலும் .இதை நண்பர்க்குத் தெரிவித்து மாநாட்டுக்கு வர இயலின் வரச் சொல்க.*

*கற்றாரையே கொண்டிருக்கும் கழகம் விரிவடைய முடியாது. பொதுமக்களும் மாணவரும் பெருவாரியாகச் சேர்ந்தால்தான்*

*தமிழைக் காக்கவும் வளர்க்கவும் முடியும்". என்பது அக்கடிதச் செய்தி.*

*இனி, அக்கழகத் தொடர்பான சில குறிப்புகள் கடிதங்களில் கிடைக்கின்றன.*

*"தமிழ்க் கழக முதல் மாநாட்டு அழைப்பிதழ் வந்துள்ளது.. நிரம்பப் புணர்ச்சிப் பிழை கொண்டுளது" (29-11-65)*

*"தமிழைக் காப்பதே என் போன்றோர் கடமை. அந் நோக்கத்துடன் பிறருடன் ஒத்துழையாதான் தமிழனல்லன்." (1-9-64)*

*"தனி என்ற சொல்லை நீக்கித் தமிழ்க் கழகம் என்றே பெயர் வைக்கச் சொல்லியிருக்கிறேன்" (1-9-64)*

*"உறுப்பினர் அனைவரும் தனித்தமிழே பேச வேண்டும் என்னும் யாப்புரவில்லை. தனித் தமிழ்ப் பற்றிருந்தாற் போதும்" (1-8-64)*

*பாவாணர் குறிப்பிட்டுள்ள பொதுத் திடடங்களைச் சிக்கெனக் கடைப்பிடித்துச் சீருற இயங்கும் தமிழ்க் கழகம் இனிமேல்தான் தோன்ற வேண்டும் என்பது வெளிப்படை.*

*தமிழைக் காக்கும் நோக்கத்துடன் பிறருடன் ஒத்துழைக்கும் தலைவரோ அமைப்போ வழிகாட்டியோ இஃறைக் கழகங்களுள் எதற்காவது உண்டோ? தம் முனைப்புக்குப் பலியாகாத அல்லது ஆக்காத தமிழ் முனைப்பு எங்கேயுள்ளது?*

*பாவணரை நோக்காது, பாவாணத்தை நோக்கும் பார்வை எப்பொழுது தோன்றும்? அப்பொழுதுதான் தமிழாக்கம், தமிழ்க்காப்பு, தமிழ் அரவணைப்பு, தமிழுள்ளம், தமிழ் வாழ்வு ஆயனவெல்லாம் ஒருங்கே தோன்றும்!*

## 11. தனித்தமிழ்ப் பெயரீடு

*தமிழ் என்பது தனித்தமிழே, தனிப்பால் என்பது கலப்புப் பால் ஏற்பட்ட பின்னர் வந்தது போலத் 'தனித்தமிழ்' என்னும் ஆட்சியும் கலப்புத் தமிழ் ஏற்பட்ட பின் வந்த ஆட்சியே என்பது பாவாணர் குறிப்பு.*

*தமிழ்ப் புலவராயினாரும், தமிழ் ஆர்வலராயினாரும் சிலர் பாவாணரொடு நெருக்கமாக இருந்தனர். அவர்கள் பெயர்கள் தனித்தமிழில் அமைந்திராக்கால் தனித்தமிழ்ப் பெயரீட்டை நேரில் வலியுறுத்தலும் கடிதவழி வழியுறுத்தலும் பாவாணர் வழக்கமாகும். பிறமொழிப் பெயராக இருப்பவற்றைத் தாமே தமிழாக்கம் செய்து சுட்டுவதும் அவர் தம் நடைமுறைச் செய்தியாம்.*

*"சின்னச் சாமியைச் சின்னாண்டார் என மாற்றிக் கொள்க. வேறு பெயரும் தாங்கிக் கொள்ளலாம்" என்று 15-4-64இல் சேலம் புலவர் சின்னச்சாமிக்கு எழுதினார்.*

*21.4.64இல், "பெயரை மொழிபெயர்க்க விரும்பி, சின்னாண்டவன், சின்னத் தேவன், சிறிய நம்பி, என்பவற்றுள் ஒன்றை ஏற்க. அல்லாக்கால் பழந்தமிழ்ப் புலவர் பெயரினின்றும் அரசர் பெயரினின்றும் ஒன்றைத் தெரிந்துகொள்க" என்று வரைந்தார்.*

*"நுங்கள் பெயரை 'ஆமலையழகர்' என மாற்றிக் கொள்க அல்லது வேறுதனித்தமிழில் சொல் வேண்டும்" என்று பசுமலைப் புரவர் வீ.ப.கா சுந்தரம் அவர்களுக்குப் பாவாணர் எழுதினார் (31-1-68)*

*திருச்சி முத்தமிழ் மன்ற உறுப்பினர், "சுந்தரராசன் 'எழிலரசன்' என்றும், இராஜமோகன் என்பவர் 'மையலரசன்' என்றும் தம் பெயரைத் தனித்தமிழாக மாற்றிக்கொண்டனர்" என்பதை மகிழ்ந்து தெரிவிக்கின்றார் (23-4-68) பாவாணர்.*

*பேரா. மு.தமிழ்க் குடிமகனார்க்கு முன்னைப் பெயர் சாத்தையா என்பது. "சாத்தையா என்னும் விளிவடிவைச்*

'சாத்தையன்' என்று மாற்றுக'' என எழுதுகின்றார் (16-10-79). பாவாணர் வழியே ஏற்பட்ட தனித்தமிழ்ப் பற்றால் அவர் தம் பெயரைத் தமிழ்க் குடிமகனாகவே மாற்றிக்கொண்டார். அவர் பணி செய்யும் கல்லூரி யாதவர் கல்லூரி என்பதன்றோ! 'யாதவர்' என்னும் சொல் 'தமிழன்றே' என்று எண்ணிய பாவாணர், "யாதவர் கல்லூரி என்பதைப் பொதுவர் கல்லூரி' என்று மாற்றிவிடுக. அது தமிழாகவும் இருக்கும். குலப்பெயர் கொண்டதாகவும் இருக்கும் அதே சமயத்தில் தமிழினம் முழு வதையும் தழுவும் பொது நோக்கினதாகவும் இருக்கும் குமரி நாட்டினின்றும் வடபாற் சென்ற முல்லை மாந்தரே கண்ணன் முன்னோர். அவருள் முதல்வன் 'யது' . யது வழியினர் யாதவர்.. உண்மையில் பொதுவர் என்பதே யாதவர் என்பதினும் சிறப் புடையதாகும். முதியோரிடம் விளக்கிச் சொல்க'' என்று எழுதினார்.

பறம்புக் குடியில் உலகத் தமிழ்க் கழக மாநாடு சிறப்பாக நடத்தப்பட்டது. அம் மாநாட்டு இசையரங்கிற்கு வேலூர் 'கஜலட்சுமி' அவர்கள் அழைக்கப்பட்டனர். அதனை "இசை யரங்கிற்கு வரும் வேலூர் அம்மையார் பெயர் கஜலட்சுமி. 'கஜலட்சுமி' என்னும் 'வேழத் திருமகள்' என்று நிகழ்ச்சி நிரலில் குறித்தல் வேண்டும்'' என்றார்.

புலவர் **'சையத் தாசுத்தீன்'** என்பவர் ஒருவர். அவர் பெயரை அச்சமய மொழி வழியில் மொழி பெயர்த்து **'நெறி முடியார்'** என்று குறிப்பிட்டார் பாவாணர்.

மதுரை மாமன்ற உறுப்பினரும் தமிழன்பரும் பாவாணர் மேல் மட்டற்ற பற்றுடையவரும் ஆகியவர் திரு. கருணைதாசன். அவர், தமிழ்ப் பாவையின் ஆசிரியரும் ஆவர். பாவாணரைச் சிறப்பிக்கு முகத்தான் தமிழ் எழுத்தாளர் மன்றச் சார்பில் மணிவிழா எடுத்துப் பொற்கிழியும் வழங்கினர். எழுத்தாளர் மன்றத் தலைவர் பர்.மெ.சுந்தரனார். பொருளாளரும் புரவலரும் திரு. மனோகரனார்! மூவர் பெயர்களும் தமிழாக அமைய வில்லை. ஆதலால், பாவாணர் எழுதினார்.

"முதலாவது தங்கள் பெயரை அருள், அருளையன், அருளப்பன், அருளாளன், அருளன், அருளுடையான், அரு ளாண்டான் என்பவற்றுள் ஒன்றாக மாற்றிக்கொள்க.''

"ஆரியப் பெயர் தாங்கி ஆரியம் அல்லது பிறமொழி கலந்து பேசுவதாலேயே, ஆரியரும் வடவரும் தமிழரைத் தாழ் வாய்க் கருதி இந்தியைப் புகுத்தினர். அதைத் தமிழர் 'எதிர்க்க

*வில்லை. ஒரு சில கூட்டங்கள் கூட்டி ஒரு சில சொற்பொழி வாற்றுவது எதிர்ப்பாகாது. ஆங்கிலேயரை எதிர்த்ததுபோல் இறுதிவரை எதிர்ப்பதே எதிர்ப்பு. இந்தி வந்ததினாலேயே தேவ நாகரியும் வருகின்றது" என்று அக்கடிதத்திலேயே மொழி வரலாற்றை விளக்கினார். (17-11-61)*

*'விரைந்து தமிழியக்கம் தொடங்குவேன். அதற்கு முன்பே நீங்கள் மூவிரும் பெயரை மாற்றிக்கொள்வது நன்று" என்றார். (27-12-67).*

*மெ. சுந்தரனாரும், மனோகரனாரும் பாவாணரால் எப் பெயர்களால் சுட்டப்பெற்றனர் என்பதும் அவர் கடிதத்தால் விளங்குகின்றனது. "பர். மெ. அழகரும், திரு. மனங்கவர்ந்தாரும் நன்றாயிருப்பரென்று கருதுகின்றேன்" என்னும் கடிதப் பகுதி யால் (25-7-65) இது விளங்கும்.*

*"சேய்க்குப் பின்வரும் பெயர்களுள் ஒன்றைத் தெரிந்து கொள்க" எனத் திரு. மி. மு. சி. அவர்களுக்குப் பாவாணர் எழுதினார்.*

*"அமுதவல்லி, உலகநாயகி அல்லது உலக நங்கை, கண்மணி, செந்தமிழ்ச் செல்வி, தமிழரசி, நல்லம்மை, பூங்கொடி, மேகலை,*

*பழம்புலத்தியர் பெயர் அவ்வை, இளவெயினி, நக்கண்ணை நச்செள்ளை, நப்பசலை முதலிய இக்காலத்திற்கேற்கா.*

*பண்டையரசியர் பெயரும் ஏழிசைவல்லபி, கரும்படு சொல்லி, பண்ணின்நேர்மொழியாள் முதலியன இலக்கியச் சொற்றொடர்கள்.*

*பெயர்கள் நீண்டிருக்கும்போது இறுதிச் சொல்லைத்தான் அழைக்கவேண்டும்.*

*(எ-டு) மடந்தவிர்த்த மங்கை -மங்கை*

*பெண்களின் உறுப்பழகைக் குறிக்கும் பெயராக இடுவது நன்றன்று".*

*18-11-68இல் அவருக்கே வேறுசில பெயர்களைக் குறித்து எழுதியுள்ளார். 23-12-68இலும் சில பெயர்களைச் சுட்டியுள்ளார்.*

*அணிகலம், கண்மணி, செந்தாமரை, தையல்நாயகி, நல்ல தனம்(தன்மை), பைங்கிளி, மங்கலம், வளர்மதி என்பவை முதற் கடிதத்துள்ள பெயர்கள்.*

*அங்கயற்கண்ணி, உலகமுழுதுடையாள், ஏழிசைவல்லி, குணமாது, கோமகள், செந்தமிழின்பம், தவக்கொழுந்து, திருமா மணி, திருவளர்செல்வி, தென்றமிழ்ப்பாவை, தேடரிய செல்வம், நிறைமனம், பணிமொழி, பயன்படுசொல்லி, பொன்முடி, மணி மகுடம், மூதறிவாட்டி, மூவாமருந்து, வாடாமல்லிகை,. வாழ்வரசி என்னும் பெயர்களைப் பார்க்க என்பது அடுத்த கடிதத்துள்ள பெயர்கள்.*

*மடந்தவிர்த்த மங்கை என்று எடுத்துக்காட்டினாரே பாவாணர். அப்பெயர் அவர் தம் மகளார்க்கு வைத்த பெயரே. பாவாணர் தம் மக்களுக்கு இட்ட பெயர்கள் எல்லாமும் "பெயர்கள் நீண்டிருக்கும் பே ாது இறுதிச் சொல்லைத்தான் அழைக்க வேண்டும்" என்னும் விதிக்கு உட்பட்டவையே.*

நச்சினார்க்கினிய நம்பி
சிலுவையை வென்ற செல்வராசன்
அருங்கலை வல்லான், அடியார்க்கு நல்லான்
மடந்தவிர்த்த மங்கையர்க்கரசி
மணி மன்றவாணன்

*என்னும் பெயர்களை அறிக.*

## 12. திருச்சித் தமிழ்ப்புலவர் கழகம்

*தமிழ்ப் புலவர் கழகம் என ஓர் அமைப்பைத் திருச்சியில் உருவாக்கப் பாவாணர் விரும்பினார். அவ்விருப்பையும், அமைப்பு முறை நோக்கம் பயனீடு ஆகியவற்றையும் கழக ஆட்சியாளர் வ.சு அவர்களுக்கு விரிவாய் எழுதினார்.*

*பாவாணரொடும் தக்க புலவர்களொடும் கலந்து தமிழறிஞர் கழகம் என ஒரு கழகத்தை வ.சு. அவர்கள் அமைந்திருந்தார்கள். இத்தகு அமைப்புகளெல்லாம் ஒன்றுபட்டுக் கடனாற்றின் வலிவும் பொலிவும் ஆமென்னும் கருத்தும், புலவரெல்லாம் ஒன்றுபட்டு செயலாற்றினாலன்றி விழுமிய பயனெய்தாது என்னும் தெளிவு பாவாணார்க்கிருந்ததாகலின் அவ் வேட்கை வெளிப்பட விரிவாகக் கடிதம் எழுதினார். அக்கடிதம் :*

*பிஷப் ஹீபர் உயர்நிலைப் பள்ளி,*
*புத்தூர், திருச்சி.*
*23-10-41*

*அன்பார்ந்த ஐயா,*

*நலம்: நலமாக.*

*தமிழறிஞர் கழகத் திட்டம் தீர்மானமும் பற்றிய சுவடிகளும் விண்ணப்பத்தாள்களும் கைவயம்.*

*இங்கே, திருச்சித் தமிழ்ப்புலவர் கழகம் என்ற கழகத்தை அமைத்து அதன் கூட்டம் ஒன்றில் வருகிற டிசம்பர் (1941) 20 -ம் 21-ம் சனி ஞாயிறுகளில் இங்கே சென்னை மாகாண 3 -வது தமிழ்ப் புலவர் மாநாடு கூட்டுவதெனத் தீர்மானித்து வேலையும் தொடங்கிவிட்டோம். மாநாட்டுத் தலைமை தாங்குமாறு செட்டி நாட்டு இளவரசரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை.*

*முதல்நாட்காலை தலைவர், திறப்பாளர், கொடியேற்று பவர். வரவேற்புத் தலைவர் ஆகிய நால்வரின் சொற்பொழிவு களும் மாலை, தீர்மானங்களும் தமிழ்ப் புலவர் கழக உட்கழக அமைப்புகளும், மறு நாட்காலை தொல்காப்பிய மாநாட்டில் நடைபெறும்.*

*தொல்காப்பிய மாநாட்டில் காலை மூவேறு புலவர்கள் எழுத்து சொல் பொருள் பற்றிய சொற்பொழிவுகளும் மாலை தலைவரவர் சொற்பொழிவும் நடைபெறும். இதற்குத் தலைவ ராயிருக்கச் சோமசுந்தர பாரதியாரைக் கேட்கப் போகின்றோம். தொல்காப்பிய மாநாட்டைக் குறுந்தொகை கலித்தொகை மாநாடு போல நீங்களே பொறுப்பேற்று நடத்தலாம். முன்ன தாகச் சொற்பொழிவுகளை அச்சிட்டும் கொள்ளலாம். தொல் காப்பியம் தமிழ்ப் பகைவரான பார்ப்பனர் சில முக்கியமான நூற்பாக்களுக்குத் தவறான உரை கூறுவதாலும் தொல்காப்பியக் காலம் கருத்து முதலியவை இவையே என்று நிறுவவேண்டும்.*

*இருநாளும் புலவர்களுக்கெல்லாம் இலவச ஊணும் இடமும் அளிக்கப்படும். அண்மையில் விளம்பரம் மாநாட்ட ழைப்பு வேண்டு கோள் நிகழ்ச்சிக்குறிப்பு முதலியவை அச்சிட்டு அனுப்பப்பெறும். இம்மாதச் செல்வியில் 3 பக்கம் இடம் விட்டு வைக்க.*

*நாம் தனித்தனி ஆங்காங்கு எத்தனை கூட்டம் கூட்டினும் அத்துணை வலியுறுவனவல்ல. புலவரெல்லாரையும் ஒன்று சேர்த்துத் தொகுதியாக நின்று போராடுதலே வலியுடைத்து. சென்னையிலுள்ள எல்லாப் புலவர்க்கும் இதைப் பற்றித் தெரிவித்துப் பற்றுள்ள வரையெல்லாம் நீங்கள் அழைத் துக் கொண்டு வரவேண்டும். இது பொதுத் தொண்டென்றும், புலவரையெல்லாம் ஏற்றத் தாழ்வுணர்ச்சியின்றி உடன்பிறந்தா ரும் ஒருநிலையருமாய்த் தத்தம் பணி செய்யவேண்டியது கடமை என்றும் அவர்க்கு உணர்த்தல்வேண்டும்.*

*மறைமலையடிகளைத் திறப்பாளராக்கி ஐம்பது ரூபா கொடுப்பதற்கு இருந்தோம். அவர் 250 ரூபாவுக்குக் குறைந்து வர முடியாதென்று எழுதிவிட்டார்....... மாநாடு மிக மிக முக்கிய மானது. தமிழ்த் தடைகளையெல்லாம் சல்லி சல்லியாகத் தகர்த்தெறியவேண்டும் என்பது எங்கள் அவா.*

தமிழன் எப்படிக் கெட்டான்?
தமிழர் சரித்திரச் சுருக்கம்
தமிழின் பெருமை
தமிழ் அயன்மொழிக் கலப்பால் தளருமா? வளருமா?
இந்தியப் பொதுமொழியாதற்கு ஏற்றது எது?
இந்தியா ஒரு நாடா?
மனுதருமமும் திருக்குறளும்

திருந்திய வாழ்க்கை
கலைச்சொல்லாக்கப் பாடல்கள் 20

என்ற சிறு சுவடிகள் அச்சாகின்றன.. இவற்றுள் முந்தியது 40 பக்கம். 2 அணா. ஏனையவை தனித்தனி 1 2பக்கம். 1/2 அணா விலை.

எனது An open Appeal to Anegry Recognition and literares Tamil ஆங்கில முறையீடும் வெளியாகும். இதற்குரிய அச்சுச் செலவிற்கு நீங்கள் சிறிதாவது உதவவேண்டும். மொத்தச் செலவு 30 ரூபாயாகும்.

சென்னையில் நாம் ஏற்படுத்திய தமிழறிஞர் கழகத்தைத் தலைமையாக வைத்துக்கொண்டு கோட்டந்தோறும் கூற்றந் தோறும் கிளைகளும் சிறுகிளைகளும் அமைத்துக்கொள்ள வேண்டும் இதை மாநாட்டிலேயே செய்துவிடலாம். தமிழ்நாடு முழுமைக்கும் ஒரே புலவர் அல்லது அறிஞர் கழகம் இருத்தல் வேண்டும். மெள்ள மெள்ள இவ்வறிஞர் கழகமே அரசியலில் தலையிட்டுத் தமிழ்நாட்டுக் கட்சியாகி அரசியலைக் கைப் பற்ற வேண்டும். தமிழறியாதவரையும் தமிழரல்லாத திராவி டரையும்நம்பிக்கொண்டிருப்பது கழிபெருமடமையாகும்.

ஒவ்வொரு புலவரையும் தமிழறிஞர் கழகத்தில் உறுப் பினராயிருக்குமாறு மாநாட்டில் நேரிலேயே கேட்டுப் பதிவு செய்து கொள்ளலாம். பல தொண்டுகட்கும் தனித்தனி உட் கழகங்களும் மாநாட்டிலேயே அமைக்கப்படவேண்டும். வேலை பல்வேறு நிலையாய்ப் பிரிந்தும் பரந்துபட்டும் இருப்பதால் எங்களால் மட்டும் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யமுடியாது. இடமும் ஊணும் ஊர்வலமும் ஏற்படுத்தி, மற்றைய ஏற்பாட் டிற்குத்தான் முழுப்பொறுப்பும் ஏற்றுக்கொள்ள முடியும். ஏனையவெல்லாம் நாமிரு சாராரும் சேர்ந்தே செய்யவேண்டும்.

அச்சிட்ட மாநாட்டு அழைப்பு ஒவ்வொரு புலவர்க்கும் தனித் தனி வரும். சென்னைக்கு 100 அனுப்புவோம். நீங்கள் பகிர்ந்து விடவேண்டும்.

மாநாட்டுக்குமுன் கலைச் சொல்லாக்கம் பற்றி ஒன்றும், தமிழிசைப்பற்றி ஒன்றும் ஆக இரு கூட்டம் இங்கு நடைபெறும். அருணகிரிநாத அடிகள் கட்டாயம் மாநாட்டுக்கு வரவேண்டும். உடன் பதில்.

ஞா. தேவநேயன்

*தமிழ்ப் புலவர் மாநாடு, கடிதத்தில் திட்டமிட்டவாறு இரண்டு நாள்கள் நடைபெறவில்லை. 21-12-41 ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் மட்டுமே நிகழ்ந்தது. திரு. ச.சோ. பாரதியார் தலைமை யிலேயே நிகழ்ந்தது.*

*காலை 8 மணிக்குப் பேரா. கா.சு.பிள்ளை தமிழ்க் கொடியேற்றி உரையாற்றினார். 8 ½ . மணிக்கு நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார். மாநாட்டுத் திறப்புரையாற்றினார்.*

*9 மணிக்குப் பாவாணர் வரவேற்புரை நிகழ்த்தினார்.*

*10 மணிக்குப் பாரதியார் தம் தலைமை யுரையையாற் றினார் . அவ்வளவுடன் காலை நிகழ்ச்சி நிறைந்தது.*

*இடைவேளைக்குப் பின் மாலை 3 மணிக்குத் திரு. மகிழ் நரும் பெருஞ் சொல் விளக்கனார் திரு. சரவண முதலியாரும் உரையாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.*

*பொதுச் செயலாளர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதர் நன்றி கூறினார். கூட்டம் இரவு 8 மணியளவில் முடிவெய்தியது.* [1]

*43 ஆண்டுகளுக்கு முன்னே நிறைவேற்றப்பட்ட தீர்மானங் கள் எவை என்பதும், அவற்றுள் எவை எவை இந்நாள்வரை நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதும், இன்றைய நிலையென்ன என்பதும் அறிந்துகொண்டு சிந்திப்பதற்கு வாய்ப்பாம் என்னும் கருத்தால். அவற்றைக் காண்க:*

*தீர்மானங்களுள் ஒன்றும் பதினைந்தும் முறையே இரங் கலும், அமைப்புக் குழுவினர் பெயருமாம். எஞ்சிய தீர்மானங்கள் பதினான்கும் நம் சிந்தனைக்குரியவை.*

2. தமிழல்லாத பிற பாடங்களைத் தமிழில் கற்பிக்கும் ஆசிரியர்கள் போதிய தமிழ்ப் பயிற்சி யுடையவராதல் வேண்டுமென்று இம் மாநாடு கல்லூரி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

3. தமிழறியாதவர் நிரம்பிய சாத்திரியார் கலைச் சொற்குழுவை உடனே கலைத்துவிட்டுத் தக்கார் பலரை அவ்விடத்தில் அமைக்க வேண்டுமென இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக்கொள்கிறது.

4. புத்தகக் குழுவார் தமிழுக்கும் தமிழ் மாணவருக்கும் ஏற்காத பாடத் திட்டங்களை அமைக்காதவாறு அவர்களுக்கு எடுத்துக்கூறச் செட்டிநாடு ‘இளவரசர் அ. முத்தையாச் செட்டியார், பி. ஏ., எம்.எல்.சி’

1. செந்தமிழ்ச் செல்வி. சிலம்பு 19: 445

அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஒரு கழகத்தை ஏற்படுத்த வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

5. தமிழ்ப் புலவர்களுக்கு ஏற்கனவே யிருந்துவந்த குறைந்த சம்பளத் தையும் இனிவரும் தமிழ்ப் புலவர்கள் பெறதாவாறு குறைத் திருப்பதைக் கண்டித்து, உடனே தமிழ்ப் புலவர்களுக்கு எல்.டி.சம்பளத் திட்டம் வழங்கவேண்டு மென்று சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்வதோடு பி.ஓ.எல். பட்டதாரிகளுக்கு, பி.ஏ. பட்டதாரிகளுக் குரிய உரிமைகளையெல்லாம் தரவேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறது.

6. தமிழ் வித்துவான் தேர்வோடு கூடிய பி.ஏ., பட்டமோ, தமிழில் எம்.ஏ., பட்டமோ பெற்றவரையே அரசில் தமிழ்மொழி பெயர்ப்பாளராக ஏற்படுத்த வேண்டுமென்றும், தமிழ்ப் பொதுமன்றங்களிலும் இருப்புப் பாதைக் கழகந்தோறும் ஒவ்வொரு புலவரை அமர்த்திக் கொள்வது நலமென்றும் இம்மாநாடு கருதுகின்றது.

7. தமிழ்நாட்டின் நடுவிலுள்ள திருச்சி வானொலி நிலையத்தில் பெரும் பதவிகளில் தமிழரே (பர்ப்பனரல்லாத வரே) நியமிக்கப்பட வேண்டுமென, அனைத்திந்திய வானொலித் தலைவரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

8. தமிழர் குலப் பிரிவினை காட்டாது, தம்மைத் தமிழரென ஒரே இனம் என்பதாகக் (Community)கருதவேண்டுமென்றும், அங்ஙனமே குடிமதிப்பிலும் கணக்குக் கொடுக்கவேண்டுமென்றும் இம்மாநாடு விரும்புகிறது.

9. அறியாமை அறவே நீங்கவேண்டுமென்றும், மக்கள் முழு விடுதலையடைய வேண்டுமென்றும் முயற்சி செய்கிற இக்காலத்தில் 100க்கு 90 பேர் எழுத்தறியாத இத்தமிழ்நாட்டில், அரசியலார் கட்டாயக் கல்வியைப் புகுத்துவதற்கு மாறாகச் சிற்றூர்களிலுள்ள நூற்றுக் கணக்கான முன்முறைப் பள்ளிகளை மூடினதைக் கண்டிப்ப துடன் அவற்றைப் புதுப்பிக்கவும் இன்னும் பல பள்ளிகளை ஏற்படுத்தவும் வேண்டுமென இம்மாநாடு வற்புறுத்துகிறது.

10. போர் முடிந்தவுடன் தமிழ்நாட்டைப் பிரித்து அதன் அரசியலைப் பிற மாகாணத்தாரும் நாட்டுப் பொதுஆட்சியாரும்தலையிடாதவாறு அமைக்கவேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

11. கூடிய விரைவில் சென்னைப் பல்கலைக் கழகத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகமாகமாற்ற வேண்டுமென்றும், இப்பொழுதே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைக் தமிழ் நாடு முழுவதற்கும் உரிய தமிழ்ப் பல்கலைக் கழகமாக்க வேண்டுமென்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது.

12. தமிழ் நாடெங்கும் தைத் திங்கள் முதல் 'வாரத்தைத் தமிழ் வாரமாக்க கொண்டாட வேண்டுமென இம் மாநாடு தீர்மானிக்கிறது.

13. கட்டாய இந்தியை எதிர்த்துத் தமிழைக் காக்கச் சிறைசென்ற தொண்டர்களையும் இம் மாநாடு மிகமிகப் பாராட்டி அவர்களுக்கு நன்றி கூறுகிறது.

14. நாட்டு மொழிப் பாடமாக இருக்கின்ற எல்லாப் பட்டப் பரீட்சை களிலும் தமிழ் நாட்டளவில் தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்றும் பிறமொழிகளை விரும்புவோர் தமிழுடன் இவற்றையும் கற்குமாறு பாடத்திட்டம் அமைக்க வேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

15. தமிழர் இனி எப்பொழுதும் கடவுள் வணக்கம் முதலான எல்லாத் துறைகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டுமென்றும், பிற மொழிகளில் எந்தச் சடங்கும் செய்யலாகா தென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது. [2]

*விடுதலை பெறுதற்கு ஆறு ஆண்டுகளின் முன்னே செய்த தீர்மானங்கள் இவை. விடுதலை பெற்று முப்பத்தெட்டு ஆண்டு கள் ஆகிய பின்னரும்கூட இத் தீர்மானங்கள் 'தீர்மானங்கள்' அளவிலே இருக்கத்தானே காணமுடிகின்றது!*

*15-4-68 கடிதம் ஒன்றால் திருச்சியில் தமிழ்ப்புலவர் மாநாடொன்று நிகழ விருந்தது அறியவருகின்றது.*

*"ஆடவை (சூன்) நடுவில் திருச்சியில் நடைபெறவிருக்கும் தமிழ்ப்புலவர் மாநாடு, 'தமிழர் பழங்குடி மக்களா? வந்தேறி களா?' என்னும் வினாவுக்கு அறுதியும் இறுதியும் உறுதியுமாக முடிவு செய்யப் பெறுமாதலால் மிக முதன்மையானதாக இருக்கும்" என்பது அது.* [3]

*"நாம் தனித்தனி ஆங்காங்கு எத்தனை கூட்டம் கூட்டினும் அத்துணை வலியுறுவனவல்ல. புலவரெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு தொகுதியாக நின்று போராடுதலே வலியுடைத்து" என்றும், "புலவரையெல்லாம் ஏற்றத்தாழ்வுணர்ச்சியின்றி உடன் பிறந் தாரும் ஒரு நிலையருமாய்த் தத்தம் பணிசெய்ய வேண்டியது கடமை என்றும் பாவாணர் குறிப்பிடுவனவற்றைத் தமிழ் உணர் வுடையார் இந்நாளிலேனும் எண்ணிப்பார்த்துக் கடைப்பிடித்தல் கழிபெருநன்மையாம்.*

---

2. சிலம்பு 19: 492.

3. மி.மு.சி. கடிதம்.

# 13. வாசகர் பணி

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாவாணர்க்கு வாசகர் (Reader)பணியமர்த்தம் வாய்த்தது. ஆங்கு அமர்ந்ததும், தேராதூன் பயிற்சிக்குச் சென்றதும், திரும்பியதும், பணி நிலையும், எய்ப்பில் வைப்பும் பிறவும் சில கடிதங்களால் விளக்க மாகின்றன.*

*கல்லூரிப் புறவீடு,*
*குமாரசாமிப்பட்டி, சேலம் 4-7-56*

*"எனக்கு இறையருளால் அண்ணாமலைப் ப.க. கழகத்தில் திராவிட மொழியாராய்ச்சித்துறை வாசகர் (Reader) பதவி கிடைத்துள்ளது. அடுத்த வாரம் அங்குச் செல்கிறேன். சம்பளத் திட்டம் 250-25-500 தான். அடுத்த ஆண்டில் நடுவண் அரசிய லாரும் 250 உருபா கொடுப்பதாகச் சொல்லப்படுகின்றது*

*"பேராசிரியராக அண்ணாமலையில் ஒருவரையும் அமர்த்த வில்லை. நான்தான் வேலையைத் தொடங்கி நடத்திவருகிறேன்"[1]*

*7, கொற்றவன்குடி,*
*விரிவுரையாளர் குடியிருப்பு,*
*அண்ணாமலைநகர், 15-9-56*

*"திராவிட மொழியாராய்ச்சித் துறைக்குரிய ஐவருள் வாசகராக (Reader) நான்தான் அமர்த்தப்பட்டுள்ளேன். பேராசிரியர், மலையாள கன்னட தெலுங்கு விரிவுரையாளர் ஆகிய நால் வரும் அடுத்த ஆண்டில்தான் அமர்த்தப்படுவார்கள். அகராதி வேலையும் அதன் பின்புதான் தொடங்கும். இன்று அதற்கு முற்படையான வேலைசெய்து வருகிறேன். அதாவது செந்தமிழ்ச் சொற்பிறப்பு நெறிமுறைகளைத் தொகுத்தல். அது 200 பக்கத் திற்குக் குறையாது. ஒரு தனி நூலாய் வரும்.*

*"என் அலுவல் தொடர்பாக ஒரு திறவோர்குழு சட்டர்சி தலைமையில் அமைக்கப்பெற்றுள்ளது. சென்னையிலாவது இங்காவது அடிக்கடி கூடும்" [2]*

1. வ.சு. 2. வசு

"டேராடூனில் மே4 ஆம்நாள் அல்லது 6 ஆம் நாள் தொடங்கி 6வது வாரம் பூனா டெக்கான் மொழிநூற் பள்ளியின் (Deccan School of Linguistics) சார்பாக ஓர் அமெரிக்க மொழி நூற்பள்ளிக்கு (Summer School of Linguistics) திரு. இராதா கிருட்டிணனும் யானும் அனுப்பப்பெறவேண்டும் என்று எம் மொழிநூல் திறவோர் குழு பரிந்துரைத்திருப்பதால் அண்ணா மலை ப.க.க. சார்பில் யாம் இருவேமும் மே முதல்வாரம் ஆங்குச் செல்லவிருக்கிறோம். [3]

9, D.H.V. College Hostel,
Dehradun, 4-5-57

"இம்மாதம் முதல்நாட் காலை 11 மணிபோல் புதுடில்லி வந்து சேர்ந்தோம். புதுடில்லியிலிருந்து டேராடூன் வண்டி இரவு 10.10 மணிக்குத் தான் புறப்பட்டது. அதிலேறி இங்கு நேற்றுக் காலை 8 மணிக்கு வந்து சேர்ந்தோம்.

"சென்னையில் இருந்து புதுடில்லி வரையும் மாரிநாள் வீட்டிற்குள் இருப்பது போல் வசதியாக இருந்தது.

"இங்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. செலவுதான் மிகுதி. அதோடு சமையல் முறையும் மிக வேறுபட்டுள்ளது. ஒரு பஞ்சாபியின் உண்டிச் சாலையில் உண்கிறேன்.

"எம் பள்ளி இன்று பெயரளவில் தொடங்கிற்று. வருகிற திங்கள் கிழமையில் இருந்துதான் (6-5-57) வகுப்புகள் ஒழுங்காய் நடக்கும். [4]

"26 ஆம் நாள் புதுடில்லியில் இருந்து மாலை 5 மணிக்கு இன்னியல் (Deluxe)வண்டியேறி அங்குச் சென்னை நடுவண் நிலையம் 28 ஆம் ஆட்சை (தேதி) காலை 10 மணிக்கு வந்து சேர்வேன். இங்கு வந்ததினால் ஓரளவு பயனுண்டு. [5]

"நம் கழக 36 ஆம் ஆண்டுவிழா மலர்க்கு எழுதித்தந்த அமெரிக்க மொழிநூல் என்னுங் கட்டுரையை வெளியிட வேண்டாம். அதனால் எனக்கு இன்னல் விளையும் என்று தெரிகின்றது. [6]

---

3. 13–4–57 (வ.சு)
4. வ.சு.
5. 13–4–57 (வ.சு)
6. 1–10–57 (வ.சு)

*"நான் இம்மாதம் 27,28,29, ஆகிய நாட்களில் தில்லியில் நடக்கும் அனைத்திந்திய கீழைக்கலை மாநாட்டிற்குச் சென்னை யில் 24 ஆம் நாள் தடிவழி விரைவான்* (Grand Trunk Express) *காலை 10 மணிக்கு ஏறிச் செல்வேன்."*[7]

*"அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உள்ளவரை ஆரியத்திற்கு மாறான என் ஆராய்ச்சி நூல்களை வெளியிட முடியாது. அதினின்று விலகிய பின்னரே முடியும்."* [8]

*"உத்தரப் பிரதேச* (U.P) *முசாபர் நகர்* (Mujaffir nagar) *நின்று உனியல் என்னும் சமற்கிருதப் பேராசிரியர் மகளார் பிராமணர்,கர்கிஉனியல்* (Gargi uniyal) *என்னும் பெயரினர். 20 ஆண்டகவையர்5½அடிக்குட்பட்டவர்.காதில் பொன்வளை யத்தர். சமற்கிருத எம்.ஏ., பட்டத்தினர். இங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சமற்கிருத ஆராய்ச்சி மாணவராக வரு கிறார். அவர் தந்தையாரும் தமையனாரும் எனக்குப் பழக்கமான தினால் அவரைச் சென்னையுல் இருந்து அழைத்து வருமாறு முன்னரே சொல்லியிருக்கின்றனர். ஆதலால் ஆளனுப்பி இயலு மாயின் தாங்களே நேரில் சென்று* Grand Trunk *(பெருந்தடி வழி)* Janatha *(மக்கள்) இரு வண்டியிலும் பார்த்து, வந்திருப்பின் அழைத்துச் சென்று எனக்குத் தொலைவரியில் தெரிவிக்க. இதை எங்ஙனமும் தப்பாது செய்க"*[9]

*"நான் அண்ணாமலை நகரை விட்டு நீங்கி இங்குக் குடி புகுந்து விட்டேன்" வேலூர்த் தானியங்கியகம், காட்டுப்பாடிச் சாலை, வேலூர் வடார்க்காடு மாவட்டம்* [10]

*"அண்ணாமலைப் பல்கலைக் கழக எய்ப்பில் வைப்புப் பணம் பெறும் நாள் நெருங்கிவர இருக்கின்றது. நான் தேராதூன் மொழியியற் பயிற்சிப் பள்ளிக்கு வாங்கின 500 உருபாவிற்குக் கணக்குக் கொடுத்தால் மீதப் பணத்தைக் கழித்துக்கொண்டு எச்சத் தொகையை எனக்கனுப்ப ஏற்பாடு செய்வதாக நேற்றுத் திரு. முருகரத்தினத் திடம் ஒரு முடங்கல் கொடுத்தனுப்பினார் பேரா. கோவிந்தராசனார். நான் அதற்கிசைந்து வழிச் செலவுப் படிப்படிவம்* (T.A. Bill)*வாங்கியனுப்புமாறு கேட்டிருக்கிறேன்"*.[11]

---

7. 10–12–57 (வ.சு)
8. 9–2–59 (வ.சு)
9. 20–7–57 (வ.சு)
10. 30–9–61 (வ.சு)
11. 13–12–66 (மி.மு.சி)

*அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர், பேராசிரியர் ஆகிய நிலைகளுக்கும் சில முறை முயன்றுள்ளார் பாவாணர். வாசகர் வாய்ப்புக் கிட்டியும் அவர்தம் தனித்தமிழ்க் கடைப்பிடியும், குமரிக் கண்டக் கொள்கையும், தமிழ் ஆரியத் திற்கு மூலமும் அடிமணையுமாம் என்னும் தீர்வும் அவர் ஆத்ம ஆர்வக் கோளான அகர முதலிப் பணியைச் செய்ய வியலா வண்ணம் தகைந்த. அம்மட்டோ 'செந்தமிழ் நெறி முறைகள்' என அவர் தொகுத்த தொகுப்பும் தமிழ் கூறு நல்லுலக வள மாகும் வாய்ப்பும் இன்றி ஒழிந்தது. பணி செய்யாமைக் குற்றம் சாற்றப் பெற்றமையும், அதன் மறுப்பும் தென்மொழிக் கட்டுரை கைளாக வெளிப்பட்டமை ஆர்வலர் அறிந்தனவே.*

## 14. உலகத் தமிழ்க் கழகம்

*தனித்தமிழ் இயக்கம் பல்லவபுரம் தவத்திரு மறைமலை யடிகளார் வளமனைப் பூங்காவில் 1916 ஆம் ஆண்டு அரும்பியது. பின்னே 1960இல் தனித்தமிழ் கழகமாக உருக்கொண்டது. உருக் கொண்ட திருச்சியிலேயே, 2968 இல் உலகத் தமிழ்க் கழகம் கிளர்ந்தது. அதன் குறிக்கோட் பண்புகளாக எண்மை (எளிமை,* (Simpicity)*ன தன்னலமின்மை(*(Selflessness), *உண்மை*(Sincerity), *தொண்டு* (Service) *ஈகம்*(Sacrifice) *என்பன அமைந்தன.*

*கழகத் தலைவர் பாவாணர்; பொதுச் செயலாளர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்; பொருளாளர் செந்தமிழ்க் கிழார்.*

*முதலாட்டை மாநாடு பறப்புக் குடியில் நிகழ்ந்தது; அதன் பொறுப்பாளர் பேராசிரியர் தமிழ்க் குடிமகனார்; இரண்டாம் ஆட்டை விழா மதுரையில் நிகழ்ந்தது (1971).*

*உ.த.க. பற்றிய சில அரிய குறிப்புகள்:*

“*தென்னிந்தியா முழுதும் உ.த.க. கிளைகளைத் தோற்று வித்தல்*” *வேண்டும். (8.7.78)*

“*மொழி வகையிலன்றி வேறொன்றிலும் நான் தலை யிடேன்*” *(8-7-78)*

“*யார் யார் எவ்வெத் தனிக் கருத்துக் கொண்டிருந்தாலும் தமிழைப் பொறுத்த மட்டில் நாம் அனைவரையும் தழுவிக் கொண்டே செல்வோம்*” *(1-5-79)*

“*உ.த.க. விற்கு மதவியற் கொள்கையில்லை. கடவுளை நம்புவாரும் நம்பாதவரும் ஒருவரை ஒருவர் குறை கூறாது அதில் இருக்கலாம்*”.

“*தென்மொழிக் கொள்கையாகிய தமிழ் நாட்டுப் பிரி வினை உ.த.க.கெள்கையன்று*”. *(3-6-80)*

*(இவை பேரா.கு. பூங்காவனம் அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் உள்ள சில குறிப்புகள்)*

"அரசியல் தலைவர் கட்சித் தலைவர் தொடர்பிருத்தல் வேண்டா" (கஉ மடங்கள் 2000)

"ஆட்சியைக் கைப்பற்றாமல் நாம் தனித் தமிழை வளர்க் கவோ வடமொழியினின்று தமிழை மீட்கவோ சின்ன பின்ன மாகச் சிதறிக் கிடக்கும் தமிழினத்தை மீண்டும் ஒன்று சேர்த்து முன்னேற்றவோ முடியவே முடியாது" (க கூ நளி 2000)

"உ.த.க. வின் ஒரு பெருநோக்கம் உறுப்பினர் தொகையைப் பெருக்கி ஒழுங்காகக் கூட்டங்களை நடத்துவதென்று: தமிழை வடமொழியினின்று மீட்டுத் தூய்மையாக வளர்ப்பதே". (அ. மீனம் 2002)

"இருநாள் விழாவில் முதல் நாள் உ.த.க. ஆட்டை விழா, மறுநாள் தமிழ் விடுதலை மாநாடு. மொழியியல் மாநாடு என்ற உணர்ச்சியும் பொருளுமற்ற பெயர் வேண்டேன்" (5-7-72)

"உ.த.க. மக்களாட்சி முறைக்கு இடந்தரும் அமைப்பன்று என்பதை அடிநாளிலிருந்து சொல்லி வருகின்றேன்"

உ.த.க. இன்னும் உண்மையான நிலையையடையவில்லை. அது, ஆட்சிக்குழுக் கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்திக் கொண்டு தமிழ் நாட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடப்பின் ஒரு போதும் உ.த.க. ஆகாது.

"முதற்கண் செ.சொ. பி. அ. முதலி மட்டுமின்றிச் சில வடமொழி ஆராய்ச்சி நூல்களும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரவேண்டும். அதன்பின் தமிழ் திரவிடத் தாய் என்று திரவிட நாடுகளிற் சொற்பொலிவு வாயிலாக நாட்டவோ காட்டவோ படல் வேண்டும்.. இங்ஙனமே தமிழ் ஆரியத்தின் மூலமென்பதும் இந்திய நாட்டிலும் மேலை நாடுகளிலும் விளக்கப் பெறல் வேண்டும். இதற்காகவே என் மலையாள கன்னட தெலுங்கு இந்தி அறிவை வளர்த்து வருகிறேன். ஆங்கிலப் பேச்சாற்றலும் எழுத்தாற்றலுமின்றித் தமிழின் பெருமையை மேனாட்டார்க்கு அறிவிக்க வியலாது. பரோவும் எமனோவும் போன்ற மேலை மொழிநூலறிஞரோடு பேச்சிலும் எழுத்திலும் சொற்போர் நிகழ்த்த வேண்டியிருக்கும்.. பல் துறையிலும் தேர்ச்சிபெற்ற ஒரு கீழ்க்கலை நாகரிக விடைமுகமும் (Cultural Delegates) மேனாடும் கீழ்நாடும் செல்ல வேண்டியிருக்கும். மேலையறிஞர்தமிழின் உண்மை நிலையை ஒப்புக்கொள்ளும் நாள்தான் இந்தியப் பிராமணரும் ஒப்புக்கொள்வர். அன்று தான் உ.த.க. உண்மையான உ.த.க. ஆகும் ."

“ஆரியம் உலகெங்கும் எத்துணை ஆழ வேரூன்றியிருக் கின்றதென்பதும் அதைக் கல்லி எடுப்பது எத்துணை மலை பெயர்ப்பு முயற்சி என்பதும் என் பொத்தக நிலையத்தைப் பார்த்தால்தான் தெரியவரும். கடந்த அரை நூற்றாண்டாக இப்பணிக்கு என்னைத் தகுதிப்படுத்தி வருகின்றேன். ஆதலால் உ.த.க. என் துணையின்றி இயங்காது.”

“மாவட்ட அமைப்பாளர் பதவி, கல்வி அதிகாரி பதவியும், பொதுச் செயலாளர் பதவி, அவருடைய கணக்கர் பதவியும் போன்றன இவற்றுள் முன்னதே உயர்ந்தது.” (31-5-72)

-இவை பேரா. தமிழ்க் குடிமகனார்க்கு எழுதப்பெற்ற கடிதங்களில் உள்ள குறிப்புகள்.

24-7-80இல், உலகத் தமிழ்க் கழக உறுப்பினர்க்கு அறிவிப்பு ஒன்று வழங்கியுள்ளார் பாவாணர். அது வருமாறு:

அருந்தமிழ்ன்பர்காள்,

ஒவ்வொர் இயக்க வளர்ச்சிக்கும் அதற்குரிய ஒரு சிறப் பிதழ் இன்றியமையாதது. அதனாலேயே பெரியார் “குடியரசு” ‘விடுதலை’ என்னும் இதழ்களுடன் தம் இயக்கத்தை நடத்தி வந்தார்.

உ.த.க. இதழாயிருந்த தென்மொழி சில கரணியங்களால் நின்றுவிட்டது. இன்று அதற்குப் பகரமாக வெளிவருவது மீட்போலை ஒன்றே. தனித் தமிழைக் குறிக்கோளாகக் கொண் டுள்ள வேறு இரண்டோரிதழ்கள் இருப்பினும் அவற்றிற்கும் மீட்போலையையே உறுப்பினர் அனைவரும் முதன்மையாக வாங்குதல் வேண்டும். ஒவ்வோர் உ.த.க கிளையும் ஒருபடி வாங்குதல் இன்றியமையாதது. கிளையில்லா விடத்தில் தனித் தமிழ்ப் பற்றாளர் தனித்தோ இணைந்தோ ஒவ்வொரு படி வாங்கலாம்.

கிளைகளும் தனி உறுப்பினரும் இன்றிருந்து படியொன் றிற்கு ஆண்டிற்கு 5 (ஐந்து) உரூபா மேனி முன்பணமாக அனுப்பி விடுக. செல்வராயிருப்பவர் தமித்தும் வாங்கி இதழாசிரியரை ஊக்கலாம். படிகள் பெருகப் பெருக இழப்புக் குன்றும். இதழும் வளர்ச்சியடையும். தாள் விலை மிக ஏறியுள்ள இக்காலத்தில் 5 உரூபா உயர் தொகையன்று.

தமிழர் சிறுபான்மையராகவும் பெரும்பாலும் எளிய ராகவும் வாயில்லாதவராகவும் ஆரியச் சார்புமிக்க ஒரு திராவிட

*நாட்டில் (கன்னட நாட்டில்) வையாபுரிகள் நடுவில் இருந்து கொண்டு ஓர் அரசினர் மகளிர் கல்லூரியில் தன்னந்தனியான தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் ஒருவர் தம் நெருக்க மான வேலைகட்கிடையே போதிய பணவுதவியுமின்றி ஒரு தனித் தமிழ் இதழை நடத்தி வருவது அரிதும் பெரிதும் பாராட்டத் தக்கதுமாகும். ஆதலால், அவர் சிறிதும் தளர்ச்சியுறாவண்ணம் அவரை மேன்மேலும் ஊக்கிவருவது உண்மைத் தமிழர் அனைவர் தலைமேலும் விழுந்த தலையாய கடமையாகும். இனிமேல் இடை இடை என் கட்டுரைகளும் மீட்போலையில் வெளிவரும். அடுத்த ஆண்டுமுதல் இதழ்தோறும் வெளிவரும் . இதழ் மிக விரிவடைந்து சுவடி வடிவும் பெறும்.*

*இங்ஙனம்,*
**ஞா. தேவநேயன்.**

*தென்மொழி என்னும் தனித்தமிழ் மாதிகையே முதற்கண் உ.த.க. செய்திகளைத் தாங்கி வந்தது.. பின்னே தென்மொழி (1970) உ.த.க. இதழாக வெளிப்பட்டு இடையறவு படவே, மீட்போலை தோற்றமுற்றது (1979) என்பன எண்ணத்தக்கன.*

*கொள்கை இதழ்கள் குருதியோட்டமின்றி நின்று படுவானேன்; மூச்சுத் திணறிச் சாய்ந்துபடுவானேன்! கொள்கை யோட்ட முழக்கம் வாயளவில் வாளா ஒழிந்துபடுவதுதான் கரணியமா? முரண் வழியிலே சிந்தித்தல் முட்டுக்கட்டையை ஒழிப்பது இல்லை! அரண்வழியிலே சிந்தித்தலே ஆக்கத்திற்கு வழிமுறை!*

*உ.த.க. முடுக்கமின்மையோ, முடங்கிக்கிடப்போ, முளைப் புத்திறமோ உ.த.க.வைப் பொறுத்ததேயன்றி, அப்பாற்பட்ட வரைப் பொறுத்ததில்லையாம்!*

*பாவாணர்க்காக இல்லையெனினும் தனித்தமிழாக்கத் திற்காக வேனும் உ.த.க.வின் உயிரோட்டத் தொண்டு வேண்டும்! உணர்வாளர் ஒன்றுபட்டுழைப்பரா?*

# 15. அகரமுதலி ஆக்கமும் திருத்தமும் அமர்த்தமும்

*அகரமுதலிப் பணிக்காகவே தம்மை இறைவன் படைத்த தாகச் சற்றும் ஐயுறவின்றிச் சாற்றியவர் பாவாணர். அவர்தம் உரையாடலிலும் கடிதங்களிலும் நிரம்பக் குறிப்புகள் அக்கருத் துப்பட உள்ளன. அகரமுதலியின் அமைப்பு சீர்மை, அருமை, பயனீடு, அதன் பணியானர் தகவு, சொற் பிறப் பகர முதலியின் அருமை பெருமை, பிறமொழி அகர முதலிகளின் செய்திகள் ஆகியனவெல்லாம் தனிநூலாம் அளவுக்கு விரிந்துள்ளன. அவற்றைத் தனி நூலாக்கல் தகவேனும் கடிதத் தொகுப்புகளுள் அவற்றுக்கு இடமில்லா தொழித்தல் சால்பன்று என்பதால் சில செய்திகளை அறியலாம்:*

*"சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் இல்லாத சொற்களை இன்று தொகுத்துக்கொண்டிருக்கிறேன்."*[1]

*"சென்னை அகரமுதலியைத் திருத்தாது தமிழைக் காக்கவோ வளர்க்கவோ முடியாது. அதை நான் ஒருவன்தான் திருத்த முடியும் . நான் இளைஞனல்லேன். கண்ணொளி வேறு குன்றி வருகின்றது. மிகப் பிந்திவிட்டால் என் ஆராய்ச்சியையும் அறிவையும் பயன்படுத்த முடியாது. தமிழனுக்குத் தமிழே உயிர்நாடியானது. மட்ட அரிசி விலையில் அரைக்கால் உருபா குறைந்ததினால் தமிழனுக்குப் பெருநன்மை ஏற்பட்டுவிடாது. தமிழுக்கு அடிப்படையான வேலை செய்யாவிட்டால் தமிழக அரசுத் தலைமைச் செயலகம் என்னும் பலகையை எந்தக் கட்சியும் ஒரு நிமையத்தில் எடுத்துவிடலாம்."* [2]

*"என் நூல்களுள் தலைசிறந்ததும் வேறெவரும் செய்ய முடியாததும் தமிழன் தலைமையை நிலைநாட்டுவதும் அவ்வகர முதலி ஒன்றே. என ஆராய்ச்சியின் முழு விளைவும் அஃதே."* [3]

*"மாதம் 1500 உருபா தந்தால் மூவாண்டிற்குள் சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலிச் சீர்திருத்தம் முடிந்துவிடும். என்னைத்*

1. 9–2–59 (வ.சு) 2. 20–5–67 (மி.மு.சி)

3. 18–9–67 (வி.அ.க.)

*தவிர வேறெவரும் செய்யவியலாது. என்காலத்திற்குப் பின் எவரும் வருந்திப் பயனில்லை. அத்திருத்தமோ தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாதது.*"[4]

"*சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகரமுதலித் திருத்தத்தின் இன்றியமையாமை, என் மூப்பு, என் கண்ணொளி குன்றி வருகை. வேறொவரும் இத்தொண்டைச் செய்யமுடியாமை ஆகியவற்றை அவர்கள் (ஆட்சியாளர்) கடுகளவும் கருதிப் பார்ப்பதாகத் தெரியவில்லை. தமிழனுக்கு அரிசி போன்று தமிழும் இன்றியமையாததே*"[5]

"*தமிழை வடமொழிப் பிணிப்பினின்று மீட்பதே என் வாழ்க்கைக் குறிக்கோள் ஆதலாலும், எனக்கு மூப்பு மிகுந்து வருவதாலும், செ.சொ. அகர முதலித் தொகுப்பே என் போர் வெற்றிப் படைக்கலமாதலாலும் இதுவரை ஒரு பகுதியும் வெளி வரவில்லையென்று சட்டசவையிற் பேசப்படுவதாலும் முதன் மடல முதற்பகுதி அச்சேறும் நிலைமையில் இருப்பதாலும், பேராமதிவாணனார் தவிர வேறொரு துணைவரும் இன்மை யாலும் இன்று வீட்டை விட்டு வெளியேற முடியாவண்ணம் வேலை மிகுந்துள்ளது*" [6]

"*இறைவன் என்னையே இறுதித் தொண்டனாக அமர்த்தி யிருப்பதால் இனிமேல் அகர முதலிப் பணியிலும் தமிழ்ப் போராட்டத்திலுமே ஆழ்ந்து ஈடுபடவொண்ணும்*"[7]

"*செ.சொ. அகலமுதலி முதற்பகுதியேனும் மாநாட்டிற்குள் வெளிவரல்வேண்டும். ஆங்கில நூலும் வெளிவரின் தமிழுக்கும் தமிழினத்திற்கும் செ.சொ.அ. அலுவலகத்திற்கும் எனக்கும் ஏற்படும் ஆக்கத்தையும் நன்மையையும் அளவிடமுடியாது:*

1. திருக்கோயிலில் வடமொழி வழிபாடும், பிராமணர் பிறப்புயர்வும் ஒழிந்துபோம்.
2. தமிழ் தழைத்தோங்கும்; தமிழினம் ஒன்றுபட்டுத் தலையெடுக்கும்.
3. உலகப் பல்கலைக் கழகங்கள் எல்லாவற்றிலும் தமிழ் கற்பிக்கப்படும்: தமிழ்ப் பேராசிரியர் பதவியும் பதவியும் தோன்றும்.
4. தமிழ் நாட்டு வரலாறும் உலக வரலாறும் மாற்றி வரையப்படும்.

---

**4. 27–12–67 (வி.அ.க.)** **5. 5–4–67 (வி.அ.க.)**

**6. 21–9–78 (கு.பூ)** **7. 5–7–79 (கு.பூ)**

5. தமிழ் முதுமொழியும் ஆங்கிலம் புதுமொழியுமாக இருமொழியே உலகப் பொதுமொழியாக நிலைத்து நிற்கும்.

6. எம் அலுவலகம் வேண்டியவாங்கு விரிவுறும்.

7. தமிழன் எங்குச் செல்லினும் தலைமையாய்ப் போற்றப் படுவான்.[8]

*"அரசு எம் அலுவலகத்திற்கு 7 புதுப்பதவிகளைத் தோற்றுவித்துள்ளது. ஆயின் கணக்கப் பிரிவிற்கேயன்றிச் சொற்றொகுப்புப் பிரிவிற்குப் பெரும்பயன் இல்லை. கண்காணிப்பாளர் தமிழ்த் தட்டச்சாளர் இரு கடைநிலை யூழியர் ஆகிய நால்வரும் கணக்கப் பிரிவிற்குரியர்.*

*பேரா. சதாசிவம் கல்வெட்டுச் சொற்றொகுப்பாளராகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். ஆயின் அரசு இன்னும் இசைவு தரவில்லை. மருத்தவச் சொற்றொகுப்பாளர் பதவிக்குத் தக்கார் ஒருவரும் வரவில்லை. மெய்ப்புத் திருத்தாளர் பதவிக்குப் பெருஞ்சித்திரனார் மகன் பூங்குன்றனைத் தெரிந்தெடுத்துள்ளோம். அவனுக்கும் அரசு இசைவு தரவேண்டும்.*

*பதிப்பாண்மை எழுத்துறவாளராகப்* (Editor & Correspondent) *பணி செய்யத் தகுதிமிக்கவர் தலைமகன்* (Capt) *அசரியாவே. தமிழ்ச் சொற்றொகுப்புப் பணிக்குத் தக்கவர் புலவர் இளங்குமரனார். அவர் துணைப் பேராசிரியர் சம்பளம் வேண்டுகிறார். முன்னவரை மூப்புப் பற்றியும் பின்னவரைச் சம்பளத் திட்டம் பற்றியும் அரசு ஏற்கவில்லை. இவ்விருவரும் அகர முதலிப்பணிக்கு இன்றியமையாதவர்.*

*"அகரமுதலியின் முதற்பகுதி அச்சிற்கு அணியமாயுள்ளது. அது வெளிவருமுன் அடுத்தபகுதி அணியமாகும். இங்ஙனம் இடையீடின்றி எல்லாப் பகுதிகளும் தொடரும்.. ஆயின் அச்சீட்டுச் செலவுக் கணக்கை அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. பணத்துறை அலுவலகத் தலைவர் 'விடுமுறையிலுள்ளாரென்றும் சொல்லப்படுகின்றது. அமைச்சர் செயலாளர் பணத்துறை அதிகாரி ஆகிய மூவருள் ஒருவரேனும் தமிழ்ப் பற்றுள்ளவராயில்லை. தமிழ் வடமொழிக்கு மூலமென்னும் கூற்று. பிராமணர் செவிக்குப் பழுக்கக் காய்ச்சிய இரும்பாவுள்ளது"* [9]

---

8. 9–10–79 (கு.பூ)

9. 14–1–80 (கு.பூ) பணியாளர் அமர்த்தம்பற்றிய செய்தி 29–7–80, 11–9–80 கு.பூ. கடிதங்களிலும் பிறர் கடிதங்களிலும் உண்டு.

*“திரு.வி.அசரியா 30-8-80 அன்று பதிப்பாண்மை எழுத்துற வாளராக அமர்த்தப்பட்டார். இது நல்லதுதான். ஆயின் போதாது. புலவர் இளங்குமரனாரும் பேரா.சதாசிவமும், பேரா. வேங்கடேசனும் அமர்த்தப்படவேண்டும்.*

*“அகர முதலியின் முதற்பகுதி சென்ற ஆண்டே அச்சிற்கு அணியமாயிற்று. ஆயின், வெளியீட்டுச் செலவுக் கணக்கு விடுத்து ஈராண்டாகியும் இன்னும் அரசு அதை ஏற்றுக் கொள்ள வில்லை அரசினால் அமர்த்தப்பட்ட அச்சகமும் ஆவலாகக் காத்துக்கொண்டிருக்கிறது.*

*“மதுரை மாநாட்டிற்கு 3 கோடிக்குமேல் ஒதுக்கியுள்ள அரசு தமிழுக்கு இன்றிமையாத உலகச் சிறப்புள்ள அகர முதலிக்குச் சில இலக்கமேனும் உடனடியாய் ஒதுக்கவில்லை. மாநாட்டிற்குச் செலவிடும் 3 1/2 கோடியும் விளம்பரச் சிறப்பா கவே முடியும். குமரிமலை முழுக்குத் திரைப்படத்திற்கே 4 இலக்கம் ஒதுக்கப் பட்டுள்ளது. அதை நிலையாக மெய்ப்பிக்கும் அகரமுதலியைப் பற்றிச் சற்றுங் கவனிப்பதில்லை. இவ்வகர முதலியின்றித் தமிழும் வளராது: தமிழனும் முன்னேறான். இவ்வகர முதலியை நானே தொகுக்கவியலும்: எனக்குப் பின் எவருமில்லை. ஆதலால் ஐயாண்டிற்குள் முடிக்கக் கருது கின்றேன். எனக்கு மூப்பு மிகுந்து வருகின்றது. ஆதலால் 1986 - இற்குள் முடித்துவிடல் வேண்டும்.*

1. இளங்குமரனார், சதாசிவம், வேங்கடேசன் ஆகிய மூவர் அமர்த்தம்.
2. எனக்கு ஓர் இயங்கியும் தொலைபேசியும்
3. என் சம்பள உயர்வு 2000 -100-3000 என்னும் திட்டம்.[10]

*“செ.சொ. அகரமுதலித் தொகுப்புக் காலம் நாலாண் டென்று அரசு குறித்திருப்பினும் பன்னிருமடலமும் வெளிவர குறைந்த பக்கம் பன்னீராண்டு செல்லும்.”*[11]

*“கேரளப் பல்கலைக் கழகமும் அரசும் இணைந்து தொகுத்து வரும் மலையாளம் -மலையாளம் - ஆங்கில அகர முதலி வேலை 1953-இல் தொடங்கிற்று. தொகுப்புப் பணியாளர் மட்டும் 36 பேர். முதன் மடலம் அகரம் மட்டும் 1965- இலும், 2-ஆம் மடலம் (ககரம்) அச்சிலுள்ளது. இதினின்று அகர முதலி வேலையி யல்பை அறிந்து கொள்க”*[12]

---

10. 23.9.80 (ச.க.)
11. 26–9–75 (இ.கு.)
12. 26–9–75 (இ.கு.)

*“நம் அகரமுதலி பொதுவகையானதன்று; சொற்பிறப் பியற் கூற்றைச் சிறப்பாகக் கொண்டது”*[13]

*இப்பணியை (அகரமுதலிப் பணியை) மேற்கொள்ளின்;*

(1) தலைசிறந்த தமிழ்த்தொண்டாற்ற நல்வாய்ப்பு

(உ) சொல்லாராய்ச்சியில் முழு நிறைவான தேர்ச்சி

(5) உலகறிபெயர் (ஏற்படும்) [14]

*(கழகத் தமிழ்க்) கையகராதியில் புதுச்சொற்கள் சேர்க்கப் படுவதுடன் பழஞ்சொற்பொருள் திருத்தப்படவும் வேண்டும்.*

*(எ-டு) அகணி - பனைமட்டையின் உள்நார் என்றுள்ளது. அகணி புறநாரே அன்றி அகநாரன்று. இங்ஙனம் பலவுள.*[15]

*பாவாணர் படைத்துள்ள நூல்களிலுள்ள சொல்லாய்வு - பொருளாய்வு - வேர்-ஒப்பீடு என்பவற்றையெல்லாம் அடைவு செய்து அகரப்படுத்தின அஃதொன்றே அரும்பெரும் புதைய லாய் ஆய்வாளர்க்கு உதவும். அது நிகழ்தற்குத் தலைப்படுவார் உணர்வு பாராட்டுக்குரியது.*

---

13. 26–9–75 (இ.கு.)

14. 3–7–74 (இ.கு.)

15. 13–7–46 (இ.கு.)

## 16. தொல்காப்பியச் சீர்மை

*தொல்காப்பியத்தில் தோய்ந்தவர் பாவாணர். இலக்கண வுரை வழுக்கள் எனப் பலவழுக்களைச் சுட்டியவர் அவர். அவ்வழுக்கள் தொல்காப்பியத்துக் கண்டவையுமாம். தொல் காப்பியப் பதிப்பாசிரியராய்க் குறிப்புரை வழங்கியும் தொண்டு புரிந்துள்ளார். தொல்காப்பிய வகுப்புகளைப் புலவர்களுக்குதம் தொடர்ந்து நடாத்தியும் அழுந்தியுள்ளார். அவர்காணும் தொல் காப்பியப் பார்வையின் சீர்மை அவர்தம் கடிதங்களில் படடொளி செய்கின்றமை எண்ணி எண்ணி மகிழவும் போற்றவும் தக்கனவாம்.*

*“மொழியாராய்ச்சியும் உலக வரலாற்றறிவும் இல்லாதவர் தொல்காப்பியத்தைத் தெளிவாய் உணரமுடியாது”* [1]

*“தொல்காப்பியத்தைப்பற்றிப் பொதுமக்கட்கு விளக்க மாய்த் தெரியுமுன் புலவர்க்கும் தமிழாசிரியர்க்கும் தெரிதல் வேண்டும். மரபியலில் அற்றைத் தமிழர் வாழ்க்கை ஓரளவு சொல்லப் பட்டுள்ளது. அதைச் சொல்ல அன்று நேரமில்லை. புலனெறி வழக்கம் என்பது குறைந்தது ஒருமணி நேரம் விளக்க வேண்டிய பொருள். அதை அன்று தொடங்கித்தான் விட்டு விட்டேன். தொல்காப்பியத்தில் இடைச்செருகல் இருப்பதாகச் சிலர் கருதினர். கருதுகின்றனர். அது ஆராய்ச்சியில்லாதார் செயலே. தமிழுக்கு வேண்டாததும் ஆரியச் சார்பானதுமான பலசெய்திகள் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டுள.. தொல் காப்பியர் ஆரியரா? தமிழரா? என்பது மற்றொரு வினா? வழுக்களும் குறையும் தொல்காப்பியத்தில் பலவுள. இவற்றை யெல்லாம் நடுநிலையாக மொழிநூல் துணை கொண்டு தான் அறியவொண்ணும். தமிழுக்கு இதுபோது அடிமணை யாக இழுப்பது தொல்காப்பியமே. ஆதலால் அதுபற்றித் தமிழாசிரியரும் தமிழன்பரும் தெளிவாய்த் தெரிந்து கொள்ளல் வேண்டும்.*[2]

---

**1. 8–8–66 (மி.மி.சி)** **2. 13–2–64 (மி.மு.சி.)**

*“இற்றைத் தமிழிலக்கியத்திற்கு ஆணியாய் இருப்பதும், தமிழன்தான் இழந்த உரிமைகளைப் பெறுதற்கு ஆவணம் போல் உதவுவதும் தொல்காப்பியம் ஒன்றே”* [3]

*“வரலாறு மொழிநூல் மாந்தநூல் என்னும் முத்துறை யறிவு இல்லார் தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் செவ்வையாக ஆராய முடியாது.”*[4]

3. 14–3–64 (மி.மு.சி.) 4. 28 சிலை 2000 (த.கு.)

## 17. விளம்பரம் விலக்கல்

*பாராட்டுரை, படம்போடுதல், பிறந்த நாட் சிறப்புச் செய்தல். இத்தகைய விளம்பரங்களை விரும்பாதவர் பாவாணர். விரும்பாமையே அன்றி, அதனைச் செய்ய முனைவாரையும் வலிந்து தடுப்பவர் பாவாணர். புகழும் வேண்டாப் புகழ்மை தனிப்பாராட்டுக்குரியதே. ஆயினும் விளம்பர வித்தகவுலகில் அவரைப்போலும் விதிவிலக்கா அருமையர் அல்லரோ!*

*சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் என்னும் பொத்தகத்தின் அச்சு நிறைவுற்றபோழ்தில் அந்நூலில் பாவாணர் படத்தை இணைக்க விரும்பினார் கழக ஆட்சியாளர் திரு.வ.சு. ஆனால் பாவாணர். "என் உருவம் எடுக்க விருப்பமில்லை" என்று படம் எடுத்துக்கொள்ளுதலையே தவிர்த்துவிட்டார்![1]*

*மேலும் வலியுறுத்தினார் திரு. வ.சு. அதற்குப் பாவாணர் "இந்தப் பொத்தகத்தில் என் படம் பொறிக்கவேண்டேன். முதல் தாய்மொழி என்னும் அடுத்த பொத்தகத்தில் பொறித்துக் கொள்ளலாம். அதிலும் பொறிக்கவேண்டியது வகையைச் சென்னை வந்து சொல்வேன்"[2] என்று வழுவிக்கொண்டார். அந்நூலிலும் வேறு எந்நூலிலும் அவர்படம் வந்ததில்லை.*

*பறம்புக்குடியில் உ.த.க. முதல் மாநாடு நிகழ்ந்த போது பாவாணர் படத்தை அச்சிட்டு வழங்குவதற்குப் பேரா. தமிழ்க்குடி மகனார் விரும்பினார். ஆனால் பாவாணர், "இயற்கையாகவே நான் தோற்றப்பொலிவில்லாதவன். அதையும் கேடாகக் காட்டின் என்னை இழிவுபடுத்துவதேயாம்" என்று மறுத்தார். மேலும், "கோலாலம்பூர் நாளேட்டில் என்படம் சரியாயில்லை. புன் செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தார் ஓரளவு திருத்தமாகப் படமெடுத்துள்ளனர். நான் நாற்காலியில் அமர்ந் திருக்கும் தென் மொழிப்படம் நன்றே"[3] என்று குறித்துப் புதுப்படம் எடுத்தல் விலக்கினார்.*

---

1. 28–1–49 (வ.சு)
2. 10–2–49 (வ.சு)
3. 16–10–69 (த.கு.)

அதே மாநாட்டு மலரில் பாவாணர் வாழ்க்கை வரலாறு வெளியிடும் வேட்கை எழுந்தது. அதனை. "என் வாழ்க்கை வரலாற்றை மாநாட்டு மலரில் வெளியிடவே கூடாது."[4] என்று மறுத்தார். "என் வாழ்க்கை வரலாறு மலரில் இருத்தல் கூடா தென்று மீண்டும் சொல்கிறேன்"[5] என்று பின்னும் எழுதினார்.

மாநாட்டு உழைப்பும் தமிழுக்காக இருக்கவேண்டுமே யன்றித் தனி ஒருவர்க்காக இருத்தல் கூடாது என்பதைக் கடைப் பிடியாகக் கொண்ட பாவாணர்.... "எனக்காகத் தொல்லை தாங்க வேண்டேன். தமிழின் பொருட்டுத் தாங்குக"[6] என்றார்.

மீட்போலை இதழ்ப் பொறுப்பாளர் பேரா.கு.பூங்காவனம் அவர்கள் பாவாணர் பிறந்தநாளின்போது, மீட்போலையைப் பிறந்த நாள் மலராக வெளிப்படுத்தப் பெரிதும் விரும்பினார். பாவாணர் இசைவும் வேண்டினார். பாவாணர், "எம் குடும்பத் தில் பிறந்த நாட் கொண்டாடும் வழக்கமில்லை. நானும் விளம்பர வெறுப்பினன். இதைப் பன்முறை சொல்லியும் சில கிளைகள் கேட்கவில்லை. மறைமலையடிகளையே மாண்பாக்க குறிப் பிடுக"[7] என்று வரைந்தார்.

"இனிமேல் என்னைப்பற்றியே விளம்பரம் ஒன்றும் வேண்டேன். இது எனக்கு மிகமிக வெறுப்பானது. பிறந்தநாள் சிறப்பிதழை நிறுத்திவிடுக"[8] என்று வன்மையாக மறுத்துவிட்டார் பாவாணர்.

ஒரு பொன்னாடை நிகழ்ச்சியைச் சுட்டுகிறார் பாவாணர்:

"பூம்புகார் இறுதிக் கூட்டத்திற்குப் பர்.மெ.சுந்தரமும் திரு.கருணையும் என்னை வற்புறுத்தி அழைத்துச் சென்றனர். பேசச் சொன்னதற்கு மறுத்துவிட்டேன். ஆடைபோர்த்தக் கூடாதென்று சொல்லியிருந்தேன். மகளிர் மஞ்சள் சட்டைத் துணி (4 முழும்) ஒன்றைத் திரு. கருணாநிதியிடம் கொடுத்திருந் தனர். அவர் பொன்னாடை போர்த்துவதாக அறிவிக்கப்பட்ட போது அம்மாபெருங் கூட்டத்தில் அவரை மதிப்பிழிவுபடுத்த மனமின்றி இசைந்தேன். அது மினுகை (சரிகை) யிழையற்ற மட்டப்பட்டு. 20 உரூபாவிற்கு மேற் பெறாது. அமைச்சர் மூவர்க்கும் தருமபுரத் தம்பிரான் போர்த்தியது. உண்மையான பொன்னாடை; ஒவ்வொன்றும்முந்நூறு உரூபா பெறும்.

4. 25–11–69 (த.கு.)
5. 1.122.69. (த.கு.)
6. 4–12–69 (த.கு.)
7. 13–12–79 (கு.பூ)
8. 6–3–80 (கு.பூ)

*"பொன்னாடை போர்த்தினால் என் வருத்தம் மிகும் என்று சொல்லியிருந்தேன். அதுவுமின்றிப் பன்னாடை போர்த்தியது என் மனக் குறையைப் பன்மடங்காக்கியது."*[9]

*தம் புகழுக்காகவும் விளம்பரத்திற்காகவுமே விழா எடுத்தலும் பொதுமக்களைத் திரட்டி முழங்க விடுத்தலும் சுவரொட்டிகளும் வளைவுகளும் ஆக்கிப் பொலிவுறுத்தலும் மிக்க விளம்பர உலகில் தான் பாவாணரும் இருந்துள்ளார்! "பண்புடையார்ப் பட்டுண்டுலகம்" என்பது மெய்யுரையாக வேண்டுமே யன்றோ!*

9. 23–1–68 (மி.மு.சி)

## 18. இஞ்சி முரப்பு

பாவாணர் சில பண்டங்களை மிக விரும்பி யுண்ணுவார் என்பது அவர்தம் கடிதங்களால் புலப்படுகின்றன. அவற்றுள் ஒன்று இஞ்சி முரப்பு ஆகும்.

இஞ்சிக்குத் தமிழ் மருத்துவத்தில் சிறந்த இடம் உண்டு. இஞ்சியைத் தமிழ்மக்கள் விரும்பிய பயன்படுத்தியமை., கழகநூல் ஆட்சிகளாலே நன்கு தெளிவாகின்றது. 'இஞ்சிவேர்' என்னும் சொல் அதன் பொருளோடு வெளிநாட்டு மக்களைக் கவர்ந்து பயன் படுத்தப்பட்டமை, பல்வேறு மொழிகளில் 'இஞ்சிவேர்' என்பதைத் தழுவி அமைந்துள்ள பெயர்களாலேயே வெளிப் படும். புதுவகைக் குடிநீர்களுள், இஞ்சிச் சாற்றுக்கு இடம் இருத்தல் (சிஞ்சர்பீர்) வெளிப்படையானது. உடல் நலத்திற்கு மிக உகந்ததான இஞ்சியை விரும்பிப் பாவாணர் பயன் படுத்தியமை அவர்தம் சுவை விருப்பக் காட்டுவதுடன், மருத்துவ நோக்கையும் தெளிவிப்பதாம்.

சேலம் அன்பர் சின்னாண்டார்க்குப் பல கடிதங்களில் இஞ்சி முரப்பு வாங்கியனுப்பக் கேட்டுள்ளார். இஞ்சி முரப்பு வாங்கி யனுப்பக் கேட்டுள்ள கடிதச் செய்திகளிடையே தமிழாக்கச் சொற்கள் சில நமக்கு வாய்க்கின்றன. ஏறத்தாழ 12 ஆண்டுகள் பாவாணர் அதை விரும்பியுண்டமை கடிதங்களால் புலப்படுகின்றன. அதிலும், இன்ன கடையில் வாங்கவேண்டும். இன்ன வகையில் செய்யப்பட்டது வேண்டும், இன்ன வகையில் அனுப்புதல் வேண்டும் என்றெல்லாம் குறித்துள்ளார். அதன் சுவையையும் நலப் பாட்டையும் கடிதங்களிலே குறித்துள்ளார்.

29 கன்னி 2000 என்று நாளிட்ட கடிதத்தில் ."இன்றனுப்பிய இஞ்சி முரப்பு நன்றாயிருக்கிறது. உடனே நீண்ட நாட்கெடா திருக்குமாயின் முக்காற் புட்டியும், இருமாதங்கட்குப் பின் சுவை மணவலிகள் குன்றுமாயின் அரைப்புட்டியும் வாங்கி நன்றாய்ப் பொதிந்து பதிவஞ்சல் வாயிலாகவே அனுப்பிவைக்க" என்றெழுதி யுள்ளார்.

*29-5-64 அஞ்சலில் "செவ்வாய் பேட்டையிலேனும், கல்லூரிக்கெதிர்க் கடையிலேனும் இன்னும் ஈரிஞ்சியூறற் பலகை வாங்கிவைக்க" என்று குறிப்பிடுகிறார். சிலேட்டு என்பதைப் பலகையாக்கிக் கொள்கிறார். ஊறுகாயில் உள்ள சொல்லாட்சி இஞ்சி யூறற்குப் பயன்படுகின்றது!*

*சென்னைக்கு வரும்போது புலவர் சு.கு. (சு.கு. அருணாச்சலம்) செவ்வாய்ப்பேட்டை "இ.ஞ்சி முரப்பா வாங்கிவரச் சொல்க" (9-6-65) என்கிறார்.*

*5-10-65 இலும் "இயலுமாயின் இரு பலகை இஞ்சி முரப்பா வும் வாங்கிவைக்க" என்கிறார்.*

*"தங்கள் இஞ்சி முரப்பாப் பொதிகை முந்தாநாள் மிக ஏமமான நிலையில் வந்து சேர்ந்தது. எல்லார்க்கும் பெரு மகிழ்ச்சியும் முழுப் பொந்திகையும்; மாநாட்டிற்கு வரும்போது இதே இஞ்சி முரப்பா இவ்வளவு கொண்டு வருக" என்று 21-10-69இல் எழுதியுள்ளார்.*

*முரப்பு 'முரப்பா' என்றும் சொல்லப்பட்டுள்ளது. மக்கள் வழக்கு 'முரப்பா' என்பதுதானே! பார்சல் 'பொதிகை' யாகத் திகழ்கின்றது. முழுதுறு திருப்பியாக இருந்தமை 'முழுப் பொந் திகை' யாயிற்று!*

*3-12-69 (கள. நளி.2000) இல் வரைந்த திருமுகத்தில் "சென்ற ஆண்டு எனக்கு வாங்கிக் கொணர்ந்து கொடுத்த சிறப்பாக நெய்யிற் பதப்படுத்திய -உயர்விலை இஞ்சி முரப்பு கிடைப்பின் கண்ணாடிப் புட்டியில் முன்பு வாங்கின அளவிற்கு குறையாது வாங்கி வருக. பலகை முரப்பும் நான்கு வேண்டும்" என்றுள்ளார்.*

*இவையெல்லாம் காட்டுப்பாடியில் இருந்து எழுதிய கடிதங்கள். சென்னையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பில் அகர முதல் இயக்குநராக இருந்த காலத்திலும் சேலம் இஞ்சியூறல் தேட்டமாகி எழுதுகிறார். அப்பொழுது சென்னை -78, கலைஞர் கருணாநிதிநகர் எசு.பி.* (S.P.) 57 *இல் குடியிருந்தார்.*

*"இஞ்சியூறல் ஒருவகை கூட என்னிடமில்லை. அது எனக்கு மிகத்தேவை. சேலத்திற் போற் பதன்செய்தது வேறெங்கும் கிடைப்பதில்லை. அடுத்த முறை வரும்போது மூவகையும் வாங்கி வருக" என்று எழுதியுள்ளார்.*

*"இஞ்சியூறல் வகைகள் மருந்துப் பயனீடு ஆதலையும் ஒரு கடிதத்தில் பாவாணர் சுட்டியுள்ளார். அவர் மிதிபாகற்காயைக்*

கறியாக்கி விரும்பியுண்டிருக்கிறார். அது தொல்லை தந்திருக் கிறது. அதற்கு மருந்தாக இஞ்சி யூறல் பயன்பட்டிருக்கிறது.

“மிதிபாகலை மிகுதியாக உண்டதனால் இம்மயக்கம் ஏற்பட்டதாக என்மகன் கருதுகின்றான். அதுவும் ஓரளவு உண்மையாக இருக்கலாம். தங்கள் இஞ்சி முரப்பாவை இன்றுதான் நிரம்பவுண்டேன். மிதிபாகலுண்பதையும் அடியோடு நிறுத்திவிட்டேன்” என்பது அச்செய்தி 8-7-70 இல் எழுதிய கடிதத்தில் உள்ளது.

சுவை விருப்பு தலைப்பட்டதேயன்றே! சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று வள்ளுவர் அடுக்கும் அடுக்கிலே தலைப் பட்டது சுவைதானே! உணவுப் பற்றிலும் உள்ளம் தோயாத வள்ளலார் “தனித் தனி முக்கனி பிழிந்து” என்பதை எப்படிச் சுவைத்துப் பாடுகிறார்! ‘தேனாய் இன்னமுதாய்’ அல்லவோ இறைவனே மணி மொழியார்க்குச் சுவைப்பொருளாகின்றார்! இச்சுவை நாட்டம் இயற்கை வழிப்பட்டதே ஆதலால் பாவாணர் அனையரும் ஆட்பட்டிருந்தனர் எனத்தெளியலாம். அப்பால் வரும் ஊறுகாயும், கிழங்கும் இப்பாற்பட்டனவேயாம்.

## 19. ஊறுகாயும் பிறவும்

*தயிரும் மோரும் விரும்புபவர்க்கு ஊறுகாய்த் தேட்டமும் கூடவே இருக்கும். பாவாணரோ தயிரும் கெட்டிமோரும் மிக விரும்புபவர். ஆதலால், ஊறுகாயை விரும்புவதில் வியப்பில்லை. ஆனால், அவர் விரும்பிய ஊறுகாய் தனிச்சிறப்புடைய ஒரு வகையினதாகும். அதற்குப் பெயர் 'முளரி ஊறுகாய்' என்பது அவர் சூட்டிய பெயர். '(Rose) ஊறுகாய்' என்பது ஏனையோர் சொல்லும் பெயர்.*

*வரும்போது வைசியர் விடுதியில் எனக்குக் காரமில்லாத முளரி (Rose) ஊறுகாய் ஒரு புட்டி வாங்கி வருக. சுவைத்துப் பார்த்து வாங்குக. காரமாயிருந்தால் வேண்டாம். புட்டியென்றது ஆர்ளிக்கசுப் (Horlicks) புட்டி" என்பது 7-9-66 கடிதம்.*

*ஏதோவொரு மாத்திரையைப் பயன்படுத்தியிருக்கிறார் பாவாணர். மாத்திரையை 'முகிழம்' என்கிறார். முகிழமாவது 'கேப்செல்சு' என்பதற்கு மொழியாக்கம். அதனையும் முளரி ஊறுகாயையும் வாங்கிவர ஒரு கடிதத்தில் குறித்துள்ளார்.*

*"இன்னும் 25 முகிழங்களும், வைசியா உண்டிச்சாலையில் முளரி (Rose) ஊறுகாய் ஒரு புட்டியும் வாங்கி வருக" என்பது அது. நாள் 27-3-70.*

*பேருந்தில் சென்ற பாவாணருக்கு நாவறட்சி மிகுந்திருந்த தாம். அப்பொழுதில், "பிட்டுப்பழ (முாம்பழ) மட்டு (சர்பத்து) நினைவிற்கு" வந்ததாம்! அவர் நினைவுக்கு அது வரும் போதில், "நித்தலின்பனார் புட்டி நிறையக் கெட்டிமோர் கொடுத்தனுப் பியது" நேரில் நின்றதாம்! இது 19-7-70இல் எழுதிய செய்திகள். கழக ஆட்சியாளர் வ.சு. அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்துக் கண்ட செய்தியும் பாவாணர் விருப்புகளை வெளிப்படுத்தும்.*

*பாவாணர் நெல்லையில் நிகழ இருந்த ஒரு கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆங்குத் தமக்கு வேண்டுவன இவை என்பதைச் சுட்டி வரைகின்றார். அவர் சேலத்தில் இருந்த காலச்செய்தி இது. நாள் 3-5-55.*

"பகலிற் பெரும்பகுதி படித்துக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பேன். அதற்கு எட்டுணையும் இடைஞ்சல் இருத்தல் கூடாது.

"உணவிற்கு மூவேளையும் மலைப்பழமும் மோர் அல்லது தயிரும் வேண்டும். திண்ணிய மோரன்றி நீர்மோர் ஆகாது"

அதன் தொடர்பாக 6-5-55 இல் வரைந்த கடிதத்தில் "காலைதொறும் வெந்நீரும் வேண்டும்" என்று சுட்டுகிறார்.

மலைப்பழமும் மோரும் தயிரும் வெந்நீரும் போன இடத்தில் போய்ப் பார்த்துக்கொள்ளக்கூடாதோ? என்ன இருந்தாலும் திட்டப் படுத்திக் கொள்வதால் கெட்டுப் போவதில்லையே! அங்கே போய் முட்டுப்பாடுறவும் நேரிடாதே!

இன்னொரு கடிதச் செய்தி; அது மேட்டுப்பாளையம் தமிழாசிரியர் திரு.பா. நாராயணன் அவர்களுக்குப் பாவாணர் 21-1-57இல் எழுதியது. பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வாசகராகப் பணிசெய்துவந்த காலம் அது.

"தங்குவதற்கு ஒரு தனியறை வேண்டும். புழுங்கலரிசிப் புலாலுணவே எனக்கு ஏற்கும். புறாக்கறி கிடைப்பின் நன்று. இன்றேல் ஆட்டீரல் சமைப்பிக்க (சுவரொட்டியுடன்) உண்ட பின் மலைப்பழமேனும் செம்பேரி (Apple) யேனும். வேண்டும்" என்பவை உறைவிடம் ஊண்பற்றிய அக்கடிதச் செய்திகள்.

# 20. கிழங்கு வகைகள்

*கிழங்கு வகைகளுள் முடிக் (மயிர்க்) கிழங்கு என்பது ஒன்று. அது சேலம், ஆற்றூர்ப் பகுதிகளில் நிரம்பக் கிடைப்பது. அது சிறு கிழங்கு வகையைச் சார்ந்தது. ஆயின் கருணைக் கிழங்குபோல் பெரியது. உருளைக்கிழங்குபோல் நிறம் வெளுத்தது. மெல்லிய வேர்கள் நிரம்ப இருத்தலால் அதனை, மயிர்க் கிழங்கு, முடிக்கிழங்கு என்று கூறுவர். பொதுமக்கள் வாயில் 'உரோமக்கிழங்கு' என வரும். அக்கிழங்கின் மேலும், பாவாணர்க்கு மிகுந்த பற்று இருந்திருக்கிறது. மிக விருப்பத்தோடு அவர் உண்ணுமவற்றுள் ஒன்றாக அஃது இருந்திருக்கிறது என்பது கடிதங்களால் விளங்குகின்றது. இக்கடிதங்கள் திரு. மி.மு.சி அவர்களுக்கு எழுதியவையே.*

*24-11-64இல் எழுதிய கடிதத்தில், "மயிர்க்கிழங்கு வந்து விட்டதா?" என்று வினாவுகின்றார். அது பருவத்தில் கிடைக்கும் கிழங்காயிற்றே; அதனால்,*

*மயிர்க்கிழங்கு பருத்ததாய் வாங்கிச் சிறுகோணியிற் பொதிந்த ஒரு மூங்கிற் கூடைக் குள்ளிட்டுத் தைத்து T.V.S. சரக்கியங்கிக் கடத்த (Transort) வாயிலாய் அனுப்பினால் மறு நாளே சேதமின்றி வந்து சேரும்" என்று 30-12-64இல் வரைந்தார்.*

*புலவர் சின்னாண்டார் துணைவியார், மகப்பேற்றுக்காக மருத்துவமனையில் இருந்தபொழுது, உடல் நலமும் குன்றி யிருந்தார். அந்நிலையிலும், மயிர்க்கிழங்கு வாங்கிப் பாவாணர்க்கு விடுத்திருந்தார் சின்னாண்டார். அப்போது அம் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டுவதில்லை என்பது பாவாணர் பெருந் தகையுள்ளம்.*

*அதனால்*

"தாயும் தந்தையும் தானெனும் தம்பிரான்
சேயைக் காத்தருள் சீரென இன்னினே
தாயும் நோயறத் தண்ணருள் பொழிகென
ஆயி ரம்மவன் அடியிணை வீழ்ந்தனம்"

*என்று வாழ்த்துரைத்து,*

*"தாய் நன்னிலையில் இல்லாதபோது மயிர்க்கிழங்கு வாங்கி அனுப்பியிருக்கக் கூடாது. ஆயினும், இவ்வட்டை சேரும்போது தாய் நலம்பெற்றிருக்குமென நம்புகின்றோம். உடனே தெரிவிக்க. மறுமொழி கண்டபின்தான் கிழங்கை உண்போம்" என்று மேற்கொள்ளும் ஒரு நோன்பையும் சுட்டு கின்றார். சேலத்திற்கும் காட்டுப் பாடிக்கும் இடைவெளி மிக இருக்கலாம்! உணர்வு நெஞ்சத்திற்கு இடைவெளி இறையும் இல்லையே! மறுமொழி கண்டபின் தான் கிழங்கை உண்போம்' என்பதில் பாவாணர் நெஞ்சம் பளிச்சிடுகின்றதேயன்றோ!*

*இக்கடிதம் எழுதப்பட்ட நாள்7-1-65.*

*"மயிர்க்கிழங்கு எனக்கு மட்டுமன்றி என் மக்களெல் லாருக்கும் மிக விருப்பமே. ஆதலால் பருங்கிழங்கு விற்பனைக்கு வரும் நாளில் என்னைக் கேளாமலும் அனுப்பலாம்" என நிலை யாணை ஒன்றை 8-1-69இல் தருகின்றார்.*

*சிலர் விரும்பியுண்பதும், பலர் விரும்பாததும் ஆகிய கிழங்கு வேர்க்கிழங்கு. எளிய மக்களுக்கு உரியது என்று செல்வர் களால் ஒதுக்கவும் படுவது. ஊட்டம் ஒன்றும் இல்லாதது என்றும் ஒதுக்கிவைப்பாரும் உளர். இத்தகைய வேர்க் கிழங்கில் வேணவாக் கொண்டிருந்திருக்கிறார் பாவாணர்.*

*வேர்க்கிழங்கு சர்க்கரை வள்ளிக்கிழங்கு, சீனிக்கிழங்கு என்றும் வழங்கப்படும்.*

*"வேர்க்கிழங்கு இன்னும் வந்திருக்கா தென்று கருது கின்றேன்" என்பது 7-9-66இல் உள்ள கடிதக் குறிப்பு. வந்திருப் பின் வாங்கியனுப்பவேண்டும் என்பது உட்கிடை என்பது வெளிப்படை*

*7-1-67இல், "வேர்க்கிழங்கு தி.வி.எசு. வாயிலாய்ச் சேத மின்றி முன்பு வந்தது" என்பதைச் சுட்டுகிறார். இம் முறையில் வேறு வகையில் விடுக்கப்பட்ட வேர்க்கிழங்கு சேதத்திற்கு இடமாயிற்று என்பது குறிப்புப் பொருள்! "இன்றுதான் தங்கள் புத்தாண்டுப் பரிசும் எனக்கு மிக விருப்பமானதுமான வேர்க் கிழங்குக் கட்டை என்மகன் எடுத்தான். இன்றும் நாளையும் ஆசைதீர உண்பேன்" என்று வேர்க்கிழங்குக் காதலை வெளிப் படுத்துகிறார். இக்கடிதத்தின் நாள் 23-1-67*

*வேர்க்கிழங்கு கிடைப்பின் சென்ற ஆண்டு போல் அனுப்பி வைக்க "என்று கட்டளையிடுகின்றார் 19-1-68 இல்!*

*வேர்க்கிழங்கை மட்டுமன்றி வேர்க்கடலையையும் பாவாணர் விரும்புவார் என்பது "அடுத்தமாதத் தொடக்கத்தில் பச்சை வேர்க்கடலைக்கொட்டை 4 பட்டணம் படியும் இஞ்சி முரப்பாப் பலகை 4-உம் என் செலவில் வாங்கித் தி.வி.எசு. வாயிலாக மணிபெயர்க்கு அனுப்பிவைக்க" என்று 13-5-67இல் எழுதிய கடிதத்தில் சொல்கிறார். மணி என்பவர் பாவாணர் தம் இளையமகனார். மணிமன்றவாணன் என்பது அவர் முழுப் பெயர்.*

## 21. பார்ப்பனர் குலப் பாவாணர்

### *பாவாணர் எக்குலத்தார்?*

*அவர் அறைந்து சொல்வார், "குலமற்ற தமிழன்" என்று மேலும் சொன்னால், தமிழன் கண்ட குலமுறை ஒழுங்குப்படி, "நான் அந்தண வகுப்பில் பார்ப்பனர் என்னும் உட்பிரிவினன்" என்பார். அவர் சினந்து எழுதுமாறு ஒரு நிகழ்ச்சி நேர்ந்து விட்டது. அதனால் அவர் தம்மைப்பற்றியும். தம் முன்னோர் பற்றியும் பல செய்திகளை விரிவாக எழுதுகின்றார். அதனைத் தொடுத்து இரண்டு கடிதங்களும் வரைகின்றார்.*

*தவத்திரு மறைமலையடிகளார் வரலாற்றை அவர்தம் மகனார் மறை. திருநாவுக்கரசு விரிவாக எழுதினார். அந்நூலில் அடிகளாரொடும் தொடர்புடைய புலவர்களையும் குறிப்பிடு கிறார். அவ்வாறு குறிப்பிடப்படுபவருள் பாவாணரும் ஒருவர். மற்றையோரைச் சுட்டுவதற்கும் பாவாணரைச் சுட்டுவதற்கும் இருக்கலாம்! ஆனால் இன்னொருபால், பாவாணர் சினங்கொள் வதற்கும், மறுத்து எழுதுவதற்கும் இடமாகிவிட்டது.*

*நூலில் பாவாணரை மறை திருநாவுக்கரசு என்னதான் எழுதினார்? மறைமலையடிகள் வரலாற்றின் 862 ஆம் பக்கத்தில் எழுதியுள்ள செய்தி வருமாறு:*

*"வித்துவான் தேவநேயப் பாவாணர், எம்,ஓ,எல்,*

*மொழியியல்துறை வாசகர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.*

*"இவர் பழந்தமிழர் (அரிசன்) மரபினர்; திருநெல்வேலிச் சீர்மையினர்; கிறித்துவ சமயம் புக்கவர்; திறமான புலவர். ஏராளமான தமிழ்ச்சொற்களை வடசொற்கள் என்று புலவர் ஏராளமான தமிழ்ச்சொற்களை வடசொற்கள் என்று புலவர் பலரும் நம்பிக் கொண்டிருந்தனர். வடமொழியினர் பன்னூரு ஆண்டுகளாக அப்படி நமக்கு நம்பிக்கையை ஊட்டிவிட்டனர்.*

*இந்நிலையில் தமதரிய வடசொற்கள் - தமிழ்ச்சொற்கள் ஆராய்ச்சிகளால் மாற்றிய சிறந்த அறிஞர். தமிழ்-இனநாகரிக*

ஆராய்ச்சிகளில் தலைசிறந்தவர். உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க தமிழர். தமிழ்ச்சொல் ஆராய்ச்சிபற்றி அரிய நூல்கள் தந்தவர். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பரந்த புலமையுடையவர். இவர் சென்னையில் வாழ்ந்த ஆண்டுகளில் அடிகளுடன் தொடர்ந்த தொடர்புகொண்டு தம்மாராய்ச்சிகட்கு ஊக்கம் பெற்றவர். அடிகள்பால் அளவிறந்த அன்பும் மதிப்பும் பூண்டவர்.

பாவாணர் அறிவுத்திறங்களையும் படைப்புகளையும் தாம் அறிந்த வகையில் கூறிய திருநாவுக்கரசர் அவர்தம் மரபைச் சுட்டிக்காட்டிய வகையும் அதன் முறைகேடுமே பாவாணரைச் சினமுறுத்தி வருந்தி, விரிந்ததோர் கடிதம் எழுத வைத்தது.

மறை திருநாவுக்கரசு பாவணரை நேரில் கண்டு உரையாடி யிருக்கிறார். தம் நூலில் குறிப்பிட்டுள்ள செய்தியையும் சொல்லி யிருக்கிறார். அந்நூல் கழக வழியாக வெளிவந்தது என்று பாவாணர் மாணவர் அருணாச்சலம் என்பார் சொல்லியிருக் கிறார். ஆனால், நூல் கழக வழியே வெளிவந்ததன்று. மறை, திருநாவுக்கரசு அவர்களின் சொந்த வெளியீடே அது. விற்பனை உரிமை கழகத்திற்கு உண்டு. மாணவர் அருணாசலம் சொல்லியே செய்தியைக் கொண்டு, கழகமே மறைலையடிகள் வரலாற்றை வெளியிட்டதாக முடிவு செய்து.அந்நாள் ஆட்சியாளர் திருவசுப்பையா பிள்ளை அவர்களுக்கு ஒரு கண்டனக் கடிதத் எழுதினார். அக்கடிதத்தில் வேறு எவ்வாற்றானும், அவர் தம் குடும்பத்தாரும் அணுக்க நண்பராயினாரும் கூட அறியப்பெறாத செய்திகள் உள.

7. கொற்றவன்குடி,<br>
விரிவுரையாளர் குடியிருப்பு,<br>
தென்னார்க்காடு மாவட்டம், 27-10-60.

அன்பரீர்,

வணக்கம்.

இரண்டொரு நாட்குமுன் திருநாவுக்கரசு இங்கு வந்தது. மறைமலையடிகள் வரலாற்றில் என்னைச் சிறப்பித்து எழுதி யிருப்பதாகவும் ‘அரிசன்’ என்று குறித்திருப்பதாகவும் சொன்னது. அரிசன் என்று யார் சொன்னது என்று கேட்டேன். சங்கரன் கோவிலில் நெடுஞ்செழியன் சொன்னான் என்றது.

நான் அரிசனும்லலேன்; அரசனுமல்லேன்; குலமற்ற தமிழன்.

*சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் கோவில்பட்டிக்கும் சங்கரன் கோவிலுக்கும் இடையில் தோக்கசு* (Stokes) *என்ற மேனாட்டுக் கிறித்தவக் குரவர் தொண்டாற்றியிருக்கிறார். அவர் வளமனைக்காவற்காரராக இருந்தார் முத்துசாமித்தேவர். அவர் மனைவியார் வள்ளியம்மாள். அவ்விருவரையும் கிறித்தவ ராக்கியிருக்கின்றார் அத்துரைமகனார். அவ்விருவருக்கும் பிறந்தவர்தான் என் தந்தையார். என் தந்தையார் பிறந்த சின்னாளில் பெற்றோர் இருவரும் இறந்துவிட்டமையால் அத்துரையே எடுத்து வளர்த்து ஞானமுத்து தோக்கசு* (Stokes) *எனப் பெயரிட்டுச் சொக்கம்மா என்ற பெண்ணை மரியாள் எனப் பெயர்மாற்றி உரிய பருவத்தில் மணமும் செய்து வைத்திருக்கிறார். அவ்வம்மையார் கூடிவாழாது ஈழத்திற்கு ஓடி விட்டப்பின் உண்மைக் கிறித்தவரானதினால் கோவில்பட்டிப் பாண்டவர் மங்கலத்தில் ஓதுவாராக (உபதேசியாராக) இருந்த குருபாதம் என்பவரின் மகளாகிய என் அன்னையரைப் படிப்புப் பற்றியும் குல வேற்றுமை காட்டாமைப் பொருட்டும் மணந்துகொண்டார். 7 ஆம் எட்வர்து இளவரசராயிருந்த காலத்தில் என் அன்னையார் சேராடக்கர் கல்லூரியில் 3ஆம் படித்தரம்* (III grade) *தேறியவர்.*

**(கடிதத்தின் இரண்டாம் பக்கம்)**

*என் தந்தையார் சங்கரன் கோவிலிற் கணக்காயர் வேலை பார்த்தார். அங்குத்தான் நான் பிறந்ததாகச் சொல்லப்படுகின்றது.என் தந்தையார்க்குச் சொந்தமான இராசநாயகத் தேவர் பனவடலியில் இருந்து அடிக்கடி வந்து போவார். எங்கள் வீட்டில் தங்கி விருந்துன்பார். உள்ளூரிலும் 3 கல் தொலைவிலுள்ள களப்பாளங் குளத்திலுமிருந்து மறவர் குலச்சிறாரும் இளைஞரும் என் தந்தையாரிடம் பயின்றனர். என் தந்தையார் கணக்காயராயிருந்த பள்ளி தாழ்த்தப்பட்ட மக்கட்கென்று ஏற்பட்டதுதான்.*

*சங்கரன்கோவிலில் எனக்கு உறவினர் ஒருவரும் இல்லை. என் அன்னையார்வழியை நோக்கி அங்குள்ள பள்ளக்குடிப் பிறந்த என் உறவினன் அல்லாத நெடுஞ்செழியன் என்னும் சிறுவன் அல்லது இளைஞன் என் தந்தை வழியை அறியாமல் பெருமைக்காக என்னைத் தன் இனமென்று திருநாவுக்கரசிடம் சொல்லியிருக்கிறான. அதை நம்பி என்னையுங் கேளாது திருநாவுக்கரசு என்னை அரிசன் என்று எழுதியிருக்கிறது. நான் புத்தகத்தைப் பாராததனால் இதுவரை தெரியவில்லை. திருநாவுக்கரசு எழுதினாலும் தாங்கள் அதை எங்ஙனம் வெளியிடலாம்? நான்*

என்றேனும் எங்கேனும் என்னை அரிசன என்று சொன்னது அல்லது எழுதியது உண்டா?

இன்று வழக்கில் இருக்கும் பிறப்புப்பற்றிய குலவேறு பாடுஆரியரால் புகுத்தப்பட்டது. இதைத் தமிழ்மறையாகிய திருக்குறளும் சிவமறையாகிய திருமந்திரமும் கண்டிக்கின்றன மறை மலையடிகளுள், 'சாதிவித்தியாசமும் போலிச் சைவரும்' என்ற நூலெழுதினார். திருநாவுக்கரசு சேர்ந்துள்ள பேராய (Congress)க் கட்சியும் குலமற்ற கூட்டரவை யுண்டுபண்ணுவ தாகச் சொல்கின்றது. தொழில்பற்றிய வகுப்பு வேறுபாடே நாடுகளில் காணப்படுகின்றது. இங்கும் ஆரியர் (பிராமணர்) வருமுன் அப்படித்தான் இருந்தது அம்முறைப்படி நான் அந்தண வகுப்பில் பார்ப்பனர் என்னும் உட்பிரிவினன். ஆயினும், பகுத் தறிவிற்குப் பொருந்தாத ஆயிரத்தெட்டுக் குலங்களாகத் தமிழர் இனம் பிரிந்து சின்ன பின்னமாகச் சிதைந்து வலியற்று ஆரியரா லும் அயலராலும் நலியுண்டு கிடப்பதாலும் மேலும் நலிவுறுத்த இந்தி வந்துகொண்டிருப்பதனாலும் வேற்றுமைகளையெல்லாம் விலக்கித் தமிழரை யெல்லாம் ஒன்றுபடுத்தி மீண்டும் ஒரு நாட்டினமாக (Nations) அமைப்பதே தக்கதாம். தமிழரெல்லாம் ஓரினமென்று வரலாறு மொழி நூல் மாந்தநூல் ஆகிய மூன்றும் ஒருங்கே முழங்குகின்றன. சிவனெறியும் தமிழும் வளர்க் கின்றோம் என்று சொல்லிக் கொண்டு இரண்டுக்கும் ஏற்காத மடமைக் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு இரண்டுக்கும் ஏற்காத மடமைக் கருத்துகளைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பேரால் எங்ஙனம் பரப்பலாம்? இக்காலத்திற்கு இது எள்ளவும் ஏற்குமா?

தமிழன் என்று தலைநிமிர்ந்து மார்தட்டும் வீறும் மிடுக்கும் எனக்கு இருக்குமளவு சோ.சு.பாரதியார்க்குக் கூட இருந்ததில் லையே. அங்ஙனமிருப்பவும், என்னை அரிசன் என்று எங்ஙனம் குறிப்பிடலாம்? இன்றிருக்கும் தமிழரெல்லாருள்ளும் உயர்ந்த வனாக

**(கடிதத்தின் பக்கம் மூன்று)**

என்னைக் கருதுகின்றேன். தாழ்த்தப்பட்டவன் என்று தமிழ்ச் சொல்லால் குறிப்பதே தவறு. அதிலும் தவறு வடவர் ஒருவர் (காந்தி) புனைந்த அரிசன் (ஹரிஜன் மால்மகன் என்னும்) வடசொல்லாற் குறிப்பது. மறைமலையடிகள் வரலாற்றில்

*என்னைப்பற்றிய பகுதியைக் கிழித்தெறிக. திருநாவுக்கரசால் எனக்கொரு புகழும் வேண்டியதில்லை. என் தொண்டை இரண் டோராண்டில் உலகறியும். என்னைப்பற்றிய பகுதியைக் கிழித் தெறிய இயலாவிடின் அரிசன் என்று குறிப்பிட்டுள்ள தொடர் முழுவரையும் காரச்சு மையால் மறைத்துவிடுக. இனிமேற் செலவாகும் படிகளாவது திருந்தியிருக்கட்டும். இது எளிதாக இயல்வதே.*

*'ஆய்தம்' என்னும் என் கட்டுரைக்கு முன்வரும் என் வரலாற்றுச் சுருக்கத்திலும் நான் சங்கர் நயினார் கோவிலில் (முத்துச்சாமித்தேவர் மகன்) ஞானமுத்தனுக்கும் பரிபூரணம் அம்மையார்க்கும் பத்தாம் மகவும் நாலாம் மகனுமாக 1902ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குப் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது' என்னும் ஒரு தொடரை அமைத்துக் கொள்க. என் பிறப்புக் குறித்த பழைய தொடரை நீக்கிவிடுக.*

*என் தந்தையார் இனம் சிறுத்தது. அதனால் அருகி விட்டது. என் தாயார் இனம் பெருத்தது. அதனால் பல ஊர் களிற் பரவியிருக்கின்றது. என் அன்னையாரை மணந்த பின் என் தந்தையார் வழியில் எவ்வகை உறவும் வெளிப்படையாக வைத்துக்கொள்ள முடியாமற் போயிற்று.*

*என் தந்தையார் 1906 ஆம் ஆண்டிலும் என் அன்னையர் அதன் பின்பும் இறந்து போயினர். என் தந்தையார் உயிரோ டிருந்த போதே தம் தெய்வப் பற்றில் தந்தையார் குலத்தை மறைத்து விட்டதனாலும் அவர் இறந்து அரைநூற்றாண்டிற்கு மேலாகி விட்டதனாலும் அவர் முன்னோரைப்பற்றி இன்று பலர்க்கும் தெரியாது.*

*என் நூல்கள் எல்லாம் வெளிவந்தபின் என் வரலாற்றை நானே வரைவேன். அதில் என் தந்தையார் வழியை விளக்க மாய்க் குறிப்பிடுவேன்.*

*என் தாயாரின் முன்னோர் பள்ளக் குடியினராயினும் அவர் தந்தையார் ஓதுவாராகலின் தொழிற்படி அவர் பள்ள ரல்லர் என்பதே என் கருத்து. மேலும் அரிசன் என்பது எனக்கு மிக மிக அருவருப்பான சொல். இதைக்கொண்டு திருநாவுக்கரசு என்னை இறப்ப இழிவுபடுத்தியுள்ளது.*

**(கடிதத்தின் பக்கம் நான்கு)**

*என் தந்தையாரைப் பற்றித் தெரிந்திருந்தாலும் தெரிந்திரா விட்டாலும் உண்மைக்கு மாறான, உத்திக்குப் பொருந்தாத தமிழர் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான- ஆரியரால் புகுத்தப்பட்ட குலமுறையை ஏன் காட்டவேண்டும்? தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவன் என்றோ கிறித்தவக் குடும்பத்தில் பிறந்தவன் என்றோ குறித்திருக்கலாமே.. ஆரியக்குலப் பிரிவினையில் திருநாவுக்கரசுக்கும் நம்பிக்கைதான் போலும். தங்கட்கு இருப்பினும் எனக்கின்மையால் தாங்கள் அச்சிட்டிருப்பதை நான் சொன்னவாறு திருத்திக்கொண்டு இனிமேல் தங்கள் அறியாமைக்கு என்னை ஈடுபடுத்திருக்க. ஆய்தக் கட்டுரை அச்சாகியிருப்பின் மீண்டும் அச்சிடுக.*

*(ஒப்பம்)* **ஞா. தேவநேயன்**

*2-11-60இல் மீண்டும் கடிதம் எழுதினார் பாவாணர்: யான் 28-10-60* அன்று எழுதிய முடங்கலுக்கு ஏன் இன்னும் மறுமொழி யில்லை? அதை எளிதாய்க் கருதற்க. ஆய்தக் கட்டுரையில் இடை இடை சில பகுதிகளைச் சேர்த்தேன். அவற்றிற்கு மெய்ப்பு* (Proof) *இன்னும் வரவில்லை. அக்கட்டுரைக்கு முன்வரும் என் வரலாற்றுச் சுருக்க முகப்பில் "நான் சங்கரநயினார் கோவிலில் (முத்துசாமித் தேவர் மகன்) ஞானமுத்தனுக்கும் பரிபூரணம் அம்மையார்க்கும் பத்தாம் மகவாகவும் நாலாம் மகனாகவும் 7-2-1902 அன்று வெள்ளி மாலை 6 மணிக்கும் பிறந்ததாகச் சொல்லப்படு கின்றது" என்னும் தொடரை அமைத்துக்கொள்க.. அல்லாக் கால் கட்டுரையை வெளியிடற்க. ஆயதக் கட்டுரையின் 2ஆம் மெய்ப்பும் வரல் வேண்டும்" என்றார்.*

*மூன்றாம் கடிதமும் 1-12-60இல் வரைகின்றார். அதில் ஒரு தலைப்பு, 'என்குலம்' என்பது. அதில். "என்தந்தையார் முதுகுடிப் பிறந்த முத்துசாமித் தேவரின் மகனார் ஞானமுத்தனார். அவர் மறுமணஞ் செய்தபோது கலப்புமணம் செய்துகொண்டார். நான் விடுதலை கண்ட தன்னுரிமைத் தமிழனாகலின் பிறப்பொடு தொடர்புற்ற ஆரியக் குலப்பிரிவினைக் கட்டிற்கு அடங்கியவன் அல்லேன். ஆதலால் குலச்சார்பற்ற முறைப்படி அந்தணர் என்னும் வகுப்பில் பார்ப்பார் என்னும் பிரிவில் ஆசிரியன் என்னும் உட்பிரிவினேன்" என்றெழுதுகிறார்.*

---

"27–10–60 என்பதை நினைவுத்தவற்றால் 28–10–60 என்கிறார்.

பின்னே. அடிகளார் வரலாறு 'கழகநூல் அன்று' என்றும். அதனை வெளியிட்டவர் மறை திருநாவுக்கரசே என்றும். அறிந்துகொண்ட பாவாணர், பொறுத்துக் கொள்ளுமாறு கழக ஆட்சியாளர்க்கு 7-12-60இல் கடிதம் எழுதுகின்றார்:

"மறைமலையடிகள் வரலாற்றைத் தாங்களே வெளியிட்டதாக என் மாணவர் அருணாசலம் தவறாய்ச் சொன்னதை நம்பிச் சினந்தெழுதிவிட்டேன்.. அன்புகூர்ந்து பொறுத்துக் கொள்க. என் ஆராய்ச்சி நூல்கள் ஐம்பதும் வெளிவந்த பின்னரே என வரலாற்றை விரிவாய் வரைவேன். அன்புகூர்ந்து திருநாவுக் கரசின் முகவரியை உடனே தெரிவிக்க" என்பது அக்கடிதச் செய்தி.

அடிகளார் வரலாறு 1959இல் வெளியிடப்பட்டது. அதன் மறுபதிப்பு வந்திலது. வந்த பதிப்பிலும் வந்தநிலை மாறிற் றில்லை. ஆய்தக் கட்டுரையோ கழகத்தின் ஆயிரத்தெட்டாவது நூல் வெளியீட்டு விழா மலருக்கு எழுதப்பட்டது. மலர் வெளியிடப் பட்டது 21-8-1961இல் ஆகும். அதில் கட்டுரைப் பகுதியில் 53 ஆம் பக்கத்தில் ஆய்தம் இடம் பெற்றுள்ளது.. அதிலுள்ள ஆசிரியர் குறிப்பு:

தேவநேயப்பாவாணரவர்கள் 7-2-1902இல் சங்கரநயினார் கோவிலிற் பிறந்தார். வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆம்பூரில் நடுநிலைப்பள்ளியொன்றில் கல்வி கற்கத் தொடங்கிப பாளையங்கோட்டையில் பள்ளியிறுதிப் படிப்பை முடித்துப் பின்னர் தமிழணங்கை வணங்கித் தாமே இலக்கண இலக்கியங் கள் பயின்று 24ஆம் அகவையில் தமிழ்ச் சங்கப்பண்டிதர் தேர்வில் தேறி, தமிழாசிரியர் பணிமேற்கொண்டு 23 ஆண்டுகள் உயர்நிலைப்பள்ளியிலும் 12 ஆண்டுகள் கல்லூரியிலும் பணி யாற்றியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ.பட்டம் பெற்றுப் பேராசிரியராகத் திகழும் இவர். தற்போது அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித்துறையில் வாசகராக (Reader)ப் பணியாற்றி வருகிறார். கடந்த முப்பது ஆண்டுகளாக மொழியாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இவர். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் வழூஉக் களைக் களைந்து வருவதோடு, தனித்தமிழுக்கு அளித்துவரும் ஆக்கமும் அளப்பரிது" என்பதாம்.

இதில் பாவாணர் குறிப்பிட்ட குறிப்புகள் இடம் பெற வில்லை. ஏனெனில், அதன் அச்சுப்பணி அதன் முன்னரே

முடிந்து விட்டதாகலாம்! அன்றிப் பாவாணரே சினந்தணிந்து தம்கருத்தை வலியுறுத்தாமல் விட்டிருக்கலாம்! உணர்வு உந்தப் பட்ட நிலையில் சொல்லியவற்றை நீரிற் கிழித்த வடுப்போல நினைவினின்று அழித்து விடுவதும் அவர்க்கு இயல்பு. எவரோ சொல்லிய ஒன்றைக் கேட்ட அளவிலே சினந்து உரறும் பாவாணர், உண்மை அறிந்த அளவானே நெஞ்சம் உருகித் தம் கருத்தை மாற்றிக்கொள்வதுடன் முற்றாக மறந்துவிடுதலும் இயற்கையாம்.

இக்கடிதத்தால் அவர்தம் குலக்கருத்தின் புதுமையும், தற்போதுள்ள குலக்கருத்தின் இழிவரவும், ‘குலமற்ற தமிழன்’ என்பதிலுள்ள வீறும் விளக்கமாம்.

# 22. மனைவி மக்கள்

*மனைவி மக்கள் பிறவித் தொடர்பாளர்; உவப்பினும் காயினும் உறவுரிமை நீங்காது ஒன்றியவர்: அவர்தம் கூட்டால் நடத்தும் இயற்கை உணர்ந்தே இல்வாழ்வை 'இயல்பினால் வாழும் வாழ்க்கை' என்று திட்டப்படுத்தினார் ஆசிரியர் திருவள்ளுவர். அத்தகைய மனைவி மக்கள் மேல் இயற்கையாகவே பற்றும் உரிமையும் கொண்டிருத்தல் பொதுநியதி. அப்பொது நியதியில் விஞ்சி நிற்கும் புகழ் வாழ்வினரும் உளர். அவருள் ஒருவர் பாவாணர் என்பது நன்கனம் விளங்குகின்றது.*

*"என் மனைவிக்கு இது 7ம்மீ. ஆகையால் தன் தாயூர்க்குச் செல்கின்றாள். அவள் தங்கை சென்னையில் இருக்கின்றாள். அவளை உதவிக்காக கூட்டிக்கொண்டு வரவேண்டும்"*[1]

*"என் மனைவி கொடுமுடியில் சுகமாயிருக்கிறாள். இது 9ஆம் மாதம். முதற்பேறானபடியால் இம்மாதக் கடைசியில் இருக்கும் பிள்ளைப்பேறு"*[2]

*"கொடுமுடிபோய் அங்கு இருவாரம் இருந்து இந்த மீ 4உ என் மனைவியுடனும் குழமகனுடனும் கடவுள் அருளால் இங்கு (மன்னார்குடி) சுகமாய் வந்து சேர்ந்தேன்"*[3]

*"என்மகன் சென்ற இரண்டு வாரமாய் வயிற்றளைச்சலால் பெரும் பாடுபட்டுப் போனான். இன்று தெய்வத் திருவருளால் சுகமாயினும் பணமுடை பெரிதாய்விட்டது. எந்தக் கணக்கிலேனும் 5ரூ உடனே விடுத்தீர்களாயின் பேருபகாரமாகும். மனம் நன்னிலையில் இல்லை. பணம் அனுப்பினீர்களாயின் உடனே ஓர் தலைசிறந்த கட்டுரை எழுதியனுப்புவேன். சொந்தப்பணத்தை அனுப்பினாலும் சம்பளத்தில் கொடுக்கச்சித்தம். வேறுபட எண்ணற்க"*[4]

*"நூலை அச்சிட்டு முடிந்ததும் எனக்குச் சேரவேண்டிய எஞ்சிய தொகையை மொத்தமாய் அனுப்பிவிடுக. என் மனைவிக்கு மிகத்தேவையானதோர் நகை செய்தல் வேண்டு"*[5]

1. 18–8–31 (வ.சு.)
2. 12–10–31 (வ.சு.)
3. 7–1–32 (வ.சு.)
4. 11–1–33 (வ.சு.)
5. 23–10–34 (வ.சு.)

*"எனது அத்தான் கொடுமுடியில் இறந்துபோனார். இதை நண்பர் நாயுடுவிற்குத் தெரிவிக்கவும்"*[6]

*"என் அக்காளின் இளைய மகளும் என் மனைவியின் தங்கையுமாகிய நீலாம்பாள் என்னும் 18 ஆண்டுப் பெண்பிள்ளை சென்ற வாரம் முழுதும் கடு நோயாய்க் கிடந்து நேற்றுக்காலை இறந்து போனதால் எழுத்து வேலை சிறிதும் நடைபெறவில்லை. இன்னும் ஆற்றொணாத் துயரம். இரண்டொரு நாளுக்குப் பின்னே கட்டுரை விளக்கம் வரும்"*[7]

*"என் கொழுந்தியார், இறந்தது மிக எளிதான காரியமன்று. என் அக்காள் குடும்பப்பொறையே என்மேல் விழுந்ததினால் பல ஒழுங்குகள் செய்யவேண்யிருந்தது. பின்பு என் கைக் குழந்தை நோய்வாய்ப்பட்டு இன்னும் முழுச்சுகமும் பெற வில்லை. இதனால் எனக்கு ஓய்வில்லாதிருந்தது"*[8]

*"என் முந்திய கடிதங்களெல்லாம் உங்களை ஏமாற்றித் தானிருக்கும், ஆனால் என் செய்வது? ஒன்றன் பின் ஒன்றாகத் துன்பங்கள் அடுக்கி வருமானால் சொன்னபடி செய்ய முடிய வில்லை. என் கைக்குழந்தைக்கு இன்னும் நலமாகவில்லை. நாள்தோறும் மருத்துவம்தான். நான் கவனிக்காவிட்டால் வேறு ஆளில்லை. நாளிற் பெரும் பகுதி அதிலேயே செலவா கிறது. ஆனாலும் இது விடுமுறைக் காலமாதலால் இயன்றவரை எழுதி வருகிறேன், வியாச விளக்கம் மிகத்திருந்திய முறையில் இன்னும் இரண்டொரு நாளில் உங்கள் கைக்கு வந்து சேரும். கவலற்க. என் அக்காள் மகன் இங்கே படிக்கிறவன் விளை யாட்டில் வலது கை எலும்பு முறிந்து நாள்தோறும் சிகிச்சை செய்யப்படுகிறான்."*[9]

*"இன்றுதான் உளம் அமைதியடைந்தது. குழந்தை நலமாகி விட்டது. பையனுக்கு முறிந்த முறிவும் கூடிவிட்டது. ஆனாலும், நீங்கள் குறிக்கும் காலம் மிகக் குறுகியதாகியிருப்பதால் இலக்கண நூல்களை இவ்வாண்டே ஒப்புக்கொள்விற்கு அனுப்புமாறு எழுதவியலாது. அடுத்த ஆண்டிற்குப் பயன்படு மாறு எழுதவேண்டுமாயின் எழுதுகிறேன்"*[10]

*"என் அருமைக் குழமகன் பைந்தமிழ் வளர்த்த பாண்டியன் முந்தாநாள் (24-12-39) ஞாயிறு காலை 8 மணிக்கு மீளாவுலகம்*

6. 4–11–38 (வ.சு.)
7. 21–8–39 (வ.சு.)
8. 11–9–39 (வ.சு.)
9. 20–9–39 (வ.சு.)
10. 7–10–39 (வ.சு.)

*புகுந்துவிட்டான். இவ்வருத்தம் என் வாழ்நாளெல்லாம் நீடும். சென்ற ஒரு மாதமாய் நோய் கொடிதாய் இருந்தமையின் என்னால் வேறு வேலை ஒன்றும் செய்ததற்கில்லை.”*[11]

*“என் மகன் திருமணம் இன்னும் நாட்குறிப்பிடப் பட வில்லை. ஆயின் அடுத்த மாதமாதலால் இன்றிருந்தே முன்னேற்பாடுகள் செய்யவேண்டியிருக்கிறது. திருமணத்திற்கு உடுப்பே 300 உரூபாவிற்கு மேற்பட்டுவிடும். அதைச் சென்னை யிலேதான் வாங்கலமென்றிருக்கிறேன். என் மகனுக்கு ஒரு கைக் கடியாரமும் வாங்கவேண்டியிருக்கின்றது. எத்தனை சிக்கனமாக முடிப்பினும் திருமணச் செலவு ஆயிரம் ரூபாவிற்கு இழுத்துவிடும்.”*[12]

*“என் மகன் நம்பிக்கு ஆவணி 3 ஆம் நாள் 19-8-57 கோயிலில் திருமணம். அழைப்பிதழ் அச்சாகின்றது. காரிக்கிழமை (சனிக் கிழமை) விடுப்பேன்.*[13]

*என் மனைவியார் அகுத்தோபர் 27 ஆம் பக்கல் (தேதி) இறந்தார். அன்று மருத்துவச் சாலைக்கு வாடகை இயங்கியில் அனுப்ப என்னிடம் 10 உரூபா இல்லாதிருந்தது. அனுப்பி யிருந்தால் பிழைத்திருப்பார்.*

*நானும் என் மனைவியும் ஒருயிரும் ஈருடலுமாக இருந்தோம்..அவர் பிரிவு என்னாற் பொறுக்குந் தரமன்று. “பல்சான்றீரே பல் சான்றீரே” என்னும் புறச் செய்யுளை நோக்கினால் என் கூற்று விளங்கும். காதல் பெண்பாற்கு மட்டும் உரியதன்று. முக்கடமைகளை நிறைவேற்றவே இன்று உயி ரோடிருக்கின்றேன். அவற்றுள் ஒன்று வடமொழியினின்று தமிழை மீட்டல்.*[14]

*யானும் என் மனைவியும் ஒருயிரும் ஈருடலுமாக இருந்தோம்..இன்று என் நிலைமை எங்ஙனமிருக்கும் என்று உய்த்துணர்ந்து கொள்க. மணமாகாத என் இருமக்கட்காகவே உடல் தாங்கிக் கொண்டிருக்கிறேன்.*[15]

*என் ஆருயிர் மனைவியார் பிரிவுத் துன்பம் ஆற்றொண ததும் தாங்கொணாததும் ஆதலின், இன்னும் மூன்றாண்டிற்கு மேல் இருக்க விருப்பமில்லை. அதற்குள், தமிழ் வடமொழியி னின்று மீட்கப்பட்டுவிடும்.*[16]

11. 26–12–39 (வ.சு.)
12. 19–1–57 (வ.சு.)
13. 9–8–57 (வ.சு.)
14. 11 சுறவம் 1995 (வி.பொ.ப.)
15. 26–11–63 (வி.அ.க.)
16. 20 கும்பம் 1195 (வி.பொப.)

என் மனைவியார் இறந்த அன்றே என் உலக வாழ்க்கை முடிந்தது. மூன்று கடமைகளை நிறைவேற்றத்தான் இன்னும் மூவாண்டு உடலோடிருப்பேன். அவற்றுள் ஒன்று வட மொழியினின்று தமிழை மீட்டல். [17]

இறைவன் அருளால் என் மகளுக்குத் திருமண ஏற்பாடு உறுதியாகியுள்ளது. திருமணம் 19-4-65; இடம் சென்னை.

மணவாளப் பிள்ளை பள்ளியிறுதி தேறியவர், எண்ணூரில் உள்ள இயங்கித் தொழிற்சாலையில் கணக்கர். என் மகளுக்குத் துணை வேண்டியிருப்பதாலும், என் நூல் வெளியீட்டிற்குச் சென்னையே தலைசிறந்த இடமாகையாலும், நான் குடியிருக்கும் வீட்டுக்காரர் மேமீ வீட்டைவிடச் சொல்வதாலும் இங்கு எனக்கு யாதொரு பற்றுமின்மையாலும், எண்ணூரிலேனும் திருவொற்றியூரிலேனும் வீடு பார்க்கச் சொல்லி விட்டேன். ஆதலால் அன்பு கூர்ந்து திருநகரில் வீடுபார்க்கும் முயற்சியை விட்டுவிடுக.[18]

என் முதல் மனைவியார் இறந்தபின் ஓராட்டைக் குழந்தையாயிருந்தவனை என் சின்னண்ணார் தமக்குப் பிள்ளை யில்லையென்று தெத்துப் பிள்ளையாக எழுதிக் கொடுத்து எடுத்துக்கொண்டார். பதினெண்ணாட்டைப் பருவத்தில் வினவியபோதும் அவரே தந்தையாரென்றும் என் மக்கள் அவனுடன் பிறந்தாரல்ல ரென்றும் கூறி மீண்டும் உறவு கூடும் வாய்ப்பையும் இழந்து விட்டான். அதனால் குழந்தைப் பருவத்தி னின்றே அவனுக்கு (மணவாள தாசனுக்கு) என்னொடு தொடர்பு இல்லாது போயிற்று. அவனை மகனென்று அதன் பின் நான் கருதவுமில்லை.[19]

‘தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்’

என்பது தமிழ்ப் பொதுமறை. என் கோட்பாடுங் கொள்கையும் என்னதென்றும்., அதனால் நான் பட்டபாடும் கெட்டகேடும் தங்கட்கு நன்றாகத் தெரியும். எனக்கு அவனொடு தொடர்பு இல்லையென்றும், அவன் கொள்கையில் அக்கறை கொள்ள வில்லையென்றும் நன்றாகத் தெரிந்திருந்தும், என்னை அவனொடு தொடர்புபடுத்தி என் பெயரைக் கெடுத்துள்ளீர்கள்.

17. 27–1–64
18. 29–3–65 (வி.அ.க.)
19. 31–12–69 (வி.அ.க.)

*உள்ளத்தளவில் அல்லாவிடினும் செயலளவில் தாங்கள் எனக்குப் பகைவர்போல் தீங்கே செய்துவிட்டீர்கள்!"*

*தீமை செய்தவன் கெடுதல் தீயைத் தொட்டவன் சுடப் படுதல் போல் தப்பாது என்பதைத் தீமை (தீத்தன்மை) என்னும் சொல்லே உணர்த்தும்.*[20]

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

*என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாம் வாழ்வு பாவாணர் வாழ்வு என்பது இப்பகுதியால் விளக்கும். இவன் மறமாவது வீரம்! பாவம் என்னும் பொருளது அன்று!*

20. 31–12–69 (வி.அ.க.)

## 23. மகளார்க்காக வாங்கிய மான்குட்டி

*பாவாணர் தம் மகளார் மகிழ்வுக்காகவும் மனநிறைவுக் காகவும் மான்குட்டி வாங்கி வளர்த்தார் என்பது கடித வழியாகத் தெரிந்து கொள்ளும் செய்தியாகும்.*

*பாவாணர்க்கு அணுக்கராகவும் ஆர்வத் தொண்டராகவும் இருந்தவருள் ஒருவர் சேலம் அரிமாப் புலவர் திரு. சின்னாண் டார். அவருக்கு 29.6.64இல் எழுதிய கடிதத்தில், "ஏத்தாப் பூரிலாவது ஆற்றூரிலாவது புள்ளிமான் குட்டி விலைக்குக் கிடைக்குமா?" என்று வினவுகிறார். தாமும் பிற வகைகளாலும் மான்குட்டி வாங்கும் முயற்சியை மேற்கொள்கிறார். பின்னர், "மான்குட்டி ஆரூர்ப் பக்கத்தில் இருக்கிறது. ஆதலால் அங்குப் பார்க்க வேண்டாம்." [1] என்னும் பாவாணர், புள்ளிமான் கலைக்குட்டி ஒன்றை விலைக்கு வாங்குகின்றார். வாங்க நேர்ந்த நிலை வாங்கிய வகை, கொணர்ந்த திறம் இவற்றையெல்லாம் 25.7.64இல் எழுதுகிறார். ஒரு குட்டி மறுகுட்டியைத் தேடித் திரியும் வேட்கையைக் கிளப்பியதையும் அக்கடிதத்தில் அறிந்து கொள்ள முடிகின்றது சேலத்திலிருந்து அரூர் வந்து அன்று இருபுலவருடன் கோட்டப்பட்டி சென்று இராத் தங்கி மறு நாட்காலையில் புள்ளிமான் கலைக்குட்டி 100 உரூபாவிற்கு வாங்கிக் கொண்டு அரூர் திரும்பினோம். அன்னையார் இறந்ததி னாலும் இன்னும் மணமாகாமையாலும் வேறு துணை யின்மையாலும் மகள் ஆறுதலடைதற் பொருட்டே, அவள் அவாவியவாறு அத்துணை விலைகொடுத்த அதனை வாங்க நேர்ந்தது. மேலும் அவளுக்குரிய வீணையை 150 உரூபாவிற்கு விற்றுத்தான் அதனை வாங்கினோம். குட்டி இற்றை நிலைமையில் அவ்விலை பெறும். ஆயினும் 50 உரூபாவிற்கும் வேறிடத்தில் வாங்கலாம்.*

*"குட்டியைப் பேரியங்கியில் ஒருவரும் ஏற்ற இசை யாமையால் மொரப்பூர் சென்று புகைவண்டியில் ஏற்ற விரும்பினோம். ஆயின் குட்டி புதிய ஆட்களைக் கண்டு மருண்டு*

---

1. கடிதம் 2.9.64.

முரண்டு பண்ணியதால், புகைவண்டிக் கூண்டில் அடைப்பது சேதத்திற்கிடமாம் என்று ஒருவர் தவறாய்ச் சொல்லிவிட்டார். அதை நம்பி தி.வி.எசு. வில் (T.V.S) அனுப்புமாறு சீநிவாசன் இராசேந்திரன் என்னும் இரு புலவரிடமும் சொல்லிவிட்டு இங்கு வந்தேன். தி.வி.எசு. வில் உயிரிகளைக் கடத்துவது இல்லையென்று அறிந்ததினாலும் என் மகள் உடனே கொண்டு வர விரும்பியதாலும் மறுநாளே அரூர்சென்று அடுத்த நாட் காலை அவ்விரு புலவருடனும் ஒரு மாணவருடனும் மொரப்பூர் கொண்டுபோய் நண்பகல் இணைப்பு விரைவானில் (Link Express) ஏற்றிவிட்டோம். மாணவர் என்னுடன் இங்குத் துணைக்கு வந்து திரும்பினார்.

மான் நன்றாய்ப் பழகியிருக்கின்றது. ஆயின், ஒரு புள்ளி மான் பிணைக்குட்டி வேண்டும். இல்லாக்கால், கலைக்குட்டி பெரிதானவுடன் மலை நாடலாம். உடனே தாங்கள் ஏத்தாப்பூர் நண்பருக்கெழுதிக் கேட்க. ஆற்றூர்ச் சந்தைக்கு மான்குட்டி விற்பனைக்கு வருமென்று சேலத்திலிருந்தபோது கேள்விப் பட்டேன். அங்கு வராவிடினும் அப்பாக்கம் யாரும் வளர்த்து விற்கலாம். மும்மாதக் குட்டியாயிருப்து நல்லது. ஆறு மாத மாயினும் குற்றமின்று. 25 முதல் 50 உரூபாவரை தரலாம். அரூர்ப்பக்கம் இப்போது ஒருவரிடத்துமில்லை" என்றெழுதி னார்.

புள்ளிமான் பிணைக்குட்டி ஒன்று வேண்டும் என்னும் எண்ணம் பாவாணர்க்கு ஏன் எழுந்தது? ஏனெனில், கலைக்குட்டி யன்றோ வாங்கியுள்ளார்! கலைக்குட்டி பெரியதானவுடன் பிணைதேடிமலை நாடலாம் என்பது அவர் எண்ணமாயிற்றே! ஆதலால், பிணை மான்குட்டி தேடும் வேட்டம் அடுத்த எழுந்தது.

அதனால் அன்பர்களுக்குத் தம் ஆர்வத்தை எழுதினார். திரு.மி.மு.சி. அவர்களுக்கு 7-10-64ஆம் நாளிட்ட கடிதத்தில் தமக்குப், "புள்ளிமான் பிணைக்குட்டி கிடைத்தவுடன் தெரி விக்க" என்றெழுதினார்.

"புள்ளிமான் பிணைக்குட்டி கிடைத்ததா?" என மீண்டும் 24-11-64இல் வினவினார்.

பிணைமான்குட்டி, இணைசேர்க்கும் வண்ணம் கிடைத்திலது! அதனால், கலைக்குட்டி மலைநாடுமுன் அதனை விற்றுவிட வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்றுப் போலும்! ஆத லால், தழிழ்ப்பாவை ஆசிரியர் திரு. அருளர் (கருணை)க்கு

*5-12-64இல் "என்னிடம் ஒரு புள்ளிமான் கலை இருக்கின்றது. அதை 150 அல்லது 100 உரூபாவிற்கு வாங்குவார் யாரேனும் ஆங்கு (மதுரையில்) உண்டா?" என்று கேட்டு எழுதினார்.*

*அவர் விரும்பிய வண்ணம் பிணைக்குட்டி கிடைத்ததோ? கலைக்குட்டி விற்கப்பட்டதோ? கிடைத்த கடிதங்களில் அதற்கு மேல் செய்தி கிடைக்கவில்லை.*

*ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவின் உறையுளாகத் திகழ்ந்த பாவாணர் அன்புள்ளம் ஒரு மானைத் தேடிக் கொணர்கின்றது; அருளுள்ளும் விடுதலை தர முனைகின்றது! எதிர்பார்க்க இயலாத முரண் இயல்புகள் இவை!*

*வேர்ச்சொல்லாய்விலேயே வேளையை யெல்லாம் செல விடும் ஈடுபாட்டாளர் பாவாணர்! பண்ணிசைத்துப் பாடவும் கருவி கொண்டு இயக்கவும் கற்று இசைத் துறையிலும் இடம் பெற்றிருந்தார். இசைத் துறையில் பணியாற்றவும் வேட்கை கொண்டு இருந்தார்! எதிர்பார்க்க இயலாத முரண் இயல்புகள் இவை!*

*உள்ளொத்த நேயம் ஒன்றிருந்தால் முரணும் அரணாம் என்பது தெளிவாம்! நேயத்தின் முன்னே முரணென்னே! அரணென்னே!*

## 24. நோய், நொடி, நொம்பலம்

*நோய் நொடி என்னும் இணைமொழியுள், நோவு தரும் பிணி வகைகளை நோய் என்றும், வறுமைக் குழியுள் தள்ளும் இன்மையை நொடி என்றும் சுட்டியமை தெளிவு. (நொம்பலம்: துன்பம்) பாவாணர்க்கு இவ் விருவகை இடர்களும் என்றும் இருந்தன. வளமையில் பிறந்தாரல்லர் பாவாணர்: வளமையில் வளர்ந்தாரும் அல்லர்: வளமையில் வாழ்ந்தாரும் அல்லர்; இயல்பான உடல் நோயொடு பருவ வேறுபாட்டு நோயும் அவரைப் பற்றிப் பதைப்பூட்டின! வல்லாங்கு வாட்டும் வறுமை யூடு, பொல்லாங்கு உரைப்பார் புன்மையும் நாளும் பொழுதும் புன்முறுவல் பூத்து நின்றன! அவர்அஞ்சாத அடலேறாய், நிலைதிரியா மலையாய் நின்றாலும் நெஞ்சம் ஒரொருகால் கனன்று நெகிழ்ந்துரைக்கவும் அவை செய்தன. அவ்வாறு வெளிப்பட்ட செய்திகளுள் சில வருமாறு: இவை காலவகை அடைவால், பொருள்முறை ஒழுங்கு திரிந்து கிடப்பனவாம்.*

“இங்கே நான் எள்ளளவும் எதிர்பாராத ஓர் இடர்பாடு, எனக்கு நேர்ந்துள்ளது. பஞ்சாபிகேசையர் (பி.ஏ.,எல்.டி.,) என்பவர் ஒருவர். இதுகாறும் கால அட்டவணை மட்டும் வரைந்து வந்தவர்: காலேஜ் கணக்காசிரியர் இன்று துரையின் இளைக்காரத்தின் நிமித்தம் பல்வகையில் தலையிட்டு நான் உங்களிடம் ஏதோ பணம் பெற்றுக்கொண்டு உங்கள் வெளியீட்டு நூல்களை வைத்திருப்பதாகத் துரையிடம் பொய் சொல்லிவிட்டார். துரையும் சிறிதும் மூளையின்மையின் நம்பிக்கொண்டார். இதனால் வகுப்புப் பாடப் புத்தகங்களை நியமிக்க ஒரு கூட்டம் கூடிற்று, பாடப்புத்தகப் பட்டியல் வையகத்துறக்கத்தை 3ஆம் பாரத்திற்கும் பொன் கதைக் கொத்தை 5ஆம் வகுப்பிற்கும் (Fifth Class) குறித்திருந்தேன். Primary department க்கு Non-Detail வேண்டாமென்று பொன் கதைக் கொத்து நீக்கப்பட்டது. ஆங்கில வழக்குகள்(English Idioms) உள்ள மொழிபெயர்ப்பு நூலென்று வையகத் துறக்கம் முதலில் நீக்கப்பட்டது. இவற்றிற்கெல்லாம் காரணம் க்ஷ ஐயர். அவரே இங்ஙனம் குறை கூறித் தள்ளுமாறு சிலரைத் தூண்டி யவர். துரையும் அவ் ஐயர் வயப்பட்டு அவர் ஆணைவழி

நிற்கிறார். ஆகையால் என்னால் ஒன்றும் செய்வதற்கில்லை. ஒருக்காலும் ஓரிடத்தும் இல்லாத புதுமாதிரியாய் நிகழ்ந்திருக்கிறது. இன்னோர் இடப்பாடும் எனக்கு நேர்ந்திருக்கிறது. அதைப்பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுவேன். வேலைக்கு மட்டும் கேடில்லை. பண்டிதர்க்குரிய உரிமையும் அதிகாரமும் எடுபட்டன.

நான் சென்ற வாரமே வேலையை விடுவதற்கிருந்தேன். ஆனால் ஒரு பயனோக்கி இவ்வாண்டு முழுவதும் இங்கிருக்கத் துணிந்தேன். விடுமுறைக்கு முன்பு க்ஷ ஐயர் தமிழ் நூல் நியமுகத்தில் தமக்குத் தலைமை உரிமை இருக்க விரும்பினார். நான் சிறிதும் இடம் கொடுத்திலேன். இதுவே இத்துணை இடர்க்கும் காரணம். துரைக்குக் கலாசாலையை நடத்தும் திறமையில்லை. அதனாற்றான் எல்லாவற்றையும் க்ஷ ஐயர் வசம் விட்டிருக்கிறார். ஆனாலும் ஒரு காலம் வரும். அதற்காகப் பொறுமையாகக் காத்திருக்கிறேன்”[1]

“வாணியம்பாடி இஸ்லாமிய காலேஜுக்கு ஒரு வித்துவான் வேண்டுமென்று விடுமுறையில் ஓர் விளம்பரம் இந்துப் பத்திரிகையில் கண்டேன். அது இம்மாதம் 19ஆம் உ வரை இருந்தது. இங்ஙனம் நேருமென்று எண்ணவேயில்லை. இன்றேல் அன்றே விண்ணப்பித்திருப்பேன். எல்லாம் இறைவன் செயல்.”[2]

“இந்த வாரம் எனக்குக் கொஞ்சமேனும் ஊக்கம் கிடையாது; எனக்கு இந்தப் பாடசாலையில் 4 ஆண்டுகள் ஆகிவிட்டன” என்று காலத்தைக் கணக்கிடத் தொடங்கி விட்டார் பாவாணர்.[3]

“உலகம் அழுக்காறு நிறைந்தது” என்று அடுத்த சில நாள்களில் எழுதுகின்றார்.[4]

இந்த மன அடிகளுக்கு இடையே வறுமையும் சேர்ந்து கொண்டது; அஃதவர்க்கு என்றுதான் இல்லை!

“இம்மாதம் 15 ஆம் வுக்குள் 10 ரூ அனுப்பமுடியுமானால் அனுப்புக. கடன் கழுத்தை நெருக்குகிறது. இன்னும் 3 மாதத்திற்குள் என் 100 ரூக் கடனையும் தொலைப்பீர்களாயின் அதுவே எனக்குப் பேருபகாரமாக இருக்கும்”[5]

---

1. 1-7-31 (வ.சு)
2. 1-7-31 (வ.சு.)
3. 18-7-31 (வ.சு.)
4. 29-7-31 (வ.சு.)
5. 10-7-31 (வ.சு.)

“எனக்குப் பணவுதவி இன்றியமையாததேனும் நூல் வெளியீடே மிகவும் ஊக்குவதாய் இருக்கும். ஆகையால் உடனே இலக்கணத்தையும் இதையும் (இக்கதையையும்) அச்சிடுக”[6]

“இப்போது 20உக்குள் தயவுசெய்து 10ரூ அனுப்பி உதவுக. பணத்திற்கு பெரிய முடை. தாட்செலவுக்கும் தபாற்செலவுக்கும் கூடப் பணமில்லை. என் கடன் தொலைந்துவிட்டால் உங்களைத் தொந்தரவு செய்யமாட்டேன்”[7]

“பலவிதத்தில் எண்ணிப் பார்க்கையில் இன்னும் இரண்டோராண்டு இங்கே கழிக்கலாமென்றேயிருந்தேன். ஆனாலும் இந்தக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்துள்ளேன். 55 ரூ. கேட்டிருக்கிறேன். அக்கல்லூரி முதன்மைபற்றிக் காஞ்சித் திணையிலுள்ளது என்ற செய்தி எனக்கெட்டுகிறது: இனிமேல் வெளியேறிச் செல்வதாயின் 55 ரூபாய்க்குக் குறையாதிருக்க வேண்டும். அடுத்த ஆண்டில் பரீட்சைக்கு விண்ணப்பம் செய் வேன். பரீட்சை தேறினபின் குறை வாராது.[8]

“யான் இங்கு (திருச்சி) வந்ததும் சொல்லாதிகார வேலையைத்தான் தொடங்கினேன். ஆனால் வெயில் கடுத்து வெக்கை மிகுந்ததினால் நிறுத்திவிட்டேன். இதுவரை எதுவும் செய்ய இயலவில்லை. படிக்க விரும்பியதைப் படிக்கவுமில்லை. சேலம் கட்டுரையைத் தொடங்கவுமில்லை. சும்மா இருப்பதுகூட வேதனையாயிருந்தது. இன்றுதான் சற்றுத் தணிந்திருந்தது. எப்படியாவது 14ஆம் உயான் அங்கு வருமுன் முடித்துக் கொண்டு வருகிறேன்.”[9]

உங்களுக்கு நண்பர் இ.மா. அவர்கட்கும் என்மீதுள்ள பற்றி னால் 65 ரூபாயானாலும் ஏற்றுக்கொள்ளச் சொல்கிறார்கள். தற்போது அங்கு வருவதால் ஏற்படும் வசதிக்குறைவும் முட்டுப் பாடும் கொஞ்ச நஞ்சமல்ல. இப்போது 10ரூ கொடுத்து வசதியான வீட்டிலிருக்கிறேன். அங்கு இத்தகைய வீட்டிற்கு 25ரூ கொடுக்க வேண்டும். சிறுவீட்டில் என் பொருள்கள் அடங்கா. அரிசித் திண்டாட்டம் நினைப்பினும் வருத்துகின்றது. பையன்கள் பல பள்ளிகளில் அமர்ந்து படிக்கிறார்கள். அங்கு வந்தால் புதுப்புத்தகம் வாங்கிப் புதுப்படிப்புத் தொடங்க வேண்டும். இங்கு வாங்கிய புத்தகம் வீண். தவணையிடையில் இடமாறினால் தவணைச் சம்பளம் கட்ட நேரும். என் மருமகன்

6. 23–7–31 (வ.சு.)
7. 14–2–31 (வ.சு.)
8. 23–10–31 (வ.சு.)
9. 31–5–44 (வ.சு.)

*ஒருவன் இங்கு 5ஆம் பாரத்தில் இலவசமாய்ப் படிக்கிறான்: அங்கு வந்தால் இது நீங்கும். தற்போது புகைவண்டியில் ஓர் ஆடவனுக்கே இடமில்லை. குடும்பத்தோடும் கைக்குழந்தை யோடும் வர எங்ஙனம் இயலும்? இங்குள்ள நண்பர்கள் போக வேண்டாமென்று தடுக்கிறார்கள்.. உயர்நிலைப் பள்ளிதானே என்றும் அங்கத்து 70 ரூ இங்கத்து 50ரூ என்றும் சொல்கிறார்கள். அது உண்மைதானே! எனக்குச் சென்னைக்கு வர விருப்பம்தாம். ஆனால் விலைமிகுந்தும் பொருள் கிடையாத காலத்தில் எப்படிக்குடும்பத்தோடு வரமுடியும்? என்றாலும், தாங்கள் விருப்பத்திற்கிசைந்து மேலாளர் வாயிலாய் இன்றை அஞ்ச லுக்கு விண்ணப்பம் விடுத்துவிட்டேன் 70ரூபாய்க்கு குறையாது பார்க்க. முக்கியமான வேலையிலேயே போதிய வருமானம் வரவேண்டும். பிற முயற்சியும் செய்து பிழைப்பது நன்றன்று. குறிப்பு : தற்போது 5க்குள் ஓர் அறை பார்க்க. எதிர்க்கடையில் சாப்பிடலாம்.”[10]*

*“அமர்த்தாணை வந்தவுடன் சம்பளம் இங்குள்ளதுதானே என்றார்கள். பின்பு முத்தையால்பேட்டைப் பள்ளியில் உயர்ந்த சம்பளத் திட்டம் போடுவார்கள் அதன்படி கொடுக்க மாட்டார்கள் என்றார்கள். பின்பு 3 மாத அறிவிப்பாவது 3 மாத சம்பளமாவது கொடுக்கவேண்டும் என்றார்கள். இவர்கள் சொல்கிற சம்பளத்திற்கு உடனே ஆள் கிடைக்கவில்லை, ஆகையால் இராமராவ் என்னும் சின்னப்பண்டிதரையே பெரிய பண்டிதராக்கச் சொல்லியிருக்கிறேன். அவரும் போகிறதாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறதினாலே 50 ரூ கொடுத்தால் இருக்கிறேன் என்கிறார். மேலாளர் 48 வரை வந்திருக்கிறார். இன்னும் 2 கூட்ட வேண்டுமென்று சின்னவர் சொல்கிறார். அவரது பழைய சம்பளம் 40. இம்மாத இறுதிக்குள் ஏதேனும் ஒழுங்காகும். வருகிற வெள்ளியிரவு புறப்படலாமென்றிருக் கிறேன். துணி ஒரு பெட்டியும் முக்கியமான புத்தகம் ஒரு பெட்டியுமாக இரு பெட்டிகள் கொணர்வேன்.[11]*

*“போன சூலை வேலைக்கு ரூ. 25 நாயுடுவிடம் பெற்றுக் கொண்டேன்.*

*“சென்ற ஆண்டு சென்னை வேலையை ஒப்புக் கொண்ட தால் 2 நிலைப்பேழைகளையும் சில அரிய நாற்காலிகளையும் விற்றுவிட்டேன். இன்று அத்தகைய வாங்க முடியவில்லை.*

---

10. 16–7–43 (வ.சு.)    11. 24–7–43 (வ.சு.)

*"இங்கு வந்தவுடனே (சேலம்) தலைவர் அவர்களிடம் ரூ. 30 கடன் வாங்கி 16 உடல் நலத் தகுதித்தாளுக்கும் 4 செருப்புக்கும் 3½ மேலாடைக்கும் செலவாய்விட்டது.*[12]

*"திரு. சேதுப்பிள்ளை அவர்கட்குத் தலைமைப் பதவி கிடைத்துவிட்டதாகக் கேள்வி. இரண்டாவது வேலைக்கு முயற்சி செய்ய வேண்டுமே! அதுவும் இன்னே செய்யவும் வேண்டுமே! எனக்குக் கிடைப்பின் என்நிலை உயர்வோடு தமிழ்நிலையும் உயரும் என்பதற்குத் தடையில்லை. ஆயின் ஒவ்வொருவரும் இவ்வாறே நினைக்கலாம்.*[13]

*"தற்போது இங்கு வெப்பம் அளவிறந்திருப்பதால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. சும்மாவிருந்தாலும் பகல் 10 மணி முதல் 6 மணி வரை தலை வலிக்கிறது. மழை பெய்யா விடின் 20ஆம் உ வரை இங்ஙனம்தானிருக்கம். நான் குடியிருக்கும் வீட்டுக்கு முகடு கள்ளிக்கோட்டை ஓடு போட்டது. மிகத் தாழ்வானது. அதனால் வெப்பத்தை மும்மடங்கு மிகுக்கின்றது. கடிதம் எழுதுவது கூட வருத்தமாயிருக்கிறது. காலை 8 மணி வரைதான் ஏதேனும் செய்யமுடியும். அன்று வினைசெய்யின் தலை வலிக்கின்றது. தண்ணீர்ப் பஞ்சத்தையோ சொல்ல வேண்டியதில்லை.*[14]

*"சென்ற ஒரு மாத காலமாக ஒரு கடும் பல்லவி என்னை வருத்தி வருகின்றது. இன்று சற்று மட்டு. ஆயினும் தீர்ந்த பாடில்லை. சிறந்த பல் மருத்துவரெல்லாம் பல்லிற்குப் பொறித் துலக்கம் செய்ய வேண்டுமென்றனர். இதற்கிசையவில்லை."*[15]

*நான் தமிழ் கற்ற அளவு ஆங்கிலம் கற்றிருந்தால் எருதந் துறையில்* (Oxford) *தலைமைப் பேராசிரியனாகியிருப்பேன். தமிழால் நான் பட்டபாடும் கெட்டகேடும் கொஞ்ச நஞ்சமல்ல. இறுதியில் என் உயிருக்குயிரான காதற் கற்பரசியை இழந்தேன். தலைக்கு மிஞ்சின தண்டனை இல்லை. நீர்ச்சீலைக்கு மிஞ்சின நிரப்பில்லை.*

*இன்னும் மூவாண்டுதான் உயிரோடிருப்பேன்.*[16]

*அடுத்த மாதம் முதற்கிழமை இங்குள்ள கண் மருத்துவ விடுதியிற் கண் புரைக்கு அறுவை மருத்துவம் செய்து கொள்வேன். விடுதியிலேயே இரு கிழமைகள் இருக்க நேரும்.*[17]

12. 3–8–44 (வ.சு.)
3. 3–10–46 (வ.சு.)
14. 16–5–50 (வ.சு.)
15. 18–7–50 (வ.சு.)
16. 12–2–64 (வி.அ.க.)
17. 24–11–64 (மி.மு.சி.)

*என் மனைவியார் இறந்ததை எண்ணி வருந்தியதால் இன்று நெஞ்சாங்குலை ஈளை நோய் என்னைத் தாக்கியது. ஆதலால் முன்போல் இனிச் சொற்பொழிவிற்கு வெளியேற முடியாது.*[18]

*இப் பனிக்கால முழுதும் ஈளை நோய் என்னைத் தாக்கும் போலும்! கண் மருத்துவம் 2.1.65 அன்று நடக்கும்.*[19]

*எனக்கு இடக்கண் அறுவையாகிச் சிறிது சிறிதாய் நலம் பெற்றுவருகிறேன்.* [20]

*நான் கண்ணாடி வாங்கியிருப்பினும் மிகுதியாகப் பயன் படுத்துவதற்கில்லை. கண் துளி மருந்து இன்னும் மும்மாதம் தொடரும். அதன்பின் இடக்கண் முழுநலம் பெறும். இதைக் கண்ணாடியின்றியே அரைப் பார்வையில் எழுதுகின்றேன்.*[21]

*திரு.எசு.கே. வேலாயுதம் ஆசிரியர் நன்கொடை 422 உரூபா வந்து சேர்ந்தது. இது, இறைவன் திருவருள் என்றே கருது கின்றேன். இந்நிலைமை மூவாண்டிற்கு முன்னிருந்திருந்தால் என் ஆருயிர் மனைவியார் இறந்தேயிருக்க மாட்டார்.*

*மாதம் ஆயிரத்தைந்தாறு உரூபா வாங்க வேண்டிய நான் வேலையில்லாதிருக்கிறேன்.*

*அளவிறந்த அழுக்காறும் தந்நலமும் தமிழையும் என்னையும் கெடுக்கின்றன. பண்டைத் தமிழ்ப் புலவர் பரிசில் வாழ்க்கையன் ஆனேன்.*[22]

*ஒரு கிழமையாக எனக்கு நெஞ்சுச் சளிக் காய்ச்சல். இன்று ஓரளவு நலம். நோய்நிலையில்தான் புத்தனாம்பட்டி சென்று வந்தேன். 2055 உரூபா கொடுத்தார்கள். திருக்குறள் மரபுரை வெளியிடுவதாகச் சொன்னேன். அதற்கு 4000 உரூபாவிற்கு மேற் செல்லும்.*[23]

*எனக்கு ஒரு கட்டியிருப்பதால் இம்மாத இறுதிக்குள் அறுவை மருத்துவம் செய்ய வேண்டியிருக்கிறது. சென்னையில் தான் செய்துகொள்ள வேண்டும். முந்நூறு உரூபாவிற்குக் குறையாது செல்லும்.*

---

18. 1–12–64 (மி.மு.சி.)
19. 30–12–64 (மி.மு.சி.)
20. 22–6–66 (மி.மு.சி.)
21. 27–7–66 (மி.மு.சி.)
22. 13–12–66 (மி.மு.சி.)
23. 15 துலை 1999 (மி.மு.சி.)

*சென்னையில் 120 உரூபாவிற்குக் குறைந்து எனக்கேற்ற வீடில்லை. இங்குக் கட்டும் வாடகை 55 உரூபா. இதற்குமேல் என்னாற் கொடுக்க இயலாது. ஆதலால் இங்கேயே இன்னும் பல்லாண்டிருக்கத் தீர்மானித்துவிட்டேன்.*[24]

*முதுவேனிலிற் சிறப்பாகத் தீ நாட்களைக் கழிப்பது ஆண்டு தோறும் பெரும்பாடாக இருக்கிறது.*[25]

*உட்சட்டை ஒன்றுகூடக் குப்பாயமின்றி அணியக்கூடிய நன்னிலையில் இல்லை.*[26]

*16.7.68 சென்னை சென்று இராயப்பேட்டை அரசினர் மருத்துவச் சாலையில் சேர்ந்தேன். எனக்கிருந்த நோய் அண்ட வாதம் என்னும் விதைப்பை யூத்தம். (கனகம்) அம்மையாருக்கு எழுதியுள்ள முடங்கலில் காலில் ஒரு கட்டியென்று குறித்திருக் கிறேன். அங்ஙனமே அவர்களிடம் சொல்க.*

*20.7.68அறுவையாயிற்று.*

*26.7.68 தையல் பிரிக்கப்பட்டது.*

*மறுநாள் வெளியேறி நேற்று மீண்டேன்.*

*என்னால் இன்று நடக்க இயலாது.*

*இன்னும் ஒரு மாதம் செல்லும்.*[27]

*எனக்கு இன்று இங்குள்ள கடும்பனியால் ஈளை நோய் தாக்கி உள்ளது. ஆதலால் பனிக்காலம் முடியும்வரை எங்கும் செல்ல முடியாது. சென்னை வானிலை மட்டும் எனக்கு ஒத்துக் கொள்கிறது. அங்குள்ள கடற்காற்றே அதற்குக் கரணியம்.*[28]

*இன்று பிற்பகல் எனக்கு இங்குத் தங்கசாலைத் தெருவில் (198) வலக்கண் படல அறுவை நிகழும். ஒரு கிழமை மருத்துவ விடுதி. ஓரிரு கிழமை திரு. முத்துக்கிருட்டிணன் இல்லம். அதன் பின் காட்டுப்பாடி;* [29]

*உடல்நிலை இன்னும் திருந்தவில்லை. இரவில் மாத்திரை விழுங்கினால்தான் தூங்க முடியும். அதோடு ஒரு மாதமாக இராவுணவில்லை. உடல் மெலிவுள்ளது.*[30]

---

**24.** 6–2–68 (மி.மு.சி.)
**25.** 23–3–68 (மி.மு.சி.)
**26.** 15–6–68 (மி.மு.சி.)
**27.** 30–7–68 (மி.மு.சி.)
**28.** 10–12–68 (மி.மு.சி.)
**29.** 20 துலை 2000 (த.கு.)
**30.** 4–1–69 (மி.மு.சி.)

*திருவள்ளுவர் காலம் என்னும் கட்டுரையை நேற்றே அனுப்பிவிட்டேன். பதிவு செய்யாது விடுத்ததினால் சற்றுக் கவலையாகத் தானிருக்கிறது. பதிவிற்கு 70 புதுச்சல்லி முத்திரை யொட்ட வேண்டியிருப்பதால் இற்றைச் செல்வ நிலை சிக்கனத்தையே விரும்புகின்றது. கட்டுரை வந்து சேர்ந்ததனை உடனே தெரிவிக்க.*[31] *ஈளைத் தெல்லை பொறுப்பு வியலாது பொங்கலன்றே இங்கு வந்தேன்.*[32]

*எனக்குக் கண்ணறுவையானது, ஒரு கிழமை அறுவை விடுதியிலும் ஒரு கிழமை மறைமலையடிகள் நூல் நிலையத் திலும் ஒரு கிழமை மேலைத் தாம்பரம் திரு. முத்துக்கிருட்டிணன் இல்லத்திலும் ஒரு கிழமை காட்டுப்பாடியிலும் இருந்து விட்டு இங்கு வந்து என் மகள் வீட்டில் தங்கியிருக்கிறேன். கண் மருத்துவம் சிலை 3 வரை தொடரும். அதன்பின் கண்ணாடி வாங்கி அணிந்து கொண்டு காட்டுப்பாடி சென்று 10ஆம் பக்கல் திருச்சி சென்று அசோகா உண்டிச் சாலையில் தங்கிவிட்டு மறுநாள் அன்பருடன் பறம்புக்குடி செல்வேன்.* [33]

*திருச்சி ஊரகக் கொதிகலன் தொழிற்சாலையன்பர் பல மாதங்களாக மாதந்தோறும் 50 உருபாவும் பெரியார் கல்லூரியன்பர் 20 உருபாவும் அனுப்பி வருகின்றனர். இவ் வுதவின்றேல் சென்ற விடையிலிருந்து என் வாழ்க்கையே நடைபெற்றிருக்காது. இன்றும் அதுவே பேருதவி.*

*என் நூற்கு உதவுவதினும் அதற்கு மேலான என் வாழ்வுக்கு உதவுதலே சிறந்தது; இன்றியமையாதது.* [34]

*என் உறையுட் புறக்கடைத் தோட்ட வேலை மிகுதியாலோ உணவுத் தவற்றாலோ சென்ற கிழமை செவ்வாய் வைகறை மயக்கம் வந்து விழுந்துவிட்டேன். இன்னும் முழுத் தெளிவு. மீளவில்லை. ஆயினும் என் சொல்லை நிறைவேற்றற் கும் திரு.நெடுமாறன் (கேசவன்) ஆர்வத்தைத் தணித்தற்கும் திரு. சேயோனைத் துணைக்கொண்டு முந்தா நாள் ஞாயிறு காஞ்சி சென்று அவர் திருமணக் கரணத்தை நடத்தி வைத்தேன்.* [35]

*உணவு வகையிலும் உழைப்பு வகையிலும் தவறாக நடந்து கொண்டமையால் சென்ற செவ்வாய் வைகறை மயங்கி விழுந்து*

31. 8–1–69 (மி.மு.சி.)
32. 24–1–69 (மி.மு.சி.)
33. 3–12–69 (மி.மு.சி.)
34. 21–1–70 (மி.மு.சி.)
35. 8–9–70 (மி.மு.சி.)

*விட்டேன். இன்று நடமாட்டமுளதேனும் முழுத் தெளிவுமாக வில்லை. ஏற்கெனவே என் முன்னைக் கண்ணொளியில்லை. இன்று நரம்புத் தளர்ச்சியும் உளது. இந்நிலையில் நான் எங்கும் செல்ல இயலாது. தக்க துணையின்றி.*[36]

*செந்தமிழ்ச் செல்வியில் ஒரு செய்தி; அதனைக் காண்கிறார் பாவாணர். இரக்கமிக்க அவர் உள்ளம் கசிகின்றது: கலங்கு கின்றது;தம் வாழ்வை மீள்பார்வை பார்க்க ஏவுகின்றது! தம் மனைவியை இழந்து தவித்த தவிப்பும், அத் தவிப்பின் விளைவும், அவ் விளைவை விலக்குவதற்கு எடுத்துக்கொண்ட கடைப் பிடிப்பும் பாட்டுருக் கொண்டு பனித்துக் கிளர்ந்தன. அந்த உருக்கம் அருமையிலும் அருமையாம்!*

*74. பி. 57 க.க. நகர், சென்னை - 78*
*15-11-77*

**அருந்தமிழன்பீர்,**

செல்வ மேயெனுஞ் செல்வஞ் சென்றதைச்
செல்வி வாயிலாய்த் தெரிந்து வருந்தினேன்
கொல்வ கையெனுங் குறிப்பி லாமையாற்
சொல்வி னைக்குமைச் சூழ்ந்த மர்த்தினேன்

புற்று நோயினாற் போன என்மனை
பற்றி நீடியே பரிந்தொ ரீளையைப்
பெற்று ழந்தபின் பிழையை நோக்கியே
முற்று நீக்கினென் முதல்வ னருளினால்

பெண்ணி னற்றுணை பிறிதொன் றின்மையால்
நண்ணி வாழ்வதே நாயன் விரும்பினும்
கண்ணி னன்மனை கணவன் கண்முனே
கண்ணை மூடுதல் கருதின் நன்றாரோ.

ஆற்று மளவிறந் தவல நேரினும்
போற்றும் வகையிலாப் புல்லென் னீர்மையில்
நோற்று மக்களை நோக்கி யேதமைத்
தேற்றிக் கடமைகள் தீர்த்தல் தக்கதே.

---

36. 7 மடங்கல் 2002 (த.கு.)

இன்ப மொருதுளி யிடையில் நேரினுந்
துன்ப மேமிகுந் தொல்லை யுலகினில்
தென்பு தந்திடும் தீந்த மிழ்த்துணை
நன்பெ னக்கொளல் நம்ப னருளதே.

(ஒப்பம்) **ஞா. தேவநேயன்**

முகவரி:
**புலவர் இளங்குமரனார்**
திருநகர்,
மதுரை - 6

# 25. சிதறிய மணிகள்

*பாவாணர் வாழ்வில் அமைந்த பல்துறைப் பல்செய்திகள் தம் அன்பர்களுக்கு அவ்வப்போது எழுதிய கடிதங்களின் இடையே பொதுளிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் ஒருங்கே தொகுத்து வகுத்துக் காணற்குரியவை எனினும், ஒரு சிலவற்றை இவண் காணலாம். பெரும்பாலும் இதில் வரும் செய்திகள் காலவாரி அடைவையுடையவை. பொருள் வாரி முறையோ, அகர வாரி முறையோ பெறுவனவல்ல.*

**தமிழ் கற்பித்தல்:**

*“தற்சமயம் ஒரு துரைசானிக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்கிறேன்”*[1]

**விற்க விரும்பாமை :**

“Encyclopeedia - *வை விற்கவில்லை. இன்னும் கொஞ்சக் காலம் பயன்படுத்தவிரும்புகிறேன். விற்கும்போது வேறு எவர்க்கும் இன்றிக் கழகத்துக்கே விற்கிறேன். என் வறுமை மிகுதியே விற்க ஏவிற்று. ஆயினும் என் மனம் இசையவில்லை”*[2]

**வேலை விண்ணப்பம் :**

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பண்டித வேலைக்கு விண்ணப்பஞ் செய்திருக்கிறேன். தயைசெய்து திரு. சேதுப்பிள்ளையவர்கட்கு நேரிலேனும் திருச் சுப்பிரமணிய பிள்ளையவர்கள் மூலமேனும் எழுதிச் சிபார்சு பண்ணுவிக்க”*[3]

**கட்டுரைக் கசடறை :**

*கட்டுரைக் கசடறை செவ்வையாய் முடிந்தது. பின்வரும் நிமித்தங்களுக்குட்பட்டீர்களானால் இன்னும் இரு வாரத் திற்குள் அனுப்பமுடியும். இல்லாவிடில் முடியாது. 1. தலைமை ஆபீசுக்கு (திருநெல்வேலிக்கு) அனுப்பாமல் அச்சிட வேண்டும். 2. ஒன்றையும் மாற்றக் கூடாது.*[4]

1. 23–10–31 (வ.சு.)
2. 26–4–32 (வ.சு.)
3. 4–4–32 (வ.சு.)
4. 30–6–32 (வ.சு.)

**தேர்வு :**

*"பரீட்சை தவறி விட்டது. மறுபடியும் ஏப்ரலில் எழுத வருவேன்."*[5]

**புதுமுறை இலக்கணம் :**

*"இலக்கணம் என் வயமில்லை. நெல்லையில்தான் இருத்தல் வேண்டும். ஆயினும் அதை அச்சிட வேண்டாம். அதை எழுதின பிறகு பல புத்திலக்கணங்களைப் பார்த்திருப் பதுடன் முன்னையினும் இன்று சிறப்பாகவும் எழுதக் கூடும். எல்லா இலக்கணங்களிலும் எற்றமாயிருத்தல் வேண்டும் என்பது என் விருப்பம். அங்ஙனமிருக்கும் என்றும் நம்பிக்கை. தெளிவு, விளக்கம், புத்துதாரணம் முதலியவற்றாற் புதுமுறையா யெழுதப் படல் வேண்டும். நூன் முழுமையும் முடித்துக் கொண்டு அங்கு வருவேன். விலையிற் பெரும்பகுதி நூலாக அளித்தாற்போதும். ஓர் ஆர்மோனியம் வாங்க மட்டும் பணம் தருதல் வேண்டும்.* Kassiel doubles seeds Hand Harmoniam *ஒன்று வாங்கித் தரினும் சரியே. விலை ரூ. 50"*[6]

**அளவான அமைப்பு :**

*"நமது இலக்கணம் சில இலக்கணங்களைப் போலக் குன்றக் கூறலாகவும், மிகைபடக்கூறலாகவும் இல்லாமல் அளவாக உள்ளது. ஆகையால் குறைக்கவேண்டாம். யான் எழுதியபடியே இருக்கட்டும்."*[7]

**சொற்றொகுப்பு :**

"Lexicon *க்குச் சொற்கள் இனிமேல்தான் எழுதவேண்டும். எங்கள் பாடசாலையிற் படிகளில்லை, கோட்டைப் பாட சாலையில்தான் இருக்கின்றன. அங்கு செல்லவேண்டும்."*[8]

**இசைப்பாடல் :**

*"கீர்த்தனை இன்னும் அனுப்பப்படும். இன்று வருபவை 7. 30 ஆனவுடன் தனிப் புத்தகமாக அச்சிடுக."*[9]

**ஆய்வில் அமிழ்தல் :**

"M.O.I. Thesis *பற்றிய ஆராய்ச்சியில் அமிழ்ந்துள்ளேன். ஹிந்தி பயில்கின்றேன். நான் நான்கு ஆண்டுகளாய் எழுதி*

5. 23–1–33 (வ.சு.)
6. 8–7–34 (வ.சு.)
7. 4–10–34 (வ.சு.)
8. 23–10–34 (வ.சு.)
9. 8–2–35 (வ.சு.)

*வைத்த வியாச விளக்கக் குறிப்புகளை யெல்லாம் தொகுத்து முறைப்படுத்திஅச்சுக்கேற்ற திருத்தப்படிவமாய் எழுதியுள்ளேன்.*

**கண்டிப்பு :**

*நானே மார்ச்சு மீ வெளியிடலாமென்றிருக்கிறேன். நீங்கள் வார முறையில் (Royalty System) வெளியிடுவதானால் வெளியிடலாம். உரிமை விலை முடியாது. நூல் பார்க்க விரும்பினாலும் நேரில்தான் பார்க்கவேண்டும். தபாலில் அனுப்ப முடியாது. அச்சும் இங்கேதானாக வேண்டும். கிரௌன் அளவில் 100 பக்கத்திற்குக் குறையாது வரும். அங்கீகாரம் இல்லாமலே தமிழ்நாடெங்கும் விலையாகத் தக்க சிறந்த முறையில் உள்ளது. விரும்பின் உடனே ஒழுங்கு செய்க.''*[10]

**வேர்ச்சொற் சுவடி :**

*“வேர்ச்சொற் சுவடி எழுதி முடிந்தது”*[11]

**அடிமை வழக்கு :**

*“இம் மாதத்திலேயே இன்னும் இருவாரமுள. அடுத்த மாதம் 25உ தான் (அகநானூறு) மாநாடு. ஆகையால் யாரையும் கேட்டு ஏற்படுத்தப் போதிய காலமுளது. இங்ஙனமிருக்க என்னையே வற்புறுத்தப் பார்ப்பது அடிமை வழக்குத் தொடுத்தாற்போலிருக்கிறீர்கள். ஆனால் தாங்கள் தமிழுக்குச் செய்யும் தொண்டிலும் யான் செய்வது சிறந்ததென்பதை அண்மையில் அறிவீர்கள். தமிழுக்காக வேறு யாரேனும் தொண்டியற்றுவாரானால் யான் முற்றிலும் கவலையற்றிருப் பேன். இந்திச் சனியனும் பார்ப்பனர் தீமையும் இன்னும் ஒழிந்தபாடில்லை. எழுதவேண்டுமென்றால் பொருளில்லை; உதவுவாருமில்லை.*[12]

**இசைப்பாடல் :**

*“திருவள்ளுவர் பஜனைக் கீர்த்தனம் 7 இயற்றி இதனோடு விடுத்துள்ளேன். ஓய்வின்மையால் இதற்குமேல் இன்று முடிய வில்லை. இன்னும் 7 சிறந்த மெட்டுகளில் சிறப்பாக யியற்றி விடுத்தல் கூடும். எல்லாக் கீர்த்தனையும் சேர்த்துத் ‘திரு வள்ளுவர் பஜனைக் கீர்த்தனம்’ என்றே ஓர் புத்தகம் கழக வாயிலாய் வெளியிட்டு எளிய விலைக்கு விற்க.*[13]

10. 13–11–35 (வ.சு.)
11. 14–9–40 (வ.சு.)
12. 18–10–40 (வ.சு.)
13. 28–1–38 (வ.சு.)

**மொழி நூல் :**

"எனது நூல்களையெல்லாம் வார முறையில் (Royalty system) வெளியிடுவீர்களானால் எனக்கும் உங்கட்கும் வருவாயும் தமிழுக்குப் பெருமையும் உண்டாகும். இதைத் தீர எண்ணிச் செய்க. எனது மொழி நூலை விரைந்து வெளியிட முயற்சியிங்குள்ளது.

**காலம் -தமிழே :**

"இங்குள்ள வடமொழிச் சங்கத்தின் ஆண்டு விழாவில் அவைத் தலைவர் 'காலம்' என்பது 'வடச்சொல்' என்றார். யான் அது 'தென் சொல்லே' யென்று விரிவாய் விளக்கிய கட்டுரை யொன்று எங்கள் பள்ளிக்கூடச் செய்திச் சுவடியில் இம் மாதம் வெளி வந்துள்ளது. அதை இரண்டொரு நாளில் அனுப்புவேன். செல்வியில் வெளியிடலாம். தமிழ்நாட்டில் வழங்கும் பழ மொழிகளை யெல்லாம் தொகுத்து அண்மையில் வெளியிடப் போகிறேன். ஆகையால் விரிவான முறையில் பழமொழிப் புத்தகம் உங்கள் அண்ணியார் வெளியிடின் அவர்களுக்குத்தான் இழப்பாகும். இதை முன்னரே தெரிவிக்க.[14]

**தமிழ் விடுதலைச் சுவடி :**

"தமிழ் விடுதலைக்கென்று அண்மையில் ஒரு சுவடி வெளி வரும். அது ஊதியம் அற்றது. அதன் செலவை முழுவதுமாவது அதிற் பாதியாவது தமிழ்ப் பாதுகாப்புக்காக நிதியிலிருந்து ஒத்துக் கொண்டால் நலமாயிருக்கும்.[15]

**ஆவணம்**

"குமரிநாட்டு வரலாறு, நமது உரிமையைப் பெறுதற்கு இன்றியமையாத ஆவணம். இதை அறிந்துதான் எனது எம்.ஒ.எல். இடு நூலைப் பார்ப்பனர் தள்ளிவிட்டனர். நமது அறிஞர் கழகம் பெரு வேலை செய்து பெரும் பெயரடையப் போகிறது. முதலாவது நாம் வெளியிட வேண்டியது பழந்தமிழ்ச் சரித்திரம்.. அதை மார்ச்சுக்குள் எழுதி முடிக்கச் செய்து புறநானூற்று மாநாட்டின் பின் அறிஞர் கழகச் சார்பில் வெளியிட்டுவிட வேண்டும். பின் இசைத் தமிழ் மாநாடொன்று கூட்ட வேண்டும். அதில் வரகுண பாண்டியன் எழுதிய அரிய இசைத் தமிழ் விளக்கத்தை வெளியிட முடிவு செய்ய வேண்டும். விபுலானந்தர் நூல்

---

14. 10–11–39 (வ.சு.)   15. 16–10–40 (வ.சு.)

*தவறும் பார்ப்பனர்க்குச் சார்புமானது. (இதைப் பின்னர் விளக்குவேன்.) அதன்பின் என் மொழி நூலின் பிற மடலங்களை வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும். அறிவியல் நூல்களையும் பல்கலை நூல்களையும் தக்க அறிஞரைக் கொண்டும் ஆக்குவிக்க வேண்டும். ஒரு விரிவான சொல்லியலகராதியும் வேண்டும். அகராதி மாதிரியும், சுட்டு விளக்கச் சுவடியும் பின்னர் வரும்.*

**கோடைக்கானல் :**

*“அடுத்த மீ 16உ போல் கோடைக்கானல் சென்று சூன் முதல் வாரம் மீளலாமென்றிருக்கிறேன். மொழி நூல் பற்றி ஆங்கிலத்தில் 3 சொற்பொழிவாற்றுவேன்”*[16]

**மாநாட்டுப் பொழிவாளர் :**

*புறநாநூற்று மாநாட்டை ஏப்பிரலில் வைப்பதற்கான முயற்சியைத் தளராது செய்க. திருச்செங்கோட்டிலுள்ள புலவர் உலகவூழியரையும் சலகண்டபுர வரதநஞ்சைய பிள்ளை அவர்களையும் இயலுமாயின் இடமிருப்பின் புறநானூற்றுச் சொற்பொழிவாளராகச் சேர்த்துக் கொள்க. புலவர் சரவண முதலியாரை மட்டும் எங்ஙனமும் இசைவிக்காது விடற்க. பதிற்றுப்பத்திற்குச் சேர நாட்டியல்பறிந்த ஆறுமுக முதலியாரை யும் உலகவூழியரையும் தப்பாது சேர்த்துக் கொள்ளலாம். தமிழறிஞர் கழகம் ஒன்றே தமிழுக்கு ஆக்கம் தேடக் கூடும். ஆகையால் அதற்கானவற்றைத் தளராது செய்க. இன்று யான் தேர்வுப் படிப்பில் ஆழ்ந்திருப்பதால் பிறபின்.*[17]

**சொல்லயலகராதி :**

*“சொல்லியலகராதி மாதிரியும் உடன்வரும். தமிழாக் கத்திற்கின்றியமையாத சில திட்டங்கள் எண்ணியுள்ளேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியாராய்ச்சித் துறையில் பெரிய பண்டிதர் பதவிக்கு வேண்டுகோள் விடுத் திருக்கிறேன்.”*[18]

**போர்ப் பாடலாசிரியரின் :**

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எனக்கு வேலையும் கிடைக்கவில்லை. பதிலுமில்லை. தற்போது வெற்றி மாளிகையில்*

---

16. 16–1–43 (வ.சு.)

17. 4–2–43 (வ.சு.)

18. 21–4–43 (வ.சு.)

*போர்ப்பாடலாசிரியரின் வேலைக்கு வேண்டியிருக்கிறேன். திரு. கே.எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் பாடற்றுறையில் மாகாணத் தலைவர். அவர்களுக்கும் ஒரு திருமுகம் எழுதி யிருக்கிறேன். அவர்கள் மனம் வைத்தால் 100 ரூக்கு எனக்கொரு வேலை கொடுக்கலாம். அன்பு கூர்ந்து உடனே அவர்களிடம் சென்று ஒரு வேலை கிடைக்கச் செய்க. தற்போது எனது வருவாய் போதாமல் வருந்துவதோடு தமிழ் முன்னேற்ற முயற்சியும் தடைப்படுகிறது.*[19]

**பழமொழி அகராதி :**

*“பழமொழியகராதி பல்லாண்டு பாடுபட்டுத் தொகுத்தது. முன் அச்சுக்கு வந்தவை 8000உம், வராதவை 5000உம் ஆக மொத்தம் 13000 உள்ளன. தமிழின் வளர்ச்சிக்குத் தக்க தமிழ்ப் புலவரைத் தாங்குதல் இன்றியமையாதது.”*[20]

**உடனே புறப்பட இயலாது :**

*“நாளைக்கு அல்லது நாளை நின்று சம்பளம் வாங்க வேண்டியது இருப்பதாலும், வண்ணான் வெள்ளை கொண்டு வர இரண்டொருநாட் செல்லுமாதலாலும் சனிக்கிழமை (5 ஆம்உ) மறைமலையடிகள் தலைமையில் கோபிச் செட்டி பாளையத்திற் பேச வேண்டியிருப்பதாலும் உடனே புறப்பட இயலாது. திங்கட்கிழமை சென்னைக்குப் புறப்படலாம்.*

*“(கல்லூரியில்) வாரம் 10 மணி வேலையேயாதலால் போதிய ஒழிவுண்டு”*[21]

**இடர்நீக்க வழிதுறை :**

*யான் சனுவரி 5ஆம்உ சென்னையில் நடைபெறும் பல்கலைக் கழகத் தமிழ்க் கலைக் குழுக் கூட்டத்திற்குப் போவதனால் தமிழுக்கு அண்மையில் ஏற்படவிருக்கும் பேரிடரை நீக்கும் பொருட்டுச் சில இன்றியமையாத வழி துறைகளை வகுக்குமாறு தவறாது அன்று சென்னைக்கு வந்திருக்கக் கேட்கின்றேன்.*[22] *(அந்நாளில் கழக ஆட்சியாளர் இருப்பு நெல்லைத் தலைமை நிலையமேயாம்.)*

---

19. 6–7–43 (வ.சு.)
20. 30–4–45 (வ.சு.)
21. 2–5–45 (வ.சு.)
22. 28–12–45 (வ.சு.)

**மறதி :**

*“யான் மீளும்போது ஒரு சல்லடத்தை (Shirt)க் கழகக் கூடத்துப் பாகைமாட்டியில் விட்டுவிட்டு வந்துவிட்டேன். அதைட்ச சேமமாய்ப் பார்த்துக் கொள்க.*

**வேலை வேட்டம் :**

*“எங்கள் அக்கா மகன் ஒருவன் 18 அகவையான். பள்ளியிறுதி தவறினவன். என்னிடமிருக்கிறான். அவனுக்குக் கழகத்தில் வேலை கிடைக்குமா?கிடைப்பின் ஊதியம் எவ்வளவு?*[23]

**நூலில் புதுச்சேர்க்கை :**

*“நாள்தோறும் புதுப்புதுக் கருத்தெழுவதால் பலநாட்கு முன்னர் எழுதிய நூலைப் பார்வையிட்டுச் சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்துக்கொண்டு வருகிறேன்”*[24]

**அயல்நாட்டினர் தமிழ்க்கல்வி :**

*தமிழ்நாட்டில் ஊழியஞ் செய்யும் அயல்நாட்டு மத ஊழியர்களுக்குப் பயன்படுமாறு* Idioms and Phrase in Tamil with English rendering *என்னும் நூல் முன்பே எழுதி வைத்திருக் கிறேன்.*[25]

**இடுநூல் :**

*இம்மாதம் 25ம் வரை எழுத்துவேலை இருக்கிறது. அதன் பின் எம்.ஓ.எல் இடுநூலை எழுதவேண்டும். சனுவரி 15க்குள் முடிந்துவிடும்.*[26]

**இடுநூல் விரைந்து வரைதல் :**

*சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஓ.எல் திட்டம் நீக்கப் பட்டுவிட்டது. 1948க்கு முன்பு இடுநூல் விடுத்துத் தவறியவர்க்கு மட்டும் 1950 சனுவரிக்குள் இறுதி வாய்ப்புள்ளது. அதை உடனே பயன்படுத்திக் கொள்ளவேண்டுமாதலால் ஓர் இடுநூல் விரைந்து வரைந்து வருகிறேன். சனுவரி 15க்குள் முடிந்து விடும்.*[27]

---

23. 6–1–47 (வ.சு.)
24. 28–12–48 (வ.சு.)
25. 21–4–49 (வ.சு.)
26. 2–4–49 (வ.சு.)
27. 23–12–49 (வ.சு.)

**எளிய உணவு :**

*"இருவகைக் கரணங்களும் மிகுதியாய்த் தொழில் செய்யும் போது பொது முறையான எளியவுணவு போதவில்லை"*

**அச்சு :**

*"~ இந்நெளி கோடிட்ட சொல் சாய்ப்பெழுத்திலும்* (Italics) *இந்நேர் கோடிட்ட சொல் தடியெழுத்திலும் இருத்தல் வேண்டும்..*

**மறதி**

*"இங்கு வந்தபோது கண்ணாடியையும் சீப்பையும் அங்கு விட்டு விட்டு வந்துவிட்டேன். கூடத்திலிருக்கும். போற்றிவைக்க. காவற்காரனுக்கு என் கணக்கில் உடனே 4 அணா கொடுத்து விடுக. நான் புறப்பட்டபோது அங்கில்லாததால் கொடுக்க வில்லை"*[28]

**தனித்தமிழ் இணைப்பு :**

*"நம்மை இணைத்துக்கொண்டிருப்பது தனித்தமிழ்ப் பற்றேயன்றி இந்தப் பற்று வரவு கணக்கன்று. நான் பொருளையே கவனிக்கிறதாயின் முன்னமே விலகியிருப்பேன். தனித்தமிழ்ப் பற்றும் இருந்திருக்காது.*

**கட்டுரை இலக்கணம் :**

*"இன்று எழுதுவதற்கு உயர்தரக் கட்டுரை இலக்கணம் என்றும், கட்டுரை வரைவியலுக்கு எளிதரக் கட்டுரை இலக்கணம் என்றும் பெயரிட விரும்புகிறேன்"*[29]

**குறிக்கோள் :**

*"தனித்தமிழ்தான் என் முதற் குறிக்கோள்.*

**நலத்தகு முயற்சி :**

*"உங்கள் முயற்சியாலும் என்புலமையாலும் தமிழுக்கும் தமிழினத்திற்கும் பெருநன்மை விளைதற்கேதுவான பல முயற்சிகள் இன்னும் ஈராண்டிற்குள் செய்யப்படவிருக்கின்றன. உங்கட்கும் தமிழ்ப்பற்றிருப்பினும் அது வணிக முறைப்பட்டது.*

---

28. 26–9–49 (வ.சு.) 29. 22–2–50 (வ.சு.)

*எனதோ பெரும்பாலும் கலைமுறைப்பட்டது. ஆகையால் கழகத்தொடு எனக்குத் தொடர்பு என்றும் இருந்துகொண்டு தானிருக்கும். கணக்கு மட்டும் நெஞ்சறியவும் கடவுள் சான்றா கவும் நேர்மையாக நடந்து கொண்டால் என் மனத்தை ஒருவரும் மாற்றமுடியாது. கணக்கைப் பார்க்க வேண்டியதில்லை. சொல்லே போதும். எனக்கு ஐயம் பிறந்தால் நான் விலகிக்கொள்வேனே யன்றிக் கணக்குக் கேட்க மாட்டேன்.*[30]

## தகுதித்தாள் :

*“மறைமலையடிகள் விடுத்த முடங்கல்களை யான் போற்ற வில்லை. அவர்கள் தந்த தகுதித்தாள் மூலமும் படிகளும் ஓர் உறைக்குள் இட்டு வைத்திருந்தேன். பல இடங்களிற் பார்த்தும் கிடைக்கவில்லை. ஆனால் எங்கேனும் ஓரிடத்தில் இருக்கத் தான் செய்யும். கிடைத்தவுடன் அனுப்புகிறேன்”*[31]

## அச்சம் :

*“மறைமலையடிகள் நற்சான்று இன்னும் அகப்படவில்லை. தேடத் தேட அச்சமிகுகின்றது”*[32]

## இடுநூல் இணைப்பு :

*“என் இடுநூலில் ஒரு பகுதி விளக்கமில்லாததால் அதை யிட்டு ஒருகால் தள்ளினும் தள்ளலாம். அதனால் அதை விளங்கும் பகுதியையே செல்விக் கட்டுரையாக விடுத்திருக்கிறேன். உடனே அச்சிட்டு 6 படிகள் எனக்கு விடுக்க . வந்தவுடன் பல்கலைக் கழகத்திற்கு விடுக்கவேண்டும். பிந்தினால் பயன்படாது போவ துடன் பேரிழப்பிற்கிடமாகவுமிருக்கும். இடுநூற்றுக்குச் சான்றாகவுள்ள அச்சுத்தாளோ சுவடியோ புத்தகமோ அனுப்பலாமென விதியுள்ளது. ஆனால் உரிய காலத்தில் அனுப்பிவிடவேண்டும்.*[33]

## வெறுப்பு :

*“குமரி நாட்டுக் கொள்கையும் தனித்தமிழ்க் கொள்கையும் பற்றி அவர்கள் (திரு. சற்குணர்) என்னை வெறுப்பதால் (இடு நூல்பற்றி) யான் பார்த்துப் பயனில்லை”*[34]

---

30. 25–2–50 (வ.சு.)
31. 3–12–50 (வ.சு.)
32. 12–12–50 (வ.சு.)
33. 1–3–50 (வ.சு.)
34. 28–3–50 (வ.சு.)

### குறையா வளம்:

*நம்மிடம் நூல்கட்குக் குறைவில்லை. காமத்தையும் காதலையும் பற்றிய வடநூல் தென்னூல் மேனூல் ஆகிய முப்பால் நூல்களையும் படித்து மணவாழ்க்கை என்றொரு புத்தகம் 200 பக்கத்திற்கு மேற்படுவது எழுதி வருகின்றேன். பல்லாயிரக் கணக்காய் விரைந்து செலவாகும் என்பது என் நம்பிக்கை.*[35]

### மூச்சுவிட முடியாது :

*“பல்கலைக்கழக விடைத்தாள் திருத்து வேலை மூண்டு விட்டது. இம்மாத இறுதிவரை மூச்சுவிட முடியாது”.*[36]

### தப்பிப் பிழைத்தல் :

*“தமிழ்த் தொண்டிற்காகத்தான் தாங்கள் தப்பினீர்கள் என்ற உணர்ச்சியுண்டாயிற்று. ஐம்பத்திற்கு மேல் அலைச்சலையும் அளவிறந்த வேலையையும் வைத்துக் கொள்ளக் கூடாது. யாழ்பாணஞ் சென்றதே தவறு. செட்டியார் தம் விளம்பரத் திற்காகத் தங்களை அழைத்திருக்கலாம். இதற்கு நாடுவிட்டு நாடு செல்லத் தேவையில்லை”*[37]

### கலைச் சொற்கள் :

*“கலைச் சொற்களையெல்லாம் தனித்தமிழில் ஆக்கிக் கொண்ட பின்னல்லது தமிழை வளர்க்க முடியாது”.*[38]

### மெய்ப்புத் திருத்தம் :

*“ஒரு நாளைக்கு 6 படிவம் வீதம் (மெய்ப்புத் ) திருத்த முடியும். சனி ஞாயிறுகளில் எட்டும் இயலும்”.*[39]

### சான்றுத் தொகுப்பு :

*திருச்செங்கோடு கண்ணகி விண்ணேறிய இடம் என்று எவரும் பேசின் அவர் காட்டும் சான்றுகளைக் குறித்தெழுதுக.*[40]

### நிலைத்த ஒப்புகை :

*ஒரு புதுக் கட்டுரை தங்கள் மலர்க்கு வரையும் ஆற்றலற்றிருக்கிறேன். பழங்கட்டுரைபற்றி என்னைக் கேட்கவே*

35. 3–4–50 (வ.சு.)
36. 12–4–50 (வ.சு.)
37. 18–6–51 (வ.சு.)
38. 24–7–51 (வ.சு.)
39. 25–8–51 (வ.சு.)
40. 27–5–65 (மி.மு.சி.)

*வேண்டேன். என் நூல்களுள் எதினின்றும் எதையும் என்றும் என்னைக் கேளாமலே பயன்படுத்துக. இது நிலைத்த ஒப்புகை.*[41]

**பேச்சும் எழுத்தும் :**

*இயன்றவரை தனித்தமிழ் பேசுக: எழுதுக.* [42]

**ஏசுவின் படம் :**

*பாரதி புத்தகசாலை உரிமையாளரைக் காணின் எனக்கு வாங்கிவைப்பதாகச் சொன்ன ஏசுவின் படத்தைப்பற்றி நினை வூட்டுக.*[43]

**உள்ளத் தளிர்ப்பு :**

*புலவர் திருமலையார் புலவர் தட்சிணா மூர்த்தியார் முதலிய கெழுதகை நண்பரைக் காணின் என் உள்ளம் தளிர்ப் பெய்தும்.*[44]

**உடன்பாட்டு முகம் :**

*இந்தியெதிர்ப்பென்னும் எதிர்மறை முகத்தால் (நேரல்லாத வழியில்) இயக்கத்தை நடத்துவதிலும், தமிழ்க் காப்பென்னும் உடன் பாட்டு முகத்தால் (நேர் வழியில்) நடத்துவது மிகவும் நல்லாது.*[45]

**புதுச் சொல்லாக்கப் புதையல் :**

*வெளிவர இருக்கும் நூற்பட்டியில் (1) முத்தமிழ் (2) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறி முறைகள் என்ற இரண்டையும் சேர்த்துக் கொள்க. இரண்டாவது குறித்தது தமிழில் எப்பொருட்கும் புதுச்சொல் புனைதற்கு இன்றியமையாதது.*[46]

**கடிதச் சுருக்கம் :**

*1-4-64*

**பேரன்பரீர்,**

*வணக்கம்.*

*தங்கள் 31-3-64 அஞ்சலட்டை வந்து சேர்ந்தது. 12-4-64 அன்றே நக்கீரர் விழா நடைபெறுக.*

**(ஒப்பம்) ஞா. தேவநேயன்**[47]

41. 26–11–63 (வி.அ.க.)
42. 17–11–61 (வி.அ.க.)
43. 16–1–64 (வி.அ.க.)
44. 23–1–64 (மி.மு.சி.)
45. 2–3–64 (வி.அ.க.)
46. 11–3–64 (வி.அ.க.)
47. மி.மு.சி.

### புது நூல் :

தொல்காப்பியத் திறனாய்பு இரட்டை (ஆனி) மாதத் திற்குள் முடிந்துவிடும். மிதுனம் = இரட்டை.

பண்டைத் தமிழர் ஓரை (இராசிப்) ப் பெயராலேயே மாதங்களைக் குறித்து வந்திருக்கின்றனர். நாள் (நட்சத்திரம்) பெயராக மாற்றியது ஆரியர் செயல்.[48]

### முயற்சிப் படலம் :

தென்மொழிக்கு என் அண்ணாமலை நகர் வாழ்க்கை முயற்சிப் படலம் என்னும் கட்டுரை விடுத்துள்ளேன். அடுத்த 4 வரும். [49]

### தனி வேற்றுக் கல்லூரி வேலை :

மதுரையில் பேராசிரியர் சங்கரநாராயணன் நாடார் நடத்தி வரும் தனிவேற்றுக் கல்லூரியில் கலைத் தலைவன் (M.A.) வகுப்பிற்குத் தமிழ் கற்பிக்க ஒரு பட்டந்தாங்கியாசிரியர் வேண்டு மெனச் செய்திகளில் விளம்பரம் வந்திருப்பதாகத் தெரிகின்றது. சம்பளம் 500 உரூபாவிற்குக் குறையாதும், திருத்த வேலை யில்லாததும் இருந்தால் அதைப் பெற்றுக்கொள்ளலாம். அன்பு கூர்ந்து வினவியறிந்து முயன்று பார்க்க.[50]

### மறுப்புரை கட்டுரை :

என் அண்ணாமலை நகர் வாழ்க்கை என்பது என் வரலாற்றில் ஒரு பகுதி. ஆராய்ச்சிக் கட்டுரையன்று. அ.ம.ப.க. கழகத்தில் நான் செவ்வன பணியாற்றவில்லை என்னும் பகைவர் கூற்றை மறுக்கவே அதையெழுதி வருகின்றேன்.[51]

### பூதப் பூசை :

நம் நாட்டு வறுமைப் பூதத்திற்குத் தக்க நல்ல பூசைபோட்டு விட்டால் தீதும் நன்றாம்.[52]

---

52. 20 கும்பம் 1885 (வி.பொ.ப.)
53. 20 சுறவம் 1887 (வி.பொ.ப.)
48. 8–5–64 (மி.மு.சி)
49. 15–6–64 (மி.மு.சி)
50. 10–6–64 (வி.அ.க.)
51. 20–7–64 (வி.அ.க.)
52. 20 கும்பம் 1885 (வி.பொ.ப.)

**நலபேறு :**

*இறுதியில் என் நூல்களால்தான் தமிழுக்கும் தமிழர்க்கும் நலம் பிறக்கும். அதைப் பின்னர்க் காண்பீர்கள்*[53]

**இறைவன் தண்டனை :**

*தமிழை உண்மையாய்ப் போற்றாத தமிழ்ச் செல்வரை இறைவனே தண்டிக்கின்றான்.*[54]

**நூலச்சீடு :**

*நாளைப் பெரம்பலூர் வட்டச் செட்டிகுளம் செல்கிறேன். அங்கு ஆயிரம் உரூபா அளிக்கின்றனர். அது கொண்டு பண்டைத் தமிழ்நாகரிகமும் பண்பாடும் என்ற நூல் அச்சிடப்பெறும். 200 பக்கம் வரும்.*

*தமிழ் வரலாறு 400 பக்கம் வருமாதலால் ஈராயிர உரூபா வேண்டும்.* [55]

**மருத்துவம் :**

*(குடற்காய்ச்சல் (டைபாய்டு) உள்ளபோது) "வலிமை யுள்ள உணவை இளம்பதமாய் அல்லது நீர்வடிவில் சன்னஞ் சன்னமாய் உட்கொள்ளவேண்டும் உழைப்பு வேலை அரை யாண்டிற்கு இருத்தல் கூடாது.* [56]

**நன்கொடை :**

*தங்கள் ஒப்புயர்வற்ற தமிழ் நன்கொடையை நானும் என் மகளும் என்றும் மறவோம். நூறுரூபா அளித்தது தாங்கள் ஒருவீரே.* [57]

**உரப்பேறு :**

*இன்று மலையா செல்ல யாதொரு தடையுமில்லை. என்நோய் நீங்கிவிட்டது. வழிப்போக்கிற்கும் சொற்பொழி விற்கும் ஏற்ற முன்னையுரம் பெற்றுள்ளேன்.*[58]

---

53. 20 சுறவம் 1887 (வி.பொ.ப.)
54. 10–4–65 (வி.அ.க.)
55. 9–6–65 (மி.மு.சி.)
56. 25–7–65 (வி.அ.க.)
57. 24–4–65 (பூ.ம.)
58. 1–5–65 (வி.அ.க.)

**அச்சு அச்சம் :**

*உருளைப்பொறி நல்ல எழுத்து. மேல்கரை (West Cost 26 பவுண்டு)த்தாள் ஒரு கற்றை (ரீம்) 21 உரூபா. 250 பக்கம் வரும். விலை 5 உரூபா. தடித்த அட்டைக் கட்டடம். பொங்கற்குள் வெளிவந்துவிடும். (பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்)* [59]

**மேனாட்டர் நம்பிக்கை :**

*சமற்கிருதம் ஆரியத்திற்கும் ஓரளவு திராவிடத்திற்கும் மூலமென்று மேனாட்டவர் நம்பிகொண்டிருக்கின்றனர். அதை ஆராய்ச்சி நூல் வெளியீட்டால்தான் அகற்றமுடியும். வட இந்தியர் சமற்கிருதமே இந்திய மொழிகட்கெல்லாம் தாயென்று நம்பிக் கொண்டிருப்பதனாலேயே இந்தி வன்மையாய் இங்குப் புகுத்தப்படுகின்றது.* [60]

**செந்தமிழ்ச்சேயோன் :**

*சென்ற மேழம் (சித்திரை) வெளிவந்த தமிழ்நாடு புத்தாண்டு மலர்க்கு விடுத்த "செந்தமிழ் முதல் தெய்வம் சேயோன்" என்னும் கட்டுரைக்கு இன்னும் பணம் வரவில்லை.*[61]

**ஆராய்ச்சி முன்னுரை :**

*பழமொழித் திரட்டு ஆராய்ச்சி முன்னுரை மட்டும் 50 பக்கம் உள்ளது.*[62]

**விலைக்கே நூல் தருக :**

*அன்பளிப்பு யாருக்கும் தரல்வேண்டேன். உண்மைத் தமிழர் அனைவரும் விலை கொடுத்தே வாங்கவேண்டும். இப்பணம் அடுத்த வெளியீட்டிற்குதவும். விரைந்து வெளியிடா விடின் என் ஆராய்ச்சி முற்றும் வீணாய்விடும்.* [63]

**பழமொழி பதின்மூவாயிரம் :**

*பழமொழி பதின்மூவாயிரத்தைப் பண்டாரகர் இராச மாணிக்கனாரிடம் ஒப்புவித்து விடவேண்டும் என்றும், புதி தாய்த் தொகுத்த பழமொழிகளுள் குறைந்த ஒவ்வொன்றிற்கும்*

---

59. 22–11–65 (மி.மு.சி)
60. அ.துலை 1887 (பா.நா.)
61. 30–7–65 (வி.அ.க.)
62. 22–11–65 (மி.மு.சி)
63. 21–1–66 (வீ.ப.கா.சு)

*ஒவ்வொரு உருபா குறைக்கப்படுமென்றும் சு.கு. அருணாசலத்திடம் கண்டிப்பாய் சொல்லிவிடுக.* [64]

## மரத்திற்றாழ்ந்த மனிதன் :

*மாந்தன் உயிரினத்தில் எத்தனை உயர்ந்தவனாயினும் நிலையாமையை நினைக்குங்கால் ஐயாயிரம் ஆண்டு உயிரோடிருக்கும் மரத்தினும் தாழ்ந்தவனாகின்றான்.* [65]

## பொற்கிழி வழங்கல் :

*வருகின்ற ஞாயிறு (16-10-66) காலை 10 மணிக்குத் துறையூர் பிரசன்னா திரைப்படவரங்கில் தவத்திரு குன்றக்குடியடிகளார் தலைமையில் எனக்குப் பொற்கிழி வழங்கப்பெறும்.* [66]

## புகைவண்டிப் போக்கு :

*நேற்றைப் புகைவண்டி வழிப்போக்கு எதிர்பாரா அளவு ஏந்தாயிருந்தது. பகலிற் பேரியங்கியில் நீண்ட நேரம் சலிப்புடன் வழிப்போவதைவிட இங்ஙனம் இரவோடிரவாய்க் குறுகிய நேரத்தில் வந்து சேர்வது நன்றென்று தெரிகின்றது. இனிமேல் இங்ஙனம்தான் வருதல் வேண்டும்.* [67]

## குறிக்கோள் :

*என் வாழ்க்கைக் குறிக்கோள் தமிழை ஆரியத்தினின்று மீட்பது.* [68]

## அவரும் இவரும் :

*ஒரு பிராமணர் முதல்வராயின் சமற்கிரதத்திற்கில்லாத பேராசிரியர் பதவியைப் புதிதாய் உண்டு பண்ணி ஒரு பிராமணரை அமர்த்துகிறார். ஒரு தமிழர் அப்பதவிக்குவரின் ஏற்கெனவே இருந்த தமிழ்ப் பேராசிரியர் தம் வேலையை இழக்க நேர்கின்றது. என்றே இருவகை முதல்வர் ஆட்சிக்கும் இடைப்பட்ட முரண்பாட்டைக் குறித்திருக்கின்றேன். குறள் நெறியை மீண்டும் பார்த்தால் கருத்துத் தெளிவாயிருக்கும்.* [69]

---

64. 2–7–66 (மி.மு.சி)
65. 13–8–66 (மி.மு.சி)
66. 10–10–66 (மி.மு.சி)
67. 17.10.66 (மி.மு.சி)
68. 22–10–66 (மி.மு.சி)
69. 22–10–66 (வி.அ.க)

**விடுதலைப் போராடி :**

*தமிழ்நாட்டின் உண்மையான விடுதலைப் போராடிகள் யார்? என்றொரு கட்டுரை குறள் நெறிக்கு விடுத்திருக்கின்றேன்.* [70]

**மலையாளப் பழமொழி:**

*(அருணாசலத்திடம்) மலையாளப் பழமொழிகள் எழுதிய இரு பொத்தகங்களை வாங்கி வைக்க.*[71]

**நகையாட்டு :**

*அருணாசலம் எனக்கு ஒன்றும் தெரியாதென்றும் அவன் எனக்குக் கற்பித்து எம்.ஏ., பி.ஓ.எல். பட்டங்கள் வாங்கிக் கொடுத்ததாகவும் அவன் பொத்தகங்களிற் சிலவற்றை நான் திருடியதாகவும் அச்சகத்திற் சொல்லியிருக்கிறான். இது எத்தனை நகைச்சுவையும் வேடிக்கையுமான செய்தி.* [72]

**எழுத்து வரலாறு :**

*இற்றை யெழுத்துகளுள் 'ழ ள ற ன' தவிர ஏனைய வெல்லாம் தலைக்கழக காலத்திலேயே தோன்றியிருத்தல் வேண்டும். தொல்காப்பியர் காலம்வரை எகர ஒகர உயிரும் உயிர்மெய்யும் குற்றியலிகர குற்றியலுகரங்களும் மகரம் புள்ளி யுடன் வழங்கப்பெற்றன. கடைக் கழகக் காலத்தில் அல்லது சற்றுப்பின் அவை நீக்கப் பெற்றன. ஈகாரத்தின் பண்டை வடிவம் 'இ' (கரத்தின் மேல் கோட்டில் ஒரு சுழியிடல்), இவை என் தமிழ் வரலாற்றில் ஓரளவு விளக்கப்பெற்றுள்ளன.*

*திரு.தி.நா. சுப்பிரமணியன் எழுதிய பண்டைத்தமிழெழுத் துக்கள் பிராமி வரிவடிவின் வரலாற்றையே விளக்குவது.*

*ஹீராசு பாதிரியார் மோகெஞ்சோதரோ எழுத்துக்களே தமிழெழுத்துக்களின் மூலம் என்பர். அவரெழுதிய ஆங்கில நூல் பெரிய நூல் நிலையங்களில் இருக்கும். மோகெஞ்சோதரோ எழுத்துக்கள் தலைக்கழக எழுத்துக்களின் முந்தின நிலையாக இருக்கலாம்.* [73]

**பண விடையே நன்கொடை :**

*இங்ஙனம் விற்றுதவுபவர் தமிழ்நாட்டிலேயே வேறெவரு மில்லை. இவ் விற்பனைத் தொகையாலேயே வாழ்க்கை நடந்து*

---

**70. 26–10–66 (வி.அ.க)** **71. 21–11–66 (மி.மு.சி)**

**72. 11–1–67 (மி.மு.சி)** **73. 28–1–67 (மி.மு.சி)**

*வருவதால் தங்கள் பணவிடை யெல்லாம் நன்கொடையாகவே தோன்றுகின்றன.*[74]

**கடைப்பட்ட இடம் :**

*2 ஆம் உ.த. மாநாட்டிற்கு வரும் கட்டுரைகளை ஆய எண் குழுக்கள் அமைத்துள்ளனர். அவற்றுள் தமிழ்த்தாட்கள் என்னும் 8ஆம் குழுவில் என்பெயர் இறுதியில் சேர்க்கப்பெற்றுள்ளது. இது கடைப்பட்ட இடமாயினும் உட்புகுந்து வேலைசெய்ய நல்வாய்ப்பென்று கண்டு இசைந்துள்ளேன். சட்டர்சியும், காத்திரேயும் சாம்பமூர்த்தியும்தான் தலைமையான இடம் பெற்றுள்ளனர். குழுவமைப்பு ஆரியச் சார்பில் நிகழ்ந்துள்ளது.* [75]

**வியப்பினும் வியப்பு :**

*இன்று சென்னையினின்றும் திரும்பப்பெற்ற அழைப்பிதழ் இங்கு வந்து சேர்ந்தது . என் பயன்? ஒருவரா இருவரா, சிறுவரா எளியரா, விழாவில் என்னைச் சிறப்பிக்க வந்தவர் எத்துணைப் பெரியார், எத்துணை அரிய நேரத்தை எனக்காகச் செல விட்டனர். இங்ஙனம் பல பெரியார் ஒன்று விடல் எளிதா? நான் வராமையால் என்னைப் பற்றி அவர் எத்துணையோ தவறாகக் கருதி என்னை வெறுத்துமிருப்பரே! இவ்விழா ஏற்பாட்டிற்கு எத்துணைக் காலமும் முயற்சியும் தங்கட்குச் சென்றன. அவ் வளவும் வீணாயிற்றே!*

*இதையெல்லாம் நினைக்கும்போது என் நெஞ்சம் எத் துணைப் புண்படுகிறது. பிற புலவர்க்குப் பெரியவர் பலர் சேர்ந்தால் அதில் வியப்பொன்றுமில்லை. எளிய நிலையில் இருப்பவனும் முகமன் கூறிப் பிறரைப் புகழும் இயல்பில்லாத வனும் புலவரும் விரும்பாத தனித்தமிழ் நடையினனும் ஆரியத்தை வன்மையாய் எதிர்ப்பவனும் ஆகிய என்னைப் பாராட்டப் பலர் கூடினாரெனின் அது வியப்பினும் வியப்பாம்.* [76]

*(குறிப்பு: உந்திய உணர்வில் எழுதிய பாவாணர், கடித முகவரியில் ‘மதுரை-10’ என்பதை விடுத்துச் ‘சென்னை - 10’ என எழுதிவிட ஊர்சுற்றி வந்துளது கடிதம்.)*

---

74. 13–5–67 (மி.மு.சி)

75. 30–8–67 (மி.மு.சி.)

76. 9–9–67 (வி.அ.க.)

### இடைஞ்சலும் கூச்சமும் :

*பர். அவர்கள் தனிமையாயிருந்த காலம்போல் இனி அவர்கள் இல்லத்தில் தங்கவியலாது. அவர்கட்கும் இடைஞ்சல். எனக்கும் கூச்சம்.* [77]

### தனிப்பட்டோர் தகவு :

*7000 உரூபா கிடைக்குமாயின் தமிழ் வரலாறு, திருக்குறள் மரபுரை, தொல்காப்பிய விளக்கம் என்னும் முந்நூலையும் வெளியிட்டு விடலாமே. அத்தகைய நன்னிலை அணுகியாவுள்ளது?* [78]

*தமிழக அரசினரும் பல்கலைக் கழகங்களும் செய்ய வேண்டிய பணி தனிப்பட்ட தமிழன்பர் வாயிலாக நிறைவேற வேண்டுமென்பது இறைவன் திருவுள்ளம் போலும்.* [79]

### தொகுத்தார் முயற்சி :

*மொத்தத் தொகை நாலாயிரத்திற்குமேல் இருப்பதாகத் தாங்கள் தெரிவித்திருப்பது வியப்போடு கலந்த மகிழ்ச்சியையே விளைக்கின்றது. இனிமேல் என் நூல்களெல்லாம் வெளிவந்து விடுமென்றும் தமிழுக்கு எக்காலும் அழிவில்லை என்றும் தேற்றம் பிறந்து விட்டது.*

*எனக்கும் தனித் தமிழ்க்கும் இத் தொகை தொக்கதெனின், அது தொகுத்தாரின் பெரு முயற்சியை யன்றித் தந்தாரின் தனித்தமிழ்ப் பற்றைக் குறித்து விடாது.*

*விழாவிற்கு நான் வராமை ஒருவகையில் எனக்குப் பொந்திகையே (திருப்தியே) அளிக்கின்றது.*

*நேசனைக்காணாவிடத்து நெஞ்சாரவே துதித்தல், ஆசானை எவ்விடத்து மப்படியே வாச, மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில், வினையாளை வேலைமுடிவில்.* [80] *(ஔவையார்) :*

### இளமைமுதல் இடர் :

*நான்தான் என் தமிழ்க் கொள்கையால் இளமை முதல் இடர்ப்பட்டு வருகின்றேன்.* [81]

---

77. 15–9–67 (வி.அ.க.) 78. 13–9–67 (வி.அ.க.)

79. 18.9.67 (வி.அ.க.) 80. 18.9.67 (வி.அ.க.) 81. 9, துலை 1999 (வி.அ.க.)

**விற்று வாங்கல் :**

*குப்பாயத்தையோ வேறு பொருளையோ விற்று ஒரு பொத்தகமும் வாங்கினதில்லை.*[82]

**கணக்க :**

*என் மதுரை மணிவிழா அழைப்பிதழ் விழாவிற்கு மறுநாள் தான் கிடைத்தது. அதனாற் போக இயலாது போயிற்று. சென்ற காரி சென்று ஞாயிறு பெற்றுத் திங்கள் திரும்பினேன்.*

*ஆங்கில நூற்குத் தந்த 2500 சேர்த்து 7000 எனக் கணக்குக் காட்டியுள்ளனர். அது சரிதான். அதுபோக 4500 கைக்கு வந்தது. அதில் 1000 கடனுதவ நேர்ந்துவிட்டது.* [83]

**மரபுரைக்குப் பின் மறுப்பு :**

*தமிழிற் பிறமொழிச் சொற்கள் என்னும் கட்டுரையைத் தூள் தூளாக நொறுக்கி யெறிந்துவிடலாம். ஆயின், சற்றுப் பிந்தித் தான் செய்யவேண்டும். இன்று, திருக்குறள் தமிழ் மரபுரை எழுதி வருகின்றேன். முடிக்க இன்னும் ஒரு மாதஞ் செல்லும். அதன்பின் கட்டுரை மறுப்பு வரும். ஏறத்தாழ 20 பக்கம் ஆகும்.* [84]

**காணவில்லை :**

1. Archaeology and Tamil studies.
2. Notes on persion words in Tamil -

*என்ற இரு கருத்தரங்குச் சுவடிகள் மறைமலையடிகள் நூல் நிலைய மேசைமேல் வைத்திருந்தேன். அவற்றைக் காணவில்லை.*[85]

**நேரடியும் வெளிப்படையும் :**

*ஆட்சியில் ஏதேனும் குற்றங் குறையிருப்பின் அதை நான் நேரடியாகவும் வெளிப்படையாகவும் தெரிவிப்பேனேயன்றி மறைமுகமாய்ப் புனை பெயரில் என் தொடர்பு நீங்கிய இதழில் எழுதேன்.*[86]

---

82. 23–9–67 (வி.அ.க.)
83. 11–10–67 (மி.மு.சி)
84. கூதுலை கக௲கூ௨கூ (வி.அ.க.)
85. 19–1–68 (வி.அ.க.)
86 29–1–68 (வி.அ.க.)

**தமிழாக்க அன்பளிப்பு :**

*இவற்றின் (நூல்களின்) விற்பனையிலேயே என் பிழைப்பு நடப்பதால் அன்பளிப்புப் படிகள் எவர்க்கும்கொடுக்க இயல வில்லை. ஆயின் மேலையார் மொழிநூற் குருட்டுத் தனத்தைப் போக்க* The Primary Classical Languagage of the world 37 *படிகள் உலகத் தமிழ்க் கருத்தரங்கில் கொடுக்கப் பெற்றுள, தமிழாக்கம் நோக்கி, அடுத்த மாநாட்டிற்குள் அவருட் பெரும்பாலார் மனமாறலாம்.* [87]

**மேலையர் ஒப்பாக் குமரிக் கொள்கை :**

*மேலைக் கிறித்தவர் ஏதேன் தோட்டக் கதையைக் குருட்டுத்தனமாய் நம்புவதாற் குமரிநாட்டுக் கொள்கையை ஒப்புக்கொள்ள விரும்புகின்றிலர்.* [88]

**புது நூல் திட்டம் :**

*'மொழிச் சிக்கல் தீர்வு' என்னும் நூல் எழுதத் திட்ட மிட்டதாக 21-3-68 கடிதம் வழி அறிய முடிகின்றது.* [89]

**மின்விசிறி :**

*செயலருள்ளிட்ட இருபதின்மர் தனித்தமிழ்ப் பற்று விஞ்சியவர். வேம்பாத் தொழிற்சாலை மு.ம. (முத்தமிழ் மன்ற) உறுப்பினர்கள் சொன்னவாறு செய்தனர்; வேண்டியவாறு தந்தனர். அதனால்தான் ஒரு மின் விசிறி வாங்க இயன்றது.* [90]

*திருச்சிப் பணத்தைக் கொண்டு ஒரு மின் விசிறி வாங்கி விட்டேன். 210 உரூபா. இது கடந்த ஐந்தாண்டாகக் கொண் டிருந்த எண்ண நிறைவேற்றம்.*[91]

**இருவகை முயற்சி :**

*பயனுறு முயற்சியாயின் எவ்வளவும் செலவிடலாம்.*

*பயனில் முயற்சிக்குச் சிறிதும் செலவிடக் கூடாதென்பது என்கருத்து.*

*செலவொடு உடல் வருத்தமும் நேரும்.*[92]

---

87. 31–1–68 (வீ.ப.கா.சு)
88. 31–1–68 (வீ.ப.கா.சு)
89. மி.மு.சி.
90. 15–4–68 (மி.மு.சி.)
91. 23–4–68 (மி.மு.சி)
92. 10–7–68 (மி.மு.சி)

*இன்று பார்த்த அச்சகம் புதியது, முத்துப்போன்ற புத்தெழுத்து.*[93]

**நன்றிக் கடன் :**

*திரு.அ. இராமசாமிக் கவுண்டர் எனக்குச் செய்த நன்றிக்கு அடையாளமாக எங்ஙனமும் அவர் வரலாற்றை நான் வெளியிட்டு விடுவேன்.*[94]

**அகவையால் மறுப்பு :**

*என் வேலையைச் செய்ய வேறொருவர் இல்லாதபோது என் அகவையைச் சொல்லி மறுப்பது பொருளற்றது.*[95]

**கருத்துக்கு ஒப்பு :**

*தாமதைத் திருச் சுப்பையாப்பிள்ளை அவர்களையே நிகழ்ச்சி நிரலில் குறித்துக்கொள்க. அவர் வராவிடினும் குற்றமில்லை. புலவரென்றிருப்போரெல்லாம் ஒரு நிகரரல்லர். வரிசையறிதலே முதன்மையானது. திரு.வ. சுப்பையாப்பிள்ளை ச0 ஆண்டுகளாகத் தமிழ்நூல் வெளியீட்டில் ஈடுபட்டவர். 2000 நூல்கட்குமேல் வெளியிட்டுள்ளார். என் திருக்குறள் தமிழ் மரபுரை இறுதிப் பத்துப் படிவங்களையும் தாமே முழுப் பொறுப்பேற்றுத் திருத்தி அச்சீட்டு வேலையை மேற்பார்த்து வருபவர். நூல் முழுமையிலுமுள்ள சிறப்புக் கூறுகளையெல்லாம் படித்தறிந்தவர். ஆதலால் அவரே வெளியீட்டுரை நிகழ்த்த மிகத் தகுதிவாய்ந்தவர். என்றும் என் கருத்துக்கும் ஒத்தவர்.*[96]

**வரவு கணக்கு :**

*புத்தனாம்பட்டி ஆசிரியர் முருகனார் தண்டிக் கொடுத்த தொகை 2000. தி.ம.உ. செலவாகியுள்ளது 8000. திருக்குன்றக்குடி அடிகளார் ஏற்கெனவே எனக்கு 1001 உருபா கொடுத்திருக்கின்றார்கள்.* [97]

**பதினென் பிரிவு :**

*திரு. அறவாழியார் அன்று பறம்புக்குடியில் முகவையரசர் குடியைச் சேர்ந்த ஒருவரை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர்*

93. 6–9–68 (மி.மு.சி)
94. 23–12–68 (மி.மு.சி)
95. 17. துலை 2000 (த.கு)
96. 1 சிலை 2000 (த.கு.)
97. 1. சிலை 2000 (த.கு)

*மறவர் குலப் பதினெண் பிரிவையும் குறித்தனுப்புவதாகச் சொன்னார். அக்குறிப்பு இன்னும் வரவில்லை. இதைத் திரு. அறவாழியார்க்கு நினைவுறுத்துக.* [98]

**கடவுள் நம்பிக்கை :**

*என் தி.த.ம. உரை பாராட்டுவோர் கடவுள் நம்பிக்கைய ராகவும் இருத்தல் வேண்டும்.*[99]

**அச்சேறும் நிலையிலுள்ள நூல்கள் :**

*தமிழர் வரலாறு, தமிழர் மதம்,. மீண்டும் வழக்கூன்ற வேண்டுஞ் சொற்கள் என்னும் மூன்றும் அண்மையில் அச் சேறும் நிலையிலுள.* [100]

**மீட்புப் பணி :**

*மீண்டும் வழக்கூன்ற வேண்டுஞ் சொற்கள், கழுவாய் (பிராயச்சித்தம்) உளவாடம் (அச்சாரம்) முதலிய சொற் களையும் பண்டாடு, பழநடை, இருமையால் நேர்ந்து முதலிய தொடரச் சொற்களையும், ஒருபக்கப் பதமுறை (தாலீபுலாக நியாயம்) காக்கைப் பனம்பழமுறை (காக தாலீய நியாயம்) முதலிய முறைப் பெயர்களையும் கொண்டுள்ளது. 200 பக்கம் வரும் . 2000 உருபா செலவாகும்.* [101]

**படித்துப் பார்க்க :**

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்(41), யாகாவாராயினும் நாகாக்க (127), நந்தம் போற் கேடும் உளதாகும் சாக்காடும் (235)), குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றால் (338), கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் (840). பொருட் பெண்டிற் பொய்ம்மை முயக்கம் (913) முதலிய குறளுரைகளைப் படித்துப் பார்க்க. பிறர்க்கும் படித்துக் காட்டுக. 24 பின் னிணைப்புகளையும் பார்க்கச் சொல்க.* [102]

**இணைக்குமேயன்றிப் பிரிக்காது :**

*படத்தைச் செருப்பால் அடிப்பது பகுத்தறிவுச் செயலன்று.*

---

98.20 சுறவம் ‘‘ (த.கு) 99.20–12–69 ( த.கு)

100. 9–7–70 (த.கு) 101. 9–7–70 (நா.எ.ம)

102. 9–1–70 (மி.மு.சி.)

*மறைமலையார் அகம்; பாரதிதாசனார் அகப்புறம்; திரு. அண்ணாத்துரையார் புறம்; பேராயத்தார் புறப்புறம்.*

*நான்வேறு தமிழ்வேறு அன்று; என்னைப் புறக்கணித்தது தமிழைப் புறக்கணித்ததே.*

*தமிழ் இணைக்குமேயன்றிப் பிரிக்காது. பண்பாடு என்றும் உயர்வையே காட்டும்.* [103]

**பிரித்தறிதல் :**

*புலவரைச் சிறப்பாகப் பெரும் புலவரை அவரவர் ஆற்றலும் தொண்டும்பற்றிப் பிரித்தல் வேண்டும்.*

*திரு. வி.க. சமயப் பொதுநவுணர்வு, பெண்ணின் பெருமை, தொழிலாளியுரிமை முதலியவற்றை நாட்டினவர்தான். ஆயின் மொழித் துறையில் எல்லாரும் பின்பற்றவேண்டிய ஈடிணை யில்லா மாமலை மறைமலையடிகளே.*

*ஒருமுறை திரு. வி.க. "என்மொழி தென்மொழியும் வட மொழியும் கலந்த இன்மொழி" என்றார் என்னிடம். இதிலிருந்து அறிந்துகொள்க.* [104]

**தமிழியக்க அமைப்பு :**

*உ.த.க. ஒரு பெருந் தனித் தமிழியக்கமாதலால் தமிழியக்க மென்று வேறொன்றிருக்கத் தேவையில்லை.* [105]

**ஒரு முற்றதிகாரி :**

*தனித்தமிழ் மறவருள் ஒரு கடுங்கோல் முற்றதிகாரி தலைவ னாக வந்தாலொழியத் தமிழ்த் தொண்டர் எத்துணையர் தோன்றினும் தமிழ் பேசும்நடைப் பிணங்கள் செவிக்கொளா; மனந்திருந்தா; ஆயினும் நம் பணியைத் தளராது செய்வது நம் கடமையே.* [106]

**எழுத்து மாற்றம் :**

*தமிழெழுத்து மாற்றம் தேவையில்லை. மாற்றின் தமிழின் தனி நிலைமையே மாறிவிடும். அது பெரியாரின் அடிப்படைக் கொள்கையுமன்று.* [107]

103. 21. விடை. 2002 (த.கு)
104. 21. விடை. 2002 (த.கு)
105. 5–11–70 (த.கு)
106. 5–11–79 (வி.பொ.ப)
107. 9–11–79 (வி.பொ.ப.)

**ஒரே ஓர் இயக்கம் :**

*இனிமேல் தமிழியக்கமென்றும், தென்மொழியியக்க மென்றும் பிரிந்திருத்தல் கூடாது. ஓர் இயக்கமாயிருத்தல் வேண்டும். ஒற்றுமை உரம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.* [108]

**ஈடுபாடு :**

*குமரி நாடே தமிழன் பிறந்தகம் என்பதை அறுதியாக நிறுவ வேண்டும். இதுபற்றி ஓர் ஆங்கிலக்-கட்டுரை கொணர்வேன். வெளிநாட்டறிஞர்க்குக் காட்ட இத்தகைய பணியில் நாம் தான் ஈடுபடவேண்டும்*[109]

**அடியார் :**

*அடியார் என்பது தூய தமிழ்ச் சொல். பத்தர் என்பதும் பகு (bhaj)என்னும் தென்சொல்வழிப் பிறந்த வடசொல்லே. திருத்தொண்டர் என்பதும் தூய தென் சொல்லே.*[110]

**சேயோன் :**

*முருகன் சேயோன் (செந்நிறத்தோன்) எழுங்கதிர் வண்ணன் திரு.வேரங்கம், தென் கன்னட நாட்டிலுள்ள உடுப்பி; இன்று சுவாமிமலை என்பர். குன்று தோறாடல் என்பது ஒரு தனிக் குன்ற நகரமே. இன்று ஒருவருக்கும் தெரியாது போயிற்று.*[111]

**முருகாற்றுப்படை :**

*முருகாற்றுப்படை என்பது பலபொருள் படுவது. போர் மறத்தை நினைவுறுத்துவது.* [112]

---

108. 8–12–80 (வி.பொ.ப)
109. 8–12–80 (வி.பொ.ப)
110. 27–8–79 (க.சி.அ)
111. 27–8–79 (க.சி.அ)
112. 27–8–79 (க.சி.அ)

## 26. முத்துமாலை

*தாமரைச் செல்வர் வ.சு. அவர்கள் பாவாணர் கடிதங்களாக ஒட்டுக்கோப்பில் தொகுத்துவைத்தவை போக நூற்றிருபது கடிதங்கள் ஒரு கட்டாகக் கிடைத்தன. அவ் வனைத்தும் பாவாணரால் அவர்க்கு எழுதப்பட்டவை. அவர்தம் கடிதங்கள் 1970 ஆம் ஆண்டுக்குரியவையும் அதற்கு மேற்பட்டவை யும் இருத்தல் வேண்டும் என்னும் எண்ணத்தை வெளியிட்டு இந்நாள் ஆட்சியாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்க ளிடம் வேண்டிக்கொண்டேன். தாமரைச் செல்வர் தொகுப்பில் 120 கடிதங்கள் வரை இருக்கக் கண்டு மகிழ்ந்து பயன்படுத்திக் கொள்ள வழங்கினார்கள். இன்னும் இவ்வெண்ணிக்கையுள்ள கடிதத்தொகுதி இருக்கவேண்டும் என்றே நம்புகின்றேன். எனினும் கிடைத்தவற்றைப் பயன்படுத்தும் முகத்தால் கால வரிசைப்படுத்தி முத்து மாலை என்னும் இத்தலைப்பில் தொகுத் துள்ளேன்.*

*ஆயிரத்துள் ஒன்றாய், பல்லாயிரத்துள் ஒன்றாய் முழுநிறை முத்துக் கிட்டும்; அவ்வாறு பாவாணர் தொகுத்த நூல்களைப் பற்றிய பற்றிய செய்திகள் நிரம்பிய பகுதி இஃதாகலின் இப் பெயர்த்தாயிற்று!*

*ஒளியும் அளவும் அமைப்பும் பார்த்துப் பொருந்திய வற்றைத் தொகுப்பதே முத்துமாலை ஆகலின் அப்பெயர்க்கும் பொருந்திற்று!*

*'முத்து' தேடித் தந்த கடிதங்களின் பயனீடர்க இப்பகுதி வருதலின் அதனைக் குறித்தும் முத்துமாலையாயிற்று!*

*இங்குத் தரப்பெறும் செய்திகள் காலவரிசைப்பட்டவை. எல்லாமும் தாமரைச் செல்வர்க்கு வந்தவை ஆதலின் கடித உரிமையாளர் பெயர்ச்சுட்டு தவிர்க்கப்பட்டதாம்.*

---

1. 2–1–70

**கண் தரும் பாராட்டு :**

*கட்டுரையில் என் கண் மருத்துவம் பற்றிய செய்தி வேண்டாதாகவும் மற்றொன்று கூறலாகவும் தங்கட்குத் தோன்ற லாம் ஆயின் உ.த.க. உறுப்பினர் அதை அறியின் மகிழ்ந்து தங்களைப் பாராட்டுவர்.*[1]

**மனைநூல் :**

*மனையடி சாத்திரம் ஒருபடி வாங்கி வைக்க. விலை 1 அல்லது $1\frac{1}{2}$ உருபா.*

The Oxford English Dictionary (14 Vols) *ஒரு தொகுதிக்கு உடனே ஏவம் விடுத்து விடுக.* [2]

**கழக வெளியீடு :**

*அடிகட்குப்பின் அரும்பாடுபட்டுத் தமிழைக்காப்பது நான் ஒருவனே யாதலானும், என் பொருளியல் நிலைமை கருதியும் தங்கள் சொந்த வெளியீடெல்லாம் ஒவ்வொருபடி அன்பளிப் பாகத் தந்தால் நன்றாயிருக்கும்.*[3]

**கூளச்சொல் :**

*கீழ்வருவனவற்றை வேர்ச்சொற் கட்டுரையில் சேர்த்துக் கொள்க.*

*கூளம் = திப்பி. மண்டி.*

*ஒ.நோ : மண்டி. மண்டுதல் = செறிதல்*

*கூளன் = பயனற்றவன்.*

*"உழைபேணாக் கூளன்" திருப்பு. 109*

*கூளி = குற்றம் (சூடா) குப்பை, கூளம் என்னும் வழக்கை விளக்குக.*

*கூளி = பொலிகாளை*

*கூளி = பெருங்கழுகு*

*கூளிப்பனை = தாளிப்பனை.*

*கூளம் = பலவகைத் தாளும் வைக்கோலும் கலந்த மாட்டுணவு.* [4]

---

2. 9–5–70
3. 29–6–70
4. 30–6–70

**எழுத்துப்பணி :**

*இரவில் நான் எழுத முடியாது; பகலிலும் இடை யிட்டிடையிட்டுத்தான் எழுத இயலும்.* [5]

**குடம்பை :**

*குடம்பை என்னும் சொற்குக்கீழ், பின்வருவதைச் சேர்த்துக் கொள்க.*

*1. குடம்பை - குரம்பை = 1. பறவைக்கூடு*

*2. சிறுகுடில். "இல்வேய் குரம்பை" (மதுரைக் 310)*

*3. நெற்கூடு. "நெற்குவை குரம்பையின் நிரப்புவித்தனர்" (கந்த.நாட் - 26)*

*4. கூடுபோன்ற உடம்பு. "பொருந்திய குரம்பை தன்னைப் பொருளெனக் கருத வேண்டா" (வேதா.448-1)*

*ம குரம்பு.*[6]

**தனிச்சலுகை :**

*தமிழை வளர்ப்பது கழகத்தின் இரு நோக்களுள் ஒன்று. மறைமலையடிகட்குப்பின் தமிழை வளர்ப்பவன் நான் ஒருவனே. வடமொழியினின்று தமிழை மீட்பதென் வாழ்க்கைக் குறிக் கோள். ஆதலால் மற்றைப் புலவரைப் போலாது என்னைச் சிறப்பாகக் கருதித் தனிச்சலுகை காட்டுவது - கழக கடமையென்று இயக்குநர் குழுவிற்கு எடுத்துச் சொல்லவேண்டும்.* [7]

**தனித்தன்மை :**

*தமிழை வடமொழியின்று மீட்கவேண்டும் என்னும் குறிக் கோள் கொண்டே நான் கற்றாய்ந்தவன். இதற்கு மிகுந்த நெஞ்சுரமும், தற்சார்பு மனப்பான்மையும் வேண்டும். இவை பிறர்க்கில்லை.* [8]

**இறைவன் துணை :**

*நான் ஒருவன் இன்றேல் எதிர்காலத்தில் தமிழ் இருக்கு மென்று கருதுகின்றீர்களா? நான் தமிழுக்காகப் பட்டபாட்டை*

---

5. 24–7–70
6. 28–7–70
7. 31–7–70
8. 15–8–70

*இறைவன்தான் அறிவான். என் பணிக்கு இறைவன் துணை யுண்டென்னும் நம்பிக்கையினாலேயே இன்னும் இதில் ஊன்றி நிற்கின்றேன்.* [9]

**எழுத்துவேலை :**

*புதுவைச் சிப்மேர் (Jipmer) மருத்துவ விடுதியின்று சென்ற வியாழன் விலக்கைப் பெற்று முந்தாநாள் இங்கு வந்து சேர்ந்தேன். இம்மாத இறுதிவரை நான் எழுத்து வேலை செய்ய இயலாது.* [10]

**மட்டிட்டது :**

*Ltd., என்பதை லிமிடெட் என்று வரிபெயர்த்து வழங்கற்க. மட்டிட்டது என்று மொழிபெயர்த்து வழங்குக. பிராட்வே என்பதைப் பிராடுவே என்றாவது குறிக்க. தென்சொல் வல்லின மெய்யில் இறாது. பெருவழி என்று குறித்தல் மிக நன்றாம். பிராடுவே என்று பிறைக்கோட்டில் இருக்கலாம்.* [11]

**அடை :**

*என் பெயர்க்கு முன் பண்டித அல்லது பண்டித புலவ என்னும் அடை கொடுக்க வேண்டேன். தமிழில் பேரா. என்றும் ஆங்கிலத்தில் Prof என்றும் குறிக்க* [11அ].

**அரிதும் எளிதும் :**

*பிரித்தானியக் கலைக்களஞ்சியத்தை எருதந்துறை ஆங்கிலப் பேரகர முதலியைப்போன்றே உடனே வாங்கிவைக்க. பணம் முழுதும் ஒரு கிழமைக்குள் தங்கள் கைசேரும். இம்மியும் ஐயுற வேண்டேன். அது கிடைப்பதரிதென்று தாங்களே எழுதியிருந்தீர்கள். இன்று எளிதாய்க் கிட்டும்போது கடுத்து வாங்கிவிடுக. அது கைதப்பின் தங்களைத்தான் குறை கூறுவேன்.*

*ஆரிய தரங்கிணியும் வாங்கி வைக்க.* [12]

**பல்கலைக் கழக நூல்கள் :**

*பின்வரும் நூல்களையும் எருதந்துறைப் ப.க.க. அச்சக வாயிலாக வாங்கித் தருக.*

9. 20–8–70
10. 7–10–70.
11. 16–1–71
11.. அ.16–1–71
12. 6–3–71

1. An Anglo - Saxon Dictonary

2. An Etymotogical English Dictonary

3. An Icelandic - English Dictonary

*சென்னை அரசு 1957 இலிருந்து வெளியிட்டு வந்த தமிழ் நாட்டு மாவட்டத் திணைக் களஞ்சியங்களுள்* (Dt. Gazetteers) *கோவை என்னிடமுள்ளது. பிற மாவட்டங்களை உடனே வாங்கி விடுக.*

*செ.ப.க.க அகரமுதலியும் கிடைக்குமாயின் அதனொடு மேற்குறித்த திணைக் களஞ்சியங்களையும் ஆரியதரங்கிணி யையும் சேர்த்து உடனே தி.வி.எசு. வாயிலாக அனுப்பிவைக்க.* [13]

### பெருவிலை நூல்கள் வாங்குதல் :

- ❑ திருக்குறள் தமிழ் மரபுரைக்குப்பின் வேறு புதுநூல் வெளி யிடாமையால் என் செல்வநிலை மிகத் தளர்ந்துள்ளது. ஆயினும், "செவிக்குண வில்லாத போழ்து சிறிது, வயிற்றுக்கு மீயப்படும்" என்னுங் குறட்கொப்ப வயிற்றுணவினும் மனவுணவையே மிக விரும்புவதால் பல பெருவிலை நூல்களைத் துணிந்து வாங்கு கின்றேன்.
- ❑ நம் கண்ணுள்ள போதே தமிழ் வெற்றியைக் காண்போம்.[14]

### விலையாகிவிட்டால்

An Etymological Dictionary of the English Language by Skeat (100 *உரூபா) ஒருபடி உடனே வாங்கிவிடுக. நான் இதை வாங்கத் தானே முன்னரே சொல்லியிருந்தேன்! ஏன் ஒவ்வொரு நூற்கும் என்னைக் கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்?என் விடை சேருமுன் விலையாகிவிடின் என் செய்வது?*[15]

### அதுவும் இதுவும்:

*கீற்று ஆங்கிலச் சொற்பிறப்பியல் அரசு முதலி வாங்கியது மகிழ்ச்சி. வெபுசித்தர்* (Webster) *வியனுலக*(Universal) *அகர முதலி (187 ½)உரூபா உடனே வாங்கிவிடுக.* [16]

---

13. 18–3–7114. 18–3–71

15. 26–6–71 16. 29–6–71

## சேந்தன் செந்தமிழ் :

*பாம்பன் சுவாமிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவர்கள் எழுதிய 'சேந்தன் செந்தமிழ்' பார்க்கவில்லை.. 1906இல் நான் நாலாட்டைச் சிறுவனாயிருந்தபோதும், அடிகட்குப் பத்தாண்டு முன்பும் அவர்கள் தனித்தமிழ்க் காப்பு நூல் முதன் முதலாக எழுதினார்களென்பது மிகமிக மெச்சத் தக்கதே. உடனே ஒரு படி வாங்கி அனுப்புக. தமிழர் வரலாற்றில் அவர்களைப் பாராட்டவேண்டும். தமிழ் வரலாறு அச்சிட்ட போது தாங்கள் இச்செய்தியைத் தெரிவிக்கவில்லையே!*[17]

## படைப்பு நோக்கு :

*தமிழ் திராவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் என்னும் உண்மையை உலகமறிய மேலையறிஞர் ஒப்ப நாட்டவே இறைவன் என்னைப் படைத்திருக்கிறான். தங்கள் காலத்திலேயே இந்நிலைமையைக் கண்டு களிப்பீர்கள். எனக்குச் சில அகர முதலிகள் மட்டும் வேண்டும்.*

*சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டு வருவனவற்றுள் கிற்றல் கன்னட அகர முதலி நாற்பாகங்களுள் முன்னிரண்டுதான் வாங்கித் தந்தீர்கள். பின்னிரண்டு வாங்கவில்லை. இதற்குள் வெளிவந்திருக்குமே! உடனே வினவி வாங்குக. முதற்பாகம் 1968-இலும், இரண்டாம் பாகம் 1969-இலும் வெளிவந்தன. தெலுங்ககர முதலியும் வெளியிடுகின்றனர். அதனையும் வினவி வாங்குக.* [18]

## குலைவெடிப்பு :

*என் மூத்த அக்கையர் மகனும் என் மனைவியார் தம்பியும் பையர் பருவத்தில் என்னால் வளர்க்கப்பெற்றவனுமாகிய தாவீது (David) சுந்தரராசு நாமக்கல்லில் கூட்டுறவுத் துணைப் பதிவாளனாக இருந்தவன் சென்ற கிழமை 43 ஆம் அகவையில் திடுமெனக் குலைவெடித்து இறந்துபோனான். அதுபற்றிச் சென்றிருந்து இன்றுதான் திரும்பினேன். ஒரு கிழமை ஒரு வேலையும் செய்யவில்லை.*[19]

---

17. 17–8–71

18. 17–8–71

19. 5–10–71

### அரும்பெரு நூல் :

*கிரையர்சன் இந்திய மொழியியற் கணக்கீடு வந்து சேரும் வரை நம்பிக்கையில்லை. ஆராய்ச்சியாளர்க்கும் நூலகங்கட்கும் இன்றியமையாத அரும்பெரு நூல். தீர்ந்துபோயிருக்குமோ வென்று அஞ்சுகிறேன். விலையைப் பற்றிக் கவலையில்லை.* [20]

### இந்திய வரலாறு :

*பேரா (k) நீலகண்ட சாத்திரியாரும் இன்னொருவரும் இணைந்து இந்திய வரலாறொன்று ஆங்கிலத்தில் அண்மையில் வெளியிட்டுள்ளனர். அலையன்சு பதிப்பக வெளியீடு. 27 உருபா. 26-9-71 மெயில்தாளில் விளம்பரம் வந்தது. எடுத்து வைத்தேன். காணவில்லை. அப்பொத்தகத்தையும் உடனே வாங்கி வைக்க.*[21]

### அறிவு வேட்கை :

- கிரையர்சன் இந்திய மொழியளவைக் கணக்கீடு 14 மடலம் வந்த வுடன் நீலகண்ட சாத்திரி An advanced History of India-வும் சேர்த்து தி.வி.எசு. வாயிலாக என் மகன் பெயருக்கு வேலூர் முகவரிக்கு விடுக்க.
- இயலுமாயின் பிரித்தானியக் கலைக்களஞ்சியத்திற்குச் செய்தது போல் முழுக் கழிவையும் எனக்குத் தந்துவிடுக.
- அளவற்ற அறிவு வேட்கையாலும் தமிழ்ப் பற்றாலும் இவற்றை வாங்குகின்றேன். கையிலுள்ள பணத்தையெல்லாம் தமிழர் வரலாறு அச்சிடக் கொடுத்துவிட்டேன். என் முழுச் சொத்தும் நூலகம்தான்.[22]

### மரபு :

- மரபு என்பது குடியைக் (Tribe) குறிக்கும்போததான் தொகுதிப் பெயராகும். கொடிவழியைக் குறிக்கும் போது தொடர்ச்சிப் பெயரேயன்றித் தொகுதிப் பெயராகாது.
- India as Known to panini ஒருபடி பேரா. கோ. இராமச்சந்திரனாரிடம் உளது. முகவரி தெரியாவிடின் அவரைக் கேட்டுத் தெரிந்துகொள்க. ஒருகால் மோத்திலால் பனார்சிதாசு கூட விற்கலாம்.

---

20. 11.10.71.

21.. 12.10.71

22. 25.10.71.

- என் போர்ப் பாடல் இறுதிப்பாட் டிறுதியடியை.

  "அத்த கப்போர் முரச றைந்தே
  யமர்வென் றடலை யாடுவோம்"

*என்று திருத்தியிப்பீர்கள் என்று நினைக்கிறேன்.*[23]

**கூத்த நூல் :**

*உரிச்சொல் நிகண்டு, கொங்குவேளிர், சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், கயாதரம் ஒவ்வொரு படிவேண்டும்.*

*கூத்த நூல் சாத்தனார் (சீத்தலைக் கூல வாணிகர்) இயற்றிய தாயின் அதுவும் வேண்டும்.*[24]

**முட்டை முளைவறை :**

- தத்துவராயர் பாடுதுறையும் அரசினர் கீழைத்துறைக் கையெழுத்துச் சுவடி நூல் நிலைய வெளியீட்டுச் சுந்தரபாண்டியமும் வேண்டும்.
- முட்டை முளைவறை (Oval Tine) சொட்டையில்லாத தகரம் 45 உருபாவிற்குக் கிடைக்குமா என்று வினவி வரச்சொல்க.[25]

**மன்பதை வரலாறு :**

*மன்பதை வரலாறு* (History of Mankind) *ஒன்று, தொடக்க முதல் இன்றுவரை கூறுவது. 62 நாட்டு ஆயிரத்திற்கு மேற்பட்ட அறிஞரால்* UNESCO *துணைகொண்டு 18 ஆண்டாக எழுதப் பட்டது. நிலப் படங்களும் ஓவியங்களும் நிரம்பி 7000 பக்கங் கொண்டது 6 மடலமாக ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய 7 மொழிகளில் வெளிவந்துள்ளது. உடனே ஒருபடி வாங்க முயல்க. பொத்தகம் வருமுன் பணத்தைத் தொகுத்துக் கொள்கின்றேன். இது எனக்குப் பலவகையில் மிகப் பயன்படும். முந்திக்கொள்வது நன்று. இன்றேல் தீர்ந்துபோம்.*[26]

**மூவேந்தர் சின்னம் :**

*(தமிழ் வரலாற்று முகப்புக்குப்) புலிவிற்கயல் முத்திரை மிகப் பழையது. ஆரிய அடிமையாகி முத்தமிழ் நாட்டையும் கெடுத்த மூவேந்தர் சின்னம் இனி நமக்குத் தேவையில்லை. ஓவியமே வேண்டேன்.*

---

23. 15–1–72.
24. 24–1–72
25. 1–2–72
26. 17–2–72

*ஓவியமில்லாமலே அழகிய வண்ணத்தாளில் அல்லது ஓவியத்தாளில் நூற்பெயரும் என்பெயரும் இருந்தாற் போதும். அன்பு கூர்ந்து கவனிக்க. 1. கருப்பு நிறமே இருத்தல் கூடாது. 2. ஓவியம் வேண்டேன். 3. இள நீலம், கெம்பு, பழக்காவி* (Orange) *முதலிய அழகிய நிறங்களுள் ஒன்றைத் தெரிந்தெடுக்க. விரைந்து விடுக்க.*

*என் பெயர்* **தேவநேயன்** *என்று மட்டும் இருத்தல் வேண்டும்.*[27]

**பெரிதும் சிறிதும் :**

*எவ்விடத்திலும் கறுப்பு நிறம் சிற்றளவிலும் இருக்க வேண்டவே வேண்டேன். நூற்பெயர் பெரிய எழுத்திலும் ஆசிரியன் பெயர் சிறிய எழுத்திலும் இருத்தல் வேண்டும். 'ஞா' என்னும் முதலெழுத்தும், பாவாணர் என்னும் பட்டமும் இருத்தல் கூடாது.*[28]

**சட்டை முகப்போவியம் :**

*சட்டை முகப்போவியம் சரிதான். ஆயின் மீண்டும் கறுப்பு வண்ணத்திலேயே தீட்டியிருக்கின்றது. அவ்வண்ணத்தில் ஒரு புள்ளியேனும் இருத்தல் கூடாது. அழகிய நீல வண்ணத்தில் நூற் பெயரும் என்பெயரும் வெண்கோடாயிருக்கட்டும். இரு பெயர்க்கும் இடையில் உலக உருண்டைப் படமிருக்கலாம்.* [29]

**அகர முதலி ஏவம் :**

*பாசுவொர்து தாலர் கிடையாமையாலும் எருதந்துறைப் ப.க.க பதிப்பக வெளியீடு சிறந்ததாகவே இருக்குமாதலாலும் என் மொழியாராய்ச்சிக்கு ஆங்கில சாகசனிய - ஆங்கில அகரமுதலி மிகத் தேவையாதலாலும், பாசுவொர்து - காம்வெல் அகர முதலியின் முப்பாகமுங் கொண்ட ஒரு தொகுதிக்கு ஏவம்* (Order) *கொடுக்கலாம். அது வெளியாகி வருமுன் (500 உருபா போல்) தொகுத்து வைத்துக்கொள்ளலாம். ஆனால் அது* Anglo-Saxon English *அகரமுதலியாயிருக்க வேண்டும். ஆங்கில சாகசனுக்கு ஆங்கில சாகனிலேயே பொருள் கூறுவது வேண்டாம். அது எனக்குப் பயன்படாது.*

---

27. 2–3–72
28. 4–3–72
29. 9–3–72

*தாங்கள் அண்மையில் வாங்கித் தந்த கிரேக்க ஆங்கில அகரமுதலியொத்த பெரிய இலத்தீன் ஆங்கில அகர முதலியும் கிடைப்பின் வாங்கித் தருக.* [30]

**பழமொழி முரண் :**

*வலிமைக்கு வழக்கில்லை என்பதே ஓங்குவதால், அழுத பிள்ளை பால்குடிக்கும் என்பதற்கு இடமில்லை.* [31]

**பொதுவுடைமை :**

*மக்கள் தொகை அளவுக்கு மிஞ்சிப் பெருத்து வருவதினால் எதிர்கால ஆட்சி பொதுவுடைமை முறையில்தான் இருக்கும்.* [32]

**பிந்தப் பிந்த :**

*இன்று 'தமிழர் மதம்' பு.பு.பட்டியல் அச்சாகின்றது. தமிழ் விடுதலைக்கும் தமிழன் விடுதலைக்கும் இது இன்றியமையாதது. பகுதி பகுதியாய் எழுதிவிடுத்து வருகிறேன். பிந்தப் பிந்தப் புதுக்கருத்துத் தோன்றுவதால் இம்முறையைக் கையாள்கிறேன், அச்சுவேலை தொடருமாறு இடைவிடாது எழுதவேண்டியுள்ளது. இம்மாதம் 3ஆம் கிழமை எழுதிமுடியும்.* [33]

**அதுவேறு இதுவேறு :**

*நான் தொகுத்துவரும் அகரமுதலி எல்லாச் சொற்கட்கும் வரலாறும் பொருளும் கூறுவது. ஆதலால் அது வேறு: வேர்ச் சொற் கட்டுரைப் பொத்தகம் வேறு.* [34]

**நிலையாணை :**

*எனக்குப் பயன்படும் வரலாறு மொழிநூல் மாந்தனூல் ஆகிய முத்துறைப் பொத்தகங்கள் என்று வெளிவரினும் என்னைக் கேளாதே வாங்கலாம்.* [35]

**குமரிநாட்டு மொழி :**

*என்காலத்தில் தமிழ் விடுதலையடையாவிடின் இனி ஒருகாலும் அடையாதென்பது திண்ணம். தமிழ் விடுதலைக்கும்*

30. 5–6–72
31. 27–6–72
32. 27–6–72
33. 4–7–72.
34. 4–7–72
35. 7–7–72.

*முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக நாம் நாட்டவேண்டிய உண்மை தமிழ் குமரிநாட்டு மொழி என்பதே.* [36]

## மூவகைத் தொகுதிகள் :

*கலைக்களஞ்சியம் 5 ஆம் மடலம் அச்சாவதாகக் கேள்வி. முழுத் தொகுதியும் கிடைப்பின் ஒன்று வாங்கிவிடலாம்*

*அ.சி. செட்டியார் தலைமையில் தொகுக்கப்பட்ட ஆங்கில-தமிழ் அகர முதலியும் ஒரு தொகுதி வாங்கின் அதன் குறைகளையும் திருத்தங்களையும் எடுத்துக்காட்டலாம்.*

*செ.ப.க.க. கன்னட அகர முதலி இருமடலம் முன்பு வாங்கித் தந்தீர்கள். 3ஆம் மடலம் வெளிவந்திருப்பின் உடனே ஒரு படி வாங்கி விடுக்க* [37]

## திருவாய்மொழி :

*திருவாய்மொழி 1 முதல் 9 தொகுதிகள் என்று குறித் திருப்பது ஈடா? புருடோத்தமானார் விளக்கவுரையா? எது வாயினும் எனக்குப் பயன்படும். தாங்கள் குறித்துள்ள நூல் களைப் புறநானூறு ஒளவை. சு.து. உரையுடன் சரக் கியங்கிவழி உடனே அனுப்பி வைக்க. என்றும் வேலூர் முகவரிக்கே விடுக்க.*[38]

## அன்பளிப்புக்கும் புத்தகம் :

*செல்வி கட்டுரை பதிவஞ்சலில் விடுக்கப்பட்டுள்ளது. அதற்குரிய அன்பளிப்பையும் பொத்தகமாக விடுக்க*

| | | |
|---|---|---|
| 1. நான் கண்டதும் கேட்டதும் (சாமிநாதையர்) | உரூபா | 1-752. |
| 2. சேரார் வரலாறு (துடிசைகிழார் அ. சிதம்பரனார்) | “ | 5-00 |
| 3. ஆழ்வார்கள் வரலாறு 2 பாகம் ( கா.ர.கோ. முதலியார்) | உரூபா | 4-00 |
| 4. தமிழ்நாவலர் சரிதை (தனிப்பாடற்றிரட்டு) | “ | 3-00 |
| 5. பண்டைக்காலத்தமிழரும் ஆரியரும் (மறைமலையயடிகள்) | “ | 1-00 |
| 6. புறத்திரட்டு | “ | 15-00 |

---

36. 29–7–72. 37. 17–8–72.

38. 23–8–72.

### முத்துமாலை

*புறத்திரட்டு இன்னும் அச்சாகவிடின் திராவிடப் பிரகாசிகை (சபாபதி நாவலர்), நாமதீபதிகண்டு, அம்பிகாபதி கோவை,* The folk songs of southern India *என்னும் புத்தகங்களை அனுப்புக.* [39]

### நூலகப்பெருக்கம் :

*நூலகப் பெருக்க வேணவாபற்றி மேன்மேலும் பொத்தகங் கள் வாங்குகிறேன். அடிகளும் நானும் ஒரு தனி வகுப்பைச் சேர்ந்தவரேம்.* [40]

### முன்னும் பின்னும் அடை :

*வேர்ச்சொற் கட்டுரைகள் ஆசிரியன் பெயர் ஞா. தேவ நேயன் என்று மட்டும் குறிப்பிடுக. முன்னும் பின்னும் அடைமொழியோ பட்டமோ ஒன்றுமிருத்தல் கூடாது.* [41]

### முகவரி :

K.A. *நீலகண்ட சாத்திரியாரின் இல்ல முகவரி உடனே வேண்டும். அதற்காகவே இதை எழுதுகின்றேன். வருகின்ற செவ்வாய் விடை எதிர்ப்பார்ப்பேன். அடுத்த கிழமைக்குள் அவர்க்கு மாநாட்டு அழைப்பிதழ் அனுப்பவேண்டும்.* [42]

### கம்பரில் வடவெழுத்தா?

*இம்மாதச் செல்வி 206 ஆம் பக்கம் 'திருவுடம் பலச' என்பது 'திருஷ்டம் பலச' என்றிருக்கின்றது. கம்பராமாயணத்தில் வடவெழுத்து வருமா? செல்வியிலேயே இத்தகைய பிழை நேரும்போது பிற அச்சகங்களைக் குறை கூறிப் பயனில்லை.* [43]

### சாத்திரியார்நூல்

*நீலகண்ட சாத்திரி தமிழ்நாட்டு வரலாறுபற்றி வெளியிடும் நூலெல்லாம் என்னைக் கேளாதே விடுக்க.* [44]

---

39. 1–11–72.
40. 3–12–72.
41. 3–12–72.
42. 16–12–72
43. 16–12–72.
44. 16–2–73.

**அரைவிலை :**

*மறைமலையடிகள் வழிச்செல்லும் தமிழ்த்தொண்டன் நான் ஒருவனேயாதலால், கழக வெளியீடுகளை எனக்கு அரை விலைக்கு விற்பதே தகும்.*[45]

**தமிழ் வரலாறு எழுதத்தக்கவர் :**

*கோழைகளும் கோடரிக் காம்புகளும் தன்னலப் புலிகளும் பணப்பேய்களும் தமிழ் வரலாறு எழுதமுடியாது.*[46]

**அடிக்கடி வெளிவரத்தக்கது :**

*'எது தமிழ்' போன்ற செய்திகள் செல்வியில் அடிக்கடி வெளிவரல் வேண்டும்.*[47]

**தொண்டுக்கு அன்பளிப்பு :**

*திரு. சுத்தானந்த பாரதியார் தென்னாப்பிரிக்காவில் நற்றொண்டு செய்திருக்கின்றார். அவர் என் நூல்களில் எதை விரும்பினும் அன்பளிப்பாகக் கொடுக்க. அவர்தம் பாரத சக்தி மகாகாவியம் எனக்கு அன்பளிப்பாகத் தந்தாரே.*[48]

**எழுத்துத் தடை :**

*கீழைத்திருப் பொத்தகத் தொடர்* (Sacred Books of the East Series) *ஒரு தொகுதி (50 மடலம்) உடனே வேண்டும். அஃதில்லா மையால்* The Lemurian Language and its Ramification *எழுதுவது தடைப்பட்டுள்ளது.*[49]

**முந்திக்கொள்ளல் நல்லது :**

*1975 உலக வேத மாநாட்டிற்காகத் தில்லியில் இருவேறு கழகங்கள் நால் வேதத்தையும் ஆங்கிலத்தில் விரிவாக விளக்கி அச்சிட்டுக்கொண்டிருக்கின்றன. இரு தொகுதிகளையும் வாங்கி விடல் வேண்டும். உடனே எழுதி ஒவ்வொரு தொகுதிக்கும் பதிவு செய்துகொள்க. ஏனோ தானோ என்றிருக்க வேண்டேன். எல்லா நாடுகளும் வாங்குமாதலால் முந்திக்கொள்வது நல்லது.*[50]

---

45. 16–2–73.
46. 16–2–73.
47. 3–7–73.
48. 3–7–73.
49. 11–10–73.
50. 3–1–74.

## எம்மட்டு?

*சிந்தாற்றங்கரை பற்றிய மூன்று மடலங்களை உடனே வாங்கி விடுக. என்னைக் கேளாதே வாங்கியிருக்கலாமே! ஆயிரம் உருபா எம்மட்டு? இன்று கிடைப்பதே பெரிது. வேத நூல்களும் பகுதி பகுதியாய் வரினும் வாங்கிவிடுக.*

*செ.ப.க. கழகம் துளு அகரமுதலி வெளியிட்டுள்ளதாகச் சென்னை ஆள்நர் கூறியிருக்கிறார். அதையும் வாங்கிவிடுக.* [51]

## ஊற்றுத் தூவல் :

*ஊற்றுத் தூவல் முள்ளில் கூர் நுனி மழுக்க நுனி என இரண்டிருப்பின் கூர் நுனியே வாங்கச் சொல்க.*[52]

## உடனே தேவை :

The Ramayana - A Linguistic Study *உடனே தேவை. ஒருபடி வாங்கியனுப்புக இயலின்* Gazetteer of India vol. II.*காக்கை பாடினியம் ஆகிய இரண்டும் சேர்த்தனுப்புக.*[53]

## தமிழ்ப் பாசறைக் கொடை :

*காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பாசறை மாணவர் எனக்கு 200 உருபா நன்கொடை மதுரை வைப்பகக் காசோலை யாக விடுத்திருக்கின்றனர். அத்தொகைக்கு 6 மடக்கு நாற்காலி வாங்க விரும்புகிறேன். மறைமலையடிகள் நூ.நி.வ. மண்டபத்தி லுள்ளது போன்ற 6 உடனே வாங்கிவைத்து அடுத்தமுறை வருங்கால் அன்பு கூர்ந்து கொண்டுவருக. இனி வருங்கால் கொணர வேண்டியவை :*

*1. நல்ல நாற்காலி. 2. வான்மீகி இராமாயணம் கமற்கிருத மூலமும் உரையும். 3 நூலகர் எனக்கு வாங்கி வைத்துள்ள பொத்தகங்கள். 4 புதுவைச் சங்க நூற் சொல்லடைவு. 5. ஒளிப் படை அட்டையில் ஒட்டின ஏசு படம்.* [54]

## உண்மை வெளிவரவேண்டும் :

*பேரா. மதிவாணன் மீண்டும் முளவுமா முயலே என்னும் கட்டுரை விடுத்திருக்கின்றார். இம்மாதச் செல்வியில் அதை வெளியிடுக. புலவர் இளங்குமரன் மீண்டும் மறுக்கட்டும்.*

---

51. 26–1–74
52. 5–2–74.
53. 11–4–74.
54. 16–7–74.

*உண்மை வெளிவர வேண்டும். கடுப்பும் காழ்ப்புமின்றி நட்பு நிலையில் ஆய்வு மனப்பான்மையுடன் இது நடைபெறுக.* [55]

**வினாவுக்கு விடை தருவார் :**

*கேட்ட வினாக்களுக்கு விடை தரத்தக்கவர் என்பதே Referees என்னும் சொல்லால் உணர்த்தப்படும் பொருள். நாம் வினவிய பின்னன்றித் தாமாக அவர் கருத்துத் தெரிவிப்பவர் அல்லர்.* [56]

**மிகத் தோது :**

*பேரா. மதிவாணனார் இன்று வேலையிற் சேர்ந்து விட்டார். புலவர் இளங்குமரனாரும் உடனே அமர்த்தப்படின் மிகத் தோதாக இருக்கும்.* [57]

**தமிழ்க்குச் செய்யும் கேடு :**

*மறைமலையடிகள் இல்லாதபோது நான் ஒருவனே தமிழ் காப்பவன். எனக்குச் செய்யும் கேடு தமிழுக்குச் செய்வதே.* [58]

**என்றும் இதே நிலை :**

*காலமெல்லாம் தனித்தமிழ்க் கொள்கையினால் குறைந்த சம்பளம் பெற்றுவந்தேன். இன்றுதான் இறுதிக் காலத்தில் சம்பளம் சற்று உயர்ந்திருக்கின்றது. இன்னும் குடியிருக்க வீடில்லை. பொத்தகம் வாங்கப் பணமில்லை.* [59]

**இனிமேல்தான் வரவேண்டும் :**

*தமிழ்நாட்டுக்கு இன்னும் முழுத் தமிழன் தலைவனாக வரவில்லை.*[60]

*இம் முத்துமாலைத் தொகுப்பில் அறுபது குறிப்புகள் சுட்டப்பட்டுள்ளன. உட் குறிப்பு கிளைக் குறிப்பு ஆகியனவும் இவற்றுள் உள்ளன இவற்றுள் பெரும் பகுதியும் நூல் தொகுப்பும் ஆய்வுமே இருத்தலைக் காண்பார் கருதவேண்டுவன பல. அவற்றுள் தலையாய ஒன்று ஓர் ஆய்வாளிக்குக் கருவி நூல் களில் எத்துணைக் காதல் உண்டு என்பதை அறிந்து கொள்வதே!*

---

55. 31–1–75.
56. 26–2–75
57. 25–4–75.
58. 22–8–77.
59. 22–8–77
60. 1–9–77.

*பாவாணர் நூல் வெளியீட்டுக்கு உதவிய பெருமக்கள் சிலர். அமைப்புகள் வழியாகவும் தம் பொறுப்பாகவும் உதவிய நன்மக்களும் பலர். அவர்கள் உதவியவை உப்புக்கும் காடிக்கும் கூற்றாக வாழ்ந்த ஒருவர்க்கு உரியவை இல்லை என்பதை உணர்ந்தே உதவினர்! தாமே விரும்பியும் தாமே தலைப்பட்டுத் தண்டியும் உதவினர். அவர்கள் உதவுதல் எத்தகு உயர்ந்த அரிய-பயன்மிக்க-நூல்களைப் பெறுவதற்கும், நூல்களை இயற்று தற்கும் ஏந்தாக இருந்தன என்னும் பூரிப்பை இப்பகுதிக் குறிப்புகள் கட்டாயம் உணர்த்தும் . பாவாணர் தொகுத்த நூல்களின் முழுப்பட்டி இச்சுட்டில் இல்லை. ஒரு பகுதியே. முழுவதும் பட்டியிட்டுக் காட்டின் பெரு விரிவுடையதாகிப் போகும். படிக்கும் சுவையைக் குறைக்கவும் கூடும். ஆதலான் வேண்டுமளவால் கொள்ளப்பட்ட குறிப்புகளே இவை.*

*இக்குறிப்புகளால் பாவாணர்க்கு உதவியவரின், ஒவ்வொரு காசும். ஆய்வுக் கருவியாகப் பயன்பட்டுள்ளமையும், அக் கருவியின் விளைவாக ஆய்வு நூல்கள் வெளிப் பட்டுள்ளமையும் அந்நூல்கள் தமிழ் மீட்புப் பணிக்கென்று அமைந்த படைக்கலக் கொட்டில்களாத் திகழ்கின்றமையும் உளங்கூரக் கண்டு கொள்வர். தமக்குத் தாமே பெருமிதம் கொள்ளவும், பாவாணர் படைப்புகளுள் தாமும் ஊடாடி ஒளிந்து கிடப்பதை அறிந்து கொள்ளவும் வாய்க்கும்.*

“உதவி வரைத் தன்(று) உதவி ; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து”

*என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளவும் வாய்க்கும்!*

## 27. வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

வாழும் புலவர்கள் வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுக்கும் முயற்சியை 1970 இல் தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்கொண்டனர். அதற்குப் பாவாணர் எழுதிய, ‘என் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்’ என்பது வருமாறு:

தேவநேயன், தோக்கசு (Stokes) என்னும் துரைமகனரால் எடுத்து வளர்க்கப்பெற்ற தோக்கசு ஞானமுத்தனார் என்னும் கணக்காயனார்க்கும், அவருடைய இரண்டாம் மனைவியராகிய பரிபூரணம் என்னும் கணக்காய்ச்சியார்க்கும் 1902ஆம் ஆண்டு பெப்ரவரி மீ 7ஆம் பக்கல் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு, பத்தாம் பிள்ளையாகவும் நான்காம் மகனாகவும் பிறந்ததாக நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சங்கர நயினார் கோவிலிற் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஐயாட்டைப் பருவத்திலேயே என் தந்தையாரை இழந்து விட்டமையால் வடார்க்காட்டு மாவட்டம் ஆம்பூரிலிருந்த எமக்கையாரிடம் சென்று அங்குள்ள மிசௌரி நல்லஞ்சல் உலுத்தரின் விடையூழிய (M.E.L.M.) நடுநிலைப் பள்ளியிற் கல்வி முடித்தபின், முகவை மாவட்டச் சோழபுரத்தையடுத்த சீயோன் மலையில் விடை யூழியராயிருந்த யங் (Young) துரைமகனாரின் கடனுதவி பெற்று, பாளையங்கோட்டைத் திருச்சவை விடை யூழியக் கழக (C.M.S) உயர்நிலைப் பள்ளியில் மூவாண்டு பயின்று வழிநிலைக் கல்வி முடித்து, கூ சீயோன் மலையில் உள்ள நடுநிலைப் பள்ளியில் முதற்படிவ ஆசிரியராக அமர்ந்து ஈராண்டு பணியாற்றினேன்.

அதன்பின், யான் முன்பு மாணவராயிருந்த ஆம்பூர் சென்று அங்கிருந்த கிறித்தவப் பள்ளி உயர்பள்ளி யானபின் அதில் 1922 ஆம் ஆண்டு உதவித் தமிழாசிரியராக அமர்த்தப்பட்டேன். 1924 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வெழுதித் தேறிய பின்னர் சென்னைத் திருவல்லிக்கேணிக் கெல்லற்று உயர் நிலைப் பள்ளியில் ஓராண்டு உதவித் தமிழாசிரியராகவும், சென்னைக் கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் மூவாண்டு தமிழாசிரியராகவும், மன்னார்குடிப் பின்லேக் (Findlay) கல்லூரி

உயர்நிலைப் பள்ளியில் ஆறாண்டும், திருச்சிப் புத்தூர் ஈபர் மேற்காணியார் (Bishop Heber) உயர்நிலைப் பள்ளியில் ஒன்பானாண்டும், சென்னை முத்தியாலுப் பேட்டை உயர் நிலைப் பள்ளியில் ஓராண்டும் தலைமைத் தமிழாசிரியராகவும் பணியாற்றியபின், தமிழ்ப் பற்றே வடிவெடுத்தாற் போன்றவரும் தமிழ்பண்பாட்டில் தலைசிறந்தவரும் என்மொழி நூலாராய்ச்சி முற்றுவதற்கு ஒரு பெருந் துணையாயிருந்தவரும் ஒப்புயர்வற்ற முதல்வருமான காலஞ்சென்ற பேரா.அ. இராமசாமிக் கவுண்டரின் பேரன்பினால் சேலங் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவனாக 1944 ஆம் ஆண்டு அமர்த்தப் பெற்றேன்.

அங்குப் பன்னீராண்டு பணியாற்றிப் பேராசிரியனானபின் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழிநூல் துறை வாசக னாக (Reader) அமர்த்தப் பெற்று ஐயாண்டிருந்தும் காலஞ் சென்ற பண்டாரகர் சேதுப்பிள்ளை செய்த கேட்டினால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பு தடுக்கப் பட்டு 1961 ஆம் ஆண்டு என் பதவியும் இழந்தேன்.

அதன்பின் தமிழன்பர் பலர் தண்டித் தந்த பொருளுதவி கொண்டு இசைத்தமிழ்க் கலம்பகம், பண்டைத் தமிழ் நாகரிக மும் பண்பாடும், தமிழ் வரலாறு, வடமொழி வரலாறு, இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? வண்ணனை மொழி நூலின் வழுவியல், திருக்குறள் தமிழ் மரபுரை என்னும் தமிழ் நூல்களும், The Primary Classical Language of World, The Language problem of Tamil Nad and its Logical Solution என்னும் ஆங்கில நூல்களையும் வெளியிட்டேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் செல்லுமுன் நான் எழுதிய நூல்களையெல்லாம் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வார வெளியீடாக வெளி யிட்டு வருகின்றது. தமிழுக்கு இன்றியமையாத பல நூல்கள் இனிமேலும் என்னால் எழுதப்பெற விருக்கின்றன. அவற்றுள் தலைமையானது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

# 28. சில கடிதங்கள்

**கடிதம் : 1**

மே/பா.திரு. இரா.நித்தலின்பனார்,
8/39, 11 ஆம் தெரு,
தாதாபாத்து, கோவை - 12.
பக்கல் 29-5-70

*பேரன்பரீர்,*

*வணக்கம், நாளை சென்னையிலிருப்பீர்களென்று நினைக்கின்றேன். நான் இங்குச் சென்ற ஞாயிறு வந்து சேர்ந்தேன்.*

*இன்று 'கல்' என்னும் வேர்ச்சொற்கட்டுரை பதிவஞ்சலில் விடுக்கப்பட்டுள்ளது. கூர்ந்து நோக்கி ஒரு பிழையுமின்றி அடுக்குமாறு கோப்பாளர்க்கும், செவ்வையாகத் திருத்துமாறு மெய்ப்புத் திருத்தாளர்க்குஞ் சொல்க. தாங்களும் ஒரு முறை பார்க்க. கீழ்க் கோடிட்ட எழுத்துக்களும் சொற்களும் தடித்த எழுத்திலிருத்தல் வேண்டும், கட்டுரை 14 பக்கமாகி விட்டதனால் வேறு கட்டுரைக்குச் செல்வியில் இடமிராதென்று 'அறுதொழிலோர் யார்?' என்னும் கட்டுரையை உடன் விடுக்கவில்லை. ஒரு கிழமை பொறுத்து, பொன்விழாச் சொற்பட்டிகளுடன் சேர்த்து விடுப்பேன். வேர்ச்சொற் கட்டுரைகள் இனி ஒழுங்காக மாதந்தொறும் வரும். அவற்றிற்கு மட்டும் உடனுடன் முன்போல் அன்பளிப்புத்தொகை அனுப்பிவிடுக.*

*இங்கிருந்தே 'தமிழர் வரலாறு' எழுதி முடிக்கத் திட்டமிட்டிருப்பதால் நான் இடமாற்றம் தெரிவிக்கும்வரை எல்லா அஞ்சல்களையும் எனக்கு இங்கத்து முகவரிக்கே அனுப்பி விடுக.*

*வேர்ச்சொற் கட்டுரையில் ஓர் எழுத்தோ குறியோ மாறினும் பொருள் சிதைந்துவிடுமாதலின் அத்தகைய நேராவாறு மிக்க கவனமாகத் திருத்தி வெளியிடுக.*

---

குறிப்பு : கடிதங்கள் 1 முதல் 11 வரை மேனாள் கழக ஆட்சியர் வ.சு. அவர்கட்கு எழுதியவை.

ஆக்கசுப்போர்டு ஆங்கிலப் பேரகர முதலி வந்தவுடன் தெரிவிக்க. பணம் உ.த.க. பொருளாளர் திரு. செந்தமிழ்க்கிழா ரிடம் உள்ளது. அவர் உடனே காசோலை அனுப்பிவிடுவார்.

திருக்குறள் பரிமேலழகருரை வை.மு. சடகோபாராமானு சாச்சாரியார் குறிப்புரையுடன் வை.மு. கோபாலகிருட்டிணமாச் சாரியார் வெளியீடு ஒருபடி உடனே எனக்கு வாங்கி வைக்க.

**ஞா. தேவநேயன்**

**கடிதம் : 2**

**ஆ 1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,**
**காட்டுப்பாடி விரிவு, வ.ஆ. மாவட்டம்,**

1-3-71

**பேரன்பரீர்,**

வணக்கம்.

தங்கள்: முடங்கலும் பு.பு. பட்டிக்குக் கட்டு விடுத்த செய்தி யறிவுப்பும் வந்து சேர்ந்தன. நன்றி.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வேலையை இன்று தொடங்கிவிட்டேன். ஐந்தாண்டிற்குள் முடிந்துவிடும். சென்னைப் ப.க.க. அகரமுதலியில் விடுபட்டவையுட்பட எல்லாத் தமிழ்ச் சொல்லும் அதில் இடம் பெறும். குமரிநாட்டுத் தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமென்னு முண்மை அதனால் தெளிவாகும். உலகமுழுதும் பரவும் விரி வான அளவை அகர முதலியாக வெளிவரும்.

இதன் தொகுப்பும் வெளியீடும் பற்றிய திட்டம் சென்ற மாதத் தென்மொழியிதழில் உள்ளது. அதை இம்மாதச் ‘செல்வி’ யில் தப்பாது வெளியிட்டு விடுக. இருபக்கந்தான் வரும்.

5 உரூபா தொகுப்புச் செலவிற்கும் 5 உரூபா வெளியீட்டுச் செலவிற்குமாக மாதந்தோறும் 10 உரூபா அனுப்பும் 200 உறுப்பினர் சேர்ப்பதே அத்திட்டம். 125 உறுப்பினர்க்கு மேற் சேர்ந்து விட்டனர். மாதந்தோறும் ஆயிரம் உருபா என் வாழ்க் கைக்கும் தாள் பொத்தகம் தமிழ்த் தட்டச்சு முதலிய கருவி கட்கும் சொற்றொகுப்பும் விளக்கமும்பற்றி ஆங்காங்குச் செல்லும் வழிச் செலவிற்கும் பயன்படுத்தப்படும். மற்றோரா

யிரம் வெளியீட்டிற்காக வைப்பகத்தில் இட்டு வைக்கப் பெறும். 4 மடலமாக வெளிவரும் செ.சொ.பி. அகரமுதலி ஒவ்வொர் உறுப்பினர்க்கும் ஒரு தொகுதி அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

ம.அ. நூல் நிலையத்திலிருந்து தேன்மொழி வாங்கிப் படித்துத் திட்டத்தை மட்டும் 'செல்வியில்' உடனே வெளியிடுக.

தாங்கள் குறித்துள்ளவாறு சிறு கட்டுரைத் தொடர் வேனில் கழிந்தபின் எழுதியனுப்புவேன். அன்று நூல்நிலையத்திற் பார்த்த ஆரிய தரங்கிணி-இருமடலம், 80 உருபா-உடனே வாங்கச் சொல்க. அரசினர் 'அண்மையில் வெளியிட்ட மாவட்டத் திணை களஞ்சியங்களும் சென்னைப் ப.க.க. அகரமுதலி ஒரு தொகுதியும் வேண்டும். அடுத்த கிழமை திரு பெருஞ்சித்திரனார் அங்கு 500 உருபா கொண்டு வருவார்.

ஆங்கிலப் பிரித்தானியக் கலைக்களஞ்சியம் ஒரு தொகுதிக்கும் உடனே ஏவம் விடுக்க. வெளிநாட்டுப் பொத்தகம் வாங்கத் தடையில்லையென்று பலருஞ் சொல்கின்றனர்.

**ஞா.தே.**

**கடிதம் : 3**

**ஆ 1135, 2ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,**
**காட்டுப்பாடி விரிவு, வ.ஆ.மாவட்டம்,**
29-3-71

**பேரன்பரீர்,**

வணக்கம்.

தங்கள் 27-3-71 முடங்கல் படங்களுடன் கிடைத்தது. என் மர நிலைப்பேழைகள் பல கீறியும் ஓட்டையாகியும் போய் விட்டன. அதனால் விற்றுவிட்டேன். காடரசு நிலைப்பேழையின் இற்றை விலை 700 உருபா; ஓர் அடைப்புத் தட்டுள்ளது 750. விலை இன்று மிகக் கூடியிருப்பதுடன் இருப்புத்தகடும் முன் போல் திண்ணமானதா யில்லை. அதனால், பழையது ஒன்று 400 உருபாவிற்குள் கிடைப்பின் இரண்டு வாங்கலாம். பூச்சுப் பெயர்ந்திருப்பினும் குற்றமில்லை; ஒழுக்கில்லாதிருந்தாற் போதும். பிற குழும்புக.ள் செய்யும் பேழைகள் விலை குறைந்திருப்பினும் உறுதியும் பாதுகாப்பும் உள்ளனவாக இல்லை. ஏலக்கடைகளிலும் பழம்பொருட் கடைகளிலும் அடிக்கடி வினவிவரச் சொல்க.

*நான் குடியிருக்கும் வீடு இன்று இங்கேயே 80 உருபா விற்குத்தகும். வீட்டுக்காரரிடம் ஒருவர் போய் 110 உருபா வாடகை கொடுப்பதாகச் சொல்லியிருக்கின்றார். வீட்டுக்காரர் சற்றுத் தமிழ்ப்பற்றும் என்மீது மதிப்புங்கொண்டவர். ஆதலால் 10 உருபா தான் உயர்த்தச் சொன்னார். நான் 5 உருபாதான் உயர்த்த முடியும் என்றேன். அதற்கு இசைந்துவிட்டார். சென்ற மாதத்தி லிருந்து வாடகை 60 உருபா. இதற்குமேல் இன்று என்னால் கொடுக்க இயலாது. செந்தண நிலைப்பாட்டு அறை* (Air-conditioned room) *கட்ட இன்று அவரிடம் தாராளமாகப் பண மில்லை. இருந்து கட்டினும் வாடகை 100 உருபா ஆகிவிடும். வருகின்ற வேனிற்கு வால் பாறையில் தங்குமாறு என்னை அழைக்கும் தமிழ்ப்புலவர் முழுச் செலவையும் தாமே ஏற்றுக் கொள்வார். போகவர வழிச்செலவு தான் எனது. ஆதலால் இழப்பொன்றுமில்லை.*

*ஒப்பியன் மொழிநூலில், கழக வெளியீட்டிலுள்ள படங்களையே சேர்த்துக்கொள்க. இயலுமாயின் எனதையும் சேர்த்துக்கொள்ளலாம். அது 1934-இல் பம்பாய் இந்தியப்பட விளக்கக் கிழமையிதழிகையில்* (IIlustrated Weekly of India) *வெளிவந்தது. அதன் படியொன்று வைத்திருந்தேன். எங்கோ தவறிவிட்டது. முழுகின் இலெமுரியா* (Lost Lemuria) *கிடைப் பின் அதிலுள்ளதையும் சேர்த்துக் கொள்க. இராமச்சந்திர தீட்சி தரின்* Pre-Historic south India *(சென்னைப் ப.க.க. வெளியீடு) என்னும் நூலிலும் ஒன்று உளது. அதையும் சேர்த்துக் கொள்ளின் நன்றே.*

**ஞா. தேவநேயன்**

**கடிதம் : 4**

**ஆ 1135, 2ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,**
**காட்டுப்பாடி விரிவு, வ.ஆ.மாவட்டம்**
9-4-71.

**பேரன்பரீர்,**

*வணக்கம். காசோலையும் பிறவும் ஒப்பியன் மொழிநூற் கட்டும் எடுத்துக்கொண்டேன். நன்றி. ஓ.மொ.சட்டை கவர்ச்சியாயிருக்கின்றது. 25ஆம்பக்கம் 'வீழ்*-to fall in love' *என்று குறித்தது ஆராய்ச்சி முதிராத காலம். விள்-விழு-வீழ் என்பதே சரி. விழு-விழை. அடுத்த பதிப்பில்தான் திருத்த வேண்டும். பன்னீர் ஓரைப் பெயர்களிலும் சிலவற்றை மாற்ற வேண்டும். (சொல் அல்லது வடிவு)*

*140 ஆம் பக்கம் மேடம்-மேழம், இடபம் -விடை, இரட்டை-ஆடவை, கடகம் - அலவன், ஆளி - மடங்கல், தேள்-நளி. வில் - சிலை, மகரம் - சுறவம். இவற்றுள் வலப்பக்கமுள்ள சொற்களைத்தான் இன்று ஆள்கின்றேன்.*

*தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை மதிப்புரையும் சேர்த்துக் கொள்வீர்களென்று எதிர்பார்த்தேன். அது அற்றைத் தமிழ்ப் பொழிலில் வெளிவந்தது.*

*பேரா. இராமச்சந்திர தீட்சிதரின்* Pre-Historic South India *விலுள்ள குமரிக்கண்டப் படமே நம் கொள்கைக்குப் பொருத்த மானது. அடுத்த பதிப்பில் அதையே இணைக்க. பனிமலை ஒரு காலத்திற் கடற்குள்ளிருந்ததை அதுவே காட்டும்.*

*மே முதற்கிழமைதான் வால்பாறை செல்கின்றேன். அதற்கு முன்பே வேர்ச்சொற் கட்டுரை வந்துவிடும்.*

*மே 4ஆம் 5ஆம் பக்கல் பறம்பு மலையில் தவத்திரு குன்றக் குடி அடிகள் கொண்டாடும் பாரி விழாவில் எனக்குப் பாராட்டிருக்கின்றது. தமிழாசிரியரும் தமிழறிஞரும் பலர் வருவர். 23ஆம் பக்கல் தி.பா. புலியூர் சென்று மறுநாள் பெருஞ் சித்திரனாருடன் விழாவிற்குச் செல்லாமென்றிருக்கின்றேன்.*

*முன்பு தாங்கள் கூறியவாறு ஒரு சூழ்வு நடத்துவதாயின்* Origin & Spread of the Tamils *சில படிகளுடன் இங்கு வருக. செல்லும் வழியிற் பெருஞ்சித்திரனையும் சேர்த்துக் கொள்ளலாம். விழா முடிந்தபின் வால்பாறை செல்வேன்.*

*ஆரியர் இந்நாட்டிற்கே உரியவரென்றும், உலக முழுதும் பரவி நாகரிகத்தைப் புகுத்தினவரென்றும் சிந்துவெளி நாகரிகம் ஆரியரதேயென்றும் மேனாட்டார் நம்புமாறு ஆரிய தரங்கிணி யில் எழுதப்பட்டுள்ளது. சேது; தெ.பொ.மீ., மு.வ. முதலியோர் தாமும் தமிழைக காவாது என்னையுந் தடுத்துங் கெடுத்தும் வருவதை எண்ணிக் காண்க.*

**ஞா.தே.**

**கடிதம் : 5**

ஆ 1135, 2- ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,
காட்டுப்பாடி விரிவு, வ.ஆ.மாவட்டம்,
1.7.71

**பேரன்பரீர்,**

*வணக்கம். கீற்று* (Skeat's) *ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகர முதலி வாங்கியது பற்றி முந்தா நாள் விடுத்த அட்டையில் மகிழ்ச்சி தெரிவித்திருந்தேனே! அது கிடைக்கவில்லையா?*

*ஆங்கிலோ-சாகசன்* (Anglo-Saxon) *அகர முதலி வாங்க உறுதி யான கட்டளை உடனே கொடுத்துவிடுக.*

*வெபுசித்தர்* (Webster)*வியனுலக* (Universal) *அகர முதலியை (1871/2 உரூபா) வாங்குமாறு முந்தின அட்டையிலேயே எழுதி விட்டேன். பேரா.ம.வி. இராசேந்திரன் (எம்.ஏ.) எழுதிய நம் நாட்டுப் பாம்புகள் ஒன்றும் வேண்டும். நாம் வாங்கிய பிரி தானியக் கலைக்களஞ்சியம்* (Encyclopaedia of Britannica) *24 மடலங்களுள் இறுதியது பொருட்காட்டி* (Index) *அதுவே திணைப்படங்களும்* (Maps) *கொண்டது. அதில் இந்தியாப் படம் வர வேண்டிய மூவிடத்திலும், மற்ற நாடுகளை யெல்லாம் காட்டி இந்தியாவை மட்டும் கரிபூசினது போல் கருஞ்சாயம் பூசியுள்ளது.* (Silhouetted) *இது ஏன் என்று விளங்கவில்லை. இந்தியாவின் மீது பகை கொண்டிருக்கும் குழும்பும் அல்லது அரசும் இங்ஙனம் செய்யக்கூடாதே! அமெரிக்காவில் வெளி யிட்ட இக்கலைக் களஞ்சியத்தில் ஏன் இக்கடுங்குற்றம்? உடனே எருதந்துறைப் பல்கலைக் கழக அச்சகத்திற்கு* (Oxford University Press) *எழுதிக் கேட்க, கைத்தவறுதலாக அனுப்பியிருந்தால் இந்தியப்படமுள்ள மடலம் ஒன்று அனுப்பச் சொல்க. அஃதின்றேல் அதற்குரிய விலையைத் திருப்பச் சொல்க. இரண்டு மின்றேல் பொது மேடையில் அல்லது அரசு வாயிலாகக் கிளர்ச்சி செய்ய வேண்டும்.*

**ஞா. தேவநேயன்**

**கடிதம் : 6**

**ஆ** 1135, 2 **ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,**
**காட்டுப்பாடி விரிவு, வ.ஆ.மா,**
27.7.71

**பேரன்பரீர்,**

*வணக்கம், பொத்தகக் கட்டு நேற்றுத்தான் வேலூர் வந்து சேர்ந்தது. என் மகன் உடனே எடுத்துவந்தான். அடுத்த மீ அவன் பணங்கொண்டு வருவான்.*

*வெபுசித்தர் அகரமுதலி வண்ணப் படங்களுடன் நன்றாகத்தான் இருக்கின்றது. விலை தகும்; பயனும் படும். ஆயின் எனக்கு வேண்டியவை படங்களிலும் சொற்களும் பொருள் விளக்கமுமே. சில அருஞ்சொற்கள் அதில் இல்லை. பொருள் விளக்கம் மிக்க குறைவு.*

*நான் திருச்சி ஈபர் மேற்காணியர் உயர்நிலைப் பள்ளியில் 1934 இல் பார்த்த வெபுசித்தர் ஆங்கில அகரமுதலி, இன்று வாங்கியதுபோல் இரு மடலம் (2 Vols) கொண்டது. அதிலுள்ளவை வண்ணமில்லாப் படங்களஞ்சியம் போன்றது. எடுத்துக்காட்டு :* Beaver *(நீர்நாய்) அதில் படத்துடன் ஒரு பக்கம் முழுவதும் வண்ணிக்கப் பட்டுள்ளது. அதைப் பற்றி அறியக்கூடியவையெல்லாம் அதிலுள்ளன. இன்று வாங்கியதில் ஓரிருவரியே உள்ளன.*

*விலையுயர்ந்த விரிவாயிருக்குமென்று கருதினேன். ஏமாற்ற மடைந்தேன். விலை குறைந்த இன்னோர் அகரமுதலி வெபுசித்தர் இயற்றியது இருமடலமா, நான் சொன்னவாறு பொருள் விளக்கமுள்ளதாவென்று கண்டு அல்லது கேட்டுப் பார்க்க. இரு நிலைமையுருப்பின், உடனே வாங்கிவிடுக. விலையை முன்பணமாக வேண்டுமாயினும் அனுப்பி விடுகிறேன்.*

*இரு மடலத்தையும் ஒரு பெரு மடலமாகக் கூட இன்று வெளியிட்டிருக்கலாம். அதை வினவியறிக. ஆங்கிலப் பேராசிரியர் அண்மையில் இருப்பினும் கேட்டறிக. பொருள் விளக்கம்தான் நற்சான்று. படமும் அதில் மிக விளக்கமானதே. இதில் ஒரு நீர்நாய்ப்படம் மட்டும் உள்ளது. அதில் நீர்நாய்கள் ஒரு நீர்நிலையின் குறுக்கே அணைக்கட்டித் தமக்கு உறையுள் அமைக்கும் படம் தெளிவாக உள்ளது. எழுத்தும் சற்றுச் சிறிதாக இருந்ததாக நினைவிருக்கின்றது.*

**ஞா. தேவநேயன்.**

**கடிதம் : 7**

**ஆ. 1135, 2ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,**
**காட்டுப்பாடி விரிவு, வ.ஆ. மாவட்டம்,**
27.7.71

**பேரன்பரீர்,**

*வணக்கம். தங்கள் அன்பளிப்புக் காசோலை யுடனிட்ட முடங்கலும் அடுத்த அட்டையும் வந்து சேர்ந்தன.*

*பா.வே. மாணிக்க நாயகர் எனக்கு மூத்த தலைமுறையர். ஆதலால், அவர்கள் எழுதிய தொல்காப்பிய ஆராய்ச்சியும் அஞ்ஞானத்தின் வழக்கீடும் நான் வாங்கவில்லை. தஞ்சை உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் உறவினரைக் கேட்டுப் பார்க்க.*

*வேர்ச் சொற்கட்டுரையும் 'நான் கண்ட தமிழ்ப் பெரும் புலவர்' வரிசையில் மூவர் வரலாற்றுப் பகுதிகளும் இன்று பதிவஞ்சலில் விடுத்துள்ளேன். அடிகளைப்பற்றி எழுதவில்லை. அவர்களைப்பற்றி ஏற்கெனவே விரிவான வரலாறுகள் வெளி வந்துள்ளன. அவர்கள் மாபெரும் புலவராதலால் அவர்கள் வரலாறு பிறரதுபோல் ஓரிரு பக்கத்திற்குள் அடங்காது. பிறர் எழுதாத செய்திகளைத் தொகுத்து என் இறுதிக் காலத்தில் ஒரு தனிப் பொத்தகமாக எழுதவிருக்கின்றேன்.*

*புலவர் வரலாற்றுப் பகுதிகளைத் தாளின் இருபுறமும் எழுதியுள்ளேன். ஒரே புறம் எழுதின் தாட் செலவாவதொடு அஞ்சற் கட்டணமும் மிகும். அச்சு அடுக்கிற்கு எளிதாக இருக்கு மாறு முற்படப் படியெடுப்பித்துக் கொள்க.*

*இன்று, செ. சொ. பி. அகரமுதலித் தொகுப்பில் ஈடு பட்டிருப்பதால் வேறொன்றிலும் கவனஞ் செலுத்தற் கில்லை. மாதந்தோறும் ஒரு கட்டுரை வரைவதே பெரிது. எனினும் இத்தமிழாண்டிறுதிக்குள் உயிர்மெய்முதல் வேர்ச் சொற்கள் முடிந்துவிடும். அதன் பின் நூலாக வெளியிடலாம். இன்று எழுதி வருபவை பெருவேர்ச் சொற்களே. சிறுவேர்ச் சொற்கள் நூற்றுக் கணக்கின.*

*சென்னைப் ப.க.க. அகரமுதலித்தாள் அப்பளம் போன்ற தாதலால் அதைக் கட்டடஞ் செய்ய முடியாது. பர்.சஞ்சீவி, பேரா. நிலவழகனார் (இராமச்சந்திரனார்) பெருஞ்சித்திரனார்,*

*தாங்கள் ஆகிய நால்வரும் பர். சுந்தரவடிவேலனாரைக் கண்டு பல்கலைக் கழகத்திலுள்ள முத்தொகுதிகளுள் ஒன்றை நான் திருத்தி வெளியிடுமாறு விலைக்குக் கொடுக்கக் கேட்க வேண்டும்.*

*எமக்கின்று சம்பள வருவாயின்மையால் இனி நான் எழுதுபவற்றையெல்லாம் நானே வெளியிட்டால்தான் எனக்குக் கட்டும். எனக்குச் சொந்த வீடின்மை கவலைக்கிடமானது.*

**ஞா. தேவநேயன்.**

**கடிதம் : 8**

**ஆ 1135, 2ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,**
**காட்டுப்பாடி விரிவு, வ.ஆ.மா.,**
13-5-72.

**பேரன்பரீர்,**

*வணக்கம்,*

*தங்கள் அஞ்சலட்டை வந்தது. அடிகள் நூல் நிலையத்திற்குத் தமிழர் வரலாறு அன்பளிப்புப்படி ஒன்றெடுத்துக்கொள்க. சு.கு. அருணாசலம் சென்ற மீ சேலத்தில் இறந்துபோனான்.*

*இன்று தாங்கள் எனக்கு ஓர் அரும் பேருதவி செய்ய வேண்டும். நான் குடியிருக்கும் வீட்டுக்காரர் வீட்டை விற்கப் போகின்றார். வீட்டை வாங்குபவர் உடனே என்னை வெளி யேற்றுவார். அல்லது 65 உரூபா வாடகையை 80 இலிருந்து 100 வரை உயர்த்துவார். வாடகையை உயர்த்துவதிலும் வெளி யேற்றுவது துன்பந்தரும். இத்தகைய வீடு இங்கு வேறில்லை. சென்னையில் 300 உரூபாவிற்குக் குறைந்து கிடையாது.*

*ஆதலால், இதுவரை நான் எழுதிய பொத்தகங்களின் உரிமை முழுவதையும் விற்று இவ்வீட்டை விலைக்கு வாங்க விரும்புகிறேன். வாங்கின் ஓரறையிற் செந்தண நிலைப்பாடு* (Air-conditioned) *அமைத்துக் கொள்ளலாம்; மேற் கட்டிடமும் கட்டிக்கொள்ளலாம்.*

*தங்கள் வார வெளியீடாக உள்ளனவும் என் சொந்த வெளியீடாக வுள்ளனவும் ஆகியவற்றுடன், வேர்ச்சொற் கட்டுரைகளும் சேர்த்துக் கொள்க. வேனில் கழிந்தவுடன்*

இன்னும் பத்துக் கட்டுரைகள் எழுதித் தருவேன். பழமொழித் திரட்டும் விற்பேன்.

இவற்றிற் கெல்லாம் நேர்மையான ஒரு விலை தருக. என் நூல்களை வாங்குவது தமிழுக்குச் செய்யும் தலைத்திறத் தொண்டனெனக் கருதுக. திருக்குறளுரை திருத்தமும் விரிவும் பெறும். ஒரு கிழமைக்குள் நன்மறுமொழி எதிர்பார்க்கின்றேன். எல்லாநூல்களையும் வாங்க இயலாவிடின் வீடுவாங்குந் தொகையளவிற்கு வாங்குக. அது முப்பதினாயிரத்திற்குக் குறையாதிருக்கும்.

**ஞா. தேவநேயன்.**

**கடிதம் : 9**

**ஆ 1135, 2ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,**
**காட்டுப்பாடி விரிவு, வ.ஆ.மாவட்டம்,**
23-5-'72.

**பேரன்பரீர்,**

வணக்கம், தமிழே திரவிடத்தின் தாயும் ஆரியத்தின் மூலமும் என்னும் உண்மையை உலகறிய நாட்டற்கு வேண்டிய வாறெல்லாம் என்னைத் தகுதிப்படுத்தி வருகின்றேன். இன்னும் ஐந்தாண்டிற்குள் அது நிறைவேறிவிடும் என்பது என் நம்பிக்கை.

இப்பொருள்பற்றிய வரலாற்று நூல்கள் வெளிவரும் போதெல்லாம் ஒவ்வொருபடி எனக்கு வாங்கி வைக்க.

1. A social history of the Tamils (சென்னைப் ப.க.க. வெளியீடு)
2. The Art of Tamil Nadu (அறநிலையப் பாதுகாப்பு மன்ற வெளியீடு)
3. Inscriptions of Kanyakumari District (அறநிலையப் பாதுகாப்பு மன்ற வெளியீடு)
4. The Tamil Kingdoms of South India (K.A. நீலகண்ட சாத்திரி)
5. History of India -3 Parts (K.A.நீலகண்ட சாத்திரி)
6. A Comprehendive Hostory of India 2 vols (K.A. நீலகண்ட சாத்திரி)

சூலை 8,9, காரி ஞாயிறு சேலத்தில் நடைபெறும் உ.த.க. தமிழ் விடுதலை மாநாட்டில் பதிப்புத் துறைப் பட்டறிவு பற்றியும் செல்வியும் சிறந்த நூல்களும் வாங்குவதுபற்றியும் தாங்கள் சொற்பொழிவாற்றலாம். புலவர் சின்னாண்டார் இதுபற்றி எழுதுவார். இசைந்துவிடுக.

*மறைமலையடிகள் நூல்களெல்லாம் என்னிடமிருக்க வேண்டுமென்று கருதுகின்றேன். என்னிடமில்லாதவை பத்திற்கு மேற்படா. அவற்றை அன்பளிப்பாகவாவது (அஃதியலாக்கால்) அரைவிலைக்காவது தர ஏற்பாடு செய்க.*

*சமற்கிருதப் பேராசிரியர் திருஞானசம்பந்தம் சேலம் தமிழ் விடுதலை மாநாட்டில் தலைமை தாங்கித் தமிழுக்கு வடமொழி தேவையில்லையென்று பேசமுடியுமா? முடியுமெனின் தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, வடமொழி வரலாறு ஒவ்வொருபடி அன்பளிப்பாகக் கொடுக்கலாம்.*

**ஞா. தேவநேயன்.**

**கடிதம் : 10**

**ஆ** 1135. 2**ஆம் மேற்குக் குறுக்குச் சாலை,**
**காட்டுப்பாடி விரிவு வ.ஆ.மாவட்டம்,**
29-7- '72

**பேரன்பரீர்,**

*வணக்கம். செல்விக் கட்டுரை இன்று பதிவஞ்சலில் விடுக்கப் பட்டுள்ளது.*

*அன்பளிப்புத் தொகையை முன்போல் இங்கேயே விடுக்க.*

*இனிமேல், நாம் காலம் தாழ்க்காது நம் போராட்டத்தைத் தொடங்கவேண்டும். என் காலத்தில் தமிழ் விடுதலையடையா விடின். இனி ஒரு காலும் அடையாதென்பது திண்ணம்.*

*தமிழ் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படை யாக நாம் நாட்ட வேண்டிய உண்மை, தமிழ் குமரிநாட்டு மொழி என்பதே.*

*தமிழர் நண்ணிலக் கடற்கரை நாட்டிலிருந்து வந்தவர் என்பதே இன்று மேனாட்டில் வேரூன்றியுள்ளது. அதனால் தமிழின், தொன்மை முன்மை தாய்மை தலைமை ஆகியவற்றை மேலையர் உணரும் நிலைமையில் இல்லை. தெ.பொ.மீ. வெளிப் படையாகவும், மு.வ. மறைமுகமாகவும் இக் கொள்கையைத் தாங்குகின்றனர். குமரிநாட்டுக் கொள்கையை ஒப்புக் கொள்ளின் ஆரிய மேம்பாட்டுக் கொள்கை நிலைக்காதென்பதை நன்கறிந்தே, நீலகண்ட சாத்திரி அதை விடாப் பிடியாய் மறுத்து வருகின்றார். தனிநாயகம் உலகச் சுற்றுலா மாநாடுகளும் தமிழ்ப்*

பகைவரையே தலைமையாகக் கொண்டு நடைபெறுவதால் தமிழின் நிலைமை வரவரக் கேடாகியுள்ளது. இதை அடியோ டொழித்தற்கு வருகின்ற திசம்பர் இறுதி, சென்னையில், தமிழ் வரலாற்றுப் பட்டிமண்டபம் நிகழ்த்த வேண்டும்.

'தமிழர் பழங்குடி மக்களா? வந்தேறிகளா?' என்பதே தருக்கப்பொருள்.

நான் குமரிநாட்டு மக்கள் என்று ஒருமணி நேரம் பேசுவேன். நீலகண்ட சாத்திரியார், தெ.பொ.மீ., கி.வா. செகநாதன் ஆகிய மூவர் அல்லது அவரால் ஏவப்பட்டோர் எதிர்க்க வேண்டும்.

திரு குன்றக்குடியடிகள், பர். மணவாளராமானுசம், கருமுத்து தியாகராசச் செட்டியார், செட்டிநாட்டரசர், கோவை கோ.து.நாயுடு, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, நீ. கந்தசாமிப் பிள்ளை ஆகிய எழுவரும் நடுவர். அவர் தீர்ப்பே முடிபு. அதனை, அரசும், பல்கலைக் கழகங்களும் உலகும் ஏற்கவேண்டும். செலவு முழுதும் உ.த.க. ஏற்கும். தாங்கள் ஏற்பாடு மட்டும் செய்யவேண்டும். உடன் மறுமொழி விடுக்க.

**ஞா. தேவநேயன்.**

**கடிதம் : 11**

**ஞா தேவநேயன்**
**மொழிநூற் பேராசிரியன்**

**இடம்: காட்டுப்பாடி விரிவு,**
**பக்கல்:** 25-10- '73.

**பேரன்பீர்,**

வணக்கம்,

கீழைத்திருப் பொத்தகத் தொடர் வாங்கித் தருமாறு நான் தங்கட்கெழுதி இருமாதத்திற்கு மேலாகின்றது. தாங்கள் அதற்கு எழுதுவதாகச் சொல்லி ஒரு மாதத்திற்கு மேலாகின்றது. இன்னும் அதுபற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை.

மறைமலையடிகளின் குறிக்கோள், தமிழைப் பிறமொழிச் சொற்கலப்பின்றி முழுத் தூய்மையாகப் பேசவும் எழுதவும் வேண்டும் என்பதே. அதை அவர்கள் நிறைவேற்றிவிட்டார்கள். அதனாற் பெரும்பயன் விளையாது. சமற்கிருதம் தேவமொழி என்று திருக்கோயில் வழிபாட்டு மொழியாக இருக்கும்வரை தமிழுக்கு வளர்ச்சியோ முன்னேற்றமோ இராது.

*என் குறிக்கோள் தமிழைத் திரவிடத் தாயாகவும் ஆரியத் தின் மூலமாகவும் உலகறிய நாட்டி அதை வடமொழிப் பிணிப் பினின்று அடியோடு மீட்பதே. அதற்காகவே அரை நூற்றாண்டு அரும்பாடு பட்டு ஆய்ந்தேன்.*

*என் எண்ணம் நிறைவேறற்கு* The Limurian Language and its Ramifications *என்ற நூல் வெளியீடு இன்றியமையாதது. அதற்குக் கீழைத் திருப்பொத்தகத் தொடரும் கருவிநூலாகும்.*

*என் மூப்பு மிகுந்து வருவதாலும் எனக்குப்பின் இப் போராட்டத்தை ஏற்றுநடத்த ஒருவருமின்மையாலும் என் முயற்சியின் முதன்மையையும் இன்றியமையாமையும் உணர்ந்து அதற்கேற்ப, முனைந்து விரைந்து வினை செய்க.*

**ஞா. தேவநேயன்.**

**கடிதம் : 12 ***

**எசு.பி.57, க.க. நகர், சென்னை 71,**
2011, **சிலை** 14 (2-1- '81)

**அருந்தமிழ்ப் புலவீர்,**

*நலம். நலமாக.*

*என் வண்டியில் இடமின்மையால் எம் கடைநிலை யூழியன் சண்முகம் வேறொரு வண்டியில் முந்திப் புறப்பட்டு வருகின்றான்.*

*நான் இன்று மாலை 9-30 மணி விரைவான் ஏறி நாளைக் காலை வந்து சேர்வேன். வண்டி வரும் நேரம் வினவி யறிந்து சந்திப்பு நிலையத்திற் காத்திருக்க.*

*எனக்கு ஒதுக்கப்பட்டுள்ள தங்கறை 'அரிமா' உண்டிச் சாலை (ஹோட்டல்)* [111]

*பொத்தகக் கட்டுகள் நான்கும் (3+1) இதற்குள் வந்திருக்கும்.*

*உங்கள் அகர முதலிப்பணி அமர்த்தம்பற்றி முதலமைச்சர் சில வினாக்களை எழுப்பியிருக்கின்றார். நான் வரும்போது அதுபற்றிய அரசோலையைக் கொணர்வேன். அதற்கு விரைந்து விடையிறுத்தல் வேண்டும்.*

*அரிமா வுண்டிச்சாலை தமிழனதா? ஆரியனதா?*

*மாநாட்டு மண்டபத் தருகில் நம் பொத்தகங்களை விற்க இடமுண்டா?*

*முதல்வருக்குக் கொடுக்கவேண்டிய அன்பளிப்புப் பொத்தகங்களை அழகாகக் கட்டி வைத்திருக்க.*

*பிற நேரில்.*

*அன்பன்,*

**ஞா. தேவநேயன்**

**புலவர் இளங்குமரனார்**
**4, தென்னகர், திருநகர்,**
**மதுரை.**

---

* பாவாணர் எழுதிய கடைசிக் கடிதம் இஃதாக இருக்கலாம் என்பதால் இணைக்கப்பெற்றது.

# பாவாணர் மடல்கள்

# பாவாணர் மடல்கள்

## தொகுப்பாளர் தொகையுரை

பாவாணர் மடல்கள் என்னும் இத்தொகுப்பில் பாவாணர் வரைந்த 586 கடிதங்களின் பகுதிகள் இடம்பெற்றுள. அவர்தம் கடிதங்களைத் தொகுத்துப் 'பாவாணர் கடிதங்கள்' என வெளிப் படுத்திய பின்னர்க் கிடைத்த கடிதங்களின் தொகுப்பாகும் இது. இன்னும் அன்பர்களிடம் பன்னூறு கடிதங்கள் உள. தேடி வந்து தருவாரும், தேடிச்சென்றும் தாராருமாக இருவேறு திறப்பொதுநிலை உலகியலைக் கண்டறிந்த பட்டறிவால்,. தொகுக்கப் பட்ட அளவிலேனும் தமிழ் கூறும் உலகப் பொருளாதல் வேண்டும் என்னும் ஆர்வத்தால் இத்தொகுப்பு வெளிப்படுகின்றது. முன்னே கடிதப் பெயர் பெற்றமையால், இத்தொகுப்பு மடலாயிற்று. வேறு காரணம் இல்லை.

காடும் கவினுடையதேனும், காவும் தோப்பும்ஓர் ஒழுங் குற்ற அழகும், திட்டமிட்ட அமைப்பும் கொண்டிருத்தல் கண்கூடு. ஆதலால், இம்மடல்களைக் கால அடைவு ஒன்று மட்டுமே கருதாமல் பொருள்வகை அடைவுசெய்து, அதன் மேல் கால அடைவும் செய்யப்பட்டுள்ளதாம். சில இடங்களில் கால அடைவு சிறிது மாறவும் கூடும். பொருளடைவுப் பொருத் தம் அங்குக் காட்டுவதற்கு இடமாக இருந்திருக்கலாம்

இம்மடல்கள் பத்துத் தலைப்புகளில் பகுத்துத் தரப் பட்டுள. ஆய்வாளர் பயனுக்கு இத்தலைப்புப் பகுப்பு உதவியாக இருக்கும் என்பது ஒருதலை.

'தம்மை ஏமாற்றுதலையும் படிப்பினையாகக் கொள்ளல்'. விற்பனையில் வரும் பணத்தையும் நன்கொடைப் பணமென மகிழ்தல், மறைமலையடிகளைத் தெய்வமாகக் கருதுதல், தம் சிறுதொகையையும் தமிழ்ப் பணமாகக் கருதுதல், தம் பிறப்பு நோக்கம் கூறுதல், கோடி கொடுப்பினும் கொள்கை விடாதவர் என்னும் பெருமிதம் உரைத்தல், பட்டத்தால் பயனின்மை சுட்டல், நன்றியறிதல், இறைநலம் போற்றல், பணியால் அடையும்

இன்பம் இன்னவற்றை முதற் பகுதியில் உள்ள கடிதங்கள் வழியே அறியலாம்.

உடலும் உள்ளமும் எனப்படும் இரண்டாம் பகுதியில் உயிர்வாழ்வின் சிறப்பு, கண்ணறுவை, ஈளைநோய் இவற்றின் நிலை, வாழைப்பழ ஆய்வு, அரத்தக் கொதிப்பால் மயக்கம், வெப்பக்கொடுமை, இன்னவும் பிறவும் இடம் பெற்றுள.

மூன்றாம் பகுதி, அன்பும் நண்பும் பற்றியது. தமிழ்ப் பற்றுள்ளார் பொறுப்பில் கழகம் இருத்தல், உண்மைத் தமிழரின்மையால் நேரும்கேடு, உண்மை நண்பின் உயர்வு, தமிழ்ப்பகைவரை நம்புதலின் தீமை, திராவிடராட்சி - தமிழராட்சி வேற்றுமை, இதனைச் செய்தற்கு இவரே உரியர் என்னும் தெளிவு, கட்சிப்பற்றும் மொழிப்பற்றும் இணையாமை, எவர் செலவிடினும் செலவு செலவே என்னும் பொதுமை யுணர்வு, மொழித்துறையை மதத்துறையினின்று பிரிக்க வேண்டாமை, தக்க நூல்களை விற்றாலும் தமிழ்த்தொண் டெனல், நற்பெண்ணின் தகவு, சில வெளியீடுகளின் இற்றைத் தேவை. தேவையுடையோர்க்கு உதவுதல், எழுத்து வடிவமாற்றக் கருத்து, சில பெருமக்கள் சிறப்பியல் ஆகியவை இப்பகுதியால் அறியப்படுகின்றன.

நான்காம் பகுதி ஆய்வும் அறிவுறுத்தலும். ஆய்த ஒலியைப் பயன்படுத்து முறை, தமித்தமிழ்க் கழகம், கட்சிச் சார்பின்மை, மேற்கோளுரிமை, அரசின் தமிழ்ப்புறக்கணிப்பு. ஆட்சியின் முறை, வாழ்க்கைத் துணையியல், பாவூர் கணியன், தமிழ்ப் புலவருள் சிலரியல், மணமக்கள் பெயரையும் பிரியாமை, ஆட்சித் தவறுகள், பெயர் மாற்றத்திருநாள், அகர முதலித் திருத்தம், உண்மைத் தமிழர், பொதுவுடைமை, கரணவியல், அதிகாரப் பயன், கட்சியிணைப்பு, நக்கீரர் நாள் இன்னன பற்றிக் கருத்து விளக்கம் தருகின்றது இது.

ஐந்தாம் பகுதி உலகத் தமிழ்க் கழகமும் பணியும். கழகத்தின் கட்சிச் சார்பின்மை, தலைவர்கள் நிலை, உறுப்பினர்தகுதி, உ.த.க. கொடி, மாநாடு, தமிழரைப் பற்றிய பட்டிமன்றம், செனகல் தலைவர், ஆட்சிக்குழு, பொறுப்பாளர், செயற்குழு ஆகியவை பற்றிய விளக்கங்களைக் கொண்டது இது.

ஆறாம் பகுதி அமைப்புகளும் நிகழ்ச்சிகளும் என்பது. அமைப்பு விதிகள், சில நிகழ்ச்சிகள், திரு.வி.க. படிமை நிறுவல், உலகத் தமிழ்மாநாட்டுப் பங்கு பற்றிய செய்திகள் இதில் இடம் பெற்றுள.

நூலார்வமும் நூலாக்கமும் என்பது ஏழாம் பகுதி. தம் நூல்களின் வெளியீடு, திருக்குறள் உரை, நூல்களை வாங்கும் ஆர்வம், கழக ஆட்சியாளர் வ.உ.சு. உதவி, மொழிநூல்வழிப் பட்ட சொல்லாய்வு, குன்றக்குடி அடிகளார் உதவி, தமிழர் திருவைந்தெழுத்து, அணுக்குண்டுநூல் இன்னபல செய்திகள் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

அச்சீடும் மெய்ப்புப் பார்த்தலும் என்னும் . எட்டாம் பகுதியில், அச்சக உரிமையாளர். அச்சீட்டுநிலை, மெய்ப்புத் திருத்தம், கட்டடம்கட்டல், இடைச்சேர்க்கை, சிப்பமிடல் இன்னவை குறிக்கப்பட்டுள்ளன.

ஒன்பதான் பகுதி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிப் பணி பற்றியதாகும். அகர முதலிப் பொதுக்குழு, முதன்மொழி இதழ், சொற்றொகுப்பு, அகர முதலிக்கு அரசின் உதவி, பிறமொழி அகரமுதலிப் பணிகள், இயக்குநர் அமர்த்தம், அகரமுதலித் தொண்டின் சிறப்பு, சொற்றொகுப்பாளர் செய்தி, புதுப்பதவிகள், அச்சீடு, பணியமர்த்த இடர்பாடு இன்னன பற்றிய செய்திகள் இதில் உள.

சொல்வளம் என்னும் நிறைவுப்பகுதி பத்தாவதாகும். இதழாசிரியர்க்கு வேண்டும் மொழித்திறம், ஆங்கில நேர் தென்சொற்கள், தனித்தமிழ்ப் பெயர் மாற்றம், சிலசொற்களின் விளக்கம், வேராய்வு, கலைச் சொல்லாக்கம், மொழியாக்கம் என்பன பற்றிய செய்திகள் இதில் இடம் பெற்றுள.

பாவாணர் ஆராய்ச்சி நூலகம்.
திருநகர், மதுரை-6.

தமிழ்த்தொண்டன்
**இரா. இளங்குமரன்**

## பாவாணர் மடல்பெற்றவர் பெயர்க் குறுக்க விளக்கம் திருவாளர் :

| | | |
|---|---|---|
| அ.செ. | - | அ. செல்லத்துரை |
| அ.வா; வெ.செ | - | அன்புவாணன் வெற்றிச்செல்வி |
| ஆடல் | - | ஆடலரசனார் |
| ஆ.மு. | - | ஆ. முத்துராமலிங்கனார் |
| இரா. இ | - | இரா. இளங்குமரனார் |
| இரா. ம | - | இரா. மதிவாணனார் |
| இரா.மு.கி. | - | இரா. முத்துக்கிருட்டிணனார் |
| க.பெ.சி | - | கலலை பெருங்சித்திரனார். |
| கு.பூ | - | கு. பூங்காவனர். |
| இல.க.இரா. | - | இல.க.இரத்தினவேலு |
| கா.இ.மு. | - | கா. இளமுருகனார் |
| குமார.சு. | - | குமார. சுப்பிரமணியம். |
| கோ.ஏ | - | கோ.ஏழுமலை. |
| ச.க. | - | ச.கருப்பையா |
| சு.பா. | - | சு. பொன்னுச்சாமி |
| த.கு. | - | தமிழ்க்குடிமகனார் |
| த.ச.த. | - | த.ச.சரவணத் தமிழனார் |
| த.பெ.செ | - | தரங்கை பன்னீர்ச்செல்வனார் |
| தி.அ.ம. | - | தி.அ. மகாலிங்கம். |
| தி.எ. | - | தி. எழிலரசனார் |
| தி.சு. | - | தி. சுந்தரராசனார் |
| தி.வை.சொ. | - | தி.வை.சொக்கப்பா |
| ந.பி. | - | ந. பிச்சுமணி |
| நா.சி. | - | நாவை சிவம் |
| நா.செ. | - | நா.செந்தமிழ்க்கிழார் |
| நா.செ. | - | நா. செல்வராசனார் |
| ப.கு.மு. | - | ப.கு.முருகவேள் |
| பா.த.கு. | - | பாவாணர் தமிழ்க் குடும்பம் |
| பெரு. | - | (எம்.சி.) பெருமாள் |

| | | |
|---|---|---|
| ம.பு | - | ம. புகழேந்தி |
| மறை. நி | - | மறை. நித்தலின்பனார் |
| மா.இரா | - | மா. இராமசாமி |
| மி.மு.சி. | - | மி.மு. சின்னாண்டார் |
| மு.அ. | - | அறிவாழியார் |
| மு.வ.ப. | - | முவ. பரமசிவம் |
| வ.இ. | - | வ. இறையொளி |
| வ.சு. | - | வ. சுப்பையா பிள்ளை |
| வி.அ.க. | - | வி.அ. கருணைதாசனார் |

# 1. வாழ்வும் வரலாறும்

### மதுரைக்குழு

*என் வாழ்க்கை முட்டின்றி நடைபெறும் வகை மாதம் 200 உருபா வட்டி வருமாறு ஒரு பெருந்தொகை தொகுக்க வேண்டுமென்பது மதுரைக்குழுவார் மடிபு. அதனாலேயே காலந்தாழ்ப்பு. தென்மொழிப்பணம் ஒரு நூலுக்குத்தான் ஓரளவு உதவும், அது குறையாது வந்ததும் மதுரைக் குழுவால்தான்.*

-20.7. ‘64

- பெரு.

### படிப்பினை

*நால்வரும் 500 படிகளை விற்றுத் தருகிறோம் என்று பன்முறை உறுதி கூறிக் கேட்டதினால்தான் விடுத்தேன். அதை நிறைவேற்றாவிடின் எனக்கு நல்ல படிப்பினையாகும்.*

-வி.அ.க. 24.1.68

### ஏமாற்று

*இக்காலத்தில் எல்லாரையும் நம்பக்கூடாது. பொத்தகம் விற்றுக் தருகிறோமென்று என்னை ஏமாற்றிய புலவரும் பலர். துறவியர் சிலரு முண்டு.*

-26 அலவன் 1999.

-கா.இ.மு.

### விற்பனையும் நன்கொடையே

*உருபா தக்க சமையத்தில் வந்து சேர்ந்தது. நன்றி. என் பொத்தகங்களை வாங்குவார்அரியர், ஆதலால் இதை நன் கொடையாகவே நெஞ்சாரக் கருதுகின்றேன்.*

-23 விடை 2000

-மி.மு.சி.

### ஒருகிழமை

*நாளைநின்று திங்கட்கிழமை (11.5.70) பிருந்தாவனம் ஏறி அங்கு வருகின்றேன். புகைவண்டி நிலையத்திற்கு இயங்கி அனுப்பிவைக்க. ஒரு கிழமை அங்கிருப்பேன். முன்பு கண் மருத்துவக் காலத்திற் செய்ததுபோன்றே ஈரறுகாலிகளை* (Benches) *இணைத்துப் படுக்கை கட்டிலாக அமைத்து வைக்க.*

-9-5-70.

-வ.சு.

### பிறந்தநாள் மலர்

*என்பிறந்த நாள் மலர் வெளியிடவேண்டாமென்று சொன்னேன். பேராசிரியர் கேட்கவில்லை. அதற்குச் செலவிட்ட பணம் எதிலிருந்தெடுத்ததோ தெரிந்திலது. நூல்வெளியீட்டுப் பணத்தை வேறு செலவிற்குப் பயன்படுத்தக்கூடாதென்று சொல்லியிருக்கின்றேன். 'மே' 4 ஆம் 5-ஆம் பக்கல் பறம்பு மலைப் பாரிவிழாவில் எனக்குப் பாராட்டிருக்கின்றது. தவத்திருக் குன்றக்குடி அடிகள் அழைத்திருக்கின்றார்கள். தாங்கள் வர இயலின் வருவது நன்று. 24 மீனம் 2002 நா.செ.கி.*

### இருத்தல்

*என் மூத்த மகனும் அவன் பிள்ளைகளும் வந்திருப்பதால் இம்மாத இறுதி வரையில் நான் இங்கு இருக்க வேண்டியுள்ளது. அதன்பின், நீர்வரவேண்டிய நாளைத் தெரிவிப்பேன். நும் அருமைப் பெற்றோர்க்கு என் நலவினவலைத் தெரிவிக்க.*

-18.5.70

மறை.நி.

### வைப்பகக் கணக்கு

*அடுத்த கிழமை விடுக்கும் காசோலையுள்ளிட்ட உறையை என்மகன் மணிபெயருக்கே விடுத்துவிடுக. அவன் காசோலையை என் வைப்பகக் கணக்கிற் சேர்ப்பித்து விடுவான்.*

-25.5.70

ந.பி.

### வாடகை விடு

குடியிருப்பது வாடகைவீடு. வீட்டுக்காரர் எந்த நேரத்தி லும் ஒருமாத அறிவிப்பு கொடுத்து வெளியேறச் சொல்லலாம். இக் கவலை ஒருபக்கம் அழுத்தி கொண்டுதானிருக்கிறது.

4.11.70

தி.வை.

### உணவுக்குறை

இயற்கைக் கண்ணொளி குன்றியுள்ளது. உண்மைதான், ஆயின் செயற்கைக் கண்ணொளி இன்றுள்ளது. என்வேலைக்குப் போதும். மேலும், எனக்கேற்ற பணியும் நல்லசம்பளமும் கிடைப்பின் மகிழ்ச்சியாலும் நல்லுணர்வினாலும் உடல்நலமும் உறுப்பாற்றலும் மிகுமென்றே கருதுகின்றேன். அண்மையில் எனக்கு வந்த கிறுகிறுப்பிற்கும் உணவுக்குறைவே அடிப்படைக் கரணியம்.

தி.வை.

7.11.70

### மேடை

இருபுறமும் இழுவையும் பூட்டுமாடமுமுள்ள இருப்பு நிலை மேடை (காடிரசு, godraj) போன்றது. அங்குக் கோவையில் இருப்பின் தெரிவிக்க, என்னிடமுள்ளது வலப்புறத்தில் மட்டும் இழுவையும் மாடமும் கொண்டது.

17.8.71

மறை.நி.

### அடிகள்

அடிகளை ஒரு தெய்வமாகக் கருதவேண்டும் . அடிகள் வேலையையே நான் செய்து வருகின்றேன். என் மூப்பு மிகுகின்றது. என் வாழ்நாட்குள் தமிழை வடமொழியினின்று மீட்க வேண்டும்.

3.11.71.

ப.கு.மு.

## தமிழ்ப்பணம்

*என்னிடமுள்ள சிறுதொகை, தமிழ்ப்பணம், அதையும் தந்தேன்*

4.11.71.

கா.இ.

## முன்தோன்றலர் மூவர்

*மறைமலையடிகளும் யானும் ஒரு தனிவகையரே. எம் வாழ்வைத் தமிழ் வாழ்வொடு ஒன்றுவித்துக் கொண்டேம். தமிழை வடமொழியினின்று மீட்கவே இறைவனாற் படைக்கப் பட்டேம். தமிழ் - ஆரியப் போராட்டத்திற்கு ஆங்கில அறிஞர் ஒருவரும், பிராமணர் ஒருவரும், சிவநெறியார் ஒருவருமாக மூவர் எனக்குமுன் தோன்றினர். மேலையர்க் கறிவிக்க நான் ஏற்பட்டுள்ளேன். என்னோடு இப்போராட்டம் முடிகின்றது. இத்தகைய போராட்டம் உங்கட்கில்லை.*

*பேராட்டத்திற்குச் சில கருவிகள் தேவை. அவற்றுள் மூன்று தமிழர் வரலாறு, தமிழர் மதம்.* A Guide to westren Tamil obagists *என்பன. இவை இன்ன இன்ன காலத்திற்குள் வர வேண்டுமென்று வரம்பிட்டுள்ளேன்.*

–4.11.71.

–கா.இ.

*தொகுப்பாளன் குறிப்பு : (ஆங்கில அறிஞர் கால்டுவெல்; பிராமணர் பரிதிமாற்கலைஞர்; சிவநெறியர் மறைமலையடிகள்)*

## என் வரலாற்றுக் குறிப்பு

*ஞா. தேவநேயனார் நெல்லைமாவட்டத்தில் 7.2. 1902 அன்று கணக்காயனார் ஞானமுத்தனார்க்கு மகனாகப் பிறந்தவர். பாளையங்கோட்டையில்* C.M.S. *என்னும் திருச்சபை விடையூழியக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் கல்விபயின்றபின், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதத் தேர்வு தேறித்தனிக் கல்வியால் சென்னைப் பல்கலைக்கழக முதுகலைப்பட்டமும் பெற்று, பல உயர்நிலைப்பள்ளிகளில் தலைமைத் தமிழாசிரியராகவும் சேலம் நகராட்சிக் கல்லூரியிற்றமிழ்ப் பேராசிரியராகவும் அண்ணா மலைப்பல்கலைக் கழகத்தில் திரவிடமொழியாராய்ச்சித் துறைத்தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.*

*1922 இல் தமிழாசிரியப்பணி ஏற்றத்தில் இருந்து மொழி நூல், வரலாற்று நூல், மாந்தநூல் ஆகிய முந்நூல் அடிப்*

படையில் தமிழாய்ந்து குமரிநாட்டுத் தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாகும் என்னும் உண்மை கண்டு அதை விளக்குமுகமாகப் பல ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டவர். செந்தமிழ்ச் செல்வியிலும், பல மொழி யாராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு வருபவர்.

தமிழே உலக முதல் உயர்தனிச் செம்மொழி என்னும் உண்மையை இன்னும் ஈராண்டிற்குள் உலகமேடையில் நாட்ட விருப்பவர்

8.5.1974 அன்று தமிழ்நாட்டரசால் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராக அமர்த்தப்பட்டு ஒழுங்காகத் தொடர்ந்து பணியாற்றி வருபவர்.

கோடி கொடுப்பினும் கொள்கை விடாதவர். புகழ்ச்சி யையும் பட்டங்களையும் விரும்பாதவர்.

### பயன்படாது

ஐயாண்டு, மாதம் ஆயிரம் அன்பளிப்பு எனக்கும் தமிழறிஞர் வரிசையில் என்னொடு சேர்க்கப்பட்டவர்க்கும் அன்று. நீர் படித்த செய்தித்தாளில் விளக்கமாயில்லை கோலும்!

வாய்ப்பாடகர் இருவர்கள் கருவியிசைவாணர் மூவர்க்குமே அவ்வன்பளிப்பு. எனக்கும் கா. அப்பாத்துரை, வ.சுப்பையாப் பிள்ளை உள்ளிட்ட ஏனை நால்வர்க்கும் ‘செந்தமிழ்ச் செல்வர்’ என்னும் பட்டத்தோடு ஒரு கேடகமும், ஒரு பதக்கமுமே.

பட்டம் எனக்கு எள்ளளவும் பயன்படாது. மற்ற இரண்டையும் பார்த்தபின் தான் ஏதேனும் சொல்லமுடியும். நான் அரசினர் அலுவலனாயும், மாதச் சம்பளம் வாங்குபவ னாயும் இருப்பதால் மாதம் பணக்கொடை எனக்கு வழங்கார். ஐயாயிரம் பத்தாயிரம் எனும் பெருந்தொகை மொத்தமாய் நல்க இடமுண்டு.

என் பணிக்கு வேண்டிய இரு துணையாளரை இன்னும் அமர்த்தவில்லை. ஓர் இயங்கியும் தொலைபேசியும் வேண்டு மென்று எத்தனைமுறை சொல்லியும் செவிசாய்க்க வில்லை. முந்தின ஆட்சியும் இங்ஙனமே.

இவ்வேந்துகளைச் செய்தாலே போதும்.

1500 என்பது நிலைத்த சம்பளம். ஆண்டுக் கூடுதலும் பேரெல்லையும் உள்ள திட்டமேயில்லை.

என் சொந்த நூலகத்தைக் கொண்டே பணி நடந்து வருகின்றது. சம்பளத்திற் பாதி பொத்தகத்திற்குச் செலவாகிறது. இதற்கே ஒரு பெருந்தொகை வழங்கலாம்.

இறைவனருளால் இறுதிவரைபணிதொடர்ந்தாற்போதும்.

சு.பொ.

5.1.79.

**உதவி**

ஒரு சிற்றளவான குடியிருப்புப் பகுதிக்கே அறுபதினாயிரம் செல்லும். என்னிடம் நாற்பதினாயிரம்தான் உள்ளது. அதன்பின் நூலகம் கட்ட இருபதினாயிரம் வேண்டும். அதன்பின் செந்தண நிலைப்பாட்டிற்கு (Air condition) ஐயாயிரம் வேண்டும். விலையுயர்ந்த அரும்பெரு நூல்களெல்லாம் பாதுகாப்பின்றியுள்ளன.

என் வாழ்க்கையில் இதுவரை வீடுகட்ட இயலவில்லை. திரு.கருணாநிதியார் உதவியால் பதின்மூவாயிரத்திற்கு மனை நிலம் வாங்கவும் நாற்பதினாயிரம் வைப்பகத்தில் இட்டு வைக்கவும் இயன்றுள்ளது. எனக்குச் சொந்த வீடிருந்தால் வேனிதல் உட்பட ஆண்டு முழுதும் இருமடங்கு வேலை செய்யலாம். எனக்கு மூப்பும் மிகுந்து வருகின்றது.

கு.பூ.

**உதவி**

கலைஞர் கருணாநிதியின் உதவியால் (என்பதவியால்) இங்குப் பதின்மூவாயிரம் உருபாவிற்கு ஒரு நிலம் வாங்க முடிந்தது. இன்று வீடு கட்டத் தொடங்கியிருக்கிறேன். நூலகமல்லாது குடியிருக்கும் வீட்டிற்கு மட்டும் அறுபதினாயிரம் செல்லும். நாற்பதினாயிரம் தான் உள்ளது. பொத்தகப் பணம் விரைந்து வரின் பேருதவியாயிருக்கும் . பின் வரவுப் பொத்தகங்களும் விரைந்து விலையாயின் அத்தொகையையும் சேர்த்தனுப்பலாம். நாட் செல்லுமாயின் முன்வரவுப் பொத்தகப் பணத்தை மட்டும் முன்விடுக்க.

எப்போதும் இந்தியன் வைப்பக (Indian Bank) வரையோலை (Draft) யாகவே பதிவஞ்சலில் விடுக்க. பதிவஞ்சல் செலவு எனதே.

4.10.79

கு.பூ

## என்தொண்டு

*என் தமிழிலக்கியத் தொண்டில் தலைமையானது*

*செ.சொ. அகரமுதலி.*

*தமிழ்க்காப்புத் தொண்டில் தலைமையானது*

The L.L. of its Rd

கு.பூ. 9.10.79

*தமிழை வடமொழியினின்று மீட்பதே என்வாழ்க்கைக் குறிக்கோள். தமிழ் பிராமணியத்திலிருந்து முழு விடுதலை யடைவதே அதன் பயன். இக்குறிக்கோளை நிறைவேற்றும் பட்டயங்களுள் ஒன்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி. அதை வலியுறுத்துவன இந்தியெதிர்ப்பு நூலென்றும், வடமொழி யெதிர்ப்பு நூலொன்றுமான ஈராவணச் சான்றுகள் (இரு ஆவணம்). அச்சான்றுகளே அகர முதலியை மெய்ப்பிக்கும் அவையின்றேல் ஆரியர் வையாபுரிகளைத் துணைக்கொண்டு அகரமுதலியை அறிவியல் முறைப்பட்டதன்று என்று எளிதாய்த் தள்ளிவிடுவர். அவ்விரண்டும் ஆங்கில நூல். இனிமேல் வெளி வரும்.*

*செந்தமிழ்ப் செல்வியை இதுவரை வாங்காவிடில் இனிமே லாயினும் வாங்கிப் படிக்க.*

*அகரமுதலி இன்னும் எட்டாண்டிற்குள் முடிந்துவிடும். இதற்கென்றே இறைவன் என்னைப் பிறப்பித்திருக்கிறான். இதை வேறெவரும் உருவாக்கவும் இயலாது.*

அ.வா; வெ.செ. 16.4.80

## நாளும் பத்துமணி வேலை

*வீடு கட்டும் வேலை தொடங்கி ஆறுமாதமாகின்றது. இருமுறைகள்தான் போய்ப் பார்த்தேன். எல்லாவற்றையும் என் நண்பரும் மகனும் பேரனும் அலுவலக ஏவலனுமே கவனித்து வருகின்றனர். நான் போய்ப் பார்ப்பதில்லையென்ற ஒருகுறை கூறப்படுகிறது. இந்நிலையில் நான் முழுநேரத்தையும் வீடு கட்டுவதில் செலவழிக்கிறேன் என்று ஒரு தமிழ்ப் பகைவனோ கயவனோ உங்களிடம் சொல்லியிருப்பது மிக வியப்பானதே. அவனை உடனே தெரிவிக்க. மறைவாய் வைத்துக்கொள்கிறேன். இன்றேல் பொதுக்கூட்டத்திலும் முதலமைச்சரிடமும் சொல்ல*

நேரும். மறைமலையடிகளார் மீதும் திருவள்ளுவர் மீதும் குற்றஞ்சாட்டுவாரும் உளர்.

நான் எழுநாளும், பத்து மணிநேர வேலைக்காரன். வேனில் மும்மாதம் வேலை குன்றுகின்றது. சொந்தவீட்டில் செந்தண (Air-conditioned) அறை அமைத்துக்கொண்டு முழுப்பகலும் வேலை செய்வேன். இது எனக்கு இன்பமானது.

அ.வா; வெ.செ. 16.4.80

### இறைவன் செயல்

திருவள்ளுவர், பிராமணர் ஏமாற்றத்தை வெளிப்படுத்தித் தமிழ் நாகரிக உயர்வை நாட்டினார். மறைமலையடிகள் தமிழ் தனிமொழியென்று காட்டினார். பெரியார் கல்லாத் தமிழரிடைத் தன்மான உணர்ச்சியூட்டினார். நான் தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் என்று நாட்டிப் பிராமணியப் பேயைத் தமிழ் நாட்டினின்று ஓட்டுவேன். இதற்கு இறைவனே என்னைத் தோற்றுவித்திருக்கிறேன். இது என் செயலன்று. இறைவன் செயலே.

அ.வா; வெ.செ. 2.5.80

### தொண்டின் பெருமை சாருமிடம்

நான் எல்லாவகையிலும் மிக எளியவன். இறைவன் திருவருளின்றித் தமிழ் **வேர்ச்சொல்** காணும் திறமையை நான் பெற்றிருக்கவே முடியாது. ஆதலால் என் தொண்டின் பெருமையெல்லாம் இறைவனையே சாரும்.

அ.வா.வெ.செ. 2.5.80

### கரும்பு தின்னக் கூலி

மொழிநூற்கல்வியும் ஆராய்ச்சியும் எனக்கு இன்பமான பாடத்துறை. அதனால், இன்று நான் பெருஞ்சம்பளம் கரும்பு தின்னக் கூலியாகும். ஆதலால், வேலை செய்யாது காலத்தைக் கழிக்கவோ வேறு வேலை செய்யவோ இயலவே இயலாது.

அ.வா; வெ.செ. 2.5.80

# 2. உடலும் உள்ளதும்

## ஈளைநோய்

*திரு. முனிசாமி விரும்பியவாறு சனுவரியில் (மலாயா) போக முடியாது. என்னை ஈளை நோய் தாக்கியுள்ளது. பனிக் காலம் முடிந்தால்தான் போகமுடியும். அன்று அழைப்பில்லை யெனின் அடுத்த ஆண்டுதான். பொருளாசைப்பட்டு உயிரை இழப்பின் என்ன பயன்?*

வி.அ.க. 5.12.64

## குரு

*குருபற்பொடி நெடுஞ்சிமிழ் நான்கும் வாங்கி வைக்க. குரு எண்ணெயும் (தைலம்) வேண்டும்.*

ந.பி. 1 ஆடவை 2000

## கோபி

*கோபியில் என் மூத்த மகன் ஆசிரியவேலை பார்க்கிறான். கண்ணறுவைக்குப் பின் கண்ணாடியணிந்து கொண்டுதான் அங்குச் செல்லவேண்டும்.*

ந.பி. 1 ஆடவை 2000

## உரிமைத் தொடர்பு

*தென்மொழிக்கும் எனக்கும் உரிமை வகையில் தொடர் பில்லை. பல செய்திகளில் எனக்கும் பெருஞ்சித்திரனுக்கும் கருத்து வேறுபாடுண்டு. ஆதலால் தென்மொழியிலும், தமிழ்ச் சிட்டிலும் வெளிவந்தவற்றிற்கு யான் பொறுப்பாளியல்லேன்.*

கா.இ.மு. 10 அலவன் 2000

## கண் மருத்துவம்

*என் கண் மருத்துவம் பற்றியும், திருக்குறள் தமிழ் மரபுரை அச்சீடு பற்றியும் இங்குவந்து என் மகள் வீட்டில் தங்கியிருக்கின்றேன். சிலை 5 வரை இங்குத் தானிருப்பேன்.*

## இயற்கைக்கண்

*எனக்குக் கண்மருத்துவம் சிலை 2 ஆம் பக்கலொடு முடிகின்றது. அதன்பின் கண்ணறுவையர் குறித்தவாறு கண்ணாடி உருவாக்குவித்து அணிந்து கொண்டு காட்டுப்பாடி செல்ல வேண்டும். கண் நன்றாக இருப்பதாக அறுவையர் சொன்னார். ஆயினும் பழைய இயற்கைக் கண் போயே போய்விட்டது.*

*கா.இ.மு. 28 நளி 2000*

## படலம் வளர்தல்

*என் வலக்கண் படலம் வளர்ந்து வருவதால் வரவர ஒளிகுன்றி வருகின்றது. வலக்கண் முற்றும் இருண்டுவிடும். அதன்பின் திருத்தவேலை செய்யவியலாது. அறுவை நிகழ்ந்த பின்னர் ஓரிரு மாதம் எழுத்தைப் பார்க்கக்கூடாது.... அதற்குமுன் எஞ்சிய பகுதியாவும் எழுதி முடித்துவிட வேண்டும்.*

*மா.இரா. 28 கும்பம் 2000*

## பட்டறிவு

*இன்றுவந்த தங்கள் திருமுகச் செய்தி மிகத்துயரந் தருவதே.... இறைவனையும் ஊக்கமாய் வேண்டுக. வெற்றி கிட்டும். இது என் பட்டறிவு.*

*நா.செ. 1 நளி 1997*

## பணங்கேளேல்

*எனக்கு வலக்கண் படல அறுவை ஆடவை 4 ஆம் கிழமை நடைபெறும். ஆதலால், ஆட்சிக் குழுக்கூட்டம் 3 ஆம் கிழமை யிறுதி (22) ஞாயிறன்று வைக்கப்பட்டுள்ளது.*

*திருச்சி நகரக் கிளையினரும் ஊரக அன்பரும் வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்வர். ஊரக அன்பர் மாதந் தொறும் எனக்கு 50 உருபா அனுப்பி வருவதால் அவர்களிடம் பணங்கேட்க வேண்டேன். உடலுழைப்பை மட்டும் பெற்றுக் கொள்க. வேறிடங்களில் பணந்தண்டிக் கொள்க.*

*நா.செ. 20 விடை 2000*

## வாழ்நாள் குன்றும்

*எனக்குக் கண்ணொளி குன்றிவிட்டது. தெருவில் முன் போல் நடமாட முடியாது. உண்டிச்சாலை உணவு எனக்கு ஏற்கவில்லை. எனக்கு வேண்டிய நூல்களும் அங்கில்லை. ஆகவே சென்னையிலிருந்தால் எனக்கு வாழ்நாள்தான் குன்றும் . எழுத்து வேலை ஒன்றும் நடைபெறாது.*

*மா.இரா. 20 மேழம் 2000*

## ஈளை நோய்

*நான் ஈளைநோய்த் தொல்லையால் பொங்கலன்று (14.1.69) இங்கு வந்து சேர்ந்தேன். இன்று சற்று நலம். இம்மாத இறுதி வரை இங்குத்தான் இருப்பேன். அடுத்த மாத முதற்பக்கல் காட்டுப்பாடி திரும்புவேன்.*

*மா.இரா. 20.1.69*

## அஞ்சல் தவறினால்

*வருகின்ற வெள்ளி (6.2.70) அரசினர் பேரியங்கியேறி வழக்கம்போல் அங்கு மாலை 6 மணிக்கு வந்து சேர்வேன் பேரியங்கி நிலையத்திற் காத்திருக்க.*

*திரு. ந. பிச்சுமணியார்க்கும் எழுதியிருக்கின்றேன். ஒரு கால் அவ்வஞ்சல் தவறினால் இது பயன்படுமென்று இதை விடுக்கின்றேன்.*

*அ.செ. 21. சுறவம் 2001*

## வாழை

*என் உறையுளின் புறக்கடைப் பக்கம் சிறிது வெளிநிலம் உளது. அதில் காய்கறித்தோட்டம் போட்டிருக்கின்றேன். இருவாழை வைக்கவேண்டும். எனக்கு விருப்பமில்லாத பச்சை வாழை தவிர வேறொன்றும் இங்குக் கிடைப்பதில்லை. 30 கல் தொலைவிலுள்ள படைவீடு என்னும் ஊரினின்று மொந்தனும் கப்பல் வாழையும் (இரசதாளியும்) கொண்டுவரச் சொல்லி யிருக்கிறேன். நும் இல்லத்திலுள்ளது எனக்கு மிக விருப்பம். ஆர்க்காட்டு அன்பர் அடுத்தமுறை அவர் ஊர் வரும்போது இரு சிறு கன்று கொடுத்தனுப்ப முடியுமா? நான் இன்று ஊதைப் பொருளென்று வாழைக்காய்க் கறி உண்பதில்லை.*

*கொம்பிற் பழுக்கவிட்டு உண்ணவே வாழை வைக்கின்றேன். நான் அண்மையில் அங்கு வரும் நிலைமை இல்லை.*

*ந.பி. 22 அலவன் 2001*

**கண்ணறுவை**

*அடுத்த மாதத் தொடக்கத்தில் கண்ணறுவை செய்து கொள்வேன்.*

*இல.க.இர. 10.10.69*

**ஈளை**

*கடந்த மூவாண்டு பனிக்காலத்தில் என்னைத் தாக்கின ஈளைநோய் இவ்வாண்டு தாக்கவில்லை. ஆயின் என் மகன் மணி தாக்குண்டிருக்கிறான். அதற்கு ஒரே மருந்து பெனிடிராயல்* (Bebedrayal) *என்னும் முகிழமே* (Capsule) *இது இன்று வரத் தில்லை. ஆதலால் மேலங்காடிகளில்* (Super Market) *தான் கிடைக்கும்.*

*6.2.72 மி.மு.சி.*

**பாசிப்பயறு**

*விடை 9ஆம் பக்கல் (23.5.70) காரி இங்கு வருக. சென்னை சென்று என் சிற்றுண்டிக்கு வேண்டிய பம்பாய்ப் பாசிப்பயறு வாங்கிக் கொண்டு மறுநாள் ஞாயிறு கோவை செல்லலாம்.*

*மறை. நி. 9.5.70*

**நூலகம்**

*தமிழர் வரலாற்றுக் குறிப்புக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்தமாதம் பெரும்பாலும் நூலெழுதி முடிந்துவிடும்.*

*இது முதுவேனிலாதலாலும் வேலூர் - காட்டுப்பாடி வெப்பமிக்க இட மாதலாலும் முற்பகலும் பிற்பகலும் மிகச் சிறிது நேரமே வேலை செய்ய இயல்கின்றது.*

*நீலமலைக்குச் செல்லும் வாய்ப்பிருப்பினும் நூலகம் இங்கிருப்பதால் இடம் பெயர இடமில்லை.*

*இல.க.இர. 20.5.70*

**உறுதி**

*வெப்ப மிகையாலும் கண்ணொளி குன்றியமையாலும் வேனிற் காலத்தில் விரைந்தெழுத இயலவில்லை.*

*மாநாட்டிற்கு (ஆட்டை விழாவிற்கு) முன் தமிழர் வரலாறு வெளிவருதல் தான்முழுவுறுதி! 'தமிழர் மதம்' சற்றுப் பிந்தினும் பிந்தலாம்.*

*இல.க.இரா. 25.6.70*

**இசைவு**

*திரு. மகாலிங்கனார் (பேரிலங்கனார்) ஆட்டை விழா மலரில் என். தி.த.ம. உரையினிற்று சில பகுதிகளைப் பெயர்த்து வெளியிட இசைவு வேண்டினார். என் நூல்களுள் எதினின்றும் எப்பகுதியும் பயன்படுத்த இசைவு தந்தேன். அவ்வட்டை வந்ததா என்று அறிக.*

*ந.பி. 28.6.70*

**மயக்கம்**

*20 நாட்குமுன் ஒரு வைகறை திடுமென மயங்கி விழுந்துவிட்டேன். அரத்தக்கொதிப்பின் விளைவாகத் தெரிகின்றது. இன்னும் முழுநலமில்லை. ஆயினும் கூட்டமும் என் வரவும் தவிர்க்க முடியாமல் என் மகனைத் துணைக்கொண்டு வருகின்றேன்.*

*ந.பி. 22.9.70*

**படுக்கை**

*நாங்கள் வந்தபின் ஒற்றைப் படுக்கையறை யொன்றை ஒரு நாளைக்கு அமர்த்தவேண்டியிருக்கும். நான் தலைசாய்த்துப் படுக்கமுடியாது. சுவரில் சாய்ந்து கொண்டே தூங்குவேன். எஞ்சிய இடத்தில் என்மகன் தூங்கிக் கொள்வான்.*

*ந.பி. 22.9.70*

### சொற்பட்டி

*இரு மாத்திற்கு முந்திய வலுத்த மூளைத் தாக்கற்குப் பின் இது (முச்சொற்பட்டி) முதன்முதல் எழுதப்படுவதால் மிகுந்த விழிப்புடன் எழுதிவருகின்றேன்.*

*தி.வை.சொ. 26.10.70*

### கேட்குமுறை

*(அரசை) இரந்து கெஞ்சாது உரிமையொடும் அதிகாரத் தொடும் கேட்க.*

*தி.வை.சொ. 28.10.70*

### வேண்டும்

*செவ்வாழைக் கன்று ஒன்று வேண்டும். சேலத்திலேனும் இராசிபுரத்திலேனும் கிடைக்குமா?*

*சீரகச் சம்பா அல்லது சிறுமணிச்சம்பா ஒரு படியரிசி ஆற்றூரில் கிடைப்பின் வாங்கி வைக்க.*

*விளைந்த வேர்க்கடலைக் கொட்டையும் ஒருபடி வேண்டும்.*

*நா.செ. 13.3. '71*

### தங்கல்

*சிலர் இரவில் நெடுநேரம் பேசிக்கொண்டும் நள்ளிரவில் குறுக்கும் மறுக்கும் நடமாடிக்கொண்டும் அடிக்கடி விளக்கைப் போட்டுக் கொண்டும் தூக்கத்தைக் கெடுப்பர். இன்று எனக்கு அமைந்த தூக்கம் வேண்டும். அடிகள் நூல்நிலையம் பின்கட்டு மேனிலையில் அறையில்லாவிடில் அரிநிவாசு போன்ற தங்கள் விடுதியில் இருநாட்கு ஏற்பாடு செய்க.*

*வ.சு. 30.7.73*

### முத்துலச்செப்பு

*முட்டைமுளைவறை* (Ovalitin)*முத்துலச் (3பவுண்டு) செப்பு ஒன்று 60 உருபாவிற்கு இருப்பதாகச் சொன்னான். ஒன்றிரண்டு முன்பணமாகக் கொடுத்து நிறுத்திவைக்கச் சொல்க. 31.12.74 சம்பளம் வாங்கியவுடன் பணவிடை செய்வேன் என்று தெரிவிக்க.*

*குருபற்பொடிச் சிமிழ் 4 அல்லது 5 கொண்ட சுருள் ஒன்றும் குரு எண்ணெய் (குருதைலம்) ஒரு புட்டியும் வாங்கி வைக்கச் சொல்க. இதைத்திரு செல்லத்துரைக்கும் சொல்விக்க.*

*மு.வ.ப.28.12.74*

**முட்டை முளைவறை**

*முட்டை முளைவறை தப்பாது வாங்கி வைக்க. வந்தவுடன் பணம் கொடுத்து விடுவேன். குருபற்பொடியும் குரு எண்ணெயும் வேண்டும்.*

*மு.வ.ப. 4.1.75*

**வெப்பமிகை**

*சென்ற மாதம் முழுதும் வெப்பமிகையால் மிக இடர்ப் பட்டுப் போனேன். ஒருகிழமை அண்ணமும் நாவும் அழன்று பெரிதும் துன்புற்றேன். அதற்குமேல் தேர்தல் விளைவு தாங் கொணாத்துயரை விளைத்துவிட்டது. எல்லாம் இறைவன் செயலென்று ஒருவாறு தேறியுள்ளேன்.*

*கு.பூ.3.6.80*

**தங்கல்**

*நான் மதுரையில் தங்க அரசு தக்க ஏற்பாடு செய்திராவிடில் நுங்கள் இல்லத்தில் தங்கலாம்.*

*இரா.இ. 27.11.80*

# 3. அன்பும் நண்பும்

### தமையனார் இடம்

*தங்கள் தமையனார் இறந்தது, தமிழ்ப்பற்றுள்ள அனைவரும் வருந்தத்தக்க செய்தியாகும். இங்குப் பலர் வருந்தினர். தஞ்சை வரகுணபாண்டியன் அவர்கள், ‘செல்வி’யால் அறிந்து மிகமிக வருந்தினர். தாங்கள் அந்தப் பதவிக்கு வர இயலுமாயின் வேண்டிய முயற்சியெல்லாம் செய்க.*

*வ.சு. 31.5.*

*(செல்வி - செந்தமிழ்ச்செல்வி மாதிகை)*

### சட்டர்சி

*உண்மைத் தமிழரான செல்வர் இருப்பின் மறைமலை யடிகட்கும் அவர்களின் அடியொற்று பவர்க்குமேயன்றி வங்கத்துச் சட்டர்சிக்கு வெள்ளிக் கேடகம் செல்லாது. கல்லூரியில் இல்லாவிடினும் தமிழ்நாடு அலுவலகத்திலாவது எனக்கு வேலை கிடைத்திருக்கும்.*

*வி.அ.க. 12.2.64*

### உண்மை நண்பர்

*திரு. இராசேந்திரன் எழுதாவிட்டாலும் பணந்தொகுக்கா விட்டாலும் குற்றமில்லை. அவர் தாமாகச் செய்யக்கூடிய உண்மை நண்பர். ஒருமுறை அவர்க்குச் சொன்னது போதும். மீண்டும் அவரைக் கேட்க வேண்டாம். அது அவர்க்கு தொல்லை கொடுப்பதுபோல் இருக்கலாம். அவரே தொகுத்து நேராகவோ தங்கள் வாயிலாகவோ மதுரைக்கு விடுப்பேன் விடுக்கட்டும். ஆயின் என்னை அங்கு வரவழைத்துப் பணந்தண்டுவது நன்றன்று. மதுரை விழா நடந்தபின் சொற்பொழிவுக்கெனின் அங்கு வருவேன். அவரைத் தற்செயலாய்க் காணின். இதைத் திட்டமாய்ச் சொல்விடுக.*

*பெரு. 20.4.64*

### இலக்குவனார்

*__இலக்குவனார்__ எங்கிருக்கிறார்? என்ன செய்கிறார்? பெரு நடைச் செலவு வேண்டாமென்று ஏற்கெனவே தடுத்தேன். தமிழ்ப்பகைவரை நம்பி என் சொல்லைக் தட்டிக்கெட்டார்.*

*வி.அ.க. 30.7.65*

### இலக்குவனார்

*__இலக்குவனார்__ ஒருவரே இந்தி யெதிர்க்குமாறு மாணவனைத் தூண்டினார். அதனால் வேலையிழந்தார். அதைத் தமிழ்ப் புலவர் குழுவும் கண்டிக்கவில்லை.*

### புலவர் பொறுப்பேற்பு

*சென்ற சுறவ (தை) மீ ஓர் இளையர் எனக்குத் தெரிந்த புலவரோடு வந்து தம்மைக் கோவை மாணவர் தலைவராகக் கூறி 'மொழிச்சிக்கல்' 50 படிகளை விற்றுப் பணமனுப்புவதாக வாங்கிக் கொண்டு போய்விட்டார். இன்னும் பணம் அனுப்ப வில்லை. சில நண்பர்க்கு எழுதிக் கேட்டபின் அவர் கோவை மாணவரல்லரென்று தெரிந்தது. அதன்பின் புலவர்க்கெழு தினேன். அவர் அப்படிகட்குரிய தொகையைத் தாம் தருவதாக ஏற்றுக்கொண்டார்.*

### பகைவர் எதிர்ப்புக்கு அடிப்படை

*ஈருலகத் தமிழ் மாநாடுகளிலும் தனிநாயகம், மறை மலையடிகள் கூட்டத்தை விலக்கியதாலும், அரசும் அடிகளை மறைத்து என்னையும் விலக்கியதாலும், __காமில் சுவெலபில் அடிகளை__ முறைகேடாகக் கண்டித்துப் பேசியதாலும் தமிழ்ப் பகைவர் இவ்வாறு துணிந்து எதிர்க்க இடமுண்டாயிற்று.*

*21 கடகம் 1999*

### செந்தமிழ்க் கிழார்

*பொருளாளர் திரு. செந்தமிழ்க்கிழார் தமிழ்த்தொண்டில் ஈடுபட்டதற்கு அவர் பள்ளித் தாளாளர் கேட்டதனால் அவர் வேலையைவிட்டுவிட்டார். வேறு பள்ளிகளில் வேலைக்கு முயன்று வருகிறார். ஆடவை 22 ஆம் பக்கல் ஆட்சிக்குழுக் கூட்டத்திற்கும் பொறுப்பேற்றுக் கொண்டார்.*

*இன்றிருப்பது திரவிட ஆட்சியே யன்றித் தமிழாட்சி யன்று. அதுவரைப் பத்து அல்லது பதினைந்தாண்டு செல்லும். அதற்கு இன்றிருந்தே கடுவுழைப்பும் பெரு முயற்சியும் செய்தல் வேண்டும். இன்று தமிழாட்சியிருப்பின் தமிழ் நிலையும் என் நிலைமையும் இங்ஙனம் இரா. பொருளாளர்க்கும் வேலை போயிருக்காது. அரசியற் கட்சித்தலைவர் சூழ்ச்சிகளை யும் அவர் கையாளும் வலக்காரங்களையும் இன்னும் நீங்கள் அறிந்து கொள்ளவில்லை.*

*ந.பி. ஆடவை 2000*

### அடிகள் படிமைத் திறப்பு

*மறைமலையடிகள் படிமைத் திறப்பு தனித்தமிழல்லாத வரைக் கொண்டு நிகழ்த்தின் நான் வர முடியாதென்று சென்ற ஆண்டே நாகைக் கோவையிளஞ்சேரனுக்கு எழுதிவிட்டேன். 'சிலை' என்னும் சொல்பற்றிய ஒரு கட்டுரை மட்டும் விடுத்தேன்.. அது மலரில் வரும்.*

*பாராட்டுச் சொற்பொழிவிற்கு என்னை இசைகுமாறு புலவர் கோவையிளஞ்சேரன் சென்ற கிழமை ஓரன்பரை அனுப்பியிருந்தார். நான் முன்பு செய்த முடிவே முடிவென்று சொல்லி யனுப்பிவிட்டேன். ஆரவாரம் வேறு; அமைதி வேறு. உண்மை வேறு, போலி வேறு; திரு வேறு, தெள்ளறிவு வேறு.*

*ந.பி.1 ஆடவை 2000*

### அமைச்சர்

*மொழிப்பற்றின்றிக் கட்சிப் பற்றேயுடைய அமைச்சரை, இனி நம்பிப் பயனில்லை. நம் தமிழும் அவர் தமிழும் வெவ் வேறாம், மேலும், தமிழால் வயிறு வளர்த்துத் தமிழால் பெரும் பொருளீட்டும் தலைமைத் தமிழ்ப்பேராசிரியரே தமிழுக்கு மாறாயிருக்கின்றனர்.*

### மிகுசெலவு விரும்பாமை

*இம்மாதம் ஊரக அன்பர்க்கு மாநாடு பற்றி மிகச் செலவு ஏற்பட்டிருக்குமாதலால் மேலும் செலவில் அவரை ஈடுபடுத்த நான் விரும்பவில்லை. நேரே பறம்புக்குடி சென்று விடுகின்றோம். அங்குத் தலைக்கூடி உவப்போம்.*

*அ.செ. 18 நளி 2000*

### அருளின்பவாரியார்

*திரு. அருளின்ப வாரியாரைப் பற்றித் தங்கள் மன்றம் அளவிறந்த உயர்வெண்ணம் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. இன்றுள்ள தொல்கதை (புராணச்) சொற்பொறிவாளருள் அவர் தலைசிறந்தவர் என்பதே என் மதிப்பீடு. 'தனித்தமிழ் என்பது அர்த்தமற்ற பேச்சு' என்று என் மாணவரொருவரிடம் சொல்லியுள்ளார். சேயோனும் சிவனும் ஒன்றே என்பதை அவர் அறியார். சுந்தரபுராணம் முற்றும் கட்டெனில் நம்பார். கோயில் வழிபாட்டைத் தமிழிற் செய்விக்க வேண்டுமென்னுங் கருத்தைக் கொள்ளார். மதத்துறையில் ஆரிய ஏமாற்றத்தைக் காணும் ஆற்றலோ அதைக் கண்டிக்கும் மதுகையோ அவர்க் கில்லை. இன்றும் நூற்றிற்கெழு பதின்மர் எழுதப் படிக்கத் தெரியாது மடம்பட்டுள்ள நாட்டிற் பெருவாரி மாந்தர் அவர் சொற்பொழிவைக் கேட்டதானல் மட்டும் அவர் பெரியாராகி விட்டார்.*

*மேலும் மொழித்துறையை மதத்துறையினின்று பிரிப்பது உலகியலை மதவியலினின்று பிரிப்பது போன்றதே. கடவுளை நம்புகின்றவன் செய்கின்ற ஒவ்வொரு வினையும் அவனருளை முன்னியே செய்யப் பெறுவதால் வாழ்க்கை முழுவதும் ஈரியலும் அகங்கையும், புறங்கையும் போல் ஒன்றியே நிகழ்கின்றன. மொழித் துணையின்றிக் கூட்டு வாழ்க்கை இல்லை. ஆதலால் "ஒன்றே குலம் ஒருவனே தேவனும்" என்னுங் கொள்கையையே சொல்லளவில் மட்டுமின்றிச் செயன்முறையிலும் கடைப் பிடித்தல் வேண்டும்.*

*கா.இ.மு. 10 அலவர் 2000*

### அடிகளார் நூல் விற்பனை

*தண்டற்குச் செல்லும்போது மறைமலையடிகள் நூல் களை விற்பதும் தனித்தமிழ் பரவற்குத் துணையாயிருக்குமென்று கருதுகின்றேன்.*

*கா.இ.மு. 18 சுறவம் 2001*

### மணமகள்

*சேலங்கல்லூரி மேனாள் முதல்வர் அ. இராமசாமிக் கவுண்டரின் இளைய மகள் (கடைக்குட்டி) வேங்கடேசன்,*

*25அகவையினன். பொறியியல் இளங்கலைஞன் (B.E.) சென்னையில் அரசியல் அலுவலன். 1500 உருபாச் சம்பளம் பெறுவோன், அழகன், பொன்னிறத்தன், நற்குணன், திறமையன், மணப்பருவத்தான். ஆதலால் பெண் தேடுகின்றனர். இதுவரை தக்க பெண் அமையவில்லை. பொன்நிறமும் பொற்பும் ஒண் கல்வியும் உயர்குணமுள்ள பெண் உம் இனத்திலிருந்தால் உடனே தெரிவிக்க. வந்து பார்க்கச் சொல்கின்றேன். மணமகன் வீட்டார் கொங்குவேள்ளாண்குடியினரே. நும் இருமுது குரவர்க்கும் என் அன்பான நலவினவலைத் தெரிவிக்க.*

*மறை.நி. 17.8.71*

**வ.சு.உதவி**

*சுப்பையாபிள்ளை முன்பணம் போட்டுச் சிறப்பாகவும் விரைந்தும் கட்டடம் செய்வார். செலவு என் கணக்கில் இருக்கும். என் பொத்தக விற்பனைப் பணத்தில் எடுத்துக் கொள்வார்.*

**பொன்னுசாமி**

*திரு. சு. பொன்னுசாமி பி.ஏ., சென்னைத் துறைமுகப் பகுதிக் காவல் துறை உதவி ஆணையாளர்; என் பழைய மாணவர்; சிவனெறியர்; சிறந்த தமிழ்ப்பற்றாளர்.*

*வ.சு. 24.1.72*

**பதினாறில் பதினான்கு**

*பர். சட்டர்சி வங்கநாட்டுப் பிராமணர். வங்கமொழியிலும் சமற்கிருதத்திலும் பெரும்புலமை பெற்றவர். 'நன்னெறிமுருகன் சட்டர்சி' என்பது மட்டும் தமிழில் எழுதக் கற்றிருக்கின்றார்.*

*முதலில் அவருக்குத் தமிழைப் பற்றி நல்லெண்ணந்தான் இருந்தது, இந்திய நாகரிகம் ஒரு ரூபாவில், 14 அணா திராவிடம் என்று வெளிப்படையாய்ப் பேசியும்எழுதியும் வந்தவர்.*

*வ.இ. 27.3.72*

**காஞ்சி ஞானப் பிரகாச அடிகள்**

*கா.ஞா. அடிகள் கருததைக் கட்டுரை வடிவிற்பெறுக. அது நீண்டோ குறுகியோ இருக்கலாம். வாழ்த்துப் பயன்படாது.*

*கா.இ.மு. 15.12.72*

*வழக்கமாக வழங்கிவரும் தங்கள் கழகப் பொங்கல் நன் கொடை அறுபது ரூபா இன்று புலவர் செங்கைப் பொதுவனா ரிடமிருந்து பெருமகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டேன். இதற்கு என் நெஞ்சார்ந்த நன்றி.*

*அகரமுதலிப்பணி இயன்றவரை நடந்து வருகின்றது.*

*நா.செ. 10.2.76*

**கிரேக்க நாடகம்**

*நுங்கள் கிரேக்க நாடகத்தில் தமிழ் உரையாடல் மிக நன்றாயிருக்கின்றது. இத்தகைய வெளியீடுகள்தான் இக்காலத் திற்குத் தேவை. தமிழின் முதன்மை தாய்மை தலைமைகளை நாட்டுவதற்கு இதுபோன்றவை மிகத்துணை செய்யும்.*

*அடுத்த பதிப்பில் தமிழ்த் திரிசொல், சொற்றொடர்களை மூலத்துடன் காட்டி விளக்குவதுடன் திரவிட மொழியாள ரெல்லாம் உண்மை உணருமாறு குமரி நாட்டுத் தமிழ்த் தோற்ற வரலாற்றை வரைந்து தமிழின் திரவிடத் தாய்மையை நாட்டுவது நன்றாகும். அதோடு ஆங்கிலப் புலமையுள்ள ஒரு கிரேக்கப் பேராசிரியரிடம் இருந்தோ, கிரேக்கப் புலமையுள்ள ஓர் ஆங்கிலப் பேராசிரியரிடம் இருந்தோ மதிப்புரையொன்று பெற்றுக்கொள்வது மிகத் தக்கதாம்.*

*இரா.ம. 29.8.78*

**செந்தமிழ்க் கிழார்**

*பொருளாளர் செந்தமிழ்க்கிழார் பெயர் பட்டியலில் உள்ளதா? எனக்கு நினைவில்லை. அவர் மிக முதன்மை யானவர். வாழ்நாள் உறுப்பினர். பொறுப்பும் பொறுமையும் பெருந்தன்மையும் பண்பாடும் வினைத்திறமும் உண்மையும் உள்ளவர். அவர் பெயர் இல்லாவிடன் உடனே சேர்த்துக் கொள்க.*

*கு.பூ. 1.5.79*

**ஏற்பாடு**

*கன்னடத்தை நன்கு பேச எழுதக் கற்றுக்கொள்க. தமிழுக்கு நற்காலம் வரும்பபோது தமிழ்நாட்டிற் பணியாற்ற விரும்பின் ஏற்பாடு செய்வேன்.*

*கு.பூ. 2.8.79*

## முடியரசனார்

*பாவலர் முடியரசனார்க்குப் பணமுடிப்பளிப்பது பெருந் தமிழ்த்தொண்டாகும். இத்தகையோர்க்கு அரசினர் அறுபதி னாயிரமும் பதினாயிரமும் கிட்டாமை பெரிதும் வருந்தத் தக்கதே.*

*அவர் ஓய்வு பெற்றமையும், சென்னை வரவும் இயலா திருப்பதும் இதுவரை எனக்குத் தெரியாது. ஓய்வுபெற்ற வறுமைப் புலவர்க்கு அரசு அளிக்கும் ஓராண்டு மாதப் பண வுதவிக்குப் பாவலர் வேண்டுகோள் விடுத்தாரா? அவ்வுதவி யைத் தீர்மானிக்கும் குழுவில் நானும் ஓர் உறுப்பினன். முந்தி மாதம் நூறு ரூபாவாயிருந்த நன்கொடை இன்று இருநூற் றைம்பதாக உயர்த்தப்பட்டுள்ளது. பாவலர் சுரதாவிற்குப் பத்தாயிரம் நன்கொடையும் மாதவுதவியும் அளிக்கப்பட்டு வருகின்றது.*

*நம் பாவலர் இதுவரை வேண்டுகோள்விடுத்ததாகத் தெரியவில்லை. பேரா.கொண்டல் சு.மகாதேவன் எம்.ஏ.; பி.எசி. (M.A., B.Sc.,) செயலாளர், தமிழ் வளர்ச்சிக் கழகம், குறளகம், சென்னை - 1. என்னும் முகவரிக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கச் சொல்க. இவ்வாண்டுக் கூட்டம் முடிந்துவிட்டது. இனி, அடுத்த ஆண்டிற்குத் தான். சிலையில் அல்லது சுறவத்திற் கூடும். எனினும், இன்றே விடுத்து வைக்கட்டும். ஆண்டுதோறும் ஐம்பதின்மருக்கு உதவுவதென்று கொள்கை. இவ்வாண்டு நாற்பதின்மருக்குத்தான் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனை யோர்க்குத் தகுதி இல்லை. ஒருவீடும், நிலமும் வேறுவகைச் சொத்தும் இன்றி மாதம் 100 உருபாவிற்கு மேற்படாத வருமான முள்ளவராயிருத்தல் வேண்டும். அவ்விடத்திற்குரிய மாவட்டத் தண்டலாளரின் பரிந்துரை அல்லது ஒப்புதல் வேண்டும். தமிழுக்குச் செய்த தொண்டும் குறிக்கப்படவேண்டும். அரசிற்கு மாறாயிருப்பவர்க்குக் கொடுக்கப்படமாட்டாது.*

*கு.பூ. 13.8.79*

## எழுத்து மாற்றம்

*பெரியார்க்குத் தமிழ் எழுத்தை மாற்றவேண்டும் என்பது கருத்தன்று. சிக்கனம் பற்றியே தம் சொந்த இதழில் அதை மாற்றிக் கொண்டார். 25 ஆண்டுகள் அவரொடு தொடர்பு கொண்டிருந்தேன். ஒருமுறைகூடப் பொதுமேடையிலோ என்னிடமோ எழுத்து மாற்றத்தைப் பற்றிச் சொன்னதில்லை.*

*1938- இல் அவர் ஈரோட்டிலிருந்து எனக்கெழுதிய எழு பக்கக் கடிதம் மரபெழுத்திலேயே இருந்தது.*

*1947இல் எனக்கும் புலவர் பொன்னம்பலத்திற்கும் பெரியார் வழங்கிய வெள்ளிப் பட்டயத்திலும் மரபெழுத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளது.*

*கு.பூ. 17.9.79*

**பெரியார்**

*பெரியார், நான் காட்டுப்பாடியில் இருந்தபோது வருமானமில்லையென்று வீடு தேடி வந்து இருநூறு உரூபா அளித்தார். சேலங்கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர் இறந்தபின் அவர் மனைவியாரிடம் ஐயாயிரம் உரூபா நீட்டினார். ஆயின் அவ்வம்மையார் தம் பண்பாடு பற்றி அதைப் பெறவில்லை.*

*19.11.79*

**மறைவு**

*சடுத்தம்*

*ஆராய்ச்சிப் பெரும்புலவர் மயிலை சீனி, வேங்கடசாமியார் மறைந்தார். உடனே இங்கு வருக. இருவேமும் சென்று உடம்பை எடுக்குமுன் காண்போம்.*

*மாலைச்செலவு எனது. துணையின்றியும் செல்லமுடியாது. என்பேரன் பயிற்சிச் சாலைக்குச் சென்றுவிட்டான். அதன்பின் செய்தி வந்தது.*

*போம்போது வேண்டுமாயின் வாகிவைத்துக் கொள்ளலாம். மாலை மயிலையில் வாங்கிக் கொள்ளலாம்.*

*புலவர் வீட்டு முகவரி : 22, காரணீசுவரர் கோவில் தெரு. மயிலை, சென்னை. இது* Indian Express *தாளால் தெரிந்தது.*

இரா.ம.

**சிங்கைப் புரவலர்**

*சிங்கைத் தமிழ்ப் புரவலர் முன்பு மாதந்தொறும் கடிதம் எழுதுவார். ஆண்டிற்கொரு முறையேனும் ஈரட்டியும் பான்மாவும் கலவழி விடுப்பார். இன்று அவை நின்றுவிட்டன. ஆறு மாதமாகக் கடிதமேயில்லை.*

*தமிழ்மீதும் என்மீதும் அளவிறந்த பற்றுக் கொண்டிருந்தவர். பாரிமீது மூவேந்தரும் பல்வேளிரும் போன்று திரு. கிருட்டிணனார் மீதும் சிங்கைத் தமிழ்ச் செல்வரும் அழுக்காறு கொண்டுள்ளனர் போலும்.*

*கு.ப.*

**பூங்காவனம்**

*பேரா. பூங்காவனம் கன்னட நாட்டிலிருந்தும் த.இ.வ. 80 படிகள் இருமாதத்திற்குள் விற்று முழுப்பணத்தையும் அனுப்பி விட்டார்.*

*அ.வா.வெ.செ. 9.6.80*

# 4. ஆய்வும் அறிவுறுத்தமும்

### அயலொலி

*ஆய்த வரியைச் சில அயலொலி குறிக்கப்பயன்படுத்தி ஃப (F)என்று ஃச், (Sh , ஷ) என்றும் பிறவாறும் ஆண்டு வருதல் பகைவர் கையில் குடுமியைக் கொடுக்கும் பேதைமை போலாகும். எழுத்தென்பது ஒலியேயன்றி வரியன்று. ஒலியின் குறியே வரி. அயலெழுத்து வேண்டாமென்று நாமே சொல்லிக்கொண்டு நாமே அயலெழுத்தை ஆள்வோமாயின் அதை என்னென்பது?*

*தமிழ்மொழி அயலொலியாற் கெடுமேயன்றி அயல் வரியாற் கெடாது. அயல் ஒலியைப் பயன்படுத்தும் வரையில் அதைக் குறிக்கும் வரி எது வந்தாலும் ஒன்றுதான்.*

*ஆய்த ஒலியைத் தவறான வழியிற் பயன்படுத்துவதனால் அதன் இயல்பான ஒலியும் கெடுகின்றது. கஃசு என்பதை* Kahsu *என்றொலிப்பதா? கஷு* (Kashu) *என்றொலிப்பதா?*

*ஒலியிலக்கணமும் தமிழியல்பும் அறியா மாற்றம் செய்தலால் பகைவர்க்குப் பிடிகொடுத்து அவர் எள்ளி நகையாட நேரும்.*

*வ.சு. 31.1.52*

### பிழையில்லை

*தங்கள் முடங்கலிற் பிழையில்லை.*

*பெரு. 20.2.64*

### தனித்தமிழ்க் கழகம்

*மாநாட்டில் தமிழ்நாடு தழுவி தனித்தமிழ்க் கழகம் அமைக்கப்பெறும். நுங்கள் முத்தமிழ் மன்றம் திருச்சியிலிருப்பதால் அதுவே தமிழ்நாட்டுக் கழகத்திற்கு அகடாக அமைய நேரும்.*

*அடுத்த ஆண்டு இலங்கை மலையா முதலிய வெளி நாட்டுத் தமிழ் மன்றங்களும் இணைக்கப்பெறும்.*

*மாநாடு கன்னி 19ஆம், 20 ஆம் பக்கல் (அகுத்தோபர் 5,6) காரி, ஞாயிறு நடைபெறும்.*

*தி.எ. 1.8.68*

**விழாத் தலைவர்**

*விழாவிற்குத் தலைவர் வேறொருவராயின் அவர் தனித் தமிழறிஞராகவோ அன்பராகவோ இருத்தல் வேண்டும்.*

*மறுமொழிக்கு நாளில்லையெனின் கம்பிச்செய்தி விடுக்க.*

*தி.ச. 8.4.68*

**பரபரப்பு வேண்டாம்**

*விற்பனை மெள்ளவே நடக்கட்டும். பரபரப்பு வேண்டிய தில்லை.*

*தி.அ.ம. 25.4.68*

**கட்சிச் சார்பு**

*புலவர் சேந்தமாங்குடியார் வருகின்ற ஞாயிறு (4.8.68) திருச்சிச் சங்கரன்பிள்ளை சத்திரத்தில் ஒரு கூட்டங்கூட்டுவ தாகவும், அதில் நம் மாநாட்டிற்கு அரசியலாரையும் நடிகரையும் வரவழைக்கத் தீர்மானம் நிறைவேற்றவிருப்பதாகவும் கேள்வி.*

*நம் (தனித்) தமிழ்க் கழகம் கட்சிச் சார்பற்றதும் தனித் தமிழே கடைப்பிடிப்பதுமாதலின் அக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டேன். அது கட்சிச் சார்பானது. என்னைக் கேளாது கூட்டப் படுவது.*

*தி.எ. 1.8.68*

**மேற்கோள்**

*நீர் விரும்பியவாறு இத்தாளிற் பெயர்த் தொழுதப் பட்டுள்ள பகுதிகளையும் கூற்றுகளையும் மேற்கோளாகப் பயன்படுத்தலாம். ஆயின், பொத்தகத்தின் முகவுரையில் “இப்பகுதிகள் பேரா.ஞா. தேவநேயனார் எழுதிய ‘இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?’ என்னும் பொத்தகத்திலிருந்து*

*ஆசிரியன் இசைவுபெற்று மேற்கொண்டாளப் பெற்றவை" என்று குறித்துவிடவேண்டும். அல்லாக்காற் பயன்படுத்தக் கூடாது.*

*ம.பு. 20.7. 69*

## முறைகேடு

*அரசு எந்த அளவில் தமிழைப் புறக்கணித்ததுடன் அவமதித்தது என்பதை எண்ணிப்பார்க்க. மறைமலையடிகளை முற்றும் மறந்துவிட்டுப் பிறர்க்குப் படிமை நிறுவியது. எனக்கு ஆராய்ச்சிவேலை வேண்டியதற்கு அகவை கடந்துவிட்டது என்று சொல்லிவிட்டது. தமிழ்க்கூட்டுச் சொற்களையும் சொற்றொடர்களையும் புணர்ச்சியின்றியெழுதி வருகின்றது. பேராயத்தைச் சேர்ந்தவரும், தொல்காப்பியம் பாணிய வழிநூல் என்றவரும், "ராகவனென்பவன் ராஸ்கேல் தானா? "மோட்டார் வண்டியில் முன்சீட்டிலமர்ந்து" "முனிசிபல் சேர்மன் முறை ஜெகநாதன் முடித்துவைத்தார்" என்று பாடியவரும் தமிழ்ப் பகைவருமான ஒரு கடைப்பட்ட பாவலர்க்கு மாதம் 200 உரூபா அன்பளிப்பென்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மும்மாதத்திற்குப்பின் மறைமலையடிகள் வழிப்பட்ட ஒரு தமிழ்த் தொண்டனுக்கு ஒரு வெற்றுத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. உண்மையில் எனக்கு அளிப்பதாயின் 500 உரூபாவிற்குக் குறைந்து நான் ஏற்க முடியாது. மறைமலையடிகளையும் வையாபுரியையும் சமமாக நோக்குமாயின் அதைக்கடுகளவும் பொருட்படுத்தேன்.*

*த.கு.ம. 24.10.69*

## இடையீடு

*ஆரிய ஆட்சி (பேராய ஆட்சி) நீங்கினபின் நேரே தமிழாட்சி வர முடியாது. திராவிட ஆட்சி இடையிட்டுத்தான் வரும். ஆகவே இது இடைப்பெயர் காலம்* (Transition Period) *என அறிக.*

*ந.பி.1.ஆடவை 2000*

## தொண்டு

*நும் தமிழ்த்தொண்டு மறைவாயிருக்க. ஏனைத் தமிழன் பரும் இங்ஙனமே.*

*ந.பி. 24. விடை 2000*

## வாழ்க்கைத்துணை

*வாழ்க்கைத் துணை இளம் பெண்ணாதலால் உலகியல் நன்றாய் அறியும்வரை தங்கையைக் கவனிப்பதுபோற் கவனிக்க. மாணிய (பிரமசரிய) நிலையில் விடுதலையும் குடும்பக் கவலையின்மையும் மகிழ்ச்சிக் கேதுவாம். மணவாழ்ககையில் சில இன்பங்களும் ஏந்துகளும் மகிழ்ச்சி விளைக்கும். அவ் விரண்டும் இன்றேல் மணவாழ்க்கையிலும் மாணிய வாழ்க் கையே சிறந்ததாம். ஆயின் கற்பைக் காத்துக் கொள்ளவேண்டும். அது கோடியில் ஒருவர்க்குத்தான் இயலும்.*

*மணவாழ்க்கை எல்லார்க்கும் தொடக்கத்திலேயே இன்பந் தருவதில்லை. ஆதலால், சற்றுப் பொறுமையாய் இருத்தல் வேண்டும். சிலர்க்கு இன்பத்தில் தொடங்கித் துன்பத்தில் முடியும். சிலர்க்கு துன்பத்தில் தொடங்கி இன்பத்தில் முடியும். சிலர்க்கே என்றும் இன்பமாகவே இருக்கும். பெண்ணின் பெற்றோர் திருமணத்தின் பின் சொத்துத் தருவதாகச் சொல்லி நிறைவேற்றுவதுமுண்டு. ஏமாற்றுவதுமுண்டு. நிறைவேற்றாதவர் சிலர், புரோகிதத் திருமணம் நடைபெறவில்லையென்றோ, மருமகனுக்குக் கடவுள் நம்பிக்கையில்லையென்றோ கரணியங் காட்டுவர். கூர்மதியுள்ள மணமகன் திருமணத்தின் முன்னம் பெற்றுக்கொள்வான்; அல்லது பெறும்வரை பெண்ணின் பெற்றொர் விருப்பப்படி நடந்துகொள்வான். எது எங்ஙன மாயினும் கடவுளை நம்பி முயற்சி செய்யின் கருதியது கைகூடும். கூடாவிடினும் வேறுபயன் விளையும்; ஆறுதலும் கிட்டும்.*

*“கிட்டாதாயின் வெட்ட மற” என்னும் பொன்மொழியைக் கடைப்பிடித்து முயற்சி பயன்தராவிடின் வீண்கவலையின்றித் தென்பாயிருத்தல் வேண்டும்.*

*ந.பி. 25 நளி 2001*

## நீலமலைச்செலவு

*ஆட்சிக்குழுக் கூட்டத்தின்பின் நான் நீலமலை சென்று ஒரு மாதம் போல் தங்கிச் சென்ற செவ்வாய்தான் மீண்டேன். அக்காலத்துப் பாவூர்க் கணியனைப் பற்றி முற்றும் மறந்து போனேன். இன்று கணியர் இ.மு. சுப்பிரமணியம் பிள்ளைக்கு (சங்கரநயினார்கோயில் திருநெல்வேலி மாவட்டம்) எழுதிக் கேட்டிருக்கின்றேன். விடைவந்ததும் தெரிவிப்பேன். அண்மையிற்*

*சென்னை செல்ல நேரும். அங்கும் திரு. வ. சுப்பையாப்பிள்ளை போன்ற பலரை உசாவியறிகின்றேன்.*

*இல.க.இ. 8.8.69*

**கண்ணொளி**

*பாவூர்க் கணியாளைப் பற்றிக் கணியர் இ.மு. சுப்பிர மணியப்பிள்ளைக்கும், திரு.வ. சுப்பையாப்பிள்ளைக்கும் எழுதிக்கேட்டுப் பன்னாளாகியும் இன்னும் மறுமொழி வர வில்லை. எனக்குக் கண்ணொளி குன்றியிருப்பதால் எங்குஞ் சென்று ஏனையோரை வினவவும் இயலவில்லை.*

*அடுத்த மாதத் தொடக்கத்தில் எனக்குக் கண்ணறுவை இங்கு (சென்னை) நிகழும் அதன்பின் இருமாதம் வேலை செய்ய முடியாது.*

*இல.க.இ. 10.9.69*

**பாவூர்க்கணியாள்**

*பாவூர்க் கணியாளைப் பற்றிக் கணியர் இ.மு. சுப்பிர மணியப் பிள்ளைக்கு எழுதியதற்கு இன்னும் மறுமொழியில்லை.*

*நேற்றுச் சை.சி.நூ.ப.க. தலைவர் திரு.வ.சுப்பையாப்பிள்ளை என்னைப்பார்க்க இங்குவந்திருந்தார். அவரும் தெரியவில்லை யென்று சொல்லிவிட்டார்.*

*என்னையின்று விரும்தோம்பும் திரு. முத்துக்கிட்டிண னார் ஒரு மலையாளியை வினவியிருக்கிறார். அவர் உசாவி யறிந்து தெரிவிப்பதாகச் சொன்னராம். தெரிவிப்பின் உடனே எழுதுவேன்.*

*இல.க.இ. 10.10.69*

**தொண்டு**

*முதற்கண் அலுவற் கடமையைச் செவ்வனே ஆற்றுக. அடுத்து வாழ்க்கைத் துணையைக் கவனிக்க. அதன்பின் தமிழ்த் தொண்டில் ஈடுபடுக.*

*ந.பி. 25 நளி. 2001*

*அன்று பறப்புக்குடியிறல் தாங்கள் பரிந்துரைத்த தமிழ்ப் புலவர் தாம்பெற்ற தி.த.ம.உரைப்படிக்கு இன்னும் பணம்*

*அனுப்பவில்லை. அவர் இன்னும் சம்பளம் வாங்காமல் இருக்க முடியாது.*

*தமிழ்ப் புலவருள்ளும் திருடரும் கொள்ளைக்காரரும் இருப்பதை என் பட்டறிவிற் கண்டுளேன்.*

*நா.செ. 3 சுறவம் 2001*

### பிரித்துப்பாட விரும்பாமை

*திருமண வாழ்த்தில் ஆசிரியப் பாவிற்குரிய அகவலோசை பற்றி அம்மை என்னும் ஈற்றைக் குறைத்தேன். 'பிச்சுமணி பகவதியம்மையார் பேணி என இக் காலத்தார் பாடவுஞ் செய்வர். ஆயின் தூக்கு என்னும் ஓசை இலக்கணம் வழுவும். பிச்சுமணியும் பகவதியம்மையும்' என இருவர் பெயரையும் பிரித்துப் பாட நான் விரும்பவில்லை.*

*ந.பி. 22 அலவன் 2001*

### மனமாற்றம்

*பெரியார் மூடநம்பிக்கை யொழிப்பு மாநாட்டில், எந்த வேளையும் பிரிந்துபோகக்கூடிய வணிக ஒப்பந்தமே மண வாழ்க்கை என்னும் தீர்மானத்தை நிறைவேற்ற உடந்தையாக இருந்தது மட்டுமின்றி, அதை 'மெயில்' தாளில் தற்காத்தும் உள்ளமை கண்டபின்தான் என்மனம் மாறிற்று.*

*தி.சை.சொ. 8 மீனம் 2002*

### ஆட்சித் தவறுகள்

1. ஆங்கிலத்தைக் குறைத்துத் தமிழரை அறிவிலிகளாக்குதல்.
2. உழவரைத் தக்கவாறு போற்றாமை.
3. போக்குவரத்துத் துறையை அரசியற்படுத்தித் தாறுமாறாக நடத்தி வருகை.
4. சூதாட்டு வகையில் அரசிறை தேடித் திருவள்ளுவர்க்கும் தமிழ் நாட்டிற்கும் இழிவுண்டாக்கியமை.
5. மாணவரைக் கட்சிச் சார்புபடுத்தி அவர் கல்வியைக் கெடுத்து வருகை.
6. தமிழை வளர்ப்போமென்றும் இந்தியை ஒழிப்போமென்றும் வாய்நேர்ந்ததை நிறைவேற்றாமை.

7. சென்னை ப.க.க. அகர முதலியைத் திருத்தாமை.

8. தனித்தமிழ்ப் பற்றின்மை.

9. கோவைத் துரைச்சாமி நாயக்கர் போன்ற புதுப்புனைவாளரையும் என்போன்ற மொழியாராய்ச்சியாளரையும் ஊக்காமை (கட்சியில் சேர்த்து கட்சித் தலைவரை வரம்பிறந்து புகழ்ந்து அடிமைகளாய்ப் போனவர்களுக்கே வேலையளித்தல்.)

10. அறிவியற் குறியீடுகளைத் தனித்தமிழில் ஆக்கிக்கொள்ளாமை.

11. திராவிட இயக்கமாயிருந்து மலையாளியரைப் பெருக்கித் தமிழர் நலத்தைக் குறைத்தல்.

*த.கு.ம. 20 மடங்கல் 2002*

**பாவூர்க்கணியாள்**

*'பாவூர்க்கணியாள்' பற்றிச் சிறிது விளக்கம் கிடைத்திருக் கிறது. என் நண்பர் எழுதியிருக்கும் மடலில் குறிப்பிட்டிருப்ப தாவது :*

*அவர்களுக்குப் 'பாழூர்க் கணியார்' என்று பெயர். அவர்கள் மிகப்பேர் பெற்ற கணியர் குடும்பத்தார். எர்ணாகுளத்தி லிருந்து 20 கல் தொலைவில் இருக்கிறார்கள். குடும்பத் தலைவர் காலமாகிவிட்டார். பிள்ளைகள் தொடர்ந்து கணியராய் இருக்கிறார்கள். மேலும் குறிப்பாக ஏதாவது செய்தி கேட்டால் அறிந்து எழுதுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.*

*இல.க.இ. 25.3.70*

**நால்வகை எழுத்து**

*நால்வகை எழுத்துள் எவ்வகைக்கும் முற்பட்டது மொழி. எகுபதியக் கருத்தெழுத்து விளக்கம் கண்டுபிடிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது. ஆயின் சிந்து நாகரிகக் கருத்தெழுத்து விளக்கம் கண்டுபிடிப்பு நிலையிலேயே இன்றும் இருக்கின்றது.*

*இல.க.இ. 5.6.70*

**விடை எழுதுக**

*விடுமுறை நாளில் அல்லது ஓய்வுநாளில் அசோகா வுண்டிச்சாலை சென்று, கீழ்க்காணும்வினாக்கட்கு விடை யறிந்தெழுக.*

1. அங்குச் சமைப்பவர் தமிழரா? பிராமணரா?

2. அங்குத் தங்கும் பிராமணர் அங்கேயே உண்கின்றனரா?

3. தென்னாட்டுப் பிராமணர் உண்ணாவிடின், வடநாட்டுப் பிராமண ரேனும் உண்கின்றனரா?

*இச்செய்தி தமிழர் வரலாற்றுக்கு வேண்டும். உண்ப தென்றது வெளிப்படையாயுண்டலை.*

*இல.க.இ. 25.6.70*

## இயலாது

*நும் தமிழார்வதாலும், என்மாட்டன்பாலும் நும் வேணவாவினாலும் ஓரிளைஞர் துணையொடு வருகின்றேன்.*

*இனிமேல் துணையின்றி எங்கும் செல்ல இயலாது. எந்தச் சார்பிலும் சொற்பொழிவாற்றலும் ஒண்ணாது.*

*மு.வ.ப. 4.1.75*

## கரணியம்

*நான் நும் அளவிறந்த பற்றை அறிவேனாயினும் இன்று அவண் வரத் தயங்குவதற்குக் கரணியங்கள் 5 அவையாவன :*

1. வேலைமிகுதி. துணைவரின்மையால் ஓராண்டு வேலையை மும்மாதத்திற்குட் செய்து முடிக்கவேண்டியுளது. பகலில் ஒரு மணிநேரமும் வீண் போக்கலாகாது.

2. பனிக்காலம். என் நுரையீரல் பனியால் ஓரளவு தாக்கப் பட்டுள்ளது. அடுத்தடுத்த ஈரிரவு நெடுந்தொலைவு வழிப்போக்கு உடல் நலத்தை மிகக் கெடுத்துவிடுமோ என்னும் அச்சம்.

3. பாவலர் நாட்டு விடுதலைக் கிளர்ச்சியாளரெனின், நான் மொழி விடுதலைக் கிளிர்ச்சியாளன் என்று எல்லார்க்கும் தெரிந்திருத்தல்.

4. என்னால் ஏற்படும் பொருட்செலவு

5. வீட்டிற்குப் பாதுகாப்பின்மை.

*நீர் ஒரு கடிதத்தில் ஆளத்தகாத சொல்லை ஆண்ட தனால் தான் வர இசைந்தேன்.*

*அருள்நெறித் திருக்கூட்டத் தலைவர் தேவாரம் ஓதிக் கரணியத்தை நடத்தி வைப்பது. ஆரியர் உட்பட அனைவர்க்கும் ஏற்குமாதலால் நான் வரத் தேவையில்லை. என்பெயரை அழைப்பிதழில் குறிக்கலாம். இறைவனுக்குத் திருவுள்ளமாயின் வருகின்றேன். ஆயின் 10.1.75 பணம் அனுப்ப வேண்டியதில்லை. நான்வரின் நேரில் வாங்கிக்கொள்வேன்.*

*நான் வர இயலாவிடின் திரு. மூக்கப் பிள்ளையைக் கொண்டே கரணம் நடத்திக் கொள்ள அணியமாயிருக்க.*

*என் வாழ்த்து நான்வரினும் வராவிடினும் ஒத்த வலிமை யுள்ளதே.*

*இறைவனருளால் கரணம் இனிது நிகழ்க. எல்லாம் வல்ல அவனை இறைஞ்சுகின்றேன்.*

*மு.வ.ப. 8.1.75*

**வாழ்த்து**

*நான்மூலையும் வண்ண இணைமுளரி* (Rose) *அச்சிட்ட மஞ்சள் தாளில் எழுதப்பட்ட நும் திருமண வாழ்த்து இன்று பதிவஞ்சலில் விடுக்கப்பட்டுள்ளது.*

*மு.வ. ப. 24.1.75*

**கரணம்**

*தேவாரம் ஓதித் திருமணக்கரணம் நடத்தி வைப்பது அலுவலக மேலதிகாரிகட்கும் ஏற்றதாயிருக்கும்.*

*“உலகெலா முணர்ந்தோதற் கரியவன்” என்று பெரிய புராணக் கடவுள் வாழ்த்தையாவது, அதையொத்த திருப்பதிகச் செய்யுளையாவது பாடித் தொடங்கச் சொல்லலாம்.*

*“மாதர் பிறைக் கண்ணியானை” என்னும் திருவையாற்றுப் பதிகத்தையும், “மண்ணி னல்லவண்ணம் வாழலாம்” என்னும் திருக்கழுமலப் பதிகத்தையும் முன்னும் பின்னுமாகப் பாடுவது பொருத்தமாகும். இசையின்றி ஓதுவதைவிட இசையுடன் பாடுவதே நன்று.*

*இறைவன் திருவருளால் கரணமும் விழாவும் இனிது நடைபெறுக. இல்லறம் இன்பமாக நீடுக.*

*மு.வ.ப. 24.1.75*

### வேனில் உணவு

*உடம்பைப் பேணுவதையே முதற்கடமையாகக் கொள்க. வேனிற் காலத்திற் குளிர்ச்சிக்கேற்ற உணவுகளைவே உண்டு வருக.*

*முதன்மொழி வெளியீட்டிற்கு மதுரையே ஏற்றது.*

*கு.பூ. 5.7.79*

### அதிகாரப்பயன்

*தமிழ் வளர்ச்சியும் தமிழன் உயர்வும் ஒன்றையொன்று தழுவியவை.*

*அதிகாரமின்றி அங்குமிங்கும் ஓடியாடித் திரிநிலை யினும் அதிகாரத்துடன் ஓரிடத்திலிருக்கும் நிலையே தொண்டு செய்யச் சிறந்தது.*

1. கல்லூரி மாணவர் அனைவர்க்கும் தமிழ்ப் பற்றூட்டலாம். தமிழ் என்பது செந்தமிழே.
2. ஆண்டுதோறும் வெளியேறும் மாணவருள் ஒருவரையேனும் தமிழ்த்தொண்டராக்கலாம்.
3. அரசோ பல்கலைக் கழகமோ தமிழுக்குக் கேடான சட்டம் பிறப்பின் அல்லது கட்டளையிடின் கண்டித்துத் தவிர்க்கலாம்.
4. இதற்குப் பிற கல்லூரிவையாபுரிகள் வலிமையைக் குறைக்கலாம்.
5. இந்தித் திணிப்பையும் வடமொழி வழிபாட்டையும் தடுக்கலாம்.
6. உ.த.க. மாநாட்டுக்குத் தலைமை தாங்கலாம். ஒருநல்லியங்கி கிடைக்கும் வரை நான் சென்னையை விட்டு வெளியேற இயலாது.
7. கல்லூரிச் சார்பில் அல்லது தமிழ்ச் சார்பில் உலகஞ்சுற்ற வாய்ப் புண்டு. ஆங்கிலப் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் விரைந்து பெருக்கிக் கொள்க.

*த.கு.ம. 11.8.79*

### விற்பனை

*ஓரீரெளியவர்க்கு மட்டும் ஒரு சிறு உதவிபோலப் பத்து உருபாவிற்குப் பிறர்க்குத் தெரியாதவாறு விற்பதனாற் கேடில்லை*

*என்று கருதினேன். நிரவலாகப் பதினொன்று மேனி விற்றதனாற் குற்றமில்லை. ஆயிரத்திற்கு மேற்பட்ட மாத வருமானமுள்ளவர் முழுவிலையும் விரும்பிக் கொடுக்கலாம். கட்டாயம் வேண்டேன்.*

*கு.பூ. 17.9.79*

**இணைவு**

*தமிழ்நாட்டுக்குத் தூய்மையான ஆட்சிமட்டுமன்றி, வட மொழியையும் இந்தியையும் எதிர்க்க வல்லமையுள்ள ஆட்சியும் வேண்டும். ஆதலால் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் விரைந்து இணைந்துவிடல் வேண்டும் என்னும் தீர்மானத்தையும், செந் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிப் பணியாளர் அமர்த்தம் பற்றிய தீர்மானத்தையும் மாதந்தோறும் அரசிற்கு அனுப்பிக் கொண்டே இருத்தல் வேண்டும். பிற கிளைகளும் இதைக் கையாளுமாறு உ.த.க. செய்தி இதழிலும் குறிக்கலாம்.*

*கு.பூ. 17.9.79*

**நக்கீரர் விழா**

*ஆண்டுதோறும் நக்கீரர் விழா நடத்தி, குயக்கொண் டான்சாவவும் உயிர்க்கவும் பாடியதை நடித்துக் காட்டலாம்.*

*இஞ்சி கு.பூ. 19.11.79*

*இஞ்சி 1 அள் - செறிவு(திவா.) இஞ்சி, வன்மை (சூடா).*

*அள்ளல் - நெருக்கம். "அள்ளற் பயலை யூர்கின்றது" (திவ். இயற். திருவிருத். 12)*

*அள்ளாடுதல் - செறிதல் "அள்ளாடிய கவசத் தவிர் மணியற்றன" (கம்பரா, உயுத்த, முதற்போர், 177)*

*அள்ளிருள் - செறிந்த இருட்டு. அள்ளுதல் - செறிதல் (சீவக.614) அள் - இள்-இய் (இய்ஞ்சு) - இஞ்சு. ஓ. நோ.குள் - குய்(குய்ஞ்சு) குஞ்சு; பிள் - பிய் - (பிய்ஞ்சு) - பிஞ்சு; கொள்- கொய். தொள் - தொய்.*

*இஞ்சுதல் - செறிதல், இறுகுதல், திணிதல், இஞ்சு - இஞ்சி திணிந்த மதில்வகை.*

*இஞ்சி 2*

### இஞ்சி

*இல் - இள் - இழு. ஒ.நோ: கொள். கொம்பு - கொழு கொம்பு. இழுத்தல் - உள்வாங்குதல், உள்ளிழுத்தல், உறிஞ்சுதல் இள் - (இய்) - (இய்ஞ்சு) - இஞ்சு.*

*இஞ்சுதல் - நீரை உள்ளிழுத்தல், சுவறுதல்.*

*இஞ்சு - இஞ்சி - நீரை உள்ளிழுத்துத் திரண்டிருக்கும் கிழங்கு வகை. அஃதுள்ள பூண்டுவகை.*

*குறிப்பு : இப்பகுதியை மூலமும் திரிபும் என்னும் தலைப்பின்கீழ்ச் சேர்த்துக்கொள்க.*

*மி.மு.சி. 3.11.70*

### சிலர்நிலை

*சொற்பட்டியலை அழுக்காற்றுப் பிண்டங்களாகிய தமிழ்ப்பேராசிரியரிடம் காட்டுதல் கூடாது.*

*தி.வை.சொ. 3.11.70*

### என் பிறந்த நாட்செய்தி

*இந்து மாவாரியில் மூழ்கியுள்ள குமரிக் கண்டத் தென்கோடியில் கி.மு. 50,000 (ஐம்பதினாயிரம்) ஆண்டுகட்கு முன்பே முழுவளர்ச்சியடைந்த தமிழே, உலக முதல் உயர் தனிச்செம்மொழியும் திரவிடத் தாயும் ஆரியமூலமும் ஆகும். தேவமொழியென்று ஏமாற்றித் தமிழகத்திற் புகுத்தப்பட்ட சமற்கிருதம் என்னும் வடமொழியாலேயே தமிழ் தாழ்த்தப் பட்டது. அதனால் தமிழனும் தாழ்த்தப்பட்டான். தமிழன் மீண்டும் முன்னேறுவதற்குத் தமிழ் வடமொழியினின்றும் விடுதலையடைதல் வேண்டும். வடமொழியினின்றும் தமிழை மீட்பதே என் வாழ்க்கைக் குறிக்கோள். தமிழ் உயர்ந்தால் தான் தமிழன் உயரமுடியும். அதற்குத் தமிழர் இனி எல்லா வகையிலும் தமிழையே போற்றுதல் வேண்டும். முதற் கண் தமிழர் அனைவரும் தமிழ்ப்பெயரே தாங்கல் வேண்டும். ஆண்டின் ஒரு நாளைப் பெயர்மாற்றத் திருநாள் என்று இனி ஆண்டுதோறும் கொண்டாடி வருவது நன்று. பிறந்த அண்மையில் பிறமொழிப் பெயர் பெற்றவர் எல்லாரும் அந்நாளில் தம் பெயரைத் தனித்தமிழ்ப் பெயராக மாற்றிக்*

*கொள்ளலாம். அதை இல்லத்தில் விழாவாகக் கொண்டாடு வதுடன் ஊர்வலத்தாலும் ஊரார்க்கறிவிக்கலாம்.*

*தமிழ்ப்பெயர் தாங்குபவரே உண்மைத் தமிழராவர் தமிழ்ப்பெயர் ஏற்றபின் தமிழிலேயே திருமணத்தையும் இரு வகைச் சடங்குகளைய்யும் செய்தலும் செய்வித்தலும் வேண்டும். கடவுள் நம்பிக்கையுள்ளவர் திருவழிபாட்டையும் தமிழிலேயே ஆற்றுதல் வேண்டும். இங்ஙனம் தொடர்ந்து செய்துவரின் இன்னும் ஐந்தாண்டிற்குள் தமிழர் தம் அடிமைத் தனமும் அறியாமையும் அடியோடு நீங்கி மேலையர்போல் புதுப்புனைவு தலைப்படுவர் என்பது திண்ணம்.*

***ஆங்கிலர் நீங்கியதால் தமிழ்நாடு விடுதலையடைய வில்லை. ஆரியம் நீங்குவதே உண்மையான தமிழர் விடுதலையாம்.***

*மி.மு.சி. 3.2.71*

**வேறுபாடு இல்லை**

*சென்னை அகர முதலித் திருத்தம் ப.க.க. செய்ய வேண்டியவைவேலை. அதை நாம் திருத்த மேற்கொண்டதைப் பாராட்டிப் பொருளுதவியும் செய்யவேண்டும். அதுகூட நாம் கேட்கவில்லை. திருத்தும் தகுதியுள்ளதாக நடிக்கும் குழுவைக் கலைத்துவிட்டு, சென்னையகர முதலி முத்தொகுதியுள் ஒன்றை நமக்கு விலைக்கோ இலவசமாகவோ தரல்வேண்டும். இதற்குத் திரு.நெ.து.சு. அஞ்சினாரெனின் அவர்க்கும் இலக்குமணசாமி முதலியார்க்கும் வேறுபாடே இல்லை.*

*இல.க.இ. 18.8.71*

**வெறி**

*கடவுள் இல்லை என்பதும் ஒரு மதம் என்று ‘தமிழர் மதம்’ 5ஆம் இயலிற் காட்டப்பட்டுள்ளது. ஆதலால், கடவுளை நம்புவாரை மதவெறியர் என்று எவரும் குறைகூற இடமில்லை. நம்பா மதத்தாரே இன்று மதவெறியராய்த் தம் மதத்தை எங்கும் பரப்ப முனைகின்றனர்.*

*கா.இ.மு. 5.8.72*

*அகக்கரண வளர்ச்சியும் அறிவு விளக்கமும் இல்லாத மருட்பிறவிகள், தம் மனநிலைக்கேற்றவாறு பிதற்றுவதைப் பொருட்படுத்த வேண்டேன். மறைமலையடிகட்கு மாறானவன் உண்மைத் தமிழனல்லன்.*

*நா.சி. 9.9.72*

### பொதுவுடைமை

*எதிர்காலத்தில் தமிழ்நாடும் இந்தியாவும் மட்டுமின்றி உலகமுழுதும் பொதுவுடைமையாட்சியைத் தான் மேற் கொள்ளும். அது வருமுன் நாமே வழிகாட்டித் தமிழை நிலைப்படுத்தி விடவேண்டும். பிந்தினால் ஒன்றும் இயலாது.*

*கா.இ.மு. 15.10.72*

### முந்நோய்கள்

*அறியாமை தன்னலம் அழுக்காறு ஆகிய முந்நோய்கள் நம் இனத்தைப் பல்வேறு துறையில் தொன்று தொட்டுக் கெடுத்து வருகின்றன.*

*கா.இ.மு. 8.2.73*

### தமிழ் வரலாறு

*மு.வ. தமிழ் இலக்கிய வரலாறு தமிழன் பிறந்தகம் குறியாது மொட்டையாய்த் தொடங்கிய முண்டவரலாறு. முதலிருகழகங்களும் அவர் ஒப்பவில்லை. கடைக் கழகமும் 5ஆம் நூற்றாண்டுச் சமண சங்கமே என்கிறார். தொல்காப்பியம் கி.மு. 3ஆம் நூற்றாண்டென்று சான்றிதழ் கூறப்பட்டுள்ளது.*

*வ.சு. 16.2.73*

### பாடுபடுதல்

*தனித்தமிழும் பொதுவுடைமையென்னும் கூட்டுடை மையும் வருகின்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெறப்பாடுபடுக. இங்குவரின், அதற்கான வழிவகைகளைச் சொல்வேன்.*

*த.ப.செ. 22.5.73*

### என் கணக்கில்

'Origin and apread of the Tamil' *ஒருபடி உடனே "திரு.* M.G *இராமச்சந்திரனார், .M.G.R. உருவாக்கம், ஆர்க்காடு முதலியார் வீதி, மாம்பலம், சென்னை - 17" என்ற முகவரிக்கு விடுத்து விடுக. நான் அனுப்பச் சொன்னதாகவும் கடிதவாயிலாய்த் தெரிவிக்க, ஒரு கிழமைக்குள் பணம் வராவிடின் என் கணக்கில் வைத்துக்*

*கொள்க. உலகப் பழங்குடி மக்கள் பிறந்தகத்தை அறிய விரும்புகின்றார்.*

*வ.சு. 20.8.73*

## அனற்பதனி

*சிங்கப்பூரினின்று அடிக்கடி நண்பர் வருகின்றனர். ‘அனற்பதனி’ ஒன்று வாங்கிவரச் சொல்கின்றேன்.*

*வ.சு. 5.2.74*

# 5. உ.த.க.வும் பணியும்

### கட்சிச் சார்பு

*கழகம் கட்சிச் சார்பு கடுகளவுமின்றித் தமிழ்வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டது.*

*வி.அ.க. 31.12.68*

### தலைவர்கள் நிலை

*மாவட்டத் தலைவருள் சிலர் ஊக்கம் விஞ்சியவர். பலர் குன்றியவர். ஒருசிலர் இல்லாதவர்.*

*நா.செ.உ. விடை 2000*

### விழாக்கள்

*(திருக்குறள் மரபுரை) வெளிவந்த பின்னரே இதன் வெளி யீட்டு விழாவொடு உ.த.க. ஆட்டை விழாவும், திருவள்ளுவர் ஈராயிரவாட்டை விழாவும் நடைபெறவிருக்கின்றன.*

*மா.இரா.28 கும்பம் 2000*

### அஞ்சல்

*உ.த.க. தொடர்பான இருவகை அஞ்சலகட்கும் எனக்கு ஆண்டுதோறும் 5 உரூபா கொடுத்துவிடல் வேண்டும். இம் மாதமே எனக்கு 2 உரூபா ஆகிவிட்டது.*

*நா.செ. 5 மேழம் 2001*

### உறுப்பினர் தகுதி

*உறுப்பினர்க்குத் தனித்தமிழாற்றல் இருக்கத் தேவை யில்லை. அதன்மீது பற்றிருந்தாற்போதும்.*

*நா.செ. 28 அலவன் 2001*

## உறுப்பினர் நிலை

*உ.த.க. உறுப்பினர் பெரும்பாலும் எளியவர். முப்பெருஞ் சைவ மடத் தம்பிரான்மார், பெருநடிகர், பல்கோடிச் செல்வர் ஆகியவரைத் தக்காரொடு அடுத்தால்தான் விரைந்து பெருந் தொகை தொகும். ஒரு ருபா உறுப்பாண்மைக் கட்டணஞ் செலுத்தவுந் தயங்குவாரைக் கேட்பது நன்றன்று.*

*தி.வை.சொ. 22.1.70*

## பொறுப்பாளர் கடமை

*பொருட்செய்திகளில் தங்களையே கேட்டுச் செய்தல் வேண்டும். கழகக் கொள்கையும் நடப்புமுறையும் பற்றித்தான் என் கருத்தைத் தெரிவித்தல் முறையாகும். செயலாளர் கடமை தலைவர் ஏவியதைச் செய்தலேயன்றித் தலைவரையும் பொருளாளரையும் ஏவுதலன்று. அடாது செய்ததன் விளைவை ஒருமுறை பட்டறிந்தால்தான் தெரியும்.*

*நா.செ. 3.4.70*

## கட்சிச் சார்பின்மை

*நம் உ.த.க.வில் கட்சிச் சார்பற்றவர்தான் இருக்கமுடியும். எக்கட்சியாயினும் நல்ல திட்டங்களைப் போற்றலாம். அவற்றை ஊக்கி ஒத்துழைக்கலாம். ஆயின் கட்சித் தலைவரை முன்னும் தமிழைப் பின்னும் வைப்பவர் உறுப்பினராயிருக்க முடியாது.*

*மி.மு.சி. 5.9.70*

## உ.த.க. கொடி

### கொடிநிற அமைப்பு வகைகள் :

*வானநீலம், வெள்ளை, அரத்தச் சிவப்பு (எழுவகை அமைப்புகளை வரைந்துளார். நடுவிலுள்ள பூ பல வடிவிலிருக்கலாம் என ஐவகை வடிவு காட்டியுள்ளார்.)*

### நிற விளக்கம்

1. வானநீன்மை நீலவானத்தையும் நீலக்கடலையும் குறித்து வியனுல கியன்மையை (University) உணர்த்தும்.

2. வெண்மை தமிழின் தூய்மையையும் தமிழ்ப்பண்பாட்டின் தூய்மை யையும் பகையின்மையையும் உணர்த்தும்.

3. செம்மை செல்வம் மறவம் ஈகம் (தியாகம்) ஆகியவற்றை உணர்த்தும்.

*மி.மு.கி. 8.12.70*

**மாநாடு**

*உ.த.க. மாநாடு இக்கிழமையே காரி ஞாயிறு (9.10.1.71) மதுரைத் திருப்பரங்குன்றச் சாலையிலுள்ள வெற்றித் தனிப் பயிற்சிக் கல்லூரிப் பேரரங்கில் நடைபெறுகின்றது. தவிர்க்க முடியாத சில நிலைமைகளால் ஒத்திவைக்க இயலவில்லை.*

*இச்செய்தியை அன்பர் அனைவருக்கும் தெரிவித்து விடுக. வரக்கூடியவரெல்லாம் வருக.*

*ந.பி. 5.1.71*

**இசை**

*மாநாடு பொங்கலுக்குப் பின் நடப்பின், 'தமிழர் இசை நலமும் நலிவும்' என்னும் பொருள்பற்றிப் பேசுகின்றேன்.*

*வி.அ.க. 21.12.71*

**வேறு**

*தமிழியக்கம் வேறு; உ.த.க. வேறு. (அதன்) முயற்சி யானையைப் பூனை எதிர்ப்ப தொத்ததே.*

*இல.க.இர 14.7.72*

**ஆட்சிக்குழு**

*13.8.72 ஞாயிறு காலை 10 மணிக்கு என் இல்லத்தில் ஆட்சிக் குழுக்கூட்டம் கூடுகின்றது. தொலைவிலிருந்து வருபவர்க்கெல்லாம் இயலுமாயின் இரு வழிச் செலவிற்கும் இன்றேல் ஒருவழிச் செலவிற்கும் பணந்தர ஏற்பாடு செய்வேன். 14 மாவட்டத்தாரும் வருவர்.*

*இந்தியெதிர்ப்போடு கூடிய உ.த.க. மாநாடு இவ்வாண்டு சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்படும்.*

*இல.க.இர. 14.7.72*

## பட்டிமன்றம்

*இவ்வாண்டிறுதி சென்னையிற் பட்டிமன்றம் தலைப்பு - தமிழர் பழங்குடி மக்களா, வந்தேறிகளா? பழங்குடி மக்கள் - ஞா.தே; அப்பாத்துரை முதலியோர். வந்தேறிகள் - நீலகண்ட சாத்திரியும் தெ.பொ.மீ.யும். அல்லது அவர்களால் அமர்த்தப் பட்டோர். நடுவர் - குன்றக்குடி அடிகள், செட்டிநாட்டரசர், கருமுத்து தியாகராசச் செட்டியார், கோவைத் துரைசாமி நாயக்கர், பற். மணவாள ராமானுசம், நீ, கந்தசாமிப்பிள்ளை, பர்.வ.சுப. மாணிக்கம், ஔவை சு. துரைச்சாமி, மே.வீ. வேணு கோபால், மயிலை சீனி. வேங்கடசாமி.*

*நடுவர் தீர்மானமே நிலையான முடிவு. எதிரிகள் வரா விடின் தோற்றவராவர். பிற 'வலம்புரி'யிற் பார்க்க.*

*14.8.72*

## பட்டிமன்றம்

*தீரு. நீ.க. பிள்ளையை விரைந்து பார்க்க. பட்டிமன்றம் அல்லது கருத்தரங்கு மாநாடு சென்னையிலேனும் திருச்சியி லேனும் நடைபெறலாம்.*

*உ.த.க. வளர்ச்சிக்கு முதன்மொழி மாதந்தோறும் ஒழுங்காக வெளிவருவது இன்றியமையாதது. புலவர் சின்னாண்டாரும், பேரா. சொக்கப்பனாரும் இசையில், பொறுப்பேற்று நடத்துக. அதனால் ஏற்பட்டுள்ள 500 உரூபாக் கடனை முதற்கண் தீர்க்கச் சொல்வரென்று நினைக்கின்றேன்.*

*இதழ் நடப்பின், மாதந்தொறும் செய்தியோ, கட்டுரையோ விடுப்பேன். அது நடவாமையாலேயே வலம்புரியில் வருகின்றது. உ.த.க. எல்லாக் கிளைகளும் வாங்குமாறு வற்புறுத்தவுஞ் செய்யலாம். த.ச.த. 5.10.72.*

## பட்டிமன்றம்

*தவத்திருக்குன்றக்குடி அடிகள் தலைமை தாங்க இசைந்து விட்டார்கள். பேரா.ஔவை சு.துரைசாமிப் பிள்ளையும் பர்.வ.சுப. மாணிக்கனாரும், தஞ்சைப் பெரும்புலவர் நீ கந்தசாமிப் பிள்ளையும் நடுவராக இசைந்துள்ளனர். பிறரும் பெரும்பாலும் இசைவர்.*

நீலகண்ட சாத்திரி, சட்டர்சி, தெ.பொ.மீ. ஆகிய மூவர்க்கும் அறைகூவல் விடுக்கப்பெறும். அப்பாத்துரையும் நானும் குமரிநாட்டுண்மை நாட்டுவோம். எதிரிகள் மறுக்க வேண்டும். அவர் வராவிடின் அவர் தோல்வியே. எங்ஙன மாயினும் முடிபொன்றேயாகும். அதன்பின் உலகமுழுதும் அதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

இல.க.இ 25.10.72

**உ.த.க. மாநாடு**

உ.த.க. மாநாட்டிற்கு மாவட்டத் தண்டற்பணம் இவ் விருநூறு நவம்பர் இறுதிக்குள்ளேயே பொருளாளர்க்கு அனுப்பிவிடவேண்டுமென்று ஆட்சிக்குழுக் கூட்டத்திற் சொன்னதுமன்றி, 'வலம்புரி'யிலும் நினைப்பூட்டு விடுக்கப் பட்டது. ஆயினும் திசம்பர் கரு வரை ஒருவரும் அனுப்பவில்லை. அதன்பின் தெ.ஆ.மா. நெய்வேலியிலிருந்து 50 உரூபாவும். நெல்லை மாவட்டத்திலிருந்து 130 உரூபாவும் மட்டும் வந்துள்ளன. மாநாட்டிற்கோ 1500 உருபாவிற்குக் குறையாது வேண்டும்.

உடனே பணம் வராவின் மாநாடு பணம் சேரும் வரை ஒத்திவைக்கப்படும். இதனால் இடர்ப்பாடும் ஓரளவு இழப்பும் உண்டாகும். இதைப் புலவர் முருகவேளிடமும் புலவர் இள முருகனாரிடமும் காட்டுக.

ஆடல். 19.12.72

**உ.த.க. மாற்றியமைத்தல்**

உ.த.க. விரைந்து மாற்றியமைக்கப்படவிருக்கின்றது. இது பற்றி வருகின்ற ஞாயிறு இங்கு ஒரு கூட்டங்கூடும். வேலூர்த் தலைமகனார் (Captain) அசரியா தலைவர்; பெருஞ்சித்திரனார் துணைத்தலைவர்; உள்நாட்டுச் செயலாளர் புலவர் இறைக் குருவனார்; வெளிநாட்டுச் செயலாளர் 'வல்லமை' ஆசிரியர்.

கா.இ.மு. 10.6.74

**செனெகல் தலைவர்**

மாநாட்டின் செனெகல் நாட்டுக் குடியரசுத் தவைவருடன் தொடர்பு கொள்ளப்படும். அவர் அண்மையில் கூட்டவிருக்கும்

*திரவிட மாநாட்டில் உ.த.க. கலந்து கொள்ள எல்லா முயற்சியும் செய்யப்படும். அவர் திரவிட மொழி நாகரிகப் பண்பாட்டா ராய்ச்சியில் அளவிறந்து ஈடுபட்டுள்ளார்.*

*கா.இ.மு. 10.6.74*

**செனெகல் தலைவர்**

*அடுத்த மாநாடு பற்றியும் , செனெகல் நாட்டுக்குடியரசுத் தலைவரோடு தொடர்பு பற்றியும், உசாவி முடிவு செய்ய 10.8.74 காரி காலை 10 என் இல்லத்தில் உ.த.க. ஆட்சிக்குழுக்கூட்டம் நடைபெறும். மாவட்ட அமைப்பாளரும் அழைக்கப்பட்டுள் ளனர். செயலாளர் அறிவிப்பு இதற்கு முன்பே புலவர் முருக வேட்கும் வந்திருக்கும்.*

*கா.இ.மு. 1.8.74*

**ஆட்சிக்குழு**

*10.8.'74 அன்று என் இல்லத்தில் ஆட்சிக் குழுக்கூட்டம் நடைபெற்றது.*

*அரசு என்னைத் தடுக்காதவரை நானே உ.த.க. தலைவனா யிருக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.*

*1975 'சனுவரி' முதற்கிழமை சென்னைப் பெரியார்திடலில் உலக முதன்மொழித் தீர்மானிப்பு மாநாடு நடத்துவதென்றும் அதற்கு ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளரும் 300 உரூபா தண்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டன.*

*மாநாடு ஒருநாள்தான் முற்பகல் முதலமைச்ருக்கும் அடிகட்கும் பாராட்டு; பிற்பகல் உ.த.க. மாநாடு, செனெகல் நாட்டுக் குடியரசுத் தலைவரோடு தொடர்பு கொள்ளுமாறு காட்டுப்பாடித் திரு. அசரியா க.மு. வெளிநாட்டுறவுச் செய லாளராக அமர்த்தப்பட்டுள்ளார்.*

*18.8.74 அன்று பாராட்டுக் குழுவும், மாநாட்டுக் குழுவும் அமைக்கப்பட்டன.*

*கா.இ.மு. 30.8.74*

## அரிசிவிலையும் மாநாடும்

அரிசிவிலை படி 7 உருபா ஆகிவிட்டதனால் இந்நிலையில் மாநாடு வேண்டாமென்பாரும் உளர்.

மாநாடு பிந்தப் பிந்தச் சிறப்பு மிகும்.

கா.இ.மு. 4.1.75.

## பொறுப்பாளர்

தலைமைப் பொதுக்குழுவை வெங்காலூரிலேயே கூட்டலாம். அடுத்த மாநாட்டையும் அங்கேயே நடத்தலாம். இயன்றவரை பணியாளரெல்லாம் ஆங்கிலப் பட்டந்தாங்கியராயிருப்பதே இக்காலத்திற்கேற்றது. ஆதலால், புலவர் கிழாரைச் செயலாளராக்கிவிட்டுத் தாங்களே அமைப்பாளராகுக. பேரா.இளவரசைத் தமிழ் மாநிலப் பொது அமைப்பாளராக அமர்த்தலாம். தெலுங்கு, கன்னடம், மலையாளம் மூன்றுந் தெரிந்த புலவர் ஒருவரே அம் மும்மொழிநாட்டுப் பொது அமைப்பாளராக இருப்பது நன்று. குடந்தைப் புலவர் கதிர் தமிழவாணனைப் பள்ளிகளிலும், பேராசிரியர் இளவரசையே கல்லூரிகளிலும் மாணவர் உ.த.க. கிளையமைப்பாளராக அமர்த்தலாம். மகளிர் கல்லூரிகளில் இப்பணிக்குப் பேரா. தாயம்மாள் அறவாணனை அமர்த்தலாம். பேரா.கோ. நிலவழகனாரை 'முதன்மொழி' ஆசிரியராக அமர்த்தலாம். தென்னிந்தியா முழுதும் உ.த.க. கிளைகளைத் தோற்றுவித்தல் வேண்டும்.

கு.பூ. 8.7.78

## பொறுப்பாளர்

காட்டுப்பாடி விரிவிலுள்ள தலைமகன் (cap) அசரியா எம்.ஏ., உ.த.க. வெளிநாட்டுறவுச் செயலாளராயிருக்க இசைந்துள்ளார். அவர் 1926இல் கிறித்தவக் கல்லூரியினின்று ஆங்கில முதுகலை தேறிப் பொற்பதக்கம் பெற்றவர்.

அடுத்த ஆண்டு வெங்காலூர் ஆங்கிலச் சார்புக்குழுப் (Commitee for English) புலவரான ஓய்வுபெற்ற இந்தியப் படைத் தலைவர் கரியப்பாவின் தலைமையிற் சென்னையில் அனைத்திந்திய இந்தியெதிர்ப்பு மாநாடு கூட்டக் கருதுகின்றேன். செயலாளர் Pro A.M. Dharmalingam M.A. I.L.m., 5 Wheelar Rd/ Bangalore - 5. Phone 577883. நானும் ஓர் உறுப்பினன்.

கு.பூ. 24.7.78

## மாநாடு

*நாலாண்டிற்குப் பின்னும் நாட்டுத் தலைநகரிலும் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டிய உ.த.க. மாநாடு மிகக் கேடாக நடைபெற்றது. ஐயாயிரவர் வரவேண்டிய மாநாட்டுக்கு ஐந்நூற்றுவரே வந்தனர். இருநாள் மாநாடு ஒருநாள் நிகழ்ச்சி யாயிற்று. ஊர்வலமில்லை. போதிய விளம்பரமில்லை. நாடு முழுதும் அறிவிப்புமில்லை.*

*கு.பூ. 9.8.78*

## பொருளாளர்

*திரு. செந்தமிழ்க்கிழாரே என்றும் பொருளாளராய் இருத்தல் வேண்டும்.*

*கு.பூ. 9.8.78*

## இணைவிடுமுறை

*நான் உடனடியாக வெங்காலூர் வரவியலாது. வேலை மிகுதி. நான் வருங்கால இருநாள் தொடர்ந்து விடுமுறையாய் இருத்தல் வேண்டும்.*

*அகுத்தோபர் 1,2; 10, 11; 24, 15; 29, 30 இணைவிடுமுறை நாட்கள்.*

*நவம்பர் : 11, 12; திசம்பர் : 9, 10, 24, 25உம் இணை விடுமுறை நாட்களே. திசம்பர் 9, 10 எனக்கு ஏற்கும். மாநாட்டில் எனக்குப் போர்த்திய போர்வைக்கு நன்றி. அது இன்று மிகப் பயன் படுகின்றது.*

*கு.பூ. 21.9.78*

## பணந்தண்டல்

*இன்று இங்கு முதுவேனில் தொடங்கிவிட்டது. காலைக்குப் பின் கதிரவன் மறையும் வரை கடுவெப்பம். அடுத்த மீ 20 ஆம் பக்கல் சும்மா இருக்கின்ற திறமும் அரிது. அந்நிலையில் கூட்டத்தை எங்ஙன் நடத்துவதென்று தெரியவில்லை. ஆதலால் மறைமலையடிகள் நூல் நிலையத்தில் வைத்துக் கொள்வதே நல்லது. அங்ஙனமே அழைப்பிதழில் தெரிவித்துவிடலாம்.*

வெங்காலூரிலும் நடத்தலாம். ஆயின் நான் வரமுடியாது. அதனால் ஒரு கேடுமில்லை. நானின்றியும் கூட்டத்தை நடத்த லாம். இரண்டில் எது சிறந்ததென்று எண்ணிச் செய்க.

இற்றை நிலையில் உ.த.க.விற்கு நன்கொடை தண்டல் வாயிலாகத்தான் பணஞ்சேர்க்க முடியும். தண்டபாணி தேசிகரும், தியாகராச பாடகரும், நகைச்சுவை நடிகர் கிருட்டிணனும் போன்றோர் இன்றில்லை, இசையரங்கு நிகழ்த்திப் பணந்தண்டித் தர, எனினும் ஈராண்டு கழித்து நிலைமை திருந்துமென நினைக்கிறேன்.

*கு.பூ. 20.4.79*

## அமர்த்தம்

உ.த.க. நன்னடப்பும் வளர்ச்சியும் நோக்கி, வெங்காலூர்ப் பேரா. பூங்காவனம், க.மு. தலைமைச் செயலராக அமர்த்தப் பெற்றுள்ளார்.

*கா.இ.மு. 25.4.79*

## செயற்குழு

உ.த.க. தலைமைக் கழகச் சிறப்புச் செயற்குழுக்கூட்டம் பின்கண்டவாறு நடைபெறவுள்ளன. உ.த.கழகத்தின் முடுக்க மான செயல்பாட்டிற்கு வழிவகுக்கும் இக்கூட்டத்திற்குத் தாங்கள் தங்கள் செலவிலேயே தவறாது வந்து கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

இடம் : மொழிநூல் மூதறிஞர் பாவாணர்அவர்களின் இல்லம் எசு.பி. 57, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 78.

நாள் : தி.பி. 2 010 விடை 6 (20.5.79) காலை 10 மணி.

பொருள் :

1. பல்துறைப் பொறுப்பாளர் அமர்த்தம்
2. உ.த.க. கிளைகளைப் புதுப்பித்தல். புதுக்கிளைகளைத் தோற்றுவித்தல்.
3. உ.த.க. பொருள்வருவாய்க்கு வழிவகை காணல்
4. உ.த.க. மேற்கொள்ளவேண்டிய பணிகள்
5. முதன்மொழி இதழை உயிர்ப்பித்தல்
6. தலைவரின் ஒப்புதல் பெறும் பிற.

26.4.79

## செயற்குழு

*செ.சொ. அகரமுதலி அலுவலகத்திலும் கூட்டத்தை நடத்தலாம். விடுமுறை நாளில் நடத்துவது குற்றமாகாது. ஆயினும் மறைமலையடிகள் நூல் நிலையத்தில் நடத்துவதில் சில ஏந்துகளுண்டு. திரு.வ. சுப்பையா பிள்ளையையும் நூலகரையும் கூட்டிக் கொள்ளலாம். அண்மையில் உண்டிச் சாலைகளும், வண்டி நிலையங்களும் உள்ளன.*

*இவ்வாட்டை உ.த.க. மாநாட்டை ஆண்டிறுதியில் வெங்காலூரிலேயே நடத்த ஏற்பாடு செய்துகொள்க.*

*அடுத்த ஆண்டு நெல்லையிலாவது நாகர்கோவிலிலாவது நடத்த முயற்சி செய்யலாம்.*

*கு.பூ. 1.5.79*

## பொறுப்பாசிரியர்

*தலைமைச் செயலாளர் தமிழ்நாட்டிற் பணியாற்றுபவராகத்தான் இருத்தல் வேண்டும்.*

*தலைமைச் செயலாளர் ஆங்கிலப் பட்டந்தாங்கியாய் இருத்தல் வேண்டும்.*

*இவ்வாண்டிற்குள் தக்கார் ஒருவரைத் தலைமைச் செயலாளராக அமர்த்தி விடலாம்.*

*மாவட்ட அமைப்பாளர் மாநாட்டுக்குப் பணந்தண்டிக் கொடுத்தாற் போதும். அதே அவர்க்கு அரிதாயிருக்கின்றது. அரசிடம் ஏராளமாய்ப் பணமிருக்கின்றது. முதல்வர் மனம் வைத்தால் இலக்கக் கணக்காய் ஒதுக்கலாம். இன்று எம் அகரமுதலித் துறைக்கே ஒரு பெருந்தொகை ஒதுக்கவேண்டியுள்ளது. அக்குறை தீர்ந்தபின் அவரை அடுக்கலாம்.*

*கு.பூ. 2.5.79*

## மாநாடு

*அடுத்த மாநாடு சற்றுப் பிந்தி நடப்பினும் தமிழ்நாடு முழுவதும் அதிற் கலந்துகொள்வதும் உலகத் தமிழர் அனைவரும் அதனொடு தொடர்பு கொள்வதும் இன்றியமையாததாம்.*

*கு.பூ. 5.7.79*

## எதிர்ப்பு

*முதன்மொழி விரைந்து வெளிவரல் வேண்டும். அது வரும்வரை நாற்பக்க இதழொன்று நடத்துவது தக்கதே. மதுரை மாநாட்டுக்கு வர இயலும். உ.த.க. உறுப்பிரெல்லாம் வந்து தமிழுக்கு மாறான கட்டுரைகளையும் முடிபுகளையும் எதிர்க்கவேண்டும் என்பதையும், மாநாடு நடைபெற வேண்டிய முறையையும் அங்கு அடிப்படையாகச் செயல்படவேண்டிய முடிபுகளையும் அதில் தெரிவிக்கலாம். அதன் அடக்கச் செலவைக் கட்டணமாகப் பெற்றுக் கொள்ளலாம். மதுரை மாநாட்டு வரவேற்புக் குழுவில் என்னைச் சேர்ந்திருக்கின்றனர். ஆதலால் அங்குச் செல்ல நேரும். நீங்களும் வேறு சிலரும் அங்கு வருவது நன்றே. அதற்கு அணியமாகுக.*

*கு.பூ. 17.8.79*

## திருத்தல்

*அடுத்த மாநாட்டைத் திராவிட மாநிலக் கிளைகளையும் சேர்த்துத் திருநெல்வேலி - பாளையங்கோட்டையிலே சிறப்பாக நடத்தி அங்குள்ள ஆரிய-அடிமைகளைத் திருத்தல் வேண்டும். இருபத்தையாயிரவர்க்குக் குறையாத ஒரு மா பேரூர் வலமும் இசைகூத்துகளுடன் நடத்திக் காட்டல் வேண்டும்.*

*கு.பூ. 24.7.80*

# 6. அமைப்புகளும் நிகழ்ச்சிகளும்

மறைமலையடிகள் நூல் நிலையம்,
105. இலிங்கிச் செட்டித் தெரு,
சென்னை - 2.
14, சுறவம், 1998

அன்பீர்,

*வணக்கம்.*

## 1. அமைப்பு

*காப்பாளர், தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், பொது உறுப்பினர். அனைவரும் தனித்தமிழ்ப் பற்றினராயும், தனித்தமிழிற்பேச முயல்பவராயுமிருத்தல் வேண்டும். பிறமொழிகளிற்பேசவும் எழுதவும் நேரும்போது அங்ஙனம் செய்யலாம். தமிழிற் பேசும் போதும் எழுதும்போதும் பிறமொழிச்சொல் கலத்தல் கூடாது.*

*மாதக் கட்டணம் அல்லது ஆண்டுக் கட்டணம் ஒரு தொகை ஏற்படுத்திக் கொள்ளலாம்.*

## 2. குறிக்கோள்

*தனித்தமிழை வளர்த்தல், திருமணமும் ஏனையிருவகைச் சடங்குகளும் தனித்தமிழில் நடத்தலாம் இயன்றவரை நடப் பித்தலும்.*

## 3. நடப்புமுறை

*மறைமலையடிகள் நூல்களையும் பிறர் எழுதிய தனித் தமிழ் நூல்களையும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தி னின்று (1/140, பிராடுவே,சென்னை -1) வங்கி ஒரு தனித்தமிழ் நூல் நிலையம் அமைத்துக் கொள்ளுதல் அந்நூல்களை ஒழுங்காய்ப் படித்தலும்.*

*ஆண்டுதோறும் தனித்தமிழ்ச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்துவிழா நடத்துதல். நூல் நிலையத்திற்கும் கழக அலுவற்கும் சொந்தமாகவேனும் வாடகைக்கேனும் ஒரு கட்டிடம் அமைதல்.*

## 4.இணைப்பு

*பிற இடங்களிலுள்ள தனித்தமிழ்க் கழகங்களோ டிணைத்துத் தமிழ்நாடு முழுதும் ஒரே தனித்தமிழ்க் கழகம் இயங்கச்செய்தல்.*

*புலவர் சேந்தமாங்குடியார் (42-அ,5-ஆம் குறுக்குச்சாலை, பரமசிவபுரம், திருத்தவத்துறை (இலால்குடி) திருச்சி மாவட்டம் ஏற்கெனவே முசிறி வட்டத்தில் ஒரு தனித்தமிழ்க் கழகம் தோற்றுவித்துள்ளார். அவருடன் தொடர்பு கொள்க.*

## 5. சிறப்புத் தொண்டு

*தனிப்பட்டவர் நன்கொடையாகவேனும் பலரிடம் தண்டி யேனும் தனித்தமிழுக்கு ஆக்கந்தரும் ஒரு புதுநூல் வெளி யிடப்பொருளுதவுதல்.*

*இனி அடிக்கடி என்னால் எழுதிக் கொண்டிருக்க முடியாது. 'தமிழ் வரலாறு' என்ற நூல் அடுத்த மாத நடுவில் வெளிவரும். சை. சி.நூ.ப.க.விற்கு எழுதி வாங்கிக் கொள்க.*

*த.ப.செ.*

### வள்ளுவர் விழா

*போடிநாயக்கனூரில் இருந்து நாளும் வேளையும் பற்றிய செய்தி வந்தது. வருகின்ற ஞாயிறு (8.2.70) காலை 9 மணிக்கு என் சொற்பொழிவு. வெள்ளியிரவே வில்லிபுரத்தில் திருவனந்தபுரம் விரைவான் ஏறி மறுநாட்காரி வைகறை திண்டுக்கல்லில் 5.40 மணிக்கு வந்து சேரவேண்டுமென்றும், அங்கிருந்து போடிக்கு இன்னியங்கியில் ஏற்றிச் செல்வதாகவும் செயலாளர் எழுதி யிருக்கின்றார். நான் இரவில் வழிச் செல்ல முடியாதென்றும் எனக்குத் தூக்கமும் கெடாகூடாதென்றும், வெள்ளி திருச்சி சென்று அசோகாவுண்டிச் சாலையில் தங்கிவிட்டு மறுநாள் வைகறை பாண்டியன் விரைவான் ஏறி 6.15 மணிக்குத் திண்டுக்கல் வந்து சேர்வேனென்றும் அவ்வண்டிக்கே காத்திருக்க வேண்டு மென்றும் எழுதிவிட்டேன். ஆதலால் வருகின்ற வெள்ளி நண்பகல் இங்கு அரசினர் பேரியங்கியேறி வழக்கம்போல் மாலை 6 மணிக்கு வந்து சேர்வேன். அன்பு கூர்ந்து காத்திருக்க. மறுநாள் வைகறை எழ வேண்டியிருப்பதால் செல்காலில் அசோகாவுண்டிச் சாலையில் தங்கியிருப்பதே தக்கது. அன்று மதுரையிலிருந்து திரும்பினபோது திரு. பரமசிவம் அமர்த்தி*

*யிருந்த 3 உரூபா ஒற்றைப் படுக்கையறை, கீழ்நிலையில் ஊணகம் செல்லும் நடையில் வலப்பக்கம் முதலிலுள்ளது, எனக்கு மிக ஏந்தாக விருக்கும்.*

*அன்று திரு.முத்துக்கிருட்டிணன் தம்பியொடு மாநாட்டுக்கு வந்து இரு படுக்கையறையில் தங்கியிருந்தபோது. நும்மால் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டவருள் அலுவல் பெறாத ஒரு புலவருமிருந்தார். அவர் என்னொடு போடி வந்து திரும்பின் மிகத் துணையாயிருக்கும். அவருக்குப் போகவரச் செலவு முற்றும் நானே ஏற்றுக் கொள்வேன். சொற்பொழிவிற்கு 100 உரூபாவும் வழிச் செலவிற்கு 100 உருபாவும் பெற்றிருக்கின்றேன்.*

*ஞாயிறு சொற்பொழிவு முடிந்ததும் திரும்பிவிடுவேன். திரும்புகாலில் (ஞாயிறு இரவு) ஊரகத்தில் தங்கலாம். பிற நேரில்.*

*ந.பி. 4.2.70*

**வள்ளுவர் விழா**

*வருகின்ற ஞாயிறு (8.2.70) காலை போடிநாயக்கனூர்த் திருவள்ளுவர் ஈராயிர ஆட்டை விழாவில் ஒரு சொற்பொழி வாற்ற இருக்கின்றேன்.*

*நாளைநின்று வெள்ளி இங்கு அரசினர் பேரியங்கி யேறி அன்று மாலை 6 மணிக்குத் திருச்சி வந்து சேர்வேன். அசோகாவுண்டிச் சாலையில் தங்க ஏற்பாடு செய்யுமாறு தி.ந.பிச்சுமணியார்க்கு எழுதியிருக்கின்றேன்.*

*தொண்டுக் குறிப்பு கொண்டு வருவேன். மறுநாட் காரி வைகறை பாண்டியன் விரைவான் ஏறித் திண்டுக்கல் செல்வேன்.*

*ஞாயிறன்றே திரும்பிவிடுவேன். திரும்புகாலில் ஊரகம் ஓரிராத் தங்க விரும்புகின்றேன்.*

*இல.க.இர. 4.2.70*

**திரு.வி.க. படிமை நிறுவல்**

*வருகின்ற ஞாயிறு (2.12.73) திருவாரூரில் திரு.வி.க. படிமை நிறுவல் விழாவென்று புலவர் சரவணத் தமிழனாரிடமிருந்து கடிதம் வந்துவிட்டது. வருகின்ற வெள்ளி அல்லது காரி தி.பா.புலியூர் செல்வேன்.*

*கா.இ.மு. 27.11.73*

### மேல்

*வேலை மிகுதி. எழுநாளும் வேலை செய்தால்தான் முதலாண்டு வேலை முடியும்.*

*காரி யிரவு விரைவுப் பேரியங்கியில் வந்து ஞாயிறிரவு விரைவுப் பேரியங்கியில் திரும்பவேண்டும்.*

*நெடுந்தொலைவு. பனிக்காலம். இரவிற் கண்ணொளி குன்றும். வழித்துணை இன்றியமையாதது. அங்கிருந்து ஒருவர் இருமுறை வந்து செல்வதினும் இங்கிருந்து ஒருவர் என்னுடன் வந்து திரும்புவதுமேல்.*

*மு.வ.ப. 30.12.74*

### திரும்புதல்

*26.1.75 காலை திருமணக்கரணம் முடிந்தவுடன் நண்பகற்கு முன்னரே விரைவுத் தொடர்வண்டியிலோ, விரைவுப் பேரியங்கியிலோ திரும்பவேண்டும். அதற்கு ஏற்கெனவே பதிவு செய்துவிடவேண்டும்.*

*இங்கு நள்ளிரவு வந்து சேரினும் நன்றே நிலையத்திலிருந்து* (Taxi) *யமர்த்திக்கொண்டு வீடுவந்து சேரலாம். திருடர் அச்சம் இருப்பதால் இரவே வீடு வந்து சேரல் வேண்டும். பனிக்காலமாதலால் ஏவலன் வெளித்தாழ்வாரத்திற் படுக்க வியலாது.*

*இற்றைப் பனி என்னைச் சற்றுத் தாக்கியுள்ளது. ஆதலால் ஈரிரவு அடுத்தடுத்து இராவழிப்போக்கு ஏற்காது. வீட்டை விட்டுத் தனித்து வெளிறேவும் வழிப்போக்கிற்குச் சீட்டு வாங்கவும் எனக்குப் பகலிலும் போதிய கண்ணொளியில்லை.*

*மு.வ.ப. 31-12-74,*

### தமிழரசு

*மதுரையில் 5 ஆம் உலகத்தமிழ் மாநாடு நடைபெறுகிறது.* Tiruualluvar's Tamil Usage(*திருவள்ளுவர் தமிழ் வழக்காறு*) *என்னும் தலைப்புப் பற்றி ஒரு கட்டுரை படிக்குமாறு என்னைக் கேட்டிருக்கின்றனர். இசைந்துள்ளேன். கட்டுரை செல்லும். நான் கலந்து கொள்வது உறுதியன்று. கடிதம் ஆங்கிலத்திலேயே அடையாற்றிலிருந்து வந்துள்ளது.*

*தமிழுக்கு ஏற்ற அரசு இன்னும் தோன்றவில்லை. தோன்றியவுடன் நீங்கள் இங்கு எளிதாய் வந்துவிடலாம். எனக்கு அதிகாரம் ஏற்படினும் பயன்படுத்திக் கொள்வேன்.*

*கு.பூ. 13.8.79*

**உலகத் தமிழ் மாநாடு**

*மாநாட்டுக்குத் தமிழ்ப் பற்றாளர் திரளாக வருக. மாநாட்டை நடத்தும் உரிமையைத் தமிழ்நாட்டு முதலமைச்சரே பெறத் தீர்மானம் நிறைவேற்றவேண்டும்.*

*அடுத்த மாநாடு செனகல் மாநாட்டில் நடத்தவும் செய்யவேண்டும். அதில் தமிழே உலக முதன்மொழி என்பதை ஆங்கில நூல் வாயிலாக நாட்டுவேன். அதற்கு இம்மாநாட்டி லேயே* A Chalenge to Western Orients to *என்னும் அறைகூவல் விடுக்க இருக்கின்றேன்.*

*பா.த.க. 20.11.80*

**உலகம் ஒன்றாதல்**

*நான் மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினருள் ஒருவன், குழுத்தலைவர் முதலமைச்சரே. பொதுவகையில், குமரிநாடே தமிழன் பிறந்தகம் என்னும் கட்டுரை மாநாட்டு மலர்க்கு விடுத்திருக்கின்றேன். வேறு கட்டுரை ஒன்றும் படிக்கவில்லை.*

*ஆயின்,* An Evitone of the Lemurian Lanugage and its Ranifications *என்னும் ஆங்கிலக் கட்டுரை 10 படிகள் தட்டச்சடிப்பித்து முதல்வர்க்கும் முதன்மையான வெளிநாட்டறிஞர்க்கும் வழங்கப் படும். அதன் இறுதியில் மாநாடு நடத்தும் உரிமையை வையாபுரிக் குழுவிலிருந்து தமிழ்நாட்டரசு கைப்பற்ற வேண்டுமென்றும் அடுத்த மாநாடு செனகல் நாட்டில் நடைபெற வேண்டு மென்றும் அதிலே தமிழே உலக முதல் உயர்தனிச் செம்மொழி என்பது நாட்டப்படவேண்டும் என்றும் உள்ளது. இதற்காகவே இறுதி நாளில் கிளர்ச்சி செய்ய உண்மைத் தமிழர் திரண்டுவர வேண்டும். இனிமேல் தமிழ்நாட்டுப் பிரிவினை இயல்வதன்று. போரை ஒழித்து ஒற்றுமையும் அமைதியும் நல்வாழ்வும் நிலை நாட்ட உலகம் ஒன்றாதல் வேண்டும். ஒன்றிய நாட்டினங்கள்* (U.N.) *என்னும் ஒன்றாத நாட்டினங்கள் மாறி உலகப் பொது நாயகம் என்னும் ஒரே பொது ஆட்சி தோன்றவேண்டும். தமிழ் எல்லா மொழிகட்கும் அடிப்படை ஆதலால் உலகப் பொது*

மொழியாதல் வேண்டும். தமிழ்நாடு பிரிந்தால் தமிழ்நாட்டிற் குள்தான் தமிழிருக்கும். சிறை செல்லும்போதே மன்னிப்புக் கேட்கும் இருபதின்மரைக் கொண்டு தமிழ்நாட்டு விடுதலை பெறுவதும் குதிரைக்கொம்பே.

ஆங்கிலக் கட்டுரையை மாநாட்டில் வழங்கப்பல படிகள் வேண்டும். 25.12.80இற்கு மேல் நெய்வேலி அன்பருள் பொறுப்பு வாய்ந்தவர் எனரேனும் இங்குவரின் ஒருபடி தருவேன். அதை நெய்வேலியிற் படியெடுக்கலாம். அச்சிற்கு நாளில்லை.

ஆங்கில நூல் சற்றுப் பிந்திவரும். பிந்தப் பிந்தச் சிறப்பு மிகும். இதுவே தமிழ்ப் பாதுகாப்பு இறுதிநூல். பா.த.கு. 12.12.80

## உலகத் தமிழ் மாநாடு

தமிழ்நாட்டிற்குத் தமிழ் மறவருள் இயன்றவரெல்லாம் வருவது தமிழுக்குப் பேறாகும். ஆங்கில நூல் வெளிவரின் உண்மையில் தமிழாரியப் போராட்ட மாநாடகவே மாறிவிடும். ஆரிய ஏமாற்றை அடியோடழித்துத் தமிழை அரியணை ஏற்றிவிடலாம்.

கு.பூ.

## சொற்பொழிவு

நான் 31.1.81 மாலை 8 மணிபோல் இங்குப் புறப்படும் 2ஆம் சிறப்பு விரைவுத் தொடர்வண்டியேறி மறுநாள் (4.1.81) காலை மதுரைச் சந்திப்பு நிலையம் வந்து சேர்வேன்.

அன்பு கூர்ந்து அங்குக் காத்திருக்க.

5.1.81 பிற்பகல் 2 மணிக்கு ‘மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்’ என்னும் பொருள்பற்றி மாநாட்டிற் சொற்பொழி வாற்றுவேன்.

பிற நேரில்.

இரா.இ. 27.12.80

## மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்

5.1.81 பிற்பகல் 2 மணிக்கு மாநாட்டில் ‘மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்’ என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்று கின்றேன். இயல்பவர் எல்லாரும் வருக.

அ.வா.வெ.செ. 29.12.80

## உலகத் தமிழ் மாநாடு

*நான் மாநாட்டு வரவேற்புக்குழு உறுப்பினனாதலால் 4-10 மதுரையில் தங்கி 11.1.81 சென்னை திரும்புவேன். குழுத்தலைவர் முதலமைச்சரே.*

*5.1.81 பிற்பகல் 2 மணிக்கு 'மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்' என்னும் தலைப்பில் மாநாட்டில் சொற்பொழிவாற்று மாறு மாநாட்டுப் பொதுக்கூட்டக் குழுத்தலைவரும் வேளாண்மைத் துறை அமைச்சருமான திரு. காளிமுத்து விருப்பப்படி இசைந்துள்ளேன். நண்பருடன் வருக.*

*கு.பூ. 31.12.80*

# 7. நூலார்வமும் நூலாக்கமும்

### தம்நூல்கள்

*தாங்கள் குறித்துள்ள ஆறுநூல்களுள் ஒப்பியன் மொழி நூல் தமிழர் திருமணம் ஆகிய இரண்டும் என் சொந்த வெளியீடு. இவை இன்று கிடையா. ஏனை நான்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு. அவற்றுள் கட்டுரை வரைவியல் ஒன்றே தங்கள் நண்பர்க்குப் பயன்படும். இயற்றமிழ் இலக்கணம் பல்லாண்டிற்கு முன் 6-ஆம் படிவம் பாடப் பொத்தகமாயிருந்தது. சுட்டுவிளக்கம், முதற்றாய் மொழியுள் அடக்கம். செந்தமிழ்க் காஞ்சி இந்திபெயதிர்ப்புப் பாடல்*

*தமிழ் வரலாறும், தமிழ் நாகரிகமும் இந்தியெதிர்ப்புப் பற்றியன. இன்று தேவாரம் தியாகராசர் கீர்த்தனை திரைப்படப் பாடல் முதலிய இனிய மெட்டுக்களில் 210 பாட்டுக்கள் கட்டி வைத்திருக்கின்றேன். இப்பாடற்றிரட்டே இசைத்தமிழ்க் கலம்பகம்.*

பெரு. 3.4.64

### முரணுரை

"*அறத்தாறிதுவென... ஊர்ந்தானிடை*" என்னுங் குறட்டுப் பழையதும் புதியதுமாக இருமுரண்பட்ட உரையுண்டு.

### பழையவுரை :

*அறத்தின்பால் இதுவென்று உரையளவையால், அதாவது நூல்வாயிலாய், சொல்லவேண்டுவதில்லை. பல்லக்குச்சுமப் பானும் ஏறிச்செல்வானும் ஆகிய இருவரின் காட்சியளவையே காட்டும். முற்பிறப்பில் அறஞ்செய்தவன் செல்வதும் செய்யா தவன் வறியனும் ஆவர்.*

**புத்துரை :**

*பல்லக்குச் சுமப்பானையும் ஏறிச் செல்வானையும் காட்டி இதுவே அறவழியென்று சொல்லவேண்டாம். அரசாள்வாரின் தவற்றினாலும் முதலாளியின் கொடுமையினலும் இத்தகைய நிலைமை நேரும்.*

*இப்புத்துரையே பேரா.இலக்குவாணர் போன்றாரின் கருத்து. ஆயின் ஊழ் என்னும் அதிகாரத்தையும் அறனவலி யுறுத்தல் 6ஆம் குறளையும் "இலர்பல ராகிய காரணம் நோற்பார். சிலர்பலர் நேலாதவர்" என்னுங் குறளையும் வேறு சிலவற்றையும் நடுநிலையாய் நோக்கி ஆசிரியர் கருத்தை உணரின், முன்னதே அவர் கருதியது எனக்கொள்ளக் கிடக் கின்றது. பழைய வுரைகளெல்லாம் இதுவே.*

*பெரு. 13.6.64*

**உரையில் ஆழ்தல்**

*சென்ற வெள்ளிக்கிழமை மாலை சென்னைக் கிண்டிப் பொறியியல் கல்லூரியிற் சொற்பொழிவாற்றச் சென்று மீண்டேன்.*

*தி.த.ம. உரையெச்சம் எழுதுவதில் ஆழ்ந்து ஈட்டுள்ளேன்.*

*19 மீனம் 2000 மா.இரா.*

**சிறந்த படைக்கலம்**

*திருக்குறள் தமிழ் மரபுரை நல்லமுறையில் எழுதப்பட்டு வருகின்றது. பாதி முடிந்துவிட்டது. இது வெளிவந்தபின் தனித்தமிழர்க்கு ஒரு சிறந்த படைக்கலமாகும்.*

*28 கும்பம் 2000 மா.இரா.*

**வ.சு. உதவி**

*திரு. வ. சுப்பையாப்பிள்ளை இன்று வெளியீட்டு முயற்சி யிலும் மெய்ப்புத் திருத்த வேலையிலும் உதவ முன் வந்திருக்கின்றார். என் திருக்குறள் தமிழ் மரபுரை மொத்தம் 50 படிவங்கொண்டது. இறுதிப் பத்துப்படிவங்களையும் திருத்த அவரே முழுப்பொறுப்பும் ஏற்றுக்கொண்டார். அவருதவியின் றேல் இன்னும் ஒரு கிழமைக்குள் உரை வெளிவர முடியாது. 10*

*படிவம்பட மேற்பட்டுவிட்டமையால் விலையும் 15 உரூபா வாக்கப்பட்டிருக்கிறது. மாநாட்டில் விற்பனைக்குக் கிடைக்கும்.*

*28 நளி 2000 கா.இ.மு.*

**நூல் வாங்கும் திட்டம்**

The Oxford English Dictionary *என்னும் ஆங்கிலப் பேரக முதலி வாங்க விருக்கின்றேன். விலை 500 உரூபா. கழிவு தள்ளி 400 உரூபாவிற்கு வாங்க முடியும். 14 மடலம் கொண்டது. இன்னும் ஒரு மாதத்திற்குள் வாங்கிவிடுவேன்.*

*அடுத்த ஆண்டு ஆங்கிலக் கலைக்களஞ்சியமும்* (Encyclopaedia Britanica) *வாங்கிவிடுவேன்.*

*28 நளி 2000 கா.இ.மு.*

**கொண்டு வருக**

*வடமொழி வரலாறு குறிப்புப் படியை என்னைக்கேளாது கொண்டு வந்துவிட்டீர். அதனால் முன்பு குறிந்தவற்றைப் பார்க்கவும் புதிதாய்க் குறிப்புகளைச் சேர்க்கவும் முடியவில்லை. அதை அன்றிரவு பார்க்கக் கொடுத்தேனேயன்றி உமக்குச் சொந்தமாகத் தரவில்லை. ஆதலால் உடனே அதைக் கொண்டு வருக.*

*மா.இரா. 19.9.70*

**கொங்குதேசராசாக்கள்**

*'கொங்கு தேச ராஜாக்கள்' என்னும் பொத்தகம் விலைக்குக் கிடையவிடின் இரவலாக வேனும் ஒருபடி வாங்கி த் திரு. நித்தலின்பனார்க்கு அனுப்பிவைக்க. இம்மாதமும் அடுத்த மாதமும் செந்தமிழ்ச் செல்வியில் வெளிவரும் என கட்டுரை களைப் பார்க்க.*

*கா.இ.மு. 9.5.70*

**மக்கள் பெயர் அகரவரிகை**

*மக்கள் பெயர் அகரவரிசை, முதல் இந்தி எதிர்ப்புக் காலத்தில் தொகுக்கப்பட்டது. அதன்படியொன்று அனுப்பி வைக்க. ஒழிவு நேரத்திலும் வழிப்போக்கு வேளையிலும் திருத்தியும் விரிவாக்கியும் திரும்புகின்றேன்.*

*18 சுறவம் 2001 கா.இ.மு.*

**தங்கல்**

*திருக்குறள் தமிழ் மரபுரை இங்கு அசசாவதால் உடனுடன் மெய்ப்புத் திருத்தி விடுக்க இன்னொரு தமிழன்பர் இல்லடத்தில் தங்கிறிருக்கின்றேன்.*

*(திரு.. இரா. முத்துக்கிருட்டிணனார் , 67, நாட்டு வைப்பகம்* (State Bank) *குடியிருப்பு, மேலைத்தாம்பரம், சென்னை - 45)*

*இல.க.இர. 10.9.69*

**மொழியாராய்ச்சி**

*மொழி முந்தியதும் தெளிவானதும் ஆதலால் மொழிநூன் முறைப்பட்ட சொல்லாராய்ச்சி முடிவுகளை எவரும் மறுக்க முடியாது. மொழியராய்ச்சி, கருத்தெழுத்து விளக்கம் முறைப் பட்ட மொழியாராய்ச்சி முடிவை மாற்றமுடியாது. அதனால் தான் இத்துறையில் இறங்கினேன்.* A guide to western Tamilslogists *என்ற பொத்தகம் நடுநிலையாளர் கண்ணையெல்லாம் திறக்கும்.*

*இல.க.இர. 5.6.70*

**மரபுரை**

*கண்ணொளி தவிர மற்ற வகையில் முழுதும்*

*திருக்குறள் தமிழ் மரபுரை இன்னும் 400 குறள்கட்கு எழுதியாகவேண்டும். இம்மாதத்திற்குள் பெரும்பாலும் முடிந்து விடும். அதன்பின்தான் வலக்கண் அறுவை.*

*2 விடை 2000 நா.செ.*

**எருதந்துறை அகரமுதலி**

*திரு. வ. சுப்பையாப்பிள்ளை வாயிலாக எருதந்துறைப் ப.க.க. அச்சகத்தார்க்குக்* (Oxford University Press) *கொடுத்திருந்த ஏவப்படி எருதந்துறை ஆங்கிலப் பேரகரமுதலி (13 மடலம்) வந்து விட்டதாம். கழிவுதள்ளி விலை 1240 உருபா. இரு கிழமைக்குள் வாங்காவிடின் வேறொருவர்க்குப் போய்விடுமாம். ஆகையால், அத்தொகையை உடனே காசோலையாகத் தாமரைத் திரு. வ. சுப்பையாப் பிள்ளை, 6, பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை - 1 என்ற முகவரிக்குப் பதிவஞ்சலில் விடுத்துவிட்டு எனக்கும் தெரிவித்துவிடுக.*

*12 அலவன் 2001 நா.செ.*

## தமிழர் மதம்

*என் செல்வநிலை திருந்தும் வரை என் நூல்களை யெல்லாம் நானே வெளியிடுதல் நன்று.*

*'தமிழர் மதம்' என்னும் நூலை அடிகள் வெளியிட முன்வந்தது மகிழ்ச்சிக்குரிய செய்திதான். ஆயின் அதில் பல இடர்பாடுண்டு. நான், சிறுதெய்வ வணக்கம். இருபெருமதம், கடவுள் நெறி ஆகிய முத்திறக் கொள்கைகளையும் நடு நிலையாய் உள்ளதை உள்ளவாறே விளக்குவேன். திருமாலியத் திற்கில்லாத சில சிறப்புக்கள் சிவனியத்திற்குண்டு. ஆயினும், சிவநெறியையே மேற்கொண்ட அடிகள் மடவளாகம். திருமால் நெறியையும் விளக்கும் நூலை வெளியிடுவது சிவநெறிச் செல்வரின் கண்டனத்திற்கிடமாகும். மேலும், உருவ வணக்க மில்லாத கடவுள் நெறியே தலைசிறந்ததென்று கூறுவதும், இற்றைச் சிவநெறிக்கேற்காது. அதனால் நடுநிலையும் கடவுள் நம்பிக்கையும் உள்ள தமிழன்பர் உதவிகொண்டே அந்நூலை வெளியிட முடியும். அடிகள் ஏற்கெனவே என் மதுரை மணி விழக்குழுவிற்கு ஆயிரம் உரூபா அளித்துவிட்டனர். இனி அவர்களை அடுத்தல் கூடாது. சேயோன் (முருகன்) வணக்கம் ஆரியர் வருமுன்னே குமரிநாட்டில் தோன்றிவிட்டது. பனி மலையடுத்த கங்கையாற்று நாணற் (சரவணப்) பொய்கையில் முருகன் தோன்றினான் என்னும் ஆரியக்கட்டுக்கதையான கந்த புராணத்தை மறுப்பதும் இற்றைச் சிவநெறியாளர்க்கு வெறுப்பாகும். இத்தகைய இடர்ப்பாடான நிலைகள் பலவுள. 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தே ஆரியம். 'சிவபோற்றி' என்பதே உண்மையான தமிழர் திருவைந்தெழுத்து. ஆகையால் இற்றை நிலையில் தமிழர் மதத்தை வெளியிடமுடியாது. தமிழர் வரலாறு, தொல்காப்பிய விளக்கம், திருக்குறள் தமிழ்மரபுரை, வடமொழி வரலாறு ஆகிய நூல்கள் எல்லாம் வெளிவந்த பின்தான் மதநூலை வெளியிடமுடியும்.*

*14 நளி 1997 நா.செ.*

## தம் நூல்கள்

*தமிழர் வரலாறு இம்மாத இறுதிக்குள் எழுதிமுடியும். அடுத்த மீ அச்சுத் தொடங்கலாம். திசம்பர் இறுதி உ.த.க. மாநாட்டிற்குள் அச்சிட்டுத் தர இயலுமா? கோப்பாளரும்,*

*கட்டடகரும் தேர்ச்சி பெற்றவரா? நல்ல வெண்டாள் அங்குக் கிடைக்குமா?*

*தமிழர் மதம் மீ எழுதிய முடியும். பொங்கற் சமையம் அச்சு வேலையை முடித்து விற்பனைக்குத் தர இயலுமெனின் அதன் அச்சீட்டையும் மேற்கொள்ளலாம். அதுவும் 20 படிவமே.*

*மன்றம் அடிகளின் பெயர் தாங்குவதால் பிழையொன்று மில்லாதிருத்தல் வேண்டும். அச்சுவேலைதான் முற்றும் குறித்த காலத்திற்குள் முடிதல் வேண்டும். கட்டடம் நூறு நூறாகச் செய்து கொள்ளலாம். இவற்றிற்கிசையின் அடுத்த மீ எனக்குத் தெரிந்தவர் ஒருவர் வருக.*

*கா.இ.மு. 9.9.71*

**உடனே வாங்குக**

*ஒற்றுமை அலுவலகத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலி* (Lexicon) *ஒரு தொகுதி 100 உருபாவிற்குக் கிடைக்குமாம். உடனே ஆளனுப்பி வாங்கி விடுக.*

*25, 11. 71; 29.11.71 வ.சு.*

**தமிழர் வரலாறு**

*ஆய்வாளர்க்கும் புலவர்க்கும் தமிழ்ப்பற்றாளர்க்கும் தெரியவேண்டிய பல செய்திகள் தெளிநிலைக் காண்டத்தில் விரும். இந்நூல் விரைந்து விலையாகும். இன்றே இரண் டொருவர் கேட்கின்றனர்.*

*தமிழர் மதம் ஆரியக்கூறுகள் எல்லாம் நீங்கிவரும். எ-டு. 'சிவாய நம' தமிழன்று. 'சிவபோற்றி' என்பதே திருவைந் தெழுத்து. எழுத்தின் தொகை 30. திருமந்திரத்தில் (2698) சொல்லப்பட்ட 50 அன்று. மெய்ப்பொருள் 26;36 அல்ல.*

*கா.இ.மு. 6.1.72*

**தமிழ் வழிபாடு**

*தமிழ் - ஆரியப் போரட்டத்தின் ஒரு கூறான கோவில் தமிழ்வழிபாட்டுக் கிளர்ச்சி பற்றிய வழக்கைத் தீர்க்க, மீயுயர் மன்றத்திற்கு அதிகாரமில்லை. ஆயினும் அஃது இருப்பதுபோல் தோன்றுவது, தமிழர் மத வரலாறு பற்றிய நூலின்மையாலேயே, ஆதலால், தமிழர் மதம் விரைந்து வெளிவரல் வேண்டும்.*

*கா.இ.மு. 29.5.72*

## தமிழ்நாட்டு விடுதலை

*பெரியாரும் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கையைப் பரப்பி வருவதாகத் தெரிகின்றது. நாளடைவிற் கிளர்ச்சி வலுக்கத்தான் செய்யும். ஆயின் கொல்குறும்பும் உட்பகையும் மிக்கியிருப்பதால் கீழ்வங்கம்போல் எளிதாய்விடுதலை பெற்று விட முடியாது ஆகவே போரட்ட மறவர்க்குத் துணையாய்ப் பல்வகை வரலாற்று நூலும் அணியமாயிருத்தல் வேண்டும்.*

*கா.இ.மு. 29.5.72*

## முந்நூல் வெளியீடு

*தமிழிலக்கிய வரலாறு, தொல்காப்பிய விளக்கம்* A Guide *ஆகிய மூன்றும் வெளிவந்த பின்னரே என் வெளிப்படைப் போராட்டம் தொடங்கும்.*

*கா.இ.மு. 5.8.72*

## நூல் வாங்குக.

*தாங்கள் குறித்துள்ள* Rardon House Dictionary *என்னும் அமெரிக்கப் பதிப்பு ஆங்கில அகரமுதலியை உடனே வாங்கி விடுக.*

*வ.சு. 6.10.72*

## நூல் வாங்குக.

*மன்பதை வரலாறு* (History of Mankind) *3அம் 5 ஆம் மடலங்கள் வந்துவிட்டனவா? வினவி வாங்குக. வ.சு. 3.12.72*

## நூல்கள் உடனே வேண்டும்

*கீழைத் திருப்பொத்தகத் தொடர் ஏன் இன்றுங் கிடைக்கவில்லை. 1967 இல் வெளிவந்த* The Nigantu and the Nirukta *என்ற பொத்தகத்திலேயே ஐம்பான் பொத்தகங்களையும் பற்றி விளம்பரஞ் செய்திருக்கின்றரே. என்ன மறுமொழி வந்தது. அப்பொத்தகங்கள் வாராமையால் என் வேலை மிகத் தடைப் படுகின்றது. மீண்டும் நினைவூட்டுவிக்க. நீண்ட காலஞ்செல்லு மாயின் இன்று அணியமாய் இருப்பவற்றை உடனேயும்*

*பிறவற்றைப் பிந்தியும் விடுக்கச் சொல்க. நீண்ட காலமென்றது மும்மாதத்திற்கு மேற்பட்டதை.*

வ.சு. 7.11.73

**நூல்கள் வேண்டும்**

*காக்கை பாடினியம் இன்றும் வெளிரவில்லையா?* The Gazetteer of India 2 *ஆம் மடலம் உடனே வாங்கி வைக்க. என்னைக் கேளாதே வாங்கியிருக்கலாம்.*

வ.சு. 11.4.74.

**மறுபதிப்புக்குத் திருத்தம்**

*திருக்குறள் தமிழ் மரபுரை ஓரிரு படிகள் எஞ்சியிருப்பின் விற்காது நிறுத்தி வைக்க. என்னிடமிருந்தவையெல்லாம் தீர்ந்து விட்டன. மறுபதிப்பிற்குத் திருத்தஞ் செய்யக்கூட ஒருபடியு மில்லை.*

*கா.இ.மு. 4.1.75.*

**ஊக்கவேலையும் பணந்தண்டலும்**

*மாநாட்டிற்கு ஊக்கமாக வேலைசெய்யக்கூடியவரும் பணந்தண்டும் ஆற்றருள்ளவருமான செயலாளர் இங்கொருவருமில்லை. பேரா நிலவழகனார் தான் இயன்றவரை தண்டி வருகின்றார்.*

*கா.இ.மு. 4.1. 76.*

**செலவுக்குறைவும் சிறப்புக்குறைவும்**

*நும் இந்திய வைப்பகக்காசோலை (மூவாயிரம் உருபா) மேழம் 2 அன்றே கிடைத்தது. நன்றி.*

*மண்ணில்விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை நல்ல முறையில் விரைந்துவெளி வரும். காட்டுப்பாபாடியினின்றும் என்மகன் மணிவந்தான். இன்று தாள்விலை மிக ஏறியிருப்பதால் மேலும் ஓராயிரம் வேண்டியிருக்குமென்றான். செலவைக் குறைக்குமாறு சிறப்பைக் குறைப்பது நன்றன்று. பொத்தகம் நன்றாய் விலையாகுமென்று எதிர்பார்க்கின்றேன். அச்சும் கட்டடமும் ஆனவுடன் 500 படிகள் நெய்வேலிக்கு அனுப்பப் பெறும்.*

*ஆ.க. 17.4.76.*

## சிக்கனம்

*மண்ணில் விண்ணிற்குத் துணிக்கட்டடம் உட்பட ஆறாயிரம் உருபா ஆகிவிட்டது. தமிழிலக்கிய வரலாற்றிற்குச் சிங்கைத் தமிழன்பர் திரு.வெ.கோ. கிருட்டிணனார் அளித்த ஐயாயிரத்தில் மூவாயிரம் எடுக்கப்பட்டுள்ளது.*

*ஆயிரம் படிகள் படியொன்று 12 உருபா. மாநாடு அண்மையில் (ஜூலை 2 ஞாயிறு) இருப்பதால் தேவையான படியினை மாநாட்டுக் கட்டடத்தில் (பெரியார் திடலில்) வாங்கிக் கொள்ளலாம். ஆதலால் தொடர்வண்டிச் சிப்ப விடுக்கைச் செலவு வீணென்று கருதி விடுக்கவில்லை.*

*அ.வா.வெ.செ. 22.6.78*

## காப்புநூல்

*தமிழிலக்கிய வரலாறு ஒரு சிறந்த காப்புநூல். அச்சில் இருக்கின்றது. அடுத்த மாதம் வெளிவரும்.*

*வள்ளுவர் கூட்டுடமையினும் விரிவானது. ஆயின் அதே விலை தான் (12 உருபா). உங்கள் பெயருக்கு நூறுபடிகள் விடுக்கப்படும். இயன்ற விரைவில் விற்றுத் தருக. குறைந்த சம்பளக்காரராயின் 10 உருபாவிற்குக் கொடுக்கலாம்.*

*அதன்பின்* The lemurian language and its ramification *என்ற நூல் ஈராண்டிற்குள் வெளிவரும். அகர முதலில் முன் அதுவே இறுதிப் போராட்ட நூல். 1982 இல் தமிழ் வட மொழிப் பிணிப்பிலிருந்து விடுதலைபெறுவது திண்ணம்.*

*அடுத்த செல்வியில் தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள் கட்டுரை தொடக்கம். புலவர்க்கும் உறுப்பினர்க்கும் அழைப்பிதழ் கல்லச்சு (சுழல்முள்ளச்சு) இட்டது போதும்.*

கு.பூ. 20.4.79

## விற்பனை

*தமிழிலக்கிய வரலாறு இம்மாத இறுதியில் வெளிவரும். உண்மையும் பற்று முள்ள தொண்டரைத் தமிழர் இல்லந் தோறும் போக்கியேனும் விரைந்து விற்பனை செய்தல் வேண்டும். அதன்விலைப் பணமே ஆங்கில நூலுக்கு முதலீடாகும்.*

*த.இ. வரலாறு ஏறத்தாழ 400 பக்கம் வரலாம். விலை 12 உருபா என்றே குறிக்கப்பட்டுள்ளது.*

*அகரமுதலி முடிய இன்னும் பத்தாண்டு செல்லும்.*

*1982 இல் தமிழாரியப் போராட்டம் வெற்றியாய் முடிதல் வேண்டும்.*

கு.பூ. 5.57.79.

**தமிழிலக்கிய வரலாறு**

*தமிழாரியப் போராட்ட இறுதித் தமிழ்ப்படைக் கலமாகிய தமிழிலக்கிய வரலாறு இம்மாத இறுதிக்குள் வெளிவந்துவிடும். இப்பொத்தகவிற்பனைப் பணத்தைக் கொண்டுதான் உலக முழுதும் பரவும் இறுதி ஆங்கிலப் படைக்கலமாகிய நூலை வெளியிடவேண்டும்.*

அ.வா.வெ.செ. 25.7.79.

**மராட்டி அகரமுதலி**

*இம்மாத இறுதியில் திரு. செயவேலைக்கண்டு மராட்டி ஆங்கில அகரமுதலியை 400 உருபாவிற்குத் தரமுடியுமா என்று கேட்க. இசையின் இம்மாதச் சம்பளத்தில் வாங்கிவிடலாம்.*

*இனிமேல் அலுவலகத்தில் தட்டச்சாகும் எல்லா ஆங்கிலக் கடிதங்ளையும் பார்த்துப் பிழை திருத்துக.*

இரா. ம.

**நூல்வேண்டும்**

*சப்தமணி தர்ப்பணம்.*
*ப.க.க.வில் கிடைப்பின் வாங்கிவிடுக.*
*$12^{1/2}$ உருபாதானே. உடனே கொடுத்தனுப்புகின்றேன்.*
*லீலா திலகம் மூலமும் வேண்டும்.*
*திரு.வ.சு.விற்குத் தெரிவிக்க.*

இரா.ம.

**உடனே தேவை**

*சடுத்தம்* (Urgent)

*கன்னிமாரா நூல்நிலையத்திலிருந்து முந்தியெடுத்த நூல் உடனடியாகத் தேவை. என் பெயரில் எடுக்க முடியாவிடின் உங்கள் பெயரில் எடுத்து விடுக்க.*

*இம்மாதச் செல்விக்கட்டுரைக்கு அதில் ஒரு குறிப்பைப் பார்க்க வேண்டும். வருகின்ற திங்கட்கிழமை திருப்பிவிடலாம்.*

இரா.ம. 25.4.80

**வெளிவரும் நூல்கள்**

*அடுத்த ஆண்டு* The Lemurian Lsnguage and it ramification Eraucation of the Hindi Imperiaism *என்னும் ஈராங்கிலப் பொத்தகங்கள் வெளிவரும். முன்னது உலகமுழுதும் பரவும்.*

*1981இல் தமிழ் திராவிடத்திற்குத்தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலகமுதல் உயர்தனிச் செம்மொழி என்பது நாட்டப்பட்டுவிடும்.*

கு.பூ. 2.8.79

**நெருக்கடி நிலை**

*சிங்கைச் செந்தமிழ்ப் புரவலர் திரு.வெ. கோபால கிருட்டிணனார் தமிழிலக்கியவரலாறு வெளியீட்டிற்கு ஐயாயிரம் உருபா.1974 இல் வழங்கினார். அச்சுவேலை தொடங்கி 65 பக்கம் நடந்தபின் இந்திரகாந்தியாரின் நெருக்கடி நிலைமை தடுத்துவிட்டது. மூவாண்டு கழித்து மீண்டும் தொடங்கியபோது முன் வாங்கினதான் மங்கிப் போனதினாலும் தாள்விலை யேற்றத்தினாலும் மூவாயிரம் உருபா கைவிட்டுச் செலவழிக்க நேர்ந்து விட்டது.*

அ.வா.வெ.செ. 13.8.79.

**பின்னே**

*ஆங்கில நூல்வெளிவந்த பின்னரே, என்பேச்சை நாடாப் பதி வானிலும் இசைத்தட்டிலும் பதிவுசெய்து கொள்ளலாம்.*

கு.பூ. 9.10.79

**திரு.லி.எசு.**

*தொடர்வண்டியில் பணிமக்கள் கட்டுகளைத் தொப்புத் திப்பென்று முரட்டுத் தனமாய்ப் போடுவரை என்மகன் நேரிற் பார்த்திருப்பதனால் பொத்தகப் பாதுகாப்பு நோக்கித் தி.வி.எசு. வாயிலாக விடுத்திருக்கின்றான். ஏனையிடங்கட்கும் அவ் வாயிலாகவே விடுக்கப்பட்டுள்ளன. அ.வா.வெ.செ.*

22.10.79

**அணுகுண்டு**

*ஆங்கில நூல் 2 ஆம் உலகப்போரை ஒழித்து அணுக் குண்டைப்போல் பிராமணியத்தை அடியோடு ஒழிப்பது. ஆதலால் தமிழன் அச்சகத்தில்தான் அச்சிடமுடியும்.*

ச.கு; பா.த.கு. 20.11.80

## 8. அச்சீடும் மெய்ப்பும் பார்த்தலும்

*பாரி அச்சகத்தார் (திரு. நாராயணன் செட்டியார்) நல்ல தமிழன்பராயிருப்பதனாலும் பிழையில்லாமல் அச்சிட்டு வருவதனாலும் வடமொழி வரலாறும் அவர் அச்சகத்திலேயே அச்சிடப்பெறும்.*

24 சிலை 1997. நா.செ.

### மெய்ப்பு அனுப்புதல்

*ஒவ்வொரு படிவத்திலும் இறுதிமெய்ப்பு (முடிவு மெய்ப்பு) நான் பார்த்து வருகின்றேன். நேற்று 8 ஆம் 9 ஆம் படிவங்கள் வந்திருக்கவேண்டும். ஆயின் 9 ஆம் படிவம் தான்வந்தது. ஆதலால், அதைத்திருத்த முடியவில்லை. உடனே 8 ஆம் படிவத்தை அனுப்புமாறு எழுதியிருக்கின்றேன். வேலையை ஒழுங்காய்ச் செய்யாததோடு இங்ஙனமுந்தவறு செய்து காலத்தைக் கடத்துகின்றனர். உடனே பாரி அச்சகம் சென்று 8 ஆம் படிவம் அனுப்பப்பட்டுவிட்டதா என்று வினவி அனுப்பப்படாவிடின் அனுப்பச்சொல்க.*

28 கும்பம் 2000 மா.இரா.

### வினவியறிந்த எழுதுக

*பாரி அச்சகம் ஒருமாதமாக ஒருவேலையும் செய்யவில்லை. உ.த.க. விரிவு வேலையும், என் தமிழ் வளர்ச்சித் திட்டமும் குடும்ப வாழ்வுநிலையும் இவ்வாண்டு இதனாற் கெடும்போல் தோன்றுகின்றது. உடனே சென்று என்ன செய்தியென்று வினவியறிந் தெழுதுக.*

20 மேழம் 2000 மா.இரா.

### மெய்ப்புத்திருத்தல்

*முதற்படிவத்தை மட்டும் அடிக்குமுன் அனுப்புக. திருத்திக் குற்றங்களை எடுத்துக் காட்டுவேன். அம்முறைகளையே பின்னவற்றிலும் பின்பற்றலாம்.*

தாள் வீணாகாவாறு மெய்ப்புக்களையும் முதன் மூவடிப்புக்களையும் மலிவான மென்றாளிலேயே எடுக்க.

கா.இ.மு. 29.10. 71

**அச்சடுக்குதல்**

ஒரேசமயத்தில் முப்படிவம் அச்சிலிருத்தல் வேண்டும். ஒன்று அடுக்கப்படவும், ஒன்று திருத்தப்படவும், ஒன்று அடிக்கப்படவும் வேண்டும். என் நூலை அடுக்குபவர்க்குப் புலமையில்லாவிடினும் இலக்கணவறிவு சிறிதேனும் வேண்டும்.

ப.கு.மு. 3.11.71.

**அச்சுப்பணி**

என் நூலை அடுக்குபவர்க்குச் சிறிது தமிழறிவும் வேண்டும், தமிழஞர் ஒருவர் முழுநேரமுமிருந்து கவனித்தல் வேண்டும்.

அடுக்காளர் ஐவர் இருந்தால்தான் வேலை நடக்கும் .ஒருவன் துண்டறிவிப்பு; ஒருவன் சிறுசுவடி; மூவர் பெருநூல். ஒருபடிவம் அடுக்கவும் ஒருபடிவம் திருத்தவும் ஒருபடிவம் அடிக்கவும் படவேண்டும்.

கா.இ.மு. 4.11.71

**நூற்கட்டடவினை**

கட்டட வினையிற் குத்தித்தைக்காது கோத்துத் தைக்கச் சொல்க.

கா.இ.மு. 29.5.72

**சேர்த்தலும் செருகலும்**

சென்ற காரிவிடுத்த மூலப்பகுதியில், பாலைத்தெய்வம் என்னும் பகுதியிறுதியில் “காளிகோயிற் பூசகன் உவச்சன் எனப்பட்டான்” என்பதைச் சேர்த்துக் கொள்க.

சிவமதம் என்னும் தலைப்பின்கீழ் ‘இருக்கை’ என்னும் சிறு தலைப்புச்செய்தியில் ‘வெள்ளிமலையும்’ என்பதற்குமுன்’ மலைகளுட் சிறந்த பனிமலைக் கொடுமுடியாகிய’ என்னுந் தொடரைச் செருகிக் கொள்க.

ஆடல் 5.7.72

## அச்சீடு

*தமிழர் மதம் அச்சிடுவது அரியவேலைதான். ஆயின், தமிழ்நலம் நோக்கித் தொண்டாகச் செய்தல் வேண்டும்.*

கா.இ.மு. 2.8.72

## நினைவு

*ஒரு கைம்மாறு மின்றி நான் நான்றாய்த் திருத்தித் தருகிறேன், என்று திரு.வ.சு.பிள்ளை சொன்னது நினைவுக்கு வருகின்றது.*

கா.இ.மு. 2.11.72

## திருத்தம்

*தி.வி.எசு. கடத்தச்சாத்தும் பின்னிணைப்புப் படிகளும் வந்தன. பின்னிணைப்பு இறுதியில் "இருக்கத்தால்" என்பது 'இழுக்கத்தால்' என்றிருத்தல் வேண்டும். அதை மட்டும் எல்லாப் படிகளிலும் கையெழுத்தால் திருத்திவிடுக.*

ஆடல். 19.12.72

## சிப்ப நிலையும் – அச்சீடும்

*சிறுசிறு கட்டுகளாகக் கட்டிச்சேர்க்காதும், ஒரு பெருங் கட்டாயும் கட்டாதும் மாங்காயும் தேங்காயும்போல் அனுப்பிவிட்டார். உள்ளிருந்த அட்டைப் பொதிவு பெட்டியாக இல்லாது துண்டு துண்டாயிருந்தது. சாய்ந்தும் சரிந்தும் வந்தகட்டின் கோணித்துணியைப் பிரித்தவுடன் அட்டைத் துண்டுகள் பிரிந்துபோயின. பொத்தகங்கள் ஒருங்கே சரிந்து விழுந்தன. பலவற்றில் தாள் மடங்கிற்று. சிலவற்றில் தாள் கிழிந்தது.*

*முதற்கண் விடுத்த ஐம்படிகளிற் போல் பளிச்சென்று சட்டை கண்ணிற்குக் குளிர்ச்சியாகவும் கவர்ச்சியாகவும் இராது. சாயம்போன துணிபோல் மங்கலாக அழகின்றி உள்ளது. பலபடிகளில் முன்புறம் விடுதாள்* (fly - leaf) *இல்லை. சில படிகளில் 3 ஆம் பின்னிணைப்பு அரும்பொருள் அட்டவணையின்பின் ஒட்டப்பட்டுள்ளது.*

கா.இ.மு. 26.12.72

**அச்சகம்**

*இன்று நான் வாங்கியிருப்பது தென்மொழி அச்சுப் பொறிபோன்றது. அகர முதலி அச்சிடமுடியாது. பிற நூல்கள்தான் அச்சிடமுடியும். அதற்கும் வீட்டுக்காரர் இசைவு தாராமையால் உரிமுறி (Licence) வாங்க இயலவில்லை. அதனால் வேறு வீடு பார்த்துக்கொண்டிருக்கின்றோம். கிடைத்துச் சென்றபின் தான் எழுத்து முதலியன வாங்கி வேலை தொடங்கவேண்டும். இன்றிருப்பன அச்சுப் பொறியும் வெட்டுப்பொறியும்தான்.*

*அகரமுதலி நானே திருத்தி ஒரு பிழையுமின்றி வெளிவர உருளைப்பொறி சொந்தமாக இருப்பின் நன்றாம்.*

கா.இ.மு. 15.7.73

**அச்செழுத்து**

*அச்சகத்திற்கு எழுத்து வாங்க வேண்டியுள்ளது. என் பொத்தகக் கணக்கில் ஏதேனும்பணம் சேர்ந்திருப்பின் அன்பு கூர்ந்து உடனே அனுப்பிவைக்க.*

*முப்பது ரூபா வாடகைக்கு ஓர் அறை கிடைத்துள்ளது.*

கா.இ.மு. 30.8.73

**அடுக்காளர் அமர்த்தம்**

*அச்சகத்திற்கு அரசினர் இசைவு வந்துவிட்டது. 4.2.74 திறப்பு விழாவும் நடந்துவிட்டது. ஆயினும் போதிய அளவு எழுத்துக்கள் வாங்கிய பின்னரே அடுக்காளனை அமர்த்த விருக்கின்றோம்.*

கா.இ.மு. 7.2.74

**அச்சீடு**

*சிங்கைப் புரவலர் 1974இல் கொடுத்த 5000 உருபாவிற்கு மேற்கொண்டும் 3000 செலவாகிவிட்டது. முன்பு வாங்கிய தாள் மங்கிவிட்டது. இன்று தாள்விலை ஏறிவிட்டது. பணியாளர் கூலியும் உயர்ந்துவிட்டது.*

கு.ப. 21.8.79

## அச்சுத்தடை

அகரமுதலி அச்சிற்கு அணியமாயுள்ளது. ஆயின் அச்சீட்டுச் செலவை அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளாமையால் தடைப்பட்டுள்ளது. தேர்தலுக்குப்பின் நிலைமை திருந்தலாம்.

அ.வா.வெ.செ. 8.4.80

## அச்சீடு

என் வாழ்க்கைக் குறிக்கோளை நிறைவேற்றுவதும், மேலையறிஞரின் ஆரிய மயக்கமறுப்பதும், தமிழை மீண்டும் அரியணையேற்றுவதும் அகர முதலியல்லாத என் தனி நூல் களுள் இணையற்றதுமான The Lemurian Language and iits ramification என்னும் ஆங்கில நூல் (500 பக்கம்) அச்சேறவிருக் கிறது.

ஆ.மு. 10.11.80

# 9. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிப்பணி

## சொற்பிறப்பியல் அகர முதலிப் பொதுக்குழு

*செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டிற்கு நாடு முழுதும் தழுவிய ஒரு பொதுக்குழு அமைந்துள்து. பு.பு பட்டியாரிடம் முழுப் பொறுப்பையும் விட்டிருந்தால் மிக நன்றாயிருந்திருக்குமென்று நினைக்கிறேன்.*

*பு.பு. பட்டியார் பதின்மார் சென்ற மீ (மே) கோவை மாவட்ட ஊர்தொறும் தாங்கள் முன்பு திருச்சியிற் சென்றது போற் சென்று ஐம்பதினாயிரம் உருபா தொகுப்பதென்று ஒரு பூட்கை கொண்டிருந்தனர். இன்று அவர் ஊக்கம் குன்றி அம்முயற்சியைக் கைவிட்டுவிட்டனர். இதுதான் பொறாமை யால் ஏற்பட்ட பொதுக் குழுவமைப்பின் விளைவு.*

1.ஆடவை 2001. நா.செ.

## முதன்மொழி

*முதன்மொழி இதழ்ப் பெயர்கள் பின்வருமாறு முந்தா நாளே பேராசிரியர்க்கு எழுதியனுப்பிவிட்டேன்.*

*க.சுடர்-கதிர்* (ray)

*உ.கதிர்-மணி* (grain)

*ங.ஆரம்-முத்து*

*ச.செப்பு-அருங்கலம் (அணிகலம்)*

*ரு.குலை-கனி*

மி.மு.சி. 24.10.70

## சொற்பட்டி

*சென்ற கிழமை முழுதும் என் மூளைக்கு வேலை கொடுப்பதுபற்றி மிக அச்சமாயிருந்தது. இக்கிழமை அது பெரும்பாலும் நீங்கியுள்ளது. அடுத்த கிழமை முற்றும் சரியாய்ப் போம்.*

முச்சொற்பட்டி இன்று பேராசிரியர்க்குப் பதிவஞ்சலில் அனுப்பப் பெறும். இதுவரை எழுதப்பெறாத சிறந்த முறையில் எழுதவேண்டியிருப்பதால் அம்முறையை எண்ணியமைக்கக் காலந்தாழ்த்தது. சொற்பட்டியைப் பார்த்தமட்டில், இது, வேறெவராலும் எழுதப்படமுடியாதென்ற எண்ணம் அமைச் சர்க்குத் தானே தோன்ற வேண்டும்.

மி.மு.சி. 24.10.70

**நாட்டுப்புறச் சொல்**

அகரமுதலித் தொகுப்பும் தொடங்கிவிட்டேன். சொற் றொகுப்பு நாட்டுப் புறச் செலவைப் பிந்திவைத்துக் கொள்ளலாம். அதற்கு மும்மாதம் வேண்டிய தில்லை. ஒரு மாதமே போதும். சென்னை அகர முதலியில் இல்லாத சொற்கள் ஏற்கனவே ஆயிரக்கணக்கில் தொகுத்து வைத்திருக்கின்றேன். ஒவ்வொரு உருப்படியையும் தங்கட்கு விடுத்தது போல் தனித் தனியாகவே எழுதவிருக்கின்றேன். ஆகவே பிந்திக் கிடைக்கும் சொற்களையும் ஆங்காங்கு உரிய இடத்திற் செருகிக்கொள்ள லாம்.

தி.வை.சொ. 7.11.70

**பரிசுப்பணம்**

தமிழ்ப்பற்றில்லாத அல்லது தமிழ்ப்பகைவனான ஒருவன், பலர் எனக்குப் பணவுதவி செய்வதாகவும் அரசுதவி தேவையில்லையென்றும் சொன்னதாகத் தெரிகின்றது. காலும் அரையுமாக ஏழை மக்கள் எனக்குக் கொடுக்கும் பணம் பனி பெய்வதும் சிறு தூறலும் போன்றது.

அரசு தமிழைக் காக்கவும் வளர்க்கவும் கடமைப் பட்டுள்ளது. பரிசுச்சீட்டுப் பணம் குன்றுபோற் குவிக்கின்றது. அகர முதலிக்கு ஓரிலக்கம் ஒதுக்குவது மிகமிக எளிது.

தி.வை.சொ. 12.11.70

**கொந்துச் சிறப்புச்சொல்**

செ.சொ.பி.பே.அ. வேலை தொடங்கி விட்டேன். பு.பு. பட்டிக்கொந்தில் மட்டும் வழங்கும் சிறப்புத் தமிழ்ச் சொற்களைப் பொருளுடன் எழுதிவிடுக்க. ஓராண்டிற்குள் விடுத்தாற்போதும்.

கா.இ.மு. 18.3.71

**ஈரிலக்கம்**

*திருவாரூரில் நான் முதலமைச்சரைக் கண்டு பேச வில்லை. மேடையில் அரைமணிநேரம் சொற்பொழிவாற் றினேன். அதன்பின் முதலமைச்சர் உரை நிகழ்த்தும் போது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு ஈரிலக்கம் ஒதுக்குவதாகச் சொன்னார். அது என்று எவ்வழி எவ்வாறு என்பது இன்னும் தெரியவில்லை.*

வ.சு. 3.1. 74.

**அகரமுதலி**

*ஆங்கிலப் பேரகர முதலிக்கு 70 ஆண்டும், சென்னைப் பல்கலைக்கழக அகர முதலிக்கு 23 ஆண்டும் சென்றன. நம் அகரமுதலி பத்தாண்டுள் முடிந்து விடும். மூவாண்டு கடந்து விட்டன.*

கா.இ.மு. 22.1.74.

**அகரமுதலி**

*அகரமுதலி அரைக்கலைக்களஞ்சிய முறையில் விரிவாக வருகின்றது. இலக்கியச் சொற்களைத் தொகுக்கவும் படி யெடுக்கவும் துணைவர் இருவர் வேண்டும். நானே இவ் வேலைகளைச் செய்யின் காலங்கடப்பதோடு என்கையும் விழுந்துவிடும்.*

*முதன்மடலம் முதற்பகுதி வெளியிடவும் பன்னீராயிரம் உருபா வேண்டும். பணமனுப்பும் உறுப்பினர் தொகை 160-லிருந்து வரவரக்குறைந்து இன்று நாற்பதாகி உள்ளது. ஆகவே அரசின் உதவி இன்றியமையாதது. இதை முதலமைச்சர்க்கு நேரில் விளக்குவேன்.*

கா.இ.மு, 22.1.74.

**முதல்வர் உரை**

*2.12.73 திருவாரூரில் முதலமைச்சர் அகரமுதலிக்கு ஈரிலக்கம் ஒதுக்குவதாகச் சொன்னது இன்னும் சொல்லளவாகவே உள்ளது. இதுபற்றி அவரைக் கண்டு பேச ஒரு நாட்குறிக்குமாறு புலவர் கோவை இளஞ்சேரனைக் கேட்டிருக்கின்றோம். இன்னும் நாள் வாய்க்கவில்லை.*

கா.இ.மு. 22.1.74

**இயக்குநர்**

*இறைவனருளால் நான் தமிழ்நாடு அரசால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக (Director) 1500 உருபாச் சம்பளத்தில் நாலாண்டிற்கு அமர்த்தப் பட்டுள்ளேன். நேற்றே வேலை ஒப்புக்கொண்டேன். இடம் இன்னும் ஒதுக்கவில்லை. ஆதலால் ஒதுக்கும்வரை மறைமலை யடிகள் நூல்நிலைய மேல்மாடியிலேயே தங்கிப் பணிசெய்வேன்.*

*நாளை மாலை காட்டுப்பாடி சென்று திங்கட்கிழமை திரும்புவேன். அதன்பின் எந்நாளும் எவ்வேளையும் என்னை இங்குப் பார்க்கலாம்.*

சு.பொ. 9.5.74.

**நற்காலம்**

*நான் இறைவனை நம்பியிருந்தவாறே, மிகப்பிந்தியேனும் தமிழுக்கு நற்காலம் கிட்டிற்று. இது முற்றும் தவத்திக்குன்றக் குடியடிகளின் தனிப்பெருமுயற்சியின் விளைவாகும்.*

*அகரமுதலிப் பணிக்கு இன்னும் தனியிடம் அமைய வில்லை. பாடப்பொத்தக நிறுவன அலுவலகத்தில் ஒரு சிற்றறை மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் படியெடுப்பார் இருந்து பணி செய்து வருகின்றார். நான் மறைமலையடிகள் நூல் நிலைய வள்ளலார் திருவருள் மண்டபத்தில் தங்கிப் பணி செய்து வருகின்றேன். வீடு இன்னும் ஒரு மாதத்திற்குள் (அல்லது ஒரு கிழமைக்குள் ) கிடைத்துவிடும்.*

மு.வ.ப. 28.5.74

**தலைசிறந்ததொண்டு**

*அருந்தமிழன்பரீர்,*

17.8.74

*நலம். நலமாக.*

*செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித்திட்டம் தி.மு.க. அரசு இதுவரை செய்துள்ள தமிழ்த் தொண்டுகளுள் தலைசிறந்தது. அது திரு. அருட்செல்வனார் ஆட்சியை நிலைப்படுத்துவது மட்டுமன்றி, நாளடைவில் தமிழ்நாடு முழுவிடுதலையடையவும் வழிகோலும். ஆதலால் தன்னே ரில்லாத தமிழின் அருமை பெருமைகளை உலகறிய வழிவகுத்த*

அருட்செல்வானாார்க்கும் அடிகட்கும் எத்துணைப் பெருஞ் செலவிற் பாராட்டெடுப்பினும் மிகையாகாது.

நான் விரும்பியவாறே திரவிடச் சொற்றொகுக்கவும், தமிழிலக்கியச் சொற்றொகுக்கவும் தலைசிறந்த உதவிப் பணி யாளர் இருவர் அமைந்ததும் பெருமகிழ்ச்சிக்குரிய செய்தி யாகும்.

ஆயினும், இத்திட்டத்தையேற்படுத்தி நான்குமாதமாகியும் இன்னும் அலுவலகத்திற்கு இடம் ஒதுக்காமையும் மேற்குறித்த இருவரையும் அமர்த்தாமையும் மிக வருந்தத்தக்க செய்தியாம்.

மேலும், இத்திட்டத்தைச் சட்ட சபையில் உறுதிப்படுத்திய பின்னரே, என்னையும் கீழ் நிலைப்பணியாளரையும் அமர்த்தி யிருத்தல் வேண்டும். அது செய்யாமையால் இன்னும் எனக்கும் பிறர்க்கும் சம்பளம் வரவில்லை.

மாதந்தொறும் உண்டிக்கு 150 உருபாவும், வீட்டு வாடகைக்கு 65 உருபாவும் செலவாகின்றது.

தென்மொழித் திட்ட உறுப்பினர் இருநூற்றுவருள் அறுபதின்மர் முதலாண்டே விலகிவிட்டனர். நாலாம் ஆண்டில் முப்பதின்மர் பணம் விடுத்துவந்தனர். அரசு இத்திட்டத்தை ஏற்றபின், அம்முப்பதின்மருள்ளும் பதினைவர் நின்றுவிட்டனர். கடன்வாங்கிச் செலவு செய்யும் நிலைமையையும் நீடித்தல் அரிது.

இன்று நடைபெறும் சட்டசவைக் கூட்டத்தில், இட ஒதுக்கம், இருவர் அமர்த்தம், சம்பளக் கொடுபேற்பாடு, எனக்கு இயங்கி உதவல் ஆகிய நான்கும் முடிபு செய்யப்பெறுமென்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

சம்பளக்கொடுப்பேற்பாடு செய்யப்பெறினும் அடுத்த மாத இறுதியில்தான் அது கிடைக்கும்.

நான் கேட்ட தொகைவிடுப்பின் நான்வரத்தடையில்லை.

திரு. செல்லத்துரை, 5 மாதங்கட்கு முன்னமே எனக்குத் குருபற்பொடிச்சிமிழ் வாங்கி வைத்திருந்ததாக எழுதியிருந்தார். அவர்தரின் அவற்றையும் வாங்கி வைக்க. இடையில் இங் குறினும் அவற்றைக் கொணர்க. மொழிப்பற்றும் இனப்பற்றும் ஒருங்கமைந்த தலைவர் (பொதுமேலாளர்) அமைந்திருப்பது பெருமகிழ்ச்சிச் செய்தி.

ந.பி.

### சொற்றொகுப்பாளர்

*தக்கார் வேறொருவரும் வராமையால், தமிழ்ச்சொற் றொகுப்பாளர் இடம் இன்றும் வெறுமையாயுள்ளது.*

*நுங்கட்கு விருப்பமாயின் நுங்கள் பெயரையும் திறமையையும் பதவியையும் குறித்து, கல்லூரித் துணைப் பேராசிரியர் சம்பளப் புதுத்திட்டத்தை நுங்கட்களிக்குமாறு தலைமை யமைச்சரை வேண்டலாம்.*

இரா.இ. 9.8.78

### வேண்டுகோள் ஏவம்

*துணைப்பேராசிரியர் சம்பளத்திட்டத்தில் 1300 உருபாத் தொடக்கச் சம்பளத்தில் என்னை அமர்த்தினால் உடனே பணியிற்சேர்ந்து கொள்ள அணியமாயிருக்கிறேன் என்று ஒரு வேண்டுகோள் என்பெயருக்கு உடனே விடுக்க. அதன்மேல் வன்மையாய்ப் பரிந்துரைந்து அமர்த்தம் ஆக ஏற்பாடு செய்வேன். பதவி நீண்ட நாளாக வெறுமையாயிருக்கின்றது. இரா.இ. 26.2.79.*

### அஞ்சவேண்டாநிலை

*எவ்வகையிலும் அகரமுதலிப்பணிக்கு இடையூறு நேராவாறு மிக விழிப்பாயும் முன்னெச்சரிக்கையும் இருந்து வருகின்றேன். ஆயினும், இற்றையாட்சியில் ஆரியம் சற்றுத் தலையெடுத்திருப்பதால், எந்நிலைமைக்கும் அணியமாயிருக்கும் வகையிலேயே வீடு கட்டத்தொடங்கியிருக்கின்றேன். வீடு கட்டி முடிந்து தென்குமரியச்சகம் இங்குக் கொண்டுவரப்படின் எந்நிலைமைக்கும் அஞ்சவேண்டியதில்லை.*

அ.வா.வெ .செ. 12.11.78

### இல்லவே இல்லை

*பதிப்பான்மை எழுத்துறவாளர்* (Editor and Correspondent) *பதவிக்கு அசரியாகவும், தமிழ்ச்சொற்றொகுப்பாளர் பதவிக்குப் புலவர் இளங்குமரனாருமே தலைசிறந்த தகுதியுடையார். எத்துணை வன்மையாகப் பரிந்துரைத்தும் அரசு பொருட் படுத்தியிலது. இவ்விருவரும் இன்றியமையாத உயிர்நாடிப் பணியாளர். முன்னவரை ஓய்வு பெற்றவரென்றும், பின்னவரைத் தனியார் பள்ளியலுவலரென்றும் அரசு புறக்கணிக்கின்றது.*

*ஆயின் இவருக்கிணையானவர் இளைஞருள்ளும், அரசினர் பள்ளிகளிலும் இல்லவேயில்லை.*

அ.வா.வெ.செ. 1.12.79.

**விடாப்போர்**

*எம் அலுவலகத்திற்கு 9 புதுப்பதவிகளல்ல, ஏழே தோற்றுவிக்கப்பட்டுள. ஆயினும் 51/2 ஆண்டாக ஒன்றும் தோன்றுவிக்கப்படாதிருந்த நிலையில் இவ்வேழை ஒருங்கே தோற்றுவித்ததை மிகப் பாராட்டத்தான் வேண்டும்.*

*முதன்மடலம் முதற்பகுதி மாநாட்டிற்குள் வெளிவருமாறு அச்சிற்குக் கொடுக்கப்படும் நிலையிலுள்ளது. இதற்குத் திரு அசரியாவும் புலவர் இளங்குமரனும் இன்றியமையாதவர். இன்று அமர்த்தப்படும் எழுவரும் இவ்விருவர்க்கு ஈடானவரல்லர். திரு. அசரியாவை ஓய்வுபெற்றவரென்றும், பு.இ.குமரனாரைத் துணைப்பேராசிரியர் சம்பளத் திட்டத்திற்குத் தகாதவரென்றும் அரசு தள்ளிவருகின்றது. ஆயினும் விடாது போராடி வருகின்றது.*

அ.வ.வெ.செ. 3.1.80

**கணக்கப்பிரிவுப்பதவி**

*அரசு எம் அலுவலகத்திற்கு 7 புதுப்பதவிகள் தோற்றுவித்துள்ளது. ஆயினும் கணக்கப் பிரிவிற்கேயன்றிச் சொற்றொகுப்புப் பிரிவிற்கு பெரும் பயன் இல்லை. கண்காணிப்பாளர் தமிழ்த்தட்டச்சாளர் இரு கடைநிலையூழியர் ஆகிய நால்வரும் கணக்கப் பிரிவிற்குரியர்.*

*பேராசிரியர் சதாசிவம் கல்வெட்டுச் சொற்றொகுப்பாளராகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். ஆயின் அரசு இன்னும் இசைவு தரவில்லை. மருத்துவச் சொற்றொகுப்பாளர் பதவிக்குத் தக்கார் ஒருவரும் வரவில்லை.*

*மெய்ப்புத் திருத்தாளர் பதவிக்குப் பெருஞ்சித்திரனார் மகன் பூங்குன்றனைத் தெரிந்தெடுத்துள்ளோம். அவனுக்கும் அரசு இசைவு தரவேண்டும்.*

கு.பூ. 14.1.80

## அகரமுதலி அருமைபெருமை

*எனக்குத் தி.மு.க அரசு 1500 உருபா தான் நிலைத்த சம்பளமாகத் திட்டமிட்டது. இன்று 2000 என்று அ.தி.மு.க. ஆட்சிக்காலத்திலேயே உயர்த்தப்பட்டுவிட்டது.*

*நம் அகர முதலியின் அருமைபெருமையை அரசு இன்னும் உணரவில்லை. முதன் மடலம் முதற்பகுதி அச்சிற்கு அணியமாயுள்ளது. அது வெளிவந்தபின் நமக்கு வேண்டிய தெல்லாம் வேண்டிப் பெற்றுக்கொள்ளலாம்.*

*எனக்குக் கீழ்ப்பட்ட தொகுப்பாளருக்குள், பணியளவில் நீங்கள்தான் தலைமையாயிருப்பீர்கள். ஆதலால் தமிழுக்குத் தலைசிறந்த தொண்டு செய்ய வாய்ப்புண்டு. உயர்நிலைப் பள்ளியில் இதற்கு இடமில்லை. ஆதலால் ஒன்றையும் கருதாது உடனே வேண்டுகோள் விடுக்க. நம் அகரமுதலி உலகம் போற்றும் உயர்நிலையது.*

*தமிழ்மொழியமைப்பு விளக்க வகுப்பு திசம்பருக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.*

இர.இ. 4.3.80

## அச்சேற்றம்

*அகரமுதலி முதற்பகுதி ஆறுமாதத்திற்கு முன்பே அச்சிற்கு அணியமாய் விட்டது. முதற்பகுதி அச்சேறின் அது வெளிவருமுன் அடுத்த பகுதி அச்சிற்கு அணியமாய் விடும். இங்ஙனம் இடைவிடாது தொடர்ந்து பணிநடப்பின் ஆறாண்டிற்குள் அகரமுதலி முடிந்து விடும்.*

அ.வா.வெ.செ. 2.5.80

## அரசின் கருத்தும் கடனும்

*அகரமுதலித் தொகுப்பு என்னையன்றி வேறெவரும் செய்ய இயலாதாகையாலும் எனக்கு மூப்பு மிகுந்து வருவதாலும் இன்னும் சில்லாண்டு கடத்திவிட்டால் அகர முதலி நின்றுபோம் என்பது இற்றையரசின் கருத்தாகத் தெரிகின்றது. ஆயின் என் காலத்திலேயே எழுதி வைத்துவிடுவேன். அச்சிடுவது எதிர்கால அரசின் கடமை.*

அ.வா.வெ.செ. 2.5.80.

## நினைப்பூட்டல்

*புதிய அரசமைப்பால் தமிழுக்கோ செ.சொ. அகரமுதலித் திட்டத்திற்கோ நலமான தொன்றும் விளையவில்லை. தமிழிலக்கியச் சொற்றொகுப்பாளர் புலவர் இளங்குமரனார், கல்வெட்டுச் சொற்றொகுப்பாளர் பேரா. சதாசிவனார், மருத்துவச் சொற்றொகுப்பாளர் பர். வேங்கடேசனார், பதிப்பாண்மை எழுத்துறவாளர் தலைமகன் (Capt.) அசரியா ஆகிய நால்வரையும் உடனே அமர்த்துமாறும் எனக்கு ஒரு தூதன் இயங்கியும், இல்லத்தொலைபேசியும் உதவுமாறும் மீட்போலையில் தடித்த எழுத்தில் வேண்டுகோள் விடுக்க. இங்ஙனம் விடுக்குமாறு ஒவ்வோர் உ.த.க. கிளையையும் தூண்டுக. இது நிறைவேறும் வரை மாதந்தொறும் நினைப்பூட்டு விடுக்குமாறும் வேண்டு.*

கு.பூ. 29.7.80

## தொடர்ந்து செய்க

*நுங்கள் தீர்மானமுடங்கல் வந்து சேர்ந்தது. மகிழ்ச்சி. ஆனால் இது போதாது. ஒருமுறைத் தீர்மானத்தை நிறை வேற்றும் அரசு இன்றில்லை.*

*தமிழிலக்கியச் சொற்றொகுப்பாளர் புலவர் இளங்குமரன், கல்வெட்டுச் சொ.தொ. பேரா. சிதாசிவம், மருத்துவச் சொ.தொ.பர்.வேங்கடேசனார், பதிப்பாண்மை எழுத்துறவாளர் தலைமகன் (Cat.) அசரியா ஆகிய நால்வரையும் உடனே அமர்த்துமாறு அமர்த்தும் வரையும் மாதந்தோறும் தீர்மானம் விடுத்துக் கொண்டேயிருக்கவேண்டும். அமர்த்தினவுடன் தெரிவிப்பேன். தமிழ் நிலைமை வரவரக்கெட்டுக்கெட்டு வருகின்றது. தமிழுக்கு மாறான திட்டங்கட்குத் தாறுமாறாகவும் ஏராளமாகவும் செலவிடப்படுகின்றது.*

அ.வா.வெ.செ. 29.7.80

## பிற அகரமுதலிகள்

*திரு. அசரியா செ.சொ. அகரமுதலிப் பதிப்பாண்மை எழுத்துறவாளராக 1200 உருபா நிலைத்தமாதச் சம்பளத்தில் ஒப்பந்தமுறையில் ஓராண்டிற்கு அமர்த்தப்பட்டுவிட்டார். 30.8.80 அன்றே பணியேற்றார்.*

ஏனை மூவரையும் (புலவர் இளங்குமரனார், பேரா.சதா சிவம், பர். வேங்கடேசனார்) உடனே அமர்த்துமாறு அடுத்த இதழில் வேண்டுகோள் விடுக்க.

மலையாள அகரமுதலிக்கு 36 பேரும், கன்னட அகரமுதலிக்கு 18 பேரும், சமற்கிருத அகரமுதலிக்கு 22 பேரும் இருக்க. தமிழ் அகர முதலிக்கு இருவரே என்று தெரிவிக்க.

கு.பூ. 11.9.80

## அமர்த்தமும் சம்பளத் திட்டமும்

ஒரே ஒரு பதவி தவிர நான் கேட்டனவெல்லாம் தோற்று விக்கப்பட்டுவிட்டன. அறுவர் கணக்கத் துறைக்கும் கடைநிலை யூழியத்திற்கும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கல்வெட்டுச் சொற்றொகுப்பாளராக ஈரோடு வாசவிக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் சதாசிவம், மருத்துவச் சொற் றொகுப்பாளராக மூலிகைமணி... கண்ணப்பர் மகனார் பர். வேங்கடசேனாரும் அமர்த்தப்படவிருக்கின்றனர்.

பேரா. அசரியாவைப் பதிப்பாண்மை யெழுத்துறவாள ராக அமர்த்தக் கேட்டிருக்கின்றேன். இப்பதவியே இதுவரை தோற்றுவிக்கப்படாதது.

உங்கள் வேலை வேண்டுகோள் தலைமையாசிரியர் வாயிலாக வரவில்லை. உடனே ஒன்று அவர் வாயிலாக விடுக்க. சம்பளத்தைப் பற்றி இன்று கவலைப்பட வேண்டியதில்லை.

வேனில் விடுமுறை முடிந்தவுடன் இங்குப் பணியேற்கும் நிலையில் இருக்க விடுமுறைச் சம்பளமும் அங்குப் பெற்றுக் கொள்ளலாம். முந்திப் பெறாதிருந்த விடுமுறைச் சம்பளமும் இன்னும் பெறாதிருப்பின் விரைந்து பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யலாம்.

தமிழ்ச் சொற்றொகுப்பாளர் பதவியில் உங்களை அமர்த்த எனக்கே அதிகாரமுண்டு. சம்பளத்திட்டம் மட்டும் சிறப்பாகச சொல்லிப் பெறவேண்டும். அது எளிதாய் முடிந்துவிடும். சற்றுப் பொறுமையாய் இருக்கவேண்டும்.

4.3.80. இரா.இ.

## எவரும் இல்லை

*திரு. வி. அசரியா 30.8.80 அன்று பதிப்பாண்மை எழுத் துறவாளராக* (Editor of Correspondent) *அமர்த்தப்பட்டார். இது நல்லதுதான். ஆயின்போதாது. புலவர் இளங்குமரனாரும், பேரா.சதாசிவமும் பேரா. வேங்கடேசனும் அமர்த்தப்பட வேண்டும்.*

*அகரமுதலியின் முதற்பகுதி சென்ற ஆண்டே அச்சிற்கு அணியமாயிற்று. ஆயின், வெளியீட்டுச் செலவுக்கணக்கு விடுத்து ஈராண்டாகியும் இன்னும் அரசு அதை ஏற்றுக் கொள்ள வில்லை. அரசினால் அமர்த்தப்பட்ட அச்சகமும் ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கின்றது.*

*இளங்குமரனார் தாம் பணியாற்றும் உயர்நிலைப் பள்ளியில் ஆயிரம் உருபாச் சம்பளம் பெற்றுக் கொண் டிருக்கிறார். துணைப்பேராசிரியர் சம்பளம் நல்கினால் வர அணியமாயிருக்கிறார். ஆனால் தனியார் பள்ளியில் பணியாற்று கிறார் என்றும், ஆங்கிலப்பட்டம் இல்லை என்றும் அரசு அச்சம்பளத்திட்டம் தரமறுக்கின்றது.*

*அரசினர் கல்லூரி எதிலும் அவர்போல் அகரமுதலிப் பணியாற்றுவார் எவருமில்லை. ஆங்கிலப் பெரும்பட்டம் பெற்ற பண்டாரகருள்ளும் அவர்போல் இலக்கணம் கற்றாரும் ஆய்ந்தாரும் ஒருவருமில்லை. ஒருவருக்குத் தகுதிபற்றிப் பணியும் சம்பளமும் தரவேண்டுமேயன்றிப் பணியகமும் வீண்பட்டமும் பற்றித் தரலாகாது. ஆங்கிலப் பட்டக் காரருக்குத் தரும் சம்பளத்தைத் தமிழ்ப்பட்டக்காரருக்குத் தரமறுப்பது தமிழ்ப் பற்றுடைமையுமாகாது. துணைப் பேராசிரியர் சம்பளத்தால் 200 உருபாதான்கூடும்.*

*மதுரை மாநாட்டிற்கு 3 கோடிக்குமேல் ஒதுக்கியுள்ள அரசு தமிழுக்கு இன்றியமையாத உலகச் சிறப்புள்ள அகர முதலிக்குச் சில இலக்கமேனும் உடனடியாய் ஒதுக்கவில்லை. மாநாட்டிற்குச் செலவிடும் 3½ கோடியும் விளம்பரச் சிறப் பாகவே முடியும். குமரி மலை முழுக்குத் திரைப்படத்திற்கே 4 இலக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதை நிலையாய மெய்ப்பிக்கும் அகரமுதலியைப் பற்றிச் சற்றும் கவனிப்பில்லை.*

*இவ்வகர முதலியின்றித் தமிழும் வளராது; தமிழனும் முன்னேறான். இவ்வகர முதலியை நானே தொகுக்க இயலும்.*

எனக்குப்பின் எவருமில்லை. ஆதலால் இன்னும் பத்தாண்டு என்று திட்டமிட்டிருப்பதை ஐயாண்டிற்குள் முடிக்கக் கருதுகின்றேன். எனக்கு மூப்பு மிகுந்து வருகின்றது. ஆதலால் 1986-இற்குள் முடித்துவிடல் வேண்டும்.

அதற்கு இன்றியமையாதவை வருமாறு:

1. இளங்குமரனார், சதாசிவம், வேங்கடேசன் ஆகியோர் அமர்த்தம்.

2. எனக்கு ஓர் இயங்கியும் தொலைபேசியும்

3. என் சம்பளஉயர்வு 2000-100-3000 என்னும் திட்டப்படி தொடக்கத்தில் 2000 உருபா கேட்டேன். நெடுஞ்செழியனார் நிலைத்த 1500 ஆகக். குறைத்தார். திரு. ம. கோ. இரா.ஆட்சியில் இவ்வாண்டு அது 2000 ஆக உயர்த்தப்பட்டது. என்போன்ற பதவியாளர் திருவாங்கூரில் தமிழைக் கெடுத்துக் கொண்டு மூவாயிரம் வாங்குகின்றார். தமிழ்நாட்டிலும் என்னினும் தாழ்ந்த தகுதியுள்ளவர். ப.க.க துணைவேந்தராகி மூவாயிரம் வாங்குகின்றனர். என் பணியை வேறொருவரும் செய்ய இயலாது.

இது தலையாயது; தமிழுக்கு இன்றியமையாதது. என் மூப்பினால் என் பணித் திறமும் மிகுந்துள்ளது. கல்வித்துறை இயக்குநர் சம்பளப் பேரெல்லையும் மூவாயிரமே. ஆதலால் உடனே எனக்குப் பேரெல்லைச் சம்பளம் (3000) தரல்வேண்டும். அல்லது ஆண்டுதோறும் கூடியேறும் திட்டப்படி இது 7 ஆம் ஆண்டு ஆதலால் 2700 தரல்வேண்டும்.

நான் கட்டிக்கொண்டிருக்கும் வீட்டில் ஒரு செந்தண (Air condition) அறை அமைத்துக்கொண்டு முதுவேனிலிலும் இரவு பகலாய்ப் பணிசெய்து 1986 இற்குள் பிறர்செய்ய இயலாத பகுதிகளையெல்லாம் செய்து முடித்துவிடுவேன்.

இதனால் என் வாழ்க்கைக் குறிக்கோளும் நிறைவேறும்.

இதை மீண்டும் முதல்வர்க்கெழுதி வற்புறுத்துக.

பா.த.கு. 23.9.80

### அகத்திருக்கும் ஆக்கம்

அகரமுதலி முடிய இன்னும் எட்டாண்டு செல்லும். புத்திலக்கியத்தமிழ்ச் சொற்றொகுப்பாளர் பதவி வெறுமையாகவேயிருக்கின்றது. உதவிப்பேராசிரியர் சம்பளத்திட்டம் பெற முதலமைச்சரைத்தான் பார்த்தல் வேண்டும்.

*உயர்நிலைப் பள்ளியில் இருந்துகொண்டு செல்விக் கட்டுரை விடுப்பினும், தமிழாராய்ச்சி நூல் வெளியிடினும் அகர முதலிப் பணிபோற் சிறந்த தொண்டாகாது. முந்தியே வேலைவிடாது ஒட்டிக்கொண்டிருந்திருந்தால் இதற்குள் சம்பள உயர்வு பெற்றிருக்கலாம். புறத்திருந்து வேண்டுவதினும் அகத்திருந்து கேட்பது வலியுறும்.*

*அகர முதலிக்குப் பயன்படாத பலர் இவ்வகரமுதலித் திட்டக் கணக்குத் துறையில் அமர்த்தப்பட்டு வேலையின்றிச் சம்பளம் வாங்கிவருகின்றனர். சொற்றொகுப்பாளர் (புலவர் இளங்குமரனார், பேரா. சதாசிவனார், பேரா.வேங்கடேசனார்) மூவரை அமர்த்துவர் என்னும் நம்பிக்கையில்தான் கணக்குத் துறைப் பணியாளரை அமர்த்த இசைந்தேன்.*

*நீங்கள் அகர முதலிப் பணியிற் சேர்ந்து கொண்டால் பேராசிரியச் சம்பளத் திட்டத்தையும் நாளடைவிற் பெற்றுக் கொள்ளலாம்.*

இரா.இ. 20.11.80

# 10. சொல்வளம்

## தனித்தமிழ் இதழ்

*வடசொற்கும் தென்சொற்கும் வேறுபாடறியாது சாதி, புசித்து என்று வடசொற்களையாண்டு கொண்டு தனித்தமிழ் இதழ் நடத்திவருவது எத்துணை நகைப் பிற்கிடமான செய்தி.*

வி.அ.க. 20.3.64

ஆங்கிலநேர் தென்சொற்பட்டி - குறிப்பு

1. சொற்கள் அகரவரிசைப்படியில்லை. அச்சிடுங்கால் அவ்வரிசைப் படுத்திக் கொள்க.

2. பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரெச்சம், வினையெச்சம் எனச் சொல் வகை குறிப்பது நன்று. அவற்றைப் பெ (n) பெ.எ. (adi),வி (v)வி.எ. (adv) என்னுங் குறுக்கங்களாற் குறித்துக்கொள்க.

3. பட்டி நீண்டிருப்பதாலும் எல்லாச் சொல்லும் உடனடியாய் ஆளப்பெறவேண்டுமாதலாலும் பாவையிற் பகுதி பகுதியாய் வெளியிடாது அனைத்தையும் ஒருசிறு சுவடியாகவே வெளி யிட்டுவிடுக.

4. சாக்குப் போக்குச் சொல்லாது அச்சுப்பிழையின்றி வெளியிடுக. மெய்ப்புத் திருத்த எழுவர் இருத்தல்வேண்டும்.

5. வடமொழி வரலாறு வெளியீட்டில் ஆழ்ந்திருப்பதால் மும்மாதம் பொறுத்துத் தான் கட்டுரை வரையவொன்னும், இச்சொற்பட்டியே முந்நாள் கொண்டு விட்டது.

6. என் தமிழியக்கம் தொடங்கும்போது தமிழன்பரெல்லாம் தமிழ்ப் பெயரே தாங்கநேரும்.

7. திரு. பக்தவச்சலனார் காலநிலைமையே இன்றும் தமிழ்க்குள்ளது.

வி.அ.க. 19.7.67

## கண்காணி

*கண்காணி என்பதிலும் கண்காணிப்பாளர் என்பது கண்ணியமானது.* Supervisor *ஐ மேற்பார்வையாளர் எனலாம். மேற்பார்வையர் அலுவற்பெயரும் இடம்நோக்கி வேறுபடுவது நன்று.*

*கோயிலை மேற்பார்க்கும் துணை அதிகாரிக்கு இளங் கேள்வி என்று கல்வெட்டில் வழங்குகின்றது. தலைமை அதிகாரி முதுகேள்வி எனப்பெறுவார்.*

*தோட்டக்காட்டுக் கூலியாட்களின் தலைவனை அல்லது மேற்பார்வலனைக் கண்காணி என்பது உலக வழக்கு.*

*நல்லசொற்கள் இலக்கியத்திலும் கல்வெட்டிலும் உள்ளன. ஆயின், அரசினர் அவற்றை விரும்பாததுடன் தகுதியற்ற மொழி பெயர்ப்பாளரும் தமிழ்ப்பேராசிரியரும் தக்கார்மீது அழுக் காறும் கொள்கின்றனர்.*

Passport - *கிள்ளாக்கு.*

*இவ்வருமையான சொல் தாயுமானவர் பாடலில் வரு கின்றது. ஆயினும் இதை அறியாது, சென்னைப் ப.க.க. ஆங்கிலத்தமிழ் அகரமுதலியில்,*

*1. பயணக் கடவுச்சீட்டு*

*2. பயணவுரிமை தரும்சீட்டு*

*3. நுழைவுரிமை தரும்சீட்டு என மொழிபெயர்த்திருக் கின்றனர்.*

சு.பொ. 3.1.67

## பிச்சு

*பிச்சு என்பது பித்து என்பதன் திரிபானால் தென் சொல்லே. பிச்சை என்பது தான் வடசொல்.*

22 மடங்கல் 1999 ந.பி.

## அழகரசன்

*சுந்தரராசன் என்னும் பெயரையும் அழகரசன், அணி வேந்தன், எழில்மன்னன் என்பவற்றுள் ஒன்றாக மாற்றிக் கொள்க.*

3 மேழம் 1999 ந.பி

### மையலரசன்

*நான் தங்கியிருந்த அறைக்குவந்த அன்பருள் ஒருவர் ராஜமோஹன் என்பதற்குத் தென்சொல் வடிவம் வேண்டினார்.*

*அரசன் என்பது தென்சொல். 'மோஹன்'வடசொல்.*

*முஹ் - மயங்கு, மடப்படு, காதலி, காமி.*

*முஹ் - மோஹ - மயக்கம், மூடன், காமன், பித்தன் இதற்கு நேர்தென்சொல் மையலன் என்பதே.*

*மையல் - மயக்கம், கடுங்காதல், காமம், பித்தம்.*

*மையல் - மயல்*

*அரசமயலன், அரசமயல் என்றோ மையலரசன், மையலரசு என்றோ வழங்கலாம் எனத் தெரிவிக்க. 3 மேழம் 1999 தி.சு.*

### சாலை

*'சாலை' தமிழ்ச்சொல்லே. சாலுதல் - மிகுதல், நிறைதல், அகலுதல்.*

*சாலை - அகன்ற இடம், கூடம், அகன்றபாதை.*

3மேழம் 1999 தி.சு.

### கனம்

*'கனம்' தமிழ்ச்சொல்லே. கனத்தல் என்னும் வினை வடமொழியில் இல்லை. கனம் என்னும் பெயர்ச்சொல்லே யுண்டு. சுமை கனக்கிறது. தொண்டை (குரல்) கனத்துவிட்டது. தலைக்கனம், கனம் (கண்ணியம்) பொருந்திய, முதலிய வழக்குகள் தொன்றுதொட்டுவருவன.*

*"கனங்குழாய்" (கலித்தொகை - 75) - கனத்தகாதணி அணிந்தவளே! கல்-கன்-கன. கனத்தல்- கற்போல் எடைமிகுதல்.*

*நாவல (பாரத) க் கனமின் தொழிற்சாலை என்றே குறிப் பிடுக. நாவலந்தேயம் என்பதே பண்டைவழக்கு.*

3 மேழம் 1999 தி.சு.

### கனம்

*கனம் என்னும் சொல்லைப்பற்றிக் கடுகளவும் ஐயம் வேண்டாம். வடவர்காட்டும் மூலம் ஹன் (-கொல்) என்பதே.*

*இது பொருந்தாப் புளுகல் என்பது வெள்ளிடைமாலை. பிராமணர் நிலத்தேவர் (பூசுரர்) என்றும் அவர் முன்னோர் மொழி தேவமொழி என்றும் கடந்த மூவாயிரம் ஆண்டாக ஏமாற்றப்பட்டதினாலேயே, நம்மவர் பல தென் சொற்களை வடசொல்லென மயங்க நேர்ந்துவிட்டது.*

8 மேழம் 1999 தி.சு.

**துளை வகைகள்**

*துளைவகைகள் (எச்சம்) இல்லி - மிகச்சிறியதுளை (இல்லிக்குடம்) முழை-குகை-குவை* (Cave, cracible)

*துளை - தொளை. தொள்ளை (தொள்ளைக்காது).*

*தொண்டு - சிறுதுளை*

*புழை - புடை* (hollow in the side of a wall).

*பூழை* - (hole of a bascel) *பொள்ளல் - பொத்தல்*

*நுளை - நூழில், செக்குக்குழி. நூழை - சிறுவாயில்.*

*முழை* (postern) *முகை* (Cave) *மூழை* - hollow of a eadle, hadle

*புட்டி -புட்டி (சிறுபுட்டி)* - E bottle. The concise Oxford Dictionary *இல்* hottle, but *என்ற இருசொற்களின் மூலத்தையும் பார்க்க.*

*இல் - சிறுமைப்பொருட் பின்னொட்டு*

*எ-டு: தொட்டி - தொட்டில்.*

*அம்-பெருமைப் பொருட் பின்னொட்டு*

*எ-டு: நிலை - நிலையம்*

*மதி - மதியம்* (Full Moon)

*விளக்கு - விளக்கம் குட்டி, குழவி, பிள்ளை முதலிய இளமைப்பெயர்களும் சிறுமையுணர்த்தும். இல.க.இர. 6.5.69.*

*விளக்கு -விளக்கம் குட்டி, குழவி, பிள்ளை முதலிய இளமைப்பெயர்களும் சிறுமையுணர்த்தும். இல.கா.இர. 6.5.69.*

## குறு-சிறு

பரு (பெரு) x சிறு, நெடு x குறு, ஆயினும் குறு = சிறு என்றும் ஆகும். வழக்கு நோக்கி அறிதல் வேண்டும். (எ-டு) குறுங்கட்டில், குறுநொய், குறுமணல்.

குல்-கு (குக்கிராமம் - வ) குட்டை - கட்டை (கட்டைமண்) குள்ளம் (குள்ளவாத்து), குள் - குள்ளம் குள்ளல், குள்ளை, கூழை (கூழைவால்).

சில் - சின் - சின்ன சீனி (சீனியவரை, சீனிமிளகாய், சீனி வெடி) சீனவெடி - சீனநாட்டு வெடி.

நுள் - நுன் (Minute, shap, subtle) நொய், நரி (நரிக்கெளிறு, நரிப்பயறு)

புன் -புல்-சிறு, தாழ்வான, பண்படாத.

பொடி - மிகச்சிறிய, தூள்போன்ற. முட்டு (முட்டுக் குரும்பை - சிறுகுரும்பை)

இல.க.இர. 6.5.69

## சான்றுகள்

தென்மொழியில் 'ஒன்பது - ஒரு கருத்துரை' என்னும் நுங்கள் கட்டுரை கண்டு மகிழ்ந்தேன். அதன் முடிபை வலி யுறுத்ததற்கு அல்லது எதிரிகள் கூற்றை மறுத்ததற்கு வேறுசில சான்றுகளும் உள்ளன. அவற்றை ஓய்விருக்கும்போது எழுதி யனுப்புவேன்.

இல.க.இர. 8.8.69.

## சிறந்த வாயில்

தொண்டு என்னும் சொல்லைப்பற்றி முழுத்தோற்றமான கட்டுரை வரைதற்கு வேண்டிய குறிப்புக்களைத் தொகுத்து வைத்திருக்கிறேன். அவற்றை நேரிற்கேட்டுத் தெளிந்து தங்கள் பெயராலேயே செந்தமிழ்ச் செல்வக்கு ஒரு கட்டுரை வரைய லாம். அது தென்மொழியை விடச் சிறந்த வாயிலாகும்

இல.க.இர.10.9.69

## இரண்டொருசொல்

*வருகின்ற ஞாயிறு கள்ளக்குறிச்சியடுத்த தேவபாண்டலம் என்னும் ஊரில் ஒரு தமிழன்பர் திருமணத்தை நடத்தி வைக்கச் செல்கின்றேன். திரும்புகாலிற் காட்டுப்பாடி சென்று இரண் டொரு சொற்களை அகரமுதலியிற் பார்த்தபின் விடையெழுது கின்றேன்.*

இல.க.இர. 10.9.69

## அரன் – சிவன்

*'நமப்பார்வதி பதயே' என்பது முற்றும் சமற்கிருதம். அம்மையப்ப போற்றி (வணக்கம்) என வழுத்தின் 'அரகர (அரஹர) மகாதேவா (மாதேவா) என்னும் அடுத்ததொடரொடு மோனையாகப் பொருந்துவதுடன் முற்றுந் தமிழாக இருக்கும்.*

*அரம் - சிவப்பு. அரன் - சிவன். மகம் - பெருமை. மக - மா- பெரி/ய. வடமொழியில் 'ஹர' என்னுஞ்சொற்கு அழிப்பவன் என்றே பொருள். முத்திருமேனிகளுள் சிவனை அழிப்புத் தொழிலனாகவே கொண்டுள்ளனர். ஆரியர். சிவநெறித் தமிழர் கொள்கைப்படி சிவன்முத்தொழிலுஞ் செய்யும் முழுமுதற் கடவுள். இது என் 'தமிழர் மதம்' என்னும் நூலில் விரிவாக விளக்கப்பெறும்.*

3.அலவன் 2001.கா.இ.மு.

## பயிற்சி இல்லை

*பர். அசுக்கோ பார்ப்போலாவின் சிந்துக்குறியெழுத்து விளக்கத்தை மேலோட்டமாகப் பார்த்தேன். நுணுகிநோக்க நேரமில்லை. மேலும் அது என் துறையை அடுத்ததன்று. அதில் எனக்குப் பயிற்சியும் இல்லை. இல.க.இர. 5.6.70*

## வடசொல்லுக்கு நேர்தென்சொல்

*திரு அருணனார்க்குத் 'தடையும் விடையும்' என்னும் நூலில் உள்ள வட சொற்கட்கு நேர் தென் சொற்கள் எழுதி விடுத்த விடை கிடைத்தாவென்று இன்னுந் தெரியவில்லை.*

கா.இ.மு. 18.3.71

## தொள்ளை

*இம்மாதக்கட்டுரையில் தொள்ளை என்னும் சொல்லிற்குப் பின் தொள்-தொழு- சிறுகுற்றவாளிகட்குத் தண்டனையாகக் கால்களை மாட்டிவைக்கும் குட்டை என்னும் மரச்சட்டம் என்பதைச் செருகிக்கொள்க. வ.சு. 7.8.82*

## ஊழியம்

*ஊழியம் என்பது கழக இலக்கியத்தில் இடம்பெறா விடினும் தொன்றுதொட்டு வழங்கிவரும் உலகவழக்குச் சொல்லாகும்.*

*ஊழியம் (மலையாளம்), ஊழிக (கன்னடம் g) ஊடிக (தெலுங்கு. g) உழத்தல் - வருந்துதல், வருந்திவினை செய்தல். உழ- உழைப்பு. உழைத்தல் - மெய்வருந்த வேலைசெய்தல். உழைப்பு - உழைப்பாளன், உழைப்பாளி. உழை - ஊழியம் - வருந்திச் செய்யும் வேலை, வேலை, தொண்டு, அடிமைவேலை, பொது நலத்தொண்டு, மதத்தொண்டு வேலைக்காலம்,* (Service)

*மங்கையர்க் கூழியஞ்செய்வது (திருப்புகழ், 548) என்பதில் ஊழியம் தொண்டு. இந்நூலின் காலம் 15 ஆம் நூற்றாண்டு.*

*தேவவூழியம்* (Ecclesixstical work) *என்பது கிறித்தவ வழக்கு. ஊழியன் - அடிமை, பணியாள். ஊழியக்காரன் - அடியான், வேலைக்காரன், மதவியல் அலுவலன்.*

மறை. நி. 16.6.71

## மலர்

*தங்கள் வயிரவிழாமலர்க் கட்டுரையில் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழிலயக்கியத்தை என்றிருப்பதை ஈராயிரத்தறுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழிலக்கியத்தை என்று திருத்திக்கொள்க.*

வ.சு. 6.10.72

## கந்தகம்

*கந்தகத்திற்கு* (Sulpher)*ச்சங்க அகராதியில் காரிழைநாதம், பொன்வண்ணக் காரிளை என இருசொல் உள. நாம் காரிளை என்று சுருக்கமாக வைத்துக்கொள்ளலாம். 18.8.71*

*கந்தகத்திற்கு எரி என்ற சொல் மருத்துவ அகரமுதலியிற் குறிக்கப்பட்டுள்ளது. ஆயின், அது மிகப்பொதுவான சொல்.*

இல.க.இர. 25.10.72

**ஓடாவி**

*ஓடாவி 1.* Shipuright, boat builder, *மரக்கலஞ் செய்வோன். 2.* Carpenter, *தச்சன் என்று* Rottler *தமிழாங்கில அகர முதலியிலுள்ளதைத்தான்* Winslow *தம் அகரமுதலியிற் குறித்தார். அதைத்தான் சென்னைப் ப.க.க.த. அகரமுதலி பின்பற்றியது.*

*ஒடாள்வி = ஓடாவி.*

Fabricus *தமிழாங்கில அகரமுதலியிலும்* Spaniding *ஆங்கில-தமிழ் அகரமுதலியிலும் இங்ஙனமே குறிக்கப்பட்டுள்ளது. கதிரைவேற்பிள்ளை நாகலிங்கமுதலியார் கோபால கிருட்டிண கோன் முதலியோர் தொகுத்த தமிழகர முதலிகளிலும் ஓடாவி என்ற சொல் குறிக்கப்பட்டுள்ளது.*

*கழகச் செய்யுட்களிலும், கழகம் மருவிய பனுவல் களிலும் இச்சொல் இல்லை. ஆயினும், இது பழஞ்சொல்லே. அண்ணாள்வி - அண்ணாவி - நாடாள்வி - நாடாவி என்பன போன்ற உலக வழக்குச் சொல்லாதலால் செய்யுளில் இடம்பெறவில்லை.*

*கலவர் - கலம்புணர்மாக்கள் என்பனவே பண்டைச்சொல். நீகான் - மீகான்; நீகாமன் - மீகாமன் என்பன கலஞ் செலுத்துநரைக் குறிப்பன; கலஞ்செய்நரைக்குறியா.*

*கல்வெட்டு, ஓடப்பாட்டு, கப்பல்பாட்டு முதலிய நாட்டுப் பாடல்கள் பிற்காலத்தனிப்பாடல் முதலியவற்றில்தான் ஒடாள்வி - ஓடாவி என்னும் சொல்லாட்சியைப் பார்த்தல் வேண்டும்.*

*சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலுள்ள இராமசாமிப் புலவர் இக்காலத் தனிப்பாடல்களைத் தொகுத்து வருகின்றார். ஒருகால் அச்சொல்லாட்சிப் பாடல் ஏதேனும் அவருக்குத் தெரிந்திருக்கலாம்.* இல.க.இ. *4.2.74.*

## தமிழ்ப்போற்றி

*'திருக்கோவில் தமிழ்ப்போற்றி' அச்சாகிவிட்டதா? ஆனவுடன் அதன் ஆசிரியர்க்கும் ஒருபடி அனுப்பி விடுக. அவர் முகவரி :*

அறுவை மருத்துவர் (Dr)நமச்சிவாயம், எல்.எம்.பி.,

சூரமங்கலம், சேலம் சந்திப்பு, சேலம் . கா.இ.மு. 7.2.74.

## இளநீர்

*சென்ற செல்வியிதழில் திரு.பி.எல்.சாமி வரைந்திருக்கும் சொல்லாராய்ச்சி முற்றுந்தவறானது. இளநீர் தூய தென் சொல்லே. இதுபற்றிய ஒருவிளக்கக்கட்டுரை விரைந்து ஏதேனுமோர் இதழில் வெளிவரும். வ.சு. 1.4.74.*

## தமிழ்ப்பெயர்

*வசந்தகுமாரி - இளவேனிற்குமரி*

*திருமணத்திற்குரிய முழுத்தவோரையும் நாண்மீனும் தெரிவிப்பின் தமிழ்ப்பெயர் எழுதிவிடுக்கின்றேன்.*

மு.வ.ப. 18.12.74.

## பொக்கசம்

*நிதி என்னும் வடசொற்கு நேர்த்தென்சொல் பொக்கசம் (பொக்கிஷம்) என்பதே. இது வடமொழியில் இல்லை. தெ.பொக்கசமு. க. பொக்கச. ஷகரம் பிற்கால மாற்றம்.*

*பணத்துறையமைச்சர் என்பதைவிடப் பொக்கச அமைச்சர் என்பது மிகப் பொருத்தம். இதுபற்றிச் 'செல்வி'யில் ஒரு கட்டுரை வரைவேன். கா.இ.மு. 14.4.75*

## திறலியன்

Terry - Cotton -

*திறலின் என்பது திறலியன் என்றிருக்க. இன் என்னும் ஈற்றைவிட இயன் என்பது பொருள் உள்ளதும் சிறந்ததுமாகும். திறம்-திறன்-திறல்-திறலியன்.*

*ஒலியொடு பொருளும் ஒத்துவரின், அயற்சொற்களின் ஒலியொட்டியே தமிழ்ச் சொல்லும் புனைந்து கொள்ளலாம். இது ஒருவகைச் சொல்லாக்க நெறிமுறை.*

தோற்றோரியல் (தோற்றோர் - இயல்) என்பது tutorial (< Tutor) என்னும் இலத்தீன் சொல்லொடு ஒருசிறிதும் பொருளொத்ததன்று.

*கா. இ.மு. 14.4.75.*

**கலைமுதியர்**

*கலைமுதியர் அல்லது கலைமுதுவர் என்று சொல்வதே முதுகலை என்பதைவிடப் பொருத்தம்.*

*முதலில் நான் B.A. யைக் கலையிளைஞர் என்றும் M.A.யை கலைத்தலைவர் என்றும் மொழிபெயர்த்தேன்.*

*இளமைக்கு எதிர் முதுமையாதலால் சிலர் M.A.யை முதுகலையென்றும், B.A.யை இளங்கலையென்றும் குறிக்க விரும்பினர். இதை ஆட்சிக்குக் கொண்டு வந்ததும் பரப்பினதும் சென்னை மாணவர் மன்றம், அதனொடு தொடர்பு கொண்ட ஆசிரியரும் மாணவரும் அவ்வழக்கைப் பின்பற்றினர்.*

*இளமை முதுமை என்பன பாடத்திட்டத்தின் தாழ்வுயர்வு அல்லது சுருக்க விரிவு பற்றியவேயன்றிக் கலைபற்றிவை யல்ல. பட்டந்தாங்கியரின் அகவை பற்றியவு மல்ல. புலவர், வித்துவான் என்பனபோல* Bachelor, Master *என்பன பட்டம் பெற்ற ஆட்களையே குறிப்பன. ஆதலால் இளங்கலை முது கலை யென்பதைவிட இளங்கலையர், முதுகலையர் என்பதே பொருத்தம்.*

கா.இ.மு. 3.9.76.

**பட்டம்**

'S' Science என்பதன் முதலெழுத்தெனக் கருதி 'அ' (அறிவியல்) என்பது குறித்தேன்.

Diploma in Rural Service என்பதை நாட்டுப்புற வூழிய மடல் என்றே மொழிபெயர்த்து 'நா.ஊ.ம.' என்று குறித்தல் வேண்டும். ஆகவே M.A. D.R.S. B.T., என்பதை க.மு; நா.ஊ.ம; க.இ. என்று குறிக்க. க.இ-கற்பிப்பு இளைஞர்.

Diploma என்பதற்கு மடித்ததாள் என்பதே முதற்பொருள். முடங்கல் என்பது கடிதத்தைக் குறிப்பதனால் 'மடல்' என்றேன்.

கா.இ.மு. 3.9.76.

## ஒல்லியல் மருத்துவம்

GK. Homos - same. *சமம், ஒப்பு,*

homocos - Like ME, ON., E. Same

OHG.., Got Same. *த. சம (மம்)*

Simitis, GK Patheia Pathos = Suffering.

Homoeopathy = treetment of disease by drugs that in health person would produce symptoms like those of the disease *த. - ஒல்லுதல் - ஒத்தல்; பொருந்துதல்; இயலுதல்*

Homeopathy - *ஒல்லியல் மருத்துவம்*

Homeopathyic clinic - *ஒல்லியல் மருத்துவ விடுதி அல்லது பண்டுவமனை*

G.K. Allopathy - *அல்லியல் மருத்துவம்*

G.K. Allos = other *அல்லது வேறு.* *கோ.ஏ. 26.4.77*

## துணைவேந்தர்

Vice Chancellor *என்பதற்குத் துணைவேந்தர் என்னுஞ் சொல் வழக்கூன்றிவிட்டது. அதையே வேய்ந்தர் என்று மட்டும் மாற்றி வழங்கலாம்.*

*டாக்டர் என்பது போன்ற அயற்சொல்வழக்கை மட்டும் விலக்கவேண்டும்.*

*எழுத்து மாற்றத்திற்கு இடந்தரவே கூடாது. அது பிற்காலத்தில் தமிழ்க் கேட்டுக்கே வழிகாட்டும்.*

கு.பூ.17.9.79.

## இதழ்

*'விழிப்பு' நல்ல தலைப்புத்தான். அதை ஏற்காவிடின் 'எழுச்சி' 'முன்னேற்றம்' 'தன்மானம்' என்றொன்றிருக்கலாம். ஏன், 'முதன்மொழி' யென்றே தொடங்கக் கூடாது.*

கு.பூ. 9.10.79.

## சூரன்

*சென்ற இதழில் (மீட்போலை) சூரியன் என்ற வடசொல் இருந்தது. கதிரவன் என்ற சொல்லையே வழங்குதல் வேண்டும்.*

*உல்-சுல்-சுள்-சுர்-சுரம்-சுரன்-சூரன் இதுவரை தமிழ்; ஆயின் சூரன் என்பது இலக்கியவழக்கே.*

*சூரன்- வ.சூர்ய - சூரியன்.*

*சாதி (ஜாதி) என்பதைக் குலம் அல்லது பிறவிக்குலம் என்றே இடத்திற்கேற்பக் குறித்தல் வேண்டும்.*

கு.பூ. 6.3.80.

**தேசம்**

*'பதம்' பலபொருளொருசொல்; பொருட்கேற்றவாறு வெவ்வேறு மொழியைச் சேரும். சொல் என்னும் பொருளில் அது வடசொல். உலக வழக்கிலுள்ளவாறு நன்னிலை தக்கபருவம் என்னும் பொருளில் தென்சொல்லே.*

| வடசொல் | தென்சொல் |
|---|---|
| அவநி – பார், ஞாலம், | நானிலம், மாநிலம் |
| பதம் – சொல். | |

*தேசியம் தென்மொழிக்கும் வடமொழிக்கும் பொது வெனக் கொள்ளலாம். அது தேசம் என்னும் சொல்லினின்று திரிந்தது. தேசம் (த) - தேச(வ)*

*திசை-தேசம். திசை (த்)-திசா (வ)*

*வ திச்* (dis) - *காட்டு* point out show.

*திச்- திசா-காட்டுப்பக்கம். திசை-திசா-தேச-காட்டு இடம், நாடு*

**தமிழ்ச்சொல் வரலாறு:**

*திகைதல் - முடிதல். திகை - முடிவு, எல்லை, திசை.*

*திகை - திசை, தேசம் - எல்லைப்புறநாடு, நாடு. வடவர் காட்டும் மூலப்பொருளும் தமிழ்வழியது என்று காட்டலாம்.*

நோக்கு – தேக்கு (சூரசேனிப்பிராகிருதம்)

தேக் (இந்தி) தேக்– திக்கா (பி.வி) – காட்டும்.

ஒ.நோ – காண் – காட்டு (பி.வி.) திக்கா – வ.

திக் - திச். வடவர் திசையைத் திக் என்றும் கூறுவர். இது தமிழில் திக்கு என்று வழங்குகிறது. கிரேக்க மொழியில் இது தேய்க் (deik) என்றும் நிற்கும்.

ச.க; பா.த.கு. 20.11.80

### பாரி

நுங்கள் 'பாரியைப் பார்த்தேன். முற்றும் சரிதான். ஆயின் 'அவல்' சிறிது மாற்றம் பெறல்வேண்டும். மேலும், அவலம் என்பது இதனொடு தொடர்புடையதன்று. அல்-அ, அவலம்-வலமின்மை, நோய் - வருத்தம். என்னிடம் சிறிது பயிற்சி பெறின், என்போன்றே செந்தமிழ்ச் சொற்பிறப்பியற் பணியாற்றலாம்.

இரா.இ. 20.11.80.

### தமிழ்க்கழகம்

இம்மாதச் செந்தமிழ்ச் செல்வியில் வரும், மதுரைத் தமிழ்க்கழகம் என்னும் என் கட்டுரையை உடனே பார்க்க. நண்பர்களையும் பார்க்கச்சொல்க. அடுத்த மாதக் கட்டுரையை யும் (உலகத் தமிழ்க்கருத்தரங்கு மாநாடு) பார்க்க.

ச.க; பா.த.கு. 20.11.80

### கதம்பம்

'கதம்பம்' தென்சொல்லே.

கல-கலம்பு-கலம்பம். 18 பகுதிகள் கலந்து பனுவல்.

கலம்பகம் - கதம்பம் - பலவகைப்பூ கலந்த மாலை.

ஒ.நோ; சலங்கை - சதங்கை. ச.க; பா.த.கு. 20.11.80.

### கலைச்சொற்கள்

Shirt collar - உட்சட்டைக் கழுத்துப்பட்டி

Rough Note - கரட்டுக்குறிப்பு

Fair Note - செவ்வைக் குறிப்பு

Note Book - குறிப்புப் பொத்தகம்

Geometry Box - வடிவக் கணக்குப் பெட்டி

Geomentry - ஐ வடிவளவை என்றார் மாணிக்கநாயகர்

Cooker - *அடுவான்.*

Forest Dept. - *அடவித்துறை ச.க; பா.த.கு. 20.11.80.*

Organizer - *அமைப்பாளர் 10.9.69*

*தீபாவளி - விளக்கணி*

இல.க.இரா. 8.8.69

**மொழியாக்கம்**

| | |
|---|---|
| *காலாட்டிப் பொறி* | *4.11.71* |
| *உருளைப் பொறி* | *29.10.71* |
| *அடுக்காளர்* | *15.10.72* |
| *வரையோலை* | *கா.இ.மு.* |
| *மகாலிங்கம் - பேரிலிங்கனார் 2 மேழம் 2001* | *ந.பி.* |
| *அக்கரை வைப்பகம்* (Overseas Bank) | |
| *பகுதி* (Demy) *அளவு.* | *12.10.71* |
| *திருகாணி* (*ஸ்குரூ*) | |
| *வில்லை (நட்டு)* | *25.1.72* |
| *நடுவநிலையம* (Central Stand) | 26.7.73 |
| *அளியர் (மருகர்)* | *13.10.73* |
| *காசுப்பட்டி* (Cash Bill) | |
| *கடன்பட்டி* (Credit Bill) | 3.11.72 |
| *நம்பகஇரண்டகம் (நம்பிக்கைத்துரோகம்)* | *22.8.77* |
| *கன்னெய் (பெட்ரோல்)* | *20.8.70* |
| *கற்றம்* (Ream) | *4.11.71* |
| *பதிவேட்டறை* (Record Room) | 31.1.75 |
| *ஊற்றுத்தூவல்* | *5.2.74. வசு.* |
| *உள்ளொட்டி* | |
| *மாத்திரி* (Meter) | |
| *நெடுந்துணி* (Long Cloth) | *இரா.ம. 22.9.78.* |

*பாவாணர் தமிழ்க் குடும்பம் பற்றிப் பாவாணர்*

*இந்நெய்வேலி நகரமைப்பில், பாவாணர் தமிழ்க்குடும்பம் என்று, தமிழுணர்ச்சியாலும் பணியக ஒருமைப்பாட்டாலும் ஒன்றுபட்டு திருநாள் பெருநாட்களில் கூட்டுக் குடும்பம் போலும் நெருங்கிய உறவினர் போலும் உண்டாட்டில் ஒன்று கலக்கும் ஒருதனித் தமிழ்க் கூட்டமான பதினொரு குடும்பத் தொகுதியால், நானும் என் நண்பரும் இன்று உயர் பெருந் தரமாக விருந்தோம்பப் பெற்றோம்.*

*தமிழுணர்ச்சியும் உழுவலன்புங் கலந்த அறுசுவை யின்னடிசிலும், என் பெயர் தாங்கலும், இவ்வுலகில் உவமை யில்லா ஒரு தனிச்சிறப்பும், என் உள்ளத்தை மறுமையும் மறவா வாறு இறுகப்பிணித்துவிட்டன. இக்குடும்பம் மேன்மேலும் தழைத்தோங்க எல்லாம் வல்ல இறைவன் என்றும் அருள் பொழிக.*

ஞா. தேவநேயன்

**நான் பட்டுள்ள கடன்**

*தமிழுலகிற்கும் அரசிற்கும் சிறப்பாகத் தவத்திருக் குன்றக் குடி அடிகட்கு, நான் பட்டுள்ள கடனைத் தீர்ப்பதற்கும் இறைவன் எனக்கிட்ட பணியை நிறைவேற்றுவதற்கும் நாலைந் தாண்டு பன்னிருமாதமும் எழுநாளும் என் இன்பக் கடமையைச் செய்ய வேண்டியனவனா யிருக்கின்றேன்.*

அ.செல்லத்துரை. 3.5.71

**நூலுரிமை விற்க**

*என்வீட்டுக்காரர் வீட்டை விற்கப் போகின்றார். வேறொருவர் வாங்கின் என்னை வெளியேற்றி விடுவார். என் 20நூல்களின் உரிமையை விற்கவிரும்பினேன். 20 ஆயிரம் கொடுத்து வாங்கத் தக்க பொத்தக வெளியீட்டாளர் யாரேனு மிருப்பின் தெரிவிக்க.*

20.5.72. திரு.அ.சாமிக்கண்ணு அரூர்.

**செ.சொ.பி.அ. வெளியீடு**

*செ.சொ.பி.அ. முதற்பகுதி முடியும் நிலையில் உள்ளது. கருவிநூலான பல ஆங்கில அகர முதலிகளும் கலைக்களஞ்சி யங்களும் வரலாற்று நூல்களும் வாங்கப்பட்டுள்ளன.*

*முதன்மடலம் அண்மையில் முடியுமாயினும் 3 ஆம் ஆண்டிலேயே அச்சீட்டு வேலை தொடங்கும். சிறந்த அச்சகத்தில் கொடுக்க வேண்டும். கூலி மிகுதியாயிருக்கும். கையிற்பணம் வைத்திருக்க வேண்டும். பன்னிரு மடலமும் தொடர்ந்து அச்சாதல் வேண்டும். பலர் ஒழுங்காகப் பணம் அனுப்பாததினால் இன்று வெளியீட்டுத் தொகை 10.7.50 (பத்தாயிரத் தெழுநூற்றைம்பது) தான் சேர்ந்துள்ளது.*

20.5.72 திரு.அ. சாமிக்கண்ணு, அரூர்

**இடம் பெயர்தல் அருமை**

*வீடு பற்றி எழுதியமைக்கு நன்றி.*

*இனிமேல் நான் இடம் பெயர்ந்தால் சென்னைக்கோ அதன் அருகிற்கோ தான் செல்ல வேண்டும். நூல் வெளி யீட்டிற்கு அதுதான் ஏற்றது.*

*என்பொத்தகக் களஞ்சியத்தைகி கடத்தியுய்ப்பது அரிதாய் இருக்குமாதலால் இங்கேயே இருக்கத்தீர்மானித்து விட்டேன். சில்லாண்டு பொறுத்தேனும் இவ்வீட்டை வாங்கிவிடலா மென்றிருக்கிறேன்.*

6.6.72 திரு.அ. சாமிக்கண்ணு. ஆரூர்.

**இம்மியும் உதவாக் காலம்**

*நெய்வேலி உ.த.க. முன்னாள் மேலைக்கிளைச் சார்பாக விடுத்த அன்பளிப்புப் பணவிடை பெருமகிழ்ச்சியொடு பெற்றேன். நன்றி அரசோ பல்கலைக் கழகமோ தமிழ்த் தொண்டிற்கு இம்மியும் உதவாத இக்காலை நெய்வேலித் தமிழ்நேயர் ஒரு நற்றொகை நன்கொடையாக விடுத்தது மிக மிகப் பாராட்டத் தக்கதே.*

மா. தமிழ்மணி. 16.12.72

**மெல்லாடை**

*நீங்கள் திருமண அன்பளிப்பாக விடுத்துள்ள கட்கினிய அணிவிருப்ப மெல்லாடையைப் பெருமகிழ்ச்சியொடு பெற்றுக் கொண்டேன். நன்றி மணமக்கள் இறைவனருளால் இன்ப வாழ்வில் நீடவேண்டும்.*

மு. அறவாழி தமிழரசி 14.9.78

**உட்சட்டை**

அரபி நாட்டிற் பணிபுரியும் திரு. இராசேந்திரன் என் பிறந்த நாட் பரிசாக விடுத்த உட்சட்டை மகிழ்ச்சியோடு பெற்றேன். அவருக்கு நன்றி தெரிவித்தல் வேண்டும். உடனே அவர் முகவரி தெரிவிக்க.

முு. அறவாழிதமிழரசி. 10.2.79

**ஒரு கூட்டாக ஒன்றுபடுக**

தமிழ்ப் பற்றுள்ளவரும் என்பெயர்க் குடும்பத்தைச் சேர்ந்தவரும் உ.த.க. உறுப்பினரும் ஆகிய அனைவரும் ஒரு கூட்டாக ஒன்று பட்டுத் தமிழ்த் தொண்டாற்றுக.

ஆ. கருப்பையா. 20.8.79

ஓட்டப்பிடாரம்

# திரு. குமார. சுப்பிரமணியம் அவர்களுக்கு

### எழுதியவை

*கால்டுவெல் ஐயர் திராவிட ஒப்பியல் இலக்கண முன்னுரையையும் சடகோபராமானுசாச்சாரியாரின் நன்னூற் காண்டிகையுரையில் நூலாசிரியர் வரலாற்றையும் பார்க்க.*

அண்ணாமலை நகர் 22.7.59

*அம்மை > அம்மான் = அம்மையின் உடன் பிறந்தவன் (தாய்மாமன்)*

*அந்தன் = தந்தை.*

*அத்தன் > அத்தை = தந்தையின் உடன் பிறந்தவள்.*

அண்ணாமலை நகர் 6.11.59

*'வான்', 'ஒலி' இரண்டும் தொன்றுதொட்டு வழங்கிவரும் தூய் தென் சொற்கள். Radio என்னும் ஆங்கிலச் சொற்கு நேர் தென்சொல்லாக அவை இரண்டையும் இணைத்தது சில்லாண்டுகட்கு முன்தான்.*

*சமற்கிருத தேவமொழி என்றும், பிராமணர் நிலத்தேவர் (பூசுரர்) என்றும் நம்பித் தமிழர் பகுத்தறிவிழந்து விட்டதனால் ஆரியச் சார்பான கட்சிக்காரர் எதைவேண்டுமெனினும் சொல்லலாம். 'வானொலி' வடசொல்லென்று சொல்லக் கேட்ட அவையோர் அமைதியாயிருந்ததே அவரின் பகுத்தற் வின்மைக்குப் போதிய சான்றாம்.*

*'வான்', ஒலி' இரண்டும் தொல்காப்பியத்திலும் உள்ளன. வான் + அம் = வானம்.*

*'வான்' முகிலையும் மழையையும் வானத்தையும் குறிக்கும் தெலுங்கரும் மழையை 'வானம்' என்பர்.*

அண்ணாமலை நகர் 19.8. '59

இன்று என் சம்பள வேலையும் வேறு வருவாயும் இன்றி யிருப்பதால் குறைந்த பக்கம் இருபது உருவா வேனும் விடுத்தால் தான் கட்டுரை யனுப்ப முடியும்.

காட்டுப்பாடி 10.10. '65

வெளிவரவேண்டி என் நூல்கள் ஏறத்தாழ முப்பது. அடுத்து வரவேண்டியவை : தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, திருக்குறள் தமிழ் மரபுரை என்பன. இவற்றுள் ஏதேனும் ஒன்றுக்குத் தங்கள் களக்காட்டு நண்பர் உதவலாம்.

ஆங்கில நூல் வெளியீட்டிற்கு ஏற்பாடு செய்கின்றார். பர்.மெ. சுந்தரம் அவர்கள். சில மாதங்கட்கு முன் சொன்னார்கள். அது தாங்கள் குறித்துள்ள கொடைவள்ளல் நினைவு மலர்க்குக் கருத்தின் போலும்.

கொடைவள்ளல் அரிராம் சேட்டு முக்கூடல் செக்கலால் ராம் சேட்டுக் குழும்பின் உரிமையாளர் என்று நினைக்கின்றேன். செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பதுபோல் இறந்தும் ஈந்தார் என்று கொள்ள வேண்டியிருக்கிறது.

காட்டுப்பாடி 13.11. '65

நாளை நின்று சென்னை சென்று பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும் என்னும் நூலை அச்சிற்குக் கொடுக்கப் போகிறேன். பொருள் அதற்குதவியவர் திருச்சி மாவட்டத் தமிழன்பர்.

காட்டுப்பாடி 13.11. '65

The Primary Classical Language of the world (முதல் இலக்கியச் செம்மொழி) என்னும் ஆங்கில நூல் கால்டுவெலார் ஒப்பியல் இலக்கணம்போல் உலக முழுதும் பரவும். கொடை வள்ளல் சேட்டு புகழும் பரவும்.

நினைவு நூல் என்று குறிப்பது மட்டுமன்றி அவர் படமும் பொறிக்கப்பெறும். அவர் சிறப்புப் பண்புகளை எடுத்துக் காட்டும் ஓர் (தென்மொழி) மன்னைக் காஞ்சிப் பாவும் இயற்றிச் சேர்க்கப்படும்.

நூல் நூற்பதாண்டு ஆராய்ச்சியின் விளைவு. வரலாறு மொழிநூல் மாந்தனூல் ஆகிய முந்நூற் சான்றுகளொடு கூடியது. புதைந்து கிடக்கும் ஓர் அரும் பேருண்மையை உலகிற் கெடுத்துக் காட்டுவது. குல மத கட்சிச் சார்பற்றது. எவரும்

மறுக்கொணாதது. தமிழின் தொன்மையையும் தமிழின் பெருமையையும் முதன் முதலாய் உலகுக்கறிவிப்பது. சுருங்கச் சொல்லின் தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் என்னும் உண்மையை நாட்டுவது.

முடிக்கல் (Crown) அளவில் 500 பக்கமும் பகுதி அளவில் (Deny) 400 பக்கமும் வரும். ஈராயிரம் உருபாவிற்கு மேற்படாது.

எவ்வகையிலும் ஈராயிரத்திற்கு மேற்செல்லாதவாறு பார்த்துக்கொள்வேன். இயலுமாயின் ஆயிரத்தைந்நூற்றிற்குள் முடிக்கப் பார்க்கிறேன்.

பொத்தக அளவு (Demy) அல்லது அரைய (Rayal) அளவாயிருக்கும். முடிக்கல் (Crown) அளவாயிருக்காது. அது மிகச் சிறிது. எழுத்து 10 அல்லது 11 புள்ளியாயிருக்கும். தாள் மேல்கரை (West Coast)26 சேர் (Pound) கொண்டது நல்லது. இவையெல்லாம் அச்சகத்தாருடன் கலந்து முடிவு செய்தல் வேண்டும்.

காட்டுப்பாடி 22.11. '65

இலத்தீன் கிரேக்கம் முதலிய ஆரிய மொழிகளிலுள்ள தமிழ்ச் சொற்களைத் துல்லியமாய்க் காட்டுதற்கு (a.i.u.I.o ஆகிய)நெடிற்குறியெழுத்துக்களும் u ~ n n l v n h அல்லது k r, s, b, ., ., -, -, -, -, முதலிய) மெய் வேறுபாட்டுக் குறியெழுத்துக்களும் வேண்டும்.

இவை திரு. பூபதியார் அச்சகத்தில் இருப்பதும் இன்மையும் தெரியவில்லை. இல்லாவிடின் உடனே சென்னை வார்ப்பகங்களில் வாங்கிக் கொள்ளல் வேண்டும். அதற்கிசையாவிடின் சென்னை அச்சகங்களுள் ஒன்றைத்தான் நாடவேண்டும். கூலி அதிகமாயினும் வேலை விரைந்து நடக்கும் அதற்குச் சின்னராசு அவர்கள் இசைவார்களா என்பது தெரியவில்லை. அவர்கள் தேர்விற்குப் பணம் கட்டிவிட்டதனால் ஒரு கவனமாய்ப் பழத்தலே நலம்.

தென்மொழியாசிரியர் துரை மாணிக்கத்திற்கு இந்தியெதிர்த்தது பற்றி 4 மாதம் கடுங்காவல் இங்குள்ள சிறைக் கோட்டத்திலிருக்கிறார்.

காட்டுப்பாடி 30.11. '65

திரு. கா. அப்பாத்துரை என் நெருங்கிய நண்பர்; என்னோடு ஒத்த கருத்தினர்; சிறந்த தமிழன்பர்.

*இரு கிழமைக்குமுன் இங்கு என் அறைக்கு அவரை வர வழைத்திருந்தேன். வந்தார். நம் ஆங்கில நூல் மெய்ப்புத் திருத்து மாறு கேட்டேன். இணங்கினார். ஆயின், அவர் தேனாம் பேட்டையில் இருப்பதாலும், இங்கு நாள்தொறும் வர உடல்நிலை இடந்தராமையாலும், நானே திருத்தின் சில சிறு மாற்றங்கள் அவ்வப்போது செய்ய வாய்ப்பிருப்பதனாலும் அவ்வேற்பாடு விடப்பட்டது.*

*நூல் வெளியிட இறந்த நாளினும் பிறந்த நாளே சிறந்ததாகும். ஆதலால் அம்முடிவு மிகப் பாராட்டத் தக்கதே.*

சென்னை 8 சுறவம் (தை) 1997

# என் தமிழ்த்தொண்டு இயன்றது எங்ஙனம்?

**(ஞா. தேவநேயன்)**

*நான் வடார்க்காடு மாவட்ட ஆம்பூரில் மிசௌரி நல்லஞ்சல் உலுத்தரின் விடையூழிய* (M.E.L.M.) *நடுநிலைப் பள்ளியிற் படிப்பு முடிந்தபின், நெல்லை மாவட்டப் பாளையங் கோட்டையில் திருச்சைவ விடையூழியக் கூட்டரவு* (C.M.S) *உயிர்நிலைப்பள்ளியிற் பள்ளியிறுதிக் கடவைக்குச் சேர்ந்து, 4ஆம் படிவத்தில் பூத நூல் உடல் நூல் நிலைததிணை நூல்* (Botany) *தொகுதியையும், 5-ஆம் படிவத்தில் சுருக்கெழுத்து தட்டச்சு கணக்கு வைப்பு* (Book-keeping) *த் தொகுதியையும், 6-ஆம் படிவத்தில் வரலாறு தமிழ்த் தொகுதியையும், சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தேன். அன்று ஆங்கிலப் பற்றாள னாகவும் பேச்சாளனாகவும் மாணவர் (ஆங்கில) இலக்கிய மன்றச் செயலாளனாகவும் இருந்ததனால், ஆங்கில இலக்கியத்தைக் கரை காணவும், ஆக்கசுப் போர்டு* (Oxford) *என்னும் எருதந்துறையிற் பணி கொள்ளவும் விரும்பினே னாயினும்; இறுதியில் தமிழ் கற்றதினாலும், இசைப்பாட்டும் செய்யுளும் இயற்றி வந்ததனாலும், இசைத் தமிழ்ப் பித்தனான தனாலும் நான் அறியாவாறு இறைவன் என் மனப்பாங்கை மாற்றியதானாலும், நான் கற்ற ஆம்பூர்ப் பள்ளியிலேயே. அது உயர்நிலைப் பள்ளியாக வளர்ச்சியுற்றிருந்தபோது, உதவித் தமிழாசிரியனாக 1921 ஆம் ஆண்டில் அமர நேர்ந்தது. அதன் பின், அப்பதவிற்கும் தலைமைத் தமிழாசிரியப் பதவிக்கும் முழுத்தகுதி பெறுமாறு, 1924 ஆம் ஆண்டு மதுரைத் தமிழச்சங்கப் பண்டிதத் தேர்வெழுதித் தேறினேன். அதனால் எழுந்த செருக்கினாலும் தமிழ்வெறியினாலும், ஆங்கிலத்தை அறவே புறக்கணித்து நான் ஆங்கிலம் பேசக் கூடாதென்றும் பிறர் பேசின் செவி மடுக்கக் கூடாதென்றும், சூளிட்டுக் கொண்டேன். அம்மயக்குப் பத்தாண்டு தொடர்ந்தது. அதனால், தமிழாராய்ச்சியில் ஆழ முழுகித் தமிழின் அடிமட்டத்தைக்*

கண்டேனாயினம், ஆங்கிலப் பேச்சாற்றலை இழந்து விட்டதனால், ஆங்கிலப் பட்டம் பெறும்வரை கல்லூரியுட் கால் வைக்க முடியாது போயிற்று. அதனாற் பதவியுயர்வும் பொருளியல் முன்னேற்றம் இல்லாதுபோயின.

1938இல் நான் திருச்சிப் புத்தூர் ஈபர் மேற்காணியார் (Bishop Heber) உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியனாக இருந்தபோது திரு. (C) அரசகோபாலச்சாரியார் தமிழ் நாட்டு முதலமைச்சராகி இருநூறு உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்தினார். உடனே தமிழர் எதிர்ப்பு எழுந்தது. இந்தி புகுத்தப்பட்ட பள்ளிகட்கு முன் மறியல் செய்த தமிழ்த் தொண்டர் சிறையிடப்பட்டனர். பெரியாரும் அதற்காளாயினர். முறைப்பட்ட தமிழ்க் காப்பு வகுப்பு வேற்றுமையக் கிளர்ச்சியாகத் திரிக்கப்பட்டது. சிறைத் தண்டனையுற்ற தமிழ்த் தொண்டரின் தற்காப்பிற்காக 'ஒப்பியன் மொழிநூல் - முதற்புத்தகம் - முதற் பாகம்' என்னும் நூலை எழுதினேன். ஆயின், அதனை வெளியிடத் தமிழ்ச் செல்வரும் தமிழ்க் கட்சித் தலைவரும் முன்வரவில்லை; சிறு தொகையும் உதவவில்லை. அதனால், என் அடங்காத் தமிழ்ப்பற்றும் மடங்காத் தன்மானம், என் கைப்பொருள் கொண்டு அதை வெளியிட்டு ஓராயிரம் ரூபாஇழக்கச் செய்தன. அங்ஙனந் தாங்கொணாச் சூடு கண்டதினால் அதன்பின் என் சொந்தச் செலவில் எத்தகை நூலையும் வெளியிட மிகவும் அஞ்சினேன். துணிந்து வெளியிடப் பொருளும் என்னிடமில்லை.

அந்நிலையில், இலக்கணம்., சொல்லாராய்ச்சி, மொழி யாராய்ச்சி, அரசியல், வரலாறு, விளையாட்டு முதலிய இலக்கியப் பொருள் பற்றியனவும், புலமக்களன்றிப் பொதுமக்கள் ஒவ்வாதனவும், விரைந்து விலையாகாதனவும், ஆரிய வெறியர்க்கு மாறானவும், வெளியீட்டிற்குப் பெருஞ் செலவு செய்ய வேண்டியனவும், சிறியவற்றோடு பெரியனவுமான **இயற்றமிழ் இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திரவிடத் தாய், சுட்டுவிளக்கம், முதற்றாய் மொழி, பழந்தமிழாட்சி, மாணவர் உயர்தரக் கட்டுரை யிலக்கணம் (2 பாகம்)** என்னும் எண்ணூல்களொடு, நான் ஏற்கெனவே வெளியிட்ட **கட்டுரை விரைவியல்** என்னும் நூலையும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக ஆட்சி மேலாளரான தாமரைத் திரு.வ.சுப்பையாப் பிள்ளை அவர்கள் வார முறையில் (Royalty System) ஒவ்வொன்றாக வெளியிட்டு, விற்பு விலையில்

நூற்றுமேனி 15 விழுக்காடு உரிமைத் தொகையும் ஆண்டிற்கிரு முறை கணித்து ஒழுங்காக அனுப்பி வந்திருக்கின்றார்கள். இதனால், நான் ஒருபோதும் வெளியிட்டிருக்க முடியாத பல அரிய நூல்கள் வெளிவந்து என்பெயர் உண்ணாடும் வெளிநாடும் பரவியதுடன். என் தமிழ்த் தொண்டும் பன்மடங்கு சிறந்து வந்திருக்கின்றது. அவர்கள் ஒப்பந்தப்படி விடுத்துவந்த அரையாட்டைத் தொகை, என் குறைந்த சம்பளக் காலத்தும் வேலையில்லாக் காலத்தும் பெரிதும் உதவியதென்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை. அதோடு, அவ்வப்போது நான் ‘செந்தமிழ்ச் செல்வி’க்கு, விடுத்த வேர்ச்சொல் பற்றிய என் உரிமைக் கட்டுரைகட்கும், அவர்கள் அளித்து வந்த அன்பளிப்புத் தொகை எனக்குப் பேருதவியாயிருந்ததென்பதைச் சொல்லாமலிருந்ததற்கில்லை.

இனி, அவர்கள் என் சொந்த வெளியீடான தமிழ் வரலாறு, வடமொழி வரலாறு, இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? வண்ணனை மொழி நூலின் வழுவியல், திருக்குறள் தமிழ் மரபுரை என்னும் நூல்கள் அச்சானபோதும், எனக்கு மறைமலையடிகள் நூல் நிலையத்தில் தங்க இடந்தந்தும், இறுதிப் படிவ மெய்ப்புக்களையெல்லாம் மூலத்துடன் ஒப்பு நோக்கிப் பொறுத்தமையாகவும் செவ்வையாகவும் திருத்திக் கொடுத்தும், அச்சானவுடன் அழகாகக் குறித்த காலத்திற்குள் கட்டடம் செய்வித்தும். அனுப்பச் சொன்ன இடங்கட்கெல்லாம் தப்பாது அனுப்புவித்தும், வேண்டும் போதெல்லாம் வேண்டிய அளவு கடன் தந்துதவியும், பல்வேறு வகையிற் செய்துவந்த உதவியும் வேளாண்மையும் முற்றச் சொல்லுந் திறத்தவல்ல.

அவற்றுள் சிறப்பாக, அண்மையில் வெளிவந்த திருக்குறள் தமிழ் மரபுரைக்கு அவர்கள் திருத்தம், அச்சீடு, கட்டடம், விடுக்கை, கடன் கொடுப்பு ஆகிய ஐவகையிற் செய்த அரும் பேருதவிக்குத் தமிழுலகனைத்தும் என்றும் கடப்பாடுடைய தாகும். தங்கள் பல்துறைப் பணிகட்கிடையே இறுதிப்பதின் படிவங்களையும் மெய்ப்புத் திருத்தியதுடன், ஈற்றிருபடிவங் களைத் தங்கள் சொந்தப் பணியாட்களைக் கொண்டும் அடுக்குவித்து, ஒரு கிழமை வினையை ஒருநாட்குள் முடித்துப் பறம்புக்குடி உலகத்திழ்க் கழகத் திருவள்ளுவர் ஈராயிர ஆட்டை விழாவிற்கு நூறு படிகள் விடுத்துதவியது ஓரளவு இறும்பூதுச் செயலேயாகும். சுருங்கச் சொல்லின், 1968 நவம்பர் முதற்பகல் பாரி அச்சகத்தில் அச்சிடக் கொடுத்த என் திருக்குறள் தமிழ்

*மரபுரை, 1969 திசம்பர் 24ஆம் பக்கல் வெளிவரச் செய்தவர்கள் திரு. வ. சுப்பையாப்பிள்ளை அவர்களே. அவர்கள் தலையிட்டிரா விடின், அவ்வுரை குறைந்த பக்கம் ஆறு மாதம் பொறுத்தே வெளிவந்திருக்கும். அதனால் எனக்குப் பெரும் பொருளிழப்பும் நேர்ந்திருக்கும்.*

*இனி, அண்மையில் நான் என் வலக்கண் படல அறுவை செய்து கொண்டபோது, இருகிழமை படுக்கையும் உணவும் மருந்தும் விடுத்தும் ஊர்தியனுப்பியும் உதவியதை ஒருபோதும் மறவேன். என் நூல் வெளியீட்டிற்கு என் உடல் நலமும் இன்றி யமையாதலின், இதையும் இங்கே கூற வேண்டிதாயிற்று.*

*இங்ஙனம் பல்வகையிலும் என் தமிழ்த் தொண்டை இயல் வித்து, மும்மொழிப்புலமை செம்மையிற் பெற நிறைபுல முடியாம் மறைமலையடிகளும் என்னை உளமுவந்து பாராட்டு மாறு செய்த திரு. வ. சுப்பையாப் பிள்ளை அவர்கட்கு நான் செய்யக்கூடிய கைம்மாறு, உலகத் தமிழ்க் கழக உறுப்பினரையும் ஏனைத் தமிழன்பரையும், என்றும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளையே வாங்கியும் வாங்குவித்தும், அவர்கள் வெளியீட்டுக் கலை வெற்றியை வியந்தும் நயந்தும், இன்னும் கழிபல்லாண்டு கட்டுடம்புடன் வாழ்ந்து அவரவர்கள் தங்கள் செந்தமிழ்த்தொண்டைத் தொடர்ந்து செய்யுமாறு ஊக்கிவர வேண்டுமென்று, ஆர்வத்துடன் வேண்டிக் கொள்வதேயன்றி வேறன்று.*

சைவசித் தாந்தநூல் சார்பதிப்ப கம்வாழி
தெய்வத் திருவள் ளுவம்வாழி- செய்வெற்றச்
சுப்பையா வாழி சொரிமுகில் நீடுழி
தப்பாது வாழி தமிழ்.

*செய்-செயல்; வெற்றம்- வெற்றி.*

❑ ❑ ❑

# இணைப்பு

## தமிழர் மதம்

*பிள்ளையார் வணக்கம் தமிழரதன்று. கி.பி. 5 ஆம் நூற்றாண்டிற்குப்பின் ஆரியர் புதிதாகப் படைத்தது. ஓ என்ற மூலமந்திர வாக்கு யானை வடிவொத்திருத்தல் பற்றி யானை முகத்தெய்வமென்று தோற்றி, சேயோன் அல்லது சிவன் என்று ஒரு தெய்வமாக இருந்ததை வேறு தெய்வமாக வகுத்துத் தந்தையும் மக்களுமாகக் கட்டிப் புராணங்களும் வரைந்து, தமிழரின் உயர்ந்த கடவுள் மதத்தைச் சிதைத்து ஆரியப் படுத்திவிட்டனர். மாந்தன் முகத்திலேயே கடவுள் இல்லை. அங்ஙன மிருக்க யானை முகத்தில் எங்ஙனம் இருக்க முடியும்? சிவவணக்கம் அல்லது கடவுள் வணக்கம் இருந்தாற் போதும். இதன் விரிவான விளக்கத்தை என் தமிழர்மதம் என்னும் நூலில்தான் காணமுடியும்.*

*மணமக்கள் பிள்ளைகளைப் பெற்றுக் குடும்பம் பெருகி வழிவழி தொடர்ந்து வருவது அருகம்புல் வேரூன்றல் போல் இருத்தலால் அறுகையும் உணவுத் தட்டில்லாமல் வாழவேண்டு மென்று அரிசியையும் அடையாளமாகத் தூவி வாழ்த்தினர் முன்னோர். இக்காலத்தில் அவ்வடையாளமின்றியும் வாழ்த்த லாம்.*

*ஐம்பூதங்களுள் நீ தெய்வத் தன்மையுள்ளதென்று தெய்வச் சான்றாக விளக்கேற்றி மணமக்கள் சூளிட்டனர். கடவுளை உள்ளத்திலேயே தொழலாம். ஆரியர் கடவுள் வணக்கமாகத் தீயையே வணங்கி வந்ததால் தீவலம் வருவதைச் சடங்காகக் கொண்டிருந்தனர். அது தமிழர் வழக்கமன்று. கடவுள் எங்கும் நிறைந்திருப்பதால் உள்ளத்திலேயே எண்ணிச் சூளிடலாம்.*

க.பெ.சி.க. ஆடவை 2000

## சிவநெறி

*கிறித்தவ நெறியிற் பிறந்து வளர்ந்தே னாதலால் சிவ நெறியாரின் இறுதிச் சடங்குகள் பற்றி ஒன்றும் அறிந்திலேன். அக்கம் பக்கத்திலுள்ள முதியரை வினவித் தெரிந்து கொள்க.*

வாழைக்கு என்றும் ஈரம் இருக்க வேண்டும்.

இறைவன் போதிய மழை அருள வேண்டுகிறேன்.

க.பெ. சி. 6.12.74

## சிவநெறி

*கணவன் மனைவியர் இல்லற வாழ்க்கை இருபகட்டொரு சகடு போன்றது. அதாவது இரட்டை மாட்டு வண்டியை ஒத்தது. இரு காளைகளும் ஒரு முகமாக இழுத்தால்தான் வண்டி செல்லும். அதுபோல் கணவன் மனைவியர் இருவரும் எல்லா வற்றிலும் கருத்தொத்தே இல்லறம் நடத்த வேண்டும்.*

"காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமஞ் செய்பவே - ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய் நோக்கல்தான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண்"

*என்பது நன்னெறி.*

க.பெ.சி: 28 சிலை 2000

## அனுப்ப வேண்டா

*அறுவை மருத்துவச் செலவிற்கு வேண்டிய 300 உருபாவுள் நூற்றை முந்தியே அனுப்பிவிட்டீர். இனி 200 தான் தேவை. அதில் ஒரு நூற்றை முன்பணமாக அஞ்சல் வாயிலாக அனுப்பி விட்டு ஒரு நூற்றை நேரில் தரலாம். செலவு முன் போன்றே யிருப்பின் தரும் பணம் 50 உருபாத்தானிருக்கும்.*

*திருமணத்திற்கு நான் உறவு முறையில்தான் வந்தேன். ஆதலாற் போகவரச் செலவிற்குக் கொடுத்த 50 உருபா போதும். அன்றனுப்பிய நூறு ரூபாவை என் மருத்துவச் செலவிற்கு விடுத்த முன்பணமாகவே கருதி வைத்திருக்கின்றேன். அத் தொகை இன்னும் என் கையிலுள்ளது. ஆதலால் இனி அஞ்சல் வாயிலாக இம்மாத இறுதியிலேனும் அடுத்த மாதத் தொடக்கத்திலேனும் நூறு ரூபா அனுப்பினாற் போதும்.*

*மீண்டும் பணம் வேண்டியிருப்பின் அனுப்ப வேண்டேன். நான் எங்கேனும் கடன் வாங்கிக் கொள்வேன். அதைப் பின்னர் வெள்ளாமைப் பணம் வந்தபின் அனுப்பலாம். அதற்கு ஓராண் டாயினும் குற்றமில்லை. கடன் வாங்கியேனும் இடர்ப்பாட் டேனும் பணம் அனுப்பவே வேண்டேன். நான் கடன் கொள்வ தென்பது பொத்தகப் பணத்திலிருந்து எடுத்துக் கொள்வதே யன்றி வேறன்று. அது எளிதாய் இயல்வது. பயிர்த்தொழில் இம்மியும் பணத் தட்டியின்றி நடைபெறல் வேண்டும். 'கடனில்லாச் சோறு கால்வயிறு போதும்! எனக்குப் பணம் அனுப்புகிறேன்' என்று சொல்லி விட்டதனால், கடன்பாட் டுணர்ச்சியுடன் காலம் கழிக்கவேண்டன். முழுவுரிமையுள்ளத் துடன் இல்லறம் நடத்துக.*

க.பெ.சி. ச. மடல்கல் 2000

## வேண்டேன்

*பணம் அனுப்பவேண்டேன். இறைவன் வேறொரு வழியில் எனக்குதவி யிருக்கின்றான். மேலைத் தாம்பரத்தில் 2 மாதம் திரு. முத்துக்கிருட்டிணார் வீட்டில் தங்கி நேற்றுத்தான் இங்கு (காட்டுப்பாடி) வந்தேன். பணம் கொடுத்தபோது வாங்க மறுத்தேவிட்டார். என்னை விருந்தோம்பின் செலவு 250 உருபா இருக்கும். அங்குத்தான் திருக்குறள் உரையெச்சம் முற்றும் எழுதப்பட்டது.*

க.பெ.சி. 13 துலை 6.12.74

## வாய்ப்பு இழப்பு

*நும்மிடம் என்றும் உதவிபெறலாம். பிறரிடம் பெற முடியாது.*

*நும் அன்புப் பெருக்கத்தாலும் ஆர்வமிகுதியாலும் பறம்புக்குச் செட்டியார் ஒருவர் கொடுக்க விருந்த பணத்தை நீரே கொடுக்க ஏற்றுக்கொண்டீர். அதனால் அவரிடம் பெறும் வாய்ப்புப் போய்விட்டது. இதைத்தான் அன்று கருதி வருந்தினேன்.*

க.பெ.சி; 2 மடங்கள் 2001

## இசைந்து வாழ்தல்

இனிமேல் உங்கள் இருவரள் யார் எழுதினாலும் சரி; ‘நாங்கள் இருவரும் இசைந்து வாழ்கின்றோம்’ என்றே தொடங்க வேண்டும்.

க.பெ.சி. 20 துலை 2001

## பெரிய பேறு

பெண்களுக்குச் சமவுரிமை நம்நாட்டில் இல்லாததனாலும் அதிகாரம் செல்வம் வலிமை ஆகிய மூன்றும் ஆடவ ரிடத்திலேயே இருப்பதானாலும் பொதுவாகப் பெண்களின் குற்றங் குறைகளையே எடுத்துக் கூறுவார்கள். கணவன் மனைவியைக் கவனிக்காவிடின் கண்டிப்பாரில்லை. உனக்கோ உனக்குச் சமவுரிமை அளிக்கின்ற காதற்கணவனைக் கடவுள் அளித்திருக்கின்றார். இது பெறற் கரிய பேறு. உன் இல்லற வாழ்க்கைக்கு வேண்டிய செல்வத்தையும் இறைவன் தந்திருக் கின்றார். இந்நிலையில் உனக்கொரு குறையுமில்லை. கவலைக் கிடமில்லை. மண்ணுலகிலே விண்ணுலக இன்பம் பெற்று மகிழலாம்.

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்”

என்று திருவள்ளுவர் கூறுகிறபடி முதலில் உன்னைப் பேணி உன்முழு வலிமையாலும் உன் கணவனைப் பேணிப் பிறர் புகழுமாறு நடந்து கொள்வாயாக. கணவனிடத்தில் என்றும் இன்சொல் சொல்லி அன்பாக இரு.

அன்னகாமு க.பெ.சி. 20 துலை 2001

## மனக்கவலை மாற்றல் அரிது

கரை கடந்து கடன்கொண்ட வெட்டியும் கிணற்றில் நீரின்மையும் மழையும் பொய்யாமையும் துன்பமானவையே, ஆயினும் அவை நம் ஆற்றலுக்கு அப்பாற்பட்டவை யாதலால் கவலைப்பட்டும் உடல் நலக்கேடன்றிப் பயனில்லை. எல்லாம் வல்ல இறைவனை நோக்கி உருக்கமாகத் தொடர்ந்து வேண்டுக.

“தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது”

க.பெ.சி; 16.8.77

## கவலைக் கேடு

*என்னையும் நுங்கள்குடும்பத்தில் ஒருவனாக் கருதுவதால், நுங்கள் திறமைக்கு மிஞ்சிச் சிறப்பாக அல்லது மிகையாக எனக்கொன்றும் விடுக்க வேண்டேன்.*

*கடுகளவுங் கவலைக்கிடமான எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. கவலை கறியைத் தின்னும்; பேராசைப்படவுங் கூடாது, போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.... உள்ளதே போதுமென்று பெற்றதுகொண்டு பொந்திகைப் படவேண்டும். வருவாய்க்குத் தக்கவாறே செலவு செய்ய வேண்டும். "வளவன வாயினும் அளவறிந் தளித்துண்" என்பது ஔவையார் பொன்மொழி*

*வளவன் - வளநாடுடைய சோழன்.*

*கடந்து போனதை நினைத்து கவலைப்படக் கூடாது.*

"போனதை நினைப்பார் புத்தி கெட்டவர்."

*இறைவன் துணையைத் தேடி இயன்றவரை முயன்று கூழானாலும் தன் உழைப்பால் வந்ததைக் குடித்து மகிழ்ச்சியா யிருந்தால் நீடு வாழலாம்.*

க.பெ.சி; 2 சுறவம் 2001

## ஒரு விளக்கம்

*முந்தின அட்டையில் பேராசை கூடாதென்று கூறினேன். ஆயின், அதற்குச் சில விலக்குகளுண்டு. பிறர் பொருளைக் கவர்தற்கும் பிறர்க்குதவாது வைத்துக் காத்ததற்கும் வாழ்நாள் குன்றுமளவு உடலை வருத்துவதற்கும் பேராசை கூடாது. இங்ஙனமன்றி இயனற அளவு பொருளீட்டுதல் எல்லார் தலை மீதும் விழுந்த கடமையாம்.*

"அருளில்லார்க்... யாங்கு"

"பொருளல் லவரை... பொருள்"

"எண்பொருள் ... ஒருங்கு"

"செய்க பொருளைச்... இல்"

க.பெ.சி. 28 சுறவம் 2001

## வேலையை விட்டு வரவேண்டேன்

*சென்னைப் பல்கலைக் கழகத்தில் எனக்கு ஓரதிகாரமும் இல்லை. அதில் இன்று பயிற்றப்படும் பாடத்திட்டங்களைப் பற்றியும் ஒன்றும் தெரியாது. அதன் இற்றைத் துணைவேந்தர் எனக்கு மாறானவர். ஆதலால் குறித்த செய்தியில் நான் உதவுவதற்கில்லை.*

*சென்னை மாநிலக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் பர்.மெ. சுந்தரம் என் நண்பர். அவருக்கு இது பற்றித் தெரிந்திருக்கலாம். இங்குவரின் அவருக்குக் கடிதம் கொடுக்கிறேன். போய்ப் பார்க்க ஆயின் இதற்காக தோட்ட வேலையை விட்டுவிட்டு இங்குவர நேரின் கல்லுப்பட்டிக்கும் வருவேன்.*

க.பெ.சி; 12.3.75.

## முழு முயற்சி செய்க

*அடுத்த வீட்டுக்காரர் வாயிலாக அனுப்பிய தூய தேனுக்கு நன்றி. கொடி முந்திரித் தோட்டத்தைப் பற்றிச் சொன்னார். பேரளவாகப் பயிரிடப்பட்டிருப்பதால் கடன்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. பயன்பெறும்வரை முழுக்கவனமும் முழு முயற்சியும் தோட்டத்தைப் பற்றியதாகவே இருக்க.*

*“சனுவரி முதற்கிழமை அல்லது சிலையிறுதி, இங்குச் சென்னையில் உ.த.க. மாநாடு நடைபெறும். அதற்கு வர வேண்டியதில்லை. கும்பம் மீனம் ஆகிய மாதங்களில் தோட்டம் மழைச் சேதமின்றிச் செழிப்பாயிக்க இறைவன் அருள் புரிக. பயன்பெற்ற பின் கடனை அடைக்க. அதன்பின் மறு வேளாண்மைக்குரிய பெருந்தொகையை வைப்பகத்தில் இட்டு வைக்க. ஐயாயிரம் உருபாவாவது எப்போதும் இருப்பில் இருத்தல் வேண்டும். இனிமேல் கடன் வாங்கும் வழக்கத்தை விட்டுவிடுக. இரு பிள்ளைகள் ஆகிவிட்டன. அவர்கள் படிப் பிற்கு வேண்டிய தொகையை இப்போதே சேர்த்து வைக்க.*

*அகர முதலி யுரவாக்கத்தை அரசு மேற்கொண்டு விட்டதனால், அதற்குப் பணமனுப்ப வேண்டேன்.*

*பெருஞ்சித்திரனார் இங்குக் குடியமர்ந்து ஒரு மாதத் திற்கு மேலாகின்றது (1, லால் பேகம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.) தென்மொழி அச்சக வேலை நடக்கிறது.*

*நாங்கள் இருவரும் ஒரே யிடத்தில் இருப்பதால் தேன் அனுப்பின் இருவர்க்கும் அனுப்பவேண்டும். எனக்கனுப்பா விடின் குற்றமில்லை.*

க.பெ.சி. 25.5.77

**நீலமலை**

*ஆட்சிக்குழுக் கூட்டம் முடிந்த பின் நான் திரு. இளமாற னுடன் இன்று இங்கு வந்து (நீலமலை) குளிர்ச்சிக்காகத் தங்கியிருக்கின்றேன். இன்னும் ஒரு கிழமை இங்கிருப்பேன். அதற்கள்காட்டுப்பாடியிலும் வெப்பந் தணிந்துவிடும்.*

க.பெ.சி; 10 அலவன் 2000

**பாராட்டு**

*மாநாட்டில் உங்கட்குப் பாராட்டும் பட்டாடை போர்ப்பும் ஒரு நிகழ்ச்சியாகும். அது நிகழ்ச்சி நிரலிலும் குறிக்கப்பட்டு விட்டது. அது அச்சானவுடன் உங்கட்கு ஒருபடி வரும்.*

இர.மு.கி; 15.12.69

**கற்றதன் விளைவு**

*நும் அன்பான திருமுகம் பெருவண்மைப் பணவிடையும் பெற்றேன் நன்றி.*

*எனக்கு மூப்பைப் பற்றிக் கவலையில்லை. இறைவனருளால் என் நூல்களெல்லாம் வெளிவரும்வரை இவ்வுலகத்திலிருப் பேன். வடமொழியினின்று தமிழை மீட்கும் என் வாழ்க்கைக் குறிக்கோளும் இன்னும் மூவாண்டிற்குள் முற்றும் நிறை வேறிவிடும்.*

*இன்று என் கண்ணறுவை பற்றித்தான் கவலை. கடந்த அரைநூற்றாண்டாக அல்லும் பகலும் பல்துறை நூல்களைக் கற்று வந்ததன் விளைவு இது. ஈராண்டிற்கு முன் சென்னைத் தங்கசாலைத் தெருவிலுள்ள கண்ணறுவையர்சுப்பிரமணிய னாரிடம் இடக்கண் படல அறுவை செய்து கொண்டேன். இன்று வலக்கண்ணிற்கும் அவரிடம்தான் செய்து கொள்ள வேண்டும். முந்தின அறுவைக்கு 250 உருபா சென்றது. இன்றும் அவ்வளவுதான் செல்லும். ஒருகால் மருந்து கூடியிருப்பினும் 50 இதற்குமேற் போகாது.*

வலக்கண் படலம் பழுத்து வருகின்றது. இன்னும் ஒரு மாதத்திற்குள் பழுத்துவிடும். அதன்பின் உடனே அறுவை செய்து கொள்வேன்.

க.பெ.சி; 16 விடை 2000

**மருத்துவம்**

22 ஆம் பக்கல் ஆட்சிக் குழுக்கூட்டத்திற்கு வரவேண்டிய தில்லை. இதை நானே எழுதுவதற்கு இருந்தேன்.

வேனில் இன்னும், கழியாமையாலும் மழை பெய்யாமை யாலும் திருக்குறள் தமிழ் மரபுரை இன்னும் 400 குறளுக்கு எழுத வேண்டியிருப்பதானலும் கண்ணறுவையை ஒரு மாதம் பொறுத்துச் செய்து கொள்ள விரும்புகிறேன். நுமக்கும் தேன் மதி கழியட்டும்.

வெப்பநாளில் கண்ணறுவை செய்து கொள்ளின் எரிச்சல் எடுக்கும். நீர்வளமில்லாக் காலத்திற் சென்னை விடுதியில் தங்குவதும் ஏந்தாக விராது.

நீர் இன்று என்மகன் போலிருப்பதால் திருமணத்திற்கு வருகின்றேன். குறுக்கு அல்லது சுருக்கு வழி எது? எந்தப் புகைவண்டி நிலையத்தில் இறங்கவேண்டும்? இரவில் வழங்கு வதற்குப் போதிய கண்ணொளியின்மையாலும் தூக்கம் கெடாமைப் பொருட்டும் பகலில்தான வழிப்போக்கு வைத்துக் கொள்ளவேண்டும். ஆதலால் அரசினர்பேரியங்கியே. புகை வண்டியிலும் ஏந்தாகவிருக்கும். மதுரைப்பேரியங்கி யேறி அம்மை நாயக்கனூரில் இறங்கலாமா? அங்கிருந்து அரசினர் பேரியங்கியில்லாவிடினும் தனியார் பேரியங்கியாவது வத்தலக் குண்டிலாவது என்னை வரவேற்கத் தெரிந்த ஆள் காத்திருக்க வேண்டும்.

19ஆம் பக்கல் வருவேன். 21 ஆம் பக்கல் திருச்சிக் கூட்டத் திற்குத் திரும்புவேன்.

ஒரு மாதங்கழித்துக் கண்ணறுவையரைச் சென்னையில் கண்டு நாள் திட்டமானபின் அங்கிருந்து நுமக்குக் கம்பிச் செய்தி விடுப்பேன். நீர் உடனே வரலாம். உடன் மறுமொழி விடுக்க.

க.பெ.சி. 9 ஆடவை 2000

## மருத்துவம்

*கண்ணில் வலியிருக்கும்போது படிக்கக்கூடாது. இது வேனிற்கால மாதலால் வெயில் நேரத்தில் வெளியே செல்லவுங் கூடாது. விளக்கொளியைப் பார்ப்பதும் நீண்ட நேரம் கண் விழித்திருப்பதும் கூடா. திரைப்படத்தைப் பார்க்கவே கூடாது. சூடும் பித்தம் ஊதையும் (வாயுவும்) விளைக்கும் உணவுப் பொருள்களை முற்றும் விலக்கி விடவேண்டும். நாள்தொறும் தண்ணீற் குளித்து அறிவன் காரிய நல்லெண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் தேய்த்துக் குளித்திட வருக. குளம்பியை (காப்பியை) நிறுத்தி விட்டு மோர், பதநீர், இளநீர் முதலிய தன்குடியையே பருகி வருக. பழையதம் தயிர்ச்சோறும் உண்டு வருவது நன்று. எலுமிச்சஞ் சாற்றைக் கலந்து தேய்த்துக் குளிக்கலாம். சீனி சேர்த்துக் குடிக்கலாம். நுங்கு, கொடிமுந்திரி, வெள்ளரிப்பழம் முதலியன உண்ணலாம். காலிமுள்ளங்கி* (Carrot) *கண்ணிற்கு நன்றென்பர். அதை அடிக்கடி சமைத்துண்க.* 'Optrex *என்றொரு கண்கழுவி நீர் ஆங்கில மருந்துக் கடைகளில் கிடைக்கும். அதை வாங்கி நாள்தொறும் இருவேளை கண்கழுவி வரலாம்.*

*நண்பகலில் தலையை (மண்டையை)க் குளிர்ந்த துணியால் மூடிக் கொள்க.*

*தமிழர் வரலாறு எழுதி வருகின்றேன்.*

*எதற்கும் வீண் கவலை கொள்ளற்க.*

க.பெ.சி; 10 மீனம் 2001

*நாட்பட்ட புண்ணை நாட்டு மருத்துவக் களிம்பே விரைந்தாற்றும்.*

க.பெ.சி; 20 கன்னி 2002

## குழந்தை நலம்

*குழந்தைகள் மேனி மென்மையாயும் உடம்பு நொய்ம்மை யாயும் இருப்பதால், தட்ப வெப்ப நிலை மாறினும், தாயுணவு தகாவிடினும், நெடுந்தொலைவழிச் செல்லினும், தீய நாற்றம் வரினும், முரட்டுத்தனமாய்த் தூக்கினும் நெடுநேரம் உடம்பு அசைவுறினும் ஊட்டக்குன்றினும், உடைகாலநிலைக்கொவ்வா விடினும் எளிதாய்நோய் தாக்கும்.*

குழந்தை நலம் பேணுவதில், பின் மருந்தினம் முன்தடுப்பே எல்லா வகையிலும் ஏற்றதாகும். தாய்ப்பாலுண்ணும் குழவிக்கும், குழந்தைக்கும் தாய் தன் உணவைச் சரிப்படுத்திக் கொள்வதே நோய் தடுக்கும் சிறந்த முறை.

குழவிக்கு மார்ச்சளியிருக்கும்போது தாய் குளிர்ச்சியான உணவை உண்ணக்கூடாது. முந்திரிச்சாறு (பிராந்தி) ஒரு சில துளிகளில் நீர்கலந்து உறை மருந்துபோல் கொடுக்கலாம். குழந்தை மருத்துவத்தில் அல்லது வளர்ப்பில் தேர்ச்சி பெற்ற மூதாட்டியார் அல்லது மருத்துவர் ஒருவரைத் துணைக் கொள்வது நல்லது. இறைவன் திருவருளை வேண்டுவதும் இன்றியமையாதது. ஆறு மாதம் முடியும் வர மிகக் கண்ணுங் கருத்துமாகப் பேணிக்காத்தல் வேண்டும்.

பூவைப்போல் தொடவும் பொன்னைப் போற் போற்றவும் புத்தேள் (தெய்வம்) போல் தூய இடத்தல் வைக்கவும் வேண்டும்.

வருகின்ற வேனிற்கு நானும் பெருஞ்சித்திரனாரும் வால் பாறை செல்வோம். திரும்புகாலில் இயலுமாயின் கல்லை வருவோம்.

செ.சொ.பி.பே.அ. வேலை தொடங்கிவிட்டேன். கல்லைப் பக்கம் சிறப்பாக ஏதேனும் சொல்வழங்கின் பொருளுடன் தெரிவிக்க.

க.பெ.சி. ; மீனம் 2002 (18.3.71)

## மருத்துவம்

திரு. நித்தலின்பனார் நுங்கள் அன்பளிப்பு முடங்கல் திணர் ஆறு கொண்டு வந்து கொடுத்தார். நன்றி.

மஞ்சட் காமாலைக் காக்கை கறி நன்மருந்தென்பர். அதை மறைவாகச் சமைத்துக் கொடுத்தல் வேண்டும். திருச்சித் திரு. வெள்ளிமலையாரம் சென்ற ஆண்டு அந்நோயால் வருந்திப் பின்னர் மருத்துவம் பெற்று நலமடைந்தார். அவரையம் வினவி யறிதல் வேண்டும்.

நோய் நீக்கத்தினும் நோய்த் தடுப்பே சிறந்ததாதலின் நோய் முதல் நாடி அது மீண்டும் நேராதவாறு முதற்காப்பாயிருந்து கொள்க. அடுப்பெரிக்கவும் அம்மியரைக்கவும் உடனே ஒரு தக்க பெண்ணை அமர்த்திக் கொள்க. காயச்சரக்கு (மல்லி சீரகம்) அரைப்பதும் மாவாட்டுவதும் கடிய வேலை.

*மாலை 8 மணிக்கு நீங்கள் திரும்பாவிடினும் தப்பாது உண்டு விடச் சொல்க.*

இரா.மு.கி; 30.1.70.

**குறிஞ்சி**

*குறிஞ்சியில் ஈராண்டிற் கொருமுறையும், நாலாண்டிற் கொருமுறையும் ஆறாண்டிற்கொருமுறையும் பன்னீராண்டிற் கொருமுறையுமாகப் பூக்கும் நால்வகை யுண்டெனச் சென்ற ஆண்டு ஏர்க்காட்டுப் பயிர்த்தொழில் அலுவலர் சொல்ல அறிந்தேன். பத்தாண்டிற்கொருமுறை பூப்பதும் உண்டெனின், மொத்தம் ஐவகை உண்டெனக் கொள்ளல்வேண்டும்.*

*குடந்தை விழாப்போல் பன்னீராண்டிற்கொருமுறை பூக்கும் வகையொன்று இருத்தலாலேயே, அது மாமாங்கம் (மகாமகம்) செடி என்ற பெயர் பெற்றுள்ளது அப்பெயரே ஏர்காட்டுப் பொதுமக்களிடம் வழங்குகின்றது. முந்தின பூப்பு 12 ஆண்டிற்கு முன் நிகழ்ந்ததாகச் செய்தித்தாளிலும் ஒருவர் எழுதியிருந்தார்.*

*மாறாட்டுச் சமையத்தில் ஒரு செடி பூப்பதாயிருந்தாலும் பார்த்தல் நன்றே.*

*எனக்கு நாற்புதல்வரும் ஒரு புதல்வியும் ஐவர் மக்கள்.*

*மூத்தவன் கொடுமுடியிலும் அடுத்தவன் சேலத்திலும் மூன்றாமவன் சென்னையிலும் கடையன் காட்டுப்பாடியிலும் இருக்கின்றனர். மகள் இங்கிருக்கிறாள் (சென்னை.)*

க.பெ.சி; நளி 2000

**எருதந்துறை**

*நன்றியுரைப் பாட்டில் யோமண, தேய என்பவற்றை யேர்மண, நேய என்று திருத்திக் கொள்க.*

*தான் இதனினும் பெரிய பொத்தகம் எழுதத்தக்க பெரியோனாவான் என்று நக்கீரனுக்குச் சொல்க. எருதந்துறை வாணர் வியக்குமாறு ஆங்கிலப் பேச்சில் தேர்ச்சி பெற வேண்டு மென்று ஊக்குக.*

*அம்மையார் நாள்தொறும் பன்மடி உயிரியல் மாத்திரை உட்கொண்டு வருகின்றாரா? நன்கொடையாகவும் வந்ததனால்*

அதன் அருமையை அறியாதிருக்கலாம். தி.த.ம. உரையை ஒழுங்காகப் படித்து வரச்சொல்க. நாள்தொறும் பிற்பகலில் படிப்பிற்கென்று ஒருமணி நேரம் ஒதுக்கி வைக்கவேண்டும். மெய்வருத்த வினைகட்கெல்லாம் வேலைக்காரி அமர்த்திக் கொள்க. நீங்களும் இனிமேல் பிற்பகல் வேலை முடிந்தவுடன் வீடு திருப்பி விடுவது நன்று.

மாலை 8 மணிக்கே அம்மையாரும் நுங்களுடன் மேசைப் படைப்புண்டு பழகவேண்டும். எருதந் துறையில் சமையற்காரன் அல்லது பரிமாறி மேசைமேற்படைக்க நாம் ஐவோமும் ஒருங்கே தான் உண்ணவேண்டியிருக்கும். இற்றையுலகியலறியாமை, அடிமைத்தனவுணர்ச்சி, கூச்சம், வாய்வாளாமை ஆகிய குற்றங் குறைகள் படிப்படியாக நீங்கிடவேண்டும். அடுத்த ஆண்டு திடுமென்று புறப்பட நேரலாம். அதற்குள் முழுத் தகுதிப் படுத்திக் கொண்டு அணியமாயிக்க.

நக்கீரனுக்குச் சொன்னதே இறைவிக்கும்.

எதுவும் நிகழும் வரை முழுவுறுதியன்றாகலானும் அன்பிலார் அறியின் அழுக்காறு கொள்ள நேருமாதலானும் நம் கனவு நனவாகும் வரை அடக்கவொடுக்கமாகவும் இருக்க. இறைவன் அருள்க.

இரா.மு.கி. 7 சுறவம் 2000

## பேராயம்

இந்தியப் பேராயம் (Indian National Congress) இயூம் (A.O. Hume) என்னும் ஆங்கிலப் பெருமானால் 1885 டிசம்பர் 28ஆம் பக்கல், நண்பகல் 12 மணிக்குப் பம்பாயில் கோகுலதாசு தேசுப் பால் சமற்கிருதக் கல்லூரிக் கூடத்தில் கூட்டப்பட்டது. பொன்னர்சி (W.C. Bonnerjee) என்னும் வங்க இந்தியர் தலைமை தாங்கினன். இயூம் என்பவர் சிமிலாவில் (Simila) இருந்த ஓர் அரசியல் அதிகாரி. வங்கம், பம்பாய், சென்னை ஆகியமும் மண்டலங்களினின்றும் ஆங்கில மறிந்த இந்தியப் பெருமக்கள் கூடினர்.

இந்தியத் தேசிய முன்னேற்றத்தில் நன்னோக்கங்கொண்ட இந்தியப் பெருமக்களெல்லாம் ஆண்டிற்கொருமுறை ஒரு பெருநகரிற் கூடி, இந்தியர் முன்னேற்றம் ஆட்சியில் திருத்தம் ஆகியவற்றிற்கு விதிவகைகளை வகுத்து அவற்றை நிறைவேற்று

வதே பேராயத்தின் குறிக்கோளாக முதற்கண் இருந்தது. இதற்கு அக்காலத்துத் துணையரையர் (Viceray) டப்பெரின் பிரபுவும் (Marquis of Dufferin) இசைவும் வாழ்த்தும் அளித்திருந்தார்.

ஆயின் நாளடைவில் பல இந்தியர்க்கு ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்னும் ஆசை உண்டாய்விட்டது. அதனாலேயே ஆங்கில அரசு இவ்வியக்கத்திற்குப் பகை யாயிற்று. முதலில் மட்டாளரும் (Moderates) முனைவாளரும் (Extremists) இருசார் பேராயத்தார் இருந்தனர். சாலியன் வாலாபாக் என்னுமிடத்தில் நடந்த பஞ்சாபுப் படுகொலையின் பின் மட்டாளரும் முனைவாளாராகிவிட்டனர். பேராய எதிர்ப்பு வலுத்தது.

தமிழ்நாட்டில் நயன்மைக் கட்சி (Justice Party) தோன்றிப் பதினோராண்டு ஆண்டது. நூற்றிற்கு மூவரான பிராமணர்க்கு நூற்றிற்கு மூன்றே அரசியல் அலுவல் என்று சட்டமானபின் பிராமணரெல்லாரும் ஒன்றுகூடி எல்லா வகுப்பாரையும் படிக்க வைத்து முன்னேற்றிப் பதவியளித்த ஆங்கில அரசை நீக்கினா லன்றி நயன்மைக் கட்சியை வீழ்த்த முடியாதென்று கண்டு பேராய இயக்கத்தைத் தமிழ்நாட்டிற் புகுத்தி முனைந்து வளர்த்தனர்.

நயன்மைக் கட்சித் தலைவர் நாட்டு மொழிகளைப் புறக்கணித்து, ஆங்கிலத்தையே போற்றியதாலும் பொதுமக்கள் தொடர்பு இன்மையாலும் ஆங்கிலவரைச் சார்ந்ததனாலும் இறுதியில் தோல்வியடைந்தார்.

பேராயத்தில் தமிழர் பெரும்பான்மையராயிருந்தாலும் தலைவர் பிராமணராகவே யிருந்ததனால் தமிழர் தலைவர் காட்டிக் கொடுக்கும் தனனலக்காரராகவேயிருந்து விட்டனர். ஆங்கிலத்தை ஒழித்து இந்தியைத் திணிப்பதில் இருவகைப் பேராயமும் ஒன்றே. ஆதலால் இரண்டும் தமிழகத்திற்குக் கேடு விளைவிக்கும்.

க.பெ.சி. 30 சுறவம் 2002 (12.2.71)

**அச்சகம்**

திருக்குறள் தமிழ் மரபுரை மெய்ப்புத் திருத்தப் பெரும் புலவர் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களைத் தம் சொந்தச்செலவில் அமர்த்துவதாகவும் அவர் இசையா விடின் தாமே அவ்வேலையை மேற்கொள்வதாகவும்

*பேரா. கோ. நிலவழகனார் (இராமச்சந்திரன், எம்.ஏ., தலைமைத் தமிழாசிரியரும் துணைவேந்தரும், பச்சையப்பன் கல்லூரி, காஞ்சி) எழுதியிருக்கின்றார். நானும் உடம்பட்டேன்.*

*நானே திருத்தின் புதிதாய்த் தோன்றும் கருத்துக்களையும் சேர்க்கலாம் என்பது மெய்யே. ஆயின் இன்னம் 400 குறள்கட்கு உரை 5 வரையை வேண்டியுள்ளது. அதை யெழுதுவதில் ஈடுபட்டுள்ளேன். அதற்கு வேண்டிய நூல்கள் இங்குத்தான் உள்ளன.*

*சென்ற பனிக்காலத்தில் ஈமுளை தாக்கியிருந்ததால் உரைமுன்பே முடியாது போயிற்று. இன்னும்., முதுவேனில் வெப்பத்தால் விரைந்து வேலை செய்ய முடியவில்லை. வலக்கண் படலம் பழுத்து வருகின்றது. விரைந்து அறுவை செய்து கொள்ளவேண்டும்.*

*சிறந்த அச்சகமெல்லாம் ஆரியரிடம் உள்ளன. ஆயின், ஆரியத்தை யெதிர்க்கும் நம் நூல்களை அவரிடம் கொடுக்க அச்சமாயிருக்கின்றது. கூலி போனாலும் போகின்ற தென்று தீ வைத்து விட்டால் என்ன செய்வது? ஓராண்டு அரும்பாடு பட்டுச் செய்த வேலை வீணாய்ப் போம். மீண்டும், எழுதுவதும் அத்துணை எளிதன்று. ஆகவே, ஆரியர் அச்சகமெல்லாம் நமக்கு அச்சகமே.*

*பெருக்குவில்லை கூடிய கண்ணாடித் துணையால் எழுதியதால் இத்துணைச் சிறிதாக எழுத முடிந்தது.*

இரா.மு. கி; 2000 21.6.99

### புதுமெய்ப்பு

*முந்தா நாள் தான் 21 ஆம் படிவத்தைத் திருத்தி யனுப்பினேன். நேற்று அச்சகம் சேர்ந்திருக்கும். ஆயின், இன்றைக்கும் அதே படிவம் ஒரு பிழையும் திருத்தப் பெறாமலும் சில புதுப் பிழைகளுடனும் புதுமெய்ப்பாக வந்துள்ளது. இது காலத்தைக் கடத்தும் சூழ்ச்சியாகவோ மூளையில்லாத அச்சுக் கோப்பாளரின் வேலையாகவோ இருத்தல் வேண்டும். முந்தாநாள் விடுத்தது சேராவிடினும் முந்தியெடுக்கப்பட்டிருந்த தொடர் இப்புது மெய்ப்பில் நீக்கப்பட்டிருப்பதற்குக் கரணியம் தெரியவில்லை.*

இரா.மு.கி; 8.8.69

## முடங்கல் திணர்

*அறத்திற்குக் கொடுத்த ஆவைப் பல்லைப் பிடித்துப் பார்க்கக் கூடாது அங்ஙனமே. அன்பளிப்பாகத் தந்த முடங்கல் திணரைக் குறை கூறக்கூடாது. ஆயினும் நட்புக் கடமை பற்றியும் நன்னோக்கங் கொண்டும் இரு பிழைகளைக் குறிக்கின்றேன்.*

1. Professor என்ற சொல்லிற்கு f தான் உண்டு.

2. Linguistics என்னும் சொல் எல்லா மொழிக் குடும்பங்களையும் தழுவும்.

   Comparative Dravidian Philology என்பது மிகை படக்கூறல். Dravidian Philology என்றிருந்தால், Linguistics என்பது தேவை யில்லை.

   Descriptive Linguistics என்று வரையறுத்தால் Comp Dravidian Philology என்று சேர்த்துக் குறிப்பது குற்றமாகாது.

*இங்கத்து வீடு தாவறையுடன் பெரியதாயிருப்பது மட்டு மன்று; இரு பரணுங்கொண்டது.*

*பரணிலும் பண்டங்களை வைத்திருக்கின்றோம். மேலைத் தாம்பர வீடு ஈரறைகளும் ஒரு பரணுமே கொண்டது. ஆதலால் பரணும் எங்கட்கு இன்றியமையாததாகும். மேலும் முழு வீட்டையும் வாடகைக்கு எடுக்கும்போது வீட்டுக்காரர் அதில் ஒரு பகுதியைப் பயன்படுத்துவது முறையன்று. வீடு பெரிதுமன்ற. ஆதலால் கதவுகளை மலைச் சாலை வீட்டிற்கே கொண்டு போகச் சொல்க. அல்லது முன்னால் ஒரு கொட்டகை போட்டுக் கொள்ளச் சொல்க.*

இரா.மு.கி; 21 சுறவம் 2001

## திருத்தம்

*இன்று நடப்பது துலை (மாதம்) சிலையன்று.*

*துலை = ஐப்பசி; சிலை = மார்கழி*

| **வடசொல்** | - | **தென்சொல்** |
|---|---|---|
| *பிரியம்* | - | *அன்பு* |
| *சனி* | - | *காரி* |
| *தினம்* | - | *நாள்* |

*தாமதம் - காலத்தாழ்ப்பு, பாணிப்பு.*

*புரிதல் (விரும்புதல்) என்பது தமிழ்ச்சொல்.*

*புரிவு என்று வேண்டுமாயின் சொல்லலாம்.*

*பதில் என்பது உருதுச்சொல். மறுமொழி என்பதே தமிழ்ச் சொல்.*

*அரிதல் = காய்களைச் சிறுதுண்டுகளாக அறுத்தல்.*

*அறிதல் = தெரியாததத்தைத் தெரிந்து கொள்ளுதல்*

*மற்றவை தங்கள் என்னும் இரு சொற்கு இடையில் மற்றவைத் தங்கள் என்று வல்வெழுத்து(த்) மிகாது. இவற்றைக் கவனித்து வந்தால் விரைவில் பிழையின்றி யெழுதக் கற்றுக் கொள்ளலாம்.*

க.பெ.சி.20 துலை 2001

**பெயர் மாற்றம்**

*என் மருமகன் (இராபின்சன்) பெயரை இனிமேல் அறவாணன் என்று மாற்றவேண்டும்.*

மு.ஆ. 18 மேழம் 2002 (1.5.71)

**புதிது**

*பிசகு, பிசுக்கு, அரவம் அடங்கல், அதைத்தல் என்பன நெல்லை மாவட்டத்திலும் பொது வழக்கு. சொரிவாய் என்பதுதான் எனக்குப் புதிது.*

**க.பெ.சி. 20 கன்னி 2002**

**பெயரீடு**

*செந்தமிழ் பரப்பும் செல்வன் பிறந்ததும், தாயும் சேயும் நலமாயிருப்பதும் பெருமகிழ்ச்சி.*

*தமிழழகன் என்று பெயரிடுக. சுருக்கம் பற்றி அழகன் என்றும் விளிக்கலாம் (அழக, அழகா - விளிவடிவம்)*

க.பெ.சி. 30 நாள் 2001

**முற்றும்**

# பாவாணர் பாடல்கள்

# பாவாணர் பாடல்கள்

## தொகுப்பாளர் தொகையுரை

*பாவாணர் பாடல்கள் என்னும் இச்சுவடி இதன் பாடு பொருளுக்கு ஏற்பப் பத்துப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.*

*நூன்முறையில் பாயிரம் என்பதொன்று; அது முதன்மை யானது; இடத்தால் மட்டுமன்றிப் பொருளாலும் முதன்மை யுடையதே. ஆகலின், "மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்" போல்வது என முன்னையோர் கூறினர். அதற்கு,*

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்

*எனப் பல்வேறு பெயர்களைக் குறியீடும் செய்தனர்.*

*பின்னே வரும் யானையை முன்னே மணியொலியால் காட்டுவது போல்வதும், பறையறைதலால் யானை வரவை உரைப்பது போல்வதும் பாயிரம்எனினும் தகும்.*

"வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம்"

*என்பது சிறப்புப் பாயிர இலக்கணம். அவ்வகையில் இப்பாயிரப் பகுதியில் கடவுள் வாழ்த்து (2) பாயிரம் (7) அவையடக்கம் (2) அவையடக்கப் பாடல் படிமாற்றம் (1) ஆகப் பன்னிரு பாடல்கள் உள. (1-12) இவற்றுள் நேரிசை வெண்பா (2) குறள் வெண்பா (3) கலிவிருத்தம் (7) என்னும் பாவகைகள் இடம் பெற்றுள. இவை இசைத்தமிழ்க் கலம்பகம், தமிழர்மதம், பழந்தமிழாட்சி, தமிழ் இலக்கிய வரலாறு, வடமொழி வரலாறு, முதல் தாய்மொழி என்பவற்றுள் உள்ளன.*

*இதன் இரண்டாம் பகுதி வாழ்த்து என்பது. இதில் திருமண இறைவணக்கம் (1) இறைவேண்டல் (1) இசையாசிரிய வணக்கம் (1) திருமண வாழ்த்துப்பா (15) மங்கல நீராட்டுவிழா வாழ்த்து (1) மக்கள் வாழ்த்து(3) பெருமக்கள் வாழ்த்து*

*(10) அமைப்புகள் இதழ்கள் நூல்கள் ஆகியவற்றுக்கு வாழ்த்து (16) என்பவை (48) இடம் பெற்றுள்ளன (13; -60).*

*இவற்றுள் நேரிசை வெண்பா (29) குறள் வெண்பா (1) ஆசிரியப்பா (5) கலிவிருத்தம் (8) கலித்தாழிசை (2) கட்டளைக் கலித்துறை (2) எண்சீர் ஆசிரிய விருத்தம் (1) என்னும் பாவகைகள் உள (48).*

*இவற்றுள் அச்சில் வெளியிடப்பட்டவை 29; அச்சில் வெளிப்படாது முதன் முதலாக அச்சில் வருவன 19. "மறைமலை என்னும் மறையாமலையின்" என்னும் வெண்பா தமிழ்வரலாறு, தமிழர் வரலாறு என்னும் இரண்டு சுவடிகளிலும் இடம் பெற்றுள (பக்.295; 334)*

*மூன்றாம் பகுதி 'இரங்கல்' ஆகும். இதில் அறுவர் இரங்கல் பாக்கள் உள. இதில் இடம் பெற்றுள்ள பாடல்கள் 23 (61-63). இவற்றுள் கலிவிருத்தம் 10. கலித்தாழிசை 3. அறுசீர் ஆசிரிய விருத்தம் 10; இவற்றுள் இதழ்களில் அச்சிடப்பட்டவை 18; பாவாணர் கடிதங்கள் என்னும் நூலில் அச்சிடப்பட்டவை 5.*

*நான்காம் பகுதி நன்றி என்பதாம். இதில் 47 பாடல்கள் உள (84-130). இவற்றுள் வெண்பா 40; அகவற்பா 2; கட்டளைக் கலித்துறை 5. நூல்வெளியீட்டு உதவி, நூல் வெளியீட்டுக்குழு உதவி, மணவிழாக் கொடை , மணிவிழாக் கொடை உதவி, மெய்ப்புப் பார்த்த உதவி என்பவற்றுக்கு விடுத்த நன்றிப் பாடல்கள் இவை. நூல்களிலும் இதழ்களிலும் வெளிவந்தவை.*

*இதன் ஐந்தாம் பகுதி 'ஐந்தகம்' என்பது. இதில் ஈர் ஐந்தகங்கள் உள. பத்துப்பாடல்கள்; இதழில் இடம் பெற்றவை. அறுசீர் விருத்தம் முன்னது; பின்னது வெண்பா.*

*'ஐந்து' என்பது தலைப்பு 'பதிகம்', பத்தாவது போல் 'ஐந்து' ஐந்தகம் என ஆளப்பெற்றதாம் (131-140).*

*ஆறாம் பகுதி பதிகம். இதன்கண் ஒன்பது பதிகங்கள் உள (141-232). திருக்குறளைப் பற்றியது ஒன்று; வெள்ளக் கொடுமை பற்றியது ஒன்று; வங்க வாகை பற்றியது ஒன்று; எஞ்சிய ஆறும் பெருமக்களைப் பற்றியவை. பெரியார், சிதம்பரனார், மறைமலையார், பாரதிதாசனார், சேலம் இராம சாமியார், சிங்கபுரி கோவலங்கண்ணனார் என்பார் அவர். பாரதிதாசனாரைப் பற்றிய பதிகமும், வெள்ளச் சேதவிளரிப் பதிகமும் பதினொரு பாடல்களையுடையவை. எஞ்சியவை பத்துப்பாடல்களே.*

*இவ்வொன்பது பதிகங்களுள் வெண்பா 6; கலிவிருத்தம் 1; அறுசீர் அகவல் விருத்தம் 1; எழுசீர்ச் சந்தவிருத்தம் 1.*

*இலக்குவனாரைப் பற்றியதொரு பதிகம் இரங்கல் பற்றியது. ஆகலின், அப்பகுதியில் இடம் பெற்றது; இப்பகுதியில் இடம் பெற்றிலது.*

*இவையெல்லாமும் நூல்களிலாதல் இதழ்களிலாதல் அச்சிடப்பெற்றவை. இப்பகுதியிலுள்ள பாடல்கள் 92.*

*ஏழாம் பகுதி வரலாறு பற்றியது. இதில் இடம்பெற்றவை இரண்டே (233, 234). இரண்டும் அகவற்பா. இரண்டும் உயர் தரக்கட்டுரை இலக்கணம் இரண்டாம் பகுதியில் வெளி வந்தவை. ஒன்று சாமிநாதர் பற்றியது; மற்றொன்று அவர் எழுதிய வரலாற்றைப் பற்றியது.*

*எட்டாம் பகுதி கதை. இதில் இரண்டு கதைகள் இடம் பெற்றுள (235-253). 'பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது' என்பது ஒன்று; நன்றியுள்ள சேவகன் என்பது மற்றொன்று. முன்னதில் அறுசீர் அகவல் விருத்தம் 11. பின்னதில் கலித்தாழிசை 8. ஆகப் பத்தொன்பது பாடல்கள். இவையும் உயர்தரக் கட்டுரை இலக்கணம் இரண்டாம் பகுதியில் இடம் பெற்றவையே.*

*ஒன்பதாம் பகுதியில் பலவகைப் பொருள்கள் இடம் பெற்றுள. திருவள்ளுவர் ஈராயிர ஆட்டை விழாச் செய்தி என்பது தொட்டுத் தலையாய தமிழர் என்பது ஈறாக ஒன்பது உட்பகுதிகளைக் கொண்டது. மொத்தப் பாடல்கள் 21 (254-274)*

*இவற்றுள்அகவல் 3, குறள் வெண்பா 6, கலிவிருத்தம் 5, அறுசீர் விருத்தம் 2. எண் சீர் விருத்தம் 1, இசைப்பா 2. கும்மிப்பா 1 நூற்பா 1, இவற்றுள் போலிகைப்பாடல் என்னும் இறுதிப்பகுதி குறளும் சிவஞான போதமும் நாவுக்கரசர் தாண்டகமும் கொண்டு எழுந்தவை. ஒன்று நூற்பா; மற்றிரண்டு புதுநூற்பா. அனைத்தும் அச்சில் வந்தவை.*

*திருவள்ளுவர் ஈராயிர ஆட்டைவிழாச் செய்தி பற்றிய அகவல் 108 அடிகளைக் கொண்ட நெடியது. நூற்பா ஓரடியால் ஆய சிறியது.*

*முடிநிலை என்னும் பத்தாம் பகுதி 23 பாடல்களையுடையது (275-297). நூல்களின் முடிவுகளாகவும் வாழ்த்துகளாகவும் இடம் பெற்றவை. வெண்பா 22. அகவல் ஒன்று; அவ்வொன்றும் சிவஞான போதப்போலிகை. அது பிறிதிடத்தும் பிற வடிவிலும் வந்துள்ளது (254-273)*

*இப்பத்துப் பகுதிகளிலும் இடம்பெற்றுள்ள பாடல்கள் 297.*

*இவற்றுள் நேரிசை வெண்பா 159, கலிவிருத்தம் 40, அறுசீர் அகவல் விருத்தம் 39, அகவற்பா 13, கலித்தாழிசை 13, குறள் வெண்பா 10, சந்தவிருத்தம் (ஏழுசீர்) 10, கட்டளைக் கலித்துறை 7, எண்சீர்விருத்தம் 2, கும்மி 1, இசைப்பா 2, நூற்பா.*

**குறிப்புகள் சில:**

*பாயிரப்பகுதியில் தமிழைக் ‘ குமரிநிலத்தெழுந்த கோமொழி’ என்கிறார். ‘கோ’ தலைமை, தெய்வம் இவ்விரு பொருளும் தருவதுடன் ‘ஆன்’ என்னும் பொருளும் தருவது. கன்றீனும் கறவை என்னப்பன்மொழிக்குத் தாயாகத் திகழும் வரவு நோக்கிக் ‘கோமொழி’ என்றமை பாவாணர் தம் ஆய்வுப் பொருளை அப்படியே முழுதுறத் திரட்டி வைத்ததாம்.*

*பாவாணர் கொண்ட இறைமை அழுத்தமும் சொல்லாய்வுத் தெளிவும் ஒருங்கு வெளிப்படுவது, ‘கடவுள்’ என்னும் பெயர்ப் பொருளை அறிந்துகொண்டால் ‘நாடாமல் உண்டென நம்பு’ என்பதில் இருந்து வெளியாகின்றது.*

*‘இழுக்குடைய பாட்டுக்கு இசைநன்று’ என்றொரு கருத்து இடைக்காலத்தே சில புலவர்களிடம் இருந்தது. ஆயின் இசைத் திறம் நன்குணர்ந்த பாவாணர் “குறையும் எழுத்தினால் கூடுவ தினிமையே, அறையும் அளபெடை ஆக்கியே எழுத்தொலி, நிறையும் அளவுற நீட்டுக” என்று சொல்வதுடன் தம் இசைத் தமிழ்க் கலம்பகத்திலே ஆட்சியும் செய்துள்ளமையைச் சுட்டுகிறார். அன்றியும், “தீந்தமிழைத் தெருவெலாம் பரப்புதற்குப் பாடற்குழாம் ஒன்று ஏற்படுத்துக” என்று கட்டளையிடுகிறார்.*

*துறைவல்ல அறிஞர்கள் கூறும் திருத்தத்தை ஏற்றுப் போற்றுவதற்குத் தாம் அணியமாக உண்மையை, “என்றும் திருத்தம் இயம்பும் அறிஞரின், நன்றி அறிவேன் நனி” என்பதால் மெய்ப்பிக்கிறார். கல்வி கண்மூடித்தனத்தைக்கொண்டு கண் மூடித்தனத்தை வளர்ப்பதற்கு அன்று என்பதையும் பகுத்தறிவை ஆக்குவதற்கே என்பதையும் ஒரு முறைக்கு இருமுறை தெளிவு செய்கிறார்.*

*மணமக்கள் இணைந்து இன்பந்துய்த்தலைப் “புலியாணம் ஒன்றாகிப் பொருவரிய இன்பந்துய்த்து” என்பது புதுமையான ஆட்சி. அருமையான ஆட்சி. உண்ணாக்கும் அண்ணாக்கும் போல ஒன்றுபட்டுச் சுவைக்கும். இணைப்பை எண்ணின்*

பொருள் விளக்கமாம். புலி, ஆணம், உண்ணாக்கும் அண்ணாக்கும் .அண் - மேல். புலி - புல்லி, தழுவிக்கிடப்பது. எதுகை நோக்கி வறிதே சொல்லாட்சி புரியாது வளமைசெய்தது பாவாணர் திறம். இவ்வாறே உலண்டு' என்பதும் பொருள் செறிந்ததே.

திருக்குறளை 'முப்பால்' என்னும் வழக்கு நாடறிந்தது. அதனை 'முப்பொருள்' என்பது போற்றத்தக்கது.

செம்புலப் பெயல் நீரை அன்புடை நெஞ்சத்திற்கு உவமை காட்டி உரைத்த புலவர் பெயரையே 'செம்புலப்பெயல்நீரார்' எனக்கொண்டது பண்டைத்தமிழகம். அவ்வுவமை நயத்தை விரும்பிய பாவாணர்.

"சிவல்நீர்" எனச்சுருக்கியும் "செம்புலம் பெய்த நீரியல்நேய நீர்மிகு நெஞ்சம்" எனப் பெருக்கியும் உரைக்கிறார்.

"தம்மில் இருந்து தமது பாத் துண்டற்றால்"என்னும் திருக்குறளில் தோய்ந்த பாவாணர், "தமது பாத்துணுந் தம்மில் வாழ்வு" எனவும், " தம்முடைப் பள்ளியிருந்துணாப் பகிர்ந் துண்டு" எனவும் அமைத்துக் கொள்கிறார். இன்னும் இப்பகுதியில் 'கேளாரும் கேட்ப' எனவும் 'சுழன்றும் ஏர்ப்பின்னது' எனவும் வரும் குறள்களைத் தக்காங்கு நினைவுகூருமாறு இயைக்கிறார்.

திருவள்ளுவர் அறம் தோற்பதன்று; என்றும் வென்றே தீரும் என்னும் திண்ணிய கருத்தால் 'திருவள்ளுவ அறம்' என்னாமல் 'திருவள்ளுவ வாகை அறம்' என்பது திருக்குறள் மரபுரை கண்ட பாவாணர் பார்வையை வெளிப்படுத்த வல்லது.

நூல் வனப்புகளுள் அம்மை என்பதொன்று; அஃது அடிபெருகாத குறுகிய பாடலாக அமைவது. அவ்வனப்புச் செவ்வனம் அமைந்த நூல் திருக்குறள். இதனைப் பாராட்டும் பாவாணர் திருவள்ளுவரை 'எம்மை' என்கிறார். எம் தலைவர்' என்பது எம்மைப் பொருள். 'எம் குருவர்' 'எம்கோ' 'எம் தலைவர்' என வள்ளுவரைக்குறிக்கும் இவ் எம்மைக்கு முன்னோடி 'எம்மடிகள்' என்னும் சிவப்பிரகாச அடிகள் ஆகலாம்.

ஊழிற் பெருவலி யாவுள என்னும் குறளுக்கு ஒரு சான்று போலத் தம் பார்வையில் பாவாணர் இலக்குவனாரைக் காண்கிறார். பாவேந்தர் எனின், இற்றைநாளில் 'பாரதிதாசன்' எனச் சொல்லாமலே பலரும் அறிவர். 1959ஆம் ஆண்டிலேயே 'பாவேந்தன் பாரதிதாசன்'என்கிறார் பாவாணர். அன்றியும், நம் புதுவைப் பாவேந்தன் என்கிறார். இன்னும், நாவேந்தரான

புலவர்க்கு வேலன்றோ நம்புதுவைப் பாவேந்தன் பாரதிதாசன் என்கிறார். அடுக்கடுக்காக உயர்த்தி அரவணைக்கும் அருமை, பாவேந்தரைப் பாவாணர் புரிந்துகொண்ட அருமையின் விளைவே என்க.

"கூற்றம் குதித்தாலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"

என்னும் திருக்குறள் வழிப்பாட்டு 'நண்ணூற்றைத் தாண்டவரும்' பெரியாரைக் காண்கிறார், பாவாணர். பெரியார், தாம் பட்ட கல்லடி சொல்லடிகளை வசையாகக் கொள்ளாமல், இசையாகக் கொண்டதையும், சிற்றாற்றில் பேரோடம் செலுத்துவதுபோல் பெரியார் செயலாற்றிய திறத்தையும் எளிய அரிய சொற்களால் சுருக்கத்தால் பெருக்கமாக உரைக்கும் பாவாணர் பாவாணரே என்பதை மெய்ப்பிக்கிறார். 'சாணத்தைக் கொண்டு எறிந்து உளப்புண்படுத்த நினைவார் உள்ளமிலாத் தன்மையை உரைப்பார் போலச் 'சாணக்குண்டு' என்று ஆளும் ஆட்சி நெஞ்சுவிட்டகலாதது.

"வீட்டுரிமைக்கு ஆவணம் போல்வது நாட்டுரிமைக்கு வரலாறு" எனப் பல இடங்களில் சுட்டுவார் பாவாணர். அதனை நற்கலையின் வென்விழா முதற்பாட்டிற் காட்டுகிறார்.

வெற்றி விழாவை வென்விழா என்பதும் வெற்றியை வெற்றம் என்பதும், புதுப்பொங்கலைப் 'புதிரி என்பதும் கதிரோனை விண்மணி என்பதும் பூப்பு நீராட்டை மண்ணுதல் மங்கலம் என்பதும், தமிழை முல்லைத்தமிழ் என்பதும் இப் பகுதியில் அமைந்துள்ள நயமிக்க சொல்லாட்சிகளாம்.

இரங்கல் பகுதியில் பாவாணர் உருக்கம் தெற்றென வெளிப்படுகின்றது. அதேபொழுதில் உலகியல் தெளிவும் பளிச்சிடுகின்றது. இரங்கல் இரங்கலாக அமையாமல் இதற்குத் தீர்வு இன்னது என்னும் வழிகாட்டுதலும் புரிகின்றது. 'சொல்' 'தொடர்' 'பொருள்' ஆகியவற்றின் நயங்கள் உணர்வின் ஆழத்தில் இருந்து வருவதால் மிகச் சிறக்கின்றன.

பட்டகாலிலே படுமெனும் பழமொழியை நினைகின்றார். திருவரங்க நீலாம்பிகையார் குடும்பத்துப் பட்ட துயர்களெல்லாம் பாவாணர்க்குத் தட்டுப்படுகின்றன. பட்ட அரங்கனார்; பிள்ளைமைப்பட்ட எண்மர்; உண்மை கைப் பட்டது; அவர் பட்டது - ஆயபட்டவைகள் அணிவகுக்கின்றன.

அதுபோல், "செல்வமேயெனும் செல்வஞ்சென்றதைச் செல்வி வாயிலாய்"

என்பதிலும் சொன்மீட்சி தவழ்கின்றது.

"புதுவதே யன்றுயிர் போவ தியல்பு"

"அன்னையிற் சிறந்தவர் ஆரும் இன்மையின்"

"கூரியல் குன்று மோதான் கோளரி குருளை யேனும்"

என்பவை பழமை வழிப்பட்டவை எனினும் நூற்பா அன்ன அமைதியவை.

செந்தமிழ்ப் புலவன் என்கோ? சிறந்தவா சிரியன் என்கோ? என ஒரு பாடலில் வரும் ஆறு என்கோவும் நம்மை எங்கோ தொடர ஏவுகின்றன. காதல் ஐயத்தில் பிறந்த 'என்கோ' சிலம்பில் பிறந்தது என்றால் கலங்கல் ஐயத்தில் பிறக்கின்றது இவ் 'என்கோ'

"மாறனோ ஆரன் தானோ மற்றெனின் சேரர் கோனோ" என ஒருவரை மூவேந்தர்க்கு ஒப்பிடல், ஆறடி வளர்ந்த தோற்றம் கூறல், நீள்மேலாடை வீசுகை முழந்தாள் தோய்தல், ஏற்போல் நிமிர்ந்து செல்லல்" என்பன பல்கால் கண்டு பசுமையாக உளத்தில் பதித்துக் கொண்டிருந்த பதிவின் முத்திரை.

உணர்விலாப் புலவரை ஏட்டுப்புலவர் என்பதும் உணர்வுப் புலவரை மானச் செம்மல் என்பதும், பிறரை அச்சுறுத்தும் உடலைச் சூருடல் என்பதும், விரைவைக் கதுமென என்பதும், செயல் திறவோரைச் சொல்லோவியர்போலச் செயலோவியர் என்பதும், பத்மஸ்ரீயைத்(தா)மரைத் திரு என்பதும் வருந்து பவரைப் பனிப்பவர் என்பதும் அருகிய வழக்குகளையும் எளிமையாக எடுத்தாளுதலுக்குச் சான்றாவன.

"உவப்பவே தலைக்கூடிப்பின் உள்ளவே பிரியுமுன்னர்த்
தவப்பல நாளும் ஒக்கத் தனிச்சுவை விருந்தின் ஓம்பி"

என்னும் அடிகள் உவப்பத் தலைக்கூடி என்னும் குறளில் இருந்து கிளர்ந்து மேலேறி நிற்பதாம் சிறப்பினது.

"பெண்ணினற்றுணை பிறிதொன் றின்மை"

என்பது அழுந்திய பட்டறிவு. "கணவன் கண்முனே கண்ணை மூடுதலை", நன்மனைவி விரும்புதலை உரைத்தல் தமிழ்ப் பெண்டிர் தகைமையுரைப்பு. துணையற்ற காலைத் "தீந்

*தமிழ்த்துணையே துணையெனக் கோடல்" வேண்டும் என்பது அறிவறிந்து கூறும் மருத்துவக்கூறு.*

"கொல்வ கையெனும் குறிப்பி லாமையாற்
சொல்வி னைக்குமைச் சூழ்ந்த மர்த்தினேன்"

*என்பது தாமுறும் கையறவு; 'யானும் கையறவுக்குத் துணையாகி நின்றேனோ' என்னும் கனிவுச் சுரப்பின் வெளியீடு.*

*'சொல்வினை' யாவது சொல்லாராய்ச்சித் துறையாம் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித்துறை.*

"இருந்தநாள் ஒன்றும் ஈயா
திறந்தபின் இரங்கல் கூறல்
வருந்தவே தானிந் நாட்டு
வழக்கமாய்ப் போயிற் றந்தோ"

*என்பது நூற்றுக்கு நூறு செவ்விய முடிவு என்பதை மறுக்கச் சான்று உண்டோ? பாவாணரே இக்கூற்றுக்கு விலக்குப் பெற்றாரல்லரே!*

*நூல் வெளியீட்டுக்கு உதவி பற்றியது இந்நன்றிப் பகுதி என்க. நூல் வெளியீட்டுக்குத் தனிப்படச் செய்த உதவி., குழுவாக அமைந்து செய்த உதவி, மணிவிழா வெடுத்துப் பணந் தண்டித் தந்த உதவி, நூல்களை அச்சிட்டு மெய்ப்புப் பார்த்த உதவி என்பவற்றுக்கு எழுந்த நன்றிப் பாடல்களே இவை.*

*தமிழ் இலக்கியவரலாறு, வடமொழி வரலாறு, மண்ணில் விண், தமிழர் மதம், திருக்குறள் மரபுரை என்பவை இவ் வகையால் வெளிப்பட்டவையாம். செட்டிகுளம் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழு, செங்காட்டுப் பட்டி பாவாணர் நூல் வெளியீட்டுக்குழு, நெய்வேலி பாவாணர் தமிழ்க் குடும்பம், மதுரை பாவாணர் மணிவிழாக் குழு என்பவை சுட்டப்படும் குழுக்கள்.*

*சிங்கபுரி (சிங்கப்பூர்) அன்பர்கள் சிறந்த கொடை இவண் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கொடுத்த கொடையாளர் பெயர்களை நன்றிப் பகுதியில் கண்டு கொள்க. சிங்கபுரி அன்பர் பதினெண்மரைப் பதினாறடி அகவலுள் செறித்து வைத்துளார் பாவாணர். இந்நன்றிப் பாடற்பகுதியில் இடம்பெறாத நன்கொடையாளர் பட்டியும் தனியே உண்டு. இது பாடல் தொகுப்பு ஆகலின் இடம்பெற்றில.*

“மொழிநூல் மாணவன்” எனத் தம்மைக் குறிக்கிறார் பாவாணர். அடுத்த இருசீர்களிலேயே “ முதுதேவ நேயன்” என முதுமையும் பெயரும் முறையே தொடர அமைந்து மின்னுகிறார்; ஏடது கைவிடாது ஏந்திய கொள்கையர் முது மாணவர் தாமே !

அரசு தன்கடன் ஆற்றவில்லை; பல்கலைக் கழகம் பரிந்து உதவவில்லை. ஆந்நிலையில் ஆர்வலர் முந்துவந்து உதவினர். ஆகலின், “ஆளும் அரசும் அமைபல்கலைக்கழகமும்” நீள்கையற உதவினராம்.

“கோடிக் கணக்கில் குவித்துத் தமிழ்பேணாப்
பேடிக் கயவர் பெயர்கருக்க” உதவினராம்.

“பல்லா யிரம்வேலிப் பண்ணைப் பெருமடங்கள்
எல்லாம் இருள” உதவினராம்.

கையற, கருக்க, இருள நேராதிருந்தால் நிலைமை எவ் வளவோ மாறியிருக்குமே? அவர்கள், தாம் கண்டு கொள்ளக் கூடாது. என்றே கண்ணை மூடிக் கொண்டவர்கள் அல்லரோ?

திருவிளையாடலில் தருமிக்குப் பொற்கிழியளித்த செய்தி யுண்டு. அதனைத் தமக்களித்த கொடைவிஞ்சியதெனக் குறிக்கிறார் பாவாணர்.

“தருமிக்குத் தந்தது தாராத் தமிழின்
பெருமை வரலாறு பெற்று”

என்பது அது. மேலும்., சடையன் கொடையை எண்ணவும் அதனை விஞ்சியதாகக் கொள்ளவும் ஏவுகின்றது.

“பணத்திற்கு மூன்றுபடிவிற்ற காலை பரிந்துகம்பன்
உணத்தந்த வள்ளல் சடையன் உதவிய தோவியப்போ
கிணற்றிற்குட் கேணியும் ஊறாநாள் முத்துகிருட்டிணன்தான்
குணத்திற்கீ டின்றிக் கொடுத்தனன் யாவும் குறிப்பறவே”

பிசிராந்தையார் நட்பு, கிளியீடு (பாரி பறம்பில் கிளிகள் தொகுத்த கதிர்), கார்பணி கற்பு (மழையையும் ஏவல் கேட்கச் செய்யும் கற்புடைமை) என்பவற்றை ஆங்காங்கு ஆள்கிறார்.)

செட்டிகுளம், செந்தமிழ் அன்னை என்னும் பெயர்களை நினைக்கவும் சீரிய கற்பனையில் திளைக்கிறார். அதனால்,

“செந்தமிழ் அன்னை செழியன் தமிழ்நாடும்
வெந்தழல் ஆரிய வெம்மையால் -வந்தே

குளிர்ச்சிபெறத் தோழியொடு கூடி மகிழ்ந்து
குளிப்பது செட்டி குளம்''

*என்றார். அச் செட்டிகுளம் போலவே செங்காட்டுப் பட்டியிலும் பாவாணர் நூல்வெளியீட்டுக்குழு உண்டாகியமையால்,*

''செட்டிகுளத் திற்குளித்த செந்தமிழ்த்தாய் செங்காட்டுப்
பட்டியிலே வந்து பருகப்பால் -அட்டியது
போல்வதே மீண்டும் பொலிந்தெழுந்த பாவாணர்
நூல்வெளி யீட்டுக் குழு''

*என்றார்.*

*சிங்கபுரியில் ஆட்சிமொழிகளுள் தமிழ் ஒன்றாக இருத்தலை அறிந்து மகிழும் பாவாணர்.*

''இலங்கரச மும்மொழியுள் ஒண்டமிழும் ஒன்றாம்
இலங்கையிலும் இல்லாத ஏண்''

*என்று பாராட்டுகிறார். நடுவண் ஆட்சி மொழிகளுள் ஒன்றாகத் தமிழும் இல்லையே என்னும் எண்ணத்தின் வெளிப்பாடு இது.*

*ஐந்தாவதாம் ஐந்தகம் பத்தே பாடல்களையுடையது. செந்தமிழ்ச் செல்வி மாதிகை பற்றியது முன்னது. அது போற்றத் தக்க பொற்பேழை என்றும், அது தமிழ வாகைப் போர் செய்து பாடாண் பாடுவது என்றும், இவ்வவைந் தகத்துப் பாராட்டுகின்றார். அடுத்த ஐந்தகம் திருக்குறளின் சிறப்புப் பற்றியது. வள்ளுவர் வகுத்த அறம் நடுவறம் என நயக்கின்றார்.*

*பதிகம் ஒன்பதுண்மை அறிந்துள்ளோம்; அஃதாறாம் பகுதி. உலக முழுமைக்கும் ஒத்த மறைநூல் திருக்குறள் என்றும், ஊரும் பிறப்பும் உறுதொழிலும் உற்றோரும் பேரும் தெரியாப் பெரும்புலவர் திருவள்ளுவர் என்றும், ஒழுக்கம் உயர்குலம்; ஒன்றே பிறப்பாம்; இழுக்கம் இழிகுலம் என்பதென்றும், பொய்மையும் வாய்மை இடத்த என்னும் பொய்யா மொழி என்றும், இல்லறத்தாலும் இறையடி எய்தலாம் என்பதென்றும், அது புரட்டை வாரிய சூறாவளி என்றும், பல்லுரை கண்டும், முடிவாகக் கண்டார் இலர் என்றும் அது மாமலைக்குச் செல்லாமல் யாரகத்தும் அமர்ந்துதவும் அரு மருந்து என்றும் தமிழர்க்கு உய்வைத் தந்தது என்றும் பொது மறைப் பதிகம் புகல்கின்றது.*

*செயற்கரிய செய்வார் பெரியர் என்பதற்கு எடுத்துக் காட்டு பெரியார் என்றும், தமிழினத்திற்கெனவே உழைக்க வந்தவர் அவர் என்றும், எதிர்ப்புக் கஞ்சாது தாங்கும் சூர வாழ்க்கையர் என்றும், இந்தியெதிர்ப்பில் தலைசிறந்தவரும், குடி செய்வாராய் மடி செய்யாது மானங்கருதாது தொண்டு பூண்டவரும் பெரியாரே என்றும், கண்மூடி வழக்கங்கள் மண் மூடிப்போக உழைப்பவரும்., பட்டபடிப்புகள் பயனில் குப்பையாக இருப்பதை மெய்ப்பிப்பவரும் அவரே என்றும், பெரியார்தன்மான இயக்கப் பதிகத்துப் பாடுகிறார்.*

*சீரிய கொள்கைச் சிதம்பரப் பதிகம் வ.உ.சி.யைப் பற்றியதாம். "நாட்டுப்பற்றால் முன்னே நாய்படாப்பாடுபட்ட ஒட்டப்பிடார ஒளிர்மறவன்" எனப்பதிகத்தைத் தொடங்குகிறார். "மாடுபோற் செக்கிழுத்து, மட்டிபோற் கல்லுடைத்து, வேடுபோற்கேடாய் உடையுடுத்துப்- பாடுபட்டோன், கேழ்வரகுக் கூழுண்டு கீழ் விலங்கிற் கீழ்விலங்கில், தாழ்வுறுதற்கே சிதம்பரம்" என வெதும்புகிறார். அவர்தம் நாட்டுத் தொண்டு, மொழித் தொண்டு, நன்றிமறவாமை என்பவற்றை விரிக்கிறா.ர்.*

*மறைமலையடிகள் பல்துறையாற்றற் பதிகத்தில் அவரைப் பேராசிரியர், பெரும்புலவர், பாவலர், ஆராய்ச்சியாளர், மும்மொழிப்புலவர், மொழி பெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், எழுத்தாளர், பல்கலைச் செல்வர், தனித்தமிழ்த் தந்தையார் எனப்பதின்வகையிற் காண்கிறார்.*

"மூவா யிரமாண்டு மோதும் வடமொழியாற்
சாவாந் தகைநின்ற தண்டமிழை - மேவாக்
குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த அப்பர்
அமரர் மறைமலை யார்"

- என முடிக்கிறார்.

*பாரதிதாசன் பண்பாட்டுப் பதிகத்தில்,*

"ஆனை நடையும் அரிமாப் பெருமிதமும்
கோனையும் சாடிக் குமுறுரையும் - தானையே
தாக்கினும் அஞ்சாத் தறுகண்ணும் மேலாடைச்
சேக்கையும் பாரதிதா சன்"

*என்பது அருமையான ஓவியக் காட்சி, அவர்தம் பாடலைத் "தெளிதேனில் தீன்கலந்த தெண்ணீர்ப் பதம்போல்" வது*

*என்கிறார் (185) இக்குறிப்பு 'குலோப்சாமூன் என்பதாகலாம்! "பாலை நிலத்தில் பழம்படு பன்மரப்பைஞ் சோலையே பாரதி தாசன் என்கிறார்.*

*சேலம் நகராண்மைக் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர். பாவாணர் வாழ்வில் பசுஞ்சோலை எனத்தக்க காலம் இராமசாமியார் அரவணைப்பில் அவர் இருந்த பன்னீராண்டுக் காலமே .*

*"தமிழ்ப் பற்றே வடிவெடுத்தாற் போன்றவரும், தமிழ்ப் பண்பாட்டில் தலைசிறந்தவரும் என்மொழி நூலாராய்ச்சி முற்றுதற்கு ஒரு பெருந்துணையாய் இருந்தவரும், ஒப்புயர் வற்ற முதல்வருமான பேராசிரியர் அ.இராமசாமிக் கவுண்டர் எனத்தம் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தில் பாராட்டுவார் பாவாணர்.*

"சேலங்கல் லூரி சிறந்திராம சாமியின்றேல்
ஞாலம் பரவுதமிழ் ஆராய்ச்சி - நூலியற்றும்
தேவநே யன்எங்கேதென்மொழித் தொண்டெங்கே
பாவுதமிழ் மீட்பெங்கே பார்"

*என்னும் பாடலால் பாவாணர் உள்ளகம் தெள்ளென விளங்கும்.*

*சிங்கபுரி வணிகவியற் கல்லூரி முதல்வர் கோவலங் கண்ணனார். கோபாலகிருட்டிணனாம் அவர் தனித்தமிழ்ப் பற்றாலும் பாவாணர் தொடர்பாலும் கோவலங்கண்ணராயவர். அவர்தம் நயத்தகு நயங்களை உன்னிப் பண்டை முறையில் 'பாடாண்பதிகம்' பாடினார்.*

"ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று"

*என்பது பாடாண் இலக்கணம் (புறப்பொருள் வெண்பாமாலை 189).*

*"அறிவொழுகுகண்; அமர்தமிழ்நோக்கு; செழிம்பு; கோவீறு நெஞ்சு: பொற்கோல வளருடம்பு" இவை கோவலங் கண்ணர்: என்கிறார். "தமிழே கருதித் தகுந்தாரைத் தள்ளா நமர்"எனக் கோவலங்கண்ணர் பெருநோக்கைக் குறிக்கிறார். "முந்திப் பொருளளித்தார், பிந்திப் புகழ்ந்துரைத்தேன்" எனப் புகழ் கருதாப் புகழ்க்கொடையைப் புரிந்து பாடுகிறார் பாவாணர்.*

*எட்டாம் பதிகம் வெள்ளச் சேத விளரிப்பதிகம். 'விளரி' என்பது இரங்கற்பண். 'விளரியுறுதருந்தீந் தொடை' என்பது புறநானூறு (260). வெள்ளத்தால் உண்டாகிய அழிபாட்டுக்கு வருந்திப் பாடுகின்றாராகலின் இப்பெயரிட்டார்.*

"ஆருயிர் அனைய என்றன் அன்பனை இழந்தேன் என்பார்
காா்பணி கற்பின் செல்வக் கண்ணகி இழந்தேன் என்பார்
சீரியஅறிவு வாய்ந்த சேயரை இழந்தேன் என்பார்
ஊரினில் உள்ள எல்லா உறவையும் இழந்தேன் என்பார்"

*என்றும்,*

"நீர்மிகின் சிறையு மில்லை நீளியின் வலியு மில்லை
கார்மிகின் உறையுளில்லை கனல்மிகின் அணைப்பு மில்லை
பார்மிகும் பரிசொன்றில்லை பரவெளி மனை யெழுப்பிக்
கூர்மதிக் குடும்பத் திட்டங் கொண்டினி தொழுகுவோமே"

*என்றும் வரும் பாடல்களின் எளிமையும் உணர்வும் 'விளரி' யை வெளிப்படச் செய்யும். இது நாகைப் பகுதியைத் தாக்கிய கடும்புயல் வெள்ள அழிபாட்டைப் பற்றியது. ஒலிக்குறிப்பை எதுகையாக்கி உணர்வை உருக்குவதைப் பத்தாம் பாடலிற் காண்க.*

*இறுதிப் பதிகம் படைமற வாகை என்பது.*

"ஊனரத்தம் துளியு டம்பில் உள்ள வரையும் பொருமினே
வான வர்பூச் சிந்தி வாழ்த்த வாகை சூடி யாடுவீர்"

*என்பதில் (6) தலைப்புச் செய்தி சுட்டப்படுகின்றது. வங்கப்போர் வெற்றி பற்றியது இது. 'இளைதாக முள்மரம் கொல்லல்' எலிப்பகை நாகம் உயிர்ப்பக்கெடும், 'நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்' என்னும் குறள்களும் பழமொழிகளும், வரலாற்றுக் குறிப்புகளும் இப்பதிகத்தில் இடம் பெற்றுள.*

*வெற்றி மாளிகையில் போர்ப்பாடகராகப் பணியாற்ற வேண்டும் என்று ஒரு காலத்தில் அவாவியவர் பாவாணர் என்பது இவண் எண்ணத்தக்கது.*

*வரலாறு என்னும் ஏழாம் பகுதியில் சாமிநாதையர் தமிழ்த் தொண்டு என்னும் பகுதி முதற்கண் உள்ளது. அதில் "கொலம்பசு முதலோர் கொடுங்கடலோடி, நிலம்பல கண்டிலராயினும் நீங்காப்., பின்னோர் அவற்றைப் பின்னே காண்பர்" ஆனால்,*

*“சாமிநாதையன் சார்ந்திலனாயின், இற்றைத் தொன்னூல் என்னாகியிருக்குமோ?” என்னும் அரிய செய்தியும், “விறகுத் தலையன் முறையில்” ஏடு கொண்டு தொகுத்து வெளியிட்ட பெரிய செய்தியும் இடரிலா நடையில் தடையறச் செல்கிறது.*

*அவ்வாறே சாமிநாதர் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர்க்கு உதவிய வெங்களப்ப நாயகர் பற்றி எழுதிய செய்தியைக் கொண்டு இயற்றப்பட்டதே வழிமுறைப்பண்பு (வழிமுறை - பரம்பரை).*

*வெங்களப்ப நாயகர் கொடையில் வாழும் செய்தியை மிதிலைப் பட்டியார் உரைக்க, வண்டியோட்டியாக இருந்த நாயகர் வழிமுறையார் வாடகையும் கொள்ளாது உணவும் பெறாது விடைபெற்றபோது என் எனக் கவிராயர் வினவக் “கொடுத்ததை வாங்கும் குணமெமக்கில்லை” என்று கூறிச் சென்ற அருமைச் செய்தி அது. இவ்விரண்டும் மாணவர் கட்டுரைப் பயிற்சிக் கென வரையப்பட்டவை எனினும் பொன் போற்போற்றத் தக்க புகழ்வாய்ந்தவையாயின.*

*எட்டாம் பகுதியாம் கதையில் முன்னதில் பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவாது என்பது. உலகியல் அறியார் அறிவு அறிவாகாது என்பதைப் பற்றியது அது. இலக்கணம், தருக்கம், இசை, கணியம் (சோதிடம்) மருத்துவம் வல்ல ஐவர் சமையல் செய்யப் புகுந்த கதை இது. “சொல்லிய கதைதான் நம்பும் தோரணையற்ற தேனும்; பள்ளியின் கல்வியெல்லாம் பயன்படா புள்ளிக் கென்பது” தெளிதற்கு உதவும் என்று முடிக்கிறார்.*

*நன்றியுள்ள சேவகன் என்னும் கதை மேலை நாட்டுக் கதையின் செய்யுளாக்கம்.. ஒரு செல்வன் ஓரிடங்காணுதற்கு நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் சென்றான். வழியில் ஓநாய்கள் வளைக்க அவற்றில் இருந்து தப்புவதற்கு ஒரு குதிரையை அவிழ்த்து விடுத்தான் வண்டியோட்டி. அதனைத் தின்று முடித்து மேலும் ஓநாய்கள் தொடர ஒவ்வொன்றாக நான்கு குதிரைகளையும் அவிழ்த்து விடுத்துத் தன்னையும் இரையாக்கித் தலைவனைத் தப்பிச் செல்ல விடுகிறான். இக்கதை மாணவர் உரைநடை ஆக்கப்பயிற்சிக்காக வரையப்பட்டதாகும்.*

*ஒன்பதாம் பகுதி பலவகைப்பாடல்களைக் கொண்டது. “தமிழினத்தீரே; தமிழினத்தீரே” என விளித்துத் தமிழின உயர்வும், அதன் தாழ்வு நிலையும், அந்நிலை மாறுதற்காம் வழியும், திருக்குறட் சிறப்பும் விரித்து முதலகவலில் ஓதப்படுகின்றன.*

திருப்போராட்டக் காலத்தில் எழுந்த 'திருப்பாட்டும், இருமொழிக் கொள்கைப் பாட்டும் படைகொண்டார் மனம் நன்றாக்காமைப்பாட்டும், நீர்க்குமிழி நிலைய வாழ்க்கைப் பாட்டும், தமிழன் தாழ்நிலைப்பாட்டும், வள்ளுவரைப் பற்றிய இசைப்பாட்டும், கும்மியடி பெண்ணே கும்மியடி என இரு கும்மிப்பாட்டும், எஞ்சிய போலிகைப் பாடல்களும் இப் பகுதியில் இடம்பெற்றுள

"தமிழ் ஆட்சி மொழியாதல் வேண்டும்; ஆங்கிலம் ஆட்சி மொழியாதல் கேடு" எனக்கும்மிப்பாட்டில் பாடுகிறார். தலையாய தமிழர் எனவரும் இறுதிப் பாட்டு "தனித்தமிழை விரும்புவாரே தலையாய தமிழர்" என்கிறார். சங்கநிதி பதும நிதி' என்னும் அப்பரடிகன் தாண்டகப் போலிகை அது படை கொண்டார் மனம் பற்றிய பாட்டு நெஞ்சை நெகிழச்செய்வது.

இறுதிப்பகுதியில் வண்ணனை நூலின் வழுவியல், வட மொழி வரலாறு என்பவற்றின் முடிநிலைப் பாடல்கள் இடம் பெற்றுள. மொழியியல் சிந்தனை மிக்கவை. வழிபாட்டு மொழி தமிழே என்பதொரு பாட்டு. வான்வாழி என்பது நிறைவுப் பாட்டு. திருக்குறட்கு வடசொல் தேவையின்மையை நிலைநாட்டு மாறு பொருள் கெடாவாறு வடசொல்லமைந்த குறள்களை மாற்றியமைத்துக் காட்டிய பாடல்கள் திருக்குறள் மரபுரையில் 23 இடம் பெற்றுள. அவை ஆய்வு வகையில் நிலைநாட்டுதற் கெனக் காட்டிய சொன்மாற்றாகலின் பாட்டோ போலிகைப் பாட்டோ, ஆகாமையால் அவை இணைத்துக் காட்டப் பட்டில.

இத்தொகை யாக்கத்தின் பின்னர்க் கிடைத்த பாடல்கள் 5 திருமண வாழ்த்து 2. பொங்கல் வாழ்த்து 2. பாணர் கைவழி என்னும் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் 1. ஆக 5 இவற்றுள் வெண்பா 3. அகவல் 1. கலித்தாழிசை 1. இவை இணைப்பாக அமைக்கப்பட்டவை.

பாவாணர் மடல்கள் வெளியீட்டு வகையால் கிடைத்த வருவாய் கொண்டு பாவாணர் பாடல்கள் வெளிவருகின்றது. ஆதலால் பாவாணர் மடல்களுக்கு உதவிய புலமைத் தோன்றல்கள் திரு. தமிழ்நேயர், செம்பியர் என்பார்க்கும், இப்பாடல்களை வெளியிட்ட நூல்கள் இதழ்கள் ஆகியவற்றுக்கும், தம்மிடம் இருந்த பாடல்கள் தமிழ் வளம் ஆகும் வகையில் உதவிய அன்பர்களுக்கும் நன்றியன்.

*பாவாணர் நூற்றாண்டின் தொடக்க நாளன்றே இதனை வெளியிட வேண்டும் என்று முடிவெடுத்த தனித் தமிழ்ச் செம்மல் முனைவர் கு. திருமாறனார்க்கும் பாவாணர் தமிழியக்கத்திற்கும், வெளியீட்டு நிகழ்வுப் பொறுப்பு ஏற்கும் பெருமக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியன்.*

**தமிழ்த் தொண்டன்**

**இரா. இளங்குமரன்**

**திருவள்ளுவர் தவச்சாலை**
**அல்லூர் 620 101.**
**திருச்சி மாவட்டம்**

# முந்தைக்கொடை முறை

பாவாணர் என்னும் பனிமலையின் பாடல்கள்
நாவாணர் துய்க்கும் நறுந்தேனாம் - காவாணர்
செந்தமிழ் நேயரும் செம்பியரும் சேர்ந்தளித்த
முந்தைக் கொடையின் முறை.

விற்ற தொகையும் விரும்புகொடை'யென்று
சொற்றநம் பாவாணர் சொல்போலப் - பெற்ற
மடல்தொகையால் பாவாணர் மாண்பாடல் நூலை
உடன்பதிக்க வாய்த்த துளம்.

நூல்வாங்கும் உள்ளத்தை நூற்றுவரில் ஓரொருவர்
பால்வாய்க்கப் பார்ப்பினும் பாற்பெருக்காம் - மேல்வாய்க்கும்
நூலுக்கு நல்லகொடை நூல்விற்றல் என்பதுதான்
ஆலுக்கு வீழ்தென்னல் ஆம்.

## சுருக்க விளக்கம்

*இ.த.எ.கெ.* - *இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் ?*

*இ.த.க.* - *இசைத்தமிழ்க் கலம்பகம்*

*உ.க.இ.* - *உயர்தரக் கட்டுரை இலக்கணம்*

*கட்.* - *கட்டுரை*

*செ.செ.* - *செந்தமிழ்ச் செல்வி*

*செ.ப.க.க. அ.மு.சீ.* - *சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியின் சீர்கேடுகள்*

*த.இ.வ.* - *தமிழ் இலக்கிய வரலாறு*

*த.நா.வி.* - *தமிழ் நாட்டு விளையாட்டுகள்*

*த.வ.* - *தமிழ் வரலாறு*

*த.தி* - *தமிழர் திருமணம்*

*த.ம.* - *தமிழர் மதம்*

*தமிழர்வ.* - *தமிழர் வரலாறு*

*தி.ம.* - *திருக்குறள் தமிழ் மரபுரை*

*தெ.மொ* - *தென்மொழி*

*ப.த* - *பழந்தமிழாட்சி*

*ம.வி* - *மண்ணில் விண்*

*மு.தா.மொ* - *முதல் தாய்மொழி*

*வ.மொ.வ.* - *வடமொழி வரலாறு*

*வ.வ* - *வண்ணணை மொழிநூலின் வழுவியல்.*

# பாவாணர் பாடல்கள்

# 1. பாயிரம்

## கடவுள் வாழ்த்து

1. குமரி நிலத்தெழுந்த கோமொழி யேனும்
தமிழர் அடிமைத் தனத்தால் - சிமிழ்த்திருக்கும்
ஆரிய ஞாட்பின் அருந்தமிழை மீட்கவொரு
சீரிய மீட்பன் துணை.

-இ.த.க.

*கோமொழி தலைமையான மொழி; சிமிழ்த்திருக்கும் கட்டுண்டிருக்கும்; ஞாட்பு போர்; மீட்பன் மீட்பாளன். இறைவன்.*

2. எண்ணிற்கு மெட்டா இடங்காலந் தேங்காவி
கண்ணிற்கோ எட்டுங் கனப்பொருளாம் - வண்ணிக்கக்
கூடாமல் அன்றோ குறித்தார் கடவுளென
நாடாமல் உண்டென நம்பு. -த.ம.

3. மறைமலை யடிகளும் மாமதி யழகரும்
கறையுறும் இந்தியைக் கடிந்தும் தொண்டர்பின்
சிறையுழந் தின்னுயிர் சிந்தியும் வடவர்தாம்
இறையுமெ ணாதிவண் இந்தியைப் புகுத்தினர்.

4. இந்நில வரலாறும் இன்றமிழ்ப் பெருமையும்
என்னுமே யறியாமல் இறைமை தாங்கிய
தன்னல வடிவெனும் தமிழப் போலியர்
கன்னலந் தமிழையும் காட்டிக் கொடுத்தனர்.

5. தமிழ லாதுயிர் தமிழனுக் கின்மையின்
தமிழன் தன்னிலம் தன்னுயிர் தாங்கவே
இமையுந், தாழ்விலா தியன்ற யாவையும்
அமையச் செய்குவிர் அயன்மொழி யொழியவே.

6. தன்மையிழந்து தவிக்கின்ற தமிழன்தன்
முன்மை யுணர்ந்து முன்னேறிச் சென்றிட
உண்மை வடிவெனும் ஒருவன் உணர்த்தவும்
இன்னி திசைத்தேன் இசைத்தமிழ்க் கலம்பகம்.

7. குறையும் எழுத்தினால் கூடுவ தினிமையே
அறையும் அளபெடை யாக்கியே யெழுத்தொலி
நிறையும் அளவுற நீட்டுக இதற்கேஇம்
முறையும் சிலவிடம் முதன்மையாய் ஆண்டுளேன்.

8. பாடற் குழாம்ஒன்றேற் படுத்துக; ஊர்தொறும்
கூடற் குரியவாய்க் குறித்திட்ட நாட்களில்
தேடற் கரியதாம் தீந்தமிழ் தெருவெலாம்
பாடிப் பராவுக பயிற்சியைப் பெற்றபின்.

9. இந்தி யொழிந்தபின் இருமொழிக் கொள்கையே
செந்தமிழ் நாட்டிலே சீராக வேரூன்றி
வந்தவ ருந்தமிழ் வாணரும் வாழ்ந்திட
முந்திய இறைவனும் முழுமையும் அருளவே.

–இ.த.க.

*1. மதியழகர் - சோமசுந்தரபாரதியார்;*
*இறையும் - சிறிதும்;*
*2. என்னும் - சிறிதும்; கன்னல் - கரும்பு*
*3. இமையும் - இமைப்பொழுதும்:*
*4. இன்னிசைத்தேன் - இனிது பாடினேன்;*
*இப்பொழுது பாடினேன்*
*5. பராவுக - வாழ்த்துக*
*6. வந்தவர் - அயலார்.*

## அவையடக்கம்

10. என்றும் திருத்தம் இயம்பும் அறிஞரின்
நன்றி அறிவேன் நனி

ப.த.ஆ முகவுரை
சேலம் 13.12.51.

11. பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
மிகுத்ததனால் உண்டோ பயன்? - ப.த.வ;நூ.

முகவுரை 30.11.73

வ.மொ.வ.முகவுரை 28.8.68

12. பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
மிகுத்ததனால் ஏது பயன்? - மு.தா. மொ:

முகவுரை 6. 21.2.49

# 2. வாழ்த்து

## திருமண இறைவணக்கம்

13. துங்க இல்லறத் துணையை நாடியே
இங்க மர்ந்துள இம்மண மக்களை
மங்க லம்மிகு மணவினைப் படுத்தவே
எங்குந் தங்கிய இறையடி பணிகுவாம்
அங்க - உயர்ந்த. -த.தி. 74

## இறைவேண்டல்

14. தாயும் தந்தையும் தானெனும் தம்பிரான்
சேயைக் காத்தருள் சீரென இன்னினே
தாயும் நோயுறத் தண்ணருள் பொழிகென
ஆயி ரம்மவன் அடியிணை வீழ்ந்தனம்.

-திரு. மி.மு. சின்னாண்டார்க்கு எழுதியது
இன்னினேஇப்பொழுதே.7.1.65

15. இன்னிசை யாழ்வல்லான் இன்சொல் எழில்முகத்தான்
என்னிடை யன்பால் இசைநுவன்ற - இன்னியலான்
மன்னார் குடியிராச கோபாலன் மாணடிகள்
மன்னுக என்றன் மனத்து.

- இ.த.க.

## திருமண வாழ்த்துப்பா (நேரிசையாசிரியம்)

16. மங்கலந் தங்கும் மனையறம் மருவும்
..............................................
ஓருயி ரெனவே ஒன்றிய காதலில்
பல்வகைச் செல்வமும் பாங்கா யுதவ
இம்மையின் இன்பத் தெல்லை கண்டே
ஏனையர்க் கெல்லாம் இயல்வரை உதவி
உற்றோர் மகிழவும் மற்றோர் புகழவும்
வள்ளுவன் நெறியும் தெள்ளிய தமிழும்
மாநிலம் எங்கணும் பரவ
வாழியர் நன்கு வையகம் நெடிதே -த,தி. 80

## மங்கலம்

17. போற்றும் தமிழ்க்காவற் பொன்னுச் சுவாமியரும்
ஆற்றுஞ் சகுந்தலை அம்மையரும் - ஏற்ற
நகர்க்காவ லோடு நலவறங் காத்து
நிகர்க்காமல் நீட நிலம்.

...........மங்கலம் 1. 4. 45

திரு. பொன்னுச்சாமி அவர்கள் காவல்துறை.

*நலவறம் - நலம்பயக்கும் அறங்கள்;*

*நிகர்க்காமல் - ஒப்பு இல்லாமல்*

## கலியாண சுந்தரம் வடிவழகி
## திருமண வாழ்த்து

18. கலியாண சுந்தரஞ்சேர் காதல்வடி வழகியம்மை
புலியாணம் ஒன்றாகிப் பொருவரிய இன்பந்துய்த்
தொலியான நன்மக்கள் உலகுவப்பப் பெற்றுமனை
மலியாணர் வரநீடு மாநிலத்து வாழியரோ.

செ. செ. 30: 506 11.6.56

*புலியாணம் ஒன்றாகி - உண்ணாக்கும் மேல்நாக்கும் போல் ஒன்றுபட்டு; ஒலியாணம் - புகழும் அழகும்; மலியாணர் - மிகுந்த புதுவருவாய்.*

## திருவளர் முருக லலிதையர் திருமண வாழ்த்து

19. முருக லலிதாவர் முத்தமி ழின்பம்
பெருகு திருவாழ்வு பெற்று -முருகுமண
மங்கலம் நீடி மனமொன்றிப் பார்புகழத்
தங்குக மேன்மேல் தழைத்து.

- 20 மீனம் 2000 3.4.69

முருகு எழுச்சி. திரு. பி. கணேசன், இரணியல்

*சேலம் நகராண்மைக் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர் மகனார், திருச்செல்வர் இரா. வேங்கடேசன் பொறி. இ.க. சென்னிமலைசிங்காரவேலர் திருச்செல்வி சகுந்தலா எம்.பி.பி. எசு.*

## திருமண வாழ்த்து

20. தேங்கு முப்பொருள் திருநடம் புரிந்திட
வேங்க டேச சகுந்த லாவர்
ஓங்கி வாழியர் உலகில் நீடியே! - 24.12.71

*முப்பொருள் - அறம், பொருள், இன்பம்.*

### வாழ்த்துப்பா

21. நாவை சிவதா மரையர் தமிழ்க்கதிரோன்
மூவர் மகிழ்க முழுவாழ்வு - மேவுமணி
செந்தா மரைமலர்த்துஞ் செங்கதிர் போற்குரவர்
சிந்தா முகமலர்த்தச் சேர்ந்து. - உச மீனம் 2002

புலவர் நாவை. சிவம்.

*சிந்தா - கெடாத.*

### வாழ்த்து

22. நாவை சிவமினியும் நாடும் நிலையெல்லாம்
மேவி யுயர்ந்து மிகநீடி - யாவும்
தமிழெனத் தோன்றுந் தகைமையில் வாழ்க
இமிழ்கடல் வையம் இனிது. - புலவர் நாவை. சிவம். 7.7.78

## வாழ்த்து

23. நாவைசிவ தாமரையார் நாற்றிசையுந் தமிழ்மணக்கப்
பாவையெனப் பூத்ததமிழ்ப் பண்புமிகுந் தமிழ்மலர்தான்
நாவையுறுங் கலைகளெல்லாம் நயமுற்றத் துறைபோகி
மாவுலகும் பெற்றோர்போல் மகிழ்தூங்க மன்னுகவே. (21.12.72)

- உ00ங, சிலை, எ.புலவர் நாவை. சிவம்.

## மங்கலத்திரு. பரமசிவ ஐந்தருவியர் திருமண வாழ்த்து

24. பரம சிவவைந் தருவியர்நற் பாலின்
விரவு சிவல்நீர் விழையப் - பரவுதமிழ்
இன்பம் வளர இலகுக நீடுமனை
அன்பும் அறனும் அமைந்து. -26.1.75

## திருமண வாழ்த்து மங்கலத்திரு. குமுதபாண்டியர்

25. தமது பாத்துணுந் தம்மில் வாழ்வினிற்
குமுத பாண்டியர் குலவி நீடியர்
தமிழ நன்மணந் தழுவு வோர்தமை
நிமிருந் தலையுடன் நிலத்தில் ஓங்கவே.

- பாவலர் முடியரசனார்க்கு 9.6.75

*தமது பாத்துணும் தம்மில்வாழ்வு என்பது,*

“தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு”.

*என்னும் குறளைத் தழுவியது.*

## மங்கலத் திருவளர் செந்தாமரை கணபதியர் திருமண வாழ்த்து

26. இறையருள் பாங்கா யில்லறம் புகூஉம்
திருவுறை செந்தா மரைகண பதியர்

ஒருமன வாழ்வில் உலகிய லின்பம்
நிறைவுற வாழ்க நிலமிசை நெடிதே. - 15.1.76.

## மங்கலத் திரு. இளங்கோ இராசேசுவரியார் திருமண வாழ்த்து

27. இளங்கோ விராசே சுவரியர் நல் லின்ப
வளங்கோள் வகைநீடி வாழ்க - விளங்கியினி
வண்டமி ழோங்குதிரு வள்ளுவ வாகையறம்
எண்டிசை யேந்த வினிது.

- 18.5.76 புலவர் இளங்குமரனார்க்கு
வாகை - வெற்றி

## மங்கலத் திரு. மெய்கண்டான் சீதாவர் திருமணவாழ்த்து

28. மெய்கண்டார் காணன்பு மெய்யன் திருவருளால்
மெய்கண்டார் சீதையர் மேவிநிலை - மெய்கண்டு
மெய்யின்பந் துய்க்க மிகுநாள் மனையறமும்
மெய்யின்பப் பண்பு மிக.

-25.10.78.

*மெய்யன் - இறைவன்; உரைவேந்தர் பேரா.*

*ஔவை.சு.து. அவர்களுக்கு விடுத்தது.*

*மேவி - அடைந்து; நிலைமெய்-*

*நிலைத்த மெய்ம்மை,*

*மெய்யின்பம் - உடலின்பம்.*

## மங்கலத்திரு. பாரதிஞானசோதியர் திருமணவாழ்த்து

29. நேரிய தமிழ்மறை நெறியுற வகுத்த
சீரிய மனையறம் செம்புலம் பெய்த
நீரியல் நேய நீர்மிகு நெஞ்சம்
பாரதி ஞான சோதியர் கலந்து

பார்மிசை நீடு வாழியர்
ஈரறி மகவர் இன்பந் திளைத்தே.

-புலவர் இளங்குமரனாருக்கு 25.5.79

*தமிழ்மறை - திருக்குறள்; செம்புலம் பெய்தநீரியல் நேயம் என்பது "செம்புலப் பெயல்நீர்போல அன்புடைநெஞ்சம் தாம் கலந்தனவே" என்னும் குறுந்தொகைவழியது. நீர் - வளம்; ஈரறிமகவர். அறிவறிந்த மக்கள் இருவர்.*

## மங்கலத்திற்கு இலட்சுமி நாராயண கண்மணியர்

## திருமண வாழ்த்து

30. கண்மணி லட்சுமி நாரா யணர்காதல்
விண்மணி யேபோல் விளங்கியொன்றாய் - ஒண்மணி
மக்கள் தகவுணர்த்த மாநிலத்து நீடியரோ
தொக்க நலமெலாந் தோய்ந்து.

*- 31.5.79 சு. பொன்னுச்சாமி*

*எல் - கதிரோன்; தொக்க - நிரம்பிய.*

## திருவளர் சங்கரி மங்கலநீராட்டு விழா

31. எங்கணும் தங்கும் இறைவன் திருவருளால்
மங்கையாம் சங்கரி மண்ணுநீர் - மங்கலந்தான்
பொங்கபின் பெற்றோர் புகலும் பெருமகனின்
துங்கநல் வாழ்க்கைத் துணை.

*- 12.8.80 பாவலர் இ. முத்துராமலிங்கம்*

*மண்ணு மங்கலம் - பூப்பு நீராட்டு; பொங்க - பொலிக; புகலும் - சொல்லும்; துங்கம் - உயர்வு.*

## மக்கள் வாழ்த்து

32. தேவ மொழியேனும் தெட்டை நீக்கியே
ஏவருந் தமிழ் எமது மொழியென
மேவி வாழியர் மேலை மறந்தபின்
தாவில் நல்லிசைத் தமிழம் ஓங்கவே.

33. உள்ள நற்றொழில் உஞற்றித் தம்முடைப்
 பள்ளி யிருந்துணாப் பகிர்ந்துண் டின்பமாய்த்
 தெள்ளு கற்புடைத் தேவி யோடறம்
 வள்ளு வர்மதி வகுத்த வாழ்வரோ.

34. மிக்க பிறப்பினை மிண்டித் தடுத்தபின்
 தக்க அறிஞரைத் தலைவ ராக்கியே
 ஒக்க ஒன்றிய உலக ஆட்சியில்
 மக்கள் வாழியர் மண்ணில் விண்ணதே.

*1. தெட்டு - வஞ்சம்; ஏவருந்தமிழ் - தொல்பழந்தமிழ்;*

*மேவி - அமைந்து; மேலை - மேற்கூறிய வஞ்சம்; தா - குற்றம்.*

*2.உஞற்றி - செய்து; பள்ளி - இல்லம்; உணா - உணவு; தேவி - மனையாள்; மதிவகுத்த - மதித்து அமைத்த. அறிவால் அமைத்த.*

*3.மிண்டி - நெருங்கி. உறுதி*

## புலவர் முடியரசனார்க்கு வாழ்த்து

35. வேத்தவைப் பாவலரும் வேற்று மொழிகலக்கும்
 தீத்திறக் காலை தெளிமருந்தே - மூத்த
 முடியரச ரின்றி மொழிவனப்புச் செய்யும்
 முடியரசன் செய்யுண் முறை. - 15.8.55

*வேத்தவை - அரசவை; முடியரசர் - மூவேந்தர்.*

36. தேவேந்தர் பேசும் மொழியெனத் தெட்டித் திருவினொடு
 மூவேந்தர் மாய முதுதமிழைக் கொல் மொழியொழிக்கும்
 நாவேந்த ரான புலவர்க்கு வேலன்றோ நம்புதுவைப்
 பாவேந்தன் பாரதி தாசன் புரட்சிப் பனுவல்களே

*- 15.4.59 - பாவேந்தர் சிறப்பிதழ் (தமிழ் முரசு)*

## சி. இலக்குவனார் 55 ஆம் பெருமங்கல நாள் வாழ்த்து

37. இலக்குவனார் செய்யும் இருந்தமிழ்த் தொண்டை
விலக்குவான் செய்த வினையே - துலக்கியதே
ஊழின் வலியதொன் றின்மையால் மற்றொன்று
சூழினும் முந்துறும் சொல். - 25.10.65

## ஓவியர் செல்லத்துரைக்கு வாழ்த்து

38. சித்திரமோ கைப்பழக்கம் செல்லத் துரையோய்வில்
ஒத்த வகையின்ப ஓவியற்ற - எத்திறமும்
ஓவியத்தால் அன்றி உணர முடியாத
ஆவியுற்றான் செய்க அருள். -14.11.73

*ஒய்வில் பணியிடைப் பணியாக ஓவியம் வரைதலைக் கொண்டமையால் ஓய்வில் என்றார்.*

*ஓவு - ஓவியம்; ஆவியுற்றான் - ஆவிவடிவமான இறைவன் (கிறித்து)*

## திருவள்ளுவர் திருவிழா வாழ்த்து

39. அம்மை வனப்பினில் அன்புறு வாய்மையாம்
செம்மை யுலகறம் செப்பிய தேவனை
எம்மை யென்றுகொண் டிப்பெரு விழவினில்
வெம்மை மொழிப்பகை விட்டினி வாழ்மினே

*-செ. செ. 43. 194*

*அம்மை - அடிநிமிர்ப்பில்லாச்*
*சின்மென்மொழிச் செய்யுள்*

*எம்ஐ - எம் தலைவன்.*

## மறைமலையடிகளுக்கு வாழ்த்து

40. மறைமலை யென்னும் மறையா மலையின்
நிறைநிலை வாரத்தே நிற்க - இறையும்

தமிழன் வடமொழியால் தாழ்வின்றி வாழ
இமிழுங் கடல்சூழ் இகம்.

*- த.வ. 295; தமிழர்வ. 334*

*வாரம் - அன்பு; இறையும் - சிறிதும்*

*இமிழும் - ஒலிக்கும் ; இகம் - இவ்வுலகில்*

## பெரியார் பிறந்தநாள் வாழ்த்து.

41. புண்ணூற்றுக் கல்லடியும் சாணக் குண்டும்
பொறுத்தலருஞ் சொல்லடியும் புகழ்போற் கொண்டு
கண்ணாற்றில் கலஞ்செலுத்தும் கடுஞ்செய் கைபோற்
கைதூக்கித் தென்னவரைக் கரையி லேற்றித்
தொண்ணூற்று மூன்றாண்டு தொடர்ந்த பின்னும்
துளங்காது துலங்குபகுத் தறிவுத் தொண்டால்
நண்ணூற்றைத் தாண்டவரும் நோற்ற லாற்றன்
நானிலத்துப் பெரியாரை வாழ்த்து வோமே.

*- முதன்மொழி 1.31*

*புண் + ஊறு. நண் + நூறு எனப் பிரிக்க*

திரு.வ.சு. மணிவிழா வாழ்த்து

42. சுழன்றும் தமிழுலகம் சுப்பையாப் பிள்ளை
முழங்கும் தமிழ்ப்பற்றின் மூள - வழங்கும்
பலபல வூழியவன் பைந்தமிழுக் கென்று
நிலவுக நின்று நிலத்து.

*-செ. செ. 32: 73.*

## பேர்வேண்டாப் பெரும்புகழாளன் - ஆண்டியப்பனார்க்கு மணிவிழா வாழ்த்து

43. பாண்டிய ரில்லாப் பைதறு காலை
பாலவ நத்த வேளென வுற்ற
பாண்டித் துரையெனும் பைந்தமிழ்த் தேவர்
நாட்டிய நாலாம் நற்றமிழ்க் கழகம்
வாயில் கொண்டு வண்டமிழ்த் தொண்டு

முப்பா னைந்தாண் டொப்புர வாற்றி
இல்லாண்மை யானே நல்லாண்மை பூண்டு
முதுகுடி யுயர்த்தும் முக்குலச் செம்மல்
தன்னலங் கருதா மன்னலக் குருசில்
பேர்புகழ் வேண்டாப் பெரும்புக ழாளன்
மணிவிழாக் கொள்ளும் பணிவிழா நல்லோன்
ஆண்டி யப்பத் தேவர் வாழி
வேண்டியாங் கெய்தி விழுமிய நெடிதே

## உலகத் தமிழ்க் கழக உறுப்பினர்க்குப் பொங்கல் வாழ்த்து

44. தகைசால் உலகத் தமிழ்க்கழ கத்தீர்
நகைசேர் முகத்தொடு நலமாய் வாழ்க!
புத்தாண்டாகும் பொங்கல் நன்னாள்!
கொத்தாம் மஞ்சட் கொழுங்கிழங்கு கமழ்க!
வெண்ணெலும் கரும்பும் வீடுதொறும் பொலிக!
பாலொடு சோறும் பாற்படப் பொங்குக!
புத்தாடை யணிந்து புதிரியுண்க!
இல்லார் மகிழ்க! இயன்றவை ஈக!

மறைமலை யடிகள் நிறைமொழி வள்ளுவர்
மலர்முகப் படங்கள் மனைதொறும் நாற்றுக!
தமிழ்ப்பெயர் தாங்குக! தனித்தமிழ் பேசுக
தென்மொழி படிக்க! தீந்தமிழ் பொழிக!
உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி
இலகு தமிழெனல் எதிர்நோக்கி இனியே

*-தெ. மொ. 7. 9. 48*

## நற்கலையில் வெள்விழா

45. வீட்டுரிமைக் காவணம் வேண்டும் வரலாறு
நாட்டுரிமைக் காகும் நவையின்றேல் - ஏட்டுரிமை
பெற்றார் திருவரங்கம் பின்னிளவல் சுப்பையா
உற்றார் வெளியிட வோர்ந்து.

46. சிவநெறிக் கொண்முடியும் செந்தமிழும் போற்றும்
உவமனிலா நூற்பதிப்பில் ஊன்றி - நிவந்தோங்கிப்
பொன்விழா வைத்தமிழ்ப் பொத்தகஞ்செய் நற்கலையின்
வென்விழா வென்றே விளம்பு.

47. நாடும் மொழியும் நலஞ்செய்பல் வேறறிஞர்
பாடும் அரசும் பகர்நூல்கள் - கேடின்றிச்
செந்தமிழ் ஆங்கிலம் சேரவிலை கொள்ளுமிடம்
அந்தமிழ் அப்பரச்ச கம்.

48. ஆயிரத்தெண் ணூறாண்டின் முன்னைத் தமிழரெனும்
நேயமிக்க நூற்கறு நூறுரூபா - சேயொருத்தர்
பெய்தார்வே றெங்கும் பெறலின் றெனமயங்கி
நொய்தாங் கழகவிலை நோக்கு.

49. பாட்டும் உரையும் பதவிதரு நற்சான்றும்
காட்டும் படங்கடிதம் கையெழுத்தும் - கூட்டிப்
புலவர் வரலாற்றைப் போற்றுங் கலையில்
வலவன்யார் சுப்பையாவல் லால்.

50. வெண்டாளில் முத்துப்போல் வேண்டும் பலவடிவில்
பண்டார் தமிழ்நூல் பதிப்பித்தார் -கண்டாரின்
கண்ணைக் கவரும் கவின்கட் டடஞ்செய்தார்
எண்ணில் பிறர்வே றெவர்.

51. சைவசித் தாந்தநூல் சார்பதிப்ப கம்வாழி
தெய்வத் தமிழ்ச்செந் திறம்வாழி - கைவந்த
ஆட்சிமே லாளன் அருந்திறலோன் சுப்பையா
மாட்சியில் வாழி மழை! -கழகப் பொன்விழாமலர்.

## சை. சி. கழகத்திற்கு வாழ்த்து

52. சைவசித் தாந்தநூல் சார்பதிப்ப கம்வாழி
தெய்வத் திருவள் ளுவம்வாழி - செய்வெற்றச்
சுப்பையா வாழி சொரிமுகில் நீடுழி
தப்பாது வாழி தமிழ்.

*செய் - செயல். வெற்றம் - வெற்றி.*

*என்தமிழ்த் தொண்டு இயன்றது எங்ஙனம்? -*

*செ.செ. 444: 220*

## சிவஞான முனிவர் நூல் நிலையத்திற்கு வாழ்த்து

53. நெல்லைத் திருநகர் நீள்கிழக்குத் தேர்மறுகில்
முல்லைத் தமிழின் முதிர்புலவர் - ஒல்லையில்
மொய்சிவ ஞான முனிவர்கோன் நூல்நிலையம்
எய்துக நீடி இனிது

*- செ.செ. 40: 297*

## மறைமலை மன்றத்திற்கு வாழ்த்து

54. குமரி மலைப்பிறந்த கோமொழி - வாழி -
திமிர மறை மலைசீர் வாழி - அமரும்
மறைமலை மன்ற மதன்வாழி வாழி
மறைமலை யச்சு மனை.

*- தமிழர்வ.*

## இலண்டன் தமிழ்ச் சங்க ஆண்டுமலர் வாழ்த்து–1976

55. உலண்டின் கூடும் உயர்ந்தோர் உவக்கும் உடைக்குதவும்
இலண்டன் தமிழ்ச்சங் கமதின் இவ்வாண் டியல்மலரே
இலொண்டுங் குடிபோ லிங்கிலாந் தில்தமிழ் இருந்திடினும்
சொலண்டும் ஆங்கில இனமுத லெனுமெய் சொலித்திடவே.

## மணிவாசகர் நூலகர் மன்றம்

56. மணிவா சகர்நூ லகமன்றம் நீட
மணிவா சகநூல்கள் மன்னி - அணியோசைச்
சிற்றம் பலமுஞ் சிறந்தபே ரம்பலமும்
மற்றம் பலமாய் மலிந்து.

## முதன்மொழி வாழ்த்துப்பா

57. உலகத் தமிழ்க்கழகம் ஒன்றையே பற்றி
இலகப் பரவும் இயம்பி - நீலவுகவே

பேரா சிரியப் பெருமகன் சொக்கப்பன்
நேராம் 'முதன்மொழி' நீடு.

*-முதன்மொழி 1. 11: 13.12.70*

## அறிவு – திங்கள் இருமுறை வாழ்த்துரை

58. இழந்த உரிமைகளை எய்த அறியா
துழந்த தமிழ்நிலை ஓர்ந்து - துழந்துவழி
காட்டி அறிவு கனிந்த தனித்தமிழை
நாட்டி நிலவுக நன்கு.

*-அறிவு1.1:1*

*தமிழ்நிலை - தமிழர்நிலை. துழத்தல் - ஆராய்தல்.*

## அருட்குறள் அணிந்துரை (1954)

59. கிறித்தவ உண்மைகளைக் கேளாரும் கேட்பக்
குறித்த அருட்குறள் கொள்.

*பேரா. வீ. ப. கா. சுந்தரர் இயற்றிய இறையிசைப் பாமலர் என்னும் நூலுக்குப் பாராட்டு 1971*

60. தாய்மொழிப்பற் றில்லாத் தமிழக் கிறித்தவர்
வாய்மறை வாசக வாயில்நல் - நேயமுறப்
பாவலன் சுந்தரம் பாடல் இறையிசைப்
பாமலர்ப் பல்வண்ணம் பார்த்து.

# 3. இரங்கல்

*திருவாட்டி திருவரங்க நீலாம்பிகையார் மறைவுக்கு இரங்கல்*

61. பட்ட காலிலே படுமெனும் பழமொழிப்
பட்ட வரங்கனார் பத்தினி பிள்ளைமைப்
பட்ட வெண்மரை விட்டிறந் துண்மைகைப்
பட்ட போதியான் பட்டதை யென்சொல்வேன்!

62. தனித்தமிழ் இயக்கினைத் தாங்குவார் தம்மையே
தனிப்பட்ட வளைத்தனன் தகையில் கூற்றுவன்
இனித்தமிழ் என்னிலை எய்து மோவெனப்
பனிப்பவர் தீக்குறி பார்ப்ப தற்கிதோ!

63. புதுவதே யன்றுயிர் போவ தியல்பென
முதுவரும் முன்னரே மொழிந்த துண்மையால்
இதுவரை இருந்ததற் கிறையை யேத்தியே
கதுமென யாஞ்செயும் கடமை முற்றுவோம்.

## திருவாட்டி வ. சுந்தரத்தம்மையார்க்கு – இரங்கலுரை

64. இந்நிலை எண்பானால் ஏற்ற மாயினும்
அன்னையிற் சிறந்தவர் ஆரும் இன்மையின்
எந்நிலை இறப்பினும் ஈன்ற தாய்மகன்
துன்னுறு துயர்பிறர் துய்க்க வல்லரோ.

*- செ. செ. 27: 81*

## நாவலர் பாரதியார் மறைவுக்கு இரங்கல்

65. காமு றத்தமிழ் காத்தபண் டாரகன்
சோம சுந்தர பாரதி சூருடல்
ஈம மெய்தினும் இந்நிலம் நிற்பனே
ஏம நல்லுரை ஏறென வென்றுமே

*- செ. செ. 34. 205*

## ஔவை தி.க. சண்முகனார்க்கு
## இரங்கற் பாக்கள்

### என் செய்வோம் !

66. இலக்கியமும் வரலாறும் எல்லாரும் இன்பமிகத்
துலக்கமுடன் கண்டறிந்து தொல்பெரியார் வாழ்ந்தபொது
நலக்குறிக்கோள் கொண்டொழுக நடித்தகலைச் சண்முகனார்
கலக்கமுற நமைப்பிரிந்த கடுந்துயருக் கென்செய்வோம்!

67. செவ்வை நடிப் புடனிசையும் சேர்தமிழ ரில்லையெனும்
கவ்வையற எவ்வகையும் களங்கொண்ட முத்தமிழர்

அவ்வையடைச் சண்முகனார் அரியசெய லோவியனார்
எவ்வமுற நமைப்பிரிந்தார் இணையில்லார் என்செய்வோம்.

68. தமிழ்நாடு தமிழாட்சி தான்பெறவே காலமெலாம்
தமிழோடு தமிழாகித் தமிழரசுத் தூணாகி
நிமிரோசை மரைத்திருவாம் நெடுமொழிசேர் சண்முகனார்
அமிழ்தான தமிழ்கவல அகன்றுவிட்டார் என்செய்வோம்!

## பண்டாரகர் சி. இலக்குவனார் மறைவுபற்றி இரங்கல் பதிகம்

69. முந்திவா ளோடு மூத்த முதுகுடிப் பிறந்து கல்வி
தந்தையர் தமிழ்ப்பா லூட்டத் தறுகணர் புலமை முற்றி
இந்தியை எதிர்க்கு முன்பே ஏனைய மொழிக் கலப்பைச்
சிந்திய தமிழ்வ ளர்ப்புச் செயலிலக் குவனார்க் காணோம்.

70. நீரணை திருவை யாற்று நேரிரு மொழிக்கல் லூரி
ஆரியர் முதல்வ ராகி அருந்தமிழ் பழித்த காலைச்
சீரிதின் மறுத்து வந்தார் செறிந்திலக் குவனார் தாமே
கூரியல் குன்று மோதான் கோளரி குருளை யேனும்.

71. ஆறடி வளர்ந்த நல்ல ஆண்மையர் தோற்றம் விஞ்சும்
மாறனோ ஆரன் தானோ மற்றெனின் சேரர் கோனோ
வீறுடன் நீண்மே லாடை வீசுகை முழந்தாள் தோய
ஏறுபோல் நிமிர்ந்து செல்லும் இலக்குவனாரைக் காணோம்.

72. உவப்பவே தலைக்கூ டிப்பின் உள்ளவே பிரியு முன்னர்த்
தவப்பல நாளும் ஒக்கத் தனிச்சுவை விருந்தின் ஓம்பி
எவர்க்குமுள் அழுக்கா றின்றி இயல்திறம் புகழ்ந்துபோற்றி
நிவப்புறும் புலவர் செய்கை நிகழிலக் குவனார்க்காணோம்.

73. பகலெல்லாம் மாண வர்க்குப் பகுத்தறி வுடன்கற் பித்து
மிகலுள வொழிவு நேரம் மிளிர்குறள் நெறிநடாத்தித்
தகுமொரு கைம்மா றின்றித் தமிழ்வளர் கழகம் நாட்டித்
திகழ்வுறு தமிழ்த்தொண் டிற்குத் தினையுமோர் பாராட் டுண்டோ?

74. செந்தமிழ்ப் புலவன் என்கோ சிறந்தவா சிரியன் என்கோ
செந்திற ஆய்வன் என்கோ செழுந்தமிழ் காத்தோன் என்கோ
இந்தியை எதிர்த்து வேலை இழந்துசெல் சிறையன் என்கோ
முந்துதொல் காப்பி யத்தை மொழிபெயர்த் தீந்தோன் என்கோ.

75. பல்கலைக் கழக ஆட்சிப் பதவியின் தகுதி யெல்லாம்
மல்கிய புலவ ரேனும் மதுரையில் ஏமா றுண்டார்
புல்கியோர் வாய்மைஏட்டுப் புரவல ராகா மையின்
ஒல்கியே உள்ளம் விண்டார் ஓய்ந்திலக் குவனார் சென்றார்.

76. எந்தையை இழந்தோம் என்பர் இன்னுயிர் இழந்தோம் என்பர்
முந்தையை இழந்தோம் என்பர் முறைபிற சொல்வர் நாமோ
இந்தியை எதிர்த்து வீழ்த்தி இருந்தமிழ் மீட்டுக் காக்கும்
செந்தமிழ்ப் படையின் மானச் செம்மலை இழந்தோம் என்பேம்.

77. தன்னலம் ஒன்று மின்றித் தமிழ்க்கென வாழ்க்கை ஏற்ற
மன்னலப் புலவர் தேரின் மருவுபண் டார கர்தான்
இந்நிலை ஒருவர் உண்டோ இலக்குவ னாரை ஒப்பார்
இன்னலே தமிழ்க்கு நேரில் இன்னுடல் ஈய வல்லார்.

78. இருந்தநாள் ஒன்றும் ஈயா திறந்தபின் இரங்கல் கூறல்
வருந்தவே தானிந் நாட்டு வழக்கமாய்ப் போயிற் றந்தோ
திருந்திய உண்மை அன்பர் தீர்ந்தவர் குடும்பத் திற்குப்
பெருந்தொகை தண்டி யீக பெரிதொரு கழுவா யாகும்.

*- செந்தமிழ். இலக்குவனார் நினைவுமலர்.*
*வள். ஆண்டு 2004;*
*பிரமாதீச மார்கழி 1973 திசம்பர்*

## செல்வத்தம்மையார்க்கு இரங்கல்

79. செல்வ மேயெனும் செல்வஞ் சென்றதைச்
செல்வி வாயிலாய்த் தெரிந்து வருந்தினேன்
கொல்வ கையெனும் குறிப்பி லாமையாற்
சொல்வி னைக்குமைச் சூழ்ந்த மர்த்தினேன்.

80. புற்று நோயினாற் போன என்மனை
பற்றி நீடியே பரிந்தொ ரீளையைப்
பெற்று ழந்தபின் பிழையை நோக்கியே
முற்று நீக்கினென் முதல்வன் அருளினால்.

81. பெண்ணி னற்றுணை பிறிதொன் றின்மையால்
நண்ணி வாழ்வதே நாயன் விரும்பினும்
கண்ணி னன்மனை கணவன் கண்முனே
கண்ணை மூடுதல் கருதின் நன்றரோ.

82\. ஆற்று மளவிறந் தவல நேரினும்
போற்றும் வகையிலாப் புல்லென் னிம்மையில்
நோற்று மக்களை நோக்கி யேதமைத்
தேற்றிக் கடமைகள் தீர்த்தல் நன்றரோ.

83\. இன்ப மொருதுளி இடையில் நேரினும்
துன்ப மேமிகும் தொல்லை யுலகினில்
தென்பு தந்திடும் தீந்த மிழ்த்துணை
நன்பெ னக்கொளல் நம்ப னருளதே.

*- புலவர் இரா. இளங்குமரனார்க்கு*

# 4. நன்றி

**வடமொழி வரலாறு – நன்கொடையாளர்க்கு**

84\. ஆளும் அரசும் அமைபல் கலைக்கழகும்
நாளும் திரள்செல்வ நாயகரும் - நீள்கையறத்
தாய்மொழிக் கென்றுருபா தண்டினான் நாகராசன்
ஆயிரம் நான்கென் றறி.

85\. ஒன்றும் பலவும் ஒருநூ றளவுருபா
ஒன்றி யளித்தவெலா வொண்மையர்க்கும் - நன்றி
தமிழன்னை கூறுகின்றாள் தப்பாமற் கொள்ள
இமிழ்திரை ஞாலம் இசை.

*தமிழர் மதம் - நன்கொடையாளர்க்கு*

86\. கடவு ளுண்மையைக் கண்ட குமரித்
தமிழர் மதநூல் தன்னை வெளியிட
முன்னோர் தகவோர் என்னும் உண்மை
பின்னோர் காட்டும் பெற்றியில் வாழும்
முல்லை வாண முல்லைச் செல்வியர்
திருமலை குமணன் திகழ்நன் முல்லை
திருவர் வெ.நா. சுப்பை யாமகார்
இளங்கண் ணன்செம் பொன்தமிழ் முல்லை
மானி மீன்கொடி யாம்அருண் முல்லை
அமல தாசன் சிதம்பரம் பெருமாள்

வரதன் மனோகரன் மூர்த்திகண் ணையா
சண்முகம் கணேசன் சிவசாமி யென்னும்
பண்புறு சிங்கைப் பதினெண் தமிழர்
அன்புரு பாமூ வாயிரத்து நூறு
இன்றமி ழன்னை இணையடிக் கையுறை
என்றும் தமிழுல கேத்துதல் கடனே. 23.9.72

**தமிழர் மதம் வெளியீட்டுதவி**

87. திருமுல்லை வாயில் திகழ்முல்லை வாணன்
மருவில்லான் முல்லை மறவன் - திருமுல்லை
மூவா யிரமேலும் மொய்த்தவொரு நூறுருபா
தூவா தளித்தான் தொகுத்து.

88. எங்கே யுமாறா இயன்முல்லை வாணன்சேர்
சிங்கைத் தமிழன்பர் செய்கைகாண் - அங்கே
இலங்கரச மும்மொழியுள் இன்றமிழும் ஒன்றாம்
இலங்கையிலு மில்லாத ஏண்?

89. அரிமா புரமென்னும் அத்திருத் தீவில்
அரிமா நிகர்முல்லை வாணன் -வரிமான்
'தமிழருவி' பாடித் தமிழருவி பாய
இமிழிசையிற் செய்தான் இனிது.

90. மதத்தை மதியாது மாய்க்கவெனும் இக்கால்
மதர்த்த தமிழர் மதநூல் - பதிக்கவெனத்
தானாகத் தண்டித்தந் தான்முல்லை வாணன்தான்
ஏனோரைக் காணாத இன்று.

91. தமிழே உயிராகத் தாமுட லாக
இமிழும் கடல்சூழ் இகமேல் - தமிழர்
இருக்கின்றார் இன்றும் இதுமுல்லை வாணன்
தருக்கொன்றும் வாழ்வின் தகை.

92. காண்மணியும் பாடுங் கடிகாரம் வான்சுவரில்
நாண்மணியாய் ஆடி நளியிருளும் - கேண்மணியாய்
இன்னிசையின் முந்தி யெழுவிக்க ஈந்தான்தான்
முன்னியவா முல்லைவா ணன்.

## தமிழ் இலக்கிய வரலாறு

93. உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி
இலகும் நிலமெனும் இன்றமிழ் நாட்டில்
இராம நாத புரநற் கோட்டம்
திருப்பத் தூரெனத் திகழும் வட்டம்
இரண சிங்க புரஞ்சேர் பெருமகன்
இராம பெரிவெள்ளைச் சாமியும் துணையாம்
கார்பணி கற்பின் கருப்பா யம்மையும்
பேர்பெறப் பெற்ற பெருந்தமிழ்க் குருசில்
சிங்கை வணிகச் செழுங்கலைச் சாலை
உரிமை யாளர் உயரிய முதல்வர்
கோபால கிருட்டிணர் குலமொழிக் குதவிய
அன்புறு வெண்பொன் ஐயா யிரத்தால்
ஆரியர் தாறுமாறுகள் நீக்கியும்
வையா புரியர் பொய்யுரை தவிர்த்தும்
மொழிநூல் மாணவன் முதுதேவ நேயன்
எழுதிய தமிழிலக் கியவர லாறு
நேச மணிபதிப் பகவெளி யீடா
ஆசிரி யன்மகன் மணிமன்ற வாணன்
காட்டுப் பாடி விரிவின் மேற்பால்
தன்முழு வுரிமைத் தென்குமரி அச்சகம்
பெயர்பெற அச்சிட் டனனே
மயர்வறத் தமிழின் மாண்பு விளங்கவே.

## பாவாணர் நூல்வெளியீட்டுக்குழு – செங்காட்டுப்பட்டி

94. செட்டிகுளத் திற்குளித்த செந்தமிழ்த்தாய் செங்காட்டுப்
பட்டியில் வந்து பருகப்பால் - அட்டியது
போல்வதே மீண்டும் பொலிந்தெழுந்த பாவாணர்
நூல்வெளி யீட்டுக் குழு.

95. பாங்கா யமர்தலைமைப் பச்சைமுத்து நாகமுத்து
ஓங்கும் இராமுபுல வேணுகோபால் - தாங்கும்

பொதுமது செல்வராசன் போற்றும்பா வாணர்
புதுமுது நூல்வெளியீட் டார்.

96. செங்காட்டுப் பட்டிச் செழுமுத் தமிழ்க்கழகன்
தென்காட்டுஞ் செந்தமிழ்ச் செல்வராசன் - நன்கீட்டி
நாலா யிரம்வெண்பொன் நற்றமிழ்த் தாய்க்களித்தான்
நூலாய் வெளிவரல் நோக்கு.

97. முந்தியே ஆரியத்தால் மொய்ம்பழிந்த செந்தமிழ்
பிந்திய இந்தியால் பேருமற - நைந்தழியும்
எல்லைவரு முன்னே இடுக்கண் களைந்தமகன்
செல்வராசன் என்றுயர்த்திச் செப்பு.

98. ஆங்கிலத்தோ டாசிரியம் ஆன்ற கலையிளைஞன்
ஓங்குமுளச் செல்வராசன் ஒண்டமிழைத் - தாங்கினான்
தந்நலமே கொண்ட தனித்தமிழ்ப்பே ராசிரியர்
வின்னமுறத் தம்மையும்தாம் விற்று.

99. கோடிக் கணக்கிற் குவித்துந் தமிழ்பேணாப்
பேடிக் கயவர் பெயர்கருக்க - நாடித்
துளிகூடு வெள்ளம்போல் தொக்கதுசெங் கையில்
கிளியீடு வாய்த்த கிழி.

100. இரப்ப திகழா தினிய தமிழ்த் தாயைப்
புரக்கவெழுந் தான்செல்வ ராசன் - புரக்கும்
தமிழும் எவற்கும் தனித்தமுறை யன்றித்
தமிழர் அனைவருக்கும் தாய்.

101. குன்றக் குடியடிகள் குன்றா அருட்கையால்
ஒன்றிக் கொடுத்தகிழி ஓங்கியதே - அன்று
தருமிக்குத் தந்தது தாராத் தமிழின்
பெருமை வரலாறு பெற்று.

102. பல்லா யிரம்வேலிப் பண்ணைப் பெருமடங்கள்
எல்லாம் இருள எழுந்தமதி - நல்லொளிபோன்ம்
கூர்த்தவரு ளாலெனக்குக் குன்றக் குடியடிகள்
போர்த்திய பொற்கரைவெண் பட்டு.

103. தீவம் பலசென்று தேடிய பஃறாரம்
நாவாய் ஒருதுறையில் நல்கியதே - மேவர்

உறையூர் பலதந்த ஒண்பொருள் எற்குத்
துறையூரில் தந்த தொடர்பு.

**பாவாணர் நூல்வெளியீட்டுக்குழு – செட்டிகுளம்**

104. மறைமலை மாணடிகள் மாசில் தமிழன்
நிறையொளித் தீவம் நிறுவும் - பொறையன்றோ
சேல்விழி போற்பிறழும் செட்டிகுளப் பாவாணர்
நூல்வெளி யீட்டுக் குழு.

105. செந்தமிழ் அன்னை செழியன் தமிழ்நாடும்
வெந்தழல் ஆரிய வெம்மையால் - வந்தே
குளிர்ச்சிபெறத் தோழியொடு கூடி மகிழ்ந்து
குளிப்பது செட்டி குளம்.

106. ஓவிய நல்லாடை ஒண்மானங் காத்தல்போல்
மேவிய செட்டிகுள மேற்பள்ளி - ஓவ
நறாஅவனும் நெய்வாசான் நாகமுத்தும் காத்தார்
குறாவுதமிழ் மானங் குறித்து.

**பாவாணர் மணிவிழாக்குழு – மதுரை**

107. கருமுத்து சுந்தரம் செட்டியார் கூடல்
திருவொத்த தந்தை திறத்தில் - மருவுற்றென்
மன்னும் மணிவிழாக்கோள் மன்னா யளித்தார்வெண்
பொன்னு மரையா யிரம்.

108. மாநிலக் கல்லூரி மன்னுந் தமிழ்த்தலைவர்
நாநலச் சுந்தரம் நற்கருணை - வானிரும்பொன்
வாணிகம னோகரனார் வாய்ந்துறுப்பாய் வந்தவிழா
ஏணுருபா ஏழா யிரம்.

109. அத்தொகையி லீரா யிரத்தைந்நூ றாங்கிலத்தில்
உற்ற உலகமுதற் செம்மொழிக் - கற்றதே
எச்சமிந் நூலிற் கிசைந்ததிந் நற்றொண்டை
மெச்சுந் தமிழுலகம் மேல்.

110. பண்டா ரகர்ப்பட்டப் பல்லோருட் சுந்தரமே
கண்டார் தமிழகக் கண்ணாகக் -கொண்ட

பிறவித் தமிழ்ப்பற்றாற் பேணினார் என்னை
யுறவிற் பிசிராந்தை யொத்து.

111. தன்கரும மென்றுபெருந் தாளாண்மை யோடுதமிழ்
அன்பரிட மெல்லாம் அலைந்தோடி - நன்பொருளை
ஈட்டினார் தம்மை இணைச்செயல ரென்றுசெயல்
காட்டினார் நங்கருணை காண்.

112. தொங்கல் விழுங்காற் றொகையெது வானாலும்
தன்கைப் பொருள்கொடுக்குந் தாராளச் - செங்கை
இரும்பு வணிகரென ஏந்துபொரு ளாளர்
விரும்பும் மனோகரனார் வீறு

113. பாவாணன் பேரிற் பணைத்த மணிவிழாப்பொன்
மூவோர் தொகுப்பு மொழியனைக்கும் - மேவினுமே
நாவார வாழ்த்தி நவையின் றவர்ப்புகழ்தல்
காவாவே னோர்க்குக் கடன்.

*- தமிழர்வ.5*

## திருக்குறள் மரபுரை

114. ஆரா யணியன்னத் தாளக ஆசிரி யன்முருகன்
நேரா யுரைவள் ளுவன்குற ளூற்றிட நீணிலத்தில்
சீரார் தமிழ்ப்புல வன்கந்த சாமியும் சேர்துணையால்
ஈரா யிரத்தின் மிகவெண்பொன் தான்தொகுத் தீந்தனனே.

115. தொடைகெழு பாபுனை காவிரி துள்ளுந் திருச்சிநகர்
இடையொரு சாலைகல் லூரிமெய் யன்பர் விடுத்தபண
விடைவழு வாது மதிதொறும் வந்து விழுக்குறள்தென்
நடைகொழு மிவ்வுரை யச்சீடு நன்றாய் நடந்ததுவே.

116. பத்திற் குறையா மதிபல் லகஞ்சென்றும் பாகமன்றி
மெத்தக் கவன்றும் முடியாவிம் மெய்ந்நூல் மரபுரைதான்
தித்தித் தொழுகிந் தியநாட்டு வைப்பகத் தின்கணக்கன்
முத்துக் கிருட்டிணன் இல்லம் புகுந்ததும் முற்றியதே.

117. பணத்திற்கு மூன்று படிவிற்ற காலை பரிந்துகம்பன்
உணத்தந்த வள்ளல் சடையன் உதவிய தோர்வியப்போ
கிணற்றிற்குட் கேணியும் ஊறாநாள் முத்துக் கிருட்டிணன்தான்
குணத்திற்கீ டின்றிக் கொடுத்தனன் யாவும் குறிப்பறவே

118. நாவிரும் பின்சுவை யோமண நல்லுணா நாளுமுண்ணத்
தேவனின் தேவ வெனவென்னைத் தீதற வைகுவித்தே
ஆவியன் முத்துக் கிருட்டிணன் என்னுரை அச்சகத்தை
மேவுவித் தேயதன் மெய்ப்புத் திருத்தினன் மேதகவே.

### மண்ணில்விண்

119. நெய்வேலி உ.த.க. நேயர் தமிழ்காக்கும்
மெய்வேலி யாகி மிளிர்ந்தனர்காண் - மொய்வேலின்
மண்ணில்விண் ணிற்கு மகிழ்ந்தளித்த வெண்பொற்கா
சென்ணின்முன் மூவா யிரம்.

### பு. மனோகரனார் கொடை

120. திருமணம் என்மகட்குத் தென்பாய் நிகழ
ஒருநூ றுரூபா வுகுத்த - பெருமான்
மனங்கவர்ந்தார் தண்டமிழ் மாண்புற வாழ்க
இனங்கவர்ந்து நீடி யினிது.

*- 24.4.65*

### தமிழ் வரலாறு அச்சீடு

121. சீராய்ப் பிழையின்றிச் செந்தமிழ்நூ லச்சிட்டு
நேராய்த் தருபவர் நீணிலத்தில் - ஆராய்ந்து
பாராய் பெருவழிப் பாரிப்போர் அச்சகத்தார்
நாரா யணன்செட்டி யார்.

122. எத்தனை மெய்ப்பேனும் இந்நூற் கிடரின்றி
உய்த்தவை தாமும் உடன்திருத்தி - அச்சும்
அகனமர்ந் திட்டார் அவருக்குக் கைம்மா
றெவன்புரி கிற்பார் எமர்.

*24.2.1967*

### இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் – அச்சீடு

123. ஒருமுறையே நான்திருத்தி யுய்த்தவஞ்சல் முன்னே
இருமுறையும் பின்னே இறுதி - ஒருமுறையும்

ஆராய்ந்து பார்த்ததை அச்சிட்ட செந்தமிழன்
நாரா யணன்செட்டி நம்பு.

*- 29.2.68*

### வண்ணனை மொழிநூலின்
### வழுவியல் – அச்சீடு

124. முன்னூல்போல் இந்நூலும் முத்தாம் எழுத்தடுக்கி
நன்னூலாய் அச்சிட்டு நல்கினன்காண் - இந்நாளும்
பேரான பாரி பெயர்தாங்கும் அச்சகத்தான்
நாரா யணன்செட்டி நன்கு.

*- 28.8.1968*

### நாராயணன் வாழி நன்கு

125. முப்பால் தமிழ்மரபு முன்னிய விவ்வுரையை
எப்போதும் போல இனிதாகத் - தப்பாமல்
அச்சிட்டுத் தந்தான் அழகிய பாரிப்பேர்
அச்சகத்தான் நாரா யணன்.

126. கார்வாழி ஏர்வாழி கன்னித் தமிழ்வாழி
சீரார்பல் செல்வர் சிறந்துதவப் - பார்நீடு
பேரோங்கப் பாரிப் பெயர்தாங்கும் அச்சகத்தான்
நாரா யணன்வாழி நன்கு.

*- 4.10.69*

### வடமொழி வரலாறு – அச்சீடு

127. தாய்மொழிப் பற்றினால் தானும் பிழைதிருத்தி
வாய்மொழிக் கேற்ப வடித்தெழுத்தும் தேமொழிப்பேர்
ஆரிய வாற்றையும் அச்சிட் டுதவினன்காண்
நாரா யணஞ்செட்டி நன்கு.

*- 6.12.67*

### அருணாசலர்க்கு – மெய்ப்பு நன்றி

128. அல்லும் பகலும் அருணா சலமென்னும்
நல்லிறையன் மெய்ப்பு நவைநீங்க - ஒல்லும்

வகையால் திருத்திய வாறன்றோ இந்நூல்
தகையால் விளங்குந் தகை.

*- க. சுறவம், 1997 (தி.பி.)*

**மெய்ப்புப் பார்த்த மேலோன்**

129. தாமரைச் செல்வன் தமிழ்நூல் உலகெங்கும்
காமரு கட்டடங் கண்குளிரப் - போமுறை
யச்சிட்ட சுப்பையா யாய்ந்தேயிம் மெய்ந்நூற்கும்
மெச்சுற்றுப் பார்த்தனன் மெய்ப்பு.

130. இவ்வுரை யச்சீட் டிறுதி தனிநின்று
செவ்வகை பார்த்த செயல்நோக்கின் - எவ்வண்
சுழன்றுந் தமிழுலகம் சுப்பையாப் பின்னாம்
உழந்தும் அவனே தலை.

*- திருக். மர. முக. 8*

# 5. ஐந்தகம்

**செந்தமிழ்ச் செல்வி ஐந்து**

131. பலதுறை யாய்வுச் செல்வம் பண்டிதர் புலமை நுட்பம்
மலர்தலை யுலகச் செய்தி மகிழ்நனின் நகைய ரங்கம்
புலவரின் வரலா றெல்லாம் போற்றிவைத் திருக்கும் பேழை
சிலநல பட்டி மன்றம் செந்தமிழ்ச் செல்வி அன்றோ!

132. பிறமொழி தமிழைத் தாக்கிப் பெருந்துயர் செய்ய நேரின்
அறநிலைப் போரைத் தூண்டி அணியிழை யாருஞ் சேர
மறமிகு முரச றைந்து மானநல் வாகை யின்பின்
செறலறு பாடாண் பாடும் செந்தமிழ்ச் செல்வி அன்றோ.

133. மொழியின முன்னோ ரெல்லாம் முற்றவும் மறந்து வேற்று
மொழியொலித் தம்பேர் சொல்வார் முதற்றமிழ் வழியா ரெல்லாம்
விழியுறச் சென்று சேண்பல் விரிகடல் நாடும் தீவும்
செழியதாய் நாட்டோ டார்க்கும் செந்தமிழ்ச் செல்வி அன்றோ.

134. கறுவுகொள் மனத்தார் கூடிக் காணுமா நாட்டில் நூற்றிற்
கறுபதின் மேலும் பல்வே றயன்மொழிச் சொல்லே கொண்டும்

உறுதமிழ் ஆர்வந் தம்மில் ஊற்றெடுத் தோடு மென்னும்
செறுவரைச் சுட்டிக் காட்டுஞ் செந்தமிழ்ச் செல்வி யன்றோ.

135. பேணிய குலமு மன்றும் பெரும்பகை மொழியு நன்மை
காணுதல் குறிக்கோ ளாகக் கழிபல ஆண்டு நீண்ட
மாணுறுங் கொள்கை யில்லா மாதிகை பலவு மாயச்
சேணுறுங் காலும் நீடும் செந்தமிழ்ச் செல்வி அன்றோ!

**திருக்குறள் ஐந்து**

136. எம்மதநூ லென்றே எவரும் வினவினுடன்
எம்மதநூ லென்றே எவருந்தான் - செம்மனமாய்ச்
சொல்லும் படியமைந்த சொற்பொருட் சீர்நிரம்ப
ஒல்லுங் குறளென் றுரை.

137. தொல்காப் பியம்போலத் தொன்மொழியாம் செந்தமிழின்
ஒல்காப் பெருமை உலகிற்குச் - சொல்வதற்கே
உள்ள இலக்கியத்துள் ஓங்கும் ஒருதலையாம்
வள்ளுவர் நூலென்ப வாய்த்து.

138. முன்னோர் பொருளும் மொழியும் முழுமணிசேர்
பொன்னேபோற் போற்றுகெனப் பொற்குறளை - அந்நாள்
இளங்கோ வடிகளுடன் எல்லாருங் கொண்டார்
வளம்பெற நீடுவா ழி.

139. நடுநிலை யில்லாத நால்வே றொறுப்பு
வடுமிகக் கூறும் வடநூற் - கெடுதிகண்டு
வள்ளுவன் நன்கு வகுத்த நடுவறத்தைக்
கொள்ளுக எங்கும் குறித்து.

140. இம்மையுள் இன்பமும் இல்லறத்தால் வீடுறவும்
செம்மையால் எப்பாற்கும் செப்பிய - அம்மைதான்
தேவன் தமிழத் திருவள் ளுவன்குறளே
மேவ நிலமிசையே மிக்கு.

*-திருவள்ளுவர் திருநாள் விழா மலர், பக். 53.*

# 6. பதிகம்

## பொதுமறைப் பதிகம்

141. உலக முழுமைக்கும் ஒத்த மறைநூல்
இலகுந் திருக்குறள் என்பர் - விலகிச்
சிறுதெய்வ வேதம் சிவணும் எனும்சொல்
அறிவுடையார் கொள்ளார் அறி.

142. மூவா யிரமொழியுள் மூலமுதல் முத்தமிழே
மூவா மொழியதனுள் முப்பாலே - தாவா
அறம்பொரு ளின்பம்வீ டாகுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பும் தெளிவு.

143. ஊரும் பிறப்பும் உறுதொழிலும் உற்றோரும்
பேருந் தெரியாப் பெரும்புலவன் - தேரின்
உலகப் பொதுவன் ஒருவள் ளுவனாம்
கலகப் பிணக்கிற் கடந்து

144. ஒழுக்கம் உயர்குலம்; ஒன்றே பிறப்பாம்;
இழுக்கம் இழிகுல மாகும் - இழுக்கின்
நிலத்தேவ னுந்தன் நிலைகெடு மென்ற
புலத்தோன் திருவள் ளுவன்.

145. பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயப்பி னெனமொழிந்து - மெய்ம்முரணிற்
பொய்யையும் மெய்யாப் புனைந்த பெருமகன்நூல்
பொய்யா மொழியென்று போற்று.

146. இல்லறத் தாலும் இறையடி சேருண்மை
நல்லறத் தால்முன் நவின்றதிரு - வள்ளுவநூல்
ஆரியனே வீட்டிற் கமைந்தா னெனும்புரட்டை
வாரிய சூறா வளி.

147. எல்லாரும் எக்காலும் எந்நிலத்தும் செந்நிலையில்
நல்லாராய் வாழ்ந்து நலநுகரச் - சொல்லாய்ந்து
வள்ளுவ னன்றி வகுக்க நடுநிலையன்
புள்ளவன் யாரே யுரை.

148. தொட்டனைத் தூறும் துரவுபோல் முப்பாலும்
கற்றனைத் தூறும் கலையறிவுக் - கொட்டாரம்
நூற்றுக் கணக்கில் நுவலுரை கண்டாலும்
ஈற்றைக் கணித்தார் இலர்.

149. ஆரிய நஞ்சிற் கருமருந்தாய் வந்தகுறள்
சீரிய மாமலைக்குச் செல்லாது -யாரகத்தும்
அல்லும்பகலும் அமர்ந்துதவும் மூலிகையாம்
ஒல்லும் இருமைநல் வாழ்வு.

150. ஆரியன் தேவென் றறிவிழந்து மூவேந்தும்
பூரிய தாழ்விற் பொருந்தியகால் - சீரிய
தெய்வப் புலவன் திருவள் ளுவன்தந்தான்
உய்வைத் தமிழர்க் குவந்து.

*- கழக ஆட்சியர் வ.சு. பவளவிழா மலர் : 27.*

**பெரியார் தன்மான இயக்கம்**

151. தமிழன் விடுதலைத் தலைவர் மூவருள்
அமரும் ஈகையர் அறநூல் வள்ளுவர்
தமியின் மொழியினர் தவநன் மறைமலை
இமிழ்தன் மானியர் இராம சாமியார்.

152. அரிய செயல்களை ஆற்று வார்தமைப்
பெரியார் எனச்சொலும் பிறங்கு திருக்குறள்
உரியர் இப்பெயர்க் கொருவர் நேரிலே
இரியீ ரோடையர் இராம சாமியார்.

153. இல்லத் திருந்துநல் லின்ப வாழ்வுறும்
செல்வச் சிறப்பினிற் சிறிதும் வேட்டிலர்
வல்லைத் தமக்கென வாழ்வு நீக்கினார்
ஒல்லும் வகையெலாம் உழைக்க இனவர்க்கே.

154. மல்லைப் பதவிகொள் மாட்சி யிருப்பினும்
அல்லிற் பகலினில் அடுத்த வழியெலாம்
கல்லிற் சாணியிற் கடுத்த வசவுறுஞ்
சொல்லிற் படும்பொறைச் சூர வாழ்க்கையர்.

155. மலையெ னும்மறை மலையென் அடிகளும்
தலையென் சோமசுந் தரபா ரதியும்பின்
தொலையும் இந்தியைத் தொடர்ந்தெ திர்க்கினும்
நிலைசி றந்ததி ராம சாமியால்.

156. குடிசெய் வார்க்கிலை கூறும் பருவமே
மடிசெய் தேயவர் மானங் கொளக்கெடும்
இடிசெய் உடம்புபல் இடும்பைக் கலமெனத்
துடிசெய் தேயவர் தொண்டு பூண்டுளார்.

157. தான மிட்டதன் தலைவன் நிலைகெட
ஈனச் சூத்திரன் என்னுந் தீயனை
வானங் காட்டென வணங்குந் தமிழன்தன்
மானங் கெட்டுவாழ் வழமை கடிந்துளார்.

158. படிமை மேல்மிகு பாலை யூற்றலும்
குடுமி மலையெரி கோநெய் கொட்டலும்
கடவுள் தேரினைக் கடத்த லும்முனோர்
கொடமை மடம்பகுத் தறிவில் கோளென்றார்.

159. கட்டுக் கதைகளைக் கடவுள் தொன்மத்தைப்
பிட்டுப் பிட்டவை பிதற்றல் புரட்டலை
வெட்ட வெளிச்சமாய் விளக்கி னார்முனம்
பட்டப் படிப்பெல்லாம் பயனில் குப்பையே.

160. அடருந் தமிழரோ டணையுந் திரவிடர்
மடமை தவிர்ந்துதன் மான வாழ்வுற
இடர்கொள் ஆர்வலர் இராம சாமியார்
கடவுள் இலையெனக் கழறும் எல்லையே.

*-த.இ.வ 257*

**சீரிய கொள்கைச் சிதம்பரப் பதிகம்**

161. நாட்டுப்பற் றால்முன்னே நாய்படாப் பாடுபட்ட
ஒட்டப் பிடார ஒளிர்மறவன் - மாட்டன்று
நன்றிபா ராட்டாத நாடொரு நூற்றாண்டு
சென்றபின் செய்யும் சிறப்பு.

162. ஆலைத் தொழிலாளர் ஆற்றும் பணிக்கேற்ற
கூலித் திறம்பெறுங் கொள்கையின் - மேலும்
அடிமைத் தனமில்லா ஆட்சிதன் மானக்
குடிமை சிதம்பரத்தின் கோள்.

163. ஆங்கிலர்நா வாய்க்குழும்பின் ஆவுருபா ஓரிலக்கம்
வாங்க மறுத்து வருந்தொல்லை - ஓங்கினுமே
கொள்கை விடாது குடிமாண் சிதம்பரம்தன்
உள்கை சிறந்தான் உயர்ந்து.

164. தனக்குச் சமமாகத் தன்மனைவி வாழ்ந்து
மனக்கினிய மந்திரியாய் மாணுங் - கணக்காக
இல்லறம் ஆற்றினான் ஈகைச் சிதம்பரம்தான்
வள்ளுவன் கண்ட வகை.

165. பிறப்பால் சிறப்பில்லை என்னும் பெருநூல்
அறப்பால் மனையோ டணைந்து - பிறப்பிழிந்தான்
என்னும் ஒருவனை இல்லம்வைத் துண்பித்தான்
மன்னும் சிதம்பரத்தின் மாண்பு.

166. தாய்நாடே போற்றியெனுந் தக்கவங் கத்தொடரை
வாய்மொழியாற் கண்டித்த வன்தண்டல் - நாயகற்கே
வாயுள்ள நாளும் வலித்துரைப்பே னென்றுரைத்தான்
பாயும் சிதம்பரவேங் கை.

167. மாடுபோற் செக்கிழுத்து மட்டிபோற் கல்லுடைத்து
வேடுபோற் கேடாய் உடையுடுத்துப் - பாடுபட்டான்
கேழ்வரகுக் கூழுண்டு கீழ்விலங்கிற் கீழ்விலங்கின்
தாழ்வுறுதற் கோசிதம்ப ரம்

168. கொலையுங் கடுஞ்செயலும் கூடாது வேற்றார்
குலையும் வகையெதிர்க்கும் கொள்கை - தலையாகக்
கொண்டான் சிதம்பரம் கூற்றாலும் ஆசுகொலை
கண்டோம் அவன்கண்ட னம்.

169. ஆற்றும் பணிமீட்டான் ஆங்கில னேனுமவன்
வேற்று மொழிப்பெயரை வேட்புடன்தன் - பேற்றுமகன்
பேராக இட்ட பெருந்தன்மை பாராட்டும்
சீராம் சிதம்பரம் செப்பு.

170. தொல்காப் பியப்பகுதித் தொல்லுரையும் ஒண்குறளின்
மல்கா வுரையொன்றும் மாண்டமிழ்க்கே - அல்காத்த
இன்னிலைப் புத்துரையும் ஏனைப் பதிப்புகளும்
துன்னிய வ.உ.சி. தொண்டு.

*- வ.உ. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர்*
*-செ.செ. 47: 40*

## மறைமலையடிகள்
## பல்துறை யாற்றற் பதிகம்

### 1. பேராசிரியர்

171. நூலும் நுவல்வும் நுணங்குரையும் நன்பதிப்பும்
சாலும் இதழும் சமமாக - மேலுயர்வுப்
பேரா சிரியர் பெரும்பேர் மறைமலையார்
நேரா ருளரிந் நிலத்து.

### 2. பெரும்புலவர்

172. தொல்காப் பியமுதலாந் தொன்னூலும் பின்னூலும்
பல்காற் றனிப்பாடல் பட்டயமும் - ஒல்காப்
பெரும்புலவ ருக்கும் பெரியார் தனியே
அரும்பொன் மறைமலை யார்.

### 3. பாவலர்

173. உரைநடையும் பாவும் ஒருங்கே சிறந்த
விரைவுடையார் சில்லோர் வியன்பார் - மறைமலையார்
செம்மைப் பொருளணிசேர் செய்யுள் திருவொற்றி
மும்மணிக் கோவை முறை.

### 4. ஆராய்ச்சியாளர்

174. நுண்மதி கல்வி நுடங்காத் தறுகண்மை
நண்ணிலை மன்னலம் நல்வாய்மை - திண்முயற்சி
சாலுமா ராய்ச்சிச் சதுரர் மறைமலையார்
பாலையும் முல்லையும் பார்.

### 5. மும்மொழிப்புலவர்

175. மொழியும் இலக்கியமும் முத்தமி ழும்பேச்
சழியும் வடமாங் கிலமும் - கழிபுலமை
கொண்ட மறைமலையார் கோன்மை தமிழ்நிலமுன்
கண்டதும் கேட்டதும் இல்.

### 6. மொழிபெயர்ப்பாளர்

176. வேற்று மொழியின் விரகன் விழுப்பனுவல்
ஆற்று மரபும் அரும்பொருளும் - தேற்றி
அடிகள் மொழிபெயர்க்கும் ஆற்றற்குச் சான்று
முடிகொள்ளுஞ் சாகுந் தலம்.

### 7. சொற்பொழிவாளர்

177. இன்குரலும் இன்சொல்லும் இன்னிசையும் இன்கதையும்
நன்பொருளும் ஏதுவுடன் நற்காட்டும் - தென்பாய்ப்
பகைவரு முண்ணாளும் பன்னாளும் வேட்கும்
வகையடிகள் சொற்பொழிவு வாய்ப்பு

### 8. எழுத்தாளர்

178. கடிதமும் கட்டுரையும் கண்டனமும் கற்கும்
படியெழுதும் பாடமும் பன்னூல் - நடிகதையும்
மற்றோ ருரைமறுப்பும் மன்னும் புதினவரை
வுற்றார் மறைமலை யார்.

### 9. பல்கலைச் செல்வர்

179. தோற்றுந் தொலையுணர்வு தூய மனவசியம்
ஆற்றும் அறிதுயில் ஆர்வாழ்வு - மாற்றும்
மறுமை மறைமலையார் மாணுங் கலைகள்
பொறுமை யுடன்கற்ற போக்கு.

### 10. தனித்தமிழ்த் தந்தையார்

180. மூவா யிரமாண்டு மோதும் வடமொழியாற்
சாவாந் தகைநின்ற தண்டமிழை - மேவாக்

குமரித் தனிநிலைக்குக் கோண்டுவந்த அப்பர்
அமரர் மறைமலை யார்.

*மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர்.*

**பாரதிதாசன் பண்பாட்டுப் பதிகம்**

181. நாட்டு விடுதலைக்கு நன்றாகப் பாடுவான்
ஈட்டு தமிழர்க்குள் இல்லெனலை - வீட்டக்
கனகசுப்ப ரத்தினப்போர்க் கார்முகில் தோன்றி
மினுமினுத்துப் பெய்ததுபா மேல்.

182. பாரதிமேற் பற்றினாற் பாரதி தாசனென்று
பேர்தனக் கிட்டாலும் பேணாமல் - ஆரியத்தைச்
சாடினான் வல்லாங்கு சாராரும் பாராட்டச்
சூடினான் வாகையென்று சொல்.

183. ஆனை நடையும் அரிமாப் பெருமிதமும்
கோனையும் சாடிக் குமுறுரையும் - தானையே
தாக்கினும் அஞ்சாத் தறுகண்ணும் மேலாடைச்
சேக்கையும் பாரதிதா சன்.

184. ஆரிய ராட்சியிலும் அன்னார்க் கடிமையராம்
பூரிய ராட்சியிலும் புல்லாது - சீரிய
செந்தமிழைப் போற்றிச் செழும்பல் பனுவல்களைத்
தந்தனன் பாரதிதா சன்.

185. தெளிதேனில் தீன்கலந்த தெண்ணீர்ப் பதம்போல்
எளிதாம் இனிய எழில்கொள் - களிநடையிற்
செம்பொற் கருத்துக்கள் சேர வழங்கினான்
இம்பர்க்குப் பாரதிதா சன்.

186. இருபதாம் நூற்றாண்டிடை யிணையே யில்லாப்
பெருமைசேர் பாரதி தாசன் - ஒருமையுடன்
வாழ்நாள் முழுதும் வளரடக்கங் கொண்டுற்றான்
வீழ்நாள் விண்ணவனாம் வீறு.

187. தன்னலமும் தன்குடும்பத் தின்னலமும் பேணாது
மன்னலமே என்றும் மதித்தொழுகித் - தன்னினமாம்
செந்தமிழ் மக்கள் சிறந்தோங்கி வாழ்வதற்கே
வந்தனன் பாரதிதா சன்.

188. இம்மியே கூடிடினும் இன்றமிழை விற்றுவிடும்
தெம்மானப் போலித் திரிதமிழர் - கும்மிடையே
பாலை நிலத்திற் பழம்படு பன்மரப்பைஞ்
சோலையே பாரதிதா சன்.

189. நண்பன் புறத்திருக்க நல்வான் அமுதெனினும்
உண்ப திலையென் றுயர்தமிழப் - பண்பதனைத்
தன்னகத்தும் வேற்றகத்துந் தப்பாது கைக்கொண்ட
தென்னகத்தான் பாரதிதா சன்.

190. புரட்சிப்பா வேந்தனென்று போற்றும் புகழில்
முரட்சிக் கிடமின்றி முற்றி - வறட்சியால்
வாடி வருந்தினும் வண்டமிழைக் கைவிடான்
வீடினான் பாரதிதா சன்.

191. ஆண்டாண்டு தோறும் அவனை நினைவுகூர்ந்
தாண்டாண்டு கொண்டாடும் ஆர்வவிழா - வேண்டா
அவனுரையைக் கையாண் டடிமைத் தனத்தின்
இவண்விலகக் கண்ணா விடத்து.

*சேக்கை - சிவப்பு. தெவ்+மானம் - தெம்மானம்*

*தெவ் - பகை. கும் - கூட்டம். கும்முதல் - கூடுதல்.*

*ஆண்டாண்டு - ஆங்காங்கு. கண்ணா - கருதா.*

*சுப்பு - அரத்தினம் - சுப்புரத்தினம் . பதிகம் பதினொரு*

*பாட்டுங்கொள்ளலாம்.*

## சேலம் நகராண்மைக்
## கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர்

192. எத்தனைய ரோதமிழர் இந்நாட்டிற் கல்லூரி
ஒத்த முதல்வராய் உற்றிருந்தும் - முத்தமிழ்ப்
பற்றால் எனையமர்த்தப் பண்பா டிராமசாமி
கற்றான் ஒருவனே காண்.

193. உயர்நிலைப் பள்ளிகளில் ஓவா துழந்தே
அயர்நிலை என்னை அழைத்தன் - றுயர்வளித்தான்
சேலங்கல் லூரிச் சிறந்த தமிழ்த்தலைமை
மேலான் இராமசாமி.

194. தொல்காப் பியமும் துணையாம் திருக்குறளும்
பல்காற் பயின்று பயன்கண்ட - ஒல்காப்
பெருந்தமிழ வாழ்வு பெயர்பெற வாழ்ந்தான்
விருந்திராம சாமி விழைந்து.

195. வீட்டிற்கும் தான்பிறந்த வெள்ளாண் குடியினுக்கும்
நாட்டிற்கும் செந்தமிழ் நல்லறிஞர் - கூட்டிற்கும்
சேலங்கல் லூரிக்கும் சீரார் இராமசாமி
சாலுங் கவுண்டனெனச் சாற்று.

196. மூவுலகும் ஆளும் முதல்வனே வந்திடினும்
பாவுலவும் பைந்தமிழ்ப் பண்டிதன் - மேவுவதை
இம்மியதும் தள்ளா இராமசா மிக்கவுண்டன்
செம்மனிகர் வேறியார் செப்பு.

197. இந்நூலும் ஏனை எழில்மொழி யாராய்ச்சி
நன்னூலும் நன்கிருந்து நான்செய்தேன் - எந்நாளும்
ஏராள ஓய்வும் இணங்கும் இராமசாமி
தாராளம் தந்ததனால் தான்.

198. சேலங்கல் லூரி சிறந்திராம சாமியின்றேல்
ஞாலம் பரவுதமிழ் ஆராய்ச்சி - நூலியற்றும்
தேவநே யன்எங்கே தென்மொழித் தொண்டெங்கே
பாவுதமிழ் மீட்பெங்கே பார்.

199. வள்ளுவர் மன்றமென்று வைத்தும் உரைநடைநூல்
தெள்ளு தமிழ் வரைந்தும் சொற்பொழிந்தும் - ஒள்ளிய
ஆங்கிலச் சொற்பெயர்த்தும் ஆராய்ந் திராமசாமி
தாங்கினன் செந்தமிழைத் தான்.

200. வேலை யினிதியல வேண்டும் உதவிசெய்து
மாலையுங் கூடிமகிழ்ந்துலவி - மேலுந்தான்
இன்னுரை யாடியெனக் கின்ப வுணவளித்தான்
மன்னே இராமசா மி.

201. இராமசா மிக்கவுண்டன் இன்புகழ் வாழி
பராவு கனகம்மை வாழி - விராவி
அவர்நன்னான் மக்களும் வாழி வழியும்
இவரின்னார் என்ன இனிது. -த.வ. 297.298.

சிங்கபுரி வணிகக் கல்விச்சாலை
உரிமை முதல்வர்
உயர்திரு கோபால கிருட்டிணனார் மீது
நூலாசிரியன் ஞா. தேவநேயன் பாடிய பாடாண் பதிகம்.

202. அறிவொழுகு கண்ணும் அமர்தமிழின் நோக்கும்
செறிவுடைய நாவும் செழிம்பும்- பொறிநிலவும்
கோவீறு நெஞ்சுபொற் கோல வளர்வுடம்பும்
கோபால கி(ரு)ட்டிணர் கூறு.

203. வடமொழியை வாழ்த்தி வழங்குதமிழ் தாழ்த்தும்
திடமுடையர் தென்னாட்டுச் செல்வர் - கடல்கடந்து
சிங்க புரித்தீவிற் சேர்ந்த கிருட்டிணனார்.
தங்கு தமிழ்ப்பணி செய் தார்.

204. கடையெழு வள்ளலர்பின் கானக் குமணன்
நடையுயர் நல்லியக் கோடன் - கொடைமிகு
சீதக்கா திக்குப்பின் சேது ரகுநாதன்
ஈதற்கின் றோகிருட்டினர்.

205. கால்கடுத்துக் கொப்புளிக்கக் காதம் பலநடந்து
நூல்வடித்துச் சொல்லினும் நொய்தரார் - பாலெடுத்து
வேறொருவர் கூறினாலும் வெண்படத்தும் கண்டிரார்க்கு
மாறிலாதீந் தார்கிருட்டிணர்.

206. முன்னாட் கொடையாளர் முந்திப் புகழ்பெற்றார்
செந்நாப் புலவர் செயற்பாவால் - இந்நாளில்
முந்திப் பொருளளித்த முன்பிற் கிருட்டிணர்க்குப்
பிந்திப் புகழ்ந்துரைத்தேன் போர்ந்து

207. கோடிக் கணக்கிற் குவித்திருந்தும் செந்தமிழை
நாடித் தனியிதழ்க்கும் நல்காதார் - நாடிதிலே
செந்தமிழ்ச் செல்விக்கும் தென்மொழிக்கும் வாழ்நாட்குத்
தந்தவர் கிருட்டிணனார் தான்.

208. அன்னை யெனவே அறிவுடம்பை முன்வளர்த்துப்
பின்னும் பலவாய்ப் பெரிதுதவும் -முன்னை
முகனை மொழித்தாயின் முட்டறுத்த செல்வ
மகனார் கிருட்டிணரே மற்று

209. குப்பை யுயர்ந்தது கோபுரம் தாழ்ந்ததெனச்
செப்பா வடமொழி சீர்த்ததெனும் - தப்பறவே
இன்னே எழுந்தார் இணையில் கிருட்டிணனார்
முன்னோர் மறமானம் மூண்டு

210. நாடுங் குலவினமும் நம்பும் மதவகைகோட்
பாடுந் தொழிற்றுறையும் பாராது - நீடும்
தமிழே கருதித் தகுந்தாரைத் தள்ளா
நமரே கிருட்டிணனார்.

211. கோளாண்மை மிக்குக் குறித்த கலைதேர்ந்து
தாளாண்மை யாற்சொம் தகவீட்டி - வேளாண்மை
செய்யும் நிறைதமிழர் சிங்க புரிவாழும்
செய்ய கிருட்டிணரே சீர்த்து

**வெள்ளச்சேத விளரிப் பதிகம்**

212. எத்தனை வெள்ள மோநாம் இதுவரை கதையிற்கேட்டோம்
இத்தனை கொடுமையாக எவருமே கண்டதில்லை
அத்தனார் கோயிலுள்ளும் அனைவரும் நசுங்கிச் சாகப்
பித்தமா வெறியின் வேகம் பிடித்தது காற்றுப் பூதம்

213. வெள்ளமென் றறிவிப் பின்றி வீட்டினுள் உறங்கும் வேளை
கொள்ளையர் வருதல் போலக் கூடிய இரண்டு பூதம்
பொள்ளெனக் கேடு செய்யப் பொடித்தன பணிச்சா லைகள்
நள்ளிர வன்றே நாகை நத்தப்பா ழாயிற் றந்தோ

214. கண்ணினுக் கெட்டு மட்டும் கண்டது வெள்ளக் காடு
மண்ணியல் ஊர்தியொன்றும் மற்றவூர் சென்ற தில்லை
உண்ணவோர் உணவு மில்லை உரைக்கவோர் வழியும் இல்லை
விண்ணவர் உதவி போலூண் வீழ்ந்தது மூன்றாம் நாளே

215. தமிழ்நிலத் தலையாஞ் சென்னை தாவியே தெலுங்க நாட்டில்
இமிழ்கடல் எரியுந் தோன்ற எழுமலை யலைக ளாலே
அமிழ்கரை யூர்கள் மாய்ந்தார் ஆயிரம் பத்தோ டைந்தும்
குமிழ்நுரை வெள்ளம் வந்து குடிகொண்ட தூர்கள் எல்லாம்.

216. ஆருயிர் அனைய என்றன் அன்பனை இழந்தேன் என்பார்
கார்பணி கற்பின் செல்வக் கண்ணகி இழந்தேன் என்பார்

சீரிய அறிவு வாய்ந்த சேயரை இழந்தேன் என்பார்
ஊரினில் உள்ள எல்லா உறவையும் இழந்தேன் என்பார்

217. இரவிலே தந்தை தாயை இழந்தபிள் ளைகள் காலை
அருவிபோல் கண்ணீர் சிந்தி அம்மையப் பனையே கூவி
வெருவியே யழுது தேம்பி வெந்தழல் மெழுகுபோல
உருகியுள் வெந்த கோலம் உள்ளுவார் குலையும் வேகும்

218. அருந்தலாய் விற்ற காலை அரும்பெரும் பாடு பட்டு
வருந்தியே தேடிப் பெற்ற வளப்படு பொருளும் வீடும்
பருந்தடி குஞ்சு போலப் பசக்கென மறைந்து போக
இருந்துபின் அழுது நைந்தார் எத்தனைபேர்கள் அம்மா!

219. அரசனே கொடுமை செய்யின் ஆரிடம் சொல்வ தென்பார்
பரசுறு கடவுள் காப்பும் பறந்திடின் நாமென் செய்வாம்
துருசினில் மாயும் மக்கள் தொல்லைகள் தீரும் வண்ணம்
கரிசொடு செருக்கொழிந்து காவல்பூண் அமைச்சர் ஆள்க

220. நன்செயும் புன்செ யாகி நாற்புற வரம்ப ழிந்து
முன்செயல் யாவும் கெட்டு முதிர்ந்தநெற் பயிரு மற்று
வன்செயல் வெள்ளக் காலாய் வதிந்தது வடிந்த பின்னும்
என்செய வுணவிற் கென்றே இரங்கினர் உழவ ரெல்லாம்

221. சடசட வென்று கொட்டிச் சாடும்வன் புயலாற் செத்த
படபட வென்ற டித்துப் பண்ணை இற் கோழி யெல்லாம்
கடகட வென்று மாய்ந்த கால்நடை கணக்கி லாத
மடமட வென்று சாய்ந்த மரங்களே சாலை சோலை

222. நீர்மிகின் சிறையு மில்லை நீளியின் வலியு மில்லை
கார்மிகின் உறையு ளில்லை கனல்மிகின் அணைப்பு மில்லை
பார்மிகும் பரிசொன் றில்லை பரவெளி மனையெழுப்பிக்
கூர்மதிக் குடும்பத் திட்டங் கொண்டினி தொழுகு வோமே

*நீளி-காற்று செ.செ. 52:196:197 257;258*

### படைமறவாகை

223. என்ன இந்த நாட்டில் அமைதி இன்னும் நிலவ வில்லையே
பென்னம் பெரிய பிரித்தா னீயப் பேர ரசையும் வென்றனம்
பொன்ன கர்நல் வாழ்வு வந்து புகுந்த தென்றுமகிழ்ந்தனம்
பின்னர் நம்மிற் பிரிந்த சின்னப் பித்தர்க் கஞ்சிப் பணிவதோ

224. இந்தி யாவின் இரும ருங்கும் .இருபெ ரும்புண் போலவே
அந்த நாளில் வெறிம தத்தால் ஆன பாக்கித் தானையே
வந்து றாமல் தடுத்த லின்றி வாயி ழந்து விட்டனர்
இந்த நாளில் கையைக் கொல்ல எழுந்த தேமுள் பெருமரம்

225. பூனை போற்சி றுத்த நாட்டுப் பொறியி லாத மூடர்தாம்
யானை போற்பெ ருத்த இந்தி யாவை யேயெ திர்க்கின்றார்
தானை தாவு மக்கள் வலிமைத் தரத்தை எண்ணிப் பார்த்திலர்
போன மூன்று போரில் தோற்றுப் போன தும்ம றந்தனர்

226. அமெரிக் கர்நம் மவருக் குதவி யளித்த லின்றி மழுப்பினும்
அமெரிக் கையா யிராது பகைவர்க் கான வுதவி செய்கின்றார்
தமருக் குந்தாய் நாட்டிற் கும்வரிதராது பொருது விலகினர்
எமுனைக் குந்தொ டர்பி லாத ஈரினங்களை இணைக்கின்றார்

227. மறும னத்தில் இன்றி ஏழை மாந்தர்க் குற்ற துணைவராய்
உறும னத்த ராய்க்கி ளர்ந்தே உவமை இல்லான் துணைபெறின்
செறும னத்தார் படைதி ரண்டு சீறி வஞ்சினங் கூறினும்
அறுபு னத்திற் கதிர்கள் போல அறுத லைகள் ஆகுவர்

228. மானங்கெட்ட வாழ்வு யர்ந்த மக்கள் திணையில் இல்லையே
சீன ருக்குஞ் சோன கர்க்குஞ் சிறிதும் அச்சம் இன்றியே
ஊன ரத்தம் துளியு டம்பில் உள்ள வரையும் பொருமினே
வான வர்பூச் சிந்திவாழ்த்த வாகை சூடி யாடுவீர்

229 வலியப் போர்க்குச் செல்வ தில்லை வந்த போரை விடுவதோ
எலிகள் வெள்ள மேனும் நாகம் இரையின் மாய்ந்து சாய்ந்திடும்
மெலியர் என்று நம்மைப் பகைவர் மெத்த அவமதித்தனர்
புலிகள் போலப் பாய்ந்து பொருது புகழை உலகில் நாட்டுவீர்

230. கேட்டின் முன்னர்க் கூர்ந்த மதியும் கெட்டு மழுங்கிப் போகுமே
நீட்ட மாகப் பிரிந்த நாடு நீணி லத்திற் புதுமையே
ஓட்டெ டுத்த பின்னும் இட்ட ஊளை என்ன பொருளதோ
பூட்டோ திறப்ப தின்றி நாட்டைப் பூட்டி யெங்கும் போகுமோ

231. கோடிச் செல்வர் பணத்தை இன்று குன்று போற்கு வித்திடும்
கூடிப் பற்பல வெள்ளமாகக் குமரர் போரிற் குதித்திடும்
ஓடிச் செய்யும் ஆற்ற லில்லார் ஊன ரத்தம் உதவுவீர்
பேடிக் கியாசு டின்கி ளைஞர் பேரை வேர றுத்திடும்

232. எத்தனைநாள் இருப்பி னும்நாம் இறப்ப துண்மை திண்ணமே
நத்தம் போலக் கேடும் உண்டாம் நல்ல சாக்கா டும்இன்றே
முத்த மிழ்மு வேந்தர் முன்னம் முனைந்து நாவல் காத்தனர்
அத்த கப்போர் முரச றைந்தே யமர்வென் றடலை யாடுவோம்

*கியாசுடின் - Chiyazuddin

(1341 -4 மதுரையில் சுலுத்தானாக (Sultan) விருந்து மாபெரும் கொடுமைகள் செய்தவன்)

-போர் வெற்றி முரசு மலர் செ. செ. 46;270-271

# 7. வரலாறு

### சாமிநாதையர் தமிழ்த்தொண்டு

233. ஊட்டில் லாமல் உள்ளது நோவ
இறந்த குழவியை எண்ணி அழல்போல்
ஆடிப் பெருக்கில் அளவறுந் தமிழ்நூல்
ஓடிச் சென்றதை உணராத் தமிழர்
ஏரண முதலிய எண்ணறுங் கலைநூல்
வாரணங் கொண்டதை வழிவழி சொல்லிக்
கொன்னே புலம்புதல் என்னே மடமை?
கொலம்பசு முதலோர் கொடுங்கட லோடி
நிலம்பல கண்டில ராயினும் நீங்காப்
பின்னோர் அவற்றைப் பின்னே காண்பர்
மன்பே ராசான் தென்கலைச் செல்வன்
பண்டா ரகனாம் பைந்தமிழ்ப் பெரியோன்
சாமிநா தையன் சார்ந்தில னாயின்
இற்றைத் தொன்னூல் என்னா யிருக்குமோ?
தமிழ வணங்குத் தமிழ்ப்பெரும் பித்தால்.
விடுமுறை யெல்லாம் விடுமுறை யின்றி
ஊர்தொறும் மனைதொறும் ஓயா தேகித்
தானாய் வேண்டியும் தக்கார் துணையொடும்
பற்பல வகத்திற் பாழ்படக் கிடந்த
தொன்னூ லெல்லாம் பொன்போற் சேர்த்து

விறகுத் தலையன் முறையிற் சுமந்து
வீட்டை யடைந்ததும் ஏட்டைப் பிரித்துச்
சிதலரித் தனவும் சிதர்ந்து போனவும்
மங்கி யிருந்தவும் மாறிக் கிடந்தவும்

பூச்சி துளைத்தவும் புலனா காதவும்
பொறையும் பொறுமையும் புரிவிற் பொலியக்
கங்குல் பகலாய்க் கண்ணொளி மழுங்கப்
படித்துப் படிகள் எடுத்துத் திருத்தி
அருஞ்சொற் பொருளும் ஆராய்ச்சிக் குறிப்பும்
முதற்குறிப்பு ரையுடன் முறையாய் அச்சிட்
டுதவி யிலனேல் இதுகால் நாமும்
பத்துப் பாட்டைப் பார்த்த லொண்ணுமோ?
எட்டுத் தொகையும் எய்தல் இயலுமோ?
சிந்தா மணியொடு சிலம்பு மேகலை
சிந்தை யிலேனும் சேரல் ஆகுமோ?
பிறபல நூலும் பெறுதல் கூடுமோ
இத்தகை யோனை அத்தக நினைய
ஊர்தொறும் உடவள வொண்பொற் சிலையும்
உள்ளந் தோறும் உயிருடைச் சிலையும்
நிறுவி யவன்வழி நிற்றல்
தகுவதே யன்றோ தமிழகத் தோரே

*உ.க.இ. 2, பக். 244-5.*

## வழிமுறைப் பண்பு

234. செந்தமிழ் நாட்டுச் சிவகங் கைசேர்
மிதிலைப் பட்டி மேதக வாழ்ந்தே
அழகிய சிற்றம் பலக்கவி ராயன்
உறவினர் மணத்திற் கோரூர் சென்று
மீண்ட காலை மூன்றுரு பாவும்
பழையதுந் தரவே பாங்கா யிசைந்து
வண்டி யொன்றை வாடகை பேசி
இரவில் ஏறி விரைவில் வருகையில்
வண்டிக் காரன் வாயிசை கேட்டு

நன்றெனப் புகழ வண்டிக் காரனும்
உன்றன் குடும்ப வரலாறியாதென
என்றன் முன்னோர் எல்லாரும் புலவர்
அவருள் என்பே ருடையார்க்கேயெம்
மிதிலைப் பட்டியை மானிப மாக
வெங்க ளப்ப நாயக்கன் விட்டனன்
அவனுண வேயின் றார அருந்துவம்
பிரிவினை யாலவன் பின்னோர் தாழ்ந்தனர்
அவன்வழி யினர் இன் றாருளர் கொல்லோ
எங்கண் உளரோ? எந்நிலை யினரோ?
என்றே இரங்கி இருந்துயில் மூழ்கினன்
விடிந்ததும் வண்டி மிதிலை சேர்ந்தது
கவிரா யன்தன் களிமனை புகுந்ததும்

பழஞ்சோ றுண்ணப் பகர்ந்தனன் ஆயினும்
வண்டிக் காரன் உண்டி மறுத்தனன்
வாடகை யும்பின் வாங்க மறுத்தனன்
விடையே வேண்டினன் காரணம் வினவ
வெங்க ளப்ப நாயக்கன் வழியேன்
ஊழ்வினை யாலித் தாழ்நிலை யடையினும்
கொடுத்ததை வாங்கும் குணமெமக் கில்லை
இன்றுனக் குதவிய தென்பெரும் பேறே
என்றனன் வண்டி இயக்கினன் சென்றான்
கண்துளி கொளக் கவி ராயன்
பண்புறு வழிமுறைப் பாங்கை நினைந்தே

-உ.க.இ.2.249 - 50

# 8.கதை

### பள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாது

235. இலக்கணம் தருக்கம் நல்ல இசையொடு கணியம் நோய்கள்
விலக்கிடு மருந்திவ் வைந்து வித்தையொன் றொன்றே கற்றுத்
துலக்குறும் உலகப் போங்கு துளியதும் அறியா ஐவர்
புலக்கலை காணத் தக்க புரவலர் பரிசை நாடி

236. வடபுலம் நீங்கித் தெற்கில் வளமுறு வேலூர் ஆங்கண்
திடமிக அரையன் முன்னே திறமைகள் எல்லாம் காட்ட
விடலரு விருப்பின் மன்னன் வியந்துபா ராட்டும்போது
மடவரிவ் வுலக வாழ்வில் மன்றவென் றமைச்சன் சொன்னான்

237. எத்திறம் அறிதி என்றே இறைமகன் வினவ இன்னே
அத்தனை பேரும் சென்றூண் அருந்தியே மீளச் சொன்னால்
மெய்த்திறங் காண்பாய் என்று மேதகை யமைச்சன் கூற
உத்தர வாகி யன்றே உண்ணுதற் கவருஞ் சென்றார்

238. தங்கிய மனைக்குச் சென்று தம்முணாச் சமைத்தற் கென்றே
அங்கவர் ஒவ்வோர் வேலை ஆற்றிட இசையில் வல்லோன்
வெங்கழி நெருப்பை மூட்டி வேவுறும் உலையும் ஏற்றிப்
பொங்கியே கொதித்தல் கண்டு பொருந்திடத் தாளம் போட்டு

239. இன்னிசை பாடிக் கொண்டே இன்பமுற் றிருந்தகாலை
முன்னுற இசைந்து பின்னர் முடுகியே உலையுஞ் செல்லத்
தன்னையும் அவமதித்துத் தாளமும் தப்பிற் றென்று
கொன்னுறு சினத்திற் சோற்றுக் குழிசியை உடைத்துப் போட்டான்

240. தயிர்க்கெனச் சென்ற நல்ல தமிழிலக் கணியும் ஆய்ச்சி
உயிர்க்குறில் நெடிலை நீட்டி ஒலித்ததைத் திருத்திக் கூறிச்
செயிர்த்ததன் பின்னுஞ் சற்றும் செவிக்கொளா திருந்த தாலே
வயிர்த்ததோர் வெறுப்புக் கொண்டு வாங்குத லின்றி மீண்டான்

241. காய்கறி வாங்கற் கென்று கடைக்குப்போய் மருத்துவன்தான்
நோய்தரு குறைகள் கூறி நுகருதற்குரிய தேதும்
வாய்பட லின்மை கண்டு வாங்குத லொழிந்து வந்தான்
வேய்தர அமைச்சன் விட்ட வினைஞரும் மகிழ்ந்து கண்டார்

242. நெய்யினை வாங்கச் சென்ற நெடுமொழித் தருக்கி வாங்கிக்
கையினிற் கொணரும் போதே கருதிய நிலைக்க ளத்தின்
ஐயம தொழிக்கத் தொன்னை அடிமிசை யாகச்சாய்த்தான்
ஒய்யெனச் சிந்தி நெய்யும் ஒழிந்ததால் உண்மை மீண்டான்

243. இலையது பறிக்கச் சென்றோர் எழில்மர மேறப் பாதி
நிலையினிற் பல்லி சொன்ன நிமித்தமோ தீதா மென்று
கலையுறு கணியன் ஆங்கே கைசலித் திருந்து பின்னும்
மலைவுதீ ராமை யாலே மரத்தினின் றிறங்கி வந்தான்

244. ஒற்றரால் அமைச்சன் இந்த உறுசுவைத் செய்தி யெல்லாம்
உற்றபின் அரைய னின்பால் உரைத்தனன்அவனு அந்தக்
கற்றவர் சொல்லால் உண்மை கண்டவர்க் குரிய ஐந்து
நற்றிற உழையன் சொல்லை நம்பியே நாட்டை ஆண்டான்

245. சொல்லிய கதைதான் நம்பும் தோரணை யற்ற தேனும்
ஒள்ளிய புலமைக்கிந்த உலகியல் அறிவும் வேண்டும்
பள்ளியின் கல்வியெல்லாம் பயன்படா புள்ளிக் கென்னும்
தெள்ளிய உண்மை யேனும் தேற்றுதற் குதவு மன்றே

**நன்றியுள்ள சேவகன்**

246. தரையுலகில் இருகண்டம் தழுவு பேரிசியாவில்
உரைபலநற் செல்வமெலாம் ஒருங்குடைய நற்பேற்றுத்
துரையொருவன் ஐங்காதத் தொலைவிலுள்ள உறவினரைக்
கரையறுமெய்க் காதலினால் கண்டுவரக் கருதினனால்

247. நாற்கலிமா வையமதில் நாயகன்தன் குடும்பமுடன்
ஏற்கமிக வசதியாய் ஏறியிருந் தமர்ந்ததற்பின்
கோற்கையனாய்ச் சேவகனுங் குதிரைகனை வியங்கொண்டான்
நூற்படுபோர் நளனென்று நோக்கியவர் வியப்புறவே

248. நாடிறந்து காடுதனை நண்ணியபின் ஓநாய்கள்
ஓடிவந்து நெருங்கியதும் ஒருகுதிரை அவிழ்த்துவிட்டுச்
சாடியதைக் கொன்றவையும் சதைமுழுதுந் தின்னுமுனம்
கூடியதோர் நெடுந்தூரம் கொடுவுய்த்தான் சேவகனும்

249. தின்றவுடன் ஓநாய்கள் திரும்பவும்வந் ததுகண்டு
பின்னுமொரு குதிரையினைப் பிணியவிழ்த்து விட்டவுடன்
என்றுமிலா வேகத்தில் இயக்கிவிட்டான் சேவகன்தான்
அன்றவனின் அகநிலையை ஆண்டவனே அறிந்தவனாம்

250. பேயுற்ற கொடுமையொடும் பெயராத யானைத்தீ
நோயுற்ற பசியினொடும் நொடியில்மீண் டோநாய்கள்
ஏயுற்ற கடிதில்வந் தெய்தியதைக் கண்டுமனம்
தேயுற்ற சேவகனும் திரும்பவுமொன் றவிழ்த்துவிட்டான்

251. விட்டவுடன் வையத்தின் வேகத்தை யாரறிவார்
பட்டறிந்த நிகழ்ச்சிகளின் பயனாகச் சேவகனின்

மட்டறியா வேகமுள மனமேபூண் டுய்த்திடினும்
சட்டமுடன் ஓநாய்கள் சார்ந்தனநா லாமுறையும்

252. செலவரிய கடறுமிகச் சென்றுவிட்ட நிலைமையதும்
பலவுயிருக் கோருயிரே படுவதுநன் றெனுநெறியும்
தலைவனது நன்றியையும் தகவெண்ணிச் சேவகனே
விலகருமோ நாய்கட்கு விருந்தானான் விரைகவென்றே

253. சேவகனை ஓநாய்கள் தின்றிடுமுன் ஒருமாவின்
தாவரிய கான்கடந்து தலைவனொடும் பிறருய்ந்தார்
ஏவினவை செய்துணவிற் கீடுசெய்தும் தலைவருக்கே
ஆவியதும் அளித்திடுவோர் அரியவுயிர்க் கொடையரம்மா

*- உ.க. இ.2.246-7.*

## 9. பலவகை

### திருவள்ளுவர் ஈராயிரவாட்டை விழாச் செய்தி

254. தமிழினத் தீரே தமிழினத் தீரே
குமரிநன் னாட்டிற் குணிப்பில் காலமுன்
நுமருயர் நாக ரிகந்தனைக் கண்டும்
ஞமலியின் இழிந்த நிலைமையர் ஆகி
மாந்த னுண்ணியும் மதிகிளர் காலம்
தாழ்ந்து நின்றீர் தமிழினத் தீரே
பகுத்தறி வடிப்படை பொருள்களைப் பகுத்தே
முதற்றனித் தாய்மொழி வளர்த்தனர் யாரே
பல்துறை இலக்கியம் பாவின் இயன்றபின்
பொருளவிலக் கணமும் புணர்த்தவர் யாரே:

முத்தமிழ் எனவே இயலிசை கூத்துடன்
ஒத்தமும் மடிமொழி யுணர்த்தினர் யாரே.
சோவென் அரண்மேற் சொல்லரும் பல்பொறிக்
காவல் முதன்முதற் கண்டவர் யாரே
மகனைமுறை செய்தும் பகையை விருந்தோம்பியும்
நடுநிலை சால்பு நாட்டினர் யாரே
கையுங் காலுமாய்க் கரவர் வந்தே

வெள்ளை நிறத்தினும் வெடிப்பொலிச் சொல்லினும்
விண்ணவர் நிலையை விளம்பி யேமாற்ற.
பகுத்தறி வைப்பயன் படுத்தாது வைத்தே
மதவியற் பித்தமும் மடவியற் கொடையும்
பழங்குடிப் பிறப்பொடு பேதைமை யூட்ட
நிலத்தேவ ரென்னும் நெடும்பொய் நம்பி
அடிமைப் பட்டும் மிடிமைப் பட்டும்
அஃறிணை யாயினீர் அனைத்தும் இழந்தீர்.
எஞ்சி யிருப்பது செஞ்சொல் தமிழே
அதனை யேனும் அழியாது காப்பீர்
முதலிரு கழக நூல்களுள் எதுவும்
இதுபோ துண்டோ ஏனிலை ஆய்மின்
ஆரிய மொழியில் அனைத்துமொழி பெயர்த்தபின்
அருந்தமிழ் முதனூல் அழியுண் டனவே
ஆங்கில அரசும் அம்மொழிக் கல்வியும்
நயன்மைக் கட்சியும் மறைமலை யடிகளும்
அறிவுறுத் தியபினும் சிறிதும் திருந்தீர்
அறுப்பானை நம்பும் ஆடுகள் போல
வெறுப்பானை யின்றும் விரும்பித் தொழுதீர்
புறநாட் டகத்தே வேர்ப்பான் பகைமை
வெளியிட் டுடனே வேறாதல் வேண்டும்
இதுதமி ழகமே இதில்கலை தமிழே
ஆரிய மென்னும் பூரிய மொழியை
அகற்றித் தமிழை அரியணை ஏற்றுவீர்
கோயில் வழிபாடும் கொண்டாடு மனமும்
வாயில் மொழிதமிழ் வழங்குதல் வேண்டும்
விண்ணக மொழியும் விண்ணக மாந்தரும்
மண்ணகம் வழங்கும் முறைமை இல்லை
சிவனியம் மாலியம் எனுமிரு மதங்களும்
செந்தமி ழோரே கண்ட நெறியாம்
என்ன பெயரும் இன்றமி ழாக்கிக்
கன்னித் தமிழின் கற்பைக் காமின்
உங்கள் போன்றே உடலும் உறுப்பும்

உள்ள அமெரிக்கர் வெள்ளிடை நீந்தித்
திங்கள் சென்று திரும்பினர் பன்முறை
அடுத்த மனையுளும் அடியிட லின்றி
அடிநிலைத் தாழ்வில் அமிழ்ந்துளீர் நீரே
முதன்முதற் பொறிவினை முகிழ்த்தனர் நும்முனோர்
மதிநீர் முதற்சென் றிருத்தல் வேண்டும்
திருவள் ளுவரீ ராயிர வாண்டைப்
பெருவிளம் பரமாய்ப் பேணிக்கொண் டாடினிர்
அதனால் எதும்பய னானது முண்டோ
எள்ளள வும் அவர் சொல்லேற் றீரோ
பிறப்பொடு தொடுத்த குலப்பிரி வினையால்
கூண்டுள் விலங்குகள் போன்றடை பட்டே
ஒற்றுமை குலைந்தும் உரனை இழந்தும்
இனவுணர் வழிந்து மொழியுணர் வின்றிச்
சிறுமை நிலையிற் பெருமை கொண்டீர்
ஆரியன் பிறப்பால் உயர்ந்தான் அல்லன்
அவனிலும் வெள்ளையர் ஐரோப் பியரே
தட்ப வெப்பந் தன்னால் நாட்டு
மக்கள் நிறமும் மாறுவ தியற்கை
ஒன்றே குலமும் உடன்பிறப் பனைவரும்
நிலத்தேவ ரென்றொரு குலத்தோரிங் கில்லை
குடிமதிப் பிலும்பிற குறிப்புக் களிலும்
தமிழன் என்றே தன்குலம் குறிக்க
வடமொழி தேவ மொழியு மன்றாம்
அதனினும் மூச்சொலி யடைந்தது காளவாய்
முழக்கும் மூச்சும் மொழியொலி பெறுகை
வழக்கில் நேர்ந்த வழிநிலைத் திரிபே
திரவிடத் தாயும் ஆரிய மூலமும்
தெரியிடத் தேநம் தென்மொழி யாகும்
இந்திய நாகரி கந்தமிழ் ஆகும்
பகுத்தறி வைப்பயன் படுத்தி யின்னே
நிறந்துப் பரவு நிலைநீர் முத்திறம்
ஆயினும் ஓரின மாத லறிக
அரசியற் கட்சி பலவா யிருப்பினும்

ஆங்கிலர் போன்மொழி யணைமின் ஒருங்கே
தாழ்த்தப் பட்ட தம்மினத் தோரை
உயர்த்தப் பெற்றோர் உயர்த்தல் கடனே
பிரித்தா னியத்தினும் பிராம ணீயம்
பன்மடி கொடிதே பகரவுங் கொடிதே
முன்ன தொருவன் உடலையே பிணித்தது.
பின்னதோ பிறங்கடை யுளத்தையும் பிணிக்கும்
கல்வியும் செல்வமும் கட்டாண் மையும்
கணக்கின் பெருமையும் கரையற் றிருந்தும்
சூத்திரர் சற்சூத் திரனெனத் தம்மைத்
தாழ்த்திய தமிழர் வீழ்ச்சியை நோக்கின்
அரிமா வரிமா கரிமா அனைத்தும்
நீல நிறங்கொள் கோலங் கண்டே
நரிமா விற்கு நடுங்கிய தொக்கும்
உள்ளந் தமிழனுக் குயரா வாறு
பெருங்கலா யிழுப்பது பிராமணர்க் கஞ்சுதல்
ஆரிய வடிமை யகன்றா லொழியத்
தேறும் வழியே தென்னவர்க் கில்லை
ஆரிய வேடரின் அயர்ந்தனிர் மறந்தனிர்
சீரிய மொழிநூல் செம்மையின் உணர்ந்தே
ஓரின மாகி உலகத் துயர்க
பசியும் பிணியும் பகையும் நீங்கி
இருதிற உடைமை ஆட்சியும்
ஒருகுடை நீழல் ஓங்குக உலகே.

*-திருக்குறள் மரபுரை. 790-2.*

**'திரு'**

255. மருவ லர்கொள மன்பொரு னற்றபின்
மரபி னாருளர் மைந்திலர் வாயிரு
திருவி ழந்தபின் திருவெனுஞ் சொல்லையும்
ஒருவ நின்றவன் தமிழன் ஒருவனே

*-செ.செ.20:243*

## முதுமொழியும் பொதுமொழியும்

256. முதுமொழி யொருதனி முத்தமிழ் முகிழ்த்தன
புதுமொழி பலவுளும் பொலியும் ஆங்கிலம்
பொதுமொழி யுலகெலாம் புகலும் அறிவியல்
பொதுமொழி இந்தியாற் செறிவ தடிமையே

*-இ.த.எ.கெ. 89.*

## படைகொண்டார் நெஞ்சும் உடல்உண்டார் மனமும்

257. கதறினும் தொண்டை நீளக் கந்தினும் புள்ளும் மாவும்
பதறினும் நெஞ்ச மெல்லாம் பக்கமுந் தலையுங் காலும்
உதறினும் அங்கும் இங்கும் ஓடினும் அரத்தம் பீறிச்
சிதறினும் இரக்கங் கொள்ளார் சிதைத்துடல் சுவைக்க வுண்டார்

*-திருக். மர. 253.*

## குமிழியை ஒத்த வாழ்வு

258. இமிழ்கட லுலக மெல்லாம் எதிரிலா தாள்வ தேனும்
அமிழ்தினிலும் இனிய பாவின் அருமறை பலவுஞ் சான்ற
தமிழினை இழந்து பெற்றால் தமிழனுக் கென்கொல் நன்றாம்
குமிழியை யொத்த வாழ்வே குலவிய மாநி லத்தே.

*-இ.த.எ.கெ.முக. 111*

## தமிழன் நிலை

259. கெடுக வுள்ளம் கேடிவன் கொள்கை
தமிழன் எனவே தகவெதும் இலனே
உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி
நமிழென விளக்கினுந் தாழ்மொழி என்பான்
பொன்னார் மேனிப் பொலிமுகம் வாய்ந்து
நன்னீராடி நல்லுடை யணிந்து
கல்வி தேர்ந்து கனம்பதம் பெற்று
நாகரி கத்தின் நன்கனம் வாழும்
நெல்லைச் சிவவூண் வெள்ளாண் குலவனும்

பிறப்பில் இழிந்தோன் பெயரிற் சூத்திரன்
இறக்குந் துணையும் இழிவின் நீங்கான்
இருமுறை குளிக்கினும் இவன்துப் புரவிலன்
இவன்கை யுண்ணல் இழிவென் றதன்மேல்
கல்வி நிரம்பாக் கரியவ னேனும்
இருகை யேந்தி இரப்பவ னேனும்
அருந்தமி ழறியா அயலா னேனும்
கொள்வான் விழுவான் கும்பிட் டெழுவான்
அவனொரு தேவன் அருளிமண் வந்தோன்
வழங்கா தெவர்க்கும் விளங்கா தெனினும்
அவன்வாய் மொழியே ஆகுக வழிபட
அவன்கை பட்டது அமுதே இங்ஙனம்
இனியெந் நாளும் இருக்க எனுமே - ம.வி.119

## குறள் இசைப்பாக்கள்

### பல்லவி

260. இந்த உலகமெங்கும் செந்தமிழின் குறள்போல்
எந்த மொழியினும் உண்டோ?

### அனுபல்லவி

சொந்தமா கவேபிறர் தந்தம் மொழியிற்பெற
முந்தி விரைகுவரே விந்தை இதுவேயன்றோ (இ)

### சரணம்

புந்தியிற் புதுமலர் சிந்திய மதுநிகர்
தந்திடும் சுவையுறவே
வந்தனை சிரஞ்செய வாழ்த்திட வாயது
சிந்தனை மனமுறச் சிரவணம் செவிபெற (இ)

*-திருவள்ளுவர் திருநாள்விழா மலர் பக்.126*
*இராகம் - தன்யாசி; தாளம் - ஆதி.*

**பல்லவி**

261. வள்ளுவரே - திரு-வள்ளுவரே
வாழிவாழி தேவ - ரீர்நாமம் (வள்)

**அனுபல்லவி**

வெள்ளிய ஞானத் -தீம்பால் தருங்காம
தேனு வேவிவேக - பானுவேதிரு (வள்)

**சரணம்**

வண்ணமுடன் சொன்னீர் - சம்மதபோதம்
மனதுகுளிரும் குறள் - மதுரசங் கீதம்
தண்ணந்தமிழ் மணக்க - உண்ணும்ப்ரசாதம்
தலமுழுவதும் புகழ் - உலவுமெய்வேதம் (வள்) (2)

*இராகம் -ஆரபி தாளம் - ஆதி.*
*- திருவள்ளுவர் திருநாள்விழா மலர் பக். 127*

**கும்மி**

262. கும்மியடி பெண்ணே கும்மியடி - நல்ல
கொன்றை மலர்சூடிக் கும்மியடி
நம்மையாளும் தனிநாயகம் நம்மிடம்
நண்ணிய தென்றுநீ கும்மியடி
ஆட்சிமொழி யிங்கே ஆங்கிலமாய் - என்றும்
ஆகிவிடின் அது கேடாகும்
மாட்சி மிகுந்தமிழ் மாநிலத் தாளுகை
மாதரசேவரக் கும்மியடி.

*-த.நா.வி. 133*
*எடுத்துக்காட்டில் பெயரில்லை*

**போலிகைப் பாடல்கள்**

263. அங்கணத்து ளுக்க அமிழ்ததனால் தங்கணத்தர்
அல்லார்முற் கோட்டி கொளல்

264. தங்கணத்தார் அல்லார்முன் சொல்லல் சொலினஃதாம்
அங்கணத்துள் உக்க அமிழ்து.

*-திருக். மர. 720*

265. தாழ்வுணர்ச்சி நீங்கும் தகைமைக்கண் தங்கிற்றே
வாழ்வுணர்ச்சி காணும் வழி.

*-முதன்மொழி 1.3;2.*

**மக்கள் வாழ்வில் குறள் மாறியமைதல்**

266. போகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
ஆகா றகலாக் கடை

*என்று மக்கள் வாழ்விற்குகுறள் மாறியமையும்- ம.வி.110.*

267. புக்கில் அமைந்தின்று கொல்லோ சிலரிடைத்
துச்சல் இருந்த தமிழ்க்கு

*-செ.ப.க.க.அ.மு.*

*சீர்கேடு 3 20.8.61.*

268. ஆய்விலா தாரும் அறிவுடையார் ஆய்ந்தார்முன்
வாய்திறவா துள்ள விடத்து

*-செ.ப.சீ.27.*

*கண்ணகி செய்தியைச் சீத்தலைச் சாத்தனார் சொல்லக் கேட்டவுடன், இளங்கோ வடிகட்கு மூவுண்மைகள் தோன்றின. அங்ஙனமே சென்ற பொதுத்தேர்தலில் தமிழ்நாட்டுப் பேராயம் படுதோல்வியுற்றவுடன் நடுநிலையாளர்க்கெல்லாம், மூவுண்மைகள் தோன்றின. அவை,*

269. தமிழ்பிழைத் தோர்க்குத் தமிழ்கூற் றாவது,
ஏமாற் றென்றும் இயலா திருப்பது,
தன்வினை பின்னே தன்னைச் சுடுவது

*என்பன.*

## புதிய முத்தமிழ் – மு. ரா. பெருமாள் முதலியார் இயற்றிய

### புதுநூற்பாக்கள்

நிலைமொழி யீற்றில் மெய்யெழுத் திருப்பின்
வருமொழி ரலவில் தொடங்கா தென்க;
அண்ணன் இராமன் என்றே எழுதுக:
அண்ணன் ராமன் எனவன் றுணர்க

நிலைமொழி யீற்றில் உயிரெழுத் திருப்பின்
வருமொழி ரலவில் தொடங்கலா மென்க
தம்பி லக்குவன் என்பதே சாலும்
தம்பி இலக்குவன் என்ப தெதற்கு?

*- செ.செ. 52 : 550*

### இவற்றை மறுத்துப் பாவாணர் பாடியவை

270. நிலைமொழி யீற்றில் நிற்பது மெய்யேல்
வருமொழி ரலமுன் வாரா வென்க
கலைமான் இரண்டு கண்டே விலக்கில்
எனவுரைத் தெழுதுக இதுமுது நெறியே

271. நிலைமொழி யீற்றில் உயிரொலி நிற்பின்
வருமொழி ரலமுன் வரலா மென்க
கலைமா ரெண்டுகாணுக லெக்கில்
எனவுரைத் தெழுதுக இதுபுது நெறியே

*என்று புணர்ச்சி யிலக்கணத்தை மாற்றவும் நேரும். இதன் தீங்கை அறிஞர் கண்டு கொள்க.* *-செ.செ. :586*

### ஒரு நூற்பா – வண்ணனை நூலின் வழு

272. "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"
"எல்லா மொழியும் இடுகுறித் தொகுதியே"

*-செ.செ. 50:90*

### அடிமையை அகற்றுக

273. ஆரிய வேடரின் அயர்ந்தனை மறந்தனை
சீரிய மொழிநூல் செவ்விதின் உணர்த்தலின்
மூரிய பெருமையை முற்று முணர்ந்தினே
பூரிய அடிமையைப் போக்குவை தமிழனே

*-த.ம. 193 தமிழர்வ.358*

### தலையாய தமிழர்

274. பெருமையெனப் புன்செருக்கிற் பிரிந்து வாழ்ந்து
பிறருக்கொன் றீயாத புல்ல ரேனும்
எருமையொடு குரங்கரவம் தவளை தின்பார்
இரவெடுப்பார் தீயதொழு நோய ரேனும்
கருமைமிகும் ஆப்பிரிக்கர் முண்ட மெய்யர்
காடுறையும் விலங்காண்டி மாந்த ரேனும்
அருமையுறுந் தனித்தமிழை விரும்பு வாரேல்
அவரன்றோ தலையாய தமிழர் கண்டீர்.

*-தமிழர் வ. 352.*

### 10. முடிநிலை

## வண்ணனை மொழிநூலின் வழுவியல். முடிபு

275. ஆரிய வேடரின் அயர்ந்தனை மறந்தெனச்
சீரிய மறைமலை செந்தமிழ் உணர்த்தலிட்
டோரின மாயர சுறுந்தமி ழினமே

276. குமரி நிலமொழியைக் கூறுந் தமிழன்
குமரி வரலாறு கொண்டே - குமரித்
தமிழையும் தன்னையுந் தாங்கித்தற் காக்கும்
அமரிலும் வெல்லும் அறி

277. பண்பட்ட செந்தமிழாற் பைந்தமிழா முன்னேறக்
கண்கொட்டுங் காலும் கவலையறேல் - புண்பட்டும்
மாறா யிருப்பவெலாம் மாற்றிப் புரட்சிசெயச்
சூறா வளிபோற் சுழன்று

278. வண்ணனைக் கூற்று வழூஉ மொழியியலை
விண்ணவர் போற்றினும் வேண்டற்க - எண்ணிப்
பகுத்தறிவால் அந்நூல் செய் பைந்தமிழ்க் கேட்டை
வகுத்தவர லாற்று வழி

279. முப்பல் கலைக்கழக முட்டாத் தமிழ்த்துறையும்
செப்புந் தனித்தமிழர் சேர்ந்திடுக - தப்பின்
அடியோடு முக்கழகும் ஆரியம் நீங்கி
முடிசூட முத்தமிழ் முந்து.

## முடிபு

280. தேவ மொழியென்று தேரின் உலகிலில்லை
யாவும் நிலமக்கள் யாத்தனவே - சாவினால்
தெய்வ நிலைமையெனின் தேவர் உலகினையே
எய்தி விடுதல் இயல்பு

281. ஆரியம் தேவமொழி யாகு மெனின்மேலை
ஆரிய மெல்லாம் அதுவாகும் - ஆரிய
நான்மறை தெய்வமெனின் நானிலத் தேனைமொழி
நூன்மறை மேலாம் நுவல்

282. இந்திய ஐரோப் பியமென்னும் மாமரத்தின்
முந்திய ஆணிவேர் முத்தமிழாம் - பிந்திய
உச்சாணிக் கொம்பே உரப்பும் வடமொழியாம்
அச்சேது மின்றி அறை.

283. இயல்பே திரிபே எனுந்தமிழன் பாங்கில்
இயல்பே தமிழாகும் என்க - அயலாம்
திரிபே திரவிடமாம் தேரினதன் முற்றே
மருவும் வடமொழி மாண்பு

284. வடமொழியே தெய்வ வகைமொழியேல் அந்த
மடமொழியின் மூலத் தமிழாம் -திடமொழி
தெய்வத்தின் தெய்வத் திருமொழி யென்றின்றே
உய்வுற்றுச் சீராக ஓம்பு

285. சொற்பொருள் யாப்பும் சுவையாம் அணியியலும்
நற்புல நூலுமே நல்வளமாம் - வற்பொலியின்

மூச்சும் கனைப்பும் மொழியின் சிறப்பாயின்
ஓச்சுங் கழுதை உலகு

286. எல்லா வகையாலும் எண்ணினால் இவ்வுலகில்
எல்லோர் தமிழுக் கிணையில்லை - அல்லாச்
சிறந்த மொழியெல்லாம் செந்தமிழ் போலன்றி
இறந்த மொழியாம் இன்று

287. ஆரிய ஏமாற்றிற் காளாய் அடிமைமடப்
பூரிய வாழ்வழுந்திப் போந்தமிழர் - சீரிய
செந்தமிழ் மானஞ் சிறந்துரிமை பெற்றுயர்க
முந்திய தென்னோர் முறை

288. ஒருமுறை ஏமாறின் ஏமாற்றி குற்றம்
மறுமுறை ஏமாறி குற்றம் -பலமுறையும்
ஏமாறும் பேதை இயல்பின் தமிழனெனின்
ஆமாறே இல்லை அறி

289. மொழியே இனமக்கள் முன்னேற நல்ல
வழியாம் அதனை வளர்க்க - பழியாய்த்
தமிழயரத் தாழ்ந்தான் தமிழன்காண் முன்போல்
தமிழுயரத் தானுயர்வான் தான்

290. பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி
மிகுத்ததனால் இல்லையொரு மேன்மை - வகுத்தநன்னூற்
கற்றைகளைத் தின்றாலும் காளவாய் நல்லறிவு
பெற்றிடுமோ எத்துணையும் பேசு

291. உடம்பளவில் மாந்தர் உயர்திணை யராகார்
மடந்தவிரும் நல்லறிவு மானம் - திடம்பெறவே
தாழ்வுணர்ச்சி நீங்கித் தகுநற் றொழிலொழுக்கம்
வாழ்வுயர்ச்சி காணும் வழி

292. அடிமைத் தனத்தின் அடிநீக்கி இன்றே
குடிமைத் தனந்தமிழா கொள்க - மடிமை
இருக்குந் தமிழையும் இல்லா தாக்கும்
தருக்கும் பெயருந் தப.

293. செங்கதிரின் நீண்மறைவிற் செந்தமிழும் ஆரியத்தால்
மங்கி மறைந்தநிலை மாய்ந்ததினால் - எங்குமினி

மூல மொழியென முத்தமிழே ஆளுகின்ற
காலம் அணுகியதே காண்.

294. குப்பை உயர்ந்தது கோபுரந் தாழ்ந்ததெனத்
தப்பி வடமொழி தான்கவர்ந்த - செப்பத்
தமிழனையை விட்டினித் தானதற்குத் தாழ்க
குமரியனை யென்றதைக் கொண்டு.

295. மறை மலை மாணடிகள் மாபெயர் வாழி
நிறைமொழி முத்தமிழ் வாழி - இறைமொழியாம்
என்னும் வடமொழியும் ஏமாற்றா தெந்நிலத்தும்
மன்னுக நூன்மொழி மற்று.

## வழிபாட்டு மொழி

296. ஆரியம் முந்தி அருந்தமிழைத் தாழ்த்தியதால்
நேரெதிர் இந்திவந்து நின்றதுகாண் - ஓரடியாய்
ஆரியம் இந்தி அகல வழிபாடு
சீரிய செந்தமிழில் செய்.

*-இ.த.எ.கெ.55*

## வாழ்த்து

297 வான்வாழி வாய்மை வளமுத் தமிழ்வாழி
ஆன்வாழி அன்போ டறம்வாழி - கான்வாழி
நூல்வாழி நல்லறிவு நுண்புதுமை ஆய்வுசெங்
கோல்வாழி பல்லரசுக் கூட்டு.

*-த.இ.வ.326*

## 11. பாடல் அகரவரிசை பாடல் எண்


| | |
|---|---|
| அங்கணத்துள் | 263 |
| அடருந் | 160 |
| அடிமை | 292 |
| அத்தொகை | 109 |
| அம்மை | 39 |
| அமெரிக்கர் | 226 |
| அரசனே | 219 |
| அரிமாபுரம் | 89 |
| அரிய | 152 |
| அருந்தலால் | 218 |
| அல்லும் | 128 |
| ஆங்கிலத்தோ | 98 |
| ஆங்கிலர் | 163 |
| ஆண்டாண்டு | 191 |
| ஆய்விலா | 268 |
| ஆயிரத்தெண் | 48 |
| ஆராவணி | 114 |
| ஆரிய | 149 |
| ஆரிய ஏமாற் | 287 |
| ஆரியராட்சி | 184 |
| ஆரியம் | 281, 275 |
| ஆரிய வேடரின் | 273, 275 |
| ஆரியன் | 150 |
| ஆருயிர் | 216 |
| ஆலைத் | 162 |
| ஆளும் | 84 |
| ஆற்றும் | 82, 169 |
| ஆறடி | 71 |
| ஆனை நடை | 183 |
| இந்த உல | 260 |
| இந்தி | 9 |
| இந்திய | 282 |
| இந்தியா | 224 |
| இந்நிலை | 4, 64 |
| இந்நூலும் | 197 |
| இம்மியே | 188 |
| இம்மை | 140 |
| இமிழ்கடல் | 258 |
| இயல்பே | 283 |
| இரப்ப | 100 |
| இரவிலே | 217 |
| இராமசாமி | 201 |
| இருந்த நாள் | 78 |
| இருபதாம் | 186 |
| இல்லத் | 153 |
| இல்லறத் | 146 |
| இலக்கண | 235 |
| இலக்கியமும் | 66 |
| இலக்குவனார் | 37 |
| இலையது | 243 |
| இவ்வுரை | 130 |
| இழந்த | 58 |
| இளங்கோ | 27 |

| | |
|---|---|
| இறையருள் | 26 |
| இன்குரலும் | 177 |
| இன்பம் | 83 |
| இன்னிசை | 239 |
| உடம்பளவில் | 291‘ |
| உயர்நிலை | 193 |
| உரைநடை | 173 |
| உலகத்தமிழ் | 57 |
| உலகமுதல் | 93 |
| உலகமுழுமை | 141 |
| உலண்டின் | 55 |
| உவப்பவே | 72 |
| உள்ளநற் | 33 |
| ஊட்டில் | 233 |
| ஊரும் | 143 |
| எங்கணும் | 31 |
| எங்கேனும் | 88 |
| எண்ணிற்கு | 2 |
| எத்தனை | 122 |
| எத்தனை நாள் | 232 |
| எத்தனைய | 192 |
| எத்திறம் | 237 |
| எந்தையே | 76 |
| எம்மதமு | 136 |
| எல்லாச் | 272 |
| எல்லாமும் | 147 |
| எல்லாவகை | 286 |
| என்றும் | 10 |
| என்ன இந்த | 223 |
| ஒருமுறை | 288 |
| ஒருமுறையே | 123 |
| ஒழுக்கம் | 144 |
| ஒற்றரால் | 244 |
| ஒன்றும் | 85 |
| ஓவிய | 106 |
| கட்டுக்கதை | 159 |
| கடவுள் | 86 |
| கடிதமும் | 178 |
| கடையெழு | 204 |
| கண்ணினுக் | 214 |
| கண்மணி | 30 |
| கதறினும் | 257 |
| கருமுத்து | 107 |
| கலியாண | 18 |
| கறுவுகொள் | 134 |
| காமுறத் | 65 |
| காய்கறி | 241 |
| கார்வாழி | 126 |
| கால்கடுத்து | 205 |
| கான்மனி | 92 |
| கிறித்தவ | 59 |
| குடிசெய்வார் | 156 |
| குப்பை உயர்ந் | 209, 294 |
| குமரிநிலை | 1, 276 |
| குமரிமலை | 54 |
| குறையும் | 7 |
| குன்றக்குடி | 101 |
| கெடுக | 259 |
| கேட்டின் | 230 |
| கொலையும் | 168 |
| கோடிக் | 99, 207 |
| கோடிச் | 231 |
| சடசட | 221 |
| சித்திரமோ | 38 |

| | |
|---|---|
| சிவநெறி | 46 |
| சுழன்றும் | 42 |
| சீராய் | 121 |
| செங்கதிரின் | 93 |
| செங்காட்டுப் | 96 |
| செட்டிகுளத் | 94 |
| செந்தமிழ் | 105, 234 |
| செந்தமிழ்ப் | 74 |
| செல்வமே | 79 |
| செலவரிய | 252 |
| செவ்வை | 67 |
| சேலங் | 198 |
| சேவகனை | 253 |
| சைவசித்தாந்த | 51, 52 |
| சொல்லிய | 245 |
| சொற்பொருள் | 285 |
| தகைசால் | 44 |
| தங்கணத்தர் | 264 |
| தங்கியமனை | 238 |
| தமதுபாத் | 25 |
| தமிழ்நாடு | 68 |
| தமிழ் நிலத் | 215 |
| தமிழ்பிழைத் | 269 |
| தமிழலாது | 5 |
| தமிழன் | 151 |
| தமிழினத்தீரே | 254 |
| தமிழே | 91 |
| தயிர்க்கென | 240 |
| தரையுலகில் | 246 |
| தன்கருமம் | 111 |
| தன்மை | 6 |
| தன்னலம் | 77 |
| தன்னலமும் | 187 |
| தனக்குச் | 164 |
| தனித்தமிழ் | 62 |
| தாமரை | 129 |
| தாய்நாடே | 166 |
| தாய்மொழி | 32, 127 |
| தாயும் | 14 |
| தாழ்வுணர்ச்சி | 265 |
| தானமிட்ட | 157 |
| திருமணம் | 120 |
| திருமுல்லை | 87 |
| தின்றவுடன் | 249 |
| தீவம் | 103 |
| துங்கஇல் | 13 |
| தெளிதேனில் | 185 |
| தேங்குமுப் | 20 |
| தேவமொழி | 32, 280 |
| தேவேந்தர் | 36 |
| தொங்கல் | 112 |
| தொட்டனைத் | 148 |
| தொடைகெழு | 115 |
| தொல்காப்பியப் | 170 |
| தொல்காப்பியம் | 137 |
| தொல்காப்பிய முதல | 172 |
| தோற்றுந் | 179 |
| நடுநிலை | 139 |
| நண்பன் | 189 |
| நன்செயும் | 220 |
| நாட்டுப்பற் | 161 |
| நாட்டுவிடு | 181 |
| நாடிறந்து | 248 |

| | |
|---|---|
| நாடுங்குல | 210 |
| நாடும்மொழியும் | 47 |
| நாவிரும்பின் | 118 |
| நாவை சிவதா | 21-23 |
| நாற்கலிமா | 247 |
| நிலைமொழி | 270, 271 |
| நீர்மிகிள் | 222 |
| நீரணை | 70 |
| நுண்மதி | 174 |
| நூலும் | 171 |
| நெய்யினை | 242 |
| நெய்வேலி | 119 |
| நெல்லைத் | 53 |
| நேரிய | 29 |
| பல்லெல்லாம் | 73 |
| பகுத்தறிவை | 11, 12, 290 |
| பட்ட | 61 |
| படிமைமேல் | 158 |
| பண்டாரகர் | 110 |
| பண்பட்ட | 277 |
| பணத்திற்கு | 117 |
| பதத்திற் | 116 |
| பரமசிவ | 24 |
| பல்கலைக் | 75 |
| பல்லாயிரம் | 102 |
| பலதுறை | 131 |
| பாங்கா | 95 |
| பாட்டும் | 49 |
| பாண்டியர் | 43 |
| பாரதிமேல் | 182 |
| பாவாணன் | 113 |
| பிறப்பால் | 165 |
| பிறமொழி | 132 |
| புக்கில் | 267 |
| புண்ணூற்று | 41 |
| புதுவதே | 63 |
| புரட்சிப்பா | 190 |
| புற்று | 80 |
| பூனைபோற் | 225 |
| பெண்ணின் | 81 |
| பெருமை | 274 |
| பேணிய | 135 |
| பேயுற்ற | 250 |
| பொய்மையும் | 145 |
| போகாறள | 266 |
| போற்றும் | 17 |
| மங்கலந் | 16 |
| மணிவாசகர் | 56 |
| மதத்தை | 90 |
| மருவலர் | 255 |
| மல்லைப் | 154 |
| மலையெனும் | 155 |
| மறுமனத்தில் | 227 |
| மறை மலை | 2, 40, 104, 295 |
| மாடுபோல் | 167 |
| மாநிலக் | 108 |
| மானங்கெட்ட | 228 |
| மிக்கபிறப் | 34 |
| முதுமொழி | 256 |
| முந்தியே | 97 |
| முந்திவாளோடு | 69 |
| முப்பல்கலைக் | 279 |
| முப்பால் | 125 |
| முருகலலிதா | 19 |

| | | | |
|---|---|---|---|
| முன்னாட் | 206 | வலியப் | 229 |
| முன்னூல் | 124 | வள்ளுவரே | 261 |
| முன்னோர் | 138 | வள்ளுவன் | 199 |
| மூவாயிர | 142, 180 | வான்வாழி | 297 |
| மூவுலகும் | 196 | விட்டவுடன் | 251 |
| மெய்கண்டார் | 28 | வீட்டிற்கும் | 195 |
| மொழியின் | 133 | வீட்டுரிமை | 45 |
| மொழியும் | 175 | வெண்டாளில் | 50 |
| வடபுலம் | 236 | வெள்ளமென் | 213 |
| வடமொழியே | 284 | வேத்தவை | 35 |
| வடமொழியை | 203 | வேலையின் | 200 |
| வண்ணனைக் | 278 | வேற்றுமொழி | 176 |

# 12. இணைப்பு

**பொங்கல்**

1 பொங்கலோ பொங்கலென்று பொங்குக பொங்கலதை
நுங்கலோ நுங்கலென்று நுங்குக - மங்கலப்
புத்தாண்டு நெல்லின் புதிருண்டு பேரனுடன்
ஒத்தீண்டு நீட வுயர்ந்து

2. செந்தமிழ் போன்றினிய செந்தேனும் சீடையும்
எந்தம் நினைவில் இருக்குமே - முந்தியே
கண்ணறுவை செய்வித்த காசுபோல் இம்மையெலாம்
எண்ணரிய காலும் இனித்து.

*2002 சிலை ௩0 (13.1.73)*
*(கல்லைப் பெருஞ்சித்திரன்)*

**மங்கலத் திரு.**
## தமிழ்த்தென்றல் செல்வநாயகியர்

**திருமண வாழ்த்து**

3. எங்கணும் நிறைந்த இறைவ னருளால்
செந்தமிழ்த் தென்றல் செல்வநா யகியர்
இல்லறம் நன்றென எவரும் புகழ
நல்லற வின்பம் நன்பொருள் உதவத்
தென்றலும் தமிழும் போல
ஒன்றியே வாழ்க உலகினில் நெடிதே.

200அ மடங்கல் உங (8.9.77)

**மங்கலத் திருமிகு**
## ஆறுமுக மரகதவர்

எ.சு. பி (S.P) க..க. நகர்
சென்னை - 78.
2020 துலைஉக (7.11.79)

## திருமண வாழ்த்து

4. தேறுமுக மாகவிணை திருமணவின் புறுதுணையர்
ஆறுமுக மரகதவர் அன்பு அறம் நல் வாழ்வறிவுப்
பேறு மிகு மகவளவு பெற்றுயருந் தமிழகத்தில்
நூறுபுக இசைபரவ நுவல் தமிழ் பார் முழங்கிடவே.

**சேலம் நகராண்மைக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர்**
**ஞா. தேவநேயப் பாவாணர்,** B.O.L.,

## இயற்றிய
## சிறப்புப் பாயிரம்

5. மலர்தலை உலகில் மாந்தர் இனத்தின்
மலர்க்கண் முதன்முதல் மாண்புற மலர்ந்த
தண்டமிழ் நாட்டில் தொன்றுதொட் டோங்கித்
திணைதொறும் ஒவ்வொரு திறமாய் வழங்கியும்
துன்புறும் அழுகைத் தொழிலிலும் கலந்தும்
வாயினும் கருவி வகையினும் வளர்ந்தும்
ஒன்பது குறைந்த பன்னீ ராயிரம்
பண்களாய் நால்வகைப் பாற்படப் பரந்தும்
இசைச்தமிழ் என ஒரு மொழிப்பிரி வாகியும்
தேவரும் விரும்பும் தீவிய கலையாய்த்
திகழ்ந்த தொல்பெருந் தென்னிசை பின்னர்
ஆரியத் தாலுரு மாறி வழங்கிக்
குலப்பிரி வினையால் புலத்துறை மறைந்து
கருநா டகமெனக் கரைபெயர் கொண்டு
பன்னூற்றாண்டு படர்ந்த பின்னர்
முத்தமிழ்க் கடலுள் முழுகிமுத் தெடுத்துக்
கருணா மிர்தக் கடற்பெயர் நூலில்
இசைத்தமிழ் இயல்பை இனிது விளக்கிய
உரவோர் தஞ்சை இராவு சாகிபு
ஆபிர காம்பண் டிதரின் மகனார்
வரகுணமிக்க வரகுணபாண்டியர்
கன்று முதவுங் கனியைப் போல
ஒருநரம் புற்ற சுரையாழ் முதலா

ஆயிர நரம்புறும் ஆதியாழ் வரையுள
நரப்புக் கருவியின் நாயக மாக
வலிவு மெலிவு சமனென வழங்கிய
மூவகை நிலையும் ஒருநிலை இயக்கும்
எழுநரம் புற்ற இன்னிசைக் கலமாய்ச்
சங்ககா லத்திற் செங்கோட்டி யாழெனச்
சிறப்புற் றோங்கிய செந்தமிழ்க் கருவி
பண்டை நாளில் பழமலை என்னப்
பெற்ற தமிழ்நகர் பிற்றை நாளில்
விருத்தா சலமென வேறு பெயர்கொளல்
போலும் இன்று வீணை என்றே
வழங்கும் வகையை விளக்கித் தந்தனர்
பாணர் கைவழி என்னும்
யாணர் நூலை யாவரும் கொளவே

**பாணர் கைவழி எனப்படும் யாழ்நூல்**
**கழக வெளியீடு** : 531 ; 1950.
**ஆசிரியர் டாக்டர் ஆ. வரகுணபாண்டியன்.**

❑ ❑ ❑

# குறிப்புகள்

# குறிப்புகள்

## குறிப்புகள்